


# நல்லதிபருக்கான விதப்புரை

கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர்
திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின்
மணிவிழாவையொட்டி வெளியிடப்படும் சேவை விதப்புரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லதிபருக்கான விதப்புரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி இந்திரா இராஜரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதிபருக்கான விதப்புரை

கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலய
அதிபர் திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின்
மணிவிழாவையொட்டி வெளியிடப்படும் சேவை விதப்புரை

வெளியீடு
திருமதி இந்திரா இராஜரட்ணம் சேவை நலன் பாராட்டுக் குழு
2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு
நல்லதிபருக்கான விதப்புரை
(கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலய
அதிபர் திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின்
மணிவிழாவையொட்டி வெளியிடப்படும் சேவை விதப்புரை)

பதிப்பு
பங்குனி 2013

வெளியீடு
திருமதி இந்திரா இராஜரட்ணம் சேவை நலன் பாராட்டுக் குழு

வடிவமைப்பும் அச்சும்
குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06
தொ.பே. 011 2364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com

Title
Felicitating a Great Teacher
(Special Suvener, Published on the Occation of the
Retirement of Colombo Ramakrishna Vidyalaya Principal
Mrs Indra Rajaratnam)

Edition
March 2013

Published by
Mrs Indra Rajaratnam Manivila Organization
129/1, 1/1, Saranankara Road, Dehiwala

Designed & Printed by
Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo - 06
Tel. - 011 2364550, E-mail : kumbhlk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மணிவிழாக்காணும் கொ/இராமகிருஷ்ண வித்தியாலய முதல்வர் திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின் வாழ்வியல், ஆசிரியத்துவ, நிர்வாக, தலைமைத்துவ நடத்தைகளை நினைவு கூர்ந்து மணிவிழா ஒன்றை நடாத்துவதற்கும் 'நல்லதிபருக்கான விதப்புரை' என்ற மலர் ஒன்றை வெளியிடுவதற்கும் அவருடைய பழைய மாணவர்களும், ஆசிரிய உறவுகளும், பெற்றோர்களும், நலன் விரும்பிகளும் எடுத்த முயற்சியினால் இம்மலர் வெளியிடப்படுகின்றது.

நெல்லை மத்தியமகாவித்தியாலயத்திலிருந்து 1974 இல் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு அங்கு பொருளியல், புள்ளிவிபரத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்று வெளியேறிய இவர் 1984 இல் கொ/விவேகானந்தாக் கல்லூரி, வெள்ளவத்தை தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து 1991 இல் நடாத்தப்பட்ட இலங்கை அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து (S.L.P.S. I) 1993 இல் கிருலப்பனை தமிழ் வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டார். பின்னர் 1997 இல் தற்போது கடமையாற்றும் இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையேற்று 01.03.2013 வரை தனது பணிகளைச் செம்மையாகவும் பற்றுதியுடனும் செய்து வந்துள்ளார்.

எதையும் வரலாற்று ரீதியாகவும் பொருளாதார, சமூக, கல்வியியல், உளவியல் பின்புலங்களில் வைத்துப் பார்க்கும் பன்முகப் பார்வையும் ஆசிரிய, மாணவ உயிரோட்ட முள்ள நேயமான கருத்தாடல்களும், பாடசாலைச் சமூகம், சமூகப் பாடசாலை பயன்தரு உறவுகளும் இவரை ஒரு நல்லாசிரியை ஆக உருமலர்ச்சி அடையவைத்தது.

எச்செயலையும் திட்டமிட்டு, நேர முகாமைக்கு உட்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் நிகழ்வுகளை முகாமை செய்து நிறைவேற்றும் தலைமைத்துவ ஆற்றல் இவரை ஒரு நல்லதிபராக மற்றவர்களால் இனம் காணவைத்தது.

இம்மலரில் ஆசியுரைகள் வாழ்த்துச் செய்திகள் என்பவையும், முதல்வரின் வாழ்வியலில் இடம்பெற்ற முக்கிய செய்திகளும் முதல்வரின் அறுபதாண்டுகால வாழ்வியல், ஆசிரியத்துவ, நிர்வாக, சமூக பதிவுகள் பற்றிய ஒரு பார்வை என்பதும், அதனைத் தொடர்ந்து கல்வி, சமயம், இலக்கியம், கவின்கலைகள், அரசியல், வரலாறு, மருத்துவம், மெய்யியல்சார் அளவையியல் போன்ற பரப்புகளைப் பிரதிபலிக்கும் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

இம்மலருக்கான ஆசியுரைகளைத் தந்துதவிய சமயத்தலைவர்களுக்கும் வாழ்த்துச் செய்திகளைத் தந்த பெரியார்களுக்கும் கட்டுரைகளைத் தந்த அறிஞர் பெருமக்களுக்கும் விழாக் குழுவினர் தமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

மலருக்கான உள்ளடக்கங்களைப் பெற்று அவற்றை உரியவகையில் தொகுத்து அதற்குப் பொருத்தமான உருவத்தை வடிவமைத்துச் செயலாற்றிய மலர்க் குழுவினர்க்கும் மறைமுகமாக நின்று செயலாற்றியோருக்கும் நன்றி கூறுகின்றோம்.

திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின் 'நல்லதிபருக்கான விதப்புரை' என்ற மலரை ஒரு நல்ல மலருக்குரிய உருவத்தில் உரிய காலவேளைக்குள் வெளிக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதற்கு உதவிய குமரன் பதிப்பக உரிமையாளர் திரு க. குமரன் அவர்களுக்கும் பதிப்பகப் பணியாளர்களின் பணிகளுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இம்மலரை வெளிக்கொண்டு வருவதற்கு பண உதவி வழங்கிய பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகளுக்கும் பண உதவிகளைப் பெற்றுத் தந்த ஆசிரிய நண்பர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றி உரித்தாகுக.

மணிவிழா நாயகி திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின் எதிர்கால வாழ்வு நலமாக அமைவதற்கும் அவ்வாழ்வில் சமூகப் பணிகளில் ஈடுபட்டு தான் இன்புறுவதுடன் தான் வாழும் சமூகத்தையும் மகிழ்விக்க வேண்டும். இதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் என உளப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

**குறிப்பு:** எமது அன்னையாகவும், சகோதரியாகவும், நல்ல நண்பியாகவும், அறிவுரைப் பதில் நல்ல ஆசானாகவும் உறவு பகிர்வதில் மனிதநேயம் மிக்க நடுநிலையாளராகவும் ஏன் நல்ல மானிடப் பண்புகளை வெளிப்படுத்திய ஒரு மனிதராகவும் விளங்கிய தங் களுக்கும் தங்கள் துணைவர் க. த. இராஜரட்ணம் அவர்களுக்கும் மணிவிழா கொண்டாடப் பட்டமையும் ஒரு சாயலில் அமைந்த மணிவிழா மலர்கள் வெளியிடப்பட்டமையும் எவருக்கும் கிடைக்காத ஒரு நற்பேறு ஆகும். இது இயல்பாகவே இயற்கையாக அமைந்து விட்டது. நீங்கள் செய்த தன்நலம் கருதாத கல்விப் பணியே இதற்குக் காரணம் இப்பேறு பெற்ற உங்கள் இருவரையும் இராமகிருஷ்ண வித்தியாலய ஆசிரியர்கள் உளமார வாழ்த்துகின்றோம்.

**பதிப்பாசிரியர் குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## பகுதி I

அறிமுகம்


1. திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின் வாழ்விலிருந்து சில துளிகள் xiii

From her life ..... Mrs. Indra Rajaratnam xv

2. திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின் வாழ்க்கைப் பதிவுகள் ஒரு நோக்கு xvii
வாரிதா மஜுமுடீன்


**ஆசியுரைகள்**


3. சுவாமி சர்வரூபானந்த xxvi

4. சிவப்பிரம்மஸ்ரீ து. உதயராகவ குருக்கள் J.P xxvii

5. அருட்தந்தை டி. கே. பாலகிருஷ்ணன் xxviii

6. நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் xxix


**வாழ்த்துச் செய்திகள்**


7. மனோ கணேசன் xxx

8. பிரபா கணேசன் எம். பி xxxi

9. சாந்தி நாவுக்கரசன் xxxii

10. Mr. Jayantha Nanayakara xxxiii

11. திருமதி.த.இராஜரட்ணம் xxxiv

12. Mr. A. I. M. Zarook Khaan xxxv

13. திருமதி. பத்மா கஜேந்திரதாஸ் xxxvi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி II

**கல்வியியல்**


1. தமிழர் கல்வியும் இந்துபோர்ட் இராசரத்தினமும் 3

**பேராசிரியர் சபா .ஜெயராசா**

2. இலங்கையின் கல்விமுறை எதிர்நோக்கும் சவால்கள் 7

**பேராசிரியர் சோ. சந்திரசேகரன்**

3. "தமிழ்க்கல்விச் சிந்தனையில் நடைமுறையில் மாறுதல்களின்றேல் தமிழர்களின் கல்வித்தரம் சீரழிந்து பாழ்படும்" 11

**சித்தாந்த பண்டிதர், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்**

4. இடைநிலைக் கல்வியில் தராதரம் பற்றிய எழுவினாக்கள் 20

**பேராசிரியர் கலாநிதி மா கருணாநிதி**

5. நேரத்தை முகாமித்தல் 27

**தை. தனராஜ்**

6. சமூக விருத்தியில் ஆசிரியர்களின் வகிபங்குகள் 34

**கலாநிதி சசிகலா குகமூர்த்தி**

7. பாடசாலைக் கல்வியில் அழகியற் கல்வியின் முக்கியத்துவமும் ஆளுமை வளர்ச்சியில் அதன் பங்கும் 39

**கலாநிதி மீரா வில்லவராயர்**

8. மாணவர்களுக்கு ஏற்படும் கற்றல் இயலாமை (LD) ஓர் நோக்கு 42

Dr. K. Kajavinthan


**சமயம், இலக்கியம்**


9. சங்க இலக்கியத்தில் முருக வழிபாடும் மூலப் பரம்பொருள் தேடலும் - திருமுருகாற்றுப்படை, பரிபாடல் நூல்களை முன்வைத்து ஓர் ஆய்வு 53

**கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்**

10. இபமா முகன் 60

**கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன், ஜே.பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இல்லம் காக்கும் நாயகி 65

**கலாபூஷணம் திருமதி.இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு**

12. ஈழத்து இலக்கியமும் சமூக விடுதலையும்: சில குறிப்புக்கள் 70

**தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ**

**கவின்கலை**

13. ஈழத்தில் நவீன தமிழ்க் கவிதையின் தோற்றம் : மறுமதிப்பீடு 81

**பேராசிரியர் செ.யோகராசா**

14. கற்பிதமும் மீட்பும் 84
செ.கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' குறித்த கருத்தாடல்

**பேராசிரியர்.வ.மகேஸ்வரன்**

15. பார்த்தல் என்னும் தியானம் 88

**கோபாலபிள்ளை கயிலாசநாதன்**

16. ஹெனிங் மான்கெல் நாட்குறிப்பு ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு 103

**ஜி. ரி. கேதாரநாதன்**

17. அரங்கில் பார்வையாளர்கள் 112

**சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ்**

18. ஈழத்துக் கவிதைகளில் தேசமும் தேசியமும் 119

**க. இரகுபரன்**

19. சிறக்க வாழ்வீர் 132

**பெற்றோர்**

**அரசியல்**

20. அடையாள அரசியலின் அரசியல் 139

**முனைவர் சி. சிவசேகரம்**

21. தேசியவாதம் பற்றி புரிந்து கொள்ளுதல்: 148
கோட்பாட்டு ரீதியான அறிமுகம்

**இராஜரட்ணம் ருக்ஷான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏனையவை**

22. கிறிஸ்தவ திருச்சபை வரலாற்றில்... 167

**எஸ். ஜெபநேசன்**

23. நீரிழிவு பற்றிய தவறான எண்ணங்களும் மேற்கொண்டு செய்ய வேண்டியவையும் 181

**டொக்டர் எம். கே. முருகானந்தன்**

24. Food and Future 186

Mr. T. Nagaratnam

25. வாழ்த்துகிறேன் 188

**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**

26. இந்திய அளவையியல் ஒரு நோக்கு 189

K. T. **இராஜரட்ணம்**

அன்புச் சோதரிக்கு... 211

அன்புள்ள சித்திக்கு... 212

இந்திரா எனும் இருவேறு ஆளுமை 214

**வ. மெல்லியல்**

அதிபர் திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின் மணிவிழா அமைப்புக் குழு 216

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின் வாழ்விலிருந்து சில துளிகள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி இந்திரா இராஜரட்ணம் |
| பிறப்பு | : | 1953.03.01 (அம்பம் மகப்பேற்று வைத்தியசாலை) |
| ஊர் | : | நெல்லியடி |
| தற்போதைய முகவரி | : | 129/1 - 1/1 சிறீ சரணங்கர வீதி, தெகிவளை |
| தந்தை | : | கந்தவனம் நடராசா |
| தாய் | : | சரஸ்வதி நடராசா |
| கல்வி | : | ஆரம்பக்கல்வி தொடக்கம் கனிஷ்ட உயர் நிலைக் கல்வி (க. பொ. த உ/த ) வரை யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| பல்கலைக் கழகக்கல்வி | : | பேராதனைப் பல்கலைக்கழகம் 1974 -1978 B.A பொருளியலும் புள்ளிவிபரவியலும் சிறப்பு |
| அதிபர் சேவை | : | 1991.06.01 S.L.P.S – I |
| இலங்கை கல்வி நிர்வாக சேவை | : | S.L.E.A.S - III 2009.10.19 |
| கல்வி டிப்ளோமா | : | 1994.03.01 திறந்த பல்கலைக்கழகம் - நாவல |

**குடும்பம்**

| | | |
|---|---|---|
| கணவர் | : | திரு. த. இராஜரட்ணம் - முன்னாள் பிரதி அதிபர் - கொழும்பு இந்துக் கல்லூரி B.A (Hons) மெய்யியல் சிறப்பு<br>இலங்கை அதிபர் சேவை I (S.L.P.S – I) M.Phil |
| மகள் | : | திருமதி கார்த்திகா சுபாகரன் - UK<br>MBA - General Management, University of East London<br>Post Graduate Diploma in Marketing (CIM)<br>Chartered Institute of Marketing<br>BSc (Hons) in Business – First class<br>Manchester Metropolitan University |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மருமகன் | : | திரு சிவஞானம் சுபாகரன் - UK<br>ACCA<br>Financial Controller<br>TJX Europe |
| மகன் | : | திரு இராஜரட்ணம் அபியுதன் - Australia<br>BMEng (Hons)<br>Swinburne University |
| தொழில் | | |
| ஆசிரியர் தொழில் | : | முதல் நியமனம் 12.3.1984, கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி.<br>01.9.1984 வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயம்<br>இலங்கை அதிபர் சேவை I - 1.6.1991 |
| அதிபர் | : | 25.2.1993 - 4.2.1995 வரை<br>கிருலப்பனை றோ. க. த பாடசாலை<br>5.2.1995 - 1.3.2013 வரை கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலயம் |
| இலங்கை கல்வி நிர்வாக சேவை | : | 19.10.2009 S.L.E.A.S |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# From her life ..... Mrs. Indra Rajaratnam

| | | |
|---|---|---|
| Name | : | Mrs. Indra Rajaratnam |
| Date of Birth | : | 1953.03.01 ("Ambam" Maternity Home) |
| Place | : | Nelliady |
| Present Address | : | 129/1 – 1/1, Sri Saranankara Road,<br>Dehiwela |
| Father | : | Kanthavanam Nadarajah |
| Mother | : | Saraswathy Nadarajah |
| Education | : | Primary to Junior Higher Education, G.C.E (A/L)<br>Nelliady Central College |
| University | : | University of Peradeniya 1974 -1978 BA (Sp. in Economics & Statistics) |
| Post Graduate Diploma | : | 1994.03.01 - Open University - Nawala |
| Principal Service | : | 1991.06.01 – SLPS I |
| Sri Lanka Education Administrative Service | : | S.L.E.A.S III 20009.10.19 |

## Family

| | | |
|---|---|---|
| Husband | : | Mr. T. Rajaratnam – Former Deputy Principal<br>Hindu College – Colombo – 04<br>B.A (Hons) – Philosophy<br>Sri Lanka Principal Service I (S.L.P.S I)<br>Post Graduate Diploma<br>M. Phil |
| Daughter | : | Mrs. Karthika Subaharan - UK<br>MBA - General Management, University of East London<br>Post Graduate Diploma in Marketing (CIM)<br>Chartered Institute of Marketing<br>BSc (Hons) in Business – First class<br>Manchester Metropolitan University |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Son. In. Law | : | Mr. Sivagnanam Subaharan - UK<br>ACCA<br>Financial Controller<br>TJX Europe |
| Son | : | Mr. Rajaratnam Abiyuthan - Australia<br>BMEng (Hons)<br>Swinburne University |
| Profession | : | First appointment – 12.3.1984 – C/ Vivehananda College<br>01.09.1984 – Wellawatte Govt. Tamil Vidyalaya<br>01.06.1991 – Sri Lanka Principal Service I<br>25.02.1993 & 04.02.1995 – Principal<br>C/Kirulapone Roman Catholic Tamil School<br>05.02.1995 & 01.03.2013 – Principal C/ Ramakrishna Vidyalaya<br>19.10.2009 - S.L.E.A.S appointment |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின் வாழ்க்கைப் பதிவுகள்: ஒரு நோக்கு

திருமதி வாரிதா மஜுமுடீன்
முன்னாள் அதிபர்
கம்பளை சாஹிரா.தேசிய பாடசாலை

கல்வியியலாளர்களும், அறிவு ஜீவிகளும், இலக்கியப் படைப்பாளிகளும், பொறியிய லாளர்களும், கணக்காளர்களும், நிர்வாகிகளும் ........... தோன்றிய வடமராட்சியிலுள்ள சிறு நகரப் பண்புகளையும் கிராமியப் பண்புகளையும் கொண்ட நெல்லியடியில் நடராசா, சரஸ்வதி தம்பதியினருக்கு 1953.03.01 இல் அம்பம் (கரவெட்டி) பிறப்பிக்கும் மனையில் இரண்டாவது மகளாகப் பிறந்து இவ்வுலக வாழ்வில் இணைந்து கொண்டார்.

இந்திரா அம்மா, அப்பா, அம்மம்மா (இலட்சுமி) சுற்றத்தார் ஆகியோரின் அரவணைப் பிலும் பாசக் கண்காணிப்பிலும் தனது குழந்தைப் பருவ வளர்ச்சிகளைப் பெற்றார். வீட்டுச் சூழலில் அக உறவுகளுக்கு உட்பட்டுச் சுதந்திரமாக உலா வந்தவர் வீட்டுச் சூழலை விட்டு பாடசாலை என்ற நிறுவனச் சூழலுக்குள் நுழைந்தார். இந் நுழைவு இந்திராவின் கல்வி வாழ்வில் பல மாறுதல்களைத் தோற்றுவித்தது.

யாழ்/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இணைந்து ஆண்டு ஒன்றிலிருந்து ஆண்டு பதின்மூன்று வரை தனது ஆரம்ப, கனிஷ்ட, இடைநிலை, கனிஷ்ட உயர் நிலைக் கல்வியைப் பெற்றார். A/L கற்கையில் கலைத்துறையைத் தெரிவுசெய்து தமிழ், புவியியல், அரசியல், வரலாறு, ஆகிய பாடங்களைக் கற்றுப் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். பாடசாலைக் காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கியதுடன் இல்ல, வட்டார, மாகாண மெய்வல்லுநர் போட்டிகளிலும் பங்கு பற்றித் தனது திறமை களை வெளிப்படுத்தி பாடசாலைச் சமூகத்தால் சிறப்பிக்கப்பட்டுள்ளார். A/L மன்றத்தில் பொறுப்பான பதவிகளை வகித்து அதனைச் செம்மையாகத் தொழிற்படுத்தியதன் மூலம் தனது தலைமைத்துவத் திறமைகளைப் பாடசாலை வாழ்க்கைக் காலத்திலேயே வெளிப்படுத்தியுள்ளார்.

பல்கலைக்கழகக் கல்வியின் முதலாம் ஆண்டில் பொருளியல், புவியியல், அரசியல், சர்வதேசக் கற்கை ஆகிய பாடங்களைக் கற்றுத் தேறிய பின் இரண்டாம் வருடப் பரீட்சையில் பொருளியல் சிறப்புக் கற்கைக்குத் தெரிவு செய்யப்பட்டுத் தனது சிறப்புக் கலைக் கற்கையில் பொருளியல் புள்ளிவிபரத்துறையில் கற்றுத்தேறி 1979 இல் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார். 1986 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வியை ஓர் ஆண்டு கற்றுக் கொண்டிருந்த போது தந்தையின் சுகவீனம் காரணமாக இக் கல்வியைத் தொடர முடியாமல் போய்விட்டது. 1991 இல் நடாத்தப்பட்ட அதிபர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்து 1991.06.01 இல் இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றிற்கு (S.L.P.S. - I) பதவி உயர்த்தப்பட்டார். 1994 இல் கல்வி டிப்ளோமா பரீட்சையில் (திறந்த பல்கலைக்கழகம் - நாவல) சித்தி பெற்றார். 2009 இல் நடத்தப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து S.L.E.A.S பதவிக்குத் தரம் உயர்த்தப்பட்டார்.

**இந்திராவின் குடும்ப வாழ்வு**

மரபு தொடர்புடைய இரண்டுக்கு மேற்பட்ட சந்ததியினரை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுக் குடும்பத்தில் பிறந்து தனது கட்டிளமைப் பருவம் வரை வாழ்ந்தமையால் தனது எதிர்கால ஆளுமைப் பண்புகளை கட்டமைக்கக் கூடிய தனி மனித சமூகப் பண்புகளை இந்திரா பெற்றிருந்தார். அவரது பல்கலைக்கழக வாழ்வு அவருக்கு மேலும் பலபட்டறிவு அனுபவங்களை வழங்கியது

திரு. க. த. இராஜரட்ணம் என்பவரை 1979 இல் இல்லத் துணைவராக ஏற்றுக் கொண்டதன் மூலம் சமூக வாழ்வின் ஆணிவேராக விளங்கும் குடும்பம் என்ற பந்தத்தில் இணைந்து கொண்டார். இல்லற அறன்களுக்கு உட்பட்டு கார்த்திகா, அபியுதன் ஆகிய இரு குழந்தைகளைப் பெற்றெடுத்தார். 'குழந்தைகளின் முதல் உலகம் குடும்பமே' என்பதை உணர்ந்து இல்லத்தை தமது குழந்தைகளின் கல்வி கூடமாகவும் தாமே அவர்களின் ஆரம்ப ஆசிரியர்களாகவும் தொழிற்பட்டு கல்வி ஆர்வத்தை ஊட்டினர். ஒரு குடும்பத்தின் 'சமூக பொருளாதார நிலை' தமது பிள்ளைகளின் கல்வியக வாழ்வில் தாக்கம் செலுத்தும் என்பதை புரிந்து பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தினார். தமது பிள்ளைகளின் மொழி வளர்ச்சியிலும்; சொற்களஞ்சிய விரிவாக்கத்திலும் கவனம் செலுத்தியதுடன் 'தான்' (I Feeling) என்னும் உணர்வையும் 'நாம்' (We Ieeling) என்ற உணர்வையும் பிள்ளைகளுக்கு உணர்த்தி அவர்களுக்கான 'வாழ்க்கை நடை' (Style of Life) ஒன்றையும் உருவாக்கி அவர்களைக் கல்வியிலும் சமூக வாழ்க்கையிலும் ஓர் உயர்ந்த நிலைக்கு உருவாக்கியதில் இந்திராவின் குடும்பம் தமது பொறுப்புக்களையும், கடமைகளையும் நல்ல முறையில் நிறைவேற்றியுள்ளது.

மகள் கார்த்திகா திருமணம் செய்து தற்போது லண்டனில் இருக்கின்றார். மகன் அவுஸ்திரேலியாவில் வேலை செய்கின்றார். 'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' என்று கூறுவார்கள். அதற்கமைய இந்திரா ஒரு நல்ல இல்லத்தலைவியாக இருந்து இல்லற தர்மங்களைப் பின்பற்றி தனது குடும்பத்தை நிர்வகித்து வந்துள்ளர்.

**ஆசிரிய ஆசான்கள்**

தனது மானிட மலர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் உதவிய ஆசிரிய ஆசான்களைப் பற்றி என்னிடம் கூறியுள்ளார். அத்துடன் தன் மாணவர்களுக்கும் ஆசிரியர்களினது முக்கியத்துவம் பற்றியும் அவர்களைக் கனம் பண்ண வேண்டும் எனவும் எடுத்துக் கூறி வந்துள்ளார். அவ்வாறு இந்திராவின் இதய நினைவில் வலம் வருபவர்களாக வரலாறு கற்பித்த திருவாளர்களான இரட்ணசபாபதி, மகாலிங்கம், அரசியல் கற்பித்த சின்னத்தம்பி, தமிழ் கற்பித்த கிருஷ்ணபிள்ளைப் பண்டிதர், புவியியல் கற்பித்த திருமதி சறோஜினி, மதிப்பிற்குரிய சபா ஜெயராசா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அதிபர்களாக இருந்து வழி நடத்தியவர்களாக திரு. சிவசிதம்பரம், திரு. குணரட்ணம் ஆகியோர் மறக்க முடியாதவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்பித்தல்**

ஒரு நல் மாணவனது அகத்தையும் அவனுடைய சமநிலை ஆளுமைப் பண்புகளையும் கட்டமைக்கும் ஒரு நல்லாசிரியரைச் சமூகம், 'தன்னை எரித்து ஒளி தரும் கற்பூரத்திற்கும்', 'தன்னைச் சிதைத்து சுகந்தம்' தரும் சாம்பிராணிக்கும் ஒப்பிடும். விண்ணை விசாரிப்பவர்களே அதனை விடுத்து மண்ணை விசாரியுங்கள் உங்கள் வாழ்வின் பின் புலத்தில் எங்காவது ஓர் ஏணியாய், ஒரு தோணியாய் ஓர் ஆசிரியர் இருந்திருப்பார். மாணவர்களின் நேரடி வாழ்வில் ஆசிரியர்கள் ஞானிகளே; திரிந்து போன இன்றைய உலகிற்குத் சுடராய் இருந்து ஒளியூட்டுபவர்களும் அவர்களே. இவர்கள் நினைத்தால் பூமியைப் புனிதப்படுத்தலாம். கொதித்தால் பூகம்பத்தையே தோற்றுவிக்கலாம். இவை ஆசிரியர் பற்றிய ஒரு மிகைப்படுத்தப் பட்ட கூற்றுக்களாகவோ ஓர் இலட்சிய தரிசனம் என்றோ சிலர் கருதலாம். ஆனால் இவ்வாறு பணியாற்றிய பல ஆசிரியர்கள் எமது காலத்தில் இருந்துள்ளனர். ஏன் இன்றும் வாழ்கின்றனர். பணி புரிகின்றனர்.

இன்று பணி ஓய்வு பெறும் திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்கள் ஒரு நல்லாசிரியை யாக தொழிற்பட்டுள்ளார். இவர் 1979 ஆம் ஆண்டு தொடக்கம் தான் கற்ற கல்விக்கூடமான நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தமிழ், சமூகக்கல்வி ஆகிய பாடங்களைக் கற்பித்ததுடன் நெல்லியடியிலுள்ள அமைச்சூர், லிவப்பூல் கலாசாலைகளில் A/L மாணவர்க்குப் பொருளியல் பாடத்தையும் O/L மாணவர்க்குச் சமூகக்கல்வி, தமிழ்ப் பாடங்களையும், கற்பித்துள்ளார்.

1984.03.12 இல் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று உத்தியோக பூர்வக் கற்பித்தலில் ஈடுபட்டார். பின்பு 1984.09.25 ஆம் திகதி முதல் வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று திருமதி M. T. S. லூயிஸ் அதிபரது நிர்வாகத்தின் கீழ் பணியைத் தொடர்ந்தார். இப் பாட சாலை இரண்டாந் தரப் பாடசாலை. (தரம் 1-11 வரை உள்ளது) இங்கு கல்வி கற்கும் மாணவர்களில் அதிகமானோர் சாதாராண பொருளாதார நிலையிலே உள்ளனர். இவர் களுக்குக் கல்வி புகட்டும் பணியைத் தமக்குக் கிடைத்த உன்னத பணியாக ஏற்றுத் தான் கற்ற பொருளியல், புள்ளி விபரவியல்துறையை விடுத்து தாய்மொழியையும், சமூகக் கல்வியையும் கற்பிக்கத் தொடங்கினார். இவர் மாணவர்களது உளநிலை அறிந்து, சூழலைப் புரிந்து தனது கற்பித்தலை வடிவமைத்தார். ஆரம்ப காலங்களில் தனது நியமமொழி, பேச்சு மாணவர்களுக்குப் போதிய விளக்கத்தைத் தரவில்லை என்பதை உணர்ந்து அவர்களது பேச்சு மொழியையும் கலந்து உரையாடல் முறையிலும், நாடகப் பாணியிலும் தனது கற்பித்தலை மேற்கொண்டார்.

கற்பிக்கும் போது மொழி கற்பிக்கும் நுட்பங்களான சீர்மிய நுட்பங்கள், வாய்மொழி அணுகுமுறை; தொடர்பாடல் நுட்பங்கள், ஒலி முறை நுட்பம், கருத்தேற்றக் கற்பித்தல் இயற்கை அணுகுமுறை ஆகியவற்றைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தி மாணவர்களின் உள்ளத்தில் பசு மரத்தாணி போன்று மொழிப் புலமையைப் புகட்டி அவர்களது பாட அடைவு விருத்திக்கும், சிந்தனை விருத்திக்கும் கருத்து வெளிப்பாட்டிற்கும் உதவியதுடன் பயிற்சிகளை வழங்கி மாணவர்களைத் தலை நகரில் உள்ள பெரிய பாட சாலைகளில் கற்கும் மாணவர்களின் மொழி அறிவுடன் போட்டி போடும் அளவிற்கு வளர்த்தெடுத்துள்ளார். தமிழ், அரசியல், வரலாறு, புவியியல், பொருளியல் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடப் பரப்புகளில் பெற்ற அறிவைப் பயன்படுத்திப் பல்வேறு பாடங்களின் ஒன்றிணைப்பாக அறிமுகம் செய்யப்பட்ட சமூகக்கல்வியைத் தெளிவாகவும் விரிவாகவும் எளிமையாகவும், கற்பித்து மாணவ மாணவிகளின் உள்ளத்தில் உறைந்துள்ளார்.

திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்கள் விடயச் சிறப்பறிஞர், நிர்வாகி, திட்டமிடலாளர், கலந்துரையாடல் தலைவர், பரீட்சை மதிப்பீட்டாளர், வழிகாட்டி, கணக்காளர், ஆளுமையை வடிவமைப்பவர் உளவள விருத்தியாளர், பாடசாலை சமூக இணைப்பாளர், வகுப்பறை முகாமையாளர், நுட்பக்கலைகளைக் கண்டறிந்து போதிப்பவர், நலன்புரி அலுவலர், நூலகர், மாற்றங்களைத் தோற்றுவிப்பவர் என்ற நடிபங்குகளை தனது ஆசிரியத் தொழிலில் வெளிப்படுத்தினார். பண்டைய ஆசிரியர்களைப் போன்று அறிவை வழங்குபவராகவும், அறிவைப் பரிமாற்றம் செய்பவராகவும், பயிற்சிகள் ஊடாகப் பெற்ற திறன்களை பயன்படுத்தி மாணவர் மையக் கல்வியை வழங்கும் வழி காட்டி; ஆலோசகர்; இலகுபடுத்துபவர் என்ற நிலையிலும் தொழிற்பட்டதுடன் இந் நூற்றாண்டுக்கான கல்வியை வழங்கத் தேவையான படைப்பாற்றல். புத்தாக்கத் திறன், பகுப்பாய்வுத் திறன், பிரச்சினை தீர்த்தல், இசைவாக்கம், ஒத்துப்போதல், போன்ற ஆற்றல்களை உள்வாங்கி அவற்றினூடாக மாற்றத்தை ஏற்படுத்தும் முகவராகவும் தொழிற் பட்ட ஒரு நல்லாசிரியராக உருமலர்ச்சி பெற்று தான் கல்வி கற்பித்த நிறுவனத்திற்கு நற் பெயரை ஏற்படுத்தியதுடன் ஆசிரியத் தொழிலுக்குரிய கௌரவத்தையும் பாதுகாத்துள்ளார். இதனால் தான் அவரது பழைய மாணவர்களும் பெற்றோரும், நலன் விரும்பிகளும் இன்று இந்தச் சேவை இளைப்பாற்றுகை விழாவை மிகச் சிறப்பாக நடத்துவதுடன் ஒரு சிறப்பு மலரையும் வெளியிட்டுள்ளார்.

**அதிபராக இருந்து ஆற்றிய பணிகள்**

1991 இல் நடாத்தப்பட்ட இலங்கை அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று அதிபர் தரம் ஒன்றிற்கு (S.L.P.S - I) பதவி உயர்ச்சி பெற்ற திருமதி இ. இராஜரட்ணம் ஆசிரிய பணியின் 7 வருடங்களின் பின் தான் கற்பித்த வெள்ளவத்தை அரசினர் தமிழ் பாடசாலையில் மாலை நேரப் பாடசாலையாகிய கிருலப்பனை றோ. க. த பாடசாலையின் அதிபராக 1993 இல் நியமிக்கப்பட்டார். பின்பு 1997 இல் தற்போதைய பாடசாலையின் அதிபராகப் பதவியைப் பொறுப்பேற்று இன்று வரை தனது பொறுப்புக்களையும் கடமைக் கூறுகளையும் சிறப்பாகச் செய்து வந்துள்ளார்.

முறைசார் கல்வியைப் பெறுவதற்காக ஆண்டு ஒன்றில் இணைந்து 13 ஆம் ஆண்டில் வெளியேறும் மாணவர்களின் உடல் உளப் பருவங்களுக்கேற்பவும் அவர்களின் மரபு, சூழற் காரணிகளுக்கு ஏற்பவும் நடத்தைக் கோலங்களை நெறிப்படுத்தி தமக்கும், குடும்பத் திற்கும், சமூகத்திற்கும் நாட்டின் தொழில் சூழலுக்கும், இன்றைய உலகச் சூழலுக்கும் உதவக் கூடிய நற்பிரஜைகளாக மாற்றுவதே பாடசாலைகளின் நோக்கமாகவும் குறிக் கோளாகவும் இருக்க வேண்டும். இந்த வகையில் தான் பாடசாலைகள் வினைதிறன் மிக்க சமூக நிறுவனங்களாகத் தொழிற்பட முடியும். மாணவர்களின் முரண்பட்ட நடத்தைகளைச் சரியாக இனங்கண்டு நெறிப்படுத்த தவறும் பாடசாலைகள் தோல்வியடைந்த பாடசாலை களாகக் கருதப்படும். இதற்கு அமைய தான் பாடசாலையின் நிறுவனப் பணிகளையும்; சமூகப் பணிகளையும்; இதில் உள்வாங்கப்படும். மாணவர்கள், ஆசிரியர்கள் ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளர்கள், கல்வி அதிகாரிகள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், ஏனைய சமூக நிறுவன அங்கத்தவர்களுடன் உணர்வு பூர்வமான உடன்பாட்டு எதிர்மறைத் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றைப் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதிலேயே ஒரு அதிபரின் வெற்றி தங்கியுள்ளது. அத்துடன் பாடசாலைக்குள் இயங்கும் அழுக்கக் குழுக்கள், வெளியார் தலையீடுகள், கோளமயமாக்கலின் பாதிப்புக்கள் அதிபரின் நிர்வாகச் செயற் பாடுகளுக்கு சவால்களாக அமைகின்றன. இவை இன்றைய பாடசாலைகளை திறந்த நிறுவனங்களாக மாற்றிவிட்டன.

எனவே தன்னியக்கத்தினூடாகப் பாடசாலையை இயக்கும் அதிபர் அங்கு நல்லதொரு பணிச் சூழலைக் கட்டமைத்து அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலமே நல்ல நிறுவனத் தலைவராக; நிர்வாகியாக; முகாமையாளராக; அதிகாரியாக நண்பராக...... மதிக்கப்படுவார். இப்பண்புகள் அனைத்தையும் 1993 இலிருந்து 2013.02.28 பிற்பகல் ஒன்று முப்பது மணிவரை திருமதி இந்திரா இராஜரட்ணம் அதிபர் என்ற நடிபங்கினூடாக நடுநிலை நின்று சரிநுட்பமாக நிறைவு செய்துள்ளார்.

தற்போதைய பாடசாலையின் அதிபர் பதவியை பொறுப்பேற்ற காலத்திலிருந்து கல்வியகத்தின் நிகழ்வுகளை ஆவணப்படுத்தவும் மாணவர்களது ஆக்கத்திறன்களை வளர்க்கவும் தனது மனப்பதிவுகளை வெளிப்படுத்தவும் கல்வியியலாளர்கள், அறிஞர்கள் சிந்தனையாளர்கள் போன்றோர்களின் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்ற தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் 'சுவடு' என்ற பாடசாலைச் சஞ்சிகை ஒன்றை வெளியிடத் தொடங்கினார். பொருளாதார நிலைமையில் பின் நிற்கும் குடும்பங்களின் பிள்ளைகள் கற்கும் பாடசாலையில் இவ்வாறான ஒரு சஞ்சிகையை வெளியீடு செய்வ தென்பது மிகக் கடினமான பணியாகும். தலைநகரில் உள்ள பெரிய தரமான பாடசாலை களில் வெளிவரும் சஞ்சிகைகளைப் போன்று பல்வேறு வழிகளில் இம் மலர் சிறப் புடையதாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு மலரும் உருவம், உள்ளடக்கம் என்பவற்றில் போதிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இச் சஞ்சிகைகளின் உருவாக்கத்திற்கு ஒத்துழைக்கும் தனது ஆசிரியர் குழாத்தை அடிக்கடி நன்றியுடன் நினைவு கூர்வார். சங்க இலக்கியக் காட்சிகள், தமிழர் கலைகள், அறிவியல்; கோளமயமாக்கல், சூழல் பாதுகாப்பு ............ போன்ற 'எண்ணக் கருக்களை அட்டைப் படங்களாகக் கொண்ட இம் மலர்கள் தமிழ் அன்னைக்கும், சி. வை தாமோதரம்பிள்ளை, தனிநாயகம் அடிகள், ஆறுமுகநாவலர், விபுலானந்த அடிகளார், பாரதியார், பேராசிரியர்களான கைலாசபதி, சிவத்தம்பி ஆகி யோருக்கும் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகும்.

கல்வி, உளவியல், ஆசிரியத்துவம், மொழி கற்பித்தல், அறிவியல், முகாமைத்துவம், சங்க இலக்கியச் செய்திகள், சுகாதாரம், ஒழுக்கம், விழுமியக் கருத்துக்கள், அரசியல் சிந்தனைகள் போன்ற விடயப் பரப்பில் பேராசிரியர் சிவத்தம்பி, சந்திரசேகரம், பேராசிரியர் சபாஜெயராசா, பேராசிரியர் கருணாநிதி, கலாநிதி நாகேஸ்வரன், பேராசிரியர் அன்ரனி நோபேட், முதுநிலை விரிவுரையாளர் தை. தனராஜ் Dr. சி. எஸ். நச்சினார்க்கினியர், Dr. முருகானந்தம், Dr. வ. முரளி, S.H ஜமீல்............ போன்ற பலரின் ஆக்கங்கள் வெளி வந்துள்ளது. இம் மலர் வெளியீட்டின் மூலம் அதிபர் தனது ஆற்றல்களையும், ஆசிரியர் களது ஆற்றல்களையும், மாணவர்களின் படைப்பாற்றல் திறன்களையும் பாடசாலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளுக்குச் சமூகத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் சிறப்புறக் காட்டியுள்ளார்.

'சுவடு' என்ற சஞ்சிகையைக் கல்வியகத்தின் பரிசளிப்பு விழாவின் போதே வெளியிடப் பட்டது. அதில் அதிபர் தனது பரிசில் நாள் அறிக்கையை வெளியிட்டுள்ளார். இவ்வறிக்கை களை வாசிக்கும் போது அதிபரது கல்வி, கல்விசார் சுற்றறிக்கைகள், ஆசிரியத்துவம், மாணவத்துவம், உளவியல் நிர்வாகம், முகாமைத்துவம், சமூகம், சமூகவியல், ஒழுக்கம், அறிவியல் போக்கு, பாட விதானம், அதில் ஏற்பட்ட மாற்றங்கள் பரீட்சை போன்ற அறிவும் அதன் பிரயோகங்களும் வெளிப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறிக்கையும் ஏதாவது ஒரு பிரச்சினையை முன் வைத்து அதனைத் தீர்க்கும் முறை பற்றியும் பாடசாலை ஆசிரியர், மாணவர் நிலை பற்றியும் மிக விரிவாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளது. பரி சளிப்பு விழாவும் கலைவிழாவும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மிக நேர்த்தி யாகவும் கலை நிகழச்சிகளுடனும் சிறப்பாக நடாத்தப்பட்டமை அதிபரது செயத்திறனை வெளிக்காட்டுகின்றது.

இணைப் பாட விதான செயற்பாடுகளில் மாணவர்களின் உடல் உள வலுவை விருத்தி செய்வதற்காக வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் வருடா வருடம் நடாத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் பங்கு கொள்வதன் மூலம் மாணவர்களின் வெக்கறை விடுபடல், வெற்றி தோல்விகளைச் சமமாக மதித்தல், சமூகமயப்படுதல், நடுநிலை நின்று செயற்படல் போன்ற பண்புகளை அதிபர் வளர்த்தெடுத்துள்ளார்.

இவரது காலத்தில் தொடங்கப்பட்ட மாணவ மன்றங்களான இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய, மன்றங்களும் தமிழ், ஆங்கில, விஞ்ஞான, சமூகவியல், கணனி, மாணவர் தலைவர் மன்றம் போன்றவற்றின் மூலம் மாணவச் செல்வங்களின் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தெடுத்து அவர்களை எதிர்காலச் சமூகப் பிரஜைகளாக மாறுவதற்கான பயிற்சிகளைப்பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அத்துடன் மாணவர்களிடம் உள்ளுறைந்து காணப்படும் கலை, அழகியல் ஆர்வங்களை வெளிக் கொண்டு வருவதற்காக பல செயற்றிட்டங்களை ஆசிரியர்களைக் கொண்டு நடாத்தி யுள்ளார். கலைத்திறன்களை வெளிப்படுத்தும் மேடைகளாக நவராத்திரி விழா, கலை விழா, போன்றவை அதிபரால் நடாத்தப்பட்டது. தமிழத் தினப் போட்டிகளில் இப் பாட சாலை மாணவர்கள் பல வெற்றிகளை ஈட்டியமை இவற்றின் பெறுபேறுகளாக உள்ளன.

**ஆசிரிய - மாணவ சமூக உறவு**

திருமதி இராஜரட்ணத்திடம் காணப்படும் வசீகரத் தோற்றமும் உடையணியும் பாணியும் அவருடைய உரையாடல் பாங்கும் கருத்து வெளிவீச்சும் எவரையும் அவருடைய கருத்துக்களுக்கு இசைவாக்கி விடும். எனவே முரண்பாடுகளோ சர்ச்சைகளோ தோன்று வதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவே இருக்கும். இவற்றையும் மீறித் தோன்றும் சர்ச்சைகளை அவர் சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கவனித்து சமயோசிதமாகத் தீர்த்துவிடுவார். இதனால் ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் ஆகியோருடன் எப்பொழுதும் சுமுகமான உறவே நிலவியது. இவர் தாய் என்ற ஸ்தானத்தில் இருந்தே மாணவர்களது ஒவ்வொரு நடத்தைக் கோலங்களையும் தரிசித்துப் படிப்படியாக நிறுவன நடத்தைகளை நெறிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவார். இதனால் அதிபரிடம் மாணவர்கள் தாயன்பு கொண்டவரிடம் அணுகுவது போன்றும் நட்பு முறையிலும் பழகுவர்.

இந்திராவின் காலத்தில் கல்விப் பணியாற்றிய ஆசிரிய ஆசான்கள் அனைவரும் ஒரு குடும்பமாகவே இயங்கினர். இவர்களிடையே நிலவிய உறவானது கல்வி நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் இயக்கத்திற்கும் எந்த வகையிலும் பாதகமாக அமைந்ததில்லை. அதிபரிடம் உள்ள கனிவான பேச்சும், பக்கச்சார்பற்ற செயற்பாடுகளும்; பொறுமையும்; விட்டுக் கொடுக்கும் பண்பும்; மற்றவர்களின் கருத்துக்களை மதிக்கும் மனோபாவமும்; சூழ்நிலைக்கேற்ப முடிவெடுக்கும் திறனும்; ஆசிரியர்களின் சுக, துக்கங்களை புரிந்து கொண்டு அவர்களை எந்த வகையில் பாடசாலைச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளச் செய்வது; சமூக நிறுவனங்களின் உதவியை எவ்வாறு பெற்றுக் கொள்வது போன்ற நடத்தைப் பண்புகள் ஆசிரிய - மாணவ சமூக உறவுகளைச் சரியான முறையில் கட்டமைத்து வளர்த்தெடுக்க உதவியது. இதனால் தான் அவர் எல்லோரது விருப்பத்திற்குரிய நல்லதிபராக இயங்க முடிந்தது.

**கல்வி நடவடிக்கைகள்**

இப்பாடசாலைக்கு அனுமதி பெறும் மாணவர்கள் பெரும்பாலும் முன் பள்ளிக் கல்வி பெறாத சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு முதலாம் ஆண்டிலேயே 'எமது ஆசிரியர்கள் ஆரம்ப நிலை எண் எழுத்துப் போதனைகளைச் செய்ய வேண்டும்; இவ்வாறு படிப்படியாக உருவாக்கப்பட்ட மாணவர்களை இடையிடையே தலைநகரிலுள்ள பிரபல பாடசாலைகள் உள்வாங்கி விடும். எஞ்சியவர்களை வைத்தே நாம் கல்விப் பெறுபேறுகளையும் பெற வேண்டியுள்ளது. இந்த வகையிலும் எமது கல்லூரி மாணவனான செல்வன் ஜெ. யோகநாத் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து அகில இலங்கை ரீதியில் முதல் பத்து இடங்களுக்குள் வந்து யப்பானுக்கும் சென்றுள்ளார். 2007 ஆம் ஆண்டில் க.பொ.த. (சா /த) பரீட்சையில் இரு மாணவிகள் பத்துப் பாடங்களிலும் 'A' தர சித்தி பெற்று கொழும்பு மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றமை கொழும்பு கல்வி வலயத்தின் தமிழ் மொழிக் கல்விப் பெறுபேற்றில் கிடைத்த கௌரவம் எனலாம். பொதுவாக எமது O/L பெறுபேறுகளில் 70 வீதமான மாணவர்கள் A/L படிப்பதற்கான தகுதியைப் பெற்று வந்துள்ளனர்' இச் செய்திகளை நான் அதிபருடைய வருடாந்த பரிசில் நாள் அறிக்கையிலிருந்து பெற்று இங்கு சுட்டிக் காட்டுகின்றேன்.

**நேர முகாமைத்துவம்**

இந்திராவின் பல்கலைக்கழக வாழ்விலும் சரி அவருடைய ஆசிரிய, அதிபர் வாழ்விலும் சரி நேரத்தைக் (காலம்) தனது ஆளுமைக்குள் உட்படுத்தித் திட்டமிட்டுச் செயலாற்றுவதில் வல்லவர் பணத்தின் மூலம் எதையும் சாதிக்கலாம் எனக் கூறுவர். ஆனால் நேரத்தை விலைக்கு வாங்க முடியுமா? இந்த நேரம் உலகில் உள்ள அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானது. எனினும் அனேகமானவர்கள் நேரமில்லை, நேரமில்லை எனக்கூறுவதை நாம் கேள்விப்பட்டுள்ளோம். வளர்ந்து விட்ட விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல்வேறு கருவிகளும் பாவனைப் பொருட்களும் நேரத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமிக்க உதவுகிறது. நேரத்தைச் சரியாக நிர்வாகம் செய்தால் 'நேரம் பொன் போன்றது' என்பதையும், 'கடமைகள் கண் போன்றது' என்பதையும் ஒருவர் தனது நெஞ்சில் நிறுத்தித் தொழிற்படுவர். இப்பண்பு இந்திராவிடம் மிகச் சிறப்பாகச் செயற்பட்டுள்ளது.

மனிதர் தமது வாழ்நாளில் 29 ஆண்டுகளை தூங்குவதற்கும் 10 ஆண்டுகளை வருவாய் ஈட்டுவதற்கும் 9 ஆண்டுகளைப் பிறருக்காகக் காத்திருப்பதற்கும் செலவு செய்கின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன. இந்த வகையில் பாடசாலைகளை நிர்வகித்து அதனை முகாமை செய்வோர் நேர முகாமைத்துவத்தைப் பொருத்தமாகவும் கவனமாகவும் மேற்கொள்ளும் போது தான் அவர்கள் அடையத் திட்டமிட்டுள்ள நோக்கங்களை வினைத் திறன் உள்ளவையாக மாற்ற முடியும். இந்திரா சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப் பட்டமைக்கும் ஆசிரியர்களை நல்லாசிரியர்களாகத் தொழிற்பட வைத்தமைக்கும் மாணவர் களை நற்பிரசைகளாக மாற்றுவதற்கும் மொத்தத்தில் தனது கல்வி நிறுவனத்தைப் பயன் தரு நிறுவனமாக மாற்றியமைப்பதற்கும் அவர் பின்பற்றிய நேர முகாமைத்துவமே காரணமாக அமைந்தது.

**இவ் அதிபருடைய காலத்தில் நடைபெற்ற சில நிகழ்வுகள்**

- 2002 ஆம் ஆண்டில் வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலம் என்ற பெயர் பெற்றோர் - ஆசிரியர் - நலன் விரும்பிகள் ஆகியோரின் விருப்பத்திற்கமைய கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- பாடசாலை முன்றலில் கல்வித் தெய்வமான சரஸ்வதிக்குச் சிலை நிர்மாணிக்கப்பட்டது.
- பாடசாலையின் கட்டுமானங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குப் போதிய நில வசதி இல்லையெனினும் தற்போதுள்ள கட்டத்தின் முன்புறத்தில் உள்ள சிறிய நிலப்பரப்பில் ஒரு கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு வரைபடமும் தயாரித்து மேல் மாகாணக் கல்வித் திணைக்களப் பொறியியலாளருக்கு அனுமதிக்காகக் கையளித்த பொழுது நிலப்பரப்பு போதாமையினால் அவ் அனுமதி கிடைக்கவில்லை.

**சமூகப் பணிகள்**

- சுவாமி ஆத்மகணாந்தாஜி அவர்களது காலத்தில் இராமகிருஷ்ண மிஷன் சமயப் பாடசாலையில் பணிபுரிந்தார்.
- லயன் கழகத்தின் மூலம் தனது பாடசாலைச் சூழலில் உள்ள மக்களின் நலன் கருதி இலவச சுகாதார சேவையை நடாத்தி பரிசோதனைகள் செய்யப்பட்டதுடன் மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டமை
- தனது பிறப்பிடமான நெல்லியடி சன சமூக நிலையத்தின் விருத்திக்கும் முருகன் ஆலயப் பணிகளுக்கும் பல்வேறு வகையிலும் பணியாற்றி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கௌரவிப்புகள்**

- மாணவர்களின் உள்ளுறைந்த எண்ணங்களை அறிவாகவும், ஆற்றலாகவும், உணர்ச்சிச் சமநிலைகளாகவும், ஆசிரியர்களைக் கொண்டு வெளிப்படுத்தியதன் மூலம் தனது நிர்வாக முகாமைத்துவ செயற்பாடுகளை காட்சிப்படுத்திப் பாடசாலையின் பெயரைத் தலைநகரில் துலங்கச் செய்த திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களைச் சிறந்த அதிபராகத் தெரிவு செய்து 'வித்யா விபூஷணம்' விருது வழங்கி மேல் மாகாண முதல் அமைச்சர் 2008 ஆம் ஆண்டில் கௌரவித்துள்ளார்.
- கொழும்பு தமிழச் சங்கத்தில் நடைபெற்ற விழாவில் கௌரவிக்கப்பட்டமை.
- ஈஸ்வரன் நற்பணி மன்றத்தால் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்ற விழாவில் கௌரவிக்கப்பட்டமை.
- கிங்ஸ்ரன் சர்வதேசப் பாடசாலையின் ஆரியபட்டர் பாலமந்திரர் பாடசாலை நவராத்திரி விழாவில் கௌரவிக்கப்பட்டமை.
- மயூரபதி அம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை ஆண்டு விழாவில் கௌரவிக்கப் பட்டமை.
- சனாதன தர்மயுக விழிப்புணர்ச்சிக் கழகத்தினரால் பெண்கள் தினத்தில் பெண் அதிபர்களின் கௌரவிப்பின் போது அதிபர் கௌரவிக்கப்பட்டமை.
- சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற 2010 இல் உலக ஆசிரியர் தினத்தையொட்டி கொழும்பு வலயக் கல்வித் திணைக்களத்தால் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.

இந்திரா தனது கல்வியகத்தின் பொதுச் சூழலையும், பணிச் சூழலையும் கவனத்தில் எடுத்து நேர முகாமைத்துவத்தையும் இணைத்துத் தனது கடமைப் பொறுப்புக்களை கடமைக்காக மட்டும் செய்யாது அவை உயிரோட்டமுள்ள, இயக்கத்தன்மை சார்ந்த, மாணவ, ஆசிரிய, நிறுவன, சமூக உறவுகளோடு தொடர்புடையவை என்பதை உணர்ந்து சுதந்திரமாகச் செயலாற்றி நல்லதிபராக இன்று ஓய்வு பெறுவதை இதய பூர்வமாக வாழ்த்துவதுடன் அவரது ஓய்வு காலம் நலமாகவும், வளமாகவும் அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



''எல்லாவிதமான அறிவும் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது. என்று வேதாந்தம் சொல்கிறது. இந்த அறிவு ஒரு சிறுவனிடங் கூட இருக்கின்றது. இந்த அறிவை விழித்து எழும்படி செய்வது தான் ஆசிரியரினுடைய கடமை.

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மன வலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை.

உயர்ந்த கருத்துக்களை மாணவர்களுக்குக் கொடுங்கள். அந்த ஒரே ஒரு உதவி தான் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. பிறகு அதன் விளைவாக மற்ற நன்மைகள் எல்லாம் வந்து சேரும்.'' என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

அந்தவகையில் கல்வியறிவினைப் புகட்டும் உன்னத பணியில் அதிபர் திருமதி இ. இராஜரட்ணம் அவர்கள் தன்னலங்கருதாத சேவை ஆற்றியுள்ளார். திருமதி இ. இராஜரட்ணம் அவர்கள் தனது ஓய்வுகாலத்தில் மனநிறைவுடனும், அமைதியுடனும் வையத்துள் வாழ் வாங்கு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கொழும்பு.
இராமகிருஷ்ணமிஷன் கிளை

என்றும் இறைபணியில்
**சுவாமி சர்வரூபானந்த**
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



அழகிய ஈழத்திருநாடாம் இலங்கைத்தீவில் தலைநகராகிய கொழும்பு மாநகரில் தமிழர்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தையில் இராமகிருஷ்ண வித்தியாலம் அமைந்துள்ளது. இங்கே இருபத்தொன்பது வருடங்களுக்கு மேலாக திருமதி இ. இராஜரட்ணம் அவர்கள் ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். இவர் அன்பும் பண்பும் அறிவும் நிறைந்தவர்.

வித்தைகளைக் கற்றுக்கொள்ளும் இடமான வித்தியாலயத்தில் மாணவர்களை அன்புடன் அரவணைத்துச் சிறப்பாக வழிநடத்திக் கல்விச் சமூகத்துடனும் பெற்றோர் சமூகத்துடனும் மிக நெருங்கிய நல்லுறவைப் பேணி "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதற்கமைய தனது பணியைத் திறம்பட நிறைவேற்றித் தமது அறுபதாவது அகவையைப் பூர்த்திசெய்கிறார். இவரது முயற்சியால் பாடசாலையில் கல்வித் தெய்வமாகிய சரஸ்வதி தேவிக்குக் கோயில் அமைத்து மாணவர்களை வழிபடுவதற்கு நெறிப்படுத்தியமை இவர் கல்விப் பணியுடன் சமயப் பணியையும் மேற்கொண்டமைக்குச் சான்றாக விளங்குகின்றது.

*"உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்*
*உள்ளத்துளெல்லாம் உளன்"*

இவரது மணிவிழா சிறப்படையவும் மணிவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் இம்மலர் சிறப்புற வெளிவரவும் மயூரபதித்தாயின் பூரண கிருபை கிட்டுவதற்குப் பிரார்த்தனை செய்து ஆசி வழங்குகின்றேன்.

"சர்வேஜனாகா சுகினோபவந்து"

வேதாகம வித்தகர் சக்தி உபாசகர்
**சிவப்பிரம்மஸ்ரீ து. உதயராகவ குருக்கள்** J.P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



கொ/ இராமகிருஷ்ண வித்தியாலயம், எனது ஆலயத்திற்கும், என் இல்லத்திற்கும், என் உள்ளத்திற்கும் மிக நெருக்கமான பாடசாலை என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். காரணம்: அப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட, அதிபர், அனைவரும் கரம் கோர்த்து கல்வி என்னும் கலாசாலையை இச்சமூகத்தில் பிரகாசிக்க செய்வதை நான் கண்டு பேரானந்தம் அடைந்துள்ளேன். இதற்கு மூலக்கல்லாக விளங்கும் தற்போதைய அதிபர் திருமதி. இ. இராஜரட்ணம் அவர்களின் உழைப்பும், தலைமைத்துவமும் காரண மாகும்.

கல்வியியலிலே பட்டம் பெற்று, ஆசிரியர் சேவையில் பல மைற்கற்களைத் தாண்டிப் பெற்றுக் கொண்ட பல அனுபவங்களுடன் முதிர்ச்சி பெற்ற ஒரு அம்மையாரை நான் கண்டேன். அவரின் எளிமையான வாழ்க்கை, அன்பான, அறிவுபூர்வமான வார்த்தைகள், எளிய மாணவர்களிடம் காட்டும் கருணை. சமய காரியங்களிலே இருக்க வேண்டிய தாழ்மை, உடன் வேலையாட்களோடும், சமூகத்தோடும் இருக்கவேண்டிய நட்புறவு என்பன இவரிடம் நான் கண்ட ஆயிரக்கணக்கான குணங்களில் சில.

மேலும், மணிவிழா மலருக்கு எனது ஆசிச் செய்தியை எழுதும்படி கேட்டுக் கொண்ட உங்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். காரணம்: இத்தகைய தேர்ச்சி பெற்ற, ஓய்வு பெற்ற அதிபர் அவர்களைப் பற்றி எழுதக் கிடைத்தமை எனக்குக் கிடைத்த ஒரு மாபெரும் சந்தர்ப்பமாகவே கருதுகின்றேன். கர்த்தர் ஞானத்தைத் தருகிறார், அவர் வாயினின்று அறிவும், புத்தியும் வரும்.

*''அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்திருக்கிறார்,*
*உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடயமாயிருக்கிறார்''* (நீதி மொழிகள் 2:6-7)

*''நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்: உப்பானது*
*சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்?......*
*நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்,*
*மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.''* (மத்தேயு 5:13A, 14A)

இறைவனுடைய இவ்வார்த்தைகளுக்கிணங்க: எமது அதிபர் ஞானத்தைப் பற்றியும், புத்திமதி களைப் பற்றியும் இச்சமூகத்திற்கு உப்பைப் போன்று ருசி கொடுப்பவராகவும், ஒளியைப் போன்று வெளிச்சம் கொடுப்பவராகவும் வாழ்ந்து இறைவார்த்தையைத் தன்னால் முடிந்தளவு கடைப்பிடித்து உள்ளார் என்று நான் நம்புகின்றேன்.

நீங்கள் ஓய்விலே செல்வது எமக்குக் கவலையானாலும், உங்களுக்கு ஓய்வு தேவை. அந்த ஓய்விலும் கூட உங்களுடைய திறமைகளைச் சமுதாய வளர்ச்சிக்காகக் கொடுக்கக் கூடிய பலம் உங்களிடத்தில் உண்டு, அச்சேவையைச் செய்யும் அதே சமயம், குடும்ப உறவோடும், சரீர சுகபலத்தோடும் நீடுழி வாழ எனது வாழ்த்துக்கள்.

இறைமகன் இயேசு தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**அருட்தந்தை டி.கே.பாலகிருஷ்ணன்**
முகாமைக்குழு, தூய பேதுரு ஆலயம், பாமன்கடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



ஒரு ஆசிரியர் அல்லது கல்லூரி அதிபர் ஓய்வு பெறும் போது சக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை முன்னேற்ற சங்கத்தினர் ஆகியோர் பிரதி பலிக்கும் மனோநிலையை வைத்து அந்த ஆசிரியர் அல்லது அதிபர் பற்றிப் புரிந்து கொள்ள முடியும்.

திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்கள் பாமன்கடை இராம கிருஷ்ண வித்தியாலயத்தின் அதிபராக இருந்து ஓய்வு பெறும் நேரத்தில் மணிவிழா ஒன்றினை ஒழுங்கு செய்து அத்தருணத்தில் மலர் ஒன்றினை வெளியிட கல்லூரியுடன் தொடர்புடைய அனை வரும் உத்தேசித்திருப்பதில் இருந்து திருமதி இ. இராஜரட்ணம் அவர்கள் எத்துணை ஆழமாக அவர்களின் மனதில் நிறைந்துள்ளார் என்று ஊகிக்கக் கூடியதாய் உள்ளது.

மேற்படி வித்தியாலயம் கிட்டத்தட்ட ஹரிச்சந்திர மாவத்தைக்கு முன்பாக ஹவ்லக் வீதியின் மறுபுறம் கல்யாணி வீதியை ஒட்டி இருக்கிறது. ஹரிச்சந்திர மாவத்தை என்ற பெயர் எனது பாட்டனார் காலஞ்சென்ற சட்டத்தரணி V.A. ஹரிச்சந்திர நினைவாக இடப்பட்டது என்பது யாருக்கும் தெரியாது. காரணம் பெயரை யாரோ ஹரிஸ்சந்திர மாவத்தை என்று மாற்றியுள்ளனர். அந்த தெருவில் பெரும்பாலான இடங்கள் அல்லது காணிகள் ஒரு காலத்தில் என் மாமனார் காலஞ் சென்ற சட்டத்தரணி H. V. இராம்ஈஸ்வரா அவர்களுக்குச் சொந்தமாக இருந்தது. என் உறவினர் பலர் ஒரு காலத்தில் இந்தத் தெருவிலேயே வாழ்ந்து வந்தார்கள். சுமார் அறுபது வருடங்களுக்கு மேலாக மேற்படி இடத்துடன் எனக்குப் பரீட்சயம். 1958 ஆம் ஆண்டில் கலவரத்தின் போது இந்தப் பாடசாலைக்கு முன்பாக இருக்கும் திஸ்ஸ வீதியில் ஒரு வீடு எரிக்கப்பட்டு கரும் புகை எங்கும் பரவியிருந்தது இன்னும் என் கண் முன் தோன்றுகின்றது.

மிகச் சிறிய அளவில் இருந்த மேற்படி பாடசாலை இன்று ஒரு முக்கியமான கல்விக்கூடமாக உருவாகி வந்துள்ளது என்றால் அது திருமதி இ. இராஜரட்ணம் போன்றோரின் அயராத உழைப்பின் நிமித்தமே என்று கூறலாம். 1984ஆம் ஆண்டு தொடக்கம் திருமதி இ. இராஜரட்ணம் அவர்களுக்கு மேற்படி பாடசாலையுடன் தொடர்பிருந்து வந்துள்ளது. எனினும் 1993 இல் தான் அவர் இப்பாடசாலையின் அதிபர் ஆனார்.

2008 ஆம் ஆண்டில் மேல்மாகாண கல்வித் திணைக்களத்தினால் வித்யா விபூஷண விருது கொடுத்து அவர் பாராட்டப்பட்டுள்ளார். மேலும், சிறந்த அதிபர் விருது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் அவர் கல்வித்திணைக்களத் தினால் ஸ்ரீ லங்கா கல்வி நிர்வாக சேவைக்குள் இணைக்கப்பட்டுள்ளார். அவர் காலத்தில் மேற்படி பாடசாலைக் கல்விப் பொதுத்தராதரச் சாதாரண மட்டப் பரீட்சையில் ஆண்டு 2007 இல் மேல்மாகாணத்தில் சிறந்த பரீட்சை முடிவுகளைப் பெற்றமை அவருக்கு நற்புகழைக் கொடுத்துள்ளது. அவரின் நீண்ட கால சிறந்த சேவைக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களை அறிவிக்கும் அதே நேரத்தில் அவரின் ஓய்வுக் காலம் மற்றையோருக்கு நன்மை பயக்கும் வண்ணம் மிளிர வேண்டும் என்றும் அதற்கு இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் நல்ல தேக சுகத்தையும் வழங்க வேண்டும் என்றும் அவனை இறைஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

**நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணி பாராட்டு வாழ்த்து



கொழும்பு கல்வி வலயத்தில் காத்திரமான விரைவு கதி வளர்ச்சியை கண்டுள்ள இராமகிருஷ்ணா வித்தியாலயத்தின் அடையாளம் திருமதி இ. இராஜரட்ணம். பெரும் வளம் கொண்டு பெரும் சாதனைகளைச் செய்து காட்டுவது என்பது ஒன்று. குறைந்த வளங்களை கொண்டு உயரிய கல்வி சாதனைகளை நிகழ்த்துவது என்பது இன்னொன்று. இந்த இரண்டாவது வகை சாதனை என்பது அரியவகைச் சாதனையாகும். இதை அரிய மனிதர்களாலேயே செய்து காட்ட முடியும். அதைச் செய்துகாட்டியுள்ளவர், திருமதி இராஜரட்ணம் அவர்கள்.

கொழும்பு மாவட்ட மக்கள் பிரதிநிதியாக நான் கல்வித்துறையில் அதிபர்கள், கல்வி அதிகாரிகளுடன் இணைந்து துணிச்சலான பல காரியங்களைச் செய்து முடித்தேன். கலவரக்காலத்தில் காணாமல் போய்விட்ட இன்னொரு பாடசாலை, இந்த பாடசாலையுடன் இணைக்கப்பட்டு மாலைப் பாடசாலையாக நடத்தப்பட்டு வந்தது. இதன் மூலம், மனித வளம், பௌதிக வளம் இரண்டும் நீண்டகாலமாக ஒரு ஒழுங்கில்லாமல் வீணடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த நிலைமையை மாற்றி இன்றைய இராமகிருஷ்ணா என்ற இனிய பெயரைச் சூட்டி இரண்டு பாடசாலைகளையும் கூட்டிணைத்தோம். இந்த நடவடிக்கைக்கு அதிபர் திருமதி இராஜரட்ணம் முழு பொறுப்பையும் ஏற்று, வலய பணிப்பாளர் திருமதி. இராஜரத்தினத்துடன் இணைந்து எனக்கு அளப்பரிய ஒத்துழைப்பை வழங்கினார். அந்த ஆரம்பத்துக்கு பிறகு இந்த பாடசாலைக்குப் பிரத்தியேக அடையாளம் ஏற்பட்டு, திருமதி இராஜரட்ணத்தின் தலைமையில் படிப்படியாக வளர்ச்சி கண்டது.

வெகுவிரைவில் இந்த பாடசாலை அமைந்துள்ள வீதி அகலப்படுத்தப்பட்ட பின்னர், கொழும்பு மாநகரின் தெற்கு வாயிலாக அமைந்துள்ள பரபரப்பான இந்த சாலையில் திருமதி இராஜரட்ணத்தின் பெயரைச் சுட்டிக்காட்டும் வண்ணம் இராமகிருஷ்ணா வித்தியாலயம் நிமிர்ந்து தோற்றமளிக்கப் போகிறது.

ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர் மற்றும் கல்வி அதிகாரிகளுடன் இணைந்து திருமதி இ. இராஜரட்ணம் அவர்களை மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

05-03-13

அன்புடன்

**மனோ கணேசன்**

கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பாமன்கடையில் இராமகிருஷ்ணா வித்தியாலயம் என்ற ஒரு பாடசாலையை மக்களுக்கு அடையாளம் காட்டியவர் திருமதி இ. இராஜரட்ணம் அவர்களாகும். எவ்வளவோ வளப்பற்றாக்குறை அதிகமாக உள்ள பல பாடசாலைகள் மக்கள் கண்களுக்குத் தெரிவதில்லை. இந்நிலையில் வளங்கள் குறைந்து பின் தங்கிய நிலையில் இருந்த இந்தப் பாடசாலையைக் கொழும்பு மாவட்ட மக்களுக்குச் சிறந்த பாடசாலையாக முன் நிறுத்தியவர் இவரே யாகும். 1984ஆம் ஆண்டு கலைப்பட்டதாரியாக இப் பாட சாலையில் ஆசிரியராகப் பொறுப்பேற்ற இவர் ஆசிரியர் பற்றாக் குறை காரணமாக தமிழ் மொழி, சமயம், சமூகக்கல்வி போன்ற பாடங்களையும் மனமுவந்து மாணவர்களுக்குக் கற்பித்தார். பின்பு 1991 ஆம் ஆண்டு அதிபர் சேவை தரம் I இற்குத் தெரிவு செய்யப்பட்டுப் பிறிதொரு பாடசாலைக்கு மாற்றல் கிடைத்தும் தமது பாடசாலை யினது தராதரத்தினை உயர்த்துவதற்காக இதே பாடசாலையில் ஆசிரியராகத் தொடர்ந்தும் சேவையாற்றி 1993 ஆம் ஆண்டு அதிபராக இப் பாடசாலையில் பொறுப்பேற்றுக் கொண்டது முக்கியமான விடயமாகும். கல்வி அதிகாரியாகப் பதவி கிடைத்தும் அப் பதவியைப் பொறுப்பேற்காது தமிழ் மாணவர்களின் நலன் கருதிப் பாடசாலையின் அபிவிருத்திக்காக அயராது உழைத்தார்.

எனது 2004 ஆம் ஆண்டு மாகாணசபைப் பிரவேசத்தைத் தொடர்ந்து இன்று பாராளு மன்றத்தில் இருக்கும் எனது இன்றைய காலம் வரை தமது பாடசாலையின் அபிவிருத்திக் காகப் பல கோரிக்கைகளை முன்வைத்து தொடர்புகளைப் பேணி பல நிதி வளங்களைப் பெற்றிருக்கின்றார். மிகவும் அமைதியான சுபாவமும் எல்லோரிடமும் இனிமையாகப் பழகும் இவர் இப்பாடசாலையின் அபிவிருத்திக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்ததை எவராலும் இம்மியளவும் மறக்க முடியாது. இவரைப் போன்று எமது தமிழ் கல்வி சமூகத்திற்காகப் பாடுபடுபவர்கள் அறிவுக்கண்களைத் திறந்து விட்ட தெய்வமாகப் போற்றப்பட வேண்டும் என்பதே எனது அவா.

ஓய்வு பெற்று விட்டாலும் எதிகாலத்தில் இப்பாடசாலைக்கு இவர் ஆலோசனைகளையும் வழங்கி மென்மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று தலைநகர தமிழ் மக்களின் கல்வி நலனைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் எனது வேண்டுகோளாகும்.

அறிவுக் கண்களைத் திறப்பதே எமது சமூகத்தின் இன்றைய தேவையாகும்

**பிரபா கணேசன் எம். பி**
பாராளுமன்ற உறுப்பினர்,
கொழும்பு மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் அதிபர் திருமதி. இ.இராஜரட்ணம் அவர்களின் மணிவிழாவிற்கும், அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக மகிழ்வடைகின்றேன்.

கேடில் விழுச் செல்வமாம் கல்வியைப் புகட்டும் நல்லாசிரியராக 1984 ஆம் ஆண்டு இராமகிருஷ்ணா வித்தியாலயத்தில் பணியாற்றத் தொடங்கினார். பட்டதாரி ஆசிரியரான இவர், மாணாக்கருக்குத் தமிழ், சமயம், சமூகவியல் ஆகிய பாடங்களைச் சிறப்புடன் போதித்து அவர்களை நன்னெறிப்படுத்தினார். இலங்கைப் பாடசாலை அதிபர் சேவையில் தெரிவு செய்யப்பட்ட இவர், தாம் பணிபுரிந்த இப்பாடசாலையிலும் மாணாக்கர் மீதும் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்டிருந்தார். அதன் காரணமாக அப்பாடசாலைக்கே அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சிறந்த அதிபராகக் கடமையாற்றிய இவரைப் பாராட்டி 2008 ஆம் ஆண்டு, கல்வி அமைச்சால் 'வித்யா விபூஷணம்' என்ற பட்டமும் கல்வித் திணைக்களத்தினால் 'சிறந்த அதிபர்' என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளமை பெருமைக்குரியதாகும். இவரது மாணாக்கர்கள் பலர் பட்டதாரிகளாகவும் சிறந்த தொழில் வல்லுநர்களாகவும் திகழ்கின்றனர். அதிபர் திருமதி. இ. இராஜரட்ணம் அவர்கள் இராமகிருஷ்ணா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியவர்.

இத்தகு சிறப்பும் பெருமையும் கொண்ட அதிபர் அவர்களை விதந்து பாராட்டுவதோடு, இவரைக் கௌரவிக்கும் முகமாக வெளியிடப்படும் மணிவிழா சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். திருமதி இ. இராஜரட்ணம் அவர்கள் சகல நலனும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An appreciation from the Zonal Director - Colombo



I am very much pleased to write this message to the Principal of C/ Ramakrishna Vidyalaya, Colombo -06, on her retiring day.

I have known Mrs. I. Rajaratnam for many years and she is now completing her service as a teacher for sometime and then as the principal. She has performed her duties well and has been a good administrator in the zone concerning of zonal level school administration activities.

The school C/Ramakrishna Vidyalayam has undergone an eminent development during its time till now. She has sought help from the School Development Society, well wishers and above all - the parents co-operation to improve the school condition.

I was happy to hear that she was awarded the "Best Principal Award" in 2008. Among Colombo Tamil medium schools, a Grade 5 student of the school was selected to visit Japan and a G.C.E (O/L) student was placed the 8th rank in the all island and the first in the Colombo District. The school earlier had two sessions in the one and only building and then was brought together as one under her best management. Ever since it has developed well. She has been a great member in the team of principals and I take this opportunity to extend my wishes for her family for good health and happiness.

**Mr. Jayantha Nanayakara**
Zonal Director of Education
Colombo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் திருமதி. இ. இராஜரட்ணம் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்ற (2013-03-01) இந்த நாளில் அன்னாரின் சேவையைப் பாராட்டி, வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1984 மார்ச் மாதம் அரசசேவையில் ஒரு பட்டதாரியாக ஆசிரியராக இணைந்து கொண்ட இவர் முதன்முதலாக இப்பாட சாலையில் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டு தமிழ், சமயம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களை மாணவர்களுக்குத் திறம்படக் கற்பித்ததன் மூலம் மாணவர் மத்தியில் மதிப்பையும் மரியாதையையும் பெற்றுக்கொண்ட நல்லாசிரியராக விளங்கினார்.

மாணவர்களுக்குக் கல்வியையும் நல்லொழுக்கத்தையும் போதிப்பதுடன் மட்டும் நின்று விடாது திருமதி இ. இராஜரட்ணம் அவர்கள் தன்னையும் தனது தொழிலையும் உயர்த்தக்கூடிய வகையில் தனது கல்வியையும் திறம்படத் தொடர்ந்து அதன் பயனாக கொழும்பு மாவட் டத்தில் தெரிவான இலங்கை அதிபர் சேவை I இல் தன்னையும் ஒருவராக இணைத்து கொண்டார். 1993 இல் வேறு பாடசாலைக்கு அதிபராக இடமாற்றம் கிடைத்தபோதும் அதனை ஏற்றுக்கொள்ளாது தொடர்ந்தும் இச்சிறிய பாடசாலையிலேயே தனது பணியைத் தொடர்ந்தார்.

அதிபர் அவர்கள் அல்லும் பகலும் தனது ஆசிரியர்களுடன் இணைந்து ஆற்றிய பணியின் விளைவாகப் பாடசாலை பல வழிகளிலும் வளர்ச்சி கண்டது. அதன் பெறுபேறாக 2007 இல் இடம்பெற்ற க.பொ.த (சா.த) பரீட்சையில் கொ/இராமகிருஷ்ணா வித்தியாலயத்தின் மாணவி 8 பாடங்களிலும் அதி திறமைச் சித்தியைப் பெற்றுக் கொண்டார். இது மேல் மாகாணத்தில் 1 வதும் தேசிய மட்டத்தில் 8 வது இடமுமாகும். அவ்வாறே 2008 ஆம் ஆண்டு அதிபர் திருமதி இ. இராஜரட்ணம் அவர்கள் மேல் மாகாணக் கல்வி அமைச்சி னால் சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு 'வித்யா விபூஷணா' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் பாடசாலை வரலாற்றில் அதிபர் ஆற்றிய சேவைக்கு மைற்கல்லாக அமைந்தன எனில் மிகையாகாது.

தொடர்ந்து 2009 இல் அதிபர் திருமதி இ. இராஜரட்ணம் அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை -III க்கு பதவி உயர்வினைப் பெற்றுக்கொண்டார். இவற்றின் அடிப்படையில் பல்வேறு உயர் பதவிகளை வகிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அவற்றைத் தவிர்த்து இப்பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலைச் சமூகம் என்பவற்றின் மீது கொண்ட ஆழமான அன்பினாலும், நட்பினாலும் நேசத்தினாலும் தனது சேவைக்காலம் முழுவதையும் இப்பாடசாலைக்கு அர்ப்பணித்த, கல்வித் திணைக் களங்களுடன் மிக நெருக்கமான நட்புமிக்க உறவினைப் பேணுகின்ற அதிபர் திருமதி. இ. இராஜரட்ணம் அவர்களுடைய சேவையைப் பாராட்டி, அவர் தம் வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற்று வளமுடன் வாழ மனமார வாழ்த்துகிறேன்.

**திருமதி. த. இராஜரட்ணம்**

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்ப்பிரிவு), கொழும்பு வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Divisional Director - Colombo



The Principal of C/Ramakrishna Vidyalaya, Colombo - 06, Mrs.I.Rajaratnam, is retiring from the service on 01.03.2013 after completing 29 years of service. I am privileged to deliver a message to her on this occasion.

She has been an active principal in the Division and has attended all the meetings held in Divisional level. She has been implementing all the said matters accordingly in the school. She is very keen in allowing her teachers to attend the seminars or workshops in order to improve the teachers personality and the school development as well. She mainly believes that the teachers are the pillars of the students.

Whenever I visit her school in the division, I have observed that Mrs. I. Rajaratnam is always present early and starts her work with great enthusiasm. I must mention that she initiated and continues the religious activities related to all three religion. (Hindus, Christianity and Islam)

It is therefore no surprise that she has got the 'Best Principal Award' in 2008, namely "Vithya Vibushana". She deserves every award and title that she has been given.

The division is losing an energetic principal. However, I wish her and her family all the prosperity forever.

**Mr.A.I.M. Zarook Khaan**
Divisional Director of Education
Colombo South.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயல் பாடசாலை முன்னாள் அதிபர் உள்ளத்திலிருந்து நன்றியுடன் வாழ்த்துச் செய்தி!



*உருவாகு! உருவாக்கு!*
*இதுவே நமது தாரக மந்திரம் ஆகட்டும்.* - *சுவாமி விவேகானந்தர்*

பொன்மொழியின் உண்மைக்கு உதாரணமாகப் பாரினிலே பண்பும் அறிவும் ஒருங்கே அமையப் பேரும் புகழும் பெருமை சேர்க்கப் பாடுபட்ட அதிபர்களில் ஒருவர் தான் இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் அதிபர் இந்திரா இராஜரட்ணம்.

சிறிய பாடசாலை, அளவான மாணவர்களின் வளர்ச்சி, வருமானம் என்பது கவலையில்லை என்று தன் உழைப்பால் பாடசாலை உயர்வைக் கண்டவர். நல்லார்வத்துடன் இருபத் தொன்பது ஆண்டுகள் அருமை பெருமையாக அயராது கடமையாற்றியவர். இவர் இளைப்பாறுவது பாடசாலைக்குப் பேரிழப்பாகும். ஆசிரியர் ஒத்துழைப்பு மாணவரின் பெருமுயற்சி கூடி இவரின் நிர்வாகத்திறமையை வலுவூட்டி தமிழ் அதிபர்களில் 'விபூஷணப்பட்டம்' பெற்றவர். இது தமிழ்ச் சமுதாயத்துக்கு எடுத்துக் கொடுத்த பெருமை. என்னைப் பொறுத்தவரையில் நான் உபஅதிபராக பன்னிரண்டு ஆண்டுகளும், அதிபராக எட்டு ஆண்டுகளும் பல கூட்டங்கள், நிகழ்வுகள், விழாக்கள் அதாவது பாடசாலையாயினும் கல்வித் திணைக்களமாயினும், கல்வி அமைச்சாயினும், வேறு சங்கங்கள் அமைப்புக் களாயினும் நாம் சேர்ந்து சமூகமளித்து, எமதெமது பாடசாலைகளின் முன்னேற்றங்களில் பங்கு கொண்டமை பெருமையளிக்கிறது. நேரத்துக்கு நேரம் உரிய காலங்களில் நிர்வாகக் கூட்டங்கள் பற்றித் தவறாது நினைவூட்டி, தன் பாடசாலைக்குக் கிடைக்கும் சுற்றறிக்கை களையும் தந்துதவத் தவறமாட்டார். போட்டி என்பது அவர் மனதில் கிடையாது. 'கோனுயரக் குடி உயரும்' என்பது போல் மாணவர் முன்னேற தலைவர் முன்னேற வேண்டும். ஒவ்வொரு மாணவர் 'உயர்ச்சியில் இன்பம் கண்ட இந்திராவின் உன்னத உழைப்பு உயரியதே'. ஸ்ரீ இராமகிருஷ்ணர் கூறியது போல் பூக்களாகிய மாணவர்களையும் மலர்க் குஞ்சமாகிய ஆசிரியர்களையும் இணைக்கவல்ல குருதேவரின் அன்பு வழிகாட்டல் வித்தியாலய வளர்ச்சியில் நாம் ஆழமாகக் காணலாம்.

இனியதோர் புன்னகையுடன் யாவரையும், அன்புடன் வரவேற்றுப் பாடசாலையின் விழாச்சிறப்பு கண்டு பெருமிதம் கொள்ளும் இந்திராவின் தலைமைத்துவம் ஒரு தனிநிகரே. இவர் இனி வரும் காலங்களிலும் சமூகத்தின் நல்வாழ்வின் சுபீட்சம் காணவும் தனது குடும்பத்துடன் சுகமாக இனிதுடன் சேவை நல்கி வாழவும் இறைவனின் அருளாசிகள் வேண்டி வாழ்த்துவோம். என் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள், பெற்றோர் ஒருமித்து சேர்ந்தே அவருக்கு நன்றிகள் பல கூறி பல்லாண்டுகள் சீருடன், சிறப்புடன் மகிழ்வுற வாழ வாயார வாழ்த்திடுவோம்.

வாழ்க! வளர்க வளமுடன்

சைவ மங்கையர் வித்தியாலயம்
வெள்ளவத்தை, 12.01.2013

**திருமதி. பத்மா கஜேந்திரதாஸ்**
முன்னாள் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கல்வியும் இந்துபோர்ட் இராசத்தினமும்

சபா .ஜெயராசா
முன்னாள் கல்வியியற்ப் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பிரித்தானியர் ஆட்சியின் சமூக விளைவுகள் தமிழர் கல்வியின் "மீட்டுரு வாக்கத்துக்கு" இட்டுச் சென்றன. அந்த மீட்டுருவாக்கம் பண்பாட்டுவேர்களோடு ஆழ்ந்து தொடர்பு கொண்டும் அதேவேளை நவீனத்துவத்தை உட்கொண்டும் மேலெழுந்தது. அவ்வகையிலே தோற்றம் பெற்று எழுச்சி கொண்ட ஒரு கல்வி நிறுவன அமைப்பே "இந்து போர்ட்" என்று அழைக்கப்பட்ட சைவ வித்தியா விருத்திச் சங்கம். இந்து போட்டின் எழுச்சியும் வளர்ச்சியும் எஸ்.இராசரத்தினம் (1884 - 1957) அவர்களின் ஆளுமையுடனும் வினைப் பாடுகளுடனும் தொடர்புபட்டிருந்தமையால் அவரது பெயருடன் இந்துபோட்டும் இணைக்கப்பட்டுப் பொது மக்களிடையே வழங்கிவரலாயிற்று. இந்துபோர்ட் இராச ரத்தினம், மனேச்சர் இராசரத்தினம், பயில்வான் இராசரத்தினம், கிறிக்கெட்டர் இராச ரத்தினம், அப்புக்காத்தர் இராசரத்தினம் பள்ளிக்கூட இராசரத்தினம் பல பெயர்கள் அவர் தொடர்பாகக் கிராமங்களில் வழக்கில் இருந்தன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஊட்டம், விடுதலைப் போராட்டச் சூழலிலே கல்கத்தாவிலே கற்றுப் பட்டம் பெற்ற அனுபவங்கள், ஆசிரியராக இருந்து திரட்டிக் கொண்ட பட்டறிவு, சட்டம் பயின்று "அப்புக்காத்து" ஆகிப் பெற்ற பயிற்சிகள் இலங்கையினுடைய சட்டசபையின் யாழ்ப்பாணம் மத்திய தேர்தல் தொகுதியின் உறுப்பினராக இருந்து திரட்டிக் கொண்ட ஊடாட்டங்கள் அக்காலத்தைய கல்வி முறைமை தொடர்பான பட்டறிவு முதலியவை அவரது ஆளுமையிலும், வினைப்பாடுகளிலும் பன்மைப் பரிமாணங்களைத் தோற்றுவித்தன.

இந்துக்களுக்கெனத் தனியான ஒரு கல்விக் கட்டமைப்பின் வரலாற்றுத் தேவை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் கூற்றிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்கூற்றிலும் எழுச்சி கொண்டது. ஆறுமுகநாவலர் சேர் பொன் இராமநாதன் அவர்களால் தனிநிலையிலே மேலெழுந்த அந்தத் தேவை சைவ வித்தியாவிருத்திச் சங்கம் என்ற நிறுவன அமைப்பாகப் பின்னர் படிமுறை மலர்ச்சி கொண்டது.

நிறுவனமாக்கல், முகாமை செய்தல், தரமுயர்த்தல், உதவி நன்கொடை பெறல் முதலியவை கல்வியில் உட்புகுந்த காலகட்டத்தில் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் 1923 ஆம் ஆண்டிலே கால்கோள் கொண்டது. அதன் முதலாவது அமர்வுக்கு சேர் பொன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் தலைமைதாங்கினர். அன்று இணைந்து கொண்ட இராசரத்தினம் அவர்களின் பணிகள் பின்னர் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றலோடு தொடர்ந்தது.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலே பாடசாலைக் கல்வி முறைமை மூன்று தளங்களிலே செயற்பட்டு வந்தது. அவை,

(1) தாய்மொழிப் பாடசாலைகள்

(2) தாய்மொழியும் ஆங்கிலமும் இணைந்த இருமொழிப் பாடசாலைகள்

(3) ஆங்கிலப் பாடசாலைகள்

இந்துபோட் இராசரத்தினத்தின் செயற்பாடுகள் முதல் இரண்டு வகையோடும் இணைந்ததாக அமைந்தன. தனித்து ஆங்கில மொழிவாயிலாக இணைந்த கல்வி இந்நாட்டின் பண்பாட்டு அடையாளங்களுடன் அந்நியமாகி நின்றமை அவரது கவனத்தை ஈர்த்தது.

பிரித்தானியாவில் வளர்ச்சி பெற்றுவந்த மானிடவாதம், தாராண்மைவாதம், தொழிற் கட்சியினர் முன்னெடுத்த மக்கள் மயப்பாட்டு நடவடிக்கைகள் முதலியவற்றைத் தாம் பெற்ற ஆங்கிலக் கல்வியினூடாக அறிந்து கொண்ட இராசரத்தினம் அவர்கள் அவற்றைத் தமது வினைப்பாட்டுக்குரிய கருத்தியலுடன் இணைத்துக் கொண்டார்.

அதன் பிறிதொரு சமூக விரிவாகக் ''கலவன்'' (Mixed) பாடசாலைகள் என்ற அமைப்பு வளரத் தொடங்கியது. அதாவது ஆண்களும் பெண்களும் இணைந்து கற்கும் ஒரு புதிய மாதிரிகை தோற்றம் பெற்றது. கிராமப் புறத்துப் பெண்கல்வி விரிவாக்கத்துக்கு அந்த அமைப்புப் பெருமளவிலே கைகொடுத்தது.

கல்வியில் ''நவீன மயமாக்கல்'' என்ற செயற்பாடு சைவமரபோடு இணைந்து ஆறுமுகநாவலர், சேர்.பொன் இராமநாதன் முதலியோரால் முன்னெடுக்கப்பட்டது. அதாவது மரபு வழியான திண்ணைப் பள்ளிக் கூட மரபிலிருந்து பாடசாலை முறைமைக்குத் தாவியமை நவீனமயமாக்கலோடு இணைந்த கல்விச் செயற்பாடாகும். அதனைப் பரந்த அளவில் முன்னெடுத்த வினைப்பாட்டை இராசரத்தினம் அவர்கள் மேற்கொண்டார்.

நவீனமயமாக்கலின் ஒரு பரிமாணம் கல்வியைத் ''தொழில் பெற்றுக் கொள்வதற்குரிய'' கருவியாக்கலாகும். ஆங்கிலக் கல்வி எழுதுவினைஞர் தொழிலைப் பெற்றுக் கொடுப்பதற் குரிய நேரடி வாய்ப்பை அக்காலத்திலே பெற்றுக் கொடுத்தது. தமிழ் மொழிக்கல்வி தமிழாசிரியர்களாக மாறும் வாய்ப்பை வழங்கியது. இராசரத்தினம் அவர்கள் கிராமங்கள் தோறும் பாடசாலைகளைத் திறந்தமையால் தமிழ் ஆசிரியர்களுக்குரிய தேவையும் பெருக்கமடையத் தொடங்கியது. கல்விக்கும் தொழிலுக்குமுள்ள இணைப்பு இலங்கையிலே மத்திய தரவர்க்கம் என்ற புதிய சமூக வகுப்பின் தோற்றத்துக்கு இட்டுச் சென்றது.

மத்திய தரவர்க்கம் இருபக்கச் செயற்பாடுகளைக் கொண்டதாக மேலெழுந்தது. ஒருபுறம் பழைமைகளுக்கு மதிப்பளித்தல், மறுபுறம் தமது இருப்பைப் பலப்படுத்திக் கொள்வதற்குரிய புதுமைகளை உள்வாங்கல் என்பவை கல்வியால் அசைவியக்கம் பெற்ற மத்திய தரவகுப்பினரிடத்துக் காணப்பட்டன. அதன் ஒரு பரிமாணமாகத் தீண்டாமை ஒழிப்பிலே அவர்கள் ஆர்வம் காட்டினர். இந்திய விடுதலை இயக்கம் மற்றும் தமிழகத்தில் மேலெழுந்த சுயமரியாதை இயக்கம், ஆகியவற்றின் செல்வாக்குகளும் அவர்களிடத்திலே காணப்பெற்றன. மார்க்சியத்தின் செல்வாக்கும் ஒரு சிலரிடத்தே மேலோங்கியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய சமூகவிசைகளை உள்வாங்கிச் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை இயக்கியமை இராசரத்தினம் அவர்களுக்குரிய தனித்துவமாயிற்று. மேலோர் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தாழ்த்தப்பட்டோர் என்போருக்கும், நலிவுற்ற நிலையில் ஒதுக்கி வைக்கப்பட்டோருக்கும் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பாடசாலைகளிலே கற்பதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டன.

இராசரத்தினம் அவர்கள் பிரித்தானியாவில் இயங்கிய ''அனைத்து அடக்கற்பாட சாலை'' முறைமைபற்றி அறிந்திருந்தமை அவரது பாடசாலை அமைப்புச் செயற்பாடுகளில் இருந்து அமைப்புச் செயற்பாடுகளில் இருந்து தெரியவருகின்றது. தெரிவு முறைமை இன்றிக் கற்கவருவோர் அனைவருக்கும் கல்வி வழங்குதல், ஏட்டுக்கல்வியை நடைமுறை களோடு தொடர்புபடுத்துதல் தொழிற்கல்வியையும் இணைத்து வழங்குதல் என்ற செயற் பாடுகள் அவரால் முன்னெடுக்கப்பட்டன.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்திலே காந்தி முன்வைத்த கல்விச் செயற்பாடு களின் ஈர்ப்பும் அவரிடத்தே காணப்பெற்றது. சைவ வித்தியாவிருத்திச் சங்கம் நிறுவிய பாட்சாலைகளிலே காந்திய மாதிரிகையைப் பின்பற்றி நூல் நூற்றலும் நெய்தலும் கற்பிக்கப் பட்டமை சிறப்பாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

காந்திய தரிசனத்தை அடியொற்றி சாதியத்தைத் தகர்ப்பதற்கென சம ஆசனம், சமபோச னம் முதலிய செயற்பாடுகளும் பாடசாலைகளிலே முன்னெடுக்கப்பட்டன.

காலனித்துவக் கல்விமுறையோடு இணைந்த ஒரு நவீனத்துவப் பரவலாக ''ஆசிரியர் பயிற்சி'' என்பது வலுப்பெறத் தொடங்கியது. பயிற்றப்படாத ஆசிரியர்களினாலே கல்வித்தரம் பின்னடைந்த நிலையிலே இருத்தலை அரச அறிக்கைகள் புள்ளிவிபரங் களுடன் வெளியிட்டுவந்தன. ஆசிரியருக்குப் பாடஅறிவு இருந்தால் மட்டும் போதாது. கற்பித்தலியல் அறிவும் வேண்டுமென்ற நவீனத்துவ நோக்கில் இராசரத்தினம் அவர்கள் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை நிறுவினார்.

கலாசாலையிலே கற்பிப்போரைத் தெரிவு செய்வதிற் புலமை உறுதியை வழுவாது கடைப்பிடித்த அவர் அக்காலத்தைய சூழலிலே ஆற்றலும் திறனும் வாய்ந்தவர்களைத் தெரிந்தெடுத்து நியமனம் வழங்கினார். அத்துடன் தமிழ்ப் புலமையை ஆழ்ந்து வளர்க்கும் நோக்குடன் காவிய பாடசாலை ஒன்றையும் அங்கே ஒருங்கிணைத்தார். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் புலமைச் செறிவுள்ள கற்பித்தல் அங்கே நிகழ்த்தப்பட்டது. ஆற்றல்மிக்க பண்டிதமரபு வளர்ந்தெழுவதற்கு காவிய பாடசாலை தளமிட்டது.

காலனித்துவ பொருளாதார முறைமையும், நிர்வாக முறைமையும் பிரதேசங்களிடையே சமநிலை குன்றிய வளர்ச்சியை ஊக்குவித்தன. கல்விநிலையிலே வாய்ப்பான பிர தேசங்கள் என்றும் வாய்ப்பை இழந்த பிரதேசங்கள் என்றும் மாறுபாடான நிலைகள் வளர்ச்சியடையத் தொடங்கின. அத்தகைய முரணுறு நிலைக்கு எதிரான ஆக்க முன் னெடுப்புக்கள் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டன. அதற்குரிய கருத்தியல் வலிமையையும் வினைப்பாட்டு முறைமைகளையும் இராசரத்தினம் அவர்கள் முன்னெடுத்தார்.

ஒதுக்குப் புறத்திலிருந்த யாழ்ப்பாணத்துக் கிராமங்கில் மட்டுமன்றி, வன்னிப்பகுதி, சிலாபம் புத்தளம் பகுதிகள், பதுளை, பண்டாரவளை, பூநகரி என்றவாறு பல்வேறு பகுதிகளிலும் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பாடசாலைகள் திறக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புறங்களில் வாழ்ந்த மனிதநேயம் கொண்ட புரவலர்களினாலே திறக்கப்பட்டுப் பின்னர் இயக்கப்பட முடியாது இடர்ப்பட்ட பாடசாலைகளையும் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் பொறுப்பேற்று இயக்கியமை பிறிதொரு ஆக்கப்பரிமாணமாகச் சுட்டிக்காட்டப் படத்தக்கது.

அக்காலத்திலே பிரித்தானியாவில் வறியவர்களுக்கு உதவும் இயக்கங்களும் சட்டங்களும் ஆக்கம் பெற்றன. அவற்றின் அறிகைத் தெறிப்பு ஒருபுறம் நிகழ்ந்தது. மறுபுறம் ஆறுமுகநாவலர் உருவாக்கிய கஞ்சித்தொட்டித் தர்மத்தின் கருத்துநிலை தொடர்ந்த வண்ணமிருந்தது. அவற்றின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக திருநெல்வேலியில் அவர் ஆதரவற்ற சிறுவர்களைப் பராமரித்துக் கல்வி வழங்கும் நிலையத்தை ஆரம்பித்தார். அவரின் ஆக்கப் பணிகளின் நெடிதுயர்ந்த உச்சமாக அது அமைந்தது.

சமூகநிலை, கல்விநிலை, சமயநிலை ஆகியவற்றிலே அவரின் பங்களிப்புக்கள் அழியாத பதிவுகளாகவுள்ளன. கல்வியும் சமூகமும் தொடர்பான மாற்றுச் சிந்தனைகள் கல்வியை விற்பனைப் பொருளாக்கி வரும் சமகாலத்தில் அவரின் ஆக்கப் பதிவுகள் சமூக நீதியோடு சங்கமமாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கல்விமுறை எதிர்நோக்கும் சவால்கள்

**பேராசிரியர் சோ. சந்திரசேகரன்**

ஒரு வகையில் கல்வி முறைகள் நாடுகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் காரணங்களாகவும் அதேவேளையில் அவற்றைத் தீர்ப்பதற்கான ''சர்வரோக நிவாரணி யாகவும்'' கருதப்படுகின்றன. வேலையின்மைப் பிரச்சினை, இனங்களுக்கிடையே காணப்படும் பதற்ற நிலை, இன ஐக்கியச் சீர்குலைவு, பல்வேறு மட்டங்களில் காணப்படும் வன்செயல், பொருளாதார வளர்ச்சிக் குறைவு, சுற்றாடலில் சீரழிவு என அடுக்கிக் கொண்டு செல்லலாம். சரியான கல்வி முறை இல்லாததுதான் இப் பிரச்சினைகளுக்கான மூலகாரணம் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறுவோர் பலர். மாறாக, இப்பிரச்சினைக்கான காரணங்கள் வேறு அவற்றை இனங்காண முடியாது. எளிய முறையில், மேலோட்டமாகக் கல்வி முறை மீது பழி போடப்படுகின்றது என்ற வாதமும் உண்டு. இவ்வித கருத்துக்களும் முடிவில்லாது வாதிடப்பட்டு வருகின்றன. இத்தகைய ஒரு பின்புலத்தில் இலங்கையின் கல்வி முறை தற்போது எதிர்நோக்கும் சவால்கள் எவை என்பது பற்றி நோக்கலாம்.

1940 தொடக்கம் காலத்துக்குக்காலம் இலங்கையின் கல்வி முறையை ஆராய்ந்து, அதன் முறைகளை இனங்கண்டு பரிந்துரைகளைச் செய்ய அரசாங்க மட்டத்தில் பல குழுக்களும் ஆணைக்குழுக்களும் நியமிக்கப்பட்டன. 1943, 1960, 1972, 1997 ஆகிய ஆண்டுகளில் கல்வி முறைச் சீர்திருத்தத்துக்கான பல அறிக்கைகள் வெளிவந்தன. 1991இல் தேசியக் கல்வி ஆணைக்குழு நியமிக்கப்படும் வரை நியமிக்கப்பட்ட குழுக்களும் ஆணைக்குழுக்களும் தமது அறிக்கைகளை சமர்ப்பித்தபின் தமது பணிகளை நிறுத்திக் கொண்டன. கன்னங்கரா குழு (1943), ஜயசூரியா ஆணைக்குழு (1960/61) ஆகியவை இதற்கு உதாரணங்கள் இக்குழுக்களின் சில பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பின்னர் 1972இல் செய்யப்பட்ட விரிவான கல்விச் சீர்திருத்தங்களில் பல இன்னும் நடைமுறையில் உள்ளன.

எவ்வாறாயினும் 1990ஆம் ஆண்டளவில், கல்வி முறை பற்றித் தொடர்ச்சியாக ஆராயவும் கல்வி முறையில் உறுதிப்பாட்டை மேற்கொள்ளவும் நிரந்தரமான ஓர் தேசிய ஆணைக்குழு நியமிக்கப்படல் வேண்டும் என உணரப்பட்டது. 1988-1989 காலப்பகுதியின் ஜே.வி.பி. இளைஞர் கிளர்ச்சி பற்றி ஆராய்ந்த ''இளைஞர் அமைதியின்மை'' பற்றிய அரசாங்க ஆணைக்குழு இத்தகைய தேசிய கல்வி ஆணைக்குழு ஒன்றைப் பரிந்துரை செய்தது. பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தபோது (1991) இவ்வாணைக்குழு நியமிக்கப் பட்டு தற்போது இயங்கி வருகின்றது. அண்மையில் (திசம்பர் 17-18) இலங்கை மன்றக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் கல்வி அமைச்சு ஒழுங்கு செய்திருந்த கல்விக் கொள்கை தொடர்பான ஒரு மகாநாட்டில், ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஸ்மன் ஜயத்திலக்க இலங்கையின் கல்வி முறை எதிர் நோக்கும் சவால்கள் பற்றி விரிவான கருத்துரை ஒன்றை வழங்கினார். இவ்விடயம் பற்றி நாடாளாவிய விவாதமும் கலந்துரையாடலும் தேவை என அம்மகா நாட்டில் வலியுறுத்தப்பட்டது.

உலகளாவிய ரீதியில் இன்று வளர்முக நாடுகள் மட்டுமன்றி வளர்ச்சியடைந்த மேலைநாடுகளின் கல்வி முறைகளும் இன்று பல சவால்களை எதிர்நோக்குகின்றன. நீண்ட காலமாக இருந்து வந்த விவசாயம் பொருளாதார முறையும் கைத்தொழில் பொருளாதார முறையும் இன்று புதிய அறிவுப் பொருளாதாரத்துக்கு வழிவிட்டுள்ளன. அறிவைப்பொருள் உற்பத்திக்கும் சேவைகளின் உற்பத்திக்கும் பயன்படுத்தும் அறிவுப் பொருளாதாரம் உலகளாவிய அறிவை உள்வாங்கும் பொருளாதாரம்; உள்வாங்கிய விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவை நாடெங்கும் பரப்பும் பொருளாதாரம்; நாட்டுக்குத் தேவையான அறிவை உருவாக்கும் பொருளாதாரம்; இத்தகைய அனைத்து அறிவையும் பொருளுற்பத்திக்குப் பயன்படுத்தும் பொருளாதாரம்.

இத்தகைய அறிவுப் பொருளாதாரத்தின் ஒரு பிரதான தூண் பாடசாலைக் கல்வியும் உயர் கல்வியுமாகும். துரமான கல்வி முறையொன்று இல்லாது அறிவுப் பொருளாதார மொன்றை வெற்றிகரமாக உருவாக்கிக் கொள்ள முடியாது. யாவருக்கும் தரமான கல்வியை எவ்வாறு வழங்குவது என்பது சகலநாடுகளும் எதிர்நோக்கும் ஒரு முக்கிய சவாலாகும்.

காலங்காலமாக இருந்து வந்த கல்வியின் நோக்கங்களுக்கு அப்பால், அறிவுப் பொருளாதாரத்தின் தேவைகளுக்கு ஏற்று வினைத்திறனுடைய பிரஜையை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் கல்வி முறைகளுக்கு உண்டு. ஆங்கில மொழித்திறன், தகவல் தொடர்பாடல் திறன், படைப்பாற்றல் திறன், தகவல் அறிவு - அதாவது தகவலைப் பெறல், அதனைப் பகுப்பாய்வு செய்தல், அதனைப் பயன்படுத்தல் என்பன (Information Literacy) இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இத்தகைய மென்திறன்கள் (Soft Skills) இன்றைய கல்விச் செயற்பாட்டில் முக்கிய்த்துவம் பெற்று வருகின்றன.

மேற்கூறிய கல்வி அமைச்சின் மகாநாட்டில், தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர் சுட்டிக் காட்டிய ஏனைய சில சவால்களையும் இங்கு தொகுத்து நோக்குவோம்:

1. இலங்கையில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் 320 தேசியப் பாடசாலைகள். இவை மத்திய கல்வி அமைச்சின் கீழ் வருவன. ஏனைய 9400 பாடசாலைகள் மாகாண சபைகளின் கீழ் வருவன. இவ்வாறான ஏற்பாடு அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தின்படி உருவானது. இத்திருத்தத்தின்படி 'கல்வி' என்ற விடயம் மாகாண சபைகளுக்குரியது. எத்தகைய ஏற்பாடு ஒரு சவால் என தே.க. ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார். பாடசாலைகளுக்கு இவ்வாறு இரு அரசாங்க அமைப்புகள் உரிமை கொண்டுள்ளன (மத்திய அரசு, மாகாண அரசு).

   இவ்வகையான இரு வழிக் கட்டுப்பாட்டின் காரணமாக அரசாங்கப் பாடசாலைகளின் பரம்பல், நிலைமை, இயக்கம் என்பவற்றில் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. தேசியப் பாடசாலைகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலும் முன்னேற்றங் கண்ட கிராமப் புறங்களிலும் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் மாகாணப் பாடசாலைகள் தேசியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அந்தஸ்தைப் பெற பல நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி வந்தன. மாகாண சபைகள் தமக்குக் கீழ்வரும் பாடசாலைகள் 'தம்முடையவை' என நினைப்பதோடு சரி; அவற்றின் கல்வித் தராதரம் மாணவர் முயற்சியிலேயே தங்கி இருக்கின்றது. என தே.க.ஆ. தலைவர் தெரிவித்தார். புதிய கல்விச் சட்டத்துக்கான ஆலோசனை களில் ஒன்று சகல பாடசாலைகளும் மாகாண சபைகளின் கீழ் வருதல் வேண்டும் என்பதாகும்.

2. இலங்கையின் கல்வி முறை எதிர்நோக்கும் மற்றொரு பிரதான சவால் பொதுப் பரீட்சைகளுடன் தொடர்புடையதாகும் என்பது தே.ஆ. குழுத் தலைவரின் கருத்து. ஐந்தாம் வகுப்பிலிருந்தே பிள்ளைகள் பொதுப்பரீட்சைகளுக்கு அமரப் பயிற்றப்படு கின்றார்கள். இவற்றுக்கு ஆயத்தம் செய்வதில் அதிக கவனம் செலுத்தப்படுவதால், அவர்கள் தமது பிள்ளைப் பருவத்தை மகிழ்ச்சியுடன் கழிக்க முடியாதுள்ளது; பயனுள்ள வாழ்க்கை அனுபவங்களைப் பெற முடியாதுள்ளது.

பாடசாலை அதிபர்கள் ஐந்தாம் வகுப்பில் பயிலும் சகல மாணவர்களையும் இப் பரீட்சைக்கு அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு. இப்பரீட்சைகளில் மாணவர்கள் பெறும் சித்தியைக் கொண்டு பாடசாலையின் சாதனை மதிப்பிடப்படுகின்றது. பெற்றோர்களும் இப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், பாடசாலைகளையும் அதிபர்களையும் மதிப்பீடு செய்யப் பழகி விட்டனர்.

க.பொ.த. சா/நி, உ/நி பரீட்சைகளும் முக்கியத்துவம் பெற்றுள்ளமையினால், பிள்ளைகளின் கல்வியில் தனியார் போதனை நிலையங்களும் முக்கியத்துவம் பெற்று விட்டன. இதனால் பெற்றோரின் பொருளாதாரச் சுமை அதிகரிக்கின்றது; பிள்ளைகள் சுயமாகக் கல்வி கற்கும் ஆர்வம் குறைகின்றது.

3. க.பொ.த உ/நி பரீட்சையானது பங்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவு செய்யப் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள் பலவிதமான எதிர்மறைப் பாதிப்புக்குள்ளாவதாகத் தே.க. ஆணைக்குழுத் தலைவர் கூறுகின்றார். உ/நிலையில் மூன்று பாடங்களைக் கட்டாயமாகப் பயின்றதாக வேண்டும். பல்கலைக்கழகங்களின் நிர்ப்பந்தமும் இதில் உண்டு. இதனால் பிள்ளைகள் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் என்ற பிரிவுகளுக்குள் ஒன்றில் சேரவேண்டியதாகின்றது. உ/நிலைக் கல்விக்கு முன்னர் இடம் பெறுகின்ற இடைநிலைக் கல்விச் செயற்பாடு மலினப்படுத்தப்படுகின்றது; மாணவர்கள் உயர்கல்வியில் அனுமதி பெறும்போது முன்னைய கல்வி கருத்திற் கொள்ளப்படுவதில்லை. கலை, வர்த்தகம் பயிலும் சகல மாணவர்களும் இடைநிலையில் ஆறு ஆண்டுகளாக 600 பாடவேளைகளில் கணிதமும் விஞ்ஞானமும் கற்றவர்கள் என்பதைத் தே.க. ஆணைக்குழுத் தலைவர் நினைவூட்டினார்.

அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றின் அனுமதித் தகுதிகளைச் சுட்டிக் காட்டிய தலைவர், இலங்கை மாணவர்கள் க.பொ.த. சா/ நிலையில் சிறப்பாகப் பயின்று கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் உயர்ந்த புள்ளிகளைப் பெறும்போது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறத்தகுதி பெற்று விடுகின்றார்கள் என்கிறார். தேவையானது TOFEL எனப்படும் ஆங்கிலப் பரீட்சைப் புள்ளிகள் தாம் என அவர் எடுத்துக் கூறுகின்றார்.

4. அவர் சுட்டிக்காட்டிய மற்றொரு சவால் கல்விக்கான வசதிகள், அவற்றின் பயன்பாடு, கல்வியின் பெறுபேறுகள் என்பவற்றில் நாடளாவிய ரீதியில் காணப்படும் ஏற்ற தாழ்வுகளாகும். மின்சாரம், விளையாட்டுத் திடல், ஆய்வு கூடங்கள், கணினி அறைகள் போன்ற வசதிகள் இல்லாத பாடசாலைகள் ஏராளம். கல்வி அமைச்சு தொடக்கம் கோட்டக்கல்வி அலுவலகம் வரையிலான சகல அதிகார பீடங்களையும் இதற்காகக் கண்டிக்க வேண்டும் என்று அவர் கூறுகின்றார்.

5. மாணவர்களின் ஆங்கில மொழித்தேர்ச்சியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி ஒரு புறமிருக்க அவர்களுடைய தாய்மொழித் தேர்ச்சியிலும் ஏராளமான குறைபாடுகளைக் காணக் கூடியதாக உள்ளது. மாணவரின் கையெழுத்து, கிரகித்தல் திறன் என்பவற்றில் உள்ள குறைபாடுகள் விரிவாகக் கண்டறியப்பட்டுள்ளன. இத்தகைய குறைபாடுகளின் காரணமாகவே மாணவர்கள் மேலதிகமாக வாசிப்பில் ஈடுபட முடியாது, உதவிக்குத் தனியார் போதனை நிலையங்களை நாடுவதாக அவர் தெரிவித்தார்.

6. நாட்டில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளின் பரம்பல், அவற்றின் பருமன் (மாணவர் தொகை) என்பவற்றில் ஏராளமான மாற்றங்கள் இடம் பெற்று வருகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் மாணவர் தொகை நூறுக்கும் குறைவு. சில பாட சாலைகளில் மாணவர் தொகையை விட ஆசிரியர் தொகை அதிகம். 'சிறிய' பாட சாலைகளில் மாணவர்கள் குறைந்து மேலும் சிறுத்து வருகின்றன. பல பிரசித்தி பெற்ற பாடசாலைகளில் மாணவர் தொகை அதிகரித்து மேலும் பெரிதாகி வருகின்றன. ஏராளமான சிறிய பாடசாலைகள் (400) கடந்த காலங்களில் மூடப்பட்டு விட்டன. இதனால் பின்தங்கிய சமூகப் பிரிவினரின் கல்வி உரிமைகள் மீறப்படுவதோடு கல்வி வளங்கள் விரயமாகின்றன. ''யாவருக்கும் கல்வி'' என்னும் கொள்கையில் பின்னடைவு ஏற்படுகின்றது.

7. க.பொ.த. உ/நி வகுப்புகளில் இடம் பெறும் கலை, வர்த்தகவியல், விஞ்ஞானப் பிரிவுகள் பல்கலைக்கழகக் கல்வியை மையப்படுத்துவதால் 'தொழில்நுட்பவியல்' பிரிவொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டது. இதில் பல சிறப்புகள் இருப்பினும் கூட இவ்வாலோசனை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

8. தாய் மொழியோடு ஆங்கிலமும் ஒரு பயிற்று மொழியாக அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. ஆனால் பிள்ளைகளின் கல்வியில் இம்மாற்றம் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் விரிவான முறையில் கருத்திற் கொள்ளப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ''தமிழ்க்கல்விச் சிந்தனையில் நடைமுறையில் மாறுதல்களின்றேல் தமிழர்களின் கல்வித்தரம் சீரழிந்து பாழ்படும்''

**சித்தாந்த பண்டிதர், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்,** M.A, Phd
முதுநிலைத் தமிழ் விரிவுரையாளர், மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுசல்லோயா.

இக்கட்டுரையைச் சிந்தித்து எழுதுவதற்கு ஆரம்பித்த வேளை வீரகேசரி நாளிதளிலே தமிழறிஞரும், சிறந்த சொற்பொழிவாகும். ஆசிரியருமான சிந்தனையாளர் தமிழருவி த. சிவகுமாரன் அவர்கள் ஆற்றிய ''தமிழ்க் கல்வி'' பற்றிய அருமைமிகு கருத்துகளடங்கிய சொற்பொழிவைச் செய்தியாகப்படிக்க முடிந்தது. வவுனியாவில் இடம்பெற்ற ஔவையார் விழாவிலே பேசிய பேச்சின் சாராம்சம் வருமாறு:

''.... எடுத்ததற்கெல்லாம் மேலைத்தேயக் கல்வியியலாளர்களை, ரூசோ, சிக்மன்பி (F)ரொய்ட் ஆகியவர்களின் பெயர்களைக் கூறத் தயங்காத எமது கல்வியியலாளர்கள், மறந்துங் கூட எமது பண்டைய தமிழ்ப் புலவர்களின் கல்விச் சிந்தனைகளை எண்ணிப் பார்ப்பதும் கிடையாது, கற்பிப்பதுங் கிடையாது. ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்றவை. சூத்திரவடிவில் அமைந்தவை. அவை ஏன்? எதற்கு? யாருக்கு? என்ற கேள்விகளாகிய திறப்புகளைக் கொண்டு திறந்து பொருள் காணவேண்டிய அரிய பொக்கிஷப் புதையல்களாகும். 'இளமையிற் கல்' 'கேள்விமுயல்' 'சொல்சோர்வுபடேல்' 'நூல்பல கல்' ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'', ''கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி'', ''ஓதாதவர்க்கில்லை உணர்வொடு ஒழுக்கம்'', ''கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாச் சிறப்பு'' முதலான ஔவையாரின் வாக்குகள் இன்றைய ஒழுக்கக் கல்வி, தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி என்பனவற்றிற்கு நுட்பமாகப் பொருந்தக் கூடியனவாக உள்ளன. இவ்வடிகளை விரித்து பொருள் கண்டு கற்பிக்க வேண்டும். அவ்வாறே வள்ளுவரின் 'கற்க கசடு அற' என்னும் குறளடி, மாணவர்கள் கற்கும் போது ஏற்படுகின்ற ஐயம், திரிபு என்பன ஏற்படாதவாறு கற்க வேண்டும், கற்பிக்க வேண்டும் என்ற இன்றைய கல்வி நோக்கத்தையே எடுத்துக் கூறகிறது. கம்பனின் நாட்டுப்படலப் பாடலில், 'பெருந்தடங்கண் முறைநுதலார்க்கு எலாம் பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்' என்ற தன் அடியினூடு பெண்கல்வி பற்றி அன்றே கம்பன் வற்புறுத்தியமையை எண்ணித் தமிழன் இறும்பூதெய்த முடிகிறது. ஆகவே எமது தமிழ்ப்புலவர்களின் பாடல் களில் அமைந்து மறைபொருளாகவும், வெளிப்படையாகவும் காணப்படுகின்ற கல்விச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகளை வெளிக்கொணர்ந்து கற்பித்துத் தமிழ் மாணவர்களுக்கும், ஆசிரியர் களுக்கும், தமிழ்ப்புலவர்கள் மீதும் தமிழ்மொழியின் மீதும் பற்றையும் மதிப்பையும் ஏற்படுத்த வேண்டியது தமிழ்க் கல்வியாளர்கள் காலத்தால் செய்யவேண்டிய கடமை யாகும்." (வீரகேசரி 17.08.2012, ப.14)

பண்பாடற்ற, மலட்டுக்கல்வியை விதைத்தும், தூக்கியும் பிடித்து, அடிமையுணர்வு தலைக்கேற, எவ்வித உயர்பெறுமானங்களுமற்ற மேலைத்தேயச் சிந்தனையை முற்றிலும் விழுங்கிய நிலையிலேயே கல்விச் சிந்தனையாளர் போக்கு உள்ளது என்பது முற்றிலும் முக்காலமும் உண்மை. ஆயினும் அவர்களது வித்துவப் புலமையும், செருக்கும், பாண்டித்தியமும், சமூக நலநாட்டமற்ற 'அறிவுடைமை' என்ற தனிமையும், தமிழ்மொழி யின் இனிமையை நிராகரித்த போக்கும், நவீனமே தமிழர்க்கு விமோசனம் தரும் என்ற கிறிஸ்தவ மொழிப்பற்றும் பேரழிவையும், தமிழ்க் கல்வியைப் பாழ்படுத்தும் கொள்கை களாக விளங்கிவருகின்றன. நாவலர் பெருமானும், சி.வை.தாமோதரம்பிள்ளையும், கரோல் விஸ்வநாதபிள்ளையும், சுவாமி விபுலானந்தரும், பேராசிரியர் வண. தனிநாயக அடிகளாகும், பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தனும், பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளையும், கமில் சொலபிசம், பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனாரும், பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், டாக்டர் உ. வே. சாமிநாதையர், வாகீச கலாநிதி இ. வா. ஜகந்நாதன், காந்தியடிகள், சுவாமி விவேகானந்தர் போன்றோர் நல்ல கல்விச் சிந்தனையாளர்களாவர். இவர்கள் என்றும் நிலைபேறான மதத்தையும், மொழியையும் அடைவுவைத்து விட்டு எழுதியோரல்லர்: பேசியோரல்லர். தலைசிறந்த தலைமையான கல்விமான்கள். அவர்களது தடத்தையும், தகைமையும் விளங்குதற்கும் பக்குவம் மிக வேண்டும், தனித் தகைமை, நுண்மான் நுழைபுலம் இருக்க வேண்டும். 'வினை' எங்கே வருகிறது என்றால், உண்மை உறங்கி, பொய் மேலேழும் போது - கீழைத்தேயத்துப் பெருமைமிகு சிந்தனைகள் தாழ்வுற்று - மேலைத்தேயச் சிலுசிலுப்புகள் மேலெழுந்து கோலோச்சும் போது தடம் பிறழ்கிறது. பொருளற்ற - உண்மையற்ற - செழுமையற்ற - மலட்டுச் சிந்தனைகள் தான் மதிப்பானவை, கற்க வேண்டியவை: கற்பிக்கப்பட வேண்டியவை என்று எண்ணி விடுகின்றனர் உயர் கல்விமான்கள், இதனால் வந்த அழிவை நிவர்த்தி பண்ண இன்னும் எத்தனையோ யுகங்கள் கடும் முயற்சியெடுத்து பிரயத்தனம் செய்ய வேண்டும். தமிழ்க் கல்வியைப் பிறரெவருமே அழித்து ஒழிக்க வேண்டியதில்லை.

இனி, நாம் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கை தான் என்ன? நெறிபிறழாக் கல்வி, விழுமிய சிந்தனைக் கல்வி, பண்பாட்டுக் கல்வி, ஒழுக்கக் கல்வி, சீர்திருத்தக் கல்வி, இலக்கியக் கல்வி, மதவிழுமியக் கல்வி, மொழிவழிக்கல்வி, சுய சிந்தனைக்கல்வி, கீழைத்தேயக்கல்வி, தாய்மொழிக்கல்வி, தமிழ்க்கல்வி மரபு பேணும் கொள்கைவழிக் கல்வி என்ற இவைபற்றிச் சிந்திக்க வேண்டிய அவசிய தேவை உண்டாகிறதல்லவா? இது வேண்டுமா? வேண்டாமா? நாம் தான் தீர்மானித்து முடிவெடுக்க வேண்டும். நிறைபேறான கல்வியைக் கட்டியெழுப்ப வேண்டாமா? சிந்தித்துச் செயற்பட வேண்டாமா? சீரழிவுகளைத் திருத்துவது யார்? சிக்கல் நிறைந்த இவற்றைத் தீர்க்கவல்லவர்கள் தான் யார்? என்பதே நம்முன்னுள்ள வினா!!. கல்வி, உள்ளச் செம்மையையும் உணர்வுச் செம்மையையும் நல்கவல்லதாயமைய வேண்டும் என்பது ஒப்பமுடிந்த முடிவு. மரபார்ந்த - தடம்பிறழாத கல்வி வழிவந்த மாணவ பரம்பரை - இடையிலே தடம்பிறழ்ந்த -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைத்தேய மலட்டுக் கல்வியிலே ஈர்ப்புக் கொண்டு நிலைபேறான சிந்தனைகளைத் தூசியென வீசிவிட்டு - வெறும் உலகக் கல்வியை - உலோகாயதக் கல்வியைச் சிக்கெனப்பிடித்துக் கொண்டு உழல்கின்றனர். மொழியையும் கடன்வாங்கி வருகின்றனர்: விபரீதம் அதிகரித்தது, அழிவே கூடியது: பயனின்றிச் சமூகம் சீரழிந்தது. நன்மை, தீமை நல்லது தீயது எதுவென்பதே கலக்கமாயிற்று. வேண்டாதவை மலையெனவும், மலைச் சிகரமெனவும் உயர்ந்தன. உண்மை பொழிந்தது.

இனி, நன்மை தருவது, நாம் கற்கவேண்டியது, நம்முன்னுள்ள பயன்தரு சிந்தனைகள் எவை என்பதனைச் சுருக்கமாகக் காண்போம்.நாம் இந்து சமயத்தையே பிறப்பாற் கொண்டவர்கள். சமயம் இல்லாத சமயி இல்லை. உலக மனிதர்கள் ஒவ்வொருவருமே ஏதோவொரு சமயச் சார்போடேயே விளங்குகின்றனர். ஆனால் கல்வியியலாளர்களும், சில புத்தி ஜீவிகளும் தமது நோக்கு நிலையிலே சமயச் சார்பற்ற நுண்நோக்கு வேண்டும் என்று வலிந்து இடர்செய்யும் துணிச்சலால் கல்வி சீரழிக்கப்பட்டது. பாழாக்கவும் பட்டது. தத்தம் கோட்பாடுகளை ஏற்றும் கொள்கையில் பேரிடர் விளைவித்தனர். தம்மை விழுந்து கும்பிட்டு உய்ய வெண்டும் என்று மாணவர்களுக்கு ஈர்ப்பை உண்டு பண்ணி நாசம் விளைவித்தனர். கல்விவேறு, சமயம் வேறு, மொழிவேறு என்று ஊறினர். இதன் விளைவு கலகமாகவே - மரணமாகவே - முடிந்தமை வரலாறு. பெற்ற பெரும்பயன் அழிய வேண்டும். மூலகாரணம் மரபை - பாரம்பரியத்தை இழுத்துவழுத்திச் சிதைத்துச் சின்னாபின்னப்படுத்தினர். தமிழ்க்கல்வி மரபு சொல்லொணாத்துயர் உற்றது. தாம் செய்வரே முற்றிலும் ஏற்புடைமையானது என்று முறுக்குற்றனர்.

இந்துக்களின் கல்விக் கொள்கையானது பண்டைக்காலம் தொட்டுச் சமயக்கல்வி மரபுடன் தொடர்புபட்டதொன்றாகவே வளர்ந்து வந்துள்ளது. சமயம் என்பது உண்மையில் ‘சமையம்’ என்று தான் பொருள்படும். ‘சமைத்தல்’ எனின் உணவினைப் பதப்படுத்தல், பக்குவம் செய்தல் என்ற பொருள் தான் ஆதிமுதல் உணர்த்தி வந்துள்ளது. அவ்வாறே ‘சமயம்’ என்றாலும் உன்னதத்தை - உள்ளுறையும் தெய்வீகத்தைப் பக்குவப்படுத்தல், வெளிக்கொணர்தல் என்பதற்காகவே உபயோகத்தில் வந்திருக்கிறது. இவ்வாறே இந்துக்கள் தமது கல்விக் கொள்கையினை மனிதனைப் பக்குவப்படுத்துவதுடன் அவனுக்குள்ளே உறைகின்ற ஆன்மீக மேம்பாடுகளை வாழ்விலே கடைப்பிடித்து ஒழுகுவதன் அவசியத்தையும் உணர்த்துவதாயிற்று. வேதசாத்திரங்கள் கல்விப் பாடத்திட்டத்தை சிறப்பான இடத்தை வகி...ன. வேதம் என்பது வித்தை எனப்படுவதால் பிரபஞ்ச ரகசியத்தினை, அதன் ஒளிமயமான ஆற்றலை இதயங்களில் கண்டு அனுபவித்த ரிஷிகள் மனித குலத்திற்கும் அந்த வித்தையைக் கற்றுக் கொடுப்பதன் மூலம் மற்றவர்களுக்குத் தெரிந்த மொழி, மந்திரம், ஒலி, ஓசை முதலிய ஊடகங்களைப் பயன்படுத்தி ஆனந்தத்தில் மூழ்கின்ற உள்ளார்ந்த ஆத்ம வித்தையைக் கற்பதற்குத் தூண்டுகோலானது.

இப்பிரபஞ்சத்திலே எது அமைதியை ஏற்படுத்துமோ, எது குறுகிய நோக்கங்களை விளக்க உதவுமோ? எது ஒற்றுமையை வளர்த்தெடுக்க வழிவகை செய்யுமோ - அதன் மூலம் ஒருமித்து வாழவும், ஒத்திசைவுடன் வாழவும் உதவுகின்றதோ அதுவே உண்மைக் கல்வியாகும். பிரம்மவித்தை எனவும், ஆத்ம வித்தை எனவும் அழைக்கத் தகுந்த கல்விமுறையாகும் என்பதனை மனித மேம்பாட்டுச் சிந்தனையாளர்களும், அவதார புருஷர்களும் ஆணித்தரமாக விளக்கியுள்ளனர். வேதங்கள் என்றால் ஞானம், ஒளி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரின் இருப்பு என்றெல்லாம் அர்த்தமாகின்றது. ஒளி அல்லது வெளிச்சம் என்றால் இது இயற்கையான சூரிய, சந்திர அக்கினியின் ஒளி அல்ல. இதயஒளி எனப்படும். ஞானம் என்பது விஞ்ஞானம் அல்ல. இதயத்தில் ஏற்படும் மாற்றம். திருப்புமுனையே வேதத்தில் விஞ்ஞானம் எனப்படும். இருப்பு என்பது உடல், உள்ளம், புலன், பொருள், மனம் யாவையும் கடந்தவன் என்ற சத்தியத்தின் இருப்பை உணர்வதே Existence என்பதன் அர்த்தமாகும் என்பதே வேதக்கல்வியின் தாற்பரியம் ஆகும்.

வேத இலக்கியங்களின் அனைத்தும் பிரிவுகளிலிருந்தும் பெறப்பட்ட மிகத் தொன்மை யான அறிவின் சாரமே 'வித்யா' எனப்பட்ட வித்+யா என்பதில் ''வித்'' என்பது ஜகஜோதி யான பிரகாசம் ''யா'' என்றால் அது எது? என்பதாகும். எது நமக்கு வாழ்விற்குப் பிரகாசத்தைத் தரவல்லதோ அதுவே வித்தை எனப்பட்டது. எனவே, வித்தைகளில் நான் ஆத்மவித்தையாக இருக்கிறேன் என்றார் கீதையிற் கிருஷ்ண பகவான், இதற்குப் பின்னும் 'மார்க்ஸிஸம்' பற்றி விளக்கத் தேவையுண்டாவென்று சிந்திப்பது சிந்தனைத் தெளிவைத் தரத்தக்கது. பொருளாதாரத்துறையின் ஒரு கூறு: சாதியாற் தாழ்ந்தோரது கல்விமேம் பாட்டிற்கு உதவியது என்னும் மாயையிலே 'Serious' ஆகிவிட்டது. 'மார்க்ஸிஸம்' பற்றிய நுண்ணறிவுத் தளம்பல். இதுவும் சிந்தனைக்குரியதாகிறது. மார்க்ஸிஸ வாதிகள் உளவியல் - உளப்பகுப்பு வாதம் என்றெல்லாம் தமக்கு விளங்காத, பிறருக்கும் விளங்கமுடியாத சொற்களை நெட்டுருச் செய்துவருகின்றனர். வித்தை என்பதனைப் பரவித்தை, அபரவித்தை என வேதநூல்கள் இரண்டாக வகுத்தன. அபரவித்தை உலகியற் கல்வி விடயங்களைத் தழுவியதாகும். அங்கு அஸ்திர வித்தை, சாஸ்திரவித்தையுடன் கலை, சமயம், தத்துவஞானம் அனைத்தும் படிக்கப்பட்டன. பரவித்தைக்கு பிரஸ்தானத்திரயம் எனப்படும் உபநிடதம், கீதை, பிரம்மசூத்திரம் என்பன ஆணிவேராக அமைந்தன.

குருகுலங்களும், ஆரண்யங்களுமே பண்டைக் காலத்தில் பள்ளிகளாக, பாடசாலை களாகவும் பிரபஞ்சமே பல்கலைக்கழகமாகவும் ரிஷிகள், ஞானியர் அங்கு ஆசிரியர் களாகவும், இயற்கையே அவர்களின் மெய்ஞ்ஞானக் கல்வியின் திறந்த புத்தகமாகவும் விளங்கியது. வேத சத்தியத்தை வாழ்விலே அடிப்படையாகக் கொண்டு தனது ஞானத் தினால் அவை அறத்தின் வழிகள் என அறிந்து ஒழுகுபவனே உண்மையான கல்வியாளன் என மனு நூலும் விளக்கியுள்ளது. சத்தியம் வத, தர்மம் சர, மாத்துறுதேவோபவ, பித்துறு தேவோ பவ, அதிதி தேவோ பவ என்பன போன்ற உபதேசங்களில் வேதநூல்கள் குழந்தைகளிடத்துப் பெற்றோர்மீதும், சமூகத்தின் மீதும் செலுத்தி வாழக் கற்றுக் கொடுத் தன. குருகுல வாசத்தின் முடிவிலே உபநிடதங்கள் மாணவர்கட்குக் குருவானவர் விடை கொடுத்து அனுப்பும் நிகழ்ச்சியில், நாமனைவரும் இனி ஒன்றாகவே பழகுவோம். ஒன்றாகவே வாழ்வோம், அப்படிக் கலந்து,பழகித் தெரிந்து கொண்ட அறிவினைப் போற்றி காப்பாற்றுவோம். இணைந்துபழகி, ஒருவருக்கொருவர் நட்புடன் வாழ்வோம் என்ற அறிவுரையினை வழங்கி வாழ்த்துகின்ற பண்பினைக் காணமுடியும்.

எதைக்கற்க வேண்டும்? எதைக் கற்பிக்க வேண்டும்? என்ற தெளிவு நமக்கு வேண்டும். திருக்குறளும், உபநிடதங்களும்,நாவலர் பெருமானும் இது குறித்துப் பரக்கக் கூறியிருப்பது பற்றிப் பிரக்ஞையேயற்றவர்களை வாழ்ந்து போதீரே என்று வாழ்த்தும் மரபினர்யாம். உடநிடதக் கல்வியின் குறிக்கோளை - நோக்கத்தை - உயரியலட்சியத்தைப் பின்வரும் சுலோகத்திலே கண்டு கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"அஸதோ மா ஸத் கமய*
*தமஸோ மா ஜோதிர் கமய*
*ம்ருத்யோர் மா அமிர்தம் கமய"*

என வரும் அடிகளில்,

"இருளிலிருந்து ஒளிக்கு என்னை அழைத்துச் செல். அறியாமையிலிருந்து அறிவிற்கு என்னை அழைத்துச் செல். மரணத்திலிருந்து அமிர்தமாகிய இறவாமைக்கு என்னை அழைத்துச் செல்" என்னும் இத்தகைய உயர்ந்த கல்வியின் குறிக்கோளில் வாழ்க்கைத் தத்துவத்தையே முன்னோர் அறிவித்து வைத்தனர். உபநிடதங்களிலும் அறிவானது அபரஞானம், பரஞானம் என்ற பிரிவிலே உலகியற் கல்வியும், ஆன்மீகக் கல்வி போதனையும் இணைந்தே நடைபெற்றன. இவ்வுலக வாழ்விற்கு உலகியற்கல்வி அவசியமானது போல அவ்வுலக வாழ்விற்கு ஆன்மீகக் கல்வி அவசியமும் என்பதனை உபநிடதகால ரிஷிகள் இல்லற வாழ்வினை மேற்கொண்டு ஒழுகியவாறே வாழ்ந்து காட்டினர்.

மனவலிமையினை ஊட்டவல்ல கல்வியானது அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய வற்றினை வளர்ப்பதுடன் பண்பு, நடத்தை போன்றவற்றிலும் உயர்வான மேம்பாடுகளை உருவாக்குவதில் வெற்றிகாணமுடியும். அதனால் - இவற்றினால் ஒருவரது சிந்தனை, சொல், செயற்பாங்கு போன்றவற்றில் மாற்றம் ஏற்படுகிறது. சமுதாய ஆளுமையையும், அறிவுசார் திறன்களையும் கொடுக்கவல்லதான கல்வியே தற்காலத்திலும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். அதனால் கல்விக் கொள்கைக்கு அடிப்படையாக அமைவது வாழ்வியல் கோட்பாடாகும். எனவே, "வாழ்வியற் தத்துவமே" கல்வித் தத்துவத்தின் அடிப்படையாகின்றது என்பதனை ஜோன் டூயி போன்ற அமெரிக்கக் கல்வியாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அந்த வகையிலே புராதன இந்துக்களின் கல்விச் சிந்தனையானது தனிமனிதனது உள்ளார்ந்த பண்புகள், குணநலன்கள், ஒழுக்க நிலைகள் ஆகியவற்றினை வளர்ப்பதில் அதிக அக்கறை செலுத்தி வந்துள்ளன.

ஆன்மிகம், அரசியல், அறிவியல், துறவியல், பண்பாடு, நாகரிகம், கலாசாரம் முதலியவற்றிலே காணப்படும் மேம்பாடுகள் அனைத்தையும் தமது கல்வித்தளத்திலே புகுத்திவைத்தனர். அதனால் சமய ஞானம், தத்துவஞானம், கலைஞானம் போன்றவற்றிலும் அத்தகைய மேம்பாடுகளை - ஒழுக்கப்பண்புகளை - வெளிக்கொணர்வதில், அதிக அக்கறை செலுத்தப்பட்டது.

"மனிதனை மனிதனாக்காத கல்வி, மனிதனை மனிதனாக்காத மதம், மனிதனை மனிதனாக்காத தத்துவம். இவை மனித குலத்திற்குத் தேவையற்றவை" என விவேகானந்தரும் வாழவியலோரும் சமூகத்திற்கு நன்மை பயக்காத விடயங் களையும், கண்டனம் செய்தமை கவனத்திற்குரியது. உண்மை, சத்தியம், நீதி, அஞ் சாமை, நேர்மை, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற மேம்பாடுகளை ஏற்று வாழ்வில் நடைமுறைப்படுத்தும் போது சமுதாயத்திலும் சிறந்த மாற்றங்களை அவை உருவாக்கும்.

புறஉலக - உலகியல் அறிவை மட்டும் வளர்ப்பதனைக் கல்வியின் நோக்கமாகக் கொள்ளாது, பயன்பாடு உணர்ந்து கல்வியைப் பயன்படுத்துவதற்குக் கல்வியானது பயிற்சி கல்வியாக அமைய வேண்டுவது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்வி என்பது மூளைக்குள்ளே பல விடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. வாழ்க்கைச் சவால்களைச் சமாளிக்கக் கூடிய மனிதப் பண்புகளை வளர்க்கக்கூடிய, நல் ஒழுக்கத்தை வளர்க்கக் கூடிய கருத்துக்களை கிரகித்து, அவற்றினை வாழ்விலும், நடத்தையிலும் ஊடுருவி நிற்கச் செய்தால், ஒரு பெரிய நூல்நிலையம் முழுவதையும் மனப்பாடம் செய்வதனை விட இப்படியானவன் அதிகம் கற்றுத்தேர்ந்தவனாகிறான்" என்ற சுவாமி விவேகானந்தரின் அறிவுரை இந்துக் கல்விப் பாரம்பரியத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது எனலாம்.

இந்துக்களது கல்வி பற்றிய சிந்தனைக் கருவூலங்களைத் திருமந்திரத்திலும் காணமுடியும்.

*"கற்றறிவாளர் கருதிய காலத்துக் கற்றறிவாளர்*
*கருத்திலோர் கண்ணுண்டு"*

என்ற பாடலில் கற்றறிந்தோர் என்பார் கருத்திலே மூன்றாவது எனக் கல்வியின் குறிக்கோள் விளக்கப்பெற்றுள்ளது. இன்னுமோர் இடத்திலே "முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள் அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்" என மீண்டும் கல்வியின் இலக்கு எது என்பதனை வலியுறுத்துவதனையும் காணலாம். அத்துடன் கற்றறிந்தவர்களாக இருப்பினும் அவர்களிடத்துச் சிவஞானமாகிய அன்புநெறி இல்லாது போனால் அவர் களைக் கற்றோர் என்று கூறுதல் பொருந்தாது என்பதனைக் கற்றும் சிவஞானம் இல்லாக் கலதிகள், சுற்றமும் விடார் துரிசறார் மூடர் என சாடியுள்ளார். கல்வியும், மேம்பாடும் இணைபிரியாது பிரிப்பின்றி அமைய வேண்டும் என்பது வள்ளுவரது குறிக்கோளாக உள்ளது. அதனால் தான் கற்ற கல்வி ஒழுக்கத்திற்குத் தக்கவாறு நெறிநின்று ஒழுகுவது கற்றவர்களது சிறப்பாகும் என்ற வள்ளுவர் கருத்தினை யாவரும் அறிவர். திருக்குறள் நீதிநூல்கள் போன்றவை கல்வியின் பயன் ஒழுக்கமும், இறைநெறி நிற்றலும் என்பதனையே வற்புறுத்துவனவாகவே உள்ளன. எனினும் புராதன கல்வித் திட்டம் பற்றி அவற்றிலே விளக்கங்களைக் காண்பதரிதாகும்.

இந்துசமய இலக்கியங்களில் குறிப்பாக ஐந்து வகையான கல்விமரபு சிறப்பாகப் பேணப்பட்டது என்பதனை, ஸ்ரீ அரவிந்தர் அவர்கள் தனது 'இந்துக்கல்வி' பற்றிய ஆய்வுகளில் எடுத்துக் கூறியமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. உடற்கல்வி, பிராமணனின் கல்வி, மனக்கல்வி, சத்தியக்கல்வி, ஆன்மீகக் கல்வி என அவற்றினை விளக்குவதிலிருந்து புறப்பொருள் நாட்டக்கல்வி, அகவிழிப்புணர்வுக் கல்வி என இரு நிலைகள் பெறப்படு கின்றன. பாரத நாட்டிலே கல்வித் தத்துவமானது வாழ்க்கை நெறியாக ஆன்மீக விழிப் புணர்வை அடைதற்குரிய ஓர் மார்க்கமாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. இந்துக்களது கல்வி மரபிலே அன்பு நெறிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதனை,

"எல்லா உயிர்களையும் தான் என் நண்பனாகக் கருதுவேனா, எல்லா உயிர்களும் என்னையும் தனது நண்பனாகக் கருதட்டும்" என்னும் யசுர் வேதப்பாடல் அதற்கோர் சான்றாகும். இயற்கையின் புனிதத்தைப் பேண வேண்டும். இயற்கையை நேசிக்க வேண்டும் என்ற மேம்பாட்டுச் சிந்தனையானது அதர்வவேதத்திற் சிறப்படைந்து இருந்ததை, "பூமி நமது தாய். நாம் பூமியின் புதல்வர்கள், வானம் நமது தந்தை. அவை நம்மைப் புனிதமாக்கிய நமக்குச் சக்தியை அருளட்டும்" என்ற சுலோகம் இவ்வாறு விளக்கியுள்ளமை காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களின் கல்வி மரபு என்பதில் 'மரபு' என்ற சொற்றொடரை விளங்கிக் கொள்வதும் அவசியமாகும். மரபு, இலக்கணம், முறைமை, தன்மை, பாரம்பரியம் என்பன ஒரு பொருட் சொற்கள் என்பர் நச்சினார்க்கினியர். எனவே மரபு என்பது, தொன்று தொட்டு வரும் வழக்கு என விளக்குவர். நச்சினார்க்கினியர் என்பாரின் கருத்திலே மரபு போலிகளைக் கடந்தது. காரண காரிய தொடர்புடையது, மாற்றங்களை உள்வாங்கும் இயல்பு கொண்டது. பின்னதை வளப்படுத்தும் தன்மை வாய்ந்தது என அறியமுடிகிறது. எனவே மரபு என்பது மாற்றமுடியாத ஒன்று அல்ல என்பது புலப்படுகின்றது. இதனைப் பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் ''உண்மையான உயிர்த்துடிப்பான மரபு என்பது கடுமையான வரையறையற்றது. அது காலத்திற்குக் காலம் தன்னைத் தானே புதுப்பித்தும் தனக்கு வேண்டிய ஜீவ சக்தியினைப் பெற்றும் இயங்கிச் செல்வதாகும்'' எனத் தெளிவுபடுத்தி யுள்ளார். மரபு என்பது காலந்தோறும் மற்றவர்களை உள்வாங்கித் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தன்மையானதாகும் என்பதனால் இந்துக்களினதும் கல்வி மரபு 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பதற்கேற்றவாறு காலவோட்டத்தில் அணுவிஞ்ஞானத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் உள்வாங்கிச் செயலூக்கத்திற் தன்னைப் புதுப்பித்து வளர்ந்து செல்லும் தகைமை கொண்டு விளங்குவது புலனாகும்.

இந்துக்களது கல்வித் திட்டத்தில் இதற்கமைவாகவே என்றுமே கவனத்திற் கொள்ள வேண்டிய ஒழுக்க மேம்பாடுகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. பெற்றோர், பெரியோர்களை மதித்து ஒழுகுதல், சுத்தம், ஆரோக்கியமான உடல் நலம் பேணுவது மனதையும் புலன் களையும் அடக்கியாளும் வல்லமை பெறுவது, உயர்ந்த பண்புகளையும், பழக்கங்களையும் கற்றுக் கொள்வது, ஆன்மீக வழிப்பட்ட கல்வியுடன் இணைத்துக் கொண்டு எண்ணம், சொல், செயல் முதலியவற்றிலே சமநிலை பேணும் தன்மையினை வளர்த்துக் கொள்வது போன்ற விழுமியங்களைப் பின்பற்றி ஒழுகுவது, அன்றைய கல்வி முறையின் அத்தி வாரமாக இருந்தது. ஒழுக்க மேம்பாடுகளைக் கவனத்திற் கொள்வதன் அவசியமும் கல்விக் கொள்கையில் விளக்கப்பட்டது. உலகின் உயர்வான இலட்சியங்களை அடை வதற்கும், சிறந்த குடிமக்களை உருவாக்குவதற்கும், மாணவர்களின் தனி ஆளுமை விருத்தி, திறமைகளை வளர்ப்பதற்கும் அன்று பாடப்பகுதிகளுடன் இத்தகைய ஒழுக்க மேம்பாடுகளை உதாரணங்களுடனும் இயற்கை அணுகுமுறைகளுடனும், சிறுசிறு கதை களூடாகவும், ஆன்மீக விழுமியங்கள் இணைக்கப்பட்டிருந்தமையை உபநிடத கால, இதிகாச புராண கால மரபுகள் எடுத்துக்காட்டியுள்ளன. உபநிடதங்களில் வரும் ஆலம் பழமும், ஆலமரமும், உப்புக்கல்லும் தண்ணீரும், பசு வளர்ப்பும் அன்பு நெறியும், இயற்கை வளமும் மாணவர் பணிகளும் என்றிவ்வாறு குருசீட சம்பாஷணைகளில் வரும் பரிசோதனை முறைகளும் விடைக்கொத்தும் அக்கால மாணவர்களைத் தன்னலமற்ற, தன்னம்பிக்கையுள்ள, சமுதாய நலம் பேணும் சிறந்த ஆத்மராணியராக, இல்லற யோகியராக உருவாக்கித் தந்துள்ளது. இவற்றிற்கு ஜனகமகாராஜாவும் - நாரதரும் - யக்ஞவல்லியர் - கார்க்கியும், உத்தாலகர் - சுவேத கேதுவும், சத்தியகாமன், கௌதம மகரிஷியும் மிகச் சிறந்த ஆசிரிய மாணவ உறவுப் பாலங்களாக விளங்கியமை நல்லதொரு எடுத்துக் காட்டாகும். இச்சிந்தனைகளைக் குறித்து, ''இந்துக்கல்வி மரபும் ஒழுக்க மேம்பாடும்'' என்னும் அருமைமிகு கட்டுரை யொன்றிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகத்துறைப் பேராசிரியர், கலாநிதி கலைவாணி இராமநாதன் எழுதியுள்ள பயன்தரு கருத்துகள் இவ்விடத்திலே மேற்கோளாகவே எடுத்தாளப்படுகின்றது.

> ''தற்காலத்தில் விஞ்ஞான தொழில்நுட்பவளர்ச்சி மிகவும் அபிவிருத்தியடைந் துள்ளது. இதன் பயனாக மக்களின் வாழ்க்கைத்தரம், பொருளாதார ஆடம்பரங்கள் என்பவை செழித்து வளர்ந்துள்ளன. ஆனால் மக்கள் வாழ்விலோ அமைதி மகிழ்ச்சி, சமாதானம், என்பன காணப்படவில்லை. மனித வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றம் உலகியல் தேவைகளை நிறைவுசெய்வதும், ஆன்மிகத் தேவைகளை வளர்த்தெடுப் பதிலும் ஆகிய இரண்டிலும் சமவளர்ச்சி ஏற்படச் செய்தல் ஆகும். ''மனிதனிடத்து மறைந்து கிடக்கும் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவது சமயம். மனிதரிடத்து ஆழ்ந்து கிடக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வியாகும்''

என்றார் சுவாமி விவேகானந்தர். விஞ்ஞான அறிவும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் நிச்சயமாகத் தேவைப்படுபவை என்பதில் மாறுபாடு கிடையாது. ஆனால் இவற்றுடன் ஆன்மீகமும் இணையும் போதுதான் இவை ஆக்கத்திற்குப் பயன்படுவதுடன் அழிவிற்குத் துணைபோகாமலும் இருக்கும்.

பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன் மேலும் எழுதுவதாவது,

> ''உலகியற் கல்வியும் ஆன்மீகக் கல்வியும் இணையும் போது வாழ்விலே எதனையும் இலகுவாகச் சாதிக்கும் தன்னம்பிக்கை, தற்றுணிவு வளர்கிறது. கால்பந்து விளை யாட்டு மைதானத்திலே இரண்டு பக்கமும் இரண்டு கம்பங்கள் நட்டிருக்கும். பந்து கம்பங்களுக்கு இடையே போனால் தான் கோல் கிடைக்கிறது. அவ்வாறே வாழ்க்கை என்ற விளையாட்டிலும் உலகியற் கல்வி, ஆன்மிகக் கல்வியும் இருபக்கத்தையும் குறிக்கும். இலக்குகளாகவும் (கோல்) இந்த இரண்டிற்குமிடையே தான் வாழ்க்கை இலட்சியம் என்ற பத்து அடிக்கப்படவேண்டும். பந்திலே காற்று உள்ளவரை அது நன்கு உதைபடும். காற்று என்பது அகங்காரம். காற்றுப் போன பந்து கையால் எடுக்கப்படுகிறது. பின் அடிபடுவதில்லை. அது போல் வாழ்க்கை விளையாட்டிலே அகங்காரம் இருக்கும் வரை துயரங்களினாலே அடிபட நேரிடும். அதனைச் சவா லாக்கி வெற்றி காண்பதற்கு ஆன்மிகக் கல்வியால் மனதிலே அன்பினை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதனைச் சத்யசாயி மேம்பாட்டுக் கல்வியில் பகவான் அழகுற விளக்கியுள்ளார்.''

என்கிறார். பேராசிரியர், கலாநிதி கலைவாணி இராமநாதன்.

நவீனகால கல்விமுறையில் உலகியல் விடயங்களுக்குத் தான் அதிக அழுத்தம் கொடுக்கப்படுகிறது. ''அறிவினை மூலதனமாகக் கொண்ட சமுதாயம் (Knowledge besed Society) தான் இன்றைய தேவையெனக் கல்வியாளர்கள் விதந்தோதுகின்றனர். மனித னுக்குக் கல்வி முதுகெலும்பு போன்றது. கல்வியில்லாமல் ஒருவன் வாழ்வில் நிமிர்ந்து நிற்பது கடினமே. கல்வி என்பது அஞ்ஞானத்தை அழிக்க வேண்டும். அவ்விவேகத்தை விலக்க வேண்டும். இன்று தரப்படும் கல்வியினால் மனிதர்கள் செல்வத்தை, வசதிகளை, புகழை, தற்பெருமையைச் சம்பாதிக்கிறார்கள். உண்மையான ஆத்மவித்தையை ஆத்மிக செல்வத்தை நாடுவதில்லை: துய்ப்பதுமில்லை, ''வித்தை ததாதி வினயம்: வினயம் ததாதி வித்தை'' என்பது ஒரு முதுமொழி கல்வி ஒருவருக்குப் பணிவைத் தரவேண்டும். பணிவு ஒருவருக்குப் படிப்பினைத் தரவேண்டும். இன்றைய மாணவர்கள் வித்தியர்த்திகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் விஷயர்த்திகளாகப் புலன்களுக்கு மகிழ்வு தரும் காரியங்களில் ஈடுபடு கிறார்கள். வித்தை முக்கியம் எனக் கருதுபவர்கள் மிகக் குறைவு.

இன்று கோடிக்கணக்காணவர்கள் கல்வியாளர்கள் புலமைத்துவ நிபுணர்களாக உள்ளனர். ஆனால் நமது கல்வி புத்தக அறிவோடு மட்டும் நின்றுவிடக் கூடாது என்பதில் இந்துக் கல்வியாளர்கள் அதீத அக்கறை செலுத்தினர். பாலகங்காத திலகர், ரவீந்திரநாத்தாகூர், தயானந்த சரஸ்வதி, ராஜாராம் மோகன்ராய் போன்ற மேதைகள் பலர் படித்துப் பட்டம் பெற்றிருந்தனர். இவர்களது பெயர்கள் எல்லாம் புத்தகங்களில் தான் காணப்படுகின்றன. ஆனால் படிப்பேயில்லாத ''ராமகிருஷ்ணர், ரமணர், புத்தபகவான் போன்றோர் மனித மனங்களில் எல்லாம் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கின்றனர். காரணம் அவர்கள் ஆன்மிகக் கல்வியிற் சிறந்து விளங்கியதுடன், உலக மக்களின் துயரங்களையும் தாமே ஏற்று மக்களின் தேவைகளைப் பூர்த்தி பண்ணுமாறு சேவைகளை விரிவுபடுத்தி அவர்களது வாழ்விலே அமைதியை, மகிழ்வை ஏற்படுத்தியவர்கள். எனவே எந்த வகைக் கல்வியாக இருப்பினும் உலகியலான, பௌதிகமான, ஆன்மீகமானவை என்னும் மூவகை ஞானமும் அவசிய மாகும். இவற்றின் துணையின் பெறும் கல்வியானது பயன்படாது போவதாகும். கற்றதனால் ஆய பயன் என் கொல்? என்பதனை முறைப்படி உணர்வது அவசியமாகும். அன்பெனும் சேவை என்னும் கலாசாரமே கல்வியின் ஆணிவேராக விளங்குமானால் நாளைய சமூகம் சாந்தி, சமாதானம், அன்பு, ஆன்மிகம் இவற்றிலே நிலைபெற்றிருத்தல் நிச்சயமாகும்.

பேராசிரியை, கலாநிதி கலைவாணிஇராமநாதன் கூறும் ''உண்மையான வாழ்க்கைக் கல்வி'' எது என்பதனை வலியுறுத்தி முடிப்பாம். அவர் எழுதுகிறார்.

> ''சைவசித்தாந்தமும் மூவகை அறிவினையும் பசு ஞானம், பாச ஞானம், பதி ஞானம் என மூவகையாக விளக்கி அன்பெனும் சிவதத்துவத்தை இவ்வாறே நிலைபெறச் செய்துள்ளது. எனவே மனித குலம் முழுவதையும் ஒன்றாக நேசித்து அனேகத் துவத்திலும், ஏகத்துவத்தைக் காணும் வளர்ச்சியுடன் இசைவாக்கம் பெற்றுப் பயனடைவதுதான் உண்மையான வாழ்க்கைக் கல்வியாகும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிலைக் கல்வியில் தராதரம் பற்றிய எழுவினாக்கள்

**பேராசிரியர் கலாநிதி மா கருணாநிதி**
**கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்**

இலங்கையின் கல்வி முறைமையில் 1945 தொடக்கம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள சீர்திருத்தங்களும் அவற்றின் நடைமுறைப்படுத்தல்களும் கல்வியின் தொகை சார் அபிவிருத்தியில் பல சாதகமான அபிவிருத்திகளை எடுத்துக்காட்டி வந்துள்ளன. பாடசாலைகளின் தொகை (9716) மாணவர் தொகை (ஏறக்குறைய 3.8 மில்லியன்) ஆசிரியர் தொகை (208,000) எழுத்தறிவுடையோர் தொகை (91.7%) ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்வோர் தொகை (98%) இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்வோர் தொகை (85%) முதலிய விடயங்களின் மிகச் சிறந்த வெற்றிகளை ஈட்டியுள்ளது. கல்வியமைச்சினால் வருடந்தோறும் வெளியிடப்படும் அறிக்கைகள் இச்சாதனைகளை எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன. ஆயினும் எமது கல்விமுறை பற்றிய முக்கியமான எழுவினாவாக கல்வியின் தராதர மேம்பாடு குறிப்பிடத்தக்க விதத்தில் இல்லாமையைக் குறிப்பிடலாம். தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கையும் (NEC 2003) கல்வியமைச்சினால் வெளியிடப் பட்ட கல்வித்துறை அபிவிருத்திச் சட்டமும் நிகழ்ச்சித்திட்டமும் (ESDFP, 2006) கல்வித் தராதர மேம்பாடு பற்றிய விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் தெளிவாகத் தந்துள்ளன. 2007 இல் கல்வியமைச்சும் பெரும் முன்னெடுப்பில் தராதர அபிவிருத்தி தொடர்பாகப் பல்கலைக்கழகங்களிலுள்ள கல்விப்பீடங்கள் மற்றும் கல்வித் திணைக்களங் களின் துணையுடன் தேசிய மட்டத்திலான மகாநாடொன்றினைப் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தியது.

1. பாடசாலைகளின் தராதர மேம்பாடு
2. கற்றல் அடைவுகளை மேம்படுத்துதல்
3. பொதுச் சோதனைகளில் மாணவரின் வினையாற்றலை உறுதிசெய்தல்.
4. தராதர மேம்பாடு குறித்து மேற்பார்வை கண்காணிப்பு என்பவற்றைத் திசை முகப்படுத்தல்.
5. கல்வியில் சமவாய்ப்பினை உறுதிப்படுத்தும் நோக்கில் வேறுபாடுகளைக் குறைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பாடசாலைக் கலைத்திட்டத்தை மீளாய்வு செய்தல்.

7. ஆசிரியரின் உயர்தொழில்சார் தேர்ச்சிகளை மேம்படுத்துதல்.

இம்மகாநாட்டில் கல்வியின் தராதர மேம்பாடு குறித்துப் பல ஆணித்தரமான கருத்துகள் பரிமாறப்பட்டன. ஆயினும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பெரிதும் அக்கறை காட்டப்படவில்லை. இக்கட்டுரையானது மேலே குறிக்கப்பட்ட அனைத்துப் பிரச்சினை களையும் கலந்துரையாடாமல் பாடசாலைகளில் வசதிகளும் வளங்களும், ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தி, பாடசாலைக் கலைத்திட்டத்துடன் தொடர்புடைய எழுவினாக்கள், கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பிடல், தராதரமின்மை மற்றும் பாடசாலை முகாமைத்துவம் பற்றிய முக்கியமான விடயங்களில் கவனஞ் செலுத்தியுள்ளது.

**பாடசாலை வளங்களும் வசதிகளும்.**

முதலாவது எழுவினாவான பாடசாலை வளங்களும் வசதிகளும் பற்றி ஆராயும் பொழுது, பாடசாலைகளிடையில் காணப்படும் வளவேறுபாடுகள் அல்லது வளப்பகிர்வில் சமநிலை யின்மை நீண்டகாலமாகக் கொள்கை வகுப்போர் மற்றும் நடைமுறைப்படுத்துவோரின் கவனத்துக்கு உட்பட்டிருந்தது. எனினும் இன்றுவரையில் வளப்பகிர்வு தொடர்புடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாத ஒன்றாக இருந்து வருகின்றமை எல்லோராலும் நன்கு அறியப்பட்ட விடயமாகும். இத்தகைய வேறுபாடுகள் நகர மற்றும் கிராமப் பாடசாலை களிடையில் நிலவுகின்றன என்ற பொதுவான நோக்கிலன்றி தற்போதைய சூழமைவில் கிராமப் பாடசாலைகளுக்கிடையில் நிலவுவதையும் உற்றுக் கவனித்தல் வேண்டும். கிராமப் பாடசாலைகளில் அத்தியாவசியமான வளங்கள் பற்றாக்குறையாக உள்ளன. வசதிபடைத்த பாடசாலைகளில் கூட வளங்களைப் பகிர்வதில் முன்னுரிமைகளில் தவறான நெறிப்படுத்தல்கள் உள்ளன என்பதனைத் தேசிய கல்வி ஆராய்ச்சி மதிப்பீட்டு நிலையம் (NERC, 2003) மேற்கொண்ட ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் தேசியப்பாடசாலைகளென அழைக்கப்படுவதை ஒப்பீட்டளவில் வளவசதிகளைக் கொண்டவை என்பது எமது பொதுவான நம்பிக்கை. இன்று தேசியப்பாட சாலைகள் உருவாக்கப்பட்டுள்ள முறையில் வளம் மற்றும் வசதிகள் என்ற விடயம் பெரிதும் கவனத்திற்கு உட்படவில்லையென அவதானிக்கலாம். பல தேசியப் பாடசாலை கள் ஆகக்குறைந்த தராதரங்களைப் பேணுதற்குரிய வளங்களின்றி பெயரளவில் தேசியப் பாடசாலைகளாக இயங்கி வருகின்றன. பாடசாலைக்கான அடிப்படை வசதி என்னும் பொழுது, பொதுவான உட்கட்டுமான வசதிகளான வகுப்பறை, பாதுகாப்பான குடிநீர், சுத்தமான பாடசாலைச் சூழல், மின்சார வசதி, மாணவருக்கான மேசை மற்றும் கதிரைகள் பற்றியே கூறிவருகின்றோம். வளங்களைப் பொருத்தமற்ற விதத்தில் பயன்படுத்தும் பொழுது வீண் விரயங்களுக்கும், செலவு நன்மையில்லாத நிலைமைக்கும் வழிகோலுதல் ஒரு பாரிய பிரச்சினையாகும்.

மனிதவளம் என்ற வகையில் முக்கியமான வளமான ஆசிரியர்தொகை அதிகமாக இருந்தாலும் முதலில் தொகை அடிப்படையிலும் பாட அடிப்படையிலும் மாகாணங் களுக்கிடையில் மிகையும் பற்றாக்குறையும் நிலவுகிறது எனக் கல்வியமைச்சின் அறிக்கை எடுத்துக்காட்டியுள்ளது (ESDFP, 2006). இலங்கையில் மாணவர் ஆசிரியர் விகிதம் 20:1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக இருக்கின்ற போதும் கற்றல் கற்பித்தல் சிறந்த முறையில் நிகழவில்லை. ஆங்கிலம், ஆங்கில இலக்கியம், கணிதம், தொழினுட்பம், உடற்கல்வி மற்றும் விசேட கல்வி ஆசிரியர் தேவைகளைப் பூர்த்திசெய்தல் இதுவரையில் சரியாகக் கவனிக்கப்படவில்லை. தமிழ் மொழிப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் ஆசிரியரின்மை பாதகமான விளைவு களுக்குக் காரணமாக இருக்கின்றமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். முறைசார் கல்வியின் தராதரமானது, ஆசிரியர்களின் தராதரம் மற்றும் செயலாற்றங்களில் தங்கியுள்ளது. ஆசிரியர் ஆட்சேர்ப்பு நியதிகளின்படி கல்வியமைச்சினால் மாகாண அடிப்படையில் ஆசிரியர்கள் ஆட்சேர்க்கப்படுகின்றனர். ஆயினும், நியாயமான முறையில் அவர்கள் பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவர் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. இந்நிலை மனிதவள முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த மூன்று தசாப்தங்களாக ஆசிரியர்வளம் பெரும் பிரச்சினையான இருந்து வந்துள்ளது. பொருத்தமற்ற ஆசிரியர் அமர்த்துகை மற்றும் உயர்வீதத்திலான ஆசிரியர் வரவின்மை இப்பிரச்சினையை மேலும் உக்கிரமடையச் செய்துள்ளது (World Bank 2005) காலத்துக்குக் காலம் ஆசிரியர் நியமனங்கள் நடைபெற்று வந்தாலும் வருகையின்மையின் பாதிப்புகள் கல்விமுறைமையின் சீரான இயக்கத்துக்குப் பெருந்தடையாக உள்ளன. ஆசிரியர் வரவின்மையைக் கட்டுப்படுத்த பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் உபாயங்கள் விளைதிறனுடையனவாகக் காணப்படவில்லை தற் போதுள்ள சமாதானச் சூழலில் மீண்டும் பாடசாலைகளை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படும் வேளையில் குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. ஏற்கனவே கல்வியில் பின்தங்கிய இம்மாவட்டங்கள் ஆசிரிய வளமின்றித் துன்புறுகின்றன.

ஆசிரியர் தொடர்பான இன்னொரு முக்கியமான விடயம் அவர்களது தொழில்சார் அபிவிருத்தியாகும். தொழில்சார் அபிவிருத்தியின்றி கற்றல் கற்பித்தலில் தராதரங்களை எதிர்பார்க்க முடியாது. கற்றலின் தராதரம் ஆசிரியர் தராதரத்தில் தங்கியுள்ளது என்பது கோட்பாட்டு ரீதியாக வலியுறுத்தப்படும் விடயமாகும். மாணவர் பங்குபற்றும் தன்மை, வளப்பயன்பாடு, மாணவரின் அடைவுமட்டம் மற்றும் ஆக்கத்திறன் ஆசிரியர் தேர்ச்சி என்பன தொழில்சார் அபிவிருத்தியில் தங்கியுள்ளன. பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் இன்னும் பயிற்றப்படாமல் உள்ளனர். தொழில்சார் பயிற்சியின்றி எந்தவொரு ஆசிரியரும் வகுப்பறைக்குள் செல்ல இடமளிக்கப்படமாட்டார்கள் என்ற எதிர்பார்ப்பு இன்னும் சாத்தியமாகவில்லை. தொழிற்பயிற்சி சார்ந்த விடயங்களில் ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் மத்தியில் இயைபாக்கம் குறைவு. இத்தகைய நிலைமை தொடர்ந்தும் நீடிக்குமானால் தராதரம் உறுதிப்படுத்தப்பட முடியாது என்பது கல்விக் கொள்கை வகுப்போரின் கருத் தாகும். இதன் காரணமாக ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாக மீள்திசைப் படுத்தலுக்கான கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. பொதுவாகக் கூறுவதனால் ஆசிரியர் ஆட்சேர்ப்புக் கொள்கை, அமர்த்துகை, ஆசிரியர் பயிற்சி மற்றும் பதவியுயர்வு கொள்கை யினால் ஆசிரியர் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் (NEC, 2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலைத்திட்டமும் பாடநூல்களும்.**

தராதரம் பற்றிக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய இன்னொரு முக்கியமான விடயம் கலைத்திட்டம் சார்ந்த பிரச்சினைகளாகும். பாடசாலைக் கல்வியின் தராதரம் பாட சாலைக்கென விருத்தி செய்யப்படும் கலைத்திட்டத்தில் தங்கியுள்ளது. இலங்கைப் பாட சாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டம் சுமைமிக்கது என்னும் அபிப் பிராயம் பரவலாக உண்டு. நடைமுறையிலான கலைத்திட்டம் வெறுமனே அறிவைப் பரிமாறும் தொழிற்பாட்டில் கவனம் செலுத்துவதால் மாணவரின் சுயசிந்தனை, சிந்திக்கும் ஆற்றல், சமூகத்திறன்கள் மற்றும் ஏனைய தனிப்பட்ட திறன்களை விருத்தி செய்வதில் வெற்றிகாணவில்லை என்ற கருத்தும் உள்ளது. பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்கள் எதிர்நோக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகள் மற்றும் சுயதொழில்களை மேற்கொள்ளக்கூடியவராக மாறவில்லை. பாடசாலையைவிட்டு வெளியேறுவோர் பயிற்றப்படக் கூடியவர்களாக இல்லை வேலை வழங்குநர் எதிர்பார்க்கும் திறன்களான மொழியாற்றல், தொடர்பாடல், தலைமைத்துவம் ஏனைய மென்திறன்கள் காணப்பட வில்லை என்ற குறைபாடுகளையும் அண்மைக்காலங்களில் வெளியிடப்படும் ஆய்வ றிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

கலைத்திட்டத்தின் தராதரக் குறைபாட்டுக்கான முக்கிய காரணம் உலகளாவிய மற்றும் உள்ளூர் நோக்கில் அறிவில் ஏற்படுகின்ற மாற்றங்களைச் சரிவர உள்ளவாங்கிக் கொள்ளாமல் சீர்திருத்தங்கள் எழுந்தமானப் போக்கில் அவசரமாக மேற்கொள்ளப்படுதலாகும். இலங்கையில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட கலைத்திட்டச் சீர்திருத்தங்களில் 1972 இல் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தம் முக்கியமானது. ஆயினும் அச்சீர்திருத்தத்தில் முன்மொழியப்பட்ட விடயங்கள் பல வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. பின்னர் வந்த சீர்திருத்தங்கள் அதனை அடியொற்றிச் சில மாற்றங்களுடன் அறிமுகமாயின. கலைத்திட்டச் சீர்திருத்தங்கள் நிச்சயமாக இடம்பெற வேண்டியவை ஆயினும் அதற்கென ஒரு கால கட்டம் உள்ளது. இங்கு அவ்வட்டம் முறையாகப் பின்பற்றப்படாமல் அநேகமான சந்தர்ப்பங்களில் ஒரு சீர்திருத்தம் இடம்பெற்று, அதனை நடைமுறைப்படுத்தி, அதன் வெற்றி தோல்விகளை பலாபலன்களை அறிய முன்பே மற்றொன்று புகுத்தப்படுகின்றமை யால் ஆசிரியரும் மாணவரும் எண்ணற்ற பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர்.

ஒரு கலைத்திட்டத்தைப் புதிதாக அறிமுகம் செய்யும்போது, அதனை நடைமுறைப் படுத்துவதற்குப் போதிய பயிற்றப்பட்ட ஆளணிவுளம் மற்றும் சாதனங்கள், கலைத் திட்டத்தை முகாமைத்துவம் செய்யக்கூடிய தலைமைத்துவம் தொடர்பாகப் பெரிதும் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. உதாரணமாக தொழில் முன்னிலைப் பாடங்கள், வாழ்க்கைத் தேர்ச்சி பாடசாலைத் தளநிலைக் கணிப்பீடுகள் அறிமுகம் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் இத்தகைய பிரச்சினைகள் பெரும் சவாலாக இருந்தன. பாடசாலைத் தளநிலைக் கணிப்பீடு (1998) அறிமுகஞ் செய்யப்பட்ட ஏறக்குறைய 12 ஆண்டுகள் முடிவடைந்துவிட்ட நிலையிலும் இதனை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகளுக்குச் சரியான மாற்றுவழிகள் அல்லது தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை. அதனிலும் மேலாக இன்னும் பலர் அதன் அடிப்படை எண்ணக்கருவை அறிந்து கொள்ளாமல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மாணவர்களுக்கு வழங்கப்படும் புள்ளிகள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் தொடர்பான நம்பகம் பேணப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுப் பரீட்சைப் புள்ளிகளுடன் கணிசமான சதவீதம் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து கணிப்பீட்டுப் புள்ளி களின் நம்பகமற்ற தன்மைகள் பிரதானமான எழுவினாவாக உள்ளன.

பாடங்களைத் தொகுதிகளாகப் பிரித்து மையப்பாடங்கள் கட்டாயமாகவும் ஏனைய தொகுதிகளிலிருந்து மாணவர்கள் விரும்பிய ஒவ்வொரு பாடத்தையும் தெளிவு செய்தல் வேண்டுமென்பது நியதி. ஆயினும் இவற்றினைத் தெரிவு செய்வதில் மாணவர்களுக்கு மயக்க நிலையுண்டு. உலகளாவிய மாற்றங்களுக்கேற்ப புதிய அறிவு மற்றும் திறன்களை அறிதல் வேண்டும் என்ற நோக்கில் அறிமுகப்படுத்தும் விடயங்களைக் கவனமாகத் திட்டமிடப்படாமையால் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அநேகம்.

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதலின் தராதரம் தொடர்பாக எழும் இன்னொரு எழுவினா பாடநூல் பற்றியதாகும் பாடநூல் பாடத்தின் குறித்த கற்பித்தல் மட்டத்தை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்படும் சாதனமாகவும் கலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான அடிப்படைச் சாதனமாகவும் அமைகிறது. இலங்கையைப் பொறுத்த வரையில் மாணவருக்கு இலகுவில் கிடைக்கக்கூடிய வாசிப்புச் சாதனமாகவும் சோதனைக்கு ஆயத்தஞ் செய்வதற்கரிய அடிப்படை வழிகாட்டியாகவும் பாடநூல்கள் அமைந்துள்ளன. மாணவர்கள் பெரும்பாலும் பாடநூல்களில் உள்ளவற்றையே பரீட்சை களில் மீளக்கூறும் வழக்கமும் உள்ளது. பாடநூல்களின்றி ஆசிரியர்கள் பலரால் வகுப் பறைக் கற்பித்தலை விளைதிறனுள்ள விதத்தில் முன்னெடுத்துச் செல்லமுடிவதில்லை. அல்லது ஆசிரியர்கள் முழுமையாகவே பாடநூல்களில் தங்கியிருக்கின்றனர். சில பாட நூல்கள் கற்பதற்குப் பொருத்தமானவையாகக் காணப்படவில்லை. அவை உண்மை வாழ்க்கை நிலையி லிருந்தும் வெகுதூரம் விலகியுள்ளன (NEC, 2003).

பாடநூல் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளவேண்டிய இன்னொரு விடயமாக, மாணவர்கள் எல்லோரும் ஒரே பாடநூலைக் கற்கும்பொழுது அறிவில் பன்முகத் தன்மைக்கு இடமில்லாமல் இருத்தலைக் குறிப்பிடலாம். ஒரே பாடநூலினை அடிப்படையாகக் கொண்டு கற்கும் பொழுதும் மாணவரின் சிந்தனையில் கட்டுருவாக்கம் வேறுபடுதல் வேண்டும் என எடுகோளாக்கம் செய்யப்பட்டிருந்தாலும் மையப்படுத்தப்பட்ட பரீட்சை முறைகளால் ஒரே வகையான விளைவுகளை நோக்கியே மாணவர்கள் திசைமுகப்படுத்தப் படுகிறார்கள். இதன் காரணமாக பாடநூல்களுக்கு அப்பால் சென்று கற்க முடியவில்லை என்ற மனவேதனை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உண்டு. சமகாலக் கற்பித்தலில் பின்பற்றப்படும் E5 முறையினால் விரும்பிய விளைவுகளை அடைவதில் பல ஐயங்கள் தோன்றுகின்றன.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி (Teacher Instructional Manuel) பற்றியும் இங்கு எடுத்தாளுதல் பயனுள்ளதாக இருக்கும். கற்றல் - கற்பித்தலின் தராதரத்தினை உறுதிசெய்யும் இன்னொரு முக்கியமான ஆவணம். ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மிக விரிவாக எல்லா விடயங்களையும் உள்ளடக்கும் விதத்தில் எழுதப்படுகின்றமை வசதிகளற்ற தூரப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கற்ற கற்பித்தல் நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதில் கருத்து வேறுபாடுகளுக்கு இடமில்லை. ஆயினும் இவை ஆசிரியர்களின் சுயசெயற்பாடுகள் மீது கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகின்றன. மாணவர்களின் தேவை, ஆற்றல், அனுபவங்கள் ஆகியவற்றுக்கேற்ப மாற்றங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திக் கொள்ள அறிவுரைப்பு வழிகாட்டிகள் வழங்கும் சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. இன்னும் ஒருபடி மேலேசென்று சொல்வதனால் ஆசிரியரின் தேடும் பணி மற்றும் ஆக்கத்திறன் என்பனவும் அதனால் கட்டுப்படுத்தப்படுகின்றமை புத்தாக்கங்களைப் பிரயோகிப்பதில் தடைகளை ஏற்படுத்துகின்றமை ஆசிரியரின் தொழில்சார் சுயதிறன் களுக்கு சவாலாகும். கல்வியின் தராதரமேம்பாடு குறித்து மேற்கூறிய விடயங்கள் கொள்கை வகுப்பாளரின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துவருகின்றன.

**கற்றல் கற்பித்தலும் மதிப்பீடும்.**

பொதுப் பரீட்சைகளால் ஏற்படுத்தப்பட்ட போட்டிச் சூழல் மாணவரிடத்தில் மன அழுத்தங் களை மட்டுமன்றி கல்வியில் வெறுப்பையும் தூண்டுகிறது. வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்றவர்கள் ஒரு சிலராக இருப்பதற்காக ஏனைய மாணவர்கள் தமது கல்வியைத் தியாகம் செய்ய வேண்டியுள்ளது. சித்தியெய்தத் தவறிய மாணவர்கள் பலர் ஐந்தாம் தரத்தில் பின்பற்றப்படும் தவறான கற்பித்தலால் நுழைவுத் தகுதியில்லாமலேயே இடைநிலைக் கல்வியை எதிர்கொள்கின்றனர். நகரப் பாடசாலைகளிலும் இரண்டாம் வகைப் பாடசாலைகளிலும் இப்பிரச்சினை கூடுதலாக உள்ளது.

க.பொ.த சாதாரணப் பரீட்சையில் சராசரியாக 50 சதவீத மாணவர்களே சித்தியடைவதும் கணிசமான தொகையினர் எல்லாப் பாடங்களிலும் சித்தியடையாத நிலையும் உண்டு. சித்தியடையும் மாணவர்களில் ஏறக்குறைய 20 சதவீதத்தினர் வரையிலேயே க.பொ.த உயர்தர வகுப்பிற்குத் தகுதிபெறுவதும் அவ்வகுப்பில் ஏறக்குறைய 67 சதவீதமானவர்கள் சித்தியடைகின்றமையும் தராதரத்தில் குறைபாட்டினையே சுட்டிநிற்கின்றன. பின்தங்கிய பிரதேசங்களில் நிலவும் பல்வேறு வளக்குறைபாடுகள் வினையாற்றல் குறைபாடுகளுக்குக் காரணமாகின்றது.

தேர்ச்சியடிப்படைக் கற்பித்தலின்படி மாணவர்கள் குறித்த தேர்ச்சி மட்டங்களை அடைதல் வேண்டும். வகுப்பறை மட்டக் கணிப்பீட்டில் உயர் தேர்ச்சியைப் பெறும் மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் உரிய பெறுபேறுகளைப் பெறத் தவறிவிடுகின்றனர். பாடசாலைக் களநிலைக் கணிப்பீட்டின் தராதரமின்மையை எடுத்துக்காட்டுகின்றன. தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டுப் பரீட்சைகளாலும் கணிசமான தொகையினர் 50 புள்ளிகளுக்கும் குறைவாகப் பெறுகின்றனர் என்ற முடிவினை தேசிய கல்வி ஆராய்ச்சி நிலைய அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. கணிப்பீட்டில் காணப்படும் குறைபாடுகளை நீக்கும் பொருட்டு அறிவு ஆட்சிகளை கணிப்பிடும் சோதனைகள் யதார்த்த நிலைக் கணிப்பீடுகளாக (authentic assessment) மாற்றப்படுதல் வேண்டுமென தேசிய கல்வி ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

**பாடசாலை முகாமைத்துவமும் தலைமைத்துவமும்**

கல்வி முறைமையில் அறிமுகம் செய்யப்படும் புத்தாக்கங்களை விளைதிறனும் பயன்பாடு முள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதில் பாடசாலை முகாமைத்துவம் பெரும்பங்கு வகிக்கிறது. அதற்கு ஏற்றவகையில் பதிய வகிபாகங்களை அதிபர்கள் மட்டுமன்றி அலுவலர்களும் ஏற்கவேண்டியுள்ளது. எமது கல்வி முறைமையைப் பொறுத்தவரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவ ஆளணியினர் போதியளவில் நியமிக்கப்படவில்லை என்பதுடன் இருப்ப வர்களில் தொழில்சார் அபிவிருத்திக்கான ஏற்பாடுகளும் போதியளவில் இல்லையென தேசிய கல்வி ஆணைக்குழு அண்மையில் எடுத்துக்காட்டியுள்ளது. இவர்களும் காலத்துக்குக் காலம் பெற்ற பயிற்சிகள் நன்கு திட்டமிடப்படவில்லை என்பதுடன் தற்பொழுது அவர்கள் ஆற்றவேண்டுமென எதிர்பார்க்கப்படும் பணிகளுடன் இணைந்து செல்ல வில்லை.

அதிபர் தரத்திலுள்ளவர்கள் மற்றும் இலங்கைக் கல்வி நிருவாக சேவையிலுள்ளவர்கள் போதியளவில் நியமிக்கப்படவில்லை. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கூறிய பதவிநிலைகளில் நிரந்தரமற்ற நிலையில் நீண்டகாலம் பணியாற்றுவோர் தொகை அதிகம். இதனால் பொதுவான மேற்பார்வைப் பணிகளும், கலைத்திட்டத்துக்கான தலைமைத்துவமும் வழங்கப்படாத நிலையில் தராதரம் வீழ்ச்சியடைந்து செல்கிறது.

தராதர மேம்பாடு என்னும் நோக்கில் இன்னும் பல எழுவினாக்கள் உள்ளன. அவை பற்றி அடுத்த கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம். நீண்டகாலம் கல்வி அபிவிருத்தி தொடர்பாகக் கவனிக்கப்படாத பிரதேசங்கள் உள்ளன. மீட்சிக்கான துரித நடவடிக்கைகள் இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படாவிட்டால் இப்பிரதேசங்களின் தராதர மேம்பாடு கனவாகவே முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்தை முகாமித்தல்

**தை.தனராஜ்**
**சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப்பீடம்**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.**

**அறிமுகம்**

''நேரம் வாழ்க்கைக்கு சமனானது. எனவே நேரத்தைச் சரியாகக் கையாள்வதன் மூலம் உங்களது வாழ்க்கையையும் சரியாகக் கையாளுங்கள், அல்லது நேரத்தை விரயமாக்குவதன் மூலம் வாழ்க்கையையும் விரயமாக்கிக் கொள்ளுங்கள்''

இவ்வாறு நேரமுகாமைத்துவம் குறித்து பல ஆய்வுகளை மேற்கொண்டவரும் தலை சிறந்த பயிற்றுநருமான அலென் லெக்கைன் (Alan Lakein) என்னும் அமெரிக்கர் குறிப்பிட்டுள்ளார். எனவே வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு நேரத்தைச் சரியான முறையில் திட்டமிட்டு எமது இலக்குகளை அடையக்கூடிய வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நேரத்தைச் சரியாகத் திட்டமிடுவதன் மூலம் ''நேரமே இல்லை: கொஞ்சமேனும் நேரமிருந்திருந்தால் இந்த வேலையை முடித்திருப்பேன்'' போன்ற முறைப்பாடுகளை எம்மால் தவிர்த்துக் கொள்ள இயலும். இக்கட்டுரையானது நேரத்தை வீணடிக்கும் காரணிகள், நேரத்தை உச்சநிலையில் பயன்படுத்திக் கொள்ள உதவக்கூடிய நேரதிட்டமிடல் கருவிகள் முதலியவை பற்றி சுருக்கமாக விளக்குவதற்கு முற்படுகிறது.

**நேரமுகாமைத்துவம் என்றால் என்ன?**

நேரத்தை எம்மால் கட்டுப்படுத்த முடியாது. எனவே நேரத்தை முகாமித்தல் என்பது நேரத்தைப் பயன்தரும் வகையில் கையாள்வதற்கு எம்மை நாம் எவ்வாறு முகாமை செய்கிறோம் என்பதை குறித்து நிற்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதால் எமது செயற்பாடுகளின் வினைத்திறனையும் (Efficiency) விளைதிறனையும் மேம்படுத்திக் கொள்ள நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் ஒதுக்கக் கூடிய நேரத்தை கவனமாகத் திட்டமிடும் செயன்முறையையே நேரமுகாமைத்துவம் என்பது குறிக்கிறது. எனவே நேரமுகாமைத்துவ முறைமை என்பது செயன்முறைகள், கருவிகள், நுட்பங்கள் முதலானவற்றைக் கொண்ட ஒரு தொகுதி எனலாம். இலக்குகளைத் திட்டமிடல், அவற்றுக்கு நேரத்தை ஒதுக்குதல், செலவழித்த நேரம் குறித்த பகுப்பாய்வை மேற்கொள்ளல், கண்காணித்தல், முதன்மைப்படுத்தல் முதலிய பல்வேறு அம்சங்கள் நேர முகாமைத் துவத்துக்குள் அடங்குகின்றன. இன்னும் சுருக்கமாகக் கூறினால் நேர முகாமைத்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது நேரத்தை திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் (Planning, Organizing, Directing and Controlling) ஆகிய முகாமைத்துவ செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. ஒரு காலத்தில் நேரமுகாமைத்துவம் என்பது செயற்திட்டம் முதலான நிறுவனச் செயற்பாடுகளுடன் மாத்திரம் தொடர்புபட்டிருந்தது. ஆனால் இன்று அது தனிநபரின் தனிப்பட்ட செயற்பாடுகளையும் உள்வாங்கியுள்ளது.

அலென் லேகைன் குறிப்பிடுவது போல திட்டமிடல் என்பது எதிர்காலத்தை நிகழ் காலத்துக்கு கொண்டு வருதலாகும். அதாவது எதிர்காலத்தைப் பற்றி இப்போதே ஏதாவது செய்ய முயற்சிப்பதாகும். எனவே தற்போதைய நேரத்தின் மிகச் சிறந்த பயன் எது என்பதைத் தீர்மானிப்பதே நேரத்தை முகாமித்தல் என்பதன் பொருளாகும். எனவே முதலில் நேரத்தின் இயல்புகளை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**நேரத்தின் இயல்புகள்**

மனிதர்களின் மிகச் சிறந்த சொத்து நேரம் ஆகும். ஆனால் செலவழித்த நேரத்தை நாம் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாது. 'நேரம் பணத்துக்கு சமம்' (Time is Money) என பெஞ்சமின் பிராங்ளின் தன்னிடம் அறிவுரை கேட்ட இளைஞனான தொழின் முயற்சி யாளரிடம் குறிப்பிட்டார். ஆனால் நேரம் பணத்தை விட மேலானது. செலவழித்த பணத்தைத் திரும்பப் பெறக்கூடும். ஆனால் செலவழித்த நேரத்தை மீண்டும் பெறமுடியாது.

நேரம் எல்லார்க்கும் ஒரே அளவினதாகும். அதில் நெகிழ்ச்சிக்கு இடமில்லை. ஒரு மணித்தியாலத்தில் அறுபது வினாடிகள் என்பதை யாராலும் கூட்டிக் குறைக்க முடியாது. அத்துடன் நேரம் எல்லார்க்கும் பொதுவானது. அது எவருக்கும் பாரபட்சம் காட்டுவ தில்லை.

நேரத்தின் பெறுமதியை அதன் அளவைக் கொண்டு அளவிடமுடியாது. ஒரு வினாடி எவ்வளவு முக்கியமோ அதேபோல ஒரு வருடமும் முக்கியமானதுதான். நேரத்தின் பெறுமதி என்பது ஒரு தனிநபரின் இலக்கு, அந்த இலக்கைத் தவறவிடுவதால் அவருக்கு ஏற்படக்கூடிய இழப்புகள் ஆகியவற்றில் தங்கியுள்ளது. நேரத்தின் பெறுமதியை விளக்குவதற்கு பின்வருமாறு குறிப்பிடப்படுவதுண்டு:

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | : | இதன் பெறுமதியை வகுப்பில் சித்திபெறத் தவறிய மாணவனிடம் கேளுங்கள். |
| ஒரு மாதம் | : | தனது குழந்தையை ஒரு மாதத்துக்கு முன்னராகப் பிரசவித்து விட்ட தாயிடம் கேளுங்கள். |
| ஒரு நாள் | : | நாளாந்த கூலிக்கு பணிபுரியும் ஒரு தொழிலாளியிடம் கேளுங்கள். |
| ஒரு மணித்தியாலம் | : | சந்திப்புக்காகத் காத்திருக்கும் காதலரிடம் கேளுங்கள். |
| ஒரு நிமிடம் | : | ரயில் வண்டியைத் தவறவிட்ட பயணியிடம் கேளுங்கள் |
| ஒரு வினாடி | : | ஒரு பாரிய விபத்தை தவிர்த்துக் கொண்ட ஒரு நபரிடம் கேளுங்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மில்லி செக்கன் : ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கத்தைத் தவறவிட்ட ஓட்ட வீரனிடம் கேளுங்கள்.

மேற்குறித்த வசனங்கள் மிகவும் வேடிக்கையானவைகளாக இருந்த போதும் அவற்றில் அர்த்தம் பொதிந்துள்ளமை கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்தால் புரிந்துகொள்ளமுடியும். ஆகவே நேரத்தின் பெறுமதி என்பது நேரத்தின் அளவில் தங்கியிருப்பதில்லை: மாறாக எமது நோக்கத்தில், இலக்கில் தங்கியுள்ளது. ஒலிம்பிக் ஓட்டப் போட்டியில் ஒரு மில்லி செக்கனால் தனது தங்கப்பதக்கத்தைத் தவறவிட்ட ஓர் ஓட்டவீரன் திரும்பவும் அதனைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதற்கு இன்னும் நான்கு வருடங்கள் அல்லவா காத்திருக்க வேண்டும்?

### நேர விரயமாக்கிகள் (Time - wasters)

நேர முகாமைத்துவத்தில் நேர விரயமாக்கிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. எமது நேரத்தை நாமே விரயமாக்கிக் கொள்ளலாம். அல்லது எமது கட்டுப்பாட்டை மீறி வெளியாட்களால் எமது நேரம் விரயமாக்கப்படலாம். நேர விரயமாக்கிகளை நாம் (1) உள்ளக நேர விரயமாக்கிகள் (Internal Time - eaters)(2) வெளியக நேர விரயமாக்கிகள் (External Time - wasters) என வகைப்படுத்திக் கொள்ளமுடியும்.

பின்வருவன உள்ளக நேர விரயமாக்கிகளாகும்.

1. திட்டமிடலின்மை
2. தெளிவற்ற இலக்குகள்
3. முன்னுரிமை இல்லாமை
4. தாமதித்தல் / பின்போடுதல்
5. தீர்மானம் மேற்கொள்ளாமை
6. உடல் / உளச் சோர்வு
7. ஊக்கமின்மை
8. நீங்கள் பணிபுரியும் சூழலை (மேசை, அலுமாரி, அறை முதலிய) சீராக வைத்துக் கொள்ளாமை.
9. இல்லை / முடியாது எனக் கூறுவதற்கு தைரியமின்மை.

இந்தப் பட்டியலை இன்னும் நீட்டிக் கொண்டு போக முடியும். எனினும் கடைசி இரு விடயங்கள் எவ்வளவு முக்கியமான நேர விரயமாக்கிகள் என்பதை நீங்கள் அனுபவத்தில் கண்டறிந்திருப்பீர்கள். நீங்கள் பணிபுரியும் மேசை அல்லது உங்களது அலுமாரி, புத்தகத் தட்டுகள், உங்களது அறை ஆகியவற்றை சீராக ஒழுங்குபடுத்தி வைக்காவிட்டால் சில பொருட்கள், நூல்களினைத் தேடுவதிலேயே நீங்கள் பெருமளவு நேரத்தை வீணாக்க நேரலாம். இதனால்,உங்களது அலுவலகத்தில் அல்லது இல்லத்தில் ஏனையோருடன் பிரச்சினைகளும் மனஸ்தாபங்களும் கூட ஏற்படலாம். எனவே நீங்கள் பணிபுரியும் இடம்,மேசை முதலியவற்றை சீராக ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டும். இதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பானியரின் 5 எஸ் (5S) முறை உங்களுக்கு உதவியாக இருக்கலாம். இதேபோல ''முடியாது, இல்லை'' எனக் கூறுவதற்கு தைரியம் இல்லாமல் எல்லாவற்றையும் உங்களது தலைமீது சுமப்பதும் நேர விரயமாக அமையலாம். ''இல்லை'' அல்லது ''முடியாது'' எனக் கூறும்போது ஒரு நபர் பின்வருவனவற்றை ஏற்றுக் கொள்கிறார்.

1. என்னால் எல்லாவற்றையும் செய்யமுடியாது என்பதை உணர்கிறேன்.
2. குறிப்பிட்ட நேரத்தில் என்னால் முடிக்கமுடியாதவற்றை நான் ஏற்றுக் கொள்வதில்லை.
3. எனது இலக்குகளுடன் தொடர்பில்லாதவற்றை நான் ஏற்றுக் கொள்வதில்லை.

இனி வெளியாக நேர விரயமாக்கிகள் யாவை என நோக்குவோம்:

1. இடையூறுகள் (ஈ-மெயில், தொலைபேசி அழைப்புகள் முதலியவை)
2. அலுவலக / குடும்ப / சமூக செயற்பாடுகள்
3. அளவுக்கதிகமான கூட்டங்களில் பங்கேற்றல்
4. அழையாத விருந்தாளிகளின் வருகை
5. தெளிவற்ற இலக்குகள்
6. பொருத்தமற்ற / எதிர்மறையான பணிசார் சூழல்
7. மற்றவர்களுக்கு விளக்கமளித்துக் கொண்டிருத்தல்.
8. மற்றவர்களின் ஒத்துழைப்பைப் பெற முயற்சித்துக் கொண்டிருத்தல்.
9. அதிகாரக் கட்டமைப்புத் தடைகள் (சிவப்பு நாடாக்கள்)

இப்படியாக இன்னும் பலவற்றைக் கூறலாம். நீங்கள் கொஞ்சம் ஆழ்ந்து சிந்திப்பீர்களாயின் உங்களது உள்ளக, வெளியக நேரமாக்கிகளின் பட்டியலை நீங்களே தயாரித்துக் கொள்ளலாம். இந்த நேரவிரயமாக்கிகளின் எண்ணிக்கையை எந்தளவுக்கு உங்களால் குறைக்க முடியுமோ அந்தளவுக்கு உங்களது நேர முகாமைத்துவத்தின் விளைதிறனும் மேம்படும்.

**இலக்குகளை நிர்ணயித்தலும் அவற்றை முன்னுரிமைப்படுத்தலும்.**
**(Goal Setting and Prioritizing)**

நேரமுகாமைத்துவத்தின் விளைதிறன் இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் அவற்றை முன்னுரிமைப்படுத்தல் ஆகியவற்றில் தங்கியுள்ளது. இவற்றை சீரியமுறையில் செய்வதற்கு பல கருவிகள் முன்மொழியப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

**(அ) ஏபிசி பகுப்பாய்வு (ABC Analysis)**

ஏபிசி பகுப்பாய்வு என்பது நிறுவனங்களின் பணிகளை வகுதிப்படுத்துவதாகும். இவ் வகுதிகள் ஏ,பி அல்லது சி என சில பிராமணங்களின் அடிப்படையில் பெயரிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக:

ஏ - மிக முக்கியமானதும் அவசரமானதுமான பணிகள்

பி - முக்கியமான ஆனால் அவசரமற்ற பணிகள்

சி - முக்கியமற்றதும் அவசரமற்றதுமான பணிகள்.

இனி ஒவ்வொரு பகுதியிலும் உள்ள பணிகளும் கூட ஏ,பி,சி என முன்னுரிமைப் படுத்தப்படலாம். அத்துடன் இதில் ஏபிசி என்னும் மூன்று பகுதிகள் தான் இருக்க வேண்டுமென கட்டாயமும் இல்லை. இந்த ஏபிசி பகுப்பாய்வு பொதுவாக பரற்றோ பகுப்பாய்வுடன் இணைந்து பயன்படுத்தப்படுவதுண்டு.

**பரற்றோ பகுப்பாய்வு (Pareto Analysis)**

பரற்றோ என்னும் இத்தாலியரினால் அறிமுகம் செய்யப்பட்ட இக்கொள்கையின் படி 80 வீதமான பணிகள் 20 வீதமான நேரத்துக்குள் செய்து முடிக்கப்படலாம். மிகுதி 20 வீதமான பணிகள் 80 வீதமான நேரத்தை எடுக்கும். எனவே முக்கியமான பணிகளை முதலாவது பகுதிக்குள் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும்முக்கியமானதாகும்.

இந்த மூலதத்துவத்தை வேறு விடயங்களுக்கும் பயன்படுத்தமுடியும். அதாவது ஒரு நிறுவனத்தில் 80 வீதமான பணிகள் 20 வீதமான பணியாளர்களினால் நிறைவு செய்யப்படும், 20 வீதமான பணிகளை பூரணப்படுத்தி 80 வீதமான உற்பத்தித்திறனை அடையமுடியும். 80 வீதமான பெறுபேறுகள் 20 வீதமான செயற்பாடுகளிலேயே கிடைத்துவிடுகின்றன. இதன் பொருள் என்னவெனில் மிகமுக்கியமானவைகள் என்பன சிலவாகும். பெரும்பாலானவை முக்கியமானவைகள் அல்ல என்பதாகும். எனவே எவை முக்கியமானவைகள் என்பதைத் தீர்மானித்து அவற்றை முன்னுரிமைப்படுத்துவதிலேயே சிறந்த நேரமுகாமைத்துவம் தங்கியுள்ளது.

**POSEC முறை**

இலக்குகளை அல்லது செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி, சீர்ப்படுத்தி, சிக்கனப்படுத்தி, பங்களிப்பின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்துவதே மேற்படி நேரமுகாமைத்துவ முறையாகும் (Prioritizing by Organizing, Streamlining, Economizing and Contributing) ஒரு தனிநபரின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் அவரால் பொதுவான பொறுப்புகளைச் சிறப்பாக நிறைவேற்ற முடியும் என்ற எடுகோளின் அடிப்படையிலேயே இத்தகைய நேர முகாமைத்துவ முறை இயங்குகிறது. இது ஏபிரஹாம் மாஸ்லோவின் தேவைக்கோட்பாட்டை தளமாகக் கொண்டுள்ளது. (Hierarchy of Needs - Abraham Maslow) மேற்படி சுருக்கத்திலுள்ள (POSEC) எழுத்துகளின் விரிவாக்கம் பின்வருமாறு:

1. Priorizing **(முன்னுரிமைப்படுத்தல்)**: இலக்குகளையும் நேரத்தையும் முன்னுரிமைப் படுத்தல்.

2. Organizing **(ஒழுங்குபடுத்தல்)**: நீங்கள் வெற்றியடைவதற்கு அவசியமானவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளல் (குடும்பமும் நிதியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. Streamling **(சீர்ப்படுத்துதல்)**: உங்களுக்கு செய்வதற்கு விருப்பமில்லா விட்டாலும் கட்டாயம் செய்ய வேண்டியவேலைகளை செய்தல் (அலுவலகப் பணிகளுக்கிடையில் வீட்டில் செய்யவேண்டிய பணிகளையும் செய்தல்)

4. Economizing **(சிக்கனப்படுத்தல்)**: நீங்கள் செய்ய விரும்புபவைகள் ஆனால் அவசர மற்றவைகளை - பொழுதுபோக்குகள், விளையாட்டுகள் முதலியன - மேற்கொள்ளல்.

5. Contributing **(பங்களிப்பு செய்பவை)**: உங்களது கௌரவம், மகிழ்ச்சி போன்றவற்றுக்கு பங்களிப்பு செய்யும் சமூகக் கடப்பாடுகளை மேற்கொள்ளல்.

**நேரமுகாமைத்துவ சதுரங்கள்** (Time Management Quadrants)

ஸ்ரீபன் கொவி (Stephen R.Covey) என்னும் முகாமைத்துவ அறிஞர் பணிகளை முதன்மைப் படுத்துவது தொடர்பான நேரமுகாமைத்துவ சதுரங்களின் முன்வைத்தார். இதிலுள்ள நான்கு சதுரங்களும் முக்கியமானவை, முக்கியமற்றவை, அவசரமானவை, அவசர மற்றவை என்ற அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அதன் கீழே உள்ள உருவம் காட்டுகிறது.

**நேரமுகாமைத்துவ சதுரங்கள்**

| | அவசரமானவை | அவசரமற்றவை |
|---|---|---|
| முக்கியமானவை | I<br>- நெருக்கடிகள்<br>- முடிவுத்திகதி நெருங்கியவை<br>- கூட்டங்களுக்கு தயாரிப்பு<br>- தீர்க்கவேண்டிய பிரச்சினைகள் முதலியவை | II<br>- திட்டமிடல்<br>- தயாரிப்புகள்<br>- உறவுகளை கட்டி எழுப்புதல்<br>- தடுத்து வைத்தல் முதலியவை |
| முக்கியமற்றவை | III<br>- சில தொலைபேசி அழைப்புகள்<br>- சில ஈ.மெயில்கள்<br>- சில பொழுதுபோக்குகள்<br>- சில விளையாட்டுக்கள் முதலியவை | IV<br>- தேவையற்ற தொலைபேசி அழைப்புகள்<br>- தேவையற்ற ஈ-மெயில்<br>- தேவையற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் முதலியவை |

கோவியின் கருத்துப்படி வெற்றிகரமான மனிதர்கள். தமது நேரத்தை சதுரம் III மற்றும் IV இல் செலவழிக்க மாட்டார்கள். அவர்களது தமது நேரத்தின் பெரும்பகுதியை சதுரம் II இல் பயன்படுத்துவர். எந்தநேரமும் அவசரமான (I) காரியங்களில் கவனம் செலுத்துதல் ஒருவரது விளைதிறனை குறைத்துவிடும். சதுரம் II இல் உள்ள செயற்பாடுகள் உயர் தரமானவை. ஒருவர் அவற்றில் கூடிய கவனம் செலுத்தும் போது அவரது வாழ்க்கையில் உடன்பாடான மாற்றங்கள் ஏற்படும். வாழ்க்கையில் தரிசனநோக்கு, சமநிலை, கட்டொழுங்கு மற்றும் கட்டுப்பாடு ஏற்படுவதற்கு அடிப்படையானது சதுரம் II உள்ள செயற்பாடுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பத்துப்படி நேரமுகாமைத்துவம்** (Ten step Time Management)

சிறந்த நேர முகாமைத்துவத்துக்கான பல்வேறு வழிமுறைகள் உள்ளன. பின்வரும் பத்துப்படிகள் உங்களது நேரத்தை பயனுள்ள முறையில் ஒழுங்குபடுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

1. பொருத்தமற்ற பழக்கங்களை கைவிடல்
2. வினைத்திறனுடனான திட்டமிடல்
3. ஒவ்வொரு நாளையும் முன்னதாகவே திட்டமிடல்
4. தினசரி திட்டத்தில் பணிகளை வரிசைப்படுத்தல்
5. துண்டம் துண்டமாக வகுதிப்படுத்தல் (Block Sheduling)
   (உ-ம் : அதிகாலை / மத்தியானம் / பிற்பகல் / மாலை)
6. உங்களது கலண்டரில் இந்த துண்டங்களைக் குறித்தல்.
7. ஒவ்வொரு பணிக்குமான நேரத்தைக் குறித்தல்.
8. முன்னுரிமைப்படுத்தல் இலக்குகளை குவிமையப்படுத்தலும்
9. கவனக்கலைப்பான்களைக் குறைத்துவிடல்.
10. இடைக்கிடையே ஓய்வெடுத்துக் கொள்ளல்.

**முடிவுரை**

நேரமுகாமைத்துவம் என்பது தனியாள் வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. எனவே நேரமுகாமைத்துவம் இப்படித்தான் இருக்க வேண்டும் என ஒரு பொதுவான அமைப்பினைத் தருவது பொருத்தமானதல்ல. நேர முகாமைத்துவப்பாங்கு என்பது ஒருவர்க்கொருவர் மாறுபடலாம். தனது செயற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை மேம்படுத்திக் கொள்ள நேரத்தை எவ்வளவு வெற்றிகரமாக ஒருவர் பயன்படுத்திக் கொள்கிறார் என்பதிலேயே அவரது நேரமுகாமைத்துவத்தின் பெறுபேறு தங்கியுள்ளது. எனினும் தனது நேரமுகாமைத்துவப் பாங்கினையும் அதன் பெறுபேற்றையும் கிரமமாக மீளாய்வுக்கு உட்படுத்தி அதன் அடிப்படையில் தனது நேரமுகாமைத்துவப் பாங்கினை மாற்றியமைத்துக் கொள்ளுதல் ஒருவரது வெற்றியை உறுதிப்படுத்த முக்கியமானது. அத்துடன் தனது நேரத்தை விரயமாக்கும் காரணிகளை அடையாளம் கண்டு அவற்றை கூடுமானவகையில் குறைத்துக் கொள்வதும் ஒருவர்க்கு முக்கியமானதே. இவற்றை எவ்வாறு மேற்கொள்வது என்பதற்கு தனிப்பட்ட அனுபவங்களே அடிப்படையாக அமையும். அத்துடன் நேர முகாமைத்துவம் தொடர்பான கோட்பாடுகளும் உதவியாக அமையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக விருத்தியில் ஆசிரியர்களின் வகிபங்குகள்

**கலாநிதி சசிகலா குகமூர்த்தி**
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்விப்பீடம்,இலங்கை திறந்த பல்கலைக்கழம்

## அறிமுகம்

மனிதன் தனது வாழ்க்கையை வளப்படுத்துவதற்கு தனது ஆற்றலையும் சிறப்புத் தேர்ச்சி களையும் முழுமையாக வளர்த்துக்கொள்வதுடன் அவற்றைப் பயன்படுத்தும்வகையில் செயலாற்றுதலும் வேண்டும். வளர்ச்சிபெற்ற தனிமனிதர்களது கூட்டுமுயற்சியினால்தான் ஒரு சமூகம் முன்னேற்றகரமான பாதையிற் பயணிக்க முடியும். அதேநேரம் ஒரு நல்ல சமூகச் சூழ்நிலையில்தான் மனிதர்கள் தம்மை வளப்படுத்தியும்கொள்ளலாம். இந்த இரண்டு இணை இலக்குகளும் அடையப்படுவதற்கு நன்கு திட்டமிடப்பட்ட கல்வி முறைமைகளும், இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சிறந்த கல்விசார் வளவாளர் களும் அவசியம்.

ஒரு சமூகத்தினை சரியான பாதையில் வழிநடத்துவதில் பங்களிப்புச்செய்கின்ற பலவேறு துறையினரோடு ஒப்பிடுகின்ற பொழுது ஒரு சமூகத்தை சரியான முறையில் கட்டியெழுப்புகிற பாரிய பொறுப்பு ஆசியர்களுக்கு உரியதாகும். இதனாலேயே ஆசிரியர் ஒரு சமூகப் பொறியியலாளர் (Social Engineer) எனக் குறிப்பிடப்படுகின்றார். திட்டமிடப் பட்ட எந்தவொரு கல்விமுறைமையின் வெற்றிக்கும் நல்லாசிரியர்களும் அவர்களது சிறந்த தொழில் மனப்பாங்குகளும் இன்றியமையாதவை. காலத்தின் மாற்றத்திற்கும் தேவைக்கும் ஏற்றவகையில் கடமைகளைப் பொறுப்புணர்வுடன் ஏற்றுக்கொள்வதும், இவற்றுக்கு அமைவாக தமது வகிபங்குகளை பொருத்தமான முறையில் மாற்றியமைத்துக் கொள்வதும் அவசியம். இந்தவகையிலே இக்கட்டுரை ஒரு சமூகத்தின் மேம்பாட்டிற்காக ஆசிரியர்கள் ஆற்றவேண்டிய வகிபங்குகளையும் அவற்றின் முக்கியத்துவத்தினையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

## மனிதவிருத்திக்கான கல்வி

தேசிய கல்வி ஆணைக்குழு (2003) இலங்கையின் பொதுக்கல்விபற்றிய தேசிய கொள்கைச் சட்டகமொன்றுக்கான ஆலோசனைகளில் மனிதவிருத்திக்கான கல்விபற்றிய தொலைநோக்கு தொடர்பாகக் குறிப்பிடுகையில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடானது தனித்து அறிவைப் புகட்டுவதோடு நின்றுவிடாது, ஒருவர் தனது தனிப்பட்ட வாழ்க்கையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறம்பட நடத்துவதற்கான திறன்களின் விருத்திக்கும் சமூகம்சார்ந்த பொதுத்திறன்களின் விருத்திக்கும் உதவுதல் வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது. கற்றல்-கற்பித்தல் செயற்பாடானது தனிநபர் விருத்திக்கான அடிப்படைத் திறன்களோடு உயர் அறிகைத் திறன்களின் (Higher Order Cognitive Skills) விருத்தியிலும் கவனம் செலுத்த வேண்டும். அவையாவன,

- திறனாய்வுச் சிந்தனை
- விரிந்த சிந்தனை
- ஆக்கத்திறன்
- சுயமுயற்சி
- சுயதேடல்
- தலைமைத்துவம்
- பிரச்சினை தீர்த்தல்
- தீர்மானம் மேற்கொள்ளல்
- வினைத்திறன்மிக்க தொடர்பாடல்
- பொறுப்புணர்வு
- அர்ப்பணிப்பு
- அணியாகச் செயற்படுதல்

தனிநபர் விருத்திக்கான திறன்களோடு சமூகம்சார்ந்த திறன்களும் விருத்திசெய்யப்படல் வேண்டும். சமூகத்தின் விருத்திநோக்கிய நகர்விற்காக மாணவர் மத்தியில் பல்வேறு விழுமியங்கள், நியாயத்தன்மைசார்ந்த அறிவு, திறன், மனப்பாங்குகளை வளர்த்தல் வேண்டும். இதற்காகப் பின்வரும் விடயங்களில் ஆசிரியர் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

- மனித விழுமியங்களின் மேம்பாடு
- ஒழுக்க நியமங்கள்
- சமய விழுமியங்கள்
- சனநாயக விழுமியங்கள்
- தேசிய ஒருமைப்பாடு
- சமூக நியாயத்தன்மை
- பால்நிலைசார் நியாயத்தன்மை

ஒரு குழந்தையின் முன்னேற்றத்தில் பங்களிப்புச்செய்யும் உரித்தாளர்களில் ஆசிரியர்களும் அவர்களது வகிபங்குகளும் மிகமுக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்தவகையிலே ஆசிரியர் ஒருவர் சில முக்கியமான வகிபங்குகளில் தனது கவனத்தைச் செலுத்தவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டை முகாமை செய்பவர்

ஆசிரியர் ஒருவர் கற்றல்-கற்பித்தல் செயன்முறையை சிறந்த முறையில் முகாமை செய்பவராகத் தொழிற்பட வேண்டும். கற்றல்-கற்பித்தல் செயன்முறை சிறப்பாக இடம் பெறுவதற்கு நல்ல கவின்நிலையான சூழல் இருத்தல் வேண்டும். நல்ல கவின் நிலையான சூழலை உருவாக்குவதன் வெற்றி ஆசிரியரின் சிறந்த முகாமைத்துவச் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. 'கற்றல் முகாமைத்துவம்' என்ற பணியானது திட்டமிடல், ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய நான்கு முக்கிய படிமுறைகளை உள்ளடக்கியது. இவ் நான்கு படிமுறைகளையும் பின்பற்றி ஆசிரியர் சிறந்த முகாமையாளராக செயற்படின் பின்வருவனவற்றை அவரால் அடையமுடியும்.

- விளைதிறன்மிக்க தொடர்பாடல் நிலையை உருவாக்கல்.
- கல்விக்கான வளங்களில் இருந்து உச்சப்பயனை அடையச்செய்தல்.
- கற்பித்தல் கற்றல் செயற்பாட்டை நல்லமுறையில் ஒழுங்கமைத்தல்.
- முரண்பாடுகளைத் தவிர்த்து கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை நல்லமுறையில் ஒழுங்கமைப்பதற்கான சூழலை உருவாக்கல், பராமரித்தல்.
- கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் நோக்கத்தை நிறைவேற்றல்.
- ஆசிரியர்-மாணவருக்கு இடையிலான சிறந்த இடைவினை உறவைப் பராமரித்தல்.
- சமூகத்தினதும் சமூக நிறுவனங்களினதும் உதவியைப்பெறும் வகையில் இணைப்பை ஏற்படுத்தல்.

### சமூகப் பொறியியலாளர்

சமூகத்தைச் சீரிய முறையில் கட்டியெழுப்புதல் ஆசிரியரின் மிகமுக்கிய பொறுப்பாகும். சமூக ஒற்றுமையை வளர்த்தெடுக்கும் வகிபங்கு காலத்தின் தேவையாகும். ஆசிரியர் கல்வியைச் சமூகத்தில் வேரூன்றி இருக்கும் பிரச்சினைகளை நீக்குவதற்குரிய ஒரு கருவியாகக் கல்வியைப் பயன்படுத்த வேண்டுமென்பது இவ் வகிபங்கின் கீழ் எதிர் பார்க்கப்படும் தொழிற்பாடாகும். கல்வி, பாடசாலை, ஆசிரியர் ஆகிய மூன்றும் இணைந்து தனிநபர்களின் நடத்தைசார் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற பொழுது அது சமூகப்பிரச்சி னைகளையும் தீர்க்குமென்பது சமூகத்தின் நம்பிக்கையாகும். ஆசிரியர் தான் வாழும் சமூகத்தை சீரழிக்கும் சவால்களை இனங்கண்டு அவற்றைத் தீர்க்கும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை சமூகத்தின் தேவைகருதி ஒழுங்கமைத்தல் வேண்டும். ஆசிரியர் சமூகக் கட்டமைப்பைச் சீர்செய்பவர் என்ற வகிபங்கின் கீழ் சமகால ஆசிரியர் ஒருவர் பின்வரும் வழிகளில் தான் வாழும் சமூகத்தை விளங்கிக்கொள்வதுடன் மாணவர்களையும் வழிப் படுத்தல் வேண்டும்.

- சமூகத்தின் உயர்வான ஒழுக்கநெறிகள்.
- சமூகத்தின் சரியான விழுமியங்களைக் கடைப்பிடித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமூகத்தின் இயலுமைகளை அதிகரிப்பதற்கான வழிவகைகள்.
- சமூகத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வளங்கள்.
- சமூகத்தின் புலமைப்பேற்றின் நிலை.
- சமூகச் சூழமைவுகள்.
- சமூகத்தின் நெருக்கமான உறவுநிலை.
- சமூகத்தின் பிரச்சினைகள், முரண்பாடுகள் என்பவற்றை தீர்ப்பதற்கான வழி வகைகள்.
- சமூகத்தின் அபிவிருத்திக்கான வழிவகைகள்.
- சமூகத்தின் வளர்ச்சியை விரும்புதல்.

**சூழற் பாதுகாவலர்**

இன்றைய உலகம் எதிர்நோக்கும் சூழற் பிரச்சினைகள் தொடர்பான சவால்களை எதிர் நோக்கக்கூடிய ஆற்றலுள்ள சமூகத்தை உருவாக்குதல் ஆசிரியரின் கடமையாகும். ஆசிரியர் சூழற் பாதுகாவலர் என்ற வகிபங்கின் கீழ் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியவராக உள்ளார்.

- சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- சூழற் பாதுகாப்பு தொடர்பான நல்ல மனப்பாங்கினை வளர்த்தல்.
- சூழல்மாசடைதலைத் தவிர்க்கும் வகையிலான நடத்தைகளை ஊக்குவித்தல்.
- பாடசாலை மற்றும் அயற் சூழலை சுத்தமாகவும் பசுமைநிறைந்ததாகவும் வைத்திருப்பதில் உற்சாகமாக ஈடுபடல்.
- இயற்கையை நேசிக்கின்ற மனப்பாங்கு உடையவர்களாக மாணவர்களை உருவாக்கல்.
- சமூகத்தில் ஒரு முன்மாதிரியாக நடத்தல்.

**நல்ல குணவியல்புகளை கட்டியெழுப்புபவர்**

மாணவர்களின் ஒழுக்கவிருத்திக்காக பாடசாலை மேற்கொள்கின்ற முயற்சியின் வெற்றி யானது ஆசிரியரின் கையிலேயே தங்கியுள்ளது எனலாம். ஆசிரியர் சுய ஒழுக்கமுள்ள நடத்தைகளை உடையவராக தன்னை மாணவர்கள் மத்தியில் ஒரு எடுத்துக்காட்டாக செயற்படுகின்ற வகிபங்கு மிகமுக்கியமானதாகும். ஆசிரியர் ஒழுக்கம்சார்ந்த நடத்தை களைப் பின்வரும் வழிமுறைகளைக் கையாண்டு உருவாக்கலாம்.

- ஒழுக்கவிழுமியங்களைப் பின்பற்றுதல்.
- குழுமுயற்சியை தூண்டும்வகையில் பொருத்தமான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அன்பு, கருணை, நேர்மை, நீதி, சமாதானம் போன்ற மனிதப்பண்புகளை விருத்திசெய்யும் வகையில் குழுச்செயற்பாடுகளை உருவாக்கல்.
- ஒற்றுமை உணர்வை வளர்க்கும் வகையில் கூட்டுறவுக்கற்றலை உருவாக்கல்.

**தேசத்தை கட்டியெழுப்புபவர்**

'தேசத்தை கட்டியெழுப்புவர்கள் ஆசிரியர்கள்' என்ற கூற்றிற்கு அமைய பல்லினமக்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் இனப்பற்றை வளர்த்து ஒருமுகப்பட்ட நோக்கில் நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான இளையோர் சமூகத்தை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்குரியதாகும். ஆசிரியர் பின்வரும் வழிகளில் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக செயற்படமுடியும்.

- நாட்டின் வரலாற்று நிகழ்வுகளை அறியச்செய்தல்.
- தேசிய ஒற்றுமையை வளர்க்கும் வகையிலான நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல்.
- ஆசிரியர் பக்கச்சார்பற்றவராகவும் பரந்தமனப்பாங்கு உடையவராகவும் நடத்தல்.
- பிறந்த நாட்டை நேசிக்கின்ற மனப்பாங்கை உருவாக்கல்.
- நாட்டின் வளங்களை பாதுகாக்கும் மனப்பாங்கை உருவாக்கல்.
- ஒரு நாட்டில் மனிதவளத்தின் முக்கியத்துவத்தை உணரச்செய்தல்.
- தலைமைத்துவப் பண்பை வளர்த்தல்

**முடிவுரை**

''நாளைய உலகம் இன்றைய பள்ளிகளில் உருவாக்கப்படுகின்றது'' என்ற தத்துவத்தை மதித்து நாட்டினைக் கட்டியெழுப்புகின்ற தூண்களாக ஆசிரியர்கள் செயற்படுதல் வேண்டும். நாட்டினைக் கட்டியெழுப்புவதற்காக ஆற்றவேண்டிய வகிபங்குகளை, பாடத்திட்டம், பாடநூல்கள், அறிவுரைப்பு வழிகாட்டிகள் போன்ற கற்றல் சாதனங்களைப் பயன்படுத்தி திட்டமிடுகின்ற கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளினால் மட்டும் நிறைவேற்ற முடியாது. சமூகத்தைச் சரியான பாதையில் கட்டியெழுப்புவதற்காகத் தேவைப்படும் விழிப்புணர் வினை சமூகம் ஏக்கத்துடன் எதிபார்த்து நிற்கின்றது என்பதை ஆசிரியர்கள் உணர்தல் வேண்டும். சமூகத்தின் ஏக்கத்தை தணிப்பதற்காக சமூகத்தை சீரழிக்கின்ற காரணிகளை இனங்கண்டு அவற்றை நீக்கும்வகையில் ஆசிரியர்கள் செயற்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கல்வியில் அழகியற் கல்வியின் முக்கியத்துவமும் ஆளுமை வளர்ச்சியில் அதன் பங்கும்

**கலாநிதி மீரா வில்லவராயர்**

ஆளுமை பற்றிய பல்வேறு வரைவிலக்கணங்கள் இருந்தபோதிலும் ஒருவனுடைய நடத்தைகளின் முழு அமைப்பே ஆளுமை எனக்கொள்ளலாம். ஒருவன் பிறரில் கொண்ட செல்வாக்கு அவனது ஆளுமையைப் பொறுத்ததாக அமைகின்றது. சூழலுடன் பொருத்தப் பாடு பெறுவதைத் தீர்மானிக்கும் உள்ளார்ந்த அமைப்பே ஆளுமையாகும். ஒருவனிடம் வெளிப்படையாகக் காணப்படும் விருப்புகள், வெறுப்புகள், உணர்வுகள், மனவெழுச்சி கள், திறமைகள், சமூக நடத்தைகள், மனப்பான்மை என்பனவற்றின் முழுமையான இயல்பே ஆளுமை எனவும் கூறலாம்.

பாடசாலைக் கல்வியின் நோக்கங்களுள் ஆளுமை வளர்ச்சி மிக முக்கியமான நோக்கமாகக் கருதப்படுகிறது. சமநிலையான ஆளுமையை மாணவரிடையே உருவாக்கு வதற்கு தனி ஆளின் அறிதல் ஆட்சி, எழுச்சி ஆட்சி, உள இயக்க ஆட்சி என்பனவற்றின் வளர்ச்சி அவசியமாகும். குறிப்பாக எழுச்சி ஆட்சி விருத்திக்கு அழகியற்பாடங்களாகிய சங்கீதம், நடனம். சித்திரம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைக் கற்றல் அவசியமாகும். அவ்வகையில் ஒவ்வொரு மாணவனது ஆளுமை வளர்ச்சியிலும் அழகியற் பாடங்கள் பெரும் பங்கினை வகிக்கின்றன.

ஆதலினாலேயே இப்பாடங்களில் ஒரு பாடத்தினையேனும் மாணவர் கற்க வேண்டு மென பாடசாலைக் கலைத்திட்டத்தில் 1972ஆம் ஆண்டு அழகியற்கல்வி கட்டாய பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் அழகியற் பாடங்களைக் கற்பதன் மூலம் நன்மனப்பாங்கு சிறுவயதிலேயே விருத்தியாகி பிற்காலத்தில் நற்பிரசையாக வாழ இப்பாடங்கள் வழி கோலுகின்றன. அழகியற் பாடத்திட்டத்தின் நோக்கங்களுள் அறிவு, திறன், மனப் பாங்கு, விழுமியங்கள் அமையப்பெற்று சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல் முக்கிய மான நோக்கமாகக் கருதப்படுகிறது.

'சிறந்ததொரு மனிதனும் சமூகமும் அழகியற் பாடங்களைக் கற்பதனால் உருவாகின்றது' (A better man and a better society result by the promotion of the study of fine Arts)

நாம் கற்பவைகளை பொதுவாக கலைகள் என்றும் சாஸ்திரங்கள் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். கலை என்பது மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் பண்பட்ட அடையாளங்களாகும். இக்கலை உணர்வு மனிதனிடம் இயற்கையாகவே காணப்படு கின்றது. கலைகளை மேலும் சாமான்ய கலைகள் என்றும் லலித கலைகள் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிக்கலாம். லலித கலைகள் நம்முடைய உள்ளத்தைத் தொட்டு மேலான உணர்ச்சியையும் கலை. இன்பத்தையும் உண்டாக்கி நம்மை பரவசப்படுத்தும் தன்மை வாய்ந்தது. அத்தகைய கலைகளுள் இசை, நடனம், ஓவியம் போன்ற கலைகள் முக்கிய கலைகளாகக் கருதப்படுகின்றன.

சமூகத்திற்கு நன்மை பயக்கும் ஒருவராக வாழவேண்டுமாயின் அவனிடத்தில் சிறந்த மனப்பாங்குகள் வளர்ச்சி பெறவேண்டும். அத்தகைய மனப்பாங்கு சிறுவயதி லிருந்தே படிப்படியாக வளர்ச்சியுற வேண்டும். கருணை, அன்பு, பக்தி, அகிம்சை போன்ற குணப்பண்புகளை மாணவரின் உள்ளங்களில் விருத்தி செய்வதற்கு அழகியற் பாடங்கள் பெரிதும் துணை புரிகின்றன.

மாணவரின் மனவெழுச்சி வளர்ச்சிக்கும் அழகியற்கல்வி ஒரு தூண்டுகோலாக அமைகின்றது. பயன்மிக்கதோர் ஊடகத்தின் மூலம் மனவெழுச்சிகளை வெளியிடும் சந்தர்ப்பமும் அழகியற்கல்வி மூலம் ஏற்படுகிறது. குரோதம், பகைமை போன்ற தீய குணங்களை நீக்கி தர்ம சிந்தை மிக்க பிரசைகளை உருவாக்கும் ஆற்றல் கலைக்கல்விக்கு நிச்சயம் உண்டு. இசை, நடனம் போன்ற கலைகள் தெய்வீகக் கலைகளாகக் கருதப்படு கின்றன. சிவபெருமான் கையில் தமருகமும் கண்ணபிரான் கையில் குழலும் சரஸ்வதி தேவியின் கையில் வீணையும் இருப்பதிலிருந்து இசையின் தெய்வீகத் தன்மை புலனா கின்றது. நடராஜப் பெருமானே ஆடற்கலையின் கடவுளாகக் கருதப்படுகிறார். இக்கலை களை சிறுவயதிலிருந்தே கற்பதன் மூலம் ஆன்மீக உணர்வு, பக்தி உணர்வு என்பன மாணவரிடையே ஏற்படுகின்றது.

அழகியற் கல்வியினூடாக மாணவரிடையே நயத்தல் திறன், ஆக்கத்திறன் போன்ற ஆற்றல்கள் விருத்தியடையும்போது சாந்தம், மனக்கட்டுப்பாடு, குழுவாக இயங்கும் தன்மை போன்ற குணவியல்புகள் விருத்தியாகின்றன. இரசனை உணர்வு மிக்க அவர்களது புலன்களும் கட்டுப்பாட்டிற்குட்பட்டவையாக மாறும். மனித குல அபிவிருத்திக்கு இத்தகைய மனநிலை யாவரிடமும் வளர்ச்சியுறுதல் அவசியமாகும்.

நல்லொழுக்க பண்புகளை விருத்தி செய்ய அழகியற்கல்வி பெருந்தூண்டுகோலாக அமைவதோடு அக்கல்வியினூடாக உயர் இரசனைக்கு பழக்கப்படும் ஒருவர் சமூகத்தின் நலனுக்கு மதிப்பளித்து பங்களிப்பர். கலைப்பாடங்களினூடாக தனது கலாசார சிறப்பினை அறிவதோடு நம்நாட்டின் ஏனைய கலாசாரங்களை அறிந்து மதிக்கும் பண்பினையும் அடைவர். விழுமியங்களை மதித்து நடப்பதற்கு பழகிக்கொள்வர். கலையானது இனம், மொழி, தேசம், சமயம் யாவற்றிற்கும் அப்பாற்பட்டது. கலைஞன் ஒருவன் ஒரு கலை ஆக்கத்தை எவ்வித வேறுபாடின்றியும் இரசிக்கிறான். இதனால் தேசிய ஒருமைப்பாடு வளர்கின்றது. பாடசாலைகளில் அழகியற் பாடங்களைக் கற்பிப்பதன் பிரதான நோக்கங் களுள் இதுவுமொன்றாகும்.

அழகியற் கல்வி கற்கும் ஒருவர் பரந்த கலாசாரப்பரிமாணங்களுடனும் கலை ஆக்கங்களுடனும் தொடர்பு கொள்வர். இதனால் பரந்த மனப்பான்மை அவர்களிடம் விருத்தியாகின்றது. ஒருவனது ஆளுமை வளர்ச்சிக்கு கலை எவ்வாறு அத்திவாரமாக அமைகின்றதோ அவ்வாறே தமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிப்பதற்கும் அழகியற் கலைகள் பெரிதும் துணை புரிகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையிலும் அறிவுடமையுடனும் செலவு செய்வதற்கு அழகியற் பாடங்கள் காரணமாகின்றன. தனித்தேனும் ஒருங்கு கூடியேனும் மகிழ்வெய்தக் கூடிய சமூகத்திற்கும் நன்மை பயக்கக் கூடிய ஒரு ஊடகம் அழகியலாகும்'

என அரிஸ்டோட்டல் கூறுகின்றார்.

உணர்திறனை விருத்தி செய்வதற்கும் அழகியற்கல்வி வழிகோலுகின்றது. எக்கலை கற்பதற்கும் புலன்கள் சீராக இயங்க வேண்டும்.

*"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம். -அச்செல்வம்*
*செல்வத்து ளெல்லாம் தலை"*

என வள்ளுவப் பெருந்தகை செவிச்செல்வத்தைப் பற்றி கூறுகின்றார். நல்ல சங்கீதத்தை நாம் அடிக்கடி கேட்பதனால் உட்காதிலுள்ள துல்லியமான நரம்புகளுக்கு உணர்ச்சி உண்டாகி அதன்மூலம் தெய்வீக உணர்வு நமக்கு ஏற்படும். அவ்வாறே நடனம், சித்திரம், நாடகம் போன்ற பாடங்களைக் கற்பதற்கும் விரல்கள், கண், வாய் போன்ற அவயங்கள் சரியான முறையில் பயிற்சி பெற வேண்டும். அழகியற் பாடங்களைக் கற்பதன் மூலமே எமது அவயவங்கள் முழுப்பயனையும் பெறுகின்றன. சிறுவயது முதல் சூழலில் நிகழும் சம்பவங்களை அவதானிக்கப் பழகிக் கொள்வதன் மூலம் புலன்கள் கூர்மை அடைகின்றன. அழகியற் பாடங்களைக் கற்பதற்கு புலன்கள் சரியான முறையில் இயங்க வேண்டும். புலன்களின் சீரிய இயக்கம் ஒருவனது ஆளுமை வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றது.

மாணவரது ஆளுமை வளர்ச்சிக்கு அழகியற்கல்வி பெரிதும் உதவுவது போல கல்விப்பரப்பில் வேறுவிடயங்களோடும் அழகியற்கல்வி தொடர்புடையது. உதாரணமாக சங்கீத பாடத்தை எடுத்துக் கொண்டால் சமயம், மொழி, கணிதம், புவியியல், பௌதிகவியல் போன்ற பாடங்களோடு சங்கீதம் தொடர்புடையது. பூரணமான கல்விக்கும் சிறந்த கல்வி வளர்ச்சிக்கும் அழகியற்கல்வி இன்றியமையாததாகும்.

**துணை நூற்பட்டியல்**

1. சபா ஜெயராசா (2008), *இசையும் சமூகமும்*, சேமமடு பதிப்பகம், கொழும்பு - 11.

2. சீபல் ஜெயக்கொடி, டபிள்யு.ஏ.பீ., நிர்மலா பியதாஸ (1989), *அழகியற் பாடத்தைக் கற்பித்தல்*, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

3. முத்துலிங்கம், ச. (2002), *கல்வியும் உளவியலும்*, லங்கா புத்தகசாலை, கொழும்பு - 12.

4. விமலா கிருஷ்ணபிள்ளை (2001), *வழிகாட்டலும் ஆலோசனையும்*, விமலா கிருஷ்ணபிள்ளை, கொழும்பு - 3.

5. ஸாம்பமூர்த்தி, பி. (2006), *கர்னாடக ஸங்கீத புஸ்தகம் முதற்பாகம்* (இருபத்தொன்றாம் பதிப்பு) The Indian Music Publishing House, Chennai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு ஏற்படும் கற்றல் இயலாமை [LD]

## ஓர் நோக்கு

Dr. K. Kajavinthan
Senior Lecturer in Psychology
Department of Philosophy, University of Jaffna

கற்றல் இயலாமை (Learning Disability) என்பது, குழந்தைகள் சிலருக்கு எந்த ஒரு விஷயத்தையும் புரிந்து கொள்ளத்தெரியாததுடன் தெரிந்த விஷயத்தை ஒன்றுடன் ஒன்று சேர்த்து புரிந்து கொள்வதில் உள்ள பிரச்சினையாகும். மூளை கட்டமைப்பில் உள்ள பிரச்சினை தான் காரணம். இந்தப் பிரச்சினைக்கு உள்ளான குழந்தைகள், திறமைசாலியாக இருப்பர் சில குழந்தைகள் திறமை குறைவாக இருப்பர். படிக்கும் போதும், எழுதும் போதும், அப்படிக் கற்ற விஷயத்தை, மீண்டும் சோதித்துப் பார்க்கும் போது, முடியாத நிலை தான் கற்றல் இயலாமை. இதனால் தான் தேர்வுகளில் இப்படிப்பட்ட குழந்தைகள் தொடர்ந்து தோல்வி அடைகின்றனர். படித்தறிவதில், பல விஷயங்கள் இருக்கின்றன. படித்ததை எழுதத் தெரிவது, பகுத்தறிவது, நினைவில் பதிந்துக் கொள்வது போன்றவை எல்லாம் படிப்பறிதல் சார்ந்தவை. நுண்ணியமாக பல வகை கற்றல் இயலாமைகள் உள்ளன.

1. **டிஸ்லெக்சியா (Dyslexia)** : கற்றல் இயலாமைகளில் பொதுவானது இது. இந்த வகை பிரச்சினை உள்ளவர்களுக்கு பெரும்பாலும் மொழிப்பிரச்சினை தான் ஏற்படும். இந்த பிரச்சினை உள்ள குழந்தைகளுக்கு பொதுவாக வார்த்தைகளைக் தலைகீழாகத் தான் பேச வரும்.சில வார்த்தைகளை அழுத்தி உச்சரிப்பர் சில வார்த்தைகளை லேசாக உச்சரிப்பர்.

2. **டிஸ்கால்குலியா** : கணிதத்தில் மந்தமாக இருப்பது தான் இந்த பிரச்சினை. கூட்டல், கழித்தல் போன்றவை கூட இந்த வகைக் குழந்தைகளுக்குப் பிரச்சினையாக இருக்கும். எண்களில் அடிக்கடி குழப்பம் வரும்.

3. **டிஸ்கிராபியா:** நான்கு வார்த்தைகளை கூட சரியாக எழுதத்தெரியாது உருவத்தையும் மாற்றி, மாற்றி எழுதுவர். தெளிவாகவே இருக்காது. இதுபோல, இந்த வார்த்தைகளை உச்சரிக்கும் போதும் சரியாக இருக்காது. விஷயத்தை உள்வாங்குவதிலும் இந்த பாதிப்புள்ளவர்கள் மிகவும் கஷ்டப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **டிஸ்ப்ராக்சியா:** பொதுவாக எந்த ஒரு வஷயத்தையும் சொல்லும் போது, உடலில் அசைவுகள் யாருக்கும் காணப்படும். உதாரணமாக தலையசைப்பது, கையை அசைப்பது போன்றவையும் சொல்லும் வார்த்தைகளோடு இணைந்து இருக்கும். அப்படிப்பட்ட அசைவுகளை இந்த வகைக் குழந்தைகளிடம் காணமுடியாது.

5. **ஆட்டிசம்:** இந்த வகை குழந்தைக்கு மட்டும் மற்றவர்களுடன் சேரவும் மாட்டார்கள். ஒரே மாதிரியாகத் தான் பேசுவர் படிப்பிலும் சொன்னதைத் திரும்பத் திரும்ப சொல்வர். மற்றவர்களிடமிருந்து விலகி நடக்கும் தன்மை காணப்படும்.

## டிஸ்லெக்சியா என்றால் என்ன?

மூளையில் உள்ள சில பிரச்சினைகளால் இக்குறைபாடு குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. இக்குழந்தைகளுக்கு, படிப்பதிலும் எழுதுவதிலும் சிரமங்கள் இருக்கும். இவர்கள் மனநிலை சரியில்லாதவர்கள் அல்ல. இவர்கள் புத்திசாலியாக, சில செயல்பாடுகளில் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கலாம். இவர்களுக்கு எழுதுவதும், படிப்பதும் மட்டும்தான் கொஞ்சம் கடினம். டிஸ்லெக்சியாவால் பாதிப்புக்குள்ளான குழந்தைகளுக்கு, முதல் இரண்டு மூன்று படிகளிலேயே தடுமாற்றம் உண்டாகிறது. அவர்களால் ஒலி வார்த்தைகளை உருவாக்குவதையும், வடிவங்களைக் கொண்டு தொடர்புகளை உணர்வதையும், பல ஆணைகளை ஒன்றாகக் கொடுக்கையில் அவற்றை வரிசையாகச் செயல்படுத்துவதையும் கிரகித்துக் கொள்ள இயலுவதில்லை. இதன் காரணமாகவே அவர்கள் மேற்கொண்டு படிப்பது மிகுந்த கடினமான செயலாகி விடுகிறது. 1887 இல் முதன் முதலாக இம்மாதிரி மாற்றங்களுக்கு ''டிஸ்லெக்சிக்'' என்ற பெயர் சூட்டப்பட்டது.

குழந்தைகள் படிக்கையில் ''அ'' என்ற எழுத்துடன் ''து'' என்ற எழுத்தைச் சேர்த்தால் ''அது'' என்ற சொல் உருவாகும் என்பதைப் புரிந்துகொண்டு சொற்களைத் துவக்கத்தில் படிப்பார்கள். எழுத்துக் கூட்டிப்படி ''வாய்விட்டுப்படி'' என்று சிறுகுழந்தைகளை நாம் கூறுவது அதனால்தான். நாளடைவில் பலமுறை ஏற்கனவே பார்த்த சொற்களின் ஒலி வடிவத்தை உணர்ந்து எழுத்துக்களைக் கூட்ட வேண்டிய அவசியம் இல்லாமலேயே, நினைவாற்றலின் உதவியால் குழந்தைகளால் படிக்க இயலும். ஆனால், டிஸ்லெக்சியாவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளால், இந்த இயல்பான செயலைச் செய்ய முடியாது. இவர்கள் எழுத்துக்களை அவற்றின் வரிவடிவத்தைக் கொண்டு அடையாளம் காண்பது, முன்பு படித்தவற்றை நினைவில் நிறுத்திக் கொள்வது வரை ஒவ்வொரு கட்டத்திலும் தடங்கல் களைச் சந்திக்கின்றனர். உதாரணமாக 'cat' 'tac' ஆகவும் 'pot' வழி ஆகவும், 'was' 'saw' ஆகவும் இவர்களுக்கு மாறிவிடக்கூடும்.

## டிஸ்லெக்சியா வகைகள் (Types of Dyslexia)

1. **மூளைப் பாதிப்பால் வரும் டிஸ்லெக்சியா** (Traumatic Dyslexia)

மூளையில் படித்தல், எழுதுதலைக் கட்டுப்படுத்தும் பகுதியில் ஏற்பட்ட அதிர்ச்சி அல்லது காயம் காரணமாக ஏற்படும் குறைபாடு. இது பொதுவாகச் சிறு குழந்தைகளிடம் அதிகம் காணப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2. முதனிலை டிஸ்லெக்சியா (Primary Dyslexia)

பிறவியிலேயே மூளையின் இடப்பக்க (Cerebral Cortex) பகுதி சரிவர வேலை செய்யாமையின் காரணமாகப் படிப்பது, எழுதுவது இவற்றில் ஏற்படும் குறைபாடு, பரம்பரை பரம்பரையாக, ஜீன்களின் மூலம் கடத்தப்படுகிறது (Hereditary). இது 'Primary Dyslexia' என்று அழைக்கப்படுகிறது. இக்குறைபாடு உடையவர்களுக்கு எத்தனை வயதானாலும் எழுதுவதும் படிப்பதும் சிரமமாகவே இருக்கும். இது இருபாலாரிடமும் காணப்படும் குறைபாடு ஆகும்.

### 3. இரண்டாம் நிலை டிஸ்லெக்சியா (Secondary Dyslexia)

பிறவியில் இல்லாமல், ஹார்மோன்களின் சுரப்பின் காரணமாக உருவாவது இது சிறுவர்களிடம் தான் அதிகம் காணப்படும். இக்குறைபாடு வயதானால் குறைந்துவிடக்கூடும்.

### டிஸ்லெக்சியாவிற்கான காரணம் என்ன?

டிஸ்லெக்சியா எதனால் ஏற்படுகிறது? இதற்கான காரணம் இன்னும் தெரியவில்லை. என்றாலும், பரம்பரை இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். மூளையின் வளர்ச்சியும் செயற்பாடும் மாறுபட்டிருப்பது இதற்கு ஒரு காரணமாக இருந்தாலும் இது ஒரு ஆய்வுத் திறனையோ கற்கும் ஆர்வத்தையோ பாதிப்பதில்லை என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. சொல்லப்போனால், மொழியோடு சம்பந்தப்படாத விஷயங்களில் இவர்கள் பெரும்பாலும் திறமைசாலிகளாக இருக்கிறார்கள்.

டிஸ்லெக்ஸியா என்பது ஒரு நரம்புமண்டலத்தை சார்ந்த ஒருவகை மாற்றம். இதனை நோய் என்று சொல்வதைவிட நேர்முறைக்கு மாறான ஓட்டம் என்றுதான் சொல்ல வேண்டும். இதன் அடிப்படை அறிகுறி ஒருவருக்குப் படிப்பதில் அல்லது எழுதுவதில் உள்ள தடுமாற்றமே ஆகும். இது மரபணுக்களின் குறியீடு மாற்றத்தால் வரும் ஒரு மாறுபட்ட சிந்தனை ஆகும். ஆனால் சிலர் டிஸ்லெக்ஸியாவில் பாதிக்கப்பட்டிருந்தாலும் நன்றாக சரளமாகப் படிக்கக் கூடும். இவர்களின் சிந்தனை ஓட்டம் சற்றே தடைபட்டு இருக்கும். இப்படிப்பட்ட மாற்றங்கள் உள்ளவர் அவரை ஒத்த மற்றவரைவிட எழுத படிக்க யோசிப்பதில் என்று ஒரு தரம் தாழ்ந்திருப்பதாக அறியப்படுகிறது.

வேறு ஏதாவது நுண்ணிய நரம்பு மண்டல மாற்றங்களால் ஏற்படுகிறதா என்று ஆராய்ந்ததில், மூளையின் அமைப்பில் வெளித்தோற்றத்தில் சில மாறுதல்கள் இருப்பது தெரியவந்தது. டிஸ்லெக்ஸியா இருப்பவர்கள் சரியாக உச்சரிக்க கூடிய சக்தியைக் குறைவாகப் பெற்றிருப்பார்கள். இவை நிமிடத்திற்கு நிமிடம் மாறக்கூடும். அல்லது நாளாக நாளாக இன்னும் குழப்படும் தெளிவின்மையும் அதிகரிக்க கூடும். அசாதாரணமாக இயங்குவதால் ஏற்படுகிறது. பேசுவது, எழுதுவது, புரிந்ததைச் சொல்வது, கிரகித்துக் கொள்வது என்று எதிலும் மந்தமாக இருப்பதற்கு இது தான் காரணம் என்று சொல்ல முடியாது.

மூளையில் உள்ள அசாதாரண இயக்கம் காரணமாக இருந்தாலும், பரம்பரைக் குறைபாடு என்றும் சொல்கின்றனர் நிபுணர்கள். தாய், தந்தை இருவரோ, இருவரில் ஒருவரோ மதுப்பழக்கத்துக்கு ஆட்பட்டதால், பிரசவத்திலேயே கருவை பாதித்திருக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரிப்பின் போது சாப்பிட்ட மருந்து கூட காரணமாக இருக்கலாம். பிறந்து, தவழ்ந்து, பேச ஆரம்பிக்கும் போதே இந்த பிரச்சினை கண்டுபிடித்து விடலாம்.இரண்டு கிலோவுக்கு குறைவாக பிறப்பது, பத்து மாதத்துக்கு முன்பே பிறப்பது, போதுமான சத்துக்கள் கிடைக் காத நிலை ஆகியவை முக்கிய காரணமாக உள்ளன.

**குழந்தைகளிடம் ஏற்படும் அறிகுறிகள்:**

குழந்தைகள் பேசத்துவங்கும் முன் இந்தக் குறையைத் தெரிந்து கொள்வது அரிது. ஆனால் சில முந்தைய அறிகுறிகள் டிஸ்லெக்சியா இருப்பதை அறிவுறுத்தலாம். அதாவது குழந்தைகள் கேள்விகளுக்குத் தாமதமாகப் பதில் அளிக்கலாம். புதிய வார்த்தைகளை பேசுவதில் தடுமாற்றம் ஆகியவை இருந்தால் டிஸ்லெக்சியா ஏற்பட வாய்ப்பிருப்பதாக மருத்துவ நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

- பார்க்க நல்ல புத்திசாலி போலவும், நல்ல ஆற்றொழுக்கு பேச்சும் உடையவராக இருக்கக் கூடும். ஆனால் அவரின் வகுப்பு மாணவர்களைப் போல எழுத படிக்க முடியாமல் தடுமாறுவார்கள்.
- சில சமயம் நல்ல பொது ஞானம், அறிவு உள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் எந்த தேர்வும் நன்றாக எழுத மாட்டார்கள். ஆனால் அதே சமயம் கேள்விகள் கேட்டால் நன்றாகப் பதில் சொல்வார்கள்.
- முட்டாளைப் போல தோற்றமும், தாழ்வு மனப்பான்மை கொண்டவராகவும், தனியே இருப்பதை விரும்புவராகவும் இருப்பார்கள்.
- நல்ல தொழில் திறமை கொண்டிருப்பார்கள், பாடுவது, ஓவியம் வரைவது போன்ற கலைகளில் அல்லது நல்ல கருவிகளில் (Mechanics) தேர்ச்சி உடைய வராக இருப்பார்கள்.
- பகற்கனவு காண்பவராக இருக்கக் கூடும்.
- நல்ல படங்களுடன் கூடிய பாடங்கள், தானாகவே செய்யும் சோதனைகள் மூலம் கற்றல் இவற்றில் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பார்கள்.
- வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக படிக்கத்துவங்குவார்கள்.
- வார்த்தைகளிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறியத் தவறுவார்கள்.
- ஒவ்வொரு வார்த்தைக்கும் இருக்கும் இடைவெளியை அறியத் தவறுவார்கள்.
- தெரியாத வார்த்தையை உச்சரிக்கத் திணறுவார்கள்.
- படிக்கும் போது தலை வலிப்பதாகவும் தலை சுற்றுவதாகவும் சொல்வார்கள்.
- எழுத்துக்கள், எண்கள், சொற்கள் இவற்றில் பல குழப்பங்கள் இருக்கும்
- திரும்பத் திரும்ப வரும் சொற்களில் குழப்பம், மாறிவரும்.
- கண்களில் குறை இருப்பதாகச் சொல்வார்கள். ஆனால் கண்களிலோ பார்வை யிலோ ஒரு குறையும் இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பென்சிலைப் பிடித்துக் கொள்வதில் மாற்றம் இருக்கும். கை எழுத்து நன்றாக இருக்காது. புரிந்து கொள்வது மிகவும் கடினம்.
- இடமிருந்து வலமாக எழுதுவதோ அல்லது இடது கைப் பழக்கம் உள்ளவராக இருக்க கூடும்.
- நேரம் தவறாமை, அல்லது நேர நிர்வாகம்
- இவர்களுக்கு நேரம் சொல்வது கடினம். ஒரு வரிசைக் கிரமத்தில் வேலைகள் செய்வதும் நினைவில் வைத்துக் கொள்வதும் கடினம்.
- கணக்கில் விபரங்களுடன் கூடிய கணக்குகளைப் போட சிரமப்படுவார்கள்.
- நினைவுத்திறனும் புரிந்து கொள்ளும் திறனும்
- நீண்ட நாட்களுக்கு முன் நடந்ததை எல்லா விபரங்களுடனும் நினைவு வைத்திருப்பார்கள். மனித முகங்கள், நிகழ்வுகளை நினைவு கொள்ளும் இவர்களால் பெயர்களையோ அல்லது சற்றே எண்களுடன் கூடிய விவரங் களையோ நினைவுபடுத்த முடியாது.

அறி திறனுக்கும் அதனை செயல்படுத்துவதற்கும் இடையே இடைவெளியை உருவாக்குவது தான் கற்றலில் ஏற்படும் பிரச்சனையாக நாம் கருதுகிறோம். டிஸ்லெக்சியா உள்ள குழந்தைகள் சராசரி மாணவ மாணவியாகவோ அல்லது சராசரிக்கும் மேற்பட்ட மாணவ மாணவியராகவோ இருக்கலாம். ஆனால் வாசிப்புத் திறன் அவர்களிடம் எதிர்பார்ப்பதை விடக் குறைவாகவே காணப்படும். கற்றலின் பிற பிரச்சனைகள் என்னவெனில் கவனம் பிறழ்வது, எழுத்துப் போட்டித் திறன்களில் சரியாக செயல்பட முடியாதது. மேலும் கணக்கு பாடத்தில் திறமையின்றி இருத்தல் ஆகியவையாகும்.

மூளையிலுள்ள மொழி அறிதிறன் பகுதியில் ஏற்படும் சில மாற்றங்களால் டிஸ்லெக்சியா ஏற்படுவதாக ஆய்வு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இது ஒரு பரம்பரை வியாதியாகவும் உள்ளது. 5% லிருந்து 15% மக்கள் ''டிஸ்லெக்ஸிக்'' என்று சொல்லப்பட்டாலும் நல்ல மருந்துகள், கவனம் என்பவற்றால் இதை குணப்படுத்த முடியும். இதில் ஆண் பெண் என்ற பேதம் இல்லை.

**டிஸ்லெக்சியா பரிசோதனை (Dyslexia Test)**

- **பார்வை, கேட்கும் திறன் மற்றும் நரம்பியல் பரிசோதனைகள்:** ஏனெனில் உடலின் பல்வேறு பகுதியில் உள்ள பிரச்சினையால் டிஸ்லெக்சியா ஏற்பட்டுள்ளதை அறிய இந்த பரிசோதனை அவசியம்.
- **உளவியல் மதிப்பீடு:** சமூக, குடும்பப் பிரச்சினைகள், கவலை, பயம், மன அழுத்தம் இதனால் டிஸ்லெக்சியா ஏற்பட்டுள்ளதா என்பதை அறிய இது உதவும்.
- **கல்வித் திறன் குறித்த மதிப்பீடு:** ஒரு நிபுணரை வைத்து உங்கள் குழந்தைகளின் வாசிப்பு எழுத்து புரிதல் திறனை பரிசோதனை செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எப்படி குணப்படுத்த முடியும்?

டிஸ்லெக்சியாவிற்கு காரணமான மூளையின் பாதிக்கப்பட்ட பகுதியைச் சரிசெய்யும் சிகிச்சை எதுவும் இல்லை. கல்வி போதிப்பு முறைகளில் மாற்றங்களைச் செய்வதன் மூலமும், மனோவியல் பரிசோதனை மூலம் குழந்தையின் இந்த பிரச்சினை குறித்து ஆசிரியரிடம் தெரிவித்து அதற்கு தக்கவாறு அந்த குழந்தையிடம் மட்டும் சிறப்புக் கவனம் எடுத்துக் கொள்ளுமாறும், பாடம் கற்பிக்கும் முறைகளில் மாற்றங்களைச் செய்யு மாறும் கேட்டுக்கொள்ளலாம். உதாரணமாகப், புத்தகத்தில் உள்ள பாடங்களை ஒருவர் வாயால் படித்து அதற்குத் தக்கவாறு புத்தகத்தில் உள்ள எழுத்துக்களை அடையாளம் காட்டிப் பயிற்றுவிக்கலாம். இக்குழந்தைகளின் அனைத்துப் புலன் உணர்வுகளும் உணருமாறு பாடம் புகட்டல் அணுகுமுறைகளை இந்த துறையில் நிபுணர்களானவர்கள் செய்வார்கள்.

அனைத்திற்கும் மேலாகப் பெற்றோர்கள் இக்குழந்தைகளிடம் இது ஒரு சாதாரண விஷயம் என்றும் விரைவில் படிக்கத் தொடங்கிவிடுவாய் என்றும் உணர்வு பூர்வமான ஆதரவு அளிக்க வேண்டும். குழந்தைகளுக்குப் பாடப் புத்தகம் தவிர பிற கதைப் புத்தகத்தை வாசித்துக் காட்டி அதில் உள்ள எழுத்துக்களை அடையாளம் காட்டி மெதுவாக எழுத்துக்குத் தயார்படுத்தி வந்தால் இது நாளடைவில் குணமாகும்.

இப்படிப்பட்ட குறையுள்ள குழந்தைகளுக்கு வார்த்தைகளைப் பிரித்துப் பொருள் சொல்லித் தருவதை வழக்கமாகக் கொள்ள வேண்டும். வார்த்தைகளைப் பிரிக்கும் போது ஒலியில் வரும் சிறிய மாற்றங்களை உணரும் வண்ணம் சொல்லித் தந்தால் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

இடது பக்க மூளை வடிவங்கள் அவற்றின் அமைப்புகள் இந்தத்திறன் கொண்டது. எனவே படங்களுடன் கூடிய வார்த்தைகளை அவற்றின் ஒலியைப் புரிந்து கொள்ளுதல் எளிதாக வரும். மிக இளைய வயதிலேயே கண்டறியப்பட்டால் இது பூரணமாகக் குணமாக வாய்ப்பு இருக்கிறது. குழந்கைளுக்கு வயதுக்கேற்ப சில வேலைகளைச் சொல்லித் தாருங்கள். அவற்றைச் செய்யும் போது அவற்றுடன் கூட நேரம், அவற்றின் வடிவம் இவற்றையும் பதிய வைக்க முயற்சி செய்யுங்கள். ஒரு அறையில் உள்ள தொலைப் பெட்டியைச் சுத்தம் செய்தால் அதன் வடிவம் மனதில் பதிய வைக்க முடியும். துடைக்கும் போது கைகளால் அதன் வடிவத்தை உற்று நோக்குவதால் வடிவம் புலப்படும். மேலும் இது போன்ற சின்னச் செய்கைகள் அவர்களின் தாழ்வு மனப்பான்மையைப் போக்குவ தோடு, அவர்களின் கவனத்தை ஒருமுகப்படுத்த உதவுகிறது.

ஒரு முக்கிய குறை இரு கண்களையும் ஒரு நேரத்தில் ஒரு சொல்லில் குவிப்பது. இது பலநேரங்களில் டிஸ்லெக்ஸிச் மாணவர்கள் எழுத்துக்கள், எண்கள் இவற்றின் வரிசைக் கிரமத்தில் குழப்பம் அடைவதை விளக்குகிறது. வலது கண் சொல்லின் ஆரம்பத்திலும் இடது கண் சொல்லின் முடிவிலும் ஆரம்பித்து இரண்டையும் ஒன்றாகப் பார்க்கிறார்கள்.

இது போல சில குறைபாடுகளால் குழந்தைகள் கவனம் செலுத்த முடியாமல் போகலாம். அல்லது நன்றாகப் படிக்க முடியாமல் போகலாம். அடிப்படைக் குறைபாடு களைப் புரிந்து கொள்ளாமல் நன்றாக பழகுவதில்லை, படிப்பதில்லை, கவனம் போதாது என்று குறை கூறாமல், குறைகளைக் களைய முயன்றால் நிச்சயம் குழந்தைகள் நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைமகள் தரிசனத்தின் போது முதல்வர்




ஆசிரியர் தின விழாவில் முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசுதின விழாவில் பிரதம அதிதி பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள்



பரிசுநாள் கலைவிழா நிகழ்வில் பிரதம அதிதிகளாக
அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு கந்தையா நீலகண்டன் தம்பதியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலைப் பரிசில்நாள், கலைவிழா நிகழ்வில் பிரதம அதிதிகளாக
மொறிசியஸ் நாட்டிற்கான இலங்கைத் தூதுவர் திரு தெ. ஈஸ்வரன் தம்பதியினர்



பரிசில்நாள், கலைவிழா நிகழ்வில் பிரதம அதிதிகளாக
கொழும்பு மாநகர சபை உறுப்பினர் திரு எஸ். குகவரதன் தம்பதியினரும்
IDM நிறுவனப் பணிப்பாளர் திரு V. ஜனகன் அவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசில்நாள், கலைவிழா நிகழ்வில் பிரதம அதிதி
நிர்வாகப் பணிப்பாளர் திரு M. கைலாசபிள்ளை



பரிசில்நாள், கலைவிழா நிகழ்வில் பிரதம அதிதிகளாக
பேராசிரியர் சபா ஜெயராசா தம்பதியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மெய்வல்லுநர் போட்டியில்
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு வஸீர் தம்பதியினர்




மெய்வல்லுநர் போட்டியில் பிரதம அதிதிகளாக
முன்னாள் மாநகர சபை உறுப்பினர் திரு பிரகாஷ் கணேசன் தம்பதியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியத்தில் முருக வழிபாடும் மூலப் பரம்பொருள் தேடலும்

## திருமுருகாற்றுப்படை, பரிபாடல் நூல்களை முன்வைத்து ஓர் ஆய்வு

**கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்**
முதுநிலை விரிவுரையாளர்
ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

**முன்னுரை**

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களுள் திருமுருகாற்றுப்படை மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்தது. முறைசெய்து கோலோச்சும் இறைவர்களைப் பாடுதலே சங்க இலக்கியப் பெருமரபாக இருக்கும்போது, முருகாற்றுப்படைதான், 'அந்தமில் இன்பத்து வீட்டினைத்' தரும் நெறியைச் சுட்டும் நூலாக விளங்குகின்றது. நக்கீரர் என்னும் சங்கப் புலவராலே இயற்றப்பெற்று, 317 அடிகளில் இலங்கும் இந்நூல், மந்திரமாகக் கொள்ளப்பெற்றுப் பலராலும் ஓதப்பெற்றுவரும் பாராயண நூலாக உள்ளது. அதுமட்டு மல்லாமல் இயற்கை நவிற்சி, உவமப்புனைவு முதலிய அணிகளைக் கொண்டமைந்த சிறந்தவோர் இலக்கியமாகவும் உள்ளது.

எட்டுத்தொகை நூல்களுள் 'ஓங்கு பரிபாடல்' என்று சிறப்பிக்கப்பெறும், பரிபாடல் எழுபது செய்யுட்களைக் கொண்டமைந்த நூலென்பர். அவற்றுள் இப்போது 22 பாடல்களே கிடைக்கின்றன. பழைய உரை, புறத்திரட்டு ஆகிய நூல்களிலிருந்து கிடைக்கும் பாடல் களையும் சேர்த்தால் 25 பாடல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கருதலாம். பரிபாடலில் திருமால் குறித்த பாடல்கள் 8. முருகன் குறித்தவை 31. காடுகிழாள் குறித்தது 1. வையை குறித்தன 26. மதுரை குறித்தன 4. இன்று கிடைக்கும் பாடல்களுள் 7 திருமால் குறித்தன. 8 முருகன் குறித்தன. 9 வையை குறித்தன, 1 மதுரை குறித்தது.

இந்நூல்களின் வழியாக, இவை இயற்றப்பெற்ற பழங்காலத்து வழிபாட்டு நெறி களையும், பண்பாட்டுச் செய்திகளையும் நன்கு அறிந்துகொள்ள முடிகின்றது. செவ்வேள் குறித்த பாடல்கள் காணப்பெறும் இந்நூல்களின் வழியாகப் பெறப்படும் முருக வழிபாட்டு நெறிகளையும், அவை பின்வந்த நூல்கள் சிலவற்றுக்கு வழிகாட்டிய தன்மையையும், மூலப்பரம்பொருள் குறித்த கருத்துநிலையின் தொடக்கத்தையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுருகாற்றுப்படை - புதிய மரபின் தொடக்கம்

### உலகம் உவப்ப

தமிழ் நூல்களை மங்கலச் சொற்களாலே தொடக்கி வைப்பதே மரபாகும். இவ்வாறு அமையத்தக்க மங்கலச் சொற்களுள் ஒன்றாக, உலகம் என்ற சொல்லும் விளங்குகின்றது. மங்கலச் சொல் என்பதற்கும் மேலாக, இச்சொல் தத்துவார்த்த ரீதியாக நோக்கினாலும் மிகவும் அருத்தம் செறிந்ததாகும். 'ஓம்' என்னும் பிரணவம் அ, உ, ம் என்னும் மூன்று எழுத்துக்களின் சேர்க்கையாகும். இம்மூன்று எழுத்துக்களும் அமைந்துள்ளவொரு சொல்லே 'உலகம்' என்பது. எனவே, உலகம் என்ற சொல்லைத் தொடக்கமாகக் கொண்டு ஒரு நூல் காணப்பெறுமாயின், அந்நூல் பிரணவத்தைத் தொடக்கமாகக் கொண்டுள்ள தென்பதே பொருளாகும். இவ்வாறாக, சிறந்த மங்கலச்சொல்லாகவும், பிரணவத்தை உணர்த்தும் சொல்லாகவும் விளங்கும் 'உலகம்' என்பதனைத் தொடக்கமாகக் கொண்டு நூலாக்கும் மரபைத் தொடக்கி வைத்தது திருமுருகாற்றுப்படையேயாகும்.

*'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு*
*பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங்கு....'* (திருமு. 1,2)

*எனத் தொடங்கும் திருமுருகாற்றுப்படையின் மரபிலேயே,*

*'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்*
*நிலைபெறுத்தலும் நீக்கலும்...'* (கம்ப.1)

*எனக் கம்பராமாயணமும்,*

*'உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்*
*நிலவுலாவிய நீர்மலி வேணியன்..'* (பெரிய.1)

எனப் பெரிய புராணமும் தொடங்குகின்றன எனலாம்.

### ஆறுமுகம் ஆனபொருள்

திருமுருகனுக்கு ஆறு முகங்கள் அமைந்தமைக்குப் பல்வேறு தத்துவ விளக்கங்கள் முருகனடியார்கள் பலராலும் சொல்லப்பெற்றுள்ளன. முருகனால் ஆட்கொள்ளப்பெற்று, திருப்புகழ் பாடிய 'வாக்கிற்கு ஒரு அருணகிரியார்' பின்வருமாறு தமது தத்துவ விளக்கத்தைக் கூறுகின்றார்.

*'ஏறுமயில் ஏறி விளை யாடு முகம் ஒன்றே*
*ஈசனொடு ஞானமொழி பேசு முகம் ஒன்றே*
*கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே*
*குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே*
*மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே*
*வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே*
*ஆறுமுகமான பொருள் நீயருளவேண்டும்*
*ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே'* (திருப்புகழ்)

என்பது அருணகிரிநாதர் வாக்கு. இங்கு, திருமுருகனின் ஒவ்வொரு திருமுகமும் ஒவ்வெரு பணி செய்வதாகக் காட்டுகின்றார் அருணகிரியார். அருணகிரிநாதர் மட்டுந்தான் என்றில்லை. கந்தசட்டி கவசம் தந்த தேவராயசுவாமிகளும், தமது பழநிக் கந்தசட்டிக் கவசத்தில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'கருதி மெய்யோகம் சொல்லியது ஒரு முகம்*
*அருள்பெரு மயில்மீது அமர்ந்தது ஒரு முகம்*
*வள்ளி தெய்வானையை மருவியது ஒருமுகம்*
*தெள்ளு நான்முகன்போல் சிருட்டிப்பது ஒருமுகம்*
*சூரனை வேலால் துணித்தது ஒரு முகம்*
*ஆரணம் ஓதும் அறுமறை அடியாய்*
*தானவர் வேண்டுவ தருவது ஒருமுகம்'* *(பழநிக் கவசம்)*

என, முருகனின் ஆறுமுகங்களும் செய்துவரும் திருச்செயல்களைப் பட்டியல் இட்டிருக்கக் காணலாம். இவ்வாறு, பின்னாள் வந்த முருகனடியார்கள் எல்லோரும் தமது நூல்களில் திருக்குமரனின் முகங்களையும், கரங்களையும் வரிசைப்படுத்திச் சொல்லியிருப்பதற்கு, திருமுருகாற்றுப்படையே உந்துதல் தந்துள்ளது எனலாம்.

*'மா இருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்*
*பல்கதிர் விரிந்தன்று, ஒருமுகம்; ஒருமுகம்*
*ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்*
*காதலின் உவந்து வரங் கொடுத்தன்றே; ஒருமுகம்*
*மந்திர விதியின் மரபுளி வழாஅ*
*அந்தரணர் வேள்வி ஓர்க்குமே; ஒருமுகம்*
*எஞ்சிய பொருள்களை ஏமுற நாடி*
*திங்கள் போலத் திசை விளக்குமே; ஒருமுகம்*
*செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கி*
*கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே; ஒரு முகம்*
*குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்*
*மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே'* *(திருமு. 91-102)*

என்னும் திருமுருகாற்றுப்படை வரிகளே, மேலே காட்டப்பெற்ற அருணகிரிநாதர், தேவராய சுவாமிகள் போன்றோரின் பாடல்களுக்கு மூலமாக அமைந்துள்ளன.

**கோயில் வருணணை**

தமிழ்ப் பக்தியிலக்கிய காலத்தில் தோன்றிய நாயன்மார்கள், ஆழ்வார்களது பாடல்களிற் காணப்பெறும் முக்கிய இயல்புகளில் ஒன்று இறைத்தலங்கள் குறித்த வருணனையாகும்.

*'... வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர*
*சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே'* *(ஐயாற்றுத் தேவராம்)*

என்று சம்பந்தர் பாடுகின்றார். இவ்வாறு தலங்கள் குறித்த பிரபந்தங்கள் பல தோன்றின. ஒருவகையில், சைவ, வைணவ சமயங்களின் மீள் எழுச்சிக்கு உதவி செய்த கூறாக, இத்தப்பிரபந்தங்கள் மற்றும் பாடல்களைக் கூறலாம்.

இத்தகையதான தன்மையுடைய பக்தியிலக்கியப் பாடல்களின் தோற்றுவாயாகவும் திருமுருகாற்றுப்படையினைக் கொள்வதிலே தவறில்லை.

*'... மடநடை மஞ்சை பலவுடன் வெரீஇ*
*கோழி வயப்பெடை இரிய, கேழலொடு*
*இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன*
*குரூஉ மயிர் யாக்கைக் குடாஅடி உளியம்*
*பெருங்கல் விடர்அளைச் செறிய, கருங்கோட்டு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆமா நல்ஏறு சிலைப்ப, சேண் நின்று*
*இழுமென இழிதரும் அருவி*
*பழமுதிர்ச்சோலை,..........'* (திருமு. 310-317)

என்று இயற்கை வருணனையோடு தலத்தை உணர்த்துகின்ற நெறியினையும்,

*'... நாவியல் மருங்கில் நவிலப் பாடி*
*விரை உறு நறுமலர் ஏந்தி பெரிது உவந்து*
*ஏரகத்து உறைதலும் உரியன்....'* (திருமு. 187-189)

என்று வழிபடுவோரிணை இணைத்துக்காட்டித் தலத்தை உணர்த்துகின்ற நெறியினையும் திருமுருகாற்றுப்படையிலே காணலாம். இவ்வாறு, திருக்குமரனது படைவீடுகளான ஆறு தலங்களும் நக்கீரரால் நன்கு எடுத்துரைக்கப்பெற்றுள்ளன.

**துதித்து வழிபடுதல்**

கடவுளைப் பலபெயர்கள் கூறித்துதித்து வழங்குதல் வழிபாட்டு நெறிமுறைகளுள் ஒன்றாகும். வடமொழியில் பல துதிகள் அமைந்திருக்க, தமிழ் இலக்கிய, பக்தி நூல்கள் சிலவற்றிலும் இத்தகைய துதிகள் சில காணப்பெறுகின்றன. இவ்வாறு காணப்பெறும் துதிகள், தமிழ் அருச்சனை வழிபாட்டுக்கு மிகவும் உதவி வருகின்றன என்பதும் கருதத் தக்கது. திருமுருகாற்றுப் படையில் பழமுதிர்சோலை குறித்த பின்வரும் பகுதி இங்கு நோக்கப்பெறத்தக்கது.

*'அறுவர் பயந்த ஆறமர் செல்வ!*
*ஆல்கெழு, கடவுட் புதல்வ! மால்வரை*
*மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!*
*வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!*
*இழையணி சிறப்பின் பழையோர் குழலி!*
*வானோர் வணங்குவில் தானைத்தலைவ!*
*மாலை மார்பஂ நூலறி புலவ;* (திருமு. 255-261)

இப்பகுதியில், முருகனது பலபெயர்கள் வரிசையாக விளிக்கப்பெறுகின்றன. இதனால்தான் போலும், இம்முருகாற்றுப்படை மந்திரச் சிறப்பு வாய்ந்ததெனக் கொள்ளப்படுகின்றது. பல்லாயிரக்கணக்கானோர் பாராயண நூலாகத் தினமும் திருமுருகாற்றுப்படையினை ஓதுதற்கு இதுவே காரணம் எனலாம். இந்நெறியின் தொடர்ச்சியாகவே, கீர்த்தித்திருவகவல், போற்றித்திருவாகவல் முதலிய திருவாசகப் பகுதிகளைக் கொள்ளலாம்.

1. பரிபாடல் காட்டும் முருகன் - மூலப்பரம்பொருள்
2. பரிபாடலில் முருகன்

செவ்வேளாகிய முருகனைக் குறித்த பரிபாடல் பாக்களும், முருகனைக் கார்த்திகைப் பெண்கள் பெற்று வளர்த்தமை, வள்ளி, தேவசேனை ஆகிய பெண்களை மணந்தமை முதலிய புராணச் செய்திகளை எடுத்துரைக்கின்றன. மேலும், 'போர் மலிந்து சூர் மருங்கறுத்த சுடர்ப்படையோனாக' ( பரி. 3: 11-13.) முருகனது வீர ஆற்றல் பரிபாடலில் போற்றப் பெறுகின்றது. முருகனது படைவீடுகளுள் ஒன்றாகக் கொள்ளப்பெறும் திருப்பரங்குன்றத்தின் சிறப்பும் பரிபாடலில் நன்கு தீட்டப்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'வார் குலை அவிழ்ந்த வள் இதழ் நிரை தொறும்,*
*விடு கொடிப் பிறந்த மென்தகைத் தோன்றிப்*
*பவழத்து அன்ன செம்பூத்தா அய்*
*கார் மலிந்தன்று, நின்று குன்று'* (14:14-17)

என்று பரங்குன்றைக் காட்டுகின்றார் கேசவனார். இங்கு பல்திறப்பட்டாரும் வந்து, செவ் வேளைப் போற்றி வணங்கி, தமது வேண்டுதல்களை முன்வைத்த தன்மையை அறிய முடிகின்றது.

> 'பலவகைப் பருவத்தினரும் பரங்குன்றத்தில் செவ்வேளை வழிபட்ட பின்னர் வரம் கேட்கின்றார். கனவிற் கண்ட காதலரை நனவிற் பெற, வையையில் புதுப்புனல் பெருக எனச் சிலரும், கருவயிறு உறுக எனச் சிலரும், செய்பொருள் வாய்க்க எனச் சிலரும், போரில் தம் தலைவர் வாகை சூடுக எனச் சிலருமாக முருகனை நோக்கி வரங்கிடக்கின்றனர்' (8:102-108)

என முருகனிடம் அடியவர்கள் வேண்டிக் கொண்ட செய்திகளைக் கூறும் பரிபாடலில், பின்வரும் பிரார்த்தனைப் பாடல் மிகவும் முதன்மையுடையதாகும்.

*'... யாம் இரப்பவை*
*பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்*
*அருளும் அன்பும் அறனும் மூன்றும்*
*உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே!'* (5: 78-8)

இவ்வாறு முருகன் குறித்த செய்திகள் பரிபாடலில் சிறப்புற வெளிப்படுத்தப்பெற்றுள்ளன. பாடல் முதன்மைத்தன்மை வழங்கப்பெறவில்லை எனினும், முருகனது பாடலில் ஆங்காங்கு சிவனுடைய சிறப்புகளும் எடுத்துரைக்கப் பெற்றிருக்கக் காணலாம்.

*'வேத மா பூண் வையைத் தேர் ஊர்ந்து,*
*நாகம் நாணா மலை வில்லாக*
*மூவகை ஆர் எயில் ஓர் அழல் அம்பின் முளிய*
*மாதிரம் அழல எய்து அரர் வேள்விப்*
*பாகம் உண்ட பைங்கட் பார்ப்பான்'* (5:23-27)

எனச் சிவபெருமான் முப்புரம் எரித்த புராணச் செய்தி, 'பாய் இரும் பனிக்கடல்' எனத் தொடங்கும் பரிபாடலில் கூறப்பெற்றுள்ளது. மேலும், உமை குறித்தும், பிரமன் குறித்தும் கூறப்பெற்றிருக்கும் சில செய்திகளையும் எம்மாற் காண முடிகின்றது.

### பரிபாடலில் மூலப்பரம்பொருள் பற்றிய தேடல்

செவ்வேள் என்றும், திருமால் என்றும், சிவன் என்றும் இவ்வாறாகப் பலரின் செய்திகள் கூறப்பெற்றிருப்பதனால், கடவுளர் பலர் என்னும் கருத்துநிலையையா பரிபாடல் எடுத்துரைக் கின்றது என்பது ஆராயப்பெற வேண்டியதாகும். பொதுவாக மக்களது சமய, ஆன்மிக எண்ணப்பாங்கில் இருவகைப்பட்ட நிலைகள் விளங்கியிருப்பதைக் காணலாம்.

அ. சைவர் சிவன் மட்டுமே தெய்வம் எனவும், வைணவர் திருமால் மட்டுமே தெய்வம் எனவும் கொள்ளும் நிலை. அதாவது ஒவ்வொரு சமய நெறியையும் பின்பற்றுபவர்கள், அந்தந்த நெறியின் முதற்கடவுளரை மட்டுமே ஏற்றுக்கொண்டு, பிறரை ஏற்காது விடுகின்ற நிலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. சிவன், திருமால் என்று கொள்ளப்படுகின்ற தெய்வங்கள் அனைவருமே ஒரே மூலப்பரம்பொருளின் வெவ்வேறு வடிவினர் எனக் கொள்ளும் நிலை. அதாவது, சைவர் சிவன் எனக் கொள்ளும் மூலப் பரம்பொருளையே வைணவர் திருமால் எனக் கொள்கின்றனர் எனக் கருதும் நிலையாகும்.

இங்கே காட்டப்பெற்ற இரு நிலைகளிலும், ஆன்ம முதிர்ச்சி உற்றவர்கள் இரண்டாவது நிலையையே தமது மனப்பாங்காகக் கொண்டிருப்பர் எனலாம்.

இவ்வாறு எல்லாத் தெய்வங்களையும் ஒரே மூலப்பரம்பொருளாகக் காணும் தன்மையர் கூட, அப்பரம்பொருள் குறித்துக் கருத்து வெளிப்படுத்தும் இடங்களில் இருவகைப்பட்டு தமது செய்திகளைத் தெரிவிக்கின்றனர். முதலாவது வகையினர் இம்மூலப்பரம்பொருள் குறித்துப் பாடுகையில், எத்தெய்வத்தினதும் அடையாளத்தை ஏற்றாமல், அனைத்துச் சமயக் கடவுளரையும் சுட்டும் வண்ணமாகப் பாடிவிடுகின்றனர்.

எடுத்துக்காட்டாக,

*'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்*
*முதற்றே உலகு'* (குறள். 1)

என்னும் குறளையும்,

*'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்*
*நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா*
*அலகிலா விளையாட்டு உடையார் அவர்*
*தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே'* (கம்ப.1)

என்னும் இராமாயணப் பாடலையும் தரலாம். இப்பாடல்கள், அனைத்துச் சமயக் கடவுளரையும் சுட்டக்கூடிய பொதுத்தன்மையோடு அமைந்திருப்பதனைக் காணலாம்.

இரண்டாவது வகையினதான பாடல்கள், மூலப்பரம்பொருளைக்காட்டும் போது, பல சமயக் கடவுளர்களின் அடையாளங்களையும் கலந்து சுட்டுகின்றன. அர்த்தநாரி, சங்கரநாராயணர் வடிவங்கள் போல பல கடவுளரின் அடையாளங்களும் இணைந்த நிலையில் இவ்வாறு பேசப்படுவதன் மூலமும் மூலப்பரம்பொருளின் தன்மை காட்டப் பெறுவதைக் காணலாம்.

இந்த இரண்டாவது வகையான போக்கு, பரிபாடல் காலத்திலேயே காணப்பெற்றதெனச் சொல்லுதல் சாலும்.

*'ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்*
*கால் வடிக் கறு நிலைக் குன்றமும் பிறவும்*
*அவ்வவை மேய வேறு வேறு பெயரோய்'* (4: 67-69)

என்னும் பாடல்பகுதி இங்கு நோக்கப்படத்தக்கது. திருமால் குறித்த 'ஐந்து இருள் அற' என்னும் பாடலில் அமைந்துள்ள இப்பகுதியில் திருமாலின் இடங்களாக ஆலமும், கடம்புங் கூடக் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஆல் சிவனுடைய இடமாகவும், கடம்பு முருகனுடைய இடமாகவும் கொள்ளப்பெறுபவை. இவ்வாறு, பல தெய்வங்களுடைய இடங்களையும் சுட்டி, 'அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்' என்று கவிஞர் சுட்டுவது இத்தெய்வங்களின் மூலப்பரம்பொருள் நிலையையே எனலாம். மேலும், முருகன், பலதேவன் ஆகியோருடைய கொடிகளையும் இணைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'நின்னொான் றுயர்கொடி பனை*
*நின்னொான் றுயர்கொடி நாஞ்சில்*
*நின்னொான் றுயர் கொடி யானை'* (4: 38-40)

*கூறும் பகுதியும் நோக்கத்தக்கது.*
*'வெஞ்சுட ரொளியு நீ திங்களுள் அளியு நீ*
*அனைத்து நீ, அனைத்தினுட் பொருளு நீ'* (4:63-68)

எனும் பரிபாடல் பகுதியை நோக்கும் பொழுதும், மூலப்பரம்பொருள் குறித்தே பரிபாடல் குறித்துள்ளது எனச் சுட்டலாம்.

**முடிவுரை**

முருகன் குறித்த நூலான திருமுருகாற்றுப்படையிலும், செவ்வேள் பற்றியும் சில பாடல்கள் காணப்பெறும் பரிபாடலிலும் கூறப்பட்டுள்ள முருக வழிபாட்டு நெறிகள் பற்றிய செய்திகள் சமய இலக்கிய வரலாற்றில் முதன்மையுடையவை. சங்க இலக்கிய நூல்களுள் தனித்தன்மை பெற்று விளங்கும் திருமுருகாற்றுப்படை, இன்றுவரை பக்தி இலக்கிய மரபில் தனது செல்வாக்கைப் பேணி வருகின்றது. பல துறைகளில் புதிய மரபுகளின் தொடக்கமாக விளங்கும் திருமுருகாற்றுப்படை பின்வந்த நூல்கள் சிலவற்றுக்கு வழிகாட்டியுள்ளது. திருமால், செவ்வேள் ஆகிய கடவுளர் குறித்த பாடல்கள் காணப்பெறும் பரிபாடலில், மூலப்பரம் பொருள் குறித்த கருத்துநிலையின் தொடக்கத்தையும் காணமுடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்:**

1. *அருட்கலசம்*, (2009) கொழும்பு : மயுரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்.

2. சத்தியவேல்முருகனார், மு.பெ., *திருமுருகாற்றுப்படை*, (2009), சென்னை: சகுந்தலை நிலையம்.

3. *திருமுருகாற்றுப்படை உரைக்கொத்து* (1999), திருப்பனந்தாள்: காசித் திருமடம்

4. *பரிபாடல்* (1957), சென்னை: மர்ரே அண்டு கம்பனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இபமா முகன்

**கலபூஷணம் அருள்மொழி அரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன்**

*'என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்*
*தன்னை நினையத் தருகின்றான் - புன்னை*
*விரசுகமழ் சோலைவியன் நாரையூர் முக்கண்*
*அரசுமகிழ் அத்திமுகத் தான்.'*

'சத்யம் ஞானம் அனந்தம் ப்ரமம்' என்று உபநிஷதம் உரைக்கும். எங்கும் எதிலும் எள்ளினுள் எண்ணெயாக மலரினுள் மணமாக மணியினுள் ஒளியாக நீக்கமற நிறைந் திருக்கும் பரப்பிரும்மம் உருவத்துடன் கூடியும் உருவமில்லாமலும் கூறப்படுகின்றது. இதனை சகுணம், நிர்குணம் எனப்பெரியோர் கூறுவர். உருவமற்ற பரம்பொருள் நமக்காக உருவம் கொள்கின்றது. நிறமற்ற நீர் குளிர்ச்சியினாலே வெண்மையான பனிக்கட்டியாக உறைந்து உருவமும் நிறமும் கொள்கின்றது நிர்குணப்பிரம்மம் சகுணப்பிரம்மமாகின்றது.

கடலிலிருந்து நீர் வெய்யோனின் வெப்பத்தால் ஆவியாகும் பொழுது கண்ணால் காணமுடியாது அதுவே குளிர்ந்து கருமேகமாக மாறும் பொழுது கண்ணால் காண்கின்றோம். ஆனால் கைக்குள் அம்மேகம் அகப்படாது. அம்மேகமே மேலும் குளிர்ந்து மழையாக மாறினால் சுவைக்கலாம்; காணலாம்; கையினால் தொட்டு உணரலாம்; ஆனால் பிடிக்க முடியாது. அந்த நீரே மேலும் குளிர்ச்சி பெற்றால் பனிக்கட்டியாகி விடுகின்றது. பனிக் கட்டியைக் கண்ணால் காணலாம்; நாவினால் சுவைக்கலாம்; கைகளினால் பற்றவும் செய்யலாம்.

பரம்பொருளாகிய இறைவனும் முதலிலே பொறிப்புலன்களுக்கு எட்டாமல் வாயு நிலையிலே நின்று, பின்பு 'மேகத்தைப் போல அறிஞர்களின் புலன்களுக்கு மட்டும் புலப்படு பொருளாயமைந்து, பின் மழை நீரைப் போல் மக்கள் அனைவரும் பயனுறுமாறு உருவம் தாங்கி இறங்கியும், இரங்கியும் வந்து, நிறைவில் பனிக்கட்டியைப் போல கண்டும்; கேட்டும்; உண்டும்; உயிர்த்தும்; உற்றறியும் ஐம்புல இன்பத்தை நல்குவதற்கு 'விக்ரமாக' எழுந்தருளி அருள்பாலிக்கின்றான்.

குணங்குறிகடந்த முதல்வன் குணங்குறி தாங்கி வருவதற்குக் காரணம் உலக உயிர் களெல்லாம் எந்த வகையிலாவது உய்திபெற வேண்டும் என்ற அளப்பருங் கருணையே என்று கூறுகின்றது. சிவஞான சித்தியார்,

*'ஆரண மாக மங்க ளருளினா லுருவு கொண்டு*
*காரண னருளா னாகிற் கதிப்பவ ரில்லை யாகும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாரணன் முதலாயுள்ள சுரர்நரர் நரகர்க் கெல்லாஞ்*
*சீரணி குருசந் தானச் செய்தியுஞ் சென்றிடாவே'*

*'குறித்ததொன் றாக மாட்டாக் குறைவில னாதலானும்*
*நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமையானும்*
*வெறுப்பொடு விருப்புத் தன்பான் மேவுத னிலாமையானும்*
*நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளி னாலே'*

முதல்வனான இறைவன் அளவிலாற்றாலும், முற்றறிவு முற்றுத்தொழில்களும், இயல்பாகவே பாசத்தினீங்கிய தன்மையும் உடையவனாதலால், தான் நினைந்ததொரு திருமேனியை எடுத்துக்கொள்ளும் ஆற்றலுடையவன். அப்படி அவன் கொண்ட எண்ணிறந்த வடிவங்களுள் நமது கருமேனி கழிக்க வந்த திருமேனியே 'கணபதி' வடிவமாகும். ஒலியுருவில் உள்ள எழுத்து வரிவடிவில் அமைந்ததுபோல எழுத்துக்களின் தோற்றமாகிய பிரவணவமே வடிவமாகக் கொண்டு அன்பரகத் தாமரையில் அவரவர் பரிபக்குவத்திற்கேற்ப அருள் செய்கின்றார்.

இறைவனின் அளப்பரிய ஆற்றல்களுள் 'இடையூறு களைதல்' என்பதும் ஒன்று அந்த ஆற்றலின் நிலைக்களனாய் விளங்குபவர் வேழமுகன். இவருடைய திருவடிவம் ஆழ்ந்த சிந்தனையின் வெளிப்பாடு பிள்ளையாரின் ஒடிந்த தந்தம், மணிமுடி, ஒடியாத மருப்பு, துதிக்கை பேழைவயிறு இவற்றை நமது எண்ணக் கோட்டால் ஒருங்கிணைத்தால் கிடைப்பது ஓங்காரமாகிய பிரணவம். அதுவே ஐங்கரனின் அழகிய திருவுருவம்.

இனி இவரது திருவடிவத்தில் அமைந்துள்ள நான்கு திருக்கரங்கள் அமரர் கூறாகவும், வேழமுகம் விலங்கின் கூறாகவும், பேழை வயிறும், குறுங்கால்களும் பூதக்கூறாகவும், வலது பாகம் தந்தம் இன்மை பெண்கூறாகவும், இடது பாகம் தந்தம் உண்மை ஆண் கூறாகவும் கொண்டு நோக்கினால் உலகிலுள்ள அனைத்தையும் (அஃறிணை உயர்திணை) தன்னுட்க் கொண்டு அண்டமே தானாகி விளங்கும் அற்புதத்தினைக் காணலாம்.

**வேழமுகம்**

உலகில் விலங்குகள் பல இருக்க யானையைத் தனது முகமாக விநாயகர் கொண்டதன் காரணம் என்ன? சற்று சிந்திக்கலாம்.

யானை விலங்குகளுக்குள்ளே மிகவும் பெரியது; வலியது; எத்துணை பார்க்கையும் வருத்தமின்றிச் சுமப்பது; எத்துணை பெரிய படையாயினும் தப்பாமல் அழிக்கும் தகைமையது; நால்வகைப் படைகளுள்ளே தலைமைத் தன்மை பொருந்தியது; காலம் வருமளவும் காத்திருந்து பகையைத் தவறாமல் தொலைக்கும் சிறப்புடையது. இதனைப் புறநானூறு 'ஒளித்த துப்பு' என்று கூறும், ஏழுமுழம் உயர்ந்தது. ஐந்துறுப்பு நிலமுறத் தாழ்ந்தது வனசரம், நதிசரம், கிரிசரம் என்ற மூன்று பகுப்புடையது. உணவு கொடுத்துத் தன்னைப் பாதுகாக்கும் பாகர் தனது பாதத்தில் அடி வைத்தால் முடிமீது உயர்த்தும் பெற்றியது. பாகன், தன்னைத் தறியிலே கட்ட விரும்பினால் தானே சங்கிலியைக் கொண்டுபோய்க் கொடுத்து கட்டுப்படுவது. இசைக்கு வயப்படுவது சிறிய ஊசியைக் கூடத் தவறாமல் எடுக்கும் திறமையுடையது. இதனுடைய சிறுகண்களுக்கு எதுவும் தப்பாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு அருங்குணங்களையும் கரிமுகவனாகக் கருத்திற்கொண்டு நோக்கலாம். விநாயகன் தனக்குத்தானே தலைவனாய் வேறு நாயகனின்றி விளங்குபவர். அளவிறந்த ஆற்றலுடையவர். உலக இன்னல்கள் ஒருசேரத் தாக்கினாலும் வினையெதிரியை வேரறத் தொலைப்பவர். கணங்களுக்கெல்லாம் இவரே தலைவர். குண்டலினியில் விளங்கி மூலாதாரம் முதல் ஆக்ஞை வரை உயர்ந்து அதற்கும் மேலாக ஏழாவது நிலையாகிய துவாதசாந்தம் வரை ஒளிர்பவர். திருவடிகளும், அபய வரத கரங்களும் மறைத்தல் தொழிலைச் செய்யும் துதிக்கையுமாகி மிகநீண்டு பக்தர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களைப் பாதுகாப்பாகப் பற்றி நின்று பரிபாலிக்கும் கருணைக்கடல். பிரகிருதி தத்துவம், சுத்தவித்யா தத்துவம், ஈஸ்வரதத்துவம் என்ற மூன்றிடங்களிலும் நிலைப்பவர். பூவும் நீரும் கொண்டு தன்னடி வழிபடுபவர்களுக்கு முக்திப் பேறாகிய மிக உயர்ந்த பதவியை அளிப்பவர். பக்தியாகிய சங்கிலியால் கட்டுண்டு பக்தர்களுடைய உள்ளத்தறியில் கட்டுப்பட்டு நிற்பவர்.

*'உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனும் தறிநிறுவி உறுதியாகத்*
*தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி இடைப்படுத்தித் தறுகண் பாசக்*
*கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணையென்னும்*
*வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைத்துவரு வினைகள் தீர்ப்பாம்'*
*(பரஞ்சோதி முனிவர்)*

**திருவடி**

விநாயகருடைய திருவடிகள் இரண்டும் ஞானத்தின் நிலைக்களன்கள். வந்தவினையும் வருகின்ற வல்வினையும் நீக்கும் திறத்தன. தனது திருவடியிலே அறுகு இட்டு வணங்கியவர்க்கு அனைத்து நலன்களையும் அருள்பவன் ஐங்கரன், மற்றைய புற்களைப் போல எளிதிலே அகற்ற முடியாதது அறுகு. ஆறு ஆதாரங்களில் ஒளிரும் விக்னராஜனை பூசிக்க மண்ணிலே ஆறு இடங்களில் பற்றிப் படரும் அறுகு சிறப்பான தன்மையைக் கொண்டது. அறுகம் புல்லைக் கொண்டு அர்ச்சித்தால் இந்தப் பிறவியில் பதவியும், அடுத்த பிறவியில் முக்தியும் கிடைக்கும்.

*'பகுதி, தகுதி, விகுதியெனும் பாட்டின்*
*இகலிடையை இரட்டித்துத் தகவின்*
*அருச்சித்தால் முன்னாம்,அது கடையாம் கண்டீர்*
*திருச்சிற் சபையானைச் சேர்ந்து'*

என்பது வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் பாடல். இதன் பொருள் இகலிடையை இரட்டித்து என்றால் இடைநின்ற எழுத்தாகிய 'கு' வை இரட்டித்தால் (பகுதி - தகுதி - விகுதி) மூன்று 'கு' ஆறு 'கு' அறுகுவாகும் - அறுகினால் அர்ச்சித்தால் அது முன்னாம். பகுதி, தகுதி, விகுதியில் முதல் எழுத்துக்களை ஒன்று சேர்த்தால் கிடைப்பது பதவி. அது கடையாம் கண்டீர் - பகுதி, தகுதி, விகுதி யின் கடை எழுத்து மூன்று 'தி' முத்தியாகின்றது. அறுகர்ச்சனையின் பலனைப் பார்த்தீர்களா?

**பேழைவயிறு :** அண்டங்கள் அனைத்தும் அவனுள் அடக்கம் என்பதைக் குறிக்கின்றது.

**ஐந்து கரங்கள் :** அடைந்தவர்களைக் காப்பது அபயகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'ஓம் பூர்ணமத : பூர்ணமிதம்*
*பூர்ணாத் பூர்ணம் முதச்யதே*
*பூர்ணஸ்ய பூர்ண மாதாய*
*பூர்ணமேவ அவசிஷ்யதே.'*

என்ற ஈசாவாஸ்ய கூற்றுப் படி, பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்தாலும் மிகுந்திருப்பதும் பூரணமே என்ற மறைப்பொருளைக் குறிக்கும் ஆனந்தத்துவத்தின் குறியீடாகிய மோதகம் ஒரு கரத்தினில். உயிர்களைப் பிணித்துள்ள பாசத்தை அகல்விக்கும் கரமாக ஒரு கரம். ஆன்மாக்களை உயரவிடாமல் தடுக்கும் மும்மதப் பகையை ஒடுக்கும் அங்குசம் ஒரு கரத்தினில். தனது அடியவர்கள் எங்கிருந்தாலும் அவர்களது அன்பென நீண்டு பற்றிப் பாதுகாக்கும் ஊறு உணர்ச்சி மிக்க துதிக்கரமுமாக ஐங்கரப் பெரியோனாக அருள்பாலிக் கின்றான் வினைநீக்கும் வித்தகன்.

**கொம்பு** : பதிஞானம், பாசஞானம் ஆன்மாவிற்கு உரியது. பாசஞானம் ஒடிந்த கொம்பு. பதிஞானம் ஒடியாத கோடு. ஐந்தாம் வேதமெனப் போற்றப்படும் அறக்காப்பியமாம் மகா பாரதத்தை எழுதுவதற்குத் தனது வலக்கொம்பை ஒடித்து எழுத்தாணி ஆக்கிக் கொண்டான். உலகில் வாழும் உயிரினங்களுக்கு அழகை அளிப்பது அதன் உறுப்புக்களே. மயிலிற்கு அதன் இறகு. மானிற்குக் கொம்பு, அன்னத்திற்கு அதன் மென்மையான தூவி. அதுபோல யானைக்கு அதன் தந்தம்.

*'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்*
*யானை இறந்தாலும் ஆயிரம் பொன்'*

என்ற தொடர் அதன் விலைமதிப்பற்ற கொம்புகளைக் கருதியே எழுந்தது அப்படிப்பட்ட எழிலூட்டும் தனது தந்தத்தை ஒடித்து பாரதத்தை மேருவரையில் எழுதினான் என்றால் இவ்வுலகில் அறந்தழைக்க வேண்டும் என்ற தர்மசிந்தனையில் எழுந்த தன்னலமற்ற தியாகமே அதற்குக் காரணம்.

**தாழ்செவி** : உயிர்களின் மலவெப்பத்தைத் தணிக்கிறது. மேலும் அகன்ற செவி 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்: தக்கோரிடம் நிறையக் கேட்டறிந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றது. மேலும் சுளகானது தன்னிடம் சேர்ந்த பொருட் களின் தீயதை நீக்கி, நல்லவற்றை தக்க வைத்துக்கொள்கின்றது. அதுபோல நாமும் கேட்டறிபவற்றுள் தீயதைத் தவிர்த்து நல்லவற்றை ஏற்க வேண்டும் எனக் கூறாமல் கூறுகின்றது. சூர்பகர்ணனின் தாழ் செவிகள்.

**திருக்கண்கள்** : சூரிய, சந்திர, அக்கினியே திருக்கண்கள் 'ஹ்ரஸ்வ நேத்ர த்ரயாய' என்று சஹஸ்ரநாமம் கூறும்.

**பிறைமுடி** : பிறை நிலவைத் தரித்துள்ள தன்மை, குற்றங்கள் புரிந்தாரும் கூட, அதனை உணர்ந்து திருந்துவார்களாயின், அவர்களையும் பொறுத்து ஆட்கொள்ளும் கடலனைய கருணையைக் காட்டி நிற்கின்றது.

**உதரபந்தனம்** : நின்றால் குடை; அமர்ந்தால் ஆசனம்; படுத்தால் படுக்கையாக எப்படித் திருமாலுக்கு ஆதிசேஷன் பணி செய்கின்றாரோ; அதனைப் போலவே விநாயகருக்கு உதரபந்தனமாக அணிசெய்யும் அணியாக மார்பிலே திகழும் முப்புரிநூலாக விளங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தியிலும் மார்பிலும், கழுத்திலும், நெற்றியிலும், உச்சியிலும் பாம்பு படம் விரித்து இருப்பது யோக நிலையில் நிற்பவர்களுக்கு குண்டலினி தரிசனத்தைத் தருகின்ற ஓர் அபூர்வமான அநுபவமாக இலங்குகின்றது. மூலாதாரத்திற்கு உரியவன் விநாயகன்.

சாத்திரங்களில் மட்டுமல்ல சமூக நிலையிலும் கூட விநாயகர் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றார். மற்றைய தெய்வங்களைப் போல விநாயகரை வணங்குவதற்கு சாத்திரம், சம்பிரதாயம் எதுவுமே தேவையில்லை. ஒரு மஞ்சள் உருண்டையைப் பிடித்தாலும் அது பிள்ளையார் தான். ஒரு சாணி உருண்டையைப் பிடித்தாலும் அது பிள்ளையார் தான். விநாயகரை வணங்க வேண்டுமா? .......... ஆலயத்திற்குத்தான் செல்ல வேண்டும் என்று அவசியமில்லை. ஆற்றங்கரைகளிலும், அரசமரத்தடியின் வேரிலும், ஏன்.... நான்கு தெருக்கள் கூடுகின்ற சந்திகளிலும் கூட அவரைக் காணலாம். வானமே கூரையாக, வையகமே சிம்மாசனமாக ஆனந்தமாகச் காட்சியளிப்பர்.

வேழமுகவனின் வழிபாடு இந்தியாவில் மட்டுமல்ல. பர்மா, சயாம், கம்போடியா, திபெத், சீனா, ஜப்பான், தாய்லாந்து, மத்திய அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பரவி வேர்விட்டுச் செழித்திருக்கின்றது. பௌத்தர்கள், சமணர்கள், வைஷ்ணவர்கள் கூட பிள்ளையார் வழிபாட்டில் ஆர்வமுடன் ஈடுபடுகின்றனர். 'கணபதி ஹ்ருதயம்' என்ற மந்திரத்தை பௌத்தர்கள் உருவேற்றி செபிப்பதுண்டு புத்தர் ஆனந்தன் என்ற தன்னுடைய மாணவனுக்கு இம்மந்திரத்தை உபதேசித்தாகக் கூறப்படுகின்றது.

வேதங்களில் சோதிட சாத்திரங்களில், யோக நூல்களில், சுக்ர நீதி, அபிதான கோசம் போன்ற நூல்களில் விநாயகரது சிறப்பு கூறப்படுகின்றது. ஆதிசங்கரர் அமைத்த அறு சமயங்கள் கணபதியை முழுமுதலாகக் கொண்ட 'காணாபத்தியம்' சிறப்பிடம்பெறுகின்றது.

'அணோரணீயான் : மஹதோ மஹீயான்' : எ ன்பதற்கிணங்க அணுவில் அணுவாகவும், அண்டத்துள் அண்டமாகவும் பரந்திலங்கும் பெருமான் அடியார் துயர்தீர்க்க கண்டி மாநகர் கட்டுக்கலையில் 'ஸ்ரீ செல்வ விநாயகனாக' எழுந்தருளி கும்பாபிஷேகம் கொள்ளும் புனிதநாளில் அனைவரும் அவரடி பணிவோம். அமரவாழ்வு பெறுவோம்.

நலம் தழைக்குக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லம் காக்கும் நாயகி

**கலாபூஷணம் திருமதி.இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** B.A., M.A

இந்துமதம் கூறும் புருடார்த்தங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குமாகும். இந்து சமயி ஒவ்வொருவனும் இந்த நான்கினையும் உறுதிப் பொருளாகக் கொண்டு தனது வாழ்க்கையை அமைக்க வேண்டும். அறம் என்பது தர்மம் என்றும் கடமை என்றும் பொருள்படும். ஒருவன் தனக்குரிய கடமையை முறைப்படி நிறைவேற்ற வேண்டுமாயின், அதற்கு பொருட்செல்வம் இன்றியமையாததொன்றாகும். அதனையும் அறவழியிலேயே அவன் ஈட்டல் வேண்டும். அறவழி நின்று ஈட்டிய பொருளை அறத்தின் வழிசெலவு செய்து அறத்தைக் காக்க ஒருவன் ஒருத்தியுடன் இணைந்து வாழும் வாழ்க்கை இன்றியமை யாததாகின்றது. இதனை வள்ளுவப் பெருமான் ''இன்பம்'' என்கின்றார்.

ஒருவனது இல்வாழ்க்கையில் இல்லாளே முக்கிய இடத்தை வகிக்கின்றாள். இவளே ஒருவனின் செம்மைப் படுத்தப்பட்ட வாழ்க்கைக்கு துணையாகின்றாள். இவளே ''இல்லம் காக்கும் நாயகி''. இல்லத்திலிருந்து அற ஆட்சி செய்பவளும் இவளே! இல்லத்தரசி. மனையில் இருந்து மனை ஆட்சி நடாத்துபவளும் இவளே. இல்லமே இவளது சாம்ராஜ்யம். இவளது தியாகத்தையும் கருணையையும், பாசத்தையும், பக்குவத்தையும் எதிர்பார்த்து நிற்பவர்கள் முதற்கண் இவளது கணவனும், அடுத்து அவளது குழந்தைகளுமாம். இவர்களுக்குப் பின்னர், இவள் கடமையாற்ற வேண்டியது தனது பெற்றோர், மாமன், மாமி, சுற்றத்தார், விருந்தினர் முதலியோருக்காம்.

ஒரு இல்லத்தரசி கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள் பலதரப்பட்டவை. அவை முக்கியம் வாய்ந்தனவாகும். ஒரு நல்ல மனைவி நற்பண்புடையவளாக, கற்புடையவளாக, ''கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்'' என்னும் கருத்துடையவளாகத், தனது குழந்தைச் செல்வங்களிற்காக வாழும் தியாகத் தாயாகத் தன்னை அமைத்துக் கொள்ள வேண்டும்.

கணவனுடைய வருவாய்க்குத்தக்க செலவு செய்பவளாக மனைவி அமைந்தால் தான், கணவனால் நிம்மதியாக வாழமுடியும். வரவு ஒரு மடங்கிருக்க இருமடங்கு செலவு செய்யும் மனைவி வாய்ப்பாளேயானால் ஒருவனுக்கு இடர். வீட்டினுள்ளேயே இருப்பதாகக் கொள்ளலாம். இது மாத்திரமல்லாது ஒரு மனைவியிடம் அழகு, செல்வம், அறிவு போன்றவை இருந்தும் நற்பண்பு இல்லை எனில் அவர்கள் வாழ்க்கை, எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லாததாக இருக்கும். இதனையே வள்ளுவப்பெருந்தகை பின்வருமாறு கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*''மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை*
*எனைமாட்சித் தாயினும் இல்''*

இதனை இன்னமும் விளங்கக் கூறின் இல்லாள் ஒருத்தியிடம் நற்பண்பு உண்டானால் அவளிடம் இல்லாதது ஒன்றுமில்லை. அதேபோல் அவளிடம் நற்பண்பு இல்லையெனில், அவளிடம் இருப்பது ஒன்றுமில்லை என்று கொள்ளலாம்.

அடுத்து ஒரு பெண்ணுக்கு கற்பு என்னும் திண்மை உண்டாயின் அவளுக்கு அதை விடப் பெருமை வேறில்லை. கற்பு என்னும் உறுதி மனதில் இருத்தல் வேண்டும். அவ்வாறாயின் அவளுக்குக்காவலாக உயர்த்த நெடுஞ்சுவர்களோ, இரும்புப் பூட்டுக்களோ, காவற்காரர்களோ தேவைப்படா. கற்புடைய பெண்ணுக்கு காலனும் கட்டுப்படுவான். காலன் கவர்ந்த கணவன் சத்தியவானின் சாவித்திரியின் கற்பு மீட்டுத்தந்தது. கண்ணகியின் கற்பு தன் கணவன் கள்வனல்லன், களங்கமற்றவன் என்பதை நிரூபித்து, மன்னன் தன் பிழையை உணரவைத்தது, மதுரையைத் தீக்கரையாக்கி நீதி வழங்க வைத்தது. இந்த வகையில் கற்புடைய பெண் தன்னையும் காத்து தன்னைச் சார்ந்தவர் களையும் காத்து தனக்கமைந்த புகழையும் காக்கின்றாள் என்பது புலனாகிறது. இவளே பெண்ணுக்கு இலக்கணமாக அமைகின்றாள். இக்கருத்து வள்ளுவனார் மிக அழகாகவும் சுருக்கமாகவும் கூறியுள்ளார்.

*''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்''*

கற்பு எனப்படுவது பெண்ணுக்கும் ஆணுக்கும் பொதுவானது. ஒரு ஆண்மகனுக்கும் கற்பு அவசியம் என்பதைப் பெருமையுடன் எடுத்துக் கூறுவது அவசியம். ஒரு பெண் கற்புடைய மனைவியாக, பாசமிகுந்த தாயாக, ஏழைகட்குத் தர்மதேவதையாகப், பிற ஆடவனை நிமிர்ந்தும் பார்க்காத, பதிவிரதையாக, கற்புக்கனலாக, வாழவேண்டும் என்று கூறுகின்ற இந்துமதம், ஒரு ஆண்மகனுக்கும் கற்பு அவசியம் என்று சொல்லாமல் விடவில்லை எவ்வாறு ஒரு ஆண்மகன் தன் மனைவி கற்புடைய அணங்காக, மனம் வாக்குக் காயத்தால் பிற ஆடவனை நோக்காத பதிவிரதையாகத் துலங்க வேண்டுமென்று விரும்புகின்றானோ. அதேபோன்றே தனது மனைவியும், தனது கணவன் ஒழுக்கசீலனாக இருப்பதை எதிர்பார்ப்பாள் என்பதை அவன் அவசியம் உணரவேண்டும். இந்த வகையில் கற்பு ஆண் பெண் இருபாலருக்கும் வேண்டியதொன்றாகும். ஒவ்வொரு ஆண்மகனுக்கும் கற்பு என்பது அத்தியாவசியமானது என்பதை உணர்த்தவே வள்ளுவப் பெருமான் திருக்குறளில் ''பிறனில் விழையாமை'' என்ற அதிகாரத்திற்கு ஒரு தனி இடம் கொடுத்துள்ளார். இந்துக்களின் அரும்பெரும் பொக்கிஷங்களான இதிகாசங்களில் இராமாயணத்தைச் சற்று ஆழ்ந்து நோக்குங்கள்.

''ஒருவனுக்கு ஒருத்தி'' என்ற கற்புடைக் கோட்பாட்டை ஸ்ரீமத் நாராயணின் அவதார மான ஸ்ரீ ராமர். இராமர் கதையில் வாழ்ந்து காட்டுகிறார். அதே நேரத்தில் பிறன் மனைவியாகிய சீதாபிராட்டியை தகாதமுறையில் விரும்பிய குற்றத்திற்காக மிகுந்த சிவ பக்தனாக இருந்தும் வீணைக்கொடியோனான இராவணேஸ்வரனும், அவன் குலமும் அழிவுற்ற நிகழ்வை சற்று நோக்குங்கள். எனவே இல்லறத்தில் கணவனும் மனைவியும் ஒழுக்க சீலர்களாக இருத்தல் முக்கியமாகின்றது. இவ்வண்ணம் இருப்பின் இல்லறம் நல்லறமாகும். இல்லம் ஒரு கோவிலாகும். வாழ்க்கை ஒரு பூங்காவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனைவிக்கு வேண்டிய பணிவு, பொறுமை ஆகிய பண்புகள் பற்றி நோக்குவோம். மனைவியானவள் கணவனுக்கு அடங்கி நடந்து, அவன் சொல்லுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

*"பொறுமை என்னும் நகை அணிந்து*
*பெருமை கொள்ள வேண்டும் பெண்கள்"*

கணவனது வரவுக்குத் தக்க செலவு செய்தல் வேண்டும். கணவன் கோபமாக உள்ள நேரத்தில் தான் பொறுமையைக் கடைப்பிடித்தல் வேண்டும். வார்த்தைகளை அள்ளி வீசி அவனது சினத்தை மேலும் தூண்டுதல் கூடாது. அவன் ஓய்வாக, மகிழ்ச்சியாக இருக்கும் நேரத்தில் அவனது தவறுகளைச் சுட்டிக்காட்டி அவனைத் திருத்த முற்படலாம். தவறுகளை எடுத்துக்காட்டி அவற்றைத் திருத்தும் முறையிலே தான் ஒரு மனைவியின் சாதுரியம் தங்கியிருக்கின்றது. இதற்குப் பொறுமையும் விவேகமும் அவசியமாகும். கணவனிடம் இருக்கும் தவறுகளைத் திருத்தாது விடின் அஃது குடும்பத்தையே சீர்குலைத்து விடும். இந்த வகையில் ஒரு இல்லத்தரசிக்கு ஏகப்பட்ட பொறுப்புகள் உள. அவை முக்கியத்துவம் வாய்ந்தவையுமாகும். ஒரு நாட்டின் எதிர்காலமே அவள் கைகளில்தான் தங்கியுள்ளது. காரணம் குழந்தைகள் தான் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்கள். வீடு நன்றாக இருந்தாற்றான் நாடு நன்றாகவிருக்கும். குழந்தைகள் மேதைகள் ஆவதும், கெட்டுச் சீரழிவதும் ஒரு தாயின் கையிலே தங்கியிருக்கின்றது. வீட்டின் தனிப்பெரும் சக்தியே தாய்தான்.

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் கட்டிக்காப்பவள் பெண் தான். ஒவ்வொரு இனத்திலும் உருவாகும் பெரியவர்களுக்குப் பின்னால் ஒரு பெண் உந்து சக்தியாக இருப்பதை வரலாறு சுட்டி நிற்கின்றது.

ஒரு பெண் மணம் முடித்துத் தாயான பின்னரும் அவள் தனது பெற்றோருக்கு ஆற்றவேண்டிய கடமைகளும் உண்டு. அவள் அவர்களைத் தனக்குச் சுமையாகக் கருதமுடியாது. தன்னைப் பேணி வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கு அவள் என்றும் கடமைப்பட்டவள் தான். இதேபோன்று, தனது மாமன் மாமியார்க்கும் அவள் ஆற்ற வேண்டிய கடமைகள் உள. தனக்கு வாழ்க்கைத் துணையாகவுள்ள கணவனைப் பெற்றுத் தந்தவர்கள் அல்லவா அவர்கள்! இத்தனை பொறுப்புக்களையும் பலரும் பாராட்டும் வகையில் அவள் சிறப்புறச் செய்து முடிக்க அவள் பொறுமை, விவேகம், நிதானம் ஆகியவற்றைப் கடைப்பிடித்தாக வேண்டும்.

இந்த வகையில் அல்லாது கணவனுக்குப் பணியாது கணவனுடன் முரண்பட ஒரு பெண் முற்படுவாளேயானால் அவள் தனது நல்வாழ்வையே இழக்க நேரிடும். அத்தகைய ஒரு பெண்ணை நீக்கி வாழக் கணவனுக்கு உரிமையுண்டு என்பது சான்றோர் வாக்கு.

*"பத்தாவுக்கேற்ற பதிவிரதையானால்*
*எத்தாலும் கூடிவாழலாம் - சற்று*
*ஏறுமாறாக நடப்பாளேயானால்*
*கூறாமற் சந்நியாசம் கொள்"*

இது மாத்திரமா? ஒரு கற்புடைய பெண்ணுக்குத் தெய்வமும் இயற்கையும் அடங்கி அவளுடன் இணைந்து நடக்கும். கணவன் கூப்பிட்ட குரலுக்கு மனைவியானவள், ஓடிச் சென்று அவனது தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். "இப்போது தான் அமர்ந்தேன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கிடையில் எழுவதா?'' என்று மனம் சலிக்கக் கூடாது. அலுப்பு வரத்தான் செய்யும். ஆனால் கடமையாயிற்றே - ஆற்றித்தான் தீரவேண்டும். உதாரணத்திற்கு வள்ளுவப் பெருமானாரது வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றைப் பாருங்கள்.

கிணற்றிலே நீர் அள்ளிக் கொண்டு நிற்கின்றாள் வள்ளுவரின் மனைவி வாசுகி. நீர் நிறைந்த வாளி மேலே வர, துலா மேலே போய்க் கொண்டிருக்கின்றது. அந்த நேரத்தில் வாசுகியை அழைக்கின்றார். கிணற்று வாளியை அதே நிலையில் விட்டுவிட்டு, கணவரை நாடிச் செல்கின்றாள் வாசுகி. கணவரின் தேவையைப் பூர்த்தி செய்தபின்னர் மீண்டும் கிணற்றடிக்கு விரைகின்றாள் வாசுகி. அங்கே அவள் கண்ட காட்சி என்ன? துலாவும் வாளியும் அவள் விட்டுச் சென்ற அதே நிலையில் நின்றனவாம். இது தான் ஒரு பதிவிரதைக்குக் கிடைக்கும் வெகுமதி.

வள்ளுவப் பெருமானாரின் புலமைக்கும் பெருமைக்கும் இந்த வாசுகியும் காரணமாய் இருந்திருக்கலாம் அல்லவா? இத்தகைய எத்தனை வாசுகிகளை நாம் இன்று காண்கின்றோம்?

இந்த வகையில், ஒரு இல்லறம் நல்லறம் ஆக அமைய, ஆண்டவன் அருளுக்கு அடுத்ததாக அந்த இல்லத்தரசியின் பங்கு மிகபெரியதாகும். கணவன், குழந்தைகள், பெற்றோர், மாமன் மாமி, சகோதரர், சுற்றத்தார், தெய்வம், விருந்து, தென்புலத்தார், இத்தனை பேரையும் பேணி, அறவழி நின்று இல்லறத்தை நல்லறமாக்க வேண்டியது ஒவ்வொரு இல்லத்தரசியின் கடமையாகும்.

அன்று, இல்லத்தில் மனைவியானவள், குடும்பநிர்வாகப் பொறுப்பைக் கணவனிடம் விட்டுவிட்டு, அவன் சொன்னதைக் கேட்டு, தந்ததைப் பெற்று, நிதானமாகத் தன் கடமை களை ஆற்றி நிம்மதியோடு களிப்பாகக் காலங்களித்தாள். ஆனால் இன்றோ இல்லத்தரசி பணம் சம்பாதித்தலிலிருந்து இல்லத்தின் சகல பொறுப்புக்களையும் தன் தலையில் ஏற்று, குடும்ப நிர்வாகச் சுமையில் அமிழ்ந்தித் தத்தளிக்கின்றாள். வீட்டுக்கு, மளிகைப் பொருட்கள் வாங்குவதிலிருந்து, குழந்தைகள் கல்வி, சமையல் வரை எல்லாப் பொறுப்புக்களையும் வலிய இழுத்துப் போட்டு எதையும் நிதானமாகச் செய்யமுடியாமல் இடர்படுகின்றாள். இது தேவையா? இதற்கு விதி விலக்குகளும் உண்டு. இதனால் அவளது தேக ஆரோக்கியமும் கெடுகின்றது. இந்த நிலையில் அவள் நீண்டகாலம் உருப்படியாக ஒன்றையுமே செய்ய முடியாது. எனவே குடும்பத்தில் பொறுப்புக்களை, கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, இருவருமாக பகிர்ந்து செயலாற்ற வேண்டும். இதுவே சம்சார பந்தம் இனிமையாக இயங்க வழியாகும். இன்றைய கால கட்டத்தில் கணவன் வெளிநாட்டில் உழைப்பைத் தேடிச் சென்றதால், மனைவியின் பொறுப்பு அதிகரிக்கின்றது. இதில் கணவனை குறை கூற முடியாது. இதுவே காலத்தின் கோலம்.

மேலும், இந்திய சமுதாயத்தின் இலட்சியப் பெண்கள் ஆன சீதை, சாவித்திரி, நளாயினி, கண்ணகி போன்றவரை எடுத்துக் கொள்வோம். உதாரணமாக சீதை - இவள் ஒரு கற்புக்கரசி, தூய்மை மிகுந்தவள், தன்னையே அர்ப்பணம் செய்தவள், எல்லாத் துன்பங்களையும் சகித்தவள், இராமனிருக்கும் இடமே அயோத்தி எனக் கொண்டு, சுக போகம் தந்த அரண்மனை வாழ்வைத் துறந்து, தன் மென்மலர்ப் பாதங்கள் நோவ, கல்லிலும் முள்ளிலும் நடக்க, உறுதியுடன் ஸ்ரீ ராமன் பின்னே வனம் சென்றவள். வனத்திலே அவள் அனுபவித்த இன்னல்கள், துன்பங்கள் எண்ணிலடங்கா - சொல்லில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கா! இராவணனால் கவரப்பட்டு அசோகவனத்தில் சிறைவைக்கப்பட்ட போதும் அவள் இராமனைப் பிரிந்து துயரத்தால், சோகமீதுரப் பெற்று ''புகைபடிந்த ஓவியம்'' போன்றிருந்தாளே ஒழிய கற்பை இழக்கவில்லை. இறுதி வரை கற்புக் கனலாகவே வாழ்ந்து காட்டினாள். எத்துணைத் துன்பம் வந்தபோதும், அவை அனைத்தையும் தாங்கி, அவள் வாழ்ந்து காட்டியதாற்றான் இன்றும் அவள் மக்கள் மனத்திலே வாழ்கின்றாள். பிறர் எமக்கு இடர் விளைவித்தால், பதிலுக்கு அவருக்கு நாம் இடர் விளைவிப்போமானால், அச்செயல் துன்பத்தை மேன்மேலும் வளர்க்குமே ஒழிய, நீக்காது. தீயவைக்குத் தீங்கு இழைக்கும் செயல் உத்தம பெண்களிடம் கிடையா. அத்தகைய பண்பே சீதா பிராட்டியாரிடம் காணப்பட்டது.

அடுத்து, அசுவபதி மன்னனின் புத்திரி சாவித்திரியின் வாழ்க்கையை எடுத்துக் கொள்ளுங்கள். இவள் தான் கணவன் மேல் வைத்திருந்த அன்பு, பக்தி ஆகியவற்றின் முன் யமனாலும் நின்று பிடிக்க முடியவில்லை. கணவன் இறந்தபோது, கற்பின் உறைவிடமாக விளங்கிய இவள் யமதர்மராஜனுடன் போராடி தன் கணவன் உயிரை மீட்டாள். அவளுடைய பதிபக்தியையும், தன்னம்பிக்கையையும், மனஉறுதியையும், விவேகத்தையும், பணிவையும் அவதானித்த யமனே அதிர்ந்துபோய் அவள் கேட்ட வரங்கள் அளித்தான். நற்குணம் வாய்ந்த சற்குணவதியான சாவித்திரியின் முன்னால் யமதர்மராஜனே ஆற்றல் அற்றவனாகி விட்டான், என்றேல் இது பெண்ணின் பெருமையன்றோ!

மேலும் ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிட்டால் சாலப் பொருந்தும். ஒரு நாள், கௌசிக முனிவர், ஒரு மரத்தின் கீழே உட்கார்ந்திருக்கின்றார். அந்நேரம் அம்மரத்தின் மேல் இருந்த கொக்கு ஒன்று அவர் மேல் எச்சம் இட்டது. முனிவர் அல்லவா?! அவர் சீற்றம் கொண்டார். மரத்தின் கொம்பிலிருந்த கொக்கை சீற்றத்தோடு நோக்கினார். அக் கோபக் கனலால் கொக்கு எரித்து சாம்பலானது. முனிவர் எழுந்து தனது பயணத்தைத் தொடர்ந்தார். வழியிலே ஒரு இல்லம். அங்கு சென்று யாசித்தார். வெகுநேரம் ஆகியும் உள்ளே இருந்த ஒருவரும் அவரைக் கவனிக்க வரவில்லை. வீட்டு இல்லாள் அந்நேரம் தன் கணவனுக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருந்தாள். தனது கடமைகள் முடிநத பின்னரே வெளியே காத்திருந்த முனிவரை எதிர்நோக்கி வந்தாள். யாசிக்க வந்த தன்னை அத்தனை நேரம் காக்க வைத்தது முனிவருக்குச் சீற்றத்தை அளித்தது. கொக்குப் பறவையை நோக்கிய அதே சீற்றத்தோடு பெண்ணையும் நோக்கினார். ஆனால் அவரது சினம் இக்கற்புக்கரசியை ஒன்றும் செய்யவில்லை. பெண், முனிவரை நோக்கியவாறு கேட்டாள் ''கொக்கென்று நினைத்தாயா கொங்கணவா?'' முனிவர் அதிர்ந்து போனார் இது தான் கற்பின் மேன்மை.

இத்தகைய பெண்களையே நமது சமுதாயம் எதிர்பார்க்கின்றது. இத்தகையவர்களே எமது சமுதாயத்திற்குத் தேவையும் கூட இவர்கள் போன்றோரால் தான் வீடும் நாடும் சிறப்படையும். இந்த வகையில் ஒவ்வொரு இல்லத்தரசியும் விளங்கினால் இல்லம் கோயிலாகும். நாடு நலம் பெறும். இல்லம் காக்கும் நாயகி வீட்டோடு நாட்டையும் காத்திடுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து இலக்கியமும் சமூக விடுதலையும்

## சில குறிப்புக்கள்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**அறிமுகம்**

இன்றைய ஈழத்து இலக்கியச் சூழல் இலக்கிய நோக்கிலும் சமூக அசைவியக்கத்திலும் புதிய மாற்றங்களைக் கண்டிருக்கும் அதே வேளை,இலக்கியம் சமூக மாற்றத்திற்கான முக்கிய இயங்குதளமாக மாறியிருக்கிறது. சமூக விடுதலைக்கான இயங்குதளங்கள் செயற்படமுடியாத, செயற்படாத நிலையில், குறிப்பாகப் போருக்குப் பிந்திய இலங்கைச் சூழலில், இலக்கியத்தின் பங்கு முக்கியமாகிறது. குறிப்பாக, மக்களுக்கான இலக்கியங்கள் எனுமடிப்படையில்,ஈழத்து இலக்கியம்இன்று புதிய திசைவழிகளை வேண்டுகிறது. ஏனெனில்உலகின் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் முக்கியமான போராட்டக் கருவியாக இலக்கியம் எப்போதும் இருந்திருக்கிறது�ளூ இப்போதும் இருக்கிறது.

பண்பாட்டு இடைவெளிக்குள் சிக்குண்டு,பண்பாட்டு மௌனம்பேணுபவர்களாக எல்லோரும் வாழும் ஒரு சூழலிலேயே புதிய திசைவழிகட்கான தேவையைப் பேசவேண்டி யிருக்கிறது. அனைத்து அதிகாரங்களின் முன்னும் வாய்பேசா மௌனியாய் இருந்து, அதிகாரம் தனது அடையாளத்தை ெநருக்கடிக்குட்படுத்துகையிற்ம்இருட்டறைக்குள் இருந்து வெளிவந்த ஒருவரைப் போற் சமூகத்தை எதிர்கொள்ளும் மனநிலை இன்று பரவலாக உள்ள இச் சூழலில், மார்ட்டின் நெய்மோலரின் 'அவர்கள் என்னைத் தேடி வந்தபோது....'எனத் தொடங்கும் கவிதை நினைவுக்கு வருகிறது. இந்த நிலையில் மக்களையும் மக்களின் மனங்களையும் மீட்கப் புதிய வழிமுறைகள் தேவைப்படுகின்றன. அதற்கான முக்கியமான ஒரு கருவியாக இலக்கியம் அமைகிறது. இலக்கியம் மனிதர் களோடு ஊடாடுகிற போதிலும்,வாழ்க்கையும் இலக்கியமும் வெவ்வேறு.இந்தப் புதிரான சமன்பாட்டைத் தம் இருப்பிலும் எழுத்திலும் ஏககாலத்திற் தீர்த்துக்கொள்ள முயலும் பலருக்கு அது சமப்படாமற் போய்விடுகிறது. இரண்டும் ஒன்றோடொன்று முரண்பட்டும் ஒன்றையொன்று வழிநடத்தியும் நகரும் அபாயமான விளையாட்டாகத் தொடர்கின்றன. ஆனால் இலக்கியம் மக்களுக்கானதாக மாறும்போது இந்தப் புதிரான சமன்பாடு எழுத் தாளனுக்கு வாய்ப்பது உண்மையே.

சமூக மாற்றத்திற்கான இயங்குதளங்கள் விடாது மாறிவருகின்றன. இன்றைய உலக மயமாக்கற் சூழலில் மக்களை ஒன்றுதிரட்டும் வழிமுறைகள் அருகி வருகின்றன. புதிய வழிமுறைகளைத் தேடுவதும் புதிய இயங்கு தளங்களை நோக்கிச் செல்வதும் இன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளாக உள்ளன. ஈழத்தின் இன்றைய சூழலில் பண்பாட்டுத் தளச் செயற்பாடும் மாற்றமும் முன்னெப்போதையும் விட முக்கியமானவாயுள்ளன. மக்களை ஒன்று திரட்டுவது கடினமானதாயும் சிக்கலானதாயும் மாறியுள்ள ஒரு சூழலிற் பண்பாட்டுத் தளத்திலான செயற்பாடுகளே மக்களைச் சென்றடையக்கூடிய வழிமுறைகளாகவும் மக்களை ஒன்று திரட்டக்கூடிய மூலோபாயங்களாகவும் உள்ளன. இந்நிலையில், திட்டமிட்ட பண்பாட்டுத் தளச் செயற்பாடுகள் அவசியம். எந்தவொரு செயற்பாடும் மக்களை எவ்வளவு தூரம் சென்றடைகிறது என்பதே அதன் வெற்றியைத் தீர்மானிக்கிறது. எனவே தெளிவாகவும் இலகுவாகவும் சென்றடையும் வழிவகைகளைத் தேட வேண்டும். இதனாற்தான் இலக்கியத்தின் பங்கும் பங்களிப்பும் பற்றிப் பேசவேண்டியுள்ளது.இலக்கியத்தைப் பற்றி மட்டுமன்றிச், சமூகத்தையும் நிகழ்நிலைகளையும் பற்றிய தெளிவைப் பற்றியும் நடப்பன பற்றிய புரிதலைப் பற்றியும் பேசவேண்டியுள்ளது.அப் புரிதல்களே சமூக விடுதலைக்கு இலக்கியங்கள் ஆற்றவேண்டிய பங்குபணிகளை உணர உதவும்.

**நெறிமுகம்**

ஒரு சமூகத்தின் முக்கியமான அடையாளமாக மொழி இருக்கிறது. மொழியின் அழகியலையும் மொழியையுஞ் செழுமைப்படுத்துவனவாக இலக்கியங்கள் அமைவது இயல்பு. சமுதாய வளர்ச்சி மொழியைப் பாதிக்கிறது. சமுதாய வளர்ச்சியிலும் மாற்றத்திலும் மொழி முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு மொழி அதன் சமுதாய வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கத் தவறும்போது தன் சாவை எதிர்நோக்குகிறது. நடைமுறையே மொழியின் வளத்தையும் வளர்ச்சியையும் நிர்ணயிக்கிறது. இவ்வாறிருக்க, மொழி பற்றிய விறைப்பான பார்வைகள் ஒருபுறமும் பிறமொழிகளை கண்மூடித்தனமாக கலப்பதுமறுபுறமுமாகப்பண்டிதர்களும் நவீனம் பேசுவோரும் மொழியின் சாவைவிரைவுபடுத்தி, மொழியைக் கழுவேற்றுகிறார்கள். இது தமிழுக்கு மிகப் பொருந்தும். ஆயினும் இங்கு சொல்ல வேண்டியஒரு விடயம் உண்டு. எந்த மொழியாலும் அதன் சமுதாயச் சூழலின் மாற்றங்கட்கு ஈடுகொடுக்க முடியும். அவ்வாறு ஈடுகொடுக்க இயலாமற்போகத் தேவையில்லை. ஏனெனிற் புதிய சமுதாயமும் அதனுடன் தொடர்பான புதிய சிந்தனைகளும் சமுதாயத்தின் உறுப்பினர் களாலேயே உருவாகின்றன. தேவைகளையொட்டி மொழியில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவற்றைச் சரிவர உள்வாங்குவதோடு தனது அடிப்படைகளையும் பேணுவதன் மூலம் மொழி வாழும்.

இது ஒருபுறமிருக்க, இலக்கியங்களை அரசியல் நீக்கித் தமது படைப்புகளை அரசியலற்றன என படைப்பாளிகள் அறிவிப்பதும் ஒரு போக்காகியுள்ளது. குறிப்பாகப், போருக்குப் பிந்திய சூழலிற் தங்களது படைப்புக்களை அரசியலற்றன எனக் கூறும் அதேவேளை, தங்களது படைப்புக்கள் சமூகத்தைப் பிரதிபலிப்பதாகவும் சொல்கிறார்கள். எத்தகைய ஒரு முரண்நகை இது! உண்மையில் இது ஒரு நோய். தங்களை 'அரசியல் கடந்த' படைப்பாளிகளாக்கும்ஒரு முயற்சியின் வெளிப்பாடே இது. பிரச்சனைகளும், இன்னல்களும், அடக்குமுறையும் நிறைந்த ஒரு சமூகத்தைப் பிரதிபலித்து இலக்கியம் படைப்பவரால் அரசியலற்று இலக்கியம் படைக்கலாம் என்பது எவ்வளவு பெரிய பொய்யோ,அத்தகைய படைப்பெதுவும் சாரமற்ற வெற்றுச்சரக்கு என்பதுஅதேயளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய். இவ்விடத்திலேயே மக்கள் இலக்கியத்தின் தேவை பற்றியும் சமூக மாற்றத்தில் அதன் பங்கு பற்றியும் பேச வேண்டியிருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகள் யாவற்றுக்கும் சாட்சியாக இருப்பவை பப்லோ நெருடாவின் கவிதைகள். நெருடாவின் கவிதையின் உள்ளாந்த கூறுகளில் ஒன்று அரசியல். தனது கவிதையில் இருந்து அரசியலைப் பிரிக்க விரும்புகிறவர்கள் கவிதையின் எதிரிகள் என்று நெருடா சொன்னார். மக்களுக்காக பாடியதால் நெருடா பிரச்சாரக் கவிஞன் என்று தூற்றப்பட்டார். மக்களுக்காகத் தொடர்ந்து எழுதுவதன் மூலம் அவர் தன்னைமக்கள் கவிஞனாக நிறுவிநிலைநிறுத்தினார். இவ்வாறு, சமூக அக்கறை என்பது படைப்பாளியின் அளவுகோலாகிறது.

மக்களுக்கான கலை இலக்கியங்கள் எனும் போது மக்களைச் சென்றடையும் பண்பு முக்கியமாகிறது. மக்கள் பரவலான வரவேற்கும் கலை-இலக்கிய வடிவங்களில் ஒடுக்கப் பட்ட மக்களின் முன்னேற்றத்துக்கும் விடுதலைக்குமான ஆக்கங்களை வழங்குவதும் மக்களை நேரடியாக ஈடுபடுத்தக்கூடிய கலை-இலக்கிய வடிவங்களை ஊக்குவிப்பதும் மக்கள் சார்ந்த முக்கியஇலக்கியப்பணிகள. எவரும் விளங்கற்கரிய, வலிந்து கடின மாக்கியபடைப்புக்களை உயர்வாகவும் தெளிவும் எளிமையுங் கொண்டவற்றைத் தாழ் வாகவும் எண்ணி மயங்கும் போக்கு சில புத்திஜீவிகளது சிந்தனைகளில் இறுகிக் கிடக்கிறது. மக்களுக்கு எட்டாதவை மக்களுக்கான இலக்கியங்களாகா. இப் பின்னணியில் இன்றைய சூழலின் சில அம்சங்களைக் கருத்திற்கொள்வது கலை இலக்கியத்தின் தேவையையும் புதிய இயங்குதளங்களின் அவசியத்தையும் விளங்க உதவும்.

- வன்முறைசாரா இயக்கங்கள் பல ஆண்டுகளாக எல்லா ஜனநாயக நிறுவனங்களின் கதவுகளையும் தட்டிக்கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் அவை வெறுப்புடன் நிராகரிக்கவும் அவமதிக்கவும் படுகின்றன. ஆயினும் அகிம்சை பற்றித் தொடர்ந்து பேசப்படுகிறது. மக்கள்,தவிர்க்கவியலாது, தங்கள் போராட்ட உத்திகளை மாற்றிக்கொள்ள விரும்புவார்கள். மக்களின் முன் வேறு தெரிவுகட்கு இடமில்லாமற் செய்யப்பட்டிருக்கிறது. அகிம்சையைப் போதிப்போர், கடந்த காலத்தையும் எதிர் காலத்தையும் விலக்கி வைத்து, உடனடி நிகழ்வுகளின் மீதும் நிகழ்காலத்தின் மீதுமே கவனங் குவிக்கிறார்கள். இது பிழையானது மட்டுமன்றி மோசடியானதுமாகும். தகவற் தொடர்பு, சந்தை எனும் இரு புதிய சூத்திரங்கள் அடையாளப்படுத்தும் ஒரு யுகத்தில்,'நவீனமாக இருப்பது' என்பது 'தகவமைத்துக் கொள்வது அல்லது அடி பணிவது' என்ற ஒற்றை விதிக்குக் கீழ்ப்படிவதேயாகும் என இவர்கள் சொல்கிறார்கள். இன்றைய உலகப் பொருளாதாரத்தில், வெகுசன ஊடக நிறுவனங்கள் மிகப் பெரிய நிறுவனங்களாக இருக்கின்றன. சமூகம் எப்படி இருக்கிறது என்பதை அல்லாது,அது எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்ற மிகப் பெரிய கண்ணாடியை அவை கொண்டுள்ளன. தகவல் 'திரட்டும்' பல்தேசியக் கம்பெனிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜன ஊடகங்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட இந்த யுகத்தில் அகிம்சைப் போராட்டம் சாத்தியமா என்ற கேள்வி மீண்டும் மீண்டும் எழுகிறது.
- உலகப் புகழ்பெற்ற நாடகாசிரியர் அரியேல் டோர்குமன் கேட்டதை நினைவுகூரல் தகும். 'சித்திரவதைப்பட்டோரும் சித்திரவதையாளர்களும் எவ்வாறு ஒரே இடத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானாமாகவாழமுடியும்? ஒடுக்குமுறையாற் பீதியுண்ட ஒரு நாட்டில் இன்றளவும் வெளிப்படையாகப் பேசுதற்குப் பயம் எங்கெங்கும் நிறைந்திருக்கையில், அந்த நாட்டை எவ்வாறு வேதனையிலிருந்து மீட்க முடியும்? பொய்யே வழமையாகிவிட்ட போது உண்மையை எட்டுவது எப்படி? நாம் வரலாற்றின் கைதிகளாகாமல் எதிர் காலத்தை உயிர்ப்புடன் வைத்துக் கொள்வது எப்படி? வருங்காலத்திலும் இவை நேரலாம் எனக் கருதாமல் அதை முற்றாக மறுத்தல் எவ்வாறு இயலும்? சமாதானத்தை உறுப்படுத்த உண்மைகளைத் தியாகம் செய்யத்தான் வேண்டுமா? கடந்த காலத்தை நாம் மறுக்கும் போதும் நிராகரிக்கும் போதும், உண்மை நம்மிடம் வந்து முணுமுணுக்கையிலும் கதறுகையிலும் அதன் விளைவுகள் என்னவாக இருக்கும்? எல்லாவற்றையும் விட மிகப் பெரிய மனத்துயர் யாதெனில், தேசத்தில் ஜனநாயக நிலையை உருவாக்கும் மனோநிலையை அழித்துவிடாமல் இவ்விடயங்களை நாம் எதிர்கொள்வது எவ்வாறு?'

- மதம் ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு மதவாத /பாசிசத்தை அடைய எப் போதுமே முயலும். அவ்வாறான ஒரு நிலையை மதம் எட்டும் பட்சத்தில் மதச் சார்பான சட்டமூலங்களை நிறைவேற்றுவதும் எனைய மதங்களையும் நம்பிக்கை களையும் தடுப்பதும் போன்ற செயற்பாடுகட்கானமுயற்சிகள் முழுவீச்சுடன் மேற் கொள்ளப்படும். ஆனால், அப்போதும் ஜனநாயகமும் மதச்சார்பின்மையும் மறுக்கப் படாதது போல ஒரு தோற்றம் காட்டப்பட்டபடும். மதச்சார்பற்ற சக்திகள் தமக்குள் அணிதிரளவிடின் மேற்சொன்ன அபாயங்கள் நிகழுங் காலம் தொலைவில் இல்லை. உடனடியான வெளிப்படையான விவாதம் ஒன்றே இம் முன்முயற்சிகட்கான உடனடித் தேவை. அது மதச்சார்பற்ற சக்திகள் என்பவற்றுடன் நின்றுவிடலாகாது அதற்கப்பாலான நேசசக்திகளை ஒருங்கிணைக்கின்ற, ஒன்றுசேர்க்கின்ற ஒரு பணி எம்முன் உள்ளது. ஏனெனில் மதச்சார்பின்மை எவ்வளவு பலவீனமாக உள்ளது என்பதைக் கடந்த காலம் தெளிவாகக் காட்டியுள்ளது.

- மதவாதச் சக்திகள் கலாசார மற்றும் சமூகத்துறைகளுட்தொடர்ந்து முன்னேறிவரு கின்றன. இது மிக ஆபத்தானது. மதவாதிகள் பண்பாட்டையும் சமூகத்தையும் மதத்தின் ஒரு பகுதியாக கட்டமைக்கின்றனர். இதனாலேயே பெரும்பான்மையோர் மதச் சார்பற்று இருந்தாலும், மதவாதச் சக்திகள் வெல்லக் கூடியதாக இருக்கிறது. இது அபாயகரமானது. மதமும் பண்பாடும் வேறுபாடற்றவை, இரண்டும் அடிப் படையில் ஒன்றே என்ற தோற்ற மயக்கத்தை உருவாக்குவது மதவாதிகளின் இன்றைய தந்திர மாக உள்ளது. மேலும், மதவாத அரசியலுள் மக்களை அணிதிரட்டுவதும் இங்கு நிகழ்கிறது. உலக வரலாற்றில் மத,பண்பாட்டு முன்னேற்றங்கள் சமுதாய முன்னேற்றத்தோடு பின்னிப்பிணைந்தே இருந்து வந்துள்ளன. அதைக்கொண்டு பண்பாட்டு ஒருமைப்பாட்டுக்கு மதமூலாம் பூசும் செயற்பாடுகள் நடந்தேறுகின்றன. அதனாலேயே 'பிரிக்க முடியாத கூறுகளின்உருமாற்றம்' என அதை அந்தோனியோ கிராம்ஷி குறிக்கிறார்.

- மதச் சார்பின்மைக்கான செயற்பாடுகளும் ஜனநாயகத்திற்கான போராட்டமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாதவை போற் தெரியலாம். ஆனால் அது உண்மை யல்ல. மனித உரிமைக்காகப் போராடும் அனைவரும் மதச் சார்பின்மைக்காகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடுகிறார்கள். ஜனநாயகத்தின் அவசியத்தை வலியுறுத்தும் அனைவரும் மதச் சார்பின்மையின் அவசியத்தையும் வலியுறுத்துகிறார்கள். மதவாதத்திற்கெதிரான போராட்டம் பிரசாரத்துடன் மட்டும் நிற்கமுடியாது அது பண்பாட்டு அணிதிரட்டலை நோக்கி நகரவேண்டும். பண்பாட்டு அணிதிரட்டலே மதச்சார்பின்மைக்கான போராட்டத்தை முன்னெடுக்கச் சிறந்த வழிமுறையாகும். மத நம்பிக்கைகளில் ஊறிப்போயுள்ள சமூகத்தை மீட்டெடுக்கச் சிறந்த மூலோபாயம் பண்பாட்டு அணி திரட்டலே.

இப் பின்னணியிலேயே ஈழத்து இலக்கியத்தின் அவசியத்தையும் புதிய இயங்குதளங் கட்கான வழித்தடங்களையும் தேட வேண்டியுள்ளது. குறிப்பாகச் சமூக விடுதலையை அடையும் பாதையில் இலக்கியத்தின் பணி தவிர்க்கவியலாதாவதோடு அடையாளங்களைத் தாண்டி மனிதர்களை ஒன்றிணைக்கும் பணியை இலக்கியங்கள் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் அவ்வாறான படைப்புக்கட்குஎதிர்ப்புக்களும் முத்திரை குத்தல்களும் இடம் பெறுகின்றன. சமுதாய உணர்வுக்கோ மனித இன மேம்பாட்டுக்கோ, மனித சமத்துவத்துக்கோ போராடும் குரல்கள் செவ்வியற் கலைகளிலிருந்து மட்டுமல்லாமல், உன்னதமானவை என்று கொண்டாடப்படும் அண்மைக்காலப் படைப்புக்களினின்றும் கவனமாகக் களையப்படுகின்றன.

அடக்குமுறையும் சுரண்டலும் உள்ள வரை, எதிர்ப்பும் போராட்டமும் இருக்கும். எதிர்ப்பும் போராட்டமும் கலை இலக்கிய வடிவங்கள் ஊடாகவும் எப்போதும்தம்மை வரலாற்றில் வெளிப்படுத்தி வந்துள்ளன. போராட்ட இலக்கியம் என்பது எதிர்ப்பு இலக்கியத்தின் வளர்ச்சி பெற்றவெளிவெளியானது வடிவம். அது தெளிவான போராட்ட இலக்குகளை உடையது. போராட்டத்திற்கான வழியைக் காட்டுவது.

இலக்கியத்தை விடுதலைப் போராட்டத்திற்கு ஏற்ற ஒரு வலுவான கருவியாக்குவது எவ்வாறு என்ற கேள்வியின் அடிப்படையில் இலக்கியத்தை அணுகும்போது, நமக்குச் சில தீர்வுகள் கிட்டுகின்றன. வெளிவெளியாகவே இவ்வாறான உணர்வுபூர்வமான நோக்கின்றிப் படைக்கப்படும் சமூகச்சார்பானதும் மக்களது நலன் சார்ந்ததுமான ஆக்கங் களுடன் இத் தீர்வுகள் முரண்பட அவசியமில்லை. ஏனெனில் ஒவ்வொரு படைப்பாளியி னதும் சமூகப்பார்வை அவரது ஆக்கங்களிற் தன் முத்திரையைப் பதித்தே இருக்கும். அப்படியானால் விடுதலைப் போராட்ட இலக்குடைய ஒரு மக்கள் இலக்கியக் கோட்பாட்டுக் கெனச் சிறப்பான ஒரு அணுகுமுறை தேவையா என்ற கேள்வி எழுகிறது.

மக்கள் இலக்கியம் என்பதை மக்களின் நன்மைக்கான இலக்கியம், மக்களை விழிப்பூட்டும் இலக்கியம், மக்களைக் கிளர்ந்தெழுந்து போராடத் தூண்டும் இலக்கியம், மக்களால் உருவாக்கப்படும் மக்கள் நலனுக்கான இலக்கியம் என்று சொல்லலாம். எனவே, மக்கள் இலக்கியத்திற்கு அவசியமான பண்புஅத்தகைய இலக்கியம் மக்களிடமிருந்து அந்நியப்படாமையே. மக்களை விடத் தன்னை உயர்வாகக் கருதுகிற படைப்பாளி மக்கள் இலக்கியம் படைப்பது கடினம். ஏனெனில் அவருடைய கருத்தில், மக்கள் அவரையொத்த படைப்புத்திறன் அற்றவர்களாக மட்டுமன்றி,அவருடைய படைப்பைச் சரியாக உணரும் திறன் அற்றவர்களாகவும் இருப்பர். எனவே மக்களுக்கான இலக்கியங்களை நாம் படைப்பது தேவையாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறைமுகம்**

இங்கு நாம் பேசுகிற சமூக விடுதலை தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கைக்கெட்டாத தூரத்தில் இருப்பது போன்ற தோற்றத்தைத் தருமாறான நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. கடந்த முப்பதாண்டுகளுள் இலங்கையின் தமிழ் நடுத்தர வர்க்கத்தினர் இடையே கர்நாடக இசை, பரத நாட்டியம் போன்ற துறைகளில் அக்கறை பெரிதும் வளர்ந்துள்ளது. பல லட்சங்கள் செலவிட்டு, அரங்கேற்றங்கள் ஆடம்பரமாக நடைபெறுகின்றன. இங்கு இசையும் நடனமும் பற்றிய ஈடுபாட்டை விடப் போட்டி, அந்தஸ்து மனோபாவங்களே இயக்குஞ் சக்திகளாக இருந்துவந்துள்ளன.அவை சமூக விடுதலையை வேண்டும் மக்கள்திரளுக்கான நற்குணங்களல்ல.

கிராமச் சூழலிலிருந்து புலம் பெயர்த்து என்.ஜி.ஓக்களாலும் அரச நிறுவனங்களாலும் நகரங்களில் மேடையேறுகிற கிராமியக் கலைகளும் தமது இடப் பெயர்வுடன் சேர்ந்து தமது சமூக அடையாளத்தையும் சமூகப் பணியையும் இழந்து பண்பாட்டு வணிகத்தின் பகுதியாகி விடுகின்றன. எனினும் நம் முன்னே ஒரு புறம் நவீனத்துவத்தின் பேரால் ஒரு வகையான இசை, நாட்டிய மரபுகள் ஒரு கும்பற் கலாச்சாரமாக வளர்க்கப்படுகின்றன. அவற்றில் இளையோர் திரள்திரளாகப் பங்குபற்றினாலும் அவை எவ்விதமான சமூக நோக்கும் பார்வையும் அற்று இளைய தலைமுறையினரைச் சீரழிவுப்பதையிலேயே இட்டுச் செல்ல முனைகின்றன.இன்னொரு புறம், மரபின் பேரால் சமூகத்துடன் எவ்விதமான ஒட்டும் உறவும் அற்றவாறு மேடைக் கவர்ச்சியுடன் சேர்த்து ஒரு பாரம்பரிய இசையும் நடனமும் நமக்குப் பரிமாறப்படுகின்றன. இதன் மூலம் இலங்கையைச் சேர்ந்த கலைஞர் களின் விருத்திக்கோ "முக்கியமாகச் சமூக உண்ர்வுடைய கலைப் படைப்புகளின் உரு வாக்கத்திற்கோ" நன்மை இல்லை என்பதுடன், அவை பாதகமான சமூக விளைவுகளையே ஏற்படுத்துகின்றன.

சமூக விடுதலை என்பது பண்பாட்டு விடுதலையும் ஆகும் என்பதை நினைவில் கொள்ளல் நன்று.ஏனெனில் ஒன்றில்லாமல் மற்றது இல்லை. படைப்பாளிகள் இதை நினைவிற் கொள்ள வேண்டும். புதிய பண்பாட்டை உருவாக்குவதற்கான பணியில் இலக்கியம் முன்னிற்க வேண்டும். அப்போதுதான், பண்பாட்டுச் சீரழிவிலிருந்து சமூகங் களை மீட்டுருவாக்க முடியும். அவ்வாறு மீட்டுருவாக்கிய சமூகங்களே சமூக விடுதலைக் கான போராட்டத்தில் முக்கிய பங்காற்றுவன. அவ்வகையில், இன்று ஈழத்துத் தமிழ் இலக்கியம் முக்கியமான திருப்புமுனையில் நிற்கிறது எனவும் அதேவேளை சமூக விடுதலைக்கான முன்னிபந்தனைகளில் ஒன்றாக மக்கள் இலக்கியங்களின் தேவை உணரப்படுகிறது எனவும்உறுதியாகச் சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியைகளின் கௌரவிப்பின் போது



தமிழ்ச் சங்க நிகழ்வொன்றில் முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலைக்கு நிதி வழங்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்
திரு பைசால் காசிம் அவர்கள்



இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம அதிதியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
திரு பெ. இராதாகிருஸ்ணன் அவர்களுடன் கல்லூரி முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசளிப்பு, கலைவிழா நிகழ்வுவில் பிரதம அதிதிகளாக
முன்னாள் பாளுமன்றமன்ற உறுப்பினர் திரு மனோ கணேசன் தம்பதியினர்



இல்ல மெய்வல்லுநர் நிகழவில் பிரதம அதிதியாக
கொழும்பு மாகாண சபை உறுப்பினர் Dr. N. குமரகுருபரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட போது முன்னாள் மேல் மாகாண முதலமைச்சர் கௌரவ கூரே அவர்களால் கௌரவிக்கப்படுதல்



சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட போது கல்லூரியில் நடைபெற்ற விழாவில் கௌரவ மனோகணேசன் அவர்களால் கௌரவிக்கப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்வி அதிகார்கள், அதிபர்களால் கௌரவிக்கப்பட்ட போது




மாணவத் தலைவர்களுடன் கல்லூரி முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் நவீன தமிழ்க் கவிதையின் தோற்றம்
## மறுமதிப்பீடு

பேராசிரியர் செ.யோகராசா

ஈழத்தில் நவீன தமிழ்க் கவிதையின் தோற்றத்தினை நாற்பதுகளளவில் முகிழ்த்த 'மறு மலர்ச்சிக் குழு' வுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதே அண்மைக்காலம் வரையும் ஆய்வுலகின் வழக்கமாக இருந்து வந்துள்ளது. ஆயினும், இவ்விடயம் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது, ஈழத்தில் முப்பதுகளளவிலேயே நவீன தமிழ்க் கவிதை முகிழ்க்கத் தொடங்கியுள்ளமை தெளிவாகிறது. அஃது யாழ்ப்பாணம், மலைநாடு ஆகிய இரு பிரதேசங்களில் நிகழ்கின்றது.

முப்பதுகள் நாமனைவரும் அறிந்தது போன்று ஈழத்தின் அரசியலில் மட்டுமன்றி கலை, இலக்கிய, பத்திரிகை வளர்ச்சியிலும் முக்கியமானதொரு காலகட்டமாகும். பத்திரிகை என்று கவனிக்கும் போது யாழ்ப்பாணத்திலிருந்து ஈழகேசரி(1930), கொழும்பிலிருந்து தினகரன் (1932), வீரகேசரி (1930), மலைநாட்டிலிருந்து தேசபக்தன் (1929) முதலியன வெளிவரத் தொடங்கியமை கவனிப்புக்குரியதொரு விடயமாகும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையிலே ஈழகேசரி பத்திரிகையின் வரவு நவீன இலக்கிய வளர்ச்சியின் ஆரம்பத்தினைக் குறித்து நிற்கின்றது எனலாம். குறிப்பாக, ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் 'ஈழகேசரி' எழுத்தாளர் பெற்றுள்ள முதன்மை இடம்போன்று ஈழகேசரிக் கவிஞர்களும் எமது கவனத்துக்குரியவராகின்றனர்.

ஈழகேசரியில் முப்பதுகளளவில் கவிதை எழுதியோர் பட்டியல் அல்வையூர் மு. செல்லையா, மனுப்புலியார், மு.நல்லதம்பி, அகிலேஸ்வர சர்மா, 'உண்மை விளம்பி', 'சத்தியநாதன்' (சற்றுப்பிற்பட) யாழ்ப்பாணன், வேந்தனார், 'சாரதா' என்றவாறு நீண்டு செல்கிறது. இவர்களது கவிதைகள் இரு விதங்களில் முக்கியம் பெறுகின்றன.

மேற்கூறிய இரு விதங்களிலொன்று, ஈழத்தில் அரசியல் கவிதைகளில் முகிழ்ப்பு இவர்களுடன் ஆரம்பித்தமை. இது பற்றி சிறிது விரிவாகப் பேச வேண்டும். ஈழத்தில் முப்பதுகளளவில் டொனமூர் குழுவினரின் சிபார்சு காரணமாகச் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை, ஈழச் சமூகத்தில் அரசியல் விழிப்புணர்ச்சி பரவலாக ஏற்பட வழி வகுத்தது. ஆயினும்,ஈழத் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகத்தைப் பொறுத்தவரையில், இவ்வேளையில் இந்திய, தமிழக அரசியலில் காந்தி தலைமையில், ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் வழிவந்த சிந்தனைகளே கூடுதலான பாதிப்பினை ஏற்படுத்தின. காந்தீயச் சிந்தனைகள் இங்கு ஈழகேசரியூடாகவும், யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஊடாகவும் பரவின. இந்திய, தமிழக அரசியல் பிரமுகர்கள் அடிக்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு விஜயம் செய்தனர். இத்தகு சூழலில், 'ஈழகேசரி' கவிஞரது தேசிய உணர்வு 'இரட்டைத் தேசிய' உணர்வாக விளங்கியது. இவர்கள் ஈழத்து விடுதலையையும், இந்திய விடுதலையையும் ஒன்றாகவே அல்லது இரு கண்களாகவே கருதினர். இந்திய தேசியத் தலைவர்களைப் போற்றிய அதேவேளையில், ஈழத் தேசியத் தலைவர்களையும் போற்றினர். கவிஞர் யாழ்ப்பாணன் கவிதைகள் இதற்குச் சிறந்த சான்றுகளாகின்றன.

ஈழகேசரி காலக் கவிதைகளின் மற்றொரு முக்கியத்துவம் ஈழகேசரி கவிஞர்கள் சமூகச் சீர்திருத்த நோக்குடைய கவிதைகளை இயற்றியுள்ளமையாகும். இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலே பாவலர் துரையப்பாபிள்ளையும் அத்தகைய பாடல்கள் சிலவற்றைப் பாடியுள்ளமை நாமறிந்ததுதான். ஆயினும், அவரது காலத்தில் சமூகச் சீர்திருத்த உணர்வு பரவலாகவோ பிரக்ஞை பூர்வகமாகவோ ஏற்படவில்லை என்பதனை நாம் கவனிக்க வேண்டும். இப்போது நிலைமை வேறு. காந்தீயத் தாக்கம், ஈழகேசரி பத்திரிகையின் செல்வாக்கு, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் செயற்பாடுகள் என்பன காரணமாக சமூகச் சீர்திருத்த உணர்வு பிரக்ஞை பூர்வமாக இப்போது ஏற்படலாயிற்று. இத்தகைய சமூகச் சீர்திருத்த விடயங்களுள் சாதிப் பிரச்சினை முக்கியமானதொரு இடத்தைப் பிடித்திருந்தது. இக்காலகட்டத்தின் இத்தகைய கவிதைப் போக்கினை அறிந்து கொள் வதற்காக, 'சத்தியநாதன்' என்பவர் எழுதிய கவிதையொன்றின் ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது.

*மானுட ரென்று வாழ்வீர் - நீங்கள்*
*மந்தைக ளானீரோ?*
*ஞானமு னிவன் சொல்லை - நீங்கள்*
*நயம்பட வுணரீ ரோ?*

*தீண்டப்ப டாதாரென்று - உலகில்*
*திசைமுகன் செய்ததுண்டோ?*
*வேண்டப்ப படுவதீ தோ? ஐயோ*
*வீண்கதை பேசுகி றீர்.*

*உரிமை உரிமை யென்பீர் - உங்கள்*
*எளியச கோதரர் தங்கள்*
*உரிமை உரிமை யென்றால் - வேத*
*ஏடுவிரிப் போமென்பீர்*
................

முப்பதுகளில் மேற்கூறியவாறான நவீன கவிதையின் தோற்றம் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி மலைநாட்டிலும் இடம் பெற்றுள்ளது. பெருந்தோட்டங்களிலே வேலை செய்யும் பொருட்டு மலை நாட்டிலே வந்து குடியேறிய தென்னிந்தியத் தொழிலாளர் மத்தியில் தொழிற்சங்கங்கள் உருவாகின. அவர்களது உரிமைகளுக்காக, போராடின. அத்தகைய தொழிற்சங்கவாதிகளுள் கோ.நடேசய்யர் குறிப்பிடத்தக்கவர். அவர் தொழிற் சங்கங்கள் நிறுவியதோடு (எ-டு: அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனம்) பத்திரிகைகள் சிலவற்றையும் (எ-டு:தேசபக்தன்) நடத்தி வந்துள்ளார். தோட்டங்கள் தோறும் தொழிலாளர் முன்னிலையில் பிரச்சாரக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. இத்தகைய செயற்பாடுகளில் அவருடன் அவரது துணைவியாரான மீனாட்சியம்மாள் நடேசய்யரும் இணைந்து செயற்பட்டார். இவர்களிருவரும் தொழிலாளர் பற்றிய பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றியுள்ளனராயினும், மீனாட்சியம்மாள் நடேசய்யரே இவர்களுள் முதன்மை இடம் பெறக்கூடியவர். தொழிலாளரது வாழ்க்கைப் பிரச்சினைகள், போராட்டங்கள், சுரண்டல் என்பன பற்றிப் பேசும் இவர்களது பாடல்கள் பின்வரும் விதங்களில் குறிப்பிடத்தக்கன.

அ. எதிர்ப்புக் குரல்களாக உள்ளன. அதாவது அன்றைய அரசினரின் செயற்பாடுகளை எதிர்ப்பன.

ஆ. பொது மக்கள் மத்தியிலே செல்வாக்குற்று விளங்கிய நாட்டார் பாடல் வடிவங்களிலும் ஜனரஞ்சகம் பெற்று விளங்கிய பாடல் மெட்டுக்களிலும் அவை வெளிப்பட்டன.

அதாவது உள்ளடக்கத்திற்கேற்ப உருவத்தைப் பெற்றிருந்தன. இன்னொரு விதமாகக் கூறின், பொது மக்களை நோக்கிய அவர்களுக்கேற்றவாறான பாடல்களாக அவை அமைந்தள்ளன. (இது ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்) எடுத்துக் காட்டாக, மீனாட்சியம்மாள் நடேசய்யர் எழுதிய பாடலொன்றின் பகுதி, இதுவாகும்.

*சிங்கள மந்திரிகள் கூற்று - மிக*
*சீர்கெட்ட தென்று சாற்று*
*சங்கடமே நேருமென தோற்று - திந்திய*
*சமூகம் நெருப்பாய் வரும் காற்று*
*நன்றி கெட்டுப் பேசும் மந்திரிமாரே - உங்கள்*
*நியாய மென்ன சொல்லுவீரே*
*இன்றியமையாத வொரு போரே - செய்ய*
*இடமுண் டாக்குகிறீர் நீரே*

ஆக, இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நினைவுகூரும்போது, ஈழத்திலே நவீன தமிழ்க் கவிதையின் தோற்றத்திற்கு நாற்பதுகளுக்கு முன்பே - முப்பதுகளளவிலேயே கால் கோளிடப்படுகின்றது என்பதும், அஃது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மட்டுமன்றி மலை நாட்டிலும் இடம்பெறுகின்றது என்பதும் தெளிவாகின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பிதமும் மீட்பும்

## செ.கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' குறித்த கருத்தாடல்

**பேராசிரியர் வ. மகேஸ்வரன்**

**தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்**

செ. கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' நாவல் குறித்த பல்வேறு ஆய்வுகள் வெளி வந்துள்ள ஒரு சூழலில் மறுவாசிப்பாக இக்கட்டுரை எழுதப்படுகின்றது. 'நீண்ட பயணம்' என்ற நாவல் வெறுமனே யாழ்ப்பாணத்து சாதியக் கட்டுமானத்தையும் அதன் பல்வேறு செயற்பாடுகளையும் வெளிப்படுத்துவது என்ற கற்பிதம் ஒன்று மிக ஆழமாக வேரூன்றி யுள்ளது. இந்தக் கற்பிதம் உண்மையானதுதானா என நோக்குவதே இக்கட்டுரையின் பிரதான குறிக்கோளாகும்.

'நீண்ட பயணம்' எனும் நாவலுள் பிரவேசிக்கும் முன் யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் கட்டுமானம் பற்றி நோக்குதல் அவசியமானதாகும். யாழ்ப்பாணச் சமூகத்தின் கட்டுமானம் நிலமானிய சமூக அமைப்பின் எச்சங்களைத் தன்னுள் கொண்டுள்ளது என்பர். முடிக்குரிய நிலம், அதனைப் பயன்படுத்தும் பிரபுக்கள், கூலித் தொழிலாளர், உற்பத்தி, உற்பத்தி உறவு முறைகள், உபரி வருமானம், பொருளாதார மேட்டிமை போன்ற குணாம்சங்கள் நிரம்பியதாக நில மானிட சமுதாய அமைப்பு நிலவும் என்பர் அறிஞர். தமிழகத்தில் விஜயநகர நாயக்கர் காலத்தை நிலமானிய சமூக அமைப்புடைய காலம் என்று எஸ். கிருஷ்ணசாமி குறிப்பிடுவார். இந்த சமூக அமைப்பின் தொடர்ச்சிநிலை அல்லது எச்சங்கள் தமிழகத்தை அண்மித்த இலங்கையில் குறிப்பாக வட புலத்தில் நிலவியிருக்க வேண்டும். அவ்வாறனதொரு பின்னணியிலேதான் யாழ்ப்பாணத்தின் சமூக அமைப்பை இனங்காண முடியும்.

யாழ்ப்பாணத்தில் பெருநிலப் பரப்புக்களினூடான விவசாய முறைமை ஒன்று இல்லை. எனினும், சிறுசிறு நிலப்பரப்புக்களைச் சொந்தமாக உடைய பிரபுக்கள் வாழ்ந்தார்கள் என்பது தண்டிகை கனகராயன் பள்ளு, கனகி புராணம், கோட்டுப் புராணம் முதலான இலக்கியங்கள் வழியும் அக்காலப் பிரபுக்களின் தலைமுறை எச்சங்கள் வழியும் அறிய முடிகிறது. இவ்வாறானதொரு பின்புலத்தில் அசைவியக்கம் கொண்டிருந்த யாழ்ப்பாணச் சமூகம் காலனித்துவ அம்சங்களையும் உள்வாங்கிய காலத்திலும் தனது கட்டமைப்பைச் சிதறவிடாது தக்க வைத்துக் கொண்டது.

பிரபுத்துவ, காலனிய சமூகக் கட்டுமானங்கள் யாழ்ப்பாண சமூகத்தினைக் கட்டிறுக்கம் உள்ள ஒரு சமூகமாகப் பேணின. நீலகண்ட சாஸ்திரியார் கூறுகின்ற சோழர்கால கிராமியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பின் எச்சங்களும் நெபரு காரஸிமா கூறுகின்ற விஜயநகர நாயக்கர் காலத்து கிராமிய சமூக அமைப்பின் எச்சங்களும் நிரம்பியதாக யாழ்ப்பாணக் கிராமங்கள் நிலைத்தன. மேட்டுக்குடி மக்கள் (வேளாளார்), உற்பத்தி, நிலங்கள், தொழிலாளர் (பள்ளர்), சமூகக் கடமைகளை நிறைவேற்றுவோர் (பறையர், நளவர், அம்பட்டர், கோவியர்), சமூக சேவையாளர்கள் (தச்சர், கொல்லர் முதலானோர்) ஆகியோர் நிரம்பியதாகவே ஒரு கிராமம் அமைந்திருக்கும். இவர்களிடையே சமூக படித்தரத்தினாலான ஊடாட்டம் ஒன்று நிகழும். ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கின்ற சூழல் நிலவும் இணக்கமும் முரண்பாடுகளும் அடிக்கடி நிகழும் எனினும், கிராமிய சமூகம் தனக்குரிய பண்பாட்டுடன் அசைந்து கொண்டே இருக்கும்.

நில உடைமையாளரான வேளாளர் தமது பொருளாதார மேட்டிமையை நிலைநிறுத்தும் இடமாகக் கோயில் விளங்கும். இந்தக் கோயிலின் விழாக்களும் சடங்குகளும் அவர்களது பொருளாதார மேட்டிமையை அல்லது ஆடம்பர மேட்டிமையை வெளிப்படுத்துவதாக அமையும். இவ்வாறான செயற்பாடுகளில் சாதியம் என்பது நூலிழையாகப் பின்னப் பட்டிருக்கும். இந்தச் சாதியம் பொருளாதாரப் பின்னணியுடன் உருவானதெனினும், இது சடங்காசாரமாக இறுக்கமாக நிலைபெற்றுவிடும். தீண்டாமை என்பது இதன் பிரதான அம்சமாக மாறும். அடங்கிப் போதல், அடிமையாதல், ஆட்படுதல், ஏவல் செய்தல், நமக்கு விதிக்கப்பட்டது இதுதான் என்று அமைதி கொள்ளல் ஆகிய உடன்பாட்டு நிலைகளும், எதிர்த்தல், மறுத்தல், அடங்காமை, ஏவல் செய்யாமை ஆகிய எதிர் நிலை களும் இங்கு உருவாகும். இதன்வழி எதிர்வினைகளும் வன்மங்களும் கொலைகளும் நிகழும். ஆயின், தவிர்க்க இயலாத வகையில் ஒன்றையொன்று சமரசம் செய்து கொள்ளும். நீறுபூத்த நெருப்பாக வன்மங்கள் மனதிலிருக்க அதை வெளிப்படுத்த முடியாத சூழலில் பொருளாதார நிலை என்ற ஒற்றைப் பரிமாணத்தில் இணைந்து இணங்கும். இதுதான் காலாகாலமாக நிலவி வந்த தமிழர் சமூக வரலாற்றுச் சூழல்.

இவ்வாறனதொரு பின்புலத்தை மனதில் இருத்தித்தான் யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் விவசாய மைய நிலமான உரும்பிராயில் பிறந்த கணேசலிங்கன் குரும்பையூர் என்ற ஊரைப் புனைவு செய்கிறார். ஆனால், அது புனைவல்ல் யதார்த்தமானது. இந்தப்புள்ளியில் கணேசலிங்கன் பற்றிக் குறிப்பிடுவது மிக அவசியமானது. கணேசலிங்கன் யாழ்ப்பாணப் பாரம்பரியக் கிராமமொன்றிலிருந்து முகிழ்ந்தவர். கிராமிய சமூக அமைப்பொன்றின் பல பரிமாணங்களையும் இரத்தமும் சதையுமாக உணர்ந்தவர். எனினும், கிராம சமூக அமைப்பொன்று இவ்வாறு கட்டுக்கிடையாக இருக்கக் கூடாது என்ற எண்ணம் கொண்டவர். அதற்கு அவருக்கு உந்து சக்தியாக விளங்கியது அவர் அறிந்த மார்க்ஸியம் என்ற சமூக விஞ்ஞானம். வரலாற்றுப் பொருள் முதல் வாதம், மூலதனம், முதலாளித்துவம், வர்க்கம், உற்பத்தி, உற்பத்தி உறவுகள், உபரி உழைப்பு, உபரி வருமானம், சுரண்டல் முதலானவை பற்றியெல்லாம் அறிந்து கொண்ட கணேசலிங்கன் வர்க்கப் புரட்சியொன்றின் மூலமாகவே தொழிலாளர் வர்க்கத்தை விடுதலை அடையச் செய்ய முடியும் என்பதிலும் அதனூடாகவே உள்ளகக் கட்டுமானங்களை (சாதி,கல்வி மறுப்பு) தகர்த்தெறிய முடியும் என்பதிலும் அசையாத நம்பிக்கை கொண்டவர். அந்த நம்பிக்கையைத்தான் அவர் நீண்ட பயணத்தின் ஊடாகச் செயறப்படுத்த விரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் வர்க்கத்தினுள் சாதியமும் ஓர் அம்சமாகும். வர்க்கம் என்ற கருத்து நிலையில் சாதியம் தொடர்பான வேறுபாடுகள் குறைவு. அது மிகைப்படின் தொழிலாளர் ஐக்கியம் சிதறுண்டு போய்விடும். மார்க்ஸியம் என்பது சாதிய அடக்குமுறைக்கு எதிரானது தான். ஆனால், அது தனித்த செயற்பாடாக இயங்கும் என்று கூறவில்லை. வர்க்க நிலைப்பாட்டுள் அது ஓர் அங்கமே. தொழிலாளரின் வர்க்க விடுதலையுடன் சாதியமும் இல்லாது போய்விடும் என்பதுதான் அதன் கருத்து. ஆகவே, இதனை நன்கு உணர்ந்து கொண்ட செ.கணேசலிங்கன் தனது நாவலை அவ்வாறானதொரு கோலம் கொண்டதாகவே நகர்த்திச் செல்கின்றார்.

செ.கணேசலிங்கன் படைத்த குரும்பையூரையும் அதன் கதைமாந்தர்களையும் இவ்விடத்தில் முன்னிறுத்திப் பார்ப்பது அவசியம். சீனிவாசன் முதலானோர் பாத்திரப் படைப்பும் அவரின் செயற்பாடுகளும் இந்த மேட்டிமைக்குணத்தை நோக்கியே நகர்வதை கணேசலிங்கன் அழகாகப் படம் பிடித்துள்ளார். கோவில், திருவிழா, அடிதடி, மரணவீடு, விவசாய நடவடிக்கைகள், பண பலம் என்ற குணாம்சங்களுடன் அந்தச் சமூகம் இயங்கு வதைக் காண முடிகிறது. இதற்கு எதிர் நிலையில் செல்லத்துரை முதலான பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. கள்ளிறக்குதல், கூலி வேலை செய்தல், குடிசை வாழ்வு, உணவுப் பழக்க வழக்கங்கள் என்று இன்னொரு தளத்தில் அவர்கள் இயங்குகிறார்கள். இந்த இரு வேறு தளங்களில் ஊடாடும் மக்களை அவர்களுக்கே உரித்தான பண்பாட்டுத் தளத்தில் கணேசலிங்கன் படைத்துள்ளார். அதாவது, பாத்திரப் படைப்பொன்றில் எதிர்நிலைப் பாத்திரங்களை அவர்களுடைய பண்பாட்டுக் கோலத்துடன் படைத்துக் காட்டியது இங்கு முக்கியமானதாகும். அவர்களது உடற் கூறுகள், அணிகள், தொழிலுக்கான அணிகள் (ஏறுபட்டி, தளநார்), வீடுகள், உணவு, பழக்கவழக்கங்கள் என்பவற்றைக் கொச்சைப் படுத்தாது அதை அவ்வாறே பதிவு செய்துள்ளமை யாழ்ப்பாணப் பண்பாட்டு வரலாற்றின் முக்கிய அம்சமாகும். பொருளாதார மேன்மை காரணமாக அவர்கள் அப்பண்பாட்டுக் கோலங்களை இழந்துவருகின்ற சூழலில் ஆதி திராவிடப் பண்பாட்டுக் கோலங்களின் காவலர்களாக அவர்கள் இருந்துள்ளனர் என்பதை செ.கணேசலிங்கனின் பதிவுகள் வற்புறுத்தக் கூடியன.

சமூக விடுதலை என்பது அவ்வப்போது நிகழ்கின்ற முரண்பாடுகளின் வழி தீர்ந்து விடுவதல்ல. இந்த முரண்பாடுகளைப் படிப்பினையாக அமைத்துக் கொண்டு நீண்ட வேலைத்திட்டம் ஒன்றினூடாக மாற்றங்களை நோக்கி நகரமுடியும் என்பது விதி. இந்த விதியைத்தான் செ.கணேசலிங்கன் 'நீண்ட பயணம்' நாவலில் பிரயோகித்துப் பார்க்கின்றார். உழைக்கும் மக்களை உதிரிகளாக முரண்பட வைக்காது அவர்களை ஸ்தாபன ரீதியாக ஒன்றிணைத்து அதிகாரங்களைக் கைப்பற்றுதல் என்ற நோக்கில் பயணம் தொடர்கிறது. செல்லத்துரையன் அதன் ஆணி வேர். மாதவன் அதன் ஆலோசகன். இப்பொழுது விடுதலைக்கான பயணம் ஆரம்பித்துவிட்டது. கிராம அதிகாரங்களைக் கைப்பற்றுதல் அதன் முதல் நோக்கம். தோல்வி காண்பது இயல்புதான். ஆயின் வர்க்க உணர்வுடன் ஒன்றிணைவது இங்கு சாத்தியமாகிவிட்டது. இந்தச் சாத்தியப்பாடு மேலும் மேலும் நகரும் போதுதான் பாட்டாளி வர்க்கத்துக்கான விடுதலை சாத்தியமாகும். தொழிலாளர் விடுதலை என்பது இன்று ஆரம்பித்து நாளை முடியும் கனவல்ல. அது நீண்ட வழித்தடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை கடக்க வேண்டியுதொன்று. அது நீண்ட பயணம். செ. கணேசலிங்கத்தின் நோக்கு நிலையின் ஆளுமையை இங்கேதான் புரிந்து கொள்ள முடிகின்றது.

செ. கணேசலிங்கம் தனது நாவலில் தனது வர்க்கச்சாயலை எவ்விடத்திலும் இனம் காட்டிக் கொள்ளவில்லை. அதே வேளை, தொழிலாளர் வர்க்கத்தையோ முதலாளித் துவத்தையோ கொச்சைப்படுத்தவுமில்லை. அதனதன் இயல்புகளை அதனதன் போக்கிலே விட்டு சமூக அசைவியக்கம் ஒன்றின் பல் பரிமாணத் தன்மைகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றார். தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரதிநிதியாகவும், இந்த நாவலின் பிரதான பாத்திரமாகவும் விளங்கும் செல்லத்துரையினை சாதாரண இயல்பு கொண்ட மனிதனாகவே படைத்திருக்கின்றார். அவனுக்கான தொழில், வாழ்க்கை, பாலியல் வன்மங்கள் எனப் பல்வேறு தளத்தில் அவன் பலமும் பலவீனமும் கொண்ட ஒருவனாகப் படைக்கப் பட்டுள்ளான். அமானுஷனாகவோ கருத்துக்களைச் சுமந்து வரும் கருத்தியல் வாதியாகவோ அவர் அவனைப் படைக்கவில்லை. இயல்பான மனிதனே ஆவான். தேவையேற்படின் தலைமை தாங்கும் பண்பும் அவனுக்குண்டு.

மேட்டுக்குடியினர் பற்றிய மேட்டிமையை மாத்திரம் அவர் சொல்லவில்லை. அதன் வீழ்ச்சியையும் அவர் சொல்கிறார். அது ஆடம்பரத்தால் பணம் செலவாதல், முதிர் கன்னிகள், குலம் மாறிய திருமணங்கள், களவான பாலியல் தொடர்புகள் என நீள்கின்றது. ஆகவே பக்கச்சார்பான பார்வையுடையதாக இந்த நாவலை எவரும் இனங்காண முடியாது. அதுதான் கணேசலிங்கனின் நிதானமான படைப்பாற்றல் திறன்.

தொகுத்து நோக்கும்போது செ. கணேசலிங்கனின் நீண்ட பயணம் என்பது யாழ்ப் பாணத்து சாதிய வரலாறு அல்ல. அது சமூக வரலாறு. அது நிலமானிய சமூக அமைப்பின் எச்சங்களைத் தன்னுள் அடக்கிய ஒரு சமூகத்தின் பல்பரிணாமக் கூறுகளையும் அந்தக் கூறுகளிடையே நிலவிய உறவு, எதிர்ப்பு நிலைகளையும், மேட்டிமைகளின் சரிவையும், உழைக்கும் வர்க்கத்தின் நிதானமான எழுச்சியையும் மிக நேர்த்தியாகப் பதிவு செய்துள்ளது என்றே கூறலாம். இந்த நீண்ட பயணத்துடன் செ.கணேசலிங்கனின் 'போர்க்கோலம்', 'சடங்கு' ஆகிய நாவல்களையும் ஒப்பிட்டு நோக்கும் போது யாழ்ப்பாணச் சமூக வரலாற்றின் பல்பரிமாணக் கூறுகளையும் புரிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்தல் என்னும் தியானம்

**கோபாலப்பிள்ளை கயிலாசநாதன்**

இரண்டு கண்களினதும் பார்வையை இழந்த தர்க்க வல்லுனர் ஒருவர் இருந்தார்: ஒரு முறை அவருக்கும் அவரது நண்பர்களுக்குமிடையே 'ஒளி' பற்றிச் சர்ச்சையொன்று ஏற்பட்டது.

''நீங்கள் அடிக்கடி குறிப்பிட்டுப் பேசும் 'ஒளியை'ப் பாத்திரமொன்றுக்குள் பிடித்துத் தருவீர்களா?''

பாத்திரத்துக்குள் அதனைப்பிடிக்க முடியாது.

''அதுவொரு திண்மப் பொருளாகவிருந்தால் அதிலிருந்து சிறு துண்டையாவது வெட்டித்தாருங்கள்''

அது திண்மப் பொருள் அல்ல. அதனால் அதனை வெட்டவும் முடியாது.

'''தூசு' போன்றதொரு வஸ்துவாக இருந்தால் அதிற் சிறிதளவையெடுத்து எனது புறங்கையில் தடவியாவது விடுங்கள்''

அது தூசு போன்றதுமல்ல. அதனால் நீங்கள் கூறியது போற் செய்ய முடியாது. வாசம் கொண்ட பொருளாகவிருந்தால் தயவுசெய்து நுகர்வதற்கு எனக்குத் உதவுங்கள். நுகரக்கூடியதுமல்ல அது. நெருப்பில் இருந்து வெக்கை வருவது போல அதிலிருந்து வருவதை உடலில் பட வழிசெய்யுங்கள்.

அது உங்கள் மீது பட்டாலும் வெக்கையைப் போல் உணர்வெதனையும் தரமாட்டாது.

''காற்றுப் போன்றதாகவிருந்தால் தயவு செய்து காற்றுப் பையொன்றுக்குள் நிரப்பித்தாருங்கள். அதன் பின்னர் நீங்கள் நிரப்பிய பையைத் திறந்து உள்ளே இருப்பதை வெளியகற்றுவதன் மூலம் அதற்குள் இருந்தது என்னவென்பதனை உணர்ந்து கொள்ளவும் முடியும்''

காற்றைப் போன்றதுமல்ல அது.

''தொட்டும் உணரமுடியாத, உடலாலும் உணர முடியாத, நுகரவும் சுவைக்கவும் முடியாத, அள்ளவும் முடியாத வெட்டி எடுக்கவும் முடியாத, நீங்கள் குறிப்பிடும் ஒளியானது தனது உரு நிலையை எவ்வடிவத்துக்குள் அடக்கி வைத்துள்ளது?''

அதற்கென வடிவம் எதுவும் கிடையாது.

''இவ்வளவு கேள்விகளுக்குள்ளும் விடையாக அகப்படாத அந்த வஸ்துவை எங்குமே கிடையாததொன்றாகவே நான் கருதுகிறேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட சர்ச்சையானது விடை அற்று நீண்டு செல்கிறது. இறுதியில் பார்வை அற்றவரும் அவரின் நண்பர்களும் புத்தபெருமானிடம் செல்கின்றனர். எல்லாவற்றையும் உணர்ந்த புத்தபெருமான் பார்வையற்றவருடன் ஒளிபற்றி நிறையவே பேசி அதனை அவருக்குப் புரிய வைப்பார் என்று எல்லோரும் எதிர்பார்க்கின்றனர். ஆனால் புத்த பெருமான் ஒளிபற்றி எதுவுமே பேசவில்லை. பேச்சினால் உணரக் கூடியதொன்றல்ல அது என்பதுவும் அவருக்குத் தெரியும். பார்வையற்றவருக்குச் சிகிச்சை வழங்குவதன் மூலம் அவருக்குப் பார்வையை ஏற்படுத்த முடியும் என்பதை மட்டும் புத்தர் அறிந்து கொள்கிறார். எனவே அவருக்கு அதற்கான ஏற்பாடுகளை செய்யப்பட்டு இறுதியில் அவர் பார்வையையும் பெறுகிறார். பார்வை பெற்றதன் பின்னர் 'ஒளி' என்பது என்ன வென்பதை உணர்வு பூர்வமாகப் புரிந்து கொள்கிறார். ஒளியைப் பெறுவதற்கு முன்னர் அது பற்றித் தான் கொண்டிருந்த கருத்தியல் நிலை சார்ந்த விளக்கம் எவ்வளவு தவறானது என்பதையும் உணர்ந்து கொள்கிறார்.

கலைத்துவம் மிக்க ஓவியங்களைப் புரிந்து கொள்ளமுடியாமல் இருப்பதென்பது கண்பார்வை அற்றவர் 'ஒளி' தொடர்பான விசாரணையில் அமிழும் நிலையாகும். கலைத்துவம் மிக்க ஓவியங்களைப் புரிதல் என்பது கண்பார்வையை இழந்தவர் பார்வையைப் பெறும் நிலையாகும். இதனைச் சுருக்கமாகக் கூறினால் அவருக்குள்ளிருக்கும் அவரின் மூன்றாவது கண்ணானது திறந்து கொள்ளும் நிலைமையேயாகும். மெய்ப் பொருளைத் தரிசித்தல் என்பது தர்க்கவியலையும் நிபந்தனைக்குட்பட்ட எமது சிந்தனை களையும் தாண்டுமொரு பயணிப்பேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஓவியத்தைப் பாருங்கள். இந்த ஓவியத்தின் ஊடாக ஓவியர் வெளிப்படுத்தும் கருத்து என்ன? ''மனிதனொருவன் கதிரையில் அமர்ந்துள்ளான்'' என்பதுடன் அதன் கருத்தானது முடிவடைந்து விடுகின்றதா? அமர்ந்திருப்பவரின் தோறணை பற்றி ஏதாவது சொல்ல முடியுமா? அவர் முகத்தை வைத்திருக்கும் 'பாங்கு' பற்றி உங்களது அவதானம் என்னவாக இருக்கின்றது. இங்கு குறிப்பிடப்பட்ட கேள்விகளை உங்களுக்குள்ளேயே கேட்டுப்பாருங்கள். 'பார்த்தல்' என்பது கூட ஓர் ஆழமான மனச் செயற்பாடு. அது ஆளுக்கு ஆள் வேறுபடவும் கூடியது. ''வெறுமனே அமர்ந்திருத்தல்'' என இதனைக் கூறமுடியாது. கதிரையில் அமர்ந்திருப்பவர் தனது இடக் கரத்தைச் சற்று அகட்டி அதனை மேசை மீது வைத்திருப்பதுவும், வலக்கரத்தைக் கதிரையின் கைப்பிடி மீது இயல்பாகவே வைத்திருப்பதுவும், நிமிர்ந்த தலையுடன் நேர்கொண்ட பார்வையை எறிவதும் உணர்வு பூர்வமாகவே இந்த உருவத்துக்குக் கம்பீரத்தைக் கொடுத்து நிற்கின்றன.

சோர்வற்ற நீட்சியான இவரது கைவிரல்களில் கூட ஓர் உறுதித்தனம் வெளிப்படுகின்றது. அவ்வாறு உறுதியாக இருப்பதே இங்கு அழகாகின்றது. இடப்புறத் தோள்மூட்டின் வழியே வந்து அகலிப்பாகச் சென்று மீண்டும் தோள்மூட்டுத் திசைக்கு வரும் இடக் கைவிரல்களும்: உடலோடு ஒட்டிய வலப்புறத் தோள் மூட்டிலிருந்து வரும் வலக் கைவிரல்களும் இந்த உருவத்துக்கேயொரு தனித்துவ மென் 'அசைவைக்' கொடுக்கின்றன.

தாடி மீதுள்ள தூரிகைத் தடங்கள் பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன? இந்த உருவத்துக்குத் தீட்டப்பட்டுள்ள நிறங்கள் தொடர்பாகவும் அதன் பின்னணிக்குத் தீட்டப் பட்டுள்ள நிறங்கள் தொடர்பாகவும் உங்களின் கருத்தென்ன? தாடி மீதுள்ள தூரிகைத் தடங்களில் சீர்மையொன்று பரவிச் செல்கின்றது. அதிக விபரிப்புக்கள் இல்லாமல் தாடி மயிர்களை அதன் இயல்பு கெடாதவாறு இவ்வாறும் எளிமையாகக் காட்ட முடியு மென்பதனை ஓவியர் எமக்குக் காட்டியுமுள்ளார். உதாரணமாக: மறுமலர்ச்சிக்கால ஓவியரொருவர் 'தாடி' என்பதைக் காட்டுவதற்காக அதிக விபரிப்புகளுடன் மிக்க சிரத்தையை அதன்மீது செலுத்துவார். அதிக நேரஞ் செலவு செய்தே தனது கருத்தையும் முன் வைப்பார். இவ்வாறே ஒவ்வொரு அம்சங்களிலும் கவனமெடுக்கப்படும். மறுமலர்ச்சி கால ஓவியர்கள் போன்று இந்த ஓவியர் விபரிப்புகளுக்காக நேரத்தைச் செலவு செய்ய வில்லை. நேரடியாகவே: அதே வேளை எளிமையாகவே சிரமமின்றிக் கருத்தை வெளிப் படுத்த வேண்டுமென்ற மனப்பாங்குடன் செயற்பட்டுமுள்ளார். விபரிப்புக்கள் இல்லாமல் விபரிப்புச் செய்தவர்களுக்குக் கிட்ட வந்துள்ளார். ''புதுமையான எளிமை வழியே'' உணர்வைத் தன்வசப்படுத்தியுமுள்ளார். உருவத்துக்குத் தீட்டப்பட்ட நிறங்கள் கடும் நிறங்களாகவும் பின்னணிக்குத் தீட்டப்பட்டவை மென் நிறங்களாகவும் உள்ளன. இந்தக் கடும், மென் நிறங்களை ஒரு தளத்தில் வைத்தமையால் ஓவியமானது தூக்கலடைகின்றது.

கோட்டுச் சித்திரமொன்றை கூடிய பங்கு இருண்ட நீலத்தாலும் இடையிடையே மென் நீலத்தாலும் நிரப்பியது போன்ற எளிமை இருப்பினும் உணர்வு ரீதியில் தர உயர்வொன்று இந்த ஓவியத்துக்கு இருந்தேயாகிறது. ஓவியரின் நிறந்தீட்டிய முறையைவிட ஓவியரின் 'அகம்' என்னவென்பது இங்கு,கதிரையில் அமர்ந்திருப்பவரின் ஊடாக எமக்கு வெளிச்சமாகின்றது. முகம், கைவிரல்கள் ஆகியன மஞ்சள், இளஞ்சிவப்பு, கபிலம் ஆகிய நிறங்களை உள்ளடக்கிய நிறவெளிப்பாட்டிலும் பின்னணியின் பெரும் பங்கு மிக இளநீல நிறத்திலும் காணப்படுகின்றன. நிறச் சிக்கனமொன்று இங்குண்டு. இந்த ஓவியத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டியவர் யார்? இந்த ஓவியத்தின் தலைப்பு என்ன? இந்த ஓவியம் தற்போது எங்குள்ளது? இந்த ஓவியம் வின்சென்ட் வான்கோவால் தீட்டப்பட்ட 'The Postman Roulin' (1853 - 1890) என்பதுடன் Museum of Fine Arts: Bost on இல் காட்சிக்கு வைக்கப்பட்டுமுள்ளது.

***



இந்த ஓவியத்துடன் தொடர்புபடக்கூடிய விதத்தில் அதிற் சித்திரிக்கப்பட்டுள்ள காட்சியானது அமைந்திருப்பதனால் புரிந்துகொள்ளலென்பது சிரமங்கள் அற்றதாகவே இருக்குமென்பது வெளிப்படை. ஓவியத்தின் மையப்பகுதியில் உங்களின் பார்வையைக் குவிக்கவும். இரண்டு வெவ்வேறு குழுக்கள் இங்கு காடசியாக்கப்பட்டுள்ளவென்பது சாதாரணமாக எல்லோராலும் அறிந்து கொள்ளக்கூடியதொன்றாகவும் இருக்கிறது.

சுடு குழல்களின் முனைகளில் கத்திகள் பொருந்திய துப்பாக்கிகளை ஏந்திய வண்ணம் வரிசையில் நிற்பவர்கள் யார்? இவர்கள் மிகவும் சுயாதீனமான நிலையில் நிற்கின்றனரா? அல்லது மிக்க விறைப்பான நிலையில் நிற்கின்றனரா? துப்பாக்கிக்காரர்களின் முன்னிலையில் நிற்பவர்கள் யார்? இவர்கள் நிற்கும் நிலை பற்றி யாது கூறலாம்? துப்பாக்கிக்காரர்களும் மற்றையவர்களுக்கு மிடையேயான இடைத்தூரம் பற்றி யாது கூறலாம்? இரு பகுதி யினர்க்குமிடையே பெட்டி போன்ற பொருள் தரையில் காணப்படுவதுடன் அது பிரகாசமான தாகவும் இருக்கிறது. அது என்ன? மேற்புற வானம் மிகவும் இருட்டாக இருப்பதுடன் கீழே மென்மையாக மங்கலாகக் கட்டடத் தொகுதிகள் சிலவும் தெரிகின்றன. இந்நிகழ்வு நடைபெற்ற வேளை அதிகம் இருட்டாக இருந்ததா? அல்லது நிலம் வெளிக்கும் விடியலாக இருந்ததா? இங்கு குறிப்பிடப்பட்ட கேள்விகள் உங்களின் புரிந்து கொள்ளலை விசாலிப் பதற்காகக் கேட்கப்பட்ட கேள்விகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கிகளைக் கைகளில் ஏந்தியவாறு நிற்பவர்கள் இராணுவீரர்கள். இவர்கள் மிகவும் 'விறைப்புடன்' சுடுவதற்கு ஆயத்தமான நிலையில் நிற்கின்றனர். துப்பாக்கிக் காரர்களின் முன்னிலையில் நிற்பவர்கள் - மக்கள். சுடப்படப்போகிறோம் என்ற பீதியில் நிற்பவர்கள் எவ்வாறு ஓர் ஒழுங்குக்குள் கட்டுப்படுவார்கள்? அச்சமும் பீதியும் கொண்ட இவர்கள் தாறுமாறாகக் குழப்பத்திற்குள்ளான நிலையில் நிற்கின்றனர். சுடுபவர்களுக்கும் சுடப்படுபவர்களுக்குமிடையேயான இடைத்தூரம் மிகமிகக் குறுகலானது. இரு பகுதி யினர்க்குமிடையே தரையில் காணப்படும் மஞ்சள் நிற ஒளிர்பொருள் விளக்கொன்றாகும். இந்நிகழ்வு விடிவதற்குச் சில மணித்தியாலங்களுக்கு முன்னரே நிகழ்ந்தது. அடிவானம் சற்று வெளிப்படைவதிலிருந்து அதனை உய்த்துணரலாம்.

நாடக மேடையோன்றின் முன்னே நாடக மாந்தர்களுக்கு மேல் ஒளியை உமிழ் வதற்காகப் பயன்படுத்தப்படும் 'குவி' விளக்குப் போன்று இந்தப் பெட்டி விளக்கும் கொல்லப்படப்போகும் மக்கள் மீது ஒளியையும் பாய்ச்சுகிறது. இந்த ஓவியத்தின் மத்தியில் தனது கைகளை உயர்த்தி அகல விரித்த நிலையில் முழங்காலை மடித்து தரையில் வீற்றிருக்கும் மனிதனின் நிலைபற்றி யாது கூறலாம்? இந்த ஓவியத்தில் மிக்க ஒளிர்வுடன் காணப்படுபவர் யார்? மேற்குறிப்பிடப்பட்ட கைகளை அகல விரித்த நிலையில் காணப்படும் மனிதன்: எதிர்த்தல் அல்லது சரணாகதியடைதல் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளான். வெள்ளை நிற மேலங்கியும் மஞ்சள் நிறக் காற்சட்டையும் அணிந்துள்ள இம் மனிதனே மிக்க பிரகாசமான நிறங்களையே ஓவியர் விளக்கின் பிரகாசத்துக்கும் பயன்படுத்தியுள்ளார்.

இந்த ஓவியத்துக்கான தலைப்புப் பற்றியும் அதனை வரைந்த ஓவியரைப் பற்றியும் உங்களால் என்ன கூறமுடியும்? ஸ்பெயினில் உள்ள Madrid நகரின் 'படலையில்' நடந்த படுகொலை இதுவாகும். இந்த மிலேச்சத்தனமான படுகொலை 03.05.1808 அன்று நடத்தப் பட்டது. இது ஸ்பெயினை ஆக்கிரமிப்புச் செய்த நெப்போலியனின் ஆக்கிரமிப்பு படையினராலேயே நடத்தப்பட்டது. படுகொலை நடந்த தினத்தையே ஓவியத்துக்கான தலைப்பாக ஓவியர் இட்டுமுள்ளார். 'The third of May 1808 ' என்பதே அதன் தலைப்பாகும். இப்புகழ்மிக்க ஓவியத்தை ஸ்பெயினின் மிகப் பெருங்கலைஞர் GOYA தீட்டியுள்ளார். உலகக் கலைவரலாற்றில் 'இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மக்கள்' என்னும் விடயத்தின் கீழ்வரும் ஓவியங்களுள் Goya வின் இந்த ஓவியமும் கலைப்பெறுமதி மிக்க படைப்பாக உலகக் கலைவிமர்சகர்களால் உயர்தரத்தில் வைத்து மதிக்கவும்படுகிறது.

மேல் வானம் மிகவும் இருட்டாகக் கறுப்பு நிறத்தில் காணப்படுகிறது. வான்பரப்பின் கீழ் தூரத்தே சிறு கோபுரம் போன்ற அமைப்புக்கள் இரண்டுடன் கட்டடத் தொகுதிகள் மென்மையாக மிக்க மங்கலாக மென்கபில மென்பச்சை நிறங்களில் தெரிகின்றன. இவை இராணுவத்தினர் வசிக்கும் கட்டடங்களாக இருக்கலாம். வலப்புற வரிசையில் நிற்கும் இராணுவத்தினருள் இருவரின் பின்புறம் அவர்களின் தொப்பிகள்: முன் வரிசையில் நிற்பவரின் வாள் ஆகியன புரியக் கூடிய முறையில் தெளிவாகத் தெரிகின்றன. மென் பச்சையுடன் நீலம் கலந்த கலப்பு நிறத்தில் அவர்களின் உடைகள் காணப்படுகின்றன. கால்களின் பெருவீதம் கறுப்பாகவே உள்ளன. மூன்றாவது இராணுவ வீரன் கடுங்கபிலத்திலும் நான்காவது வீரன் கறுப்பு நிறத்திலும் அவனின் முதுகுப்புறம் மட்டும் மிகமிகக் குறைவான வெள்ளையுடன் மஞ்சள் கலந்த மங்கல் நிறத்திலும் தோற்றம் தருகின்றன. ஏனையவர்கள் இருளில் படிப்படியாக மறைகின்றனர். பெட்டி விளக்கின் ஒளியானது இராணுவ வீரர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களுக்கு ஊடாகப் பரவிச் செல்வதால் தரையில் நிழல்கள் உருவாகின்றன. கபில நிறப்பரப்பின் மீது கறுப்பு நிழல்களின் பரவுகை ஓவியத்துக்கான அழகியல் தரத்தை உயர்த்துகிறது.

பெட்டி விளக்கின் முற்புறத்திலிருந்து வெளிப்படும் ஒளியானது தரை மீது முக்கோண வடிவப்பரப்பை உருவாக்குகிறது. இந்தப் பரப்புக்குள் அகப்படும் உருவங்கள் எவை? படுகொலை செய்யப்படவுள்ள மக்கள் குழுமத்தின் பிற்புலத்தில் உயர்ந்து தெரிவதென்ன? சுடுபவர்களுக்கும் சுடப்படுபவர்களுக்கும் இடையில் சற்று தூரத்தே அதேவேளை ஓவியத்தின் மத்தியில் காணப்படுபவர்கள் பற்றி என்ன கூறலாம்? ஒளி பயணிக்கும் பரப்புக்குள் மூன்று சடலங்களும், நீட்டிய துப்பாக்கி முனைகளின் முன்னிலையில் ''நிச்சயிக்கப்பட்ட மரணத்தீர்ப்பை எதிர்கொள்ளும் அவஸ்தையில் சிக்குண்ட மூவரும்'' அகப்படுகின்றனர். பிற்புலத்தில் மலை போன்ற அமைப்புத் தெரிகிறது. தரையில் படும் ஒளியானது மஞ்சள், வெள்ளை, கபில நிறங்களின் சேர்க்கையாக இருக்கிறது. துப்பாக்கி முனைகளின் முன்னிலையில் நிற்பவர்கள் சுடப்பட்ட பின் அடுத்ததாகச் சுடப்பட விருப்பவர்கள் இங்கு நடுவில் காத்து நிற்பவர்கள். குனிந்த நிலையிலும் முகத்தைக் கைகளால் பொத்திய நிலையிலும் அவர்கள் காட்சி தருகின்றனர். துப்பாக்கி முனைகளின் முன்னிலையில் நிற்பவர்களுள் ஒருவர் மதகுரு ஆவார். கையை இறுகப் பிடித்தவாறு கடைசி நேரப்பிரார்த்தனையில் அவர் ஈடுபட்டுள்ளார்.

தரையில் குப்புற விழுந்து கிடக்கும் சடலத்திலிருந்து வரும் இரத்தம் தரையைச் சிவப்பாக்கியுள்ளது. மற்றைய சடலம் மஞ்சள் மென்சிவப்பு கபில நிறங்களில் தெரிகிறது. இக்கொலைக்காட்சியை படவாக்கஞ் செய்ததன் மூலம்: அப்பாவி மக்கள் மீது கருணை கொண்ட ஓவியர் தானென்றோ அல்லது கொடிய மிலேச்சத்தனமான கொலையைப் புரியும் இந்த இராணுவத்தினர் மீது வெறுப்பும் கோபமும் கொண்ட ஓவியர் தானென்றோ அவர் தன்னை இனங்காட்டவில்லை. இந்நிலையை மிக்க நுட்பமாகவும் கவனமாகவும் இந்தப் படைப்பின் ஊடாகக் கொண்டு வந்துள்ளார். இச் சம்பவத்திற்கு உண்மை விசு வாசியாகத் தான் இருப்பதுடன் சம்பவத்தில் பங்கு கொண்ட எவர் பக்கமும் தான் விசுவாசியாக இருக்கவில்லை என்பதையும் அவர் எமக்குச் சொல்லாமல் சொல்கிறார்.

இதுவரை பார்த்த இந்த ஓவியத்தில் காணப்படும் ஓவியரின் தூரிகை வேலைப்பாடு பற்றி யாது கூறலாம்? ஓவியரிடம் நிறக்கட்டுப்பாடு ஏதும் உண்டா? நாடகப் பாங்கான தொரு செயற்கைத்தனம் இந்த ஓவியத்தில் இருக்கிறதா? ஓவியத்தின் பிற்புலத்தில் தூரத்தே இராணுவம் வசிக்கும் கட்டடத் தொகுதிகளுக்கும் மலையின் அடிவாரத்துக்கு மிடையே வெளிச்சத்துடன் குழுவொன்று காணப்படுகிறது. இவர்கள் யாராக இருக்கலாம்? ''விபரிப்புக்கள் அற்ற: கண்களுக்கு இங்கிதத்தைத் தராத தூரிகை ஓட்டமாகவே'' இவரின் தூரிகை வேலைப்பாடுகள் உள்ளன. இவ்வாறு இருப்பதே இக்காட்சியமைவுக்குப் பொருத்தமானதாகக் கொள்ளத்தக்கது. உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு இம்முறையே அவருக்குத் தடைகளற்ற இலேசானதொரு வெளியிடு முறையாக இருந்துள்ளது. ஓவிய முழுப்பரப்பெங்கிலும் கவனத்தைச் செலுத்தும் போது அங்கு பயன்படுத்தப்பட்ட நிறங்கள் பெரும்பாலும் கறுப்பாகவும், தரையின் நிறமாகவும் தோற்றந்தருவதைப் புரிந்துகொள்ளலாம். எனவே அவரிடம் நிறக்கட்டுப் பாடொன்று இருந்துமுள்ளது. தூய்மை அற்ற செப்பு உலோகம் எப்படி இருக்குமோ அவ்வாறே தரையின் நிறத்தைக் காட்டியதுமல்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின் நுண்மைத் தன்மையையும் அதனுடன் இணைத்துமுள்ளார். தேக்கமுறாது விருத்தியடைந்து செல்லும், கண்ணுக்குள் இசைவு தராத அதேவேளை அதிர்வைத்தருகின்ற ஆழ்ந்த தூரிகையின் கோடுகள் மனித உருவங்கள் மிக்க பயங்கரத்துக்குள் சிக்குண்டுள்ளன என்பதைக் கோட்டு மொழியில் பேசுவதாலும், விடயத்தையும் அதனை ஓவியமாக்கிய முறையையும் பிரிக்க முடியாமல் இருப்பதாலும் செயற்கையான நாடகப்பாங்கு அங்கு இல்லாமலே போய்விடுகிறது. தூரத்தே வெளிச்சத்துடன் வரும் குழுவானது மேலதிகமாக அவ்விடம் நோக்கி வரும் படையினராகவோ அல்லது படையினரால் அழைத்து வரப்படும் அப்பாவிச் சனங்களாகவோ கொள்ளப்படலாம். அப்பாவிச் சனங்களும் ஆக்கிரமிப்பு இராணுவமும் எதிர்பாராத முறையில் மிகச்சடுதியாகவே சந்திக் கொண்டனரா? சுடுகுழல் களின் முனைகளில் பொருத்தப்பட்ட கூரிய முனை கொண்ட கத்திகளும் இராணு வத்தினரின் தொப்பிகளும் காட்சிப்படுத்தப்பட்ட நிலை ஒழுங்கு பற்றி யாது கூறலாம்? வரிசையாக நிற்கும் படையினர் ஒரே மாதிரியான உடைகளை அணிந்துள்ளனரா? ஒருவர் பின்னொருவராக நிற்கும் துப்பாக்கி வீரர்கள் தமது உடலின் எப்பகுதியைக் காட்டி நிற்கின்றனர்? ''இராணுவத்திற்கும் சனங்களுக்குமிடைப்பட்ட தூரம் மிகக்குறுதியாக இருப்பதும், மரண பீதியில் போக்கிடம் எதுவுமற்று அச்சத்தில் உறைந்திருக்கும் மக்களின் மெய்நிலைகள், அவர்களின் முக உணர்வுகள், குழுமக் கட்டுக்கோப்புக் குலைவுற்ற காட்சியைப் படவாக்கஞ் செய்த முறை'' இவை யாவும் அப்பாவிச் சனங்களும் ஆக்கிரமிப்பு இராணுவமும் எதிர்பாராத முறையில் மிக்க சடுதியாகச் சந்தித்துக் கொண்டனர் என்பதையே வெளிப்படுத்துகின்றன. ''கூரிய கத்திமுனைகளும் இராணுவத்தின் தொப்பிகளும் மாற்றமுறாத தொடர்வரிசையொன்றைப் பேணுகின்றன''. ''மக்களைச் சுடும் படையினர் எல்லோரும் ஒரே மாதிரியான உடைகளையே அணிந்துள்ளனர்'' ''துப்பாக்கி வீரர்கள் எல்லோரும் தமது பிற்புறத்தையே காட்டி நிற்கின்றனர்''.

தம்மைச் சுதாகரித்துக் கொள்வதற்கே அவகாச மற்று மண்ணிற் சாய்ந்த இம்மக்களின் சஞ்சலம் மிக்க இரவு 1808 மே 03 ஆனது விடியாமலே கழிந்து போயிற்று என்பதுடன் அவர்களின் வாழ்வை அஸ்தமனப்படுத்திய இரவாகவும் அது ஆயிற்று. போர் வெறி கொண்ட ஆட்சியாளர்களின் தலை நகரங்களிலெல்லாம் இந்த ஓவியத்தின் பிரதிகளைத் தொங்கவிட்டுக் காட்சிப்படுத்த வேண்டுமென்று பல வருடங்களுக்கு முன்னரே கூறப்பட்ட கூற்றானது இன்றும் சாகாவரம் பெற்ற மெய்க்கூற்றாகவே கொள்ளப்பட வேண்டியதாகிறது.

1814 இல் கன்வஸ் மீது எண்ணெய் வர்ணத்தால் Francisco Goya ஆல் தீட்டப்பட்ட இவ் ஓவியம் 268cm x 347 cm பரிமாணங்கொண்டது. Madrid உள்ள 'Museo del prado' இல் இது காட்சிப்படுத்தப்பட்டுமுள்ளது.

***

மிகவும் கூர்மையாக அவதானித்தே கீழே இடம் பெற்றுள்ள இவ்வோவியத்திற் சொல்லப் பட்ட விடயத்தைக் கிரகிக்க முடியுமென நீங்கள் கருதுகின்றீர்களா? இந்த ஓவியத்துக் கொரு தலைப்பு அவசியமானதா? ஓவியத்தில் சித்திரிக்கப்பட்டிருக்கும் பெண்ணானவள். தனது இடக்கரத்தில் சுருட்டி வைத்திருக்கும் உப்பியுள்ள மெதுமையை வெளிப்படுத்தும் சற்றுப்பாரமான பொட்டலம் போன்ற பொருள் யாதாக இருக்கலாம்? பெண்ணும் சிறுமியும் தாழ்வானதோரிடத்திலிருந்து உயர்வானதோர்இடத்தின் மேற்தரையில் கால்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதித்த அக்கணத்தை உணர்வு பூர்வமாக இது சித்திரிக்கின்றதா? இப்படைப்பாக்கத்தில் உங்களின் இரசனையையும் ஆர்வத்தையும் தூண்டும் இடங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா? சிறுமியைக் கூட்டிவருமொரு பெண் என்பதுடன் இக்கருத்து வெளிப் பாடு முடிவடைகிறதா? இந்தப் படைப் பாக்கத்திற்குரிய கலைஞர் யாரெனக் கூறமுடியுமா?

மிகவும் கூர்மையாக அவதானித்தே இந்தப் படைப்பைப் புரிந்து கொள்ள வேண்டு மென்ற கூற்று அர்த்தமற்றது. பார்த்தவுடனேயே புரிந்து கொள்ளக்கூடியவாறு இது இருப்பதால் இதற்கெனவொரு தலைப்பிடுவதும் அவசியமில்லாது போய்விடுகின்றது. சற்றுப் பள்ளப்பாங்கான இடமொன்றிலிருந்து சற்று உயர்வான இடத்துக்கு நகர்பவர்களின் தொழிற்பாடு எவ்வாறாக அமையுமோ அவ்வாறே அதனை 'அந்த இயல்பு' வழுவாத வாறு படமாக்கியமையே எமது ஆர்வத்தையும் இரசனையையும் தூண்டும் மையப் பகுதியாக இருக்கிறது. 'அந்த இயல்பு' எனக் குறிப்பிடப்படுவது பெண்ணிலும் சிறுமி யிலும் பூரணமாக வெளிப்படுத்தப்பட்டுமுள்ளது. ஆற்றிலே துணிகளைச் சலவை செய்து விட்டுத் திரும்பி வரும் சலவைத் தொழிலாளியான பெண்ணையும் அவளின் மகளையுமே ஓவியர் இங்கு தீட்டியுள்ளார். வெளிப்படையாகப் பார்க்குமொருவருக்கு இதுவொரு சாதாரண படைப்பாகவே தெரியும்.பார்த்தல் என்பது விசாலமாக விரிவுறும் போதே அங்கு பொதிந்துள்ள அர்த்தங்கள் வெளிக்கொணரவும்படும். கடலில் முத்துக்கள் எப் போதும் ஆழத்துக்குள்ளேயே இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் தனது இடக்கரத்தில் சுருட்டி வைத்திருக்கும் உப்பியுள்ள மெதுமையை வெளிப் படுத்தும் பாரமான பொட்டலம் எனக்குறிப்பிடுவது ஆற்றிலே சலவை செய்து எடுத்து வரப்படும் துணிகள் பல கொண்டதொரு தொகுதியையேயாகும். இடக் கரத்தினால் பாரமான துணித்தொகுதியை இடுப்புடன் சேர்த்து இறுக்கமாக அழுத்திக் கொண்டு, வலக்கரத்தினால் சிறுமியின் இடக்கரத்தைப் பற்றிவாறு அவளுக்குக் கை கொடுத்து உதவுங்காட்சியானது மிக்க இயல்பாகவே நிறங்களின் ஊடாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கையிலே பாரத்தைத் தாங்குவதும், சற்றுப் பள்ளமான இடத்திலிருந்து உயர்ந்த இடத்துக்கு வருவதற்குத் தனது உடற்பாரத்தையே புவியீர்ப்பு விசைக்கு எதிராகச் செயற்பட வைத்து மேலேறும் எத்தனிப்பும் ஆகிய இவை இரண்டுடன் சிறுமிக்குக் கைகொடுத்துதவும் மூன்றாவது எத்தனிப்பும் இங்குண்டு. இந்த மூன்றும் அவளின் நகர்வுக்கான மிகச் சிறு தடைகளாக உள்ளனவென்பது அக்காட்சியிலிருந்து எமது மனதால் புரிந்து கொள்ளப்பட வேண்டிய நுண்மையான அம்சங்களாகவும் உள்ளன. இருவருக்குங் கீழேயிருக்கும் ஆற்றின் கற்படிகள் வழியாக மேலே ஏறிவந்ததனால் ஏற்பட்ட களைப்பானது முதிர்ந்த பெண்ணிலே தெரிவதுடன் இதனையும் மீறி அவள் உடல் வலுவானவள் என்பதுவும் நன்கு வெளிப்படுத்தப்பட்டுமிருக்கிறது. வீட்டிலே சிறுமியைப் பராமரிப்பதற்கு எவரும் இல்லையென்பதுவும் இங்கு உய்த்துணரப்பட வேண்டிய உள்ளீடான தொக்கி நிற்கும் ஓர் அவதானிப்பாகவும் கருத்திற் கொள்ள வேண்டியுமிருக்கிறது. இங்கு குறிப்பிடப்பட்ட மிகவும் நுண்மையான சூக்குமத்துக்குள் அடங்கும் அம்சங்கள் யாவும் கலைத்துவமாக அகப்படுத்தப்பட்டுமுள்ளன.

சிறுமி தனது வலக்கரத்தில் வைத்திருப்பது 'Paddle' என அழைக்கப்படும் துணி துவைப்பிற்குப் பயன்படுத்தப்படுமொரு பொருளாகும். ஆற்றுநீரில் துணிகளை நன்கு அடித்துத்துவைப்பதற்கு 'பிரெஞ்' சலவைத் தொழிலாளிப் பெண்கள் வழமையாக இதனைப் பயன்படுத்துவார்கள். இப்பொருளைக் கையிலே வைத்துக் கொண்டு வலக்காலை மேலே உயர்த்தி வைக்கும் நகர்வு நிலையில் 'பிள்ளைத்தனம்' என்பது பளிச்செனப் புலப்படுகிறது.

கடும் நிறத் திணிவுகளையும் மென்நிறத் திணிவுகளையும் கொண்டு உருவாக்கப்பட்ட இப்படைப்பு இருளுக்கு இடையே மென்ஒளிர்வு புலப்படும் வகையில் அற்புதமாகக் காட்சியாக்கப்பட்டுள்ளது. இருளையும் ஒளியையும் கரைத்து அவைகளின் எல்லைகள் எங்குண்டெனக் கண்டறியாதவாறு ஒன்றினுள் ஒன்று என அமையும் வகையில் நிறைவோட்ட மானது உருவங்களில் பரவுகிறது. இந்த மாதிரியான இவ்வொருங்கிணைப்பென்பது 'களிப்படைய வைக்கும் ஒருங்கிணைப்பு' எனவும் கூறலாம். ''சொல்ல வேண்டிய விடயத்தை எந்தவிதமான சிரமங்களையும் அனுபவிக்காமல் பிரசவித்த சில கோடுகளும், நிறத்திணிவுகளும் எமக்குச் சொல்கின்றன''. ''பிள்ளையொருத்தியைத் தாயானவள் தன்னுடன் அழைத்து வருங்காட்சியே இது''. என அதனைக் குறைத்து மதிப்பீடு செய்ய முடியாது. அன்றாடம் சாதாரணமாகக் காணுங் காட்சியாக இது இருப்பினும் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் விபரிப்புக்கள் இல்லாமல் மிகச்சுருக்கமாக இச்சம்பவமானது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ''சுருக்கமாக வெளிப்படுத்துவதிலேயே கலையின் ஆன்மா தரிசனம் தருகிறது'' என்பதற்குப் பொருந்தும் வகையில் இது காட்சியாக்கப்பட்டுள்ளது.

சிறுமி நீலச் சட்டையை அணிந்துள்ளாள். அவளின் கைகள், முகம் ஆகியன கபிலம், இளஞ்சிவப்பு, சிவப்பு நிறங்களில் தெரிகின்றன. பெண்ணின் முகம், கபிலம் இருண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பு நிறங்களிலும் அவளின் வலக்கை வெள்ளை, மென்சிவப்பு நிறங்களிலும், இடக்கையின் ஓரங்கள் சிவப்பு நிறத்திலும் அதன் உட்பகுதியானது ஒளிர்வாக வெள்ளை நிறத்திலும் காணப்படுகின்றன. பெண்ணின் பிற்புறத் தலைமயிர் ஒளிர்வாகவும் ஒளிர்வற்ற இடங்கள் மென்குருத்துப் பச்சையும் கறுப்பும் கலந்து காணப்படுகின்றது. பெண் அணிந் துள்ள உடையின் இடப்புறக் கைப்பகுதி மென்குருத்துப் பச்சை நிறத்தில் ஒளிர்வாகத் தெரிகிறது. ஏனைய இடங்கள் சற்று இருளடைந்துமுள்ளன. பெண்ணின் மார்புப் பகுதி மென் ஒளிர்வாகவும் ஆடையின் கீழ்ப்பகுதியில் சில இடங்கள் ஒளிர்வு குறைந்தும் காணப்படுகின்றன. ஏற்கெனவே கூறியது போல ஒளிர்வும் இருளும் கரைந்து கரைந்து இங்கு பரவுகின்றன.

பெண்ணின் உடையில் நீலம், கறுப்பு, ஊதா, மென்சிவப்பு ஆகிய நிறங்கள் ஏகலும் உண்டு. நீலமே பெரும் பங்கு நிறமாகவும் இருக்கிறது. தூரத்தே கட்டடத்தொகுதிகள் சில தெரிகின்றன. காலவோட்டம் காரணமாக அவை மங்கிவிட்டன. ஆற்றின் கைப்பிடியானது பின்னணியில் காட்டப்பட்டிருக்கிறது. அது கீழ்நோக்கி மறைவதனால் அந்த இடம் தாழ்வானது என்பது உணரப்படத்தக்கது. கைப்பிடியின் பகுதிகள் சிலவற்றை முன்னணியில் காணப்படும் சிறுமியும் தாயும் மறைந்துள்ளனர். சிறுமிக்கு அருகே காணப்படும் நிலைக்குத் தான சுவர் அமைப்பு, தரைப்பகுதி, பெண்ணிற்கு அருகே காணப்படும் நிலைக்குத்துச் சுவரின் சிறு பகுதி ஆகியன சாம்பல், நீலம், கபிலம், சிறிதளவு வெள்ளை இந்நிறங்களின் சேர்க்கையாகத் தெரிகின்றன. ஆற்றிலே சலவை செய்து எடுத்துவரப்படும் துணிப் பொட்டலத்தின்: துணியானது ஈரத்தன்மையில் எவ்வாறு இருக்குமோ அவ்வாறே காட்சி யாக்கப்பட்டுமுள்ளது. சுற்றப்பட்ட பகுதி மென்பச்சை நிறத்திலும் உள்ளே சுருண்டு இருப்பவை வெள்ளை நிறத்திலும் சிறு அளவு சிவப்பு நிறத்திலும் துலங்குகின்றன.

Artist: Honore Daumier, Title : The Laundress, Location : Muse'e de or Say, Dimensons: 49 cm x 34 cm, Medium : Oil on Panel.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கலையாக்கத்தை அவதானியுங்கள். இதன் இடப்பகுதியின் மேலே நாகபாம்பின் சாயலை ஒத்த வடிவமொன்று தனது தலையை உயர்த்தி எம்மையெல்லாம் அச்சுறுத்துவது போல் காட்சியானது அமைந்திருக்கிறதா? தரையிலிருந்து திடீரென வானுயர எழுந்து நிற்பது போலவும் அது தோற்றங்கொண்டுள்ளதா? இதுவரையப்பட்ட சித்திரமா அல்லது அச்சுருப்பதிப்புச் செய்யப்பட்டதா? உயர்ந்து தெரியும் பாம்பின் தலையை ஒத்த இந்த வடிவமைப்புக்கு மிகவும் கீழே தெரியும். பாதிவெட்டப்பட்ட தென்னம்பாளையை ஒத்த வடிவமைப்பு யாது? இதனைப் போன்ற வடிவங்கள் வேறும் இங்குண்டா?

இடப்பகுதியின் மேலே உயர்ந்து தெரியும் பாம்பின் தலையை ஒத்த இந்த அமைப்பு மிகப்பெரியதொரு கடல் அலையாகும். இந்த ஓவிய வரைதளத்தில் அதுவே வியாபித்தும் உள்ளது. மரக்குற்றியில் இக்காட்சியானது வெட்டியெடுக்கப்பட்டு அதன் பின்னர் அது மைபூசி அச்சிடப்பட்டுமிருக்கிறது. இதனை 'மரவெட்டுச் சித்திரம்'எனவும் அழைக்கலாம். இன்னும் இதனை, திருத்தமாக சொல்வதெனில் 'நிறமரவெட்டுச் சித்திர பதிப்பு' என்பதே அதுவாகும். (Colour Wood Cut Print) சித்திரத்தில் இடப்புற அந்தத்திலிருந்து படிப்படியாக உயரும் கோடு அதியுயர் புள்ளிக்குள் தரித்து அதன் பின்னர் பறவையொன்றின் நகங்களின் பல்தொடர்ச்சி வடிவங்களையும் எடுக்கிறது. உச்சியின் கீழ்ப்பரவும் அவ்வடிவங்கள் அநேகம் இங்கு உண்டு. இவையெல்லாம் நீர்ச்சிதறல்கள் திடீரென மிக இறக்கமடைந்து தாழ் புள்ளியொன்றுக்குள் தரித்து மீளவும் அக்கோடானது படிப்படியாக உயர்ந்து வலப்புற அந்தத்தைத் தொடுகிறது. பிரதான கோட்டின் பயணிப்பு இதுவேயாகும். இக்கோட்டுக்குச் சற்றுக் கீழே வலப்புற அந்தத்தில் தொடங்கும் வேறு கோடானது அதிகம் தாழ்வடையாது சற்றுத் தாழ்வடைந்து உயர்கிறது. இந்த உயர்வு பெரிய அலையின் கீழேயே காணப்படு கிறது. இந்த உயர்ச்சிக்குப் பின் அது இறக்கமடைந்து இடப்புற அந்தத்தைத் தொடுகிறது. வலப்புற அந்தத்தில் தொடங்கிய அக்கோட்டிலிருந்தே வேறொரு கோடு அதுவும் வலப்புறத்திலிருந்தே ஆரம்பித்து மிகத் தாழ்வடைந்து வீச்சுடன் உயர்கிறது. இது உயரும் இடத்தில் பலபல நீர்த்திவலைகளுடன் அதன் அந்தமானது உருமாற்றமுறுகிறது.

பெரிய அலையின் கீழே தெரியும் பாதி வெட்டப்பட்ட தென்னம் பாளையை ஒத்த வடிவம் எனக்குறிப்பிடப்படுவது படகொன்றையாகும். இப்படகின் மற்றைய பாகம் சிறிய அலையின் முகட்டால் மறைக்கப்பட்டுமுள்ளது. இதுபோன்ற வேறும் இரு படகுகள் இங்குள்ளன. உங்களின் அவதானிப்புக்காக அவைகள் எங்குள்ளன என்பது விபரிக்கப் படவில்லை. இந்தப் படகுகள் யாவும் சற்று இருண்ட காவி, மஞ்சள் நிறத்தில் உள்ளன. அப்படகுகளுக்குள் மனிதர்கள் தெரிகின்றனர். இருண்டநீலம், மத்திமநீலம், மென்நீலம், சற்றுச்சாம்பல் நிறத்துடன் மேலும் வெள்ளையையும் சிறிதளவு மஞ்சளையும் கலந்த நிறமொன்று என நிறங்கள் இங்குள்ளன. மேலுயர்ந்து நிற்கும் அலையின் வலப்பகுதியில் உள்ள ஆகாயம் வெளியாகவே விடப்பட்டுள்ளது. இந்த வெளியானது மிகவும் முக்கிய மானது. ஏனெனில் அலையின் கம்பீரத்தையும் அச்சுறுத்தலையும் இந்த வெளியே வலுவடையச் செய்கிறது. பெரிய அலைக்குக் கீழே மிகவும் தூரத்தில் மலையொன்று தெரிகிறது. இந்த மலை மிக்க அமைதியுடன் இருப்பது போல் காட்சி தருகிறது. 'ஆர்ப்பரிக்கும் அலையும் அமைதியான மலையும்' ஒரே தளத்தில் வைக்கப்பட்டுமுள்ளன.

தூரத்தே அமைதியுடன் இருக்கும் மலை Fuji ஆகும். நீர்த்திவலைகள் பறவை யொன்றின் தொடர்ச்சியுறும் நகங்களின் வடிவமைப்பில் உள்ளன. காற்றில் அசையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை வெள்ளையாகவும் மென்நீலமாகவும் காட்சி தருகின்றன. எழுந்து நிற்கும் பெரிய அலையின் முகட்டின் கீழ்ப்பகுதி இருண்ட நீல நிறத்திலும் அதனுள்ளே மத்திம நீல நிறத்தில் வளைந்த சமாந்தரக் கோடுகளும் உள்ளன. இடையிடையே பல இடங்களில் வெண்ணிறப் புள்ளிகளும் தெரிகின்றன. 'நீரானது முட்டித் ததும்பும் நிலையை' ச் சிரம மில்லாது கோடுகளின் வழியாக ஓவியர் காட்டியுள்ளார். இருண்ட நீலத்தில் இருக்கும் பகுதிகள் எங்கும் மத்திம நீலத்தில் கோடுகளும், மென்நீல நிறத்திலும் வெள்ளை நிறத்திலும் பறவையின் நக அமைப்பை ஒத்துக் காணப்படும். நீர்த்திவலைகளும், வட்ட வட்ட வெண்புள்ளிகளுமாக இச்சித்திரமானது ஒரே நேரத்தில் 'மிகப்பெரிய' என்ற உணர்வுடன் பரவசமொன்றையும் எமக்குள் ஏற்படுத்துகிறது. கீழே வலப்புறத்தில் அலை இரேகையின் ஓட்டமொன்று கடும் நீல நிறத்திலும் மென்நீல நிறத்திலுமாக இடப்புறத்தைச் சமப் படுத்துகிறது.

இந்த மரவெட்டுச் சித்திரத்துடன் தத்துவமொன்றும் நெருக்கமாக இணைக்கப்பட்டு மிருக்கிறது. இயற்கை என்பது மிக்க சக்தி வாய்ந்ததுடன்: அந்த இயற்கையின் வியாப கத்துக்குள் 'மனிதன்' என்பவன் 'மிகச் சிறுதுகள்' என்பதுவே அதுவாகும். இயற்கையில் அலையொன்று எப்படி இருக்குமோ அப்படியே அது இங்கு பிரதி செய்யப்படவில்லை என்பதுடன் ஓவியரின் கற்பனை சார்ந்த பகுதிகளும் இங்குள்ளன. பதிவு செய்யும் இயந்திரம் போல ஓவியர் தொழிற்படாது இயற்கையின் சாரம்சத்துடன் தனது 'சுயபார்வை யையும்' கலந்து இங்கு முன்வைத்துமுள்ளார். அலையை அகத்துள் தியானித்துப் படமாக்கி யுள்ளார் எனவும் கூறமுடியும்.

மேலைத்தேசக் கலைஞர்களின் கடல் அலைகளுக்கும் இந்த அலைகளுக்கும் இடையே வித்தியாசங்கள் உள்ளன. மேலைத் தேசத்தவர் உள்ளதை உள்ளவாறு காட்டுவதிலேயே கவனத்தைச் செலுத்துவார்கள். ஜப்பானைச் சேர்ந்த ஓவியர் Hokusai இயற்கையான அலையின் சாரம்சத்துடன் தனது சுய எண்ணவோட்டத்தையும் அங்கு பிரதிபலித்துமுள்ளார். மேலும் மனிதர்களைவிடக் கடல் அலைக்கே மிக்க முக்கியத்துவத்தையும் அவர் வழங்கி யுள்ளார். ஒரு அலையையே ஓவியப் பொருளாக்கியமை கூட வித்தியாசமானதொரு செயற்பாடே ஆகும். ''ஓங்கி உயர்ந்து அச்சுறுத்தும் அலையின் முன்னிலையில் வெறும் புள்ளியாகவே மனிதன் நிற்கின்றான்''என்பதைச் சுனாமி மூலம் நாம் கற்றுக் கொண்டு முள்ளோம்.

இடப்புறம் தொடங்கி வல்ப்புறத்திலும் பின்னர் வலப்புறம் தொடங்கி இடப்புறத் திலுமாக ஒத்திசைவுடன் பயணிக்கும் தேக்கமற்ற கோடுகளும்: கடும், மென், மத்திம, நீல நிறத் தொடர்களும் கண்ணுக்குள் உறுத்தும் காவி மஞ்சளும், வெண் பொட்டுக்களுமாக இப்பாரிய அலை எமது கண்கள் வழியாக ஏறி மனதுக்குள் வீழ்ந்து நர்த்தனம் செய்கிறது.

Artist : Katsu Shika Hokusai, Title : The Great Wave off Kanagawa, Type: Colour Wood Cut, Dimensions : 25.7 cm x 37.8 cm.

***

இதுவரை நீங்கள் பார்த்த ஓவியங்கள் யாவும் உங்களின் இயல்பான புரிதலுக்கு இசை வாகவே ஒத்தாசை செய்துள்ளன. அந்த ஓவியங்களில் காணப்பட்ட மனித வடிவங் கள், பொருள்கள் யாவும் உங்களின் முற்கற்பிதங்களுடன் நன்கு பரிச்சயப்பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிச்சயப்பட்ட காரணத்தாலேயே, பார்த்தலும் விளங்கிக் கொள்ளலும், குழப்பமற்றதாக உங்களுக்கு இருக்கிறது.

இங்கு காட்டப்பட்டிருக்கும் ஓவியத்தை அவதானியுங்கள். மனிதத் தலைகள், கைகள், மிருக உருவகங்கள், மின்குமிழ், முறிந்தகை இவை யாவும் கன்வஸ் மீது பரவலாக வரையப்பட்டுள்ளன. தொடர்பற்றவை யாவும் எந்த வகையில் ஒன்றுடனொன்று தொடர்பு படுத்தப்பட்டுள்ளன என்பதனையெண்ணி நீங்கள் குழப்பமடைகின்றீர்களா? மேற்குறிப் பிடப்பட்ட குழப்பம் என்பது உங்கள் மனதுக்குள் வருமானால் அதுவே ஓவியம் வெற்றியடைந்து விட்டது என்பதற்கான அறிகுறியாக அமைந்துவிடும். ஏனெனில் 'குழப்பம்' அல்லது 'இயல்பு நிலை இருக்காமை' என்பதைத் தோற்றுவிப்பதற்கானதொரு முயற்சியாகவே இப்படைப்பு அமைகிறது.

கொடிய யுத்தமொன்றின் பதிவுகளே இங்கு காட்டப்பட்டுள்ளன. யுத்தமொன்று நடைபெறும் போது ஒழுங்கென்பது எங்குமே இருக்காததொன்றாகப் போய்விடும். இதற்காரணமாகவே தொடர்பற்றவை யாவும் அங்கொன்றுமிங்கொன்றுமாக ஏதோவொரு வகையில் தொடர்பாக இருப்பது போலவும் காணப்படும்.

இந்த ஓவியம் கறுப்பு, வெள்ளை, சாம்பல் ஆகிய நிறங்களில் தீட்டப்பட்டிருப் பதற்கான காரணம் எதுவுமுண்டா? ஓவியத்தின் மையத்தில் குதிரையொன்று தனது தலையைத் திருப்பி ஓலமிடுவது போல் காணப்படுகின்றது. ஓவியர் இதன் மூலம் எதனை வெளிப்படுத்துகின்றார்? மிகவும் கள்ளத்தனமான பார்வையுடன் எருதொன்றின் தலையும் காணப்படுகிறது. அதன் வாலானது மிகவும் பூடகமாகக் காட்சிப்படுத்தப்பட்டுமுள்ள தென்பது உங்களுக்குத் தெரிகிறதா? மின்குமிழ் போன்று எரிந்து கொண்டிருக்கும் வடிவம் இங்குள்ளது. ஓவியர் எதுவோ ஒன்றுக்கான குறியீடாக அதனைக் கையாண்டுள்ளரா? எருதின் கீழே பெண்ணொருத்தி தனது கைகளில் வைத்திருப்பது எதனை? அவள் அழுவது போல் இருக்கிறதா? பெண்ணிற்குக் கீழே மனிதத் தலையொன்றும் அதிலிருந்து வெளிப் படும் கையும் காணப்படுகிறது. அந்தக் கைவிரல்கள் அமைந்துள்ள விதம் பற்றி ஏதாவது கூறமுடியுமா? ஓவியத்தின் வலப்புற மேல் மூலையில் கைகள் இரண்டையும் மேல்நோக்கி உயர்த்தியும் வானத்தை அண்ணார்ந்து பார்க்கும் நிலையிலும் அந்த மனித உருவம் காணப்படுகிறது. அவ்வுருவின் மேல் காட்டப்பட்டிருக்கும் கேத்திர கணித வடிவம் யாது? சிலையொன்றின் உடைந்த கையொன்று முறிந்த வாளொன்றைக் கையில் வைத்திருக் கிறது. ஓவியத்தின் அதி கீழ்ப்புறம் குதிரையின் கீழே இது காணப்படுகிறது. இது எதனை உணர்த்துகிறது. பெண்ணொருத்தியின் பக்கத் தோற்றமும் அவளுடன் சேர்ந்த விளக் கேந்தும் கையொன்றும் இங்குள்ளது. அதனை நீங்களே கண்டுபிடியுங்கள். அவ்வாறு காட்டப்பட்டமைக்கு ஏதாவது காரணம் இருக்கிறதா?

இந்த ஓவியத்தை வரைந்த ஓவியர் யார்? இதற்கான தலைப்பு யாது? இதனை ஓவியர் தீட்டியமைக்கான முக்கிய காரணம் எதுவும் உண்டா? உங்கள் புரிந்து கொள்ளலைத் தீவிரமாக்கவதற்காகவே இக்கேள்விகள் உங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த ஓவிய மானது புகழ்பெற்ற ஸ்பானிய ஓவியர் Picasso ஆல் தீட்டப்பட்டதுடன் 'Guernica' என அவரால் அதற்கு தலைப்பிடப்பட்டுமுள்ளது. 28.07.1937 இல் ஸ்பெயினில் உள்ள Gunernica வின் தலைநகர் Basque மீது ஜேர்மனிய இத்தாலிய குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசிப் பேரழிவை ஏற்படுத்தின. ஸ்பெயினில் நடந்த உள்நாட்டு யுத்தத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போதே இக்குண்டு வீச்சும் இடம்பெற்றது. தனது சொந்த நாட்டில் அந்நிய விமானங்கள் நடத்திய அட்டூழியத்தை ஓவியமாக்குவதற்கு முனைப்புடன் செயற்பட்ட ஓவியர் பிக்காஸோ இத்துயர்மிக்க நிகழ்வை வழமையான போர் ஓவியங்களைப் போலக் காட்டாது: ''தங்கு தடையற்ற சுயாதீன உணர்வு வெளிப்பாடு'' என்ற கருத்துக்கிசை வாக அதனைக் காட்டியுங் கொண்டார். பெருந்துயர் மிக்க இம்மனிதகுல அழிவைப் பல வர்ணங்களைப் பயன்படுத்தி தீட்டுவதற்குப் பிக்காஸோ விரும்பவில்லை. கறுப்பு, வெள்ளை இவை இரண்டுடன் கறுப்பையும் வெள்ளையையும் கலப்பதனால் உண்டாகும் சாம்பல் நிறத்தையுமே பயன்படுத்துவதற்கு அவர் விரும்பினார். அந்த நிறங்கள் துயருக் கான நிற மொழியாக இருப்பதே அதற்கான காரணமுமாகலாம்.

புற முதுகில் கூரிய ஈட்டியொன்று ஆழத் தைத்தமையால் வலி பொறுக்க முடியாது ஓலமிடும் குதிரையொன்றே இங்கு காட்டப்பட்டுள்ளது. ஈட்டி இங்கில்லை. ஆனால், அது தந்த வேதனை வெளிப்படுகிறது. குதிரையின் முகத்தில் பிக்காஸோவின் கியூபிசபாணி நன்கு தெரிகிறது. நேர் கோடுகளைப் பயன்படுதத் திண்ம இயல்பை அவர் அங்கு தோற்றுவித்துள்ளார். எருதைத்தவிர ஏனைய உயிருள்ளவை யாவும் வேதனையில் அழுகின்றன. எருதானது அடக்கு முறையின் குறியீடாகக் காட்டப்பட்டிருக்கும் அதே வேளை மறைமுகமாக General Franco வையும் சுட்டிக்காட்டுகிறது. எல்லா வற்றையும் செய்துவிட்டு ஒன்றுமே செய்யாதவராக பாவனை பண்ணும் பாங்கில் அவர் அமைதியாக இருப்பது போல் காட்டப்பட்டாலும் இந்த அட்டூழியத்தைச் செயற்படுத்துவதில் மிக்க முனைப்புக் கொண்டவராகவும் அதேவேளை அதிலிருந்து இம்மியும் நகர விரும்பாத ஒருவராகவுமே அவர் அங்கு பிரசன்னப்படுத்தப்படுகிறார்.

உள்நாட்டு யுத்தத்தை அடக்குவதற்காக Franco இன் வேண்டுதலுக்கு அமையவே ஹிட்லரின் நாஸி விமானங்கள் அப்பாவிகள் மீது குண்டுகளைப் போட்டன. இந்த எருதின் வாலானது வாலைப் போலத் தெரியும் அதேவேளை தீச்சுடரிலிருந்து வெளிக்கிளம்பும் புகை போன்ற தோற்றப்பாட்டையும் ஞாபகப்படுத்துகிறது. நெருப்பில்லாமல் புகைவர மாட்டாது என்பார்கள். அதாவது சூத்திரதாரி திரை மறைவிலுள்ளார் என்பதே அதன் கருத்தாகும்.வீசப்பட்ட குண்டுக்கான குறியீடாக மின்குமிழ் வரையப்பட்டிருப்பதுடன் அது சாத்தானின் கண்ணாகவும் அர்த்தப்படுத்தத்தக்கது. எருதின் கீழ்க் காணப்படும் பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இறந்த குழந்தையை மடி மீது கிடத்தி அழுகிறாள். கொடிய யுத்தத்தின் போது மிக்க பாதிப்புக்கு உட்படுபவர்கள் பெண்களும் குழந்தைகளும் தான் என்பதனைப் பிக்காஸோ சொல்லாமல் சொல்கின்றாரா? இயேசுநாதரைச் சிலுவையில் அறையும் போது அவரின் உள்ளங்கைகள் இரண்டிலும் ஆணிகள் அடிக்கப்பட்டன. அந்த வேதனையின் காரணமாக அவரின் கைவிரல்கள் உள்ளங்கையை நோக்கி மடிந்தன. அதனை நினைவு படுத்தும் வகையில் மனிதத்தலையுடன் ஒட்டி வரையப்பட்ட கையானது தோற்றமளிக்கிறது. இங்கும் பிக்காஸோவின் கியூபிச பாணி கைவிரல்களில் தெளிவாகின்றது. கேத்திர கணித வடிவத்தால் குறிப்பிடப்படுவது எரியும் கட்டடமொன்றையேயாகும். அதனை அண்ணாந்து பார்க்கும் மனித வடிவமும் காட்டப்பட்டிருக்கிறது. முறிந்த வாளை வைத்திருக்கும் கையானது போர் வீரனைக் குறித்து நிற்கிறது. இந்த அழிவுகளுக்கு மத்தியிலும் மீளுவோம் என்ற நம்பிக்கையை விளக்கேந்தும் கையானது சுட்டி நிற்பதுடன் இந்த விளக்கானது மின்குமிழிற்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருப்பதிலிருந்து முரண் நிலைகள் அருகருகே இருப்பது போன்ற எண்ணப்பாட்டையும் அவை தருகின்றன. விமானங்களை வரையாமலும் அவை வீசும் குண்டுகளைக் காட்டாமலும் பல குறியீடுகளை வெளிக்கொணர்வதன் மூலம் போரின் அழிவைப் பிக்காஸோ படவாக்கமாக்கியுள்ளார். விமானங்களையும் அவை வீசும் குண்டுகளையும் இறந்த உடற் குவியல்களையும் யதார்த்தமாகக் காட்டி வரைந்திருப்பின் அக்காட்சியானது புகைப்படக் கருவியின் பதிவாகவே கொள்ளப்படும். முகத்திற் கண்கொண்டு நோக்காமல் பிக்காஸோ என்னுங் கலைஞர் அகத்திற் கண்கொண்டு நோக்கியமையால் இக்காட்சியானது உருவாயிற்று. தனது மக்கள், தனது நகர் ஆகியன இந்நிலைமைக்குள் உட்பட்டு விட்டனவே என்ற அவரின் தாங்கமுடியாத வேதனையின் வெளிப்பாடே இவ்வோவியம். அவரை வாட்டியெடுக்கும் அக உணர்வுகளின் ஒட்டுமொத்த எறிகையெனவும் இதனைக் குறிப்பிடலாம்.

''வரவேற்பு மண்டபத்துச் சுவர்களில் மண்டபத்தை வெறுமனே அலங்கரிப்பதற்காக மட்டும் ஓவியங்கள் தொங்கவிடப்படுவதில்லை. இந்த ஓவியமானது கொடுங்கோலுக்கு எதிரானதொரு ஆயுதமாகவும் கொள்ளத்தக்கது என்ற மேலதிகமானதொரு கருத்தையும் கொண்டுள்ளது.'' எனப் பிக்காஸோ ஒரு முறை குறிப்பிட்டார். வெடிப்புற்ற குண்டொன்றின் 'சிதறல்கள்' ஆங்காங்கே பரவியிருப்பது போல்: பல வகையான வடிவமைப்புகள் சிதற லாகக் கன்வஸ் மீது பரவி வைக்கப்பட்டமையானது ஓவியரின் 'ஆழ் புலத்துத் தரிசனம்' எத்தகைய வீச்சு மிக்கதென்பதை எமது சிந்தனைக்குள் கொண்டும் வருகிறது. இவ்வாறான தரிசனத்தைப் படவாக்கஞ் செய்வதென்பது வெறுமனே மூளையால் திட்டமிட்டு அதன் வழி காட்சிகளைப் பதிவு செய்வதல்ல. மாறாகத் தர்க்கவியல் சார்ந்த உலகை முற்றாகப் புறக்கணித்து ''உணர்வு மிக்க உலகுக்குள் தூரிகையுடன் நுழைதலே அதுவாகும்''.

குவர்ணிக்கா மீது போடப்பட்ட குண்டின் சக்தியைவிடப் பிக்காஸோவின் ஆன்ம பலம் அதி சக்திமிக்கது. இந்த ஓவியத்திலிருந்து குண்டுகள் இல்லாமல் வெளிப்படும் கதிர்வீச்சானது உலகம் இருக்கும் வரை இருக்கப் போகிறது என்பதுடன் அது இன, மத, மொழி இவற்றை மட்டுமல்லாமல் காலத்தையும் கடந்து காலத்தையே வென்ற வாழுங் கலைப்படைப்பாக எப்போதுமே இருக்கும்.

இந்த ஓவியம் The Metropolital Museum of Modern Art இல் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெனிங் மான்கெல் நாட்குறிப்பு

ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு
ஜி. ரி.கேதாரநாதன்
மொழிபெயர்ப்பாளர்

குறிப்பு: 62 வயதான ஹெனிங் மான்கெல் சுவீடனைச் சேர்ந்த எழுத்தாளராவார். இவரது தகப்பனார் ஒரு நீதிபதி. சிறுவயது முதல் ஹெனிங் மான்கெல் நீதியின் தன்மை குறித்தும், ஒடுக்கப்பட்டவர்கள், ஏழைகள் போன்றோரின் வாழ்வில் அது எவ்வாறு தொழிற்படுகிறது என்பது தொடர்பிலும் ஆழ்ந்த பிரக்ஞையும் கரிசனையும் கொண்டவராய் இருந்து வந்திருக்கிறார். இதன் பயனாக, சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் சமத்துவமின்மை குறித்து ஆழமானதும் நீண்டதுமான விசாரணைகள் பலவற்றிலும் ஈடுபட்டார். அத்தகைய சிந்தனைப் போக்கின் தாக்கங்களையும் தடயங்களையும் இவரது படைப்புகளிலும் காணலாம்.

ஆபிரிக்காவின் மேல் இவருக்கிருக்கும் அதிகளவு நேசமும் அக்கறையும் இளவயதி லிருந்து இன்றுவரை தொடர்கிறது. வெறுமனே படைப்புகளுடன் மாத்திரம் நின்றுவிடும் எழுத்தாளராகவில்லாது, தீவிர செயற்பாட்டாளராகவும் இயங்கிவருவது இவரது தனித்துவமான அம்சமெனலாம். சர்வதேசரீதியாக நன்கு அறியப்பட்டவராக இருப்பதற்கு இத்தகையதொரு பின்னணியும் காரணமாக இருக்கலாம். நாடகங்கள், நாவல்கள் பலவற்றை எழுதியுள்ளதுடன் நாடகங்களை இயக்கியும் வருகிறார். இவரது மனைவி ஈவா பேர்க்மனும் ஒரு படைப்பாளி. இவர் தலை சிறந்த திரைப்பட மேதை இங்மர் பேர்க்மனின் மகளாவார். ஹெனிங் கமான்கெலும் ஈவாவும் இணைந்து ஆபிரிக்காவில் வறுமை ஒழிப்பு, சிறுவர் கல்வி மேம்பாடு தொடர்பிலான செயற்திட்டங்கள் சிலவற்றை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

### செவ்வாய்க்கிழமை, மே 25 - நைஸ்

நேரம் காலை 5.00 மணி. நான் நைஸ்ஸிலுள்ள விமான நிலையத்திற்கு செல்வதற்கு ரக்ஸிக்காக வீதியில் காத்துக் கொண்டு நிற்கிறேன். நீண்ட காலத்திற்குப் பின்னர் முதல் தடவையாக எனக்கும் ‘E’ க்கும் சேர்ந்திருக்க வாய்த்திருக்கும் சந்தர்ப்பம் இது. ஆரம்பத்தில் இருவாரங்கள் வரை நீடிக்கலாம் என நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் முடிவில் அது ஐந்து நாட்களாக குறுகிவிட நேர்ந்தது. காஸாவிற்கான கப்பல் இறுதியில் புறப்படத் தயாராகிவிட்டதற்கான வேளை நெருங்கி வந்தது. ஏற்கனவே திட்டமிட்டப்படி அதில் இணைந்து கொள்வதற்கு இனி நான் சைப்பிரஸ்க்கு விரைய வேண்டும்.

அறிவுறுத்தலின்படி நான் எனது பொதியினை பத்து கிலோவுக்கு மேற்படாதவாறு சரி செய்து கொண்டேன். காஸாவிற்கான கப்பலுக்கு மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்ட திட்டவட்டமான நோக்கமொன்று இருந்தது. வேறொன்றுமல்ல, இஸ்ரேலின் சட்டவிரோதத் தடையைத் தகர்ப்பதே அதுவாகும். ஒரு வருடத்திற்கு முந்திய யுத்தத்திற்கு பின் காஸாவில் பலஸ்தீனியர்களின் வாழ்க்கை மேலும் மேலும் உக்கிரமடைந்து கொண்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவமானதொரு வாழ்க்கையினை மக்கள் அங்கு வாழ முடியாதவாறு அன்றாடத் தேவைகளுக்காக நாளாந்தம் அல்லாடிக் கொண்டிருந்தனர்.

எமது பயணத்தின் நோக்கம் மிகவும் வெளிப்படையானது.அர்த்தமுள்ள நட வடிக்கையே அதுவாகும். வெறும் வாய்ச்சொற்கள், பயனற்றவை. அது, இது அல்லது எவற்றையும் ஆதரிப்பதாகப் பிரகடனம் செய்வதோ, காப்பதாக அல்லது எதிர்ப்பதாகக் கூறுதோ, மிக எளிதான காரியமாகும். ஆனால் அவ்வப்போது உதிர்க்கும் வார்த்தைகளுக்கு அர்த்தந் தேடித் தருவது பற்றுறுதி மிக்க நடவடிக்கை மாத்திரமே.

இத்தகைய நெருக்கடி மிக்க வாழ்க்கையையும் தட்டுப்பாட்டு அவலங்களையும் பலஸ்தீனியர்கள் மீது திணித்த இஸ்ரேலியர்களுக்கு தகுந்த பாடம் புகட்டுவது அவசிய மாகும். பலஸ்தீனிய மக்கள் நிர்க்கதியாக தனித்து விடப்படவில்லை என்பதையும் உலகம் அவர்களை ஒருபோதும் மறந்துவிடவில்லை என்பதையும் உணர்த்த வேண்டியதான தேவை சகலவற்றையும் விட மேலோங்கியதாயிருந்தது. எனவே அவர்களது அத்தியாவசியப் பொருட்கள் போன்ற மருந்து வகைகள், குடிநீர் சுத்திகரிப்பு சாதனங்கள் சீமெந்து ஆகிய வற்றை சில கப்பல்களில் கூடிய மட்டும் ஏற்றிச் செல்வதே அதற்கான ஒரேயொரு மார்க்கமாகும்.

ரக்ஸி வந்துவிட்டது. அதற்கான கட்டணமும் பேசியாகிவிட்டது. காலை நேரமாக இருந்ததால் நெரிசலற்ற வாகனப் போக்குவரத்து குறைந்த வீதிகளினூடாக ரக்ஸி விமான நிலையத்தை நோக்கி வேகமாக விரைந்தது. நான் எனது முதற் குறிப்பினை ரக்ஸிக் குள்ளிருந்தவாறே எழுதினேன் என நினைக்கிறேன். முற்றாக என்னால் ஞாபகப்படுத்திக் கொள்ள முடியவில்லை. எனினும், திடீரென எனக்கேற்பட்ட உணர்வு உந்துதலின் காரணமாக, இஸ்ரேலியர்கள் எவ்வாறேனும் எம்மைத் தடுத்து நிறுத்த வன்முறையைக் கூட நாடக்கூடும் என்ற ஊகத்தை உள்ளடக்கியதான குறிப்பாகவே அது இருந்திருக்கலாம். ஆனால் விமான நிலையம் சென்றதும் அந்தச் சிந்தனையின் போக்கு தடம்மாறியிருந்தது.

எவ்வாறெனினும் எமது செயற்திட்டம் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட தெளிவான நோக்கத்தைக் கொண்டிருந்தது. வன்முறையற்ற வழிமுறைகளே அதன் இலக்கு. ஆயுதங்கள் எவையும் எம்வசமில்லை. நேரடி மோதலுக்கான எண்ணமுமில்லை. நாங்கள் தடுத்து நிறுத்தப்படுவோமேயானால், நிச்சயமாகவே எமக்கு உயிராபத்து நேராத வழியிலானதாகவே அது இருந்தாக வேண்டும்.

**புதன்கிழமை, மே 26 -நிக்கோசியா**

நைசிலும் பார்க்க இங்கு வெப்பம் சற்று மேலோங்கியிருந்தது. சைப்பிரஸ் கரைக்கு அப்பால் கப்பலில் ஏற இருப்பவர்கள் நிக்கோசியா சென்ரம் ஹோட்டலுக்கு வந்து கொண்டிருந்தனர். கிரஹம் கிரீனின் பழைய நாவலில் வருவதை ஒத்த சம்பவம் இதுவாகும். ஒரு கூட்டம் விந்தையான மனிதர்கள் பயணம் ஒன்றிற்காக கடவுளால் கைவிடப்பட்ட பிரதேசம் ஒன்றில் ஒன்று கூடுவதைப் போல இது இருந்தது. நாங்கள் சட்டவிரோத தடையொன்றினைத் தகர்க்க இருக்கிறோம். இதே வாக்கியங்கள் மீண்டும் மீண்டும் வெவ்வேறு மொழிகளில் ஒலித்தன. ஆனால் அதேவேளை, திடீரென நிச்சயமற்ற தன்மையொன்று எம்மைச் சூழ்ந்து கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல்கள் பிந்திவிட்டன. பல பிரச்சினைகள் எழுந்தன. ஒருங்கிணைப்பாளர்கள் நிச்சயிக்கப்பட்ட இடத்திற்கு இன்னமும் வந்து சேரவில்லை. ஆனால் நிச்சயமாகவே அவர்கள் கடலில் தான் எங்கேயோயுள்ளனர் என்பது உறுதி. எங்களது ஆறு கப்பல்களும் இங்கு தரித்து நிற்பதை சைப்பிரஸ் விரும்பவில்லை. பெரும்பாலும் இதற்கு இஸ்ரேலின் அழுத்தமே காரணமாயிருக்கலாமென ஊகிப்பதில் தவறில்லை.

பளுவானதும் மிகக் கடினமானதுமான இச் செயற்றிட்டத்தை ஏற்றிருக்கும் பலகுழு வினரின் மத்தியிலும் அடிக்கடி பதற்றங்களும் குழப்பங்களும் நிலவி வருவதை நான் அவதானிக்கத் தவறவில்லை. காலை நேர ஆகார அறை எமது இரகசிய சந்திப்பு இடமாகத் தொழிற்படத் தொடங்கியிருந்தது. ஏதேனும் அசம்பாவிதங்கள் நேருமாயின் உடனடியாக அறிவிக்கப்படவேண்டிய நெருக்கமான உறவினர்களது விபரங்களை பதிவு செய்யுமாறு நாம் கோரப்பட்டோம். பரபரப்பான சூழ்நிலையில் ஒவ்வொருவரும் விபரங்களை எழுதினார்கள். காத்திருக்குமாறு பணிக்கப்பட்டோம். கண்காணிப்புடன் இருங்கள்! அவதானத்துடன் பொறுத்திருங்கள்! இவைதான் இனிவரும் நாட்களில் நாம் அடிக்கடி பயன்படுத்தப் போகும் சொற்கள். ஒருவகையில் இவையே எமக்கு தாரமந்திரமாக இருக்கப் போகின்றன. காத்திருங்கள்! அவதானத்துடன் பொறுத்திருங்கள்!

### வியாழக்கிழமை, மே 27 - நிக்கோசியா

காத்திருங்கள்! அவதானத்துடன் பொறுத்திருங்கள்! தாங்க முடியாத கொடிய வெப்பம்!

### வெள்ளிக்கிழமை, மே 28 - நிக்கோசியா

திடீரென பயணம் குறித்து, ஒருவித நிச்சயமின்மை எனக்குத் தோன்றியது. சில வேளை களில் பயணம் தொடர முடியாதவாறு இடையில் ஸ்தம்பிதமாகிவிடுமோ என்ற அச்சமும் அவநம்பிக்கையும் என்னைத் தொற்றிக் கொண்டது. அதேவேளை, அங்கு இடங்களுக்கான தட்டுப்பாடும் நிலவியது. இத்தோழமைத் திட்டத்தில் இணைந்து கொள்ள காத்திருந்து பயணம் செய்த மிகுந்த சிநேக பூர்வமான சுவீடனைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் 'K' மற்றும் சுவீடனைச் சேர்ந்த பெண் மருத்துவர் 'S' ஆகியோர் எனக்கும் பெரிதும் உதவியாக இருந்தனர். நெடும் பயணத்தில் சோர்வும் சலிப்பும் என்னை அணுகவிடாமல் அவர்கள் பக்கபலமாக இருந்தார்கள். எப்போதுமே கப்பல் பயணம் நீண்டதும், தொல்லைகள் தருவதுமாகவேயிருக்குமென நான் நினைக்கிறேன். மீண்டும் நீண்ட, நீண்ட காத்திருப்புகள்.....

### சனிக்கிழமை, மே 29 - நிக்கோசியா

அநேகமாக, சிலவேளை இன்று வழமைக்கு மாறாக கப்பலின் வேகம் அதிகரித்தது போலத் தோன்றியது. சந்திப்பு மையத்தை அடைந்ததும் தாமதமின்றி ஏனைய ஐந்து கப்பல்களின் தொடரணியுடன் இணைந்து கொள்வோம். அங்கிருந்து ஒரே கப்பல் தொகுதியாக பின்னர் காஸாப் பகுதியை நோக்கிப் புறப்படுவோம்.

நாங்கள் தொடர்ந்தும் காத்திருந்தோம். பிற்பகல் ஐந்து மணியளவில் துறைமுக நிர்வாகத்தினர் இறுதியில் 'சலெஞ்' என்ற கப்பலில் ஏறிச் செல்வதற்கு அனுமதியளித்தனர். அக்கப்பல் 15 'நொட்ஸ்' வேகத்தில் சந்திப்பு மையத்தை நோக்கி புறப்படும். பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து சரக்குக் கப்பல் சோபியாவுக்கு மாற்றப்படுவோம். ஏற்கனவே 'சலெஞ்' கப்பலில் நிறையப் பேர் ஏறியிருந்தனர். நாங்கள் மூவரும் திரும்பியிருந்தது அங்கிருந் தோருக்கு சற்று ஏமாற்றமாக இருந்தது. அவர்கள் அயர்லாந்து ஈடுபாட்டாளர்கள் சிலரை இத்திட்ட நடவடிக்கையின் பொருட்டு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அவர்கள் திடீரெனத் தமது திட்டத்தை மாற்றிக் கொண்டு வீடு திரும்பிவிட்டனர். நாம் கப்பலினுள் ஏறியதும் அங்குள்ள நிலைமைகளை நன்கு புரிந்து கொண்டோம். அங்கு இடம் சற்று குறுகியதாகவும் நெரிசலானதாகவும் இருந்தது. எங்கும் பரவலாக சப்பாத்துகள் நிரம்பிய பிளாஸ்ரிக் பைகளே ஆக்கிரமித்திருந்தன. ஆனால் அங்கு நிலைமை சுமுகமாக, அமைதி யாக இருந்தது. பிரச்சினைகளும் சந்தேகங்களும் ஒருவாறு நீங்கியிருந்தது போலத் தென்பட்டது. இரு டீசல் என்ஜின்களும் தொழிற்படத் தொடங்கியிருந்தன. பயணம் ஆரம்பமாகிவிட்டது.

23:00: கப்பலின் பின்தளத்தில் கதிரையொன்றைக் கண்டேன். கடுமையான காற்று வீச வில்லை. எனினும், பெரும்பான்மையான பயணிகளுக்கு ஒவ்வாமையினை ஏற்படுத்தக் கூடியதான தன்மை அதிலிருந்தது, நான் போர்வையால் என்னைச் சுற்றிக் கொண்டேன். கடலின் பக்கம் பார்வையைத் திருப்பிய போது, அங்கு நிலவு கடற்பரப்பில் தனது ஒளித் தடத்தை எங்கும் பரப்பி ஆட்சி செய்து கொண்டிருந்தது. ஒற்றுமைச் செயற்பாடு பல வடிவங்களை எடுக்கக்கூடுமென எனக்குள் நான் நினைத்துக் கொண்டேன். கப்பலுக்குள் ஒருவகையிலான நிசப்தம் நிலவியதை என்ஜின்களின் சத்தம் உணர்த்தியது. இப்போது பயணம் சுமுகமாகவும், அமைதியாகவும் இருக்கிறது. ஆனால் இது நீடிக்க முடியாத மாயமானதொரு நிலையே.

### ஞாயிற்றுக்கிழமை, மே 30 - தென்கிழக்கு சைப்பிரஸ் கடற்பரப்பு

01.00: பல திக்குகளிலும் நிலவு மங்கிக்கொண்டிருந்தது. தலைமை மாலுமி கப்பலின் வேகத்தை தணித்துக் கொண்டார். ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கு சிரமமான பெயர் அவருடையது. தொலைவில் மினுங்கிக் கொண்டிருக்கும் வெளிச்சங்கள் தொடரணியிலுள்ள இரு கப்பல்களின் செயற்பாட்டை எமக்குப் புலப்படுத்தியது. விடியற்காலை பயணிகளை மற்றைய கப்பலுக்கு மாற்றும் வரை இதனுள்ளேயே இருக்கப் போகிறோம். ஆனால் இன்னமும் நித்திரை கொள்வதற்கு ஏற்ற இடத்தை என்னால் கண்டுகொள்ள முடியவில்லை. நான் அரைகுறைத் தூக்க நிலையில் ஈரமான கதிரையில் அமர்ந்திருந்தேன்.

ஒற்றுமைச் செயற்பாடென்பது ஈரலிப்பதும் காத்திருப்பிலும் தான் வளர்கிறது போலும், ஆனால் இதன் மூலம் ஏனையோர் வாழ்வில் மாற்றங்களைக் கொண்டு வரமுடியும்!

08:00: கடல் அமைதியாக இருந்தது.நாங்கள் கப்பல் தொகுதியின் மிகப் பெரிய கப்பலை சமீபித்துக் கொண்டிருக்கிறோம். இது ஒரு பயணிகள் கப்பல். தொடரணிக் கப்பல்களின் 'இராணி'யே இதுவாகும். கப்பற் தளத்தில் நூற்றுக்கணக்கானோர். குறிப்பாக, இந்தக் கப்பலின் மீது இஸ்ரேலியர்களின் கவனம் திரும்பலாம் என்பதையொட்டி அங்கு உரை யாடல்கள் அதிகரித்திருந்தன.

இஸ்ரேலியர்களின் கவனம் இக்கப்பலின் மீது படர்வதையொட்டிய நடவடிக்கைகள் என்னவாக இருக்கலாம்? இது குறித்து எமது செயற்றிட்டத்தின் தொடக்கத்திலிருந்து நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதித்து வருகிறோம். நிச்சயப்படுத்தி எவற்றையும் முடிவு கட்ட முடியவில்லை. இஸ்ரேலிய கடற்படை ஒருவேளை கப்பல்களை மூழ்கடிக்குமா? வேறு ஏதேனும் வழிகளில் அவற்றை எதிர்க்குமா? எங்களது கப்பல்களுக்கு ஊறு ஏதும் விளைவிக்காது, தமது களங்கத்தைப் போக்கடிக்க இச்சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்த முற்படு வார்களா? எவருக்குமே இதற்கான விடைகள் தெரியாது. ஆனால் இஸ்ரேலிய கடற்பரப்பை அணுகியதும், அதன் எல்லையில் எமக்கென பாரிய சவால்கள் காத்திருக்கின்றன. அவர்கள் எமது கப்பல்களை நிறுத்துமாறு அச்சுறுத்தும் போது, நாம் நிறுத்தத் தவறினால், பெரும் பாலும் எமது கப்பல்களின் சுக்கான்களையோ அல்லது றேடர் கருவிகளையோ அடித்து நொருக்கிவிட்டு இழுத்துச் செல்ல முற்படலாம்.

13:00: நாங்கள் மூவரும் 'சோபியா' கப்பலுக்கு கயிற்று ஏணி மூலம் மாற்றப்பட்டோம். அது ஒரு பழைய சரக்கு கப்பலாகும். கப்பல் அதிகளவில் துருப்பிடித்துக் காணப்பட்டது. ஆனால் கப்பல் பணியாளர்கள் மிகுந்த நேசத்துடன் எம்மோடு உறவாடினார்கள். எல்லாமாக நாங்கள் 25 பேர்வரை இருந்தோம். சீமெந்து, வலுப்படுத்தல் கம்பி வகைகள், தயார் படுத்தப்பட்ட மரவீடுகள் போன்றனவே ஏற்பட்ட சரக்கு வகைகள்ஆகும். நான் கப்பல் அறையொன்றை பாராளுமன்ற உறுப்பினருடன் பகிர்ந்து கொண்டேன். நீண்ட நாட்கள் பழகிய நண்பர்கள் போலாகியிருந்தோம் நாம். எமது அறைக்கு மின்விளக்கு எதுவும் பொருத்தப்படவில்லை. எங்கள் வாசிப்புக்கு வேறு நேரங்களையே ஒதுக்க வேண்டியிருந்தது.

16:00: தொடரணி இணைந்து கொண்டது. காஸாப்பகுதியை நோக்கிய பயணம் ஆரம்பமானது.

18:00: கப்பலின் மேற்கட்டுமானத்திற்கும் சரக்குகளை இறக்கும் இடத்திற்கும் இடையிலான பாதையை எமது இரவு நேரச் சாப்பாட்டிற்கான இடமாக நாம் ஒதுக்கிக் கொண்டோம். கப்பலின் பாதுகாப்பிற்கும், கப்பல் தள நிர்வாகத்திற்கும் மாலுமிகள் சார்பில் பொறுப்பாக விருந்த கிரேக்கத்தைச் சேர்ந்தவர் எவரையும் ஈர்க்கும் ஆளுமை கொண்டவர். மிக மென்மையாகப் பேசி எல்லோர் மனதிலும் தெம்பையும் நம்பிக்கையினையும் ஊட்டக் கூடியவராக அவர் இருந்தார். 'காத்திருங்கள்', 'அவதானியுங்கள்' மற்றும் 'பொறுத் திருங்கள்' போன்ற சொற்களின் பாவனை அறவே நீங்கியிருந்தது. நாங்கள் இப்போது அண்மித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், எதை அண்மித்துக் கொண்டிருக் கிறோம் என்பதே எம்முன்னுள்ள பிரதான கேள்வியாகும்.

இஸ்ரேலியர்கள் என்ன ரூபத்தில் எம்மை எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பது எவருக்குமே புரியாததொன்றாக இருந்தது. எவ்வாறெனினும், அவர்களுடைய அறிக்கை அச்சமூட்டக்கூடிய அல்லது தொல்லை தரக்கூடிய உள்நோக்கம் கொண்ட ஒன்றாகவே யிருக்கிறது. தம்வசம் இருப்பவற்றைக் கொண்டு தொடரணியைத் தாக்கப் போவதாக அச்சுறுத்துவது எந்த நோக்கத்தில்? அதன் அர்த்தம் தான் என்ன? கடற் கண்ணி கொண்டு கப்பலைத் தகர்க்க முற்படுவார்களா? இல்லையேல் ஹெலிகொப்டர்கள் மூலம் இராணு வத்தினரை கீழிறக்குவார்களா? அவ்வாறில்லையேல் றொக்கட்டுகள் மூலம் தாக்குதல் தொடுப்பார்களா? எமக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் அவர்களுடைய வன்முறையை நாம் வன்முறை கொண்டு எதிர்கொள்ளப் போவதில்லை என்பது மாத்திரம் நிச்சயமான ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அடிப்படையிலான தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் எமக்கு எந்த நிலையிலும் அவசியமாகும். எவ்வாறெனினும், எம்மைத் தாக்குபவர்களுக்கு நாம் இலகுவில் இரையாகி விடமுடியாது. தடுப்பு நடவடிக்கைகள் எமக்கு அவசியமாகும். கப்பலின் மேற்சட்டத்தைச் சுற்றிமுழுமையாக முட்கம்பித் தடைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மிதவை அங்கிகளை அணிவதற்கு எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். விழிப்பு நிலைக்கண்காணிப்பு, இடையறாத வகையில் கண்டிப்பாகப் பேணப்படவேண்டும். இராணுவ வீரர்கள் கப்பல் மேல் தளத்திற்கு வருவார்களேயானால், அவ்வாறான நிலைமை களில் நாம் அனைவரும் எங்கு ஒன்று கூட வேண்டும் என்பது முன்னரே தீர்மானிக்கப்பட வேண்டும். எமது இறுதிப் பாதுகாப்பு அரண் மேற்தள தடைக்கம்பிகளே.

பின்னர் நாங்கள் உணவருந்தினோம். எமது சமையல் காரர் எகிப்தைச் சேர்ந்தவர். உபாதையான காலுடன் அவர் காணப்பட்டார். ஆனால், அவர் மிகச் சுவையான உணவு வகைகளை எமக்களித்தார்.

**திங்கட்கிழமை 31, நள்ளிரவு**

நள்ளிரவு தொடக்கம் அதிகாலை 3 மணிவரை கப்பல் தள கண்காணிப்புக் குழுவினருடன் இணைந்து பணியாற்றினேன். நிலவு இப்போதும் அடிவானில் இருந்தது. இடையிடையே முகிற்கூட்டங்கள் அதனைச் சூழ்ந்தன. கடல் அமைதியாக இருந்தது. கப்பல் விளக்குகள் சுடர்ந்தன. மூன்று மணித்தியாலங்கள் வேகமாக கடந்தன. நான் களைப்படைந்ததை உணர்ந்தேன். இன்னொருவர் எனது பணியை பொறுப்பேற்றுக் கொண்டார். இஸ்ரேலியர் களின் கட்டுப்பாட்டிலுள்ள கடல் எல்லைக்குச் செல்வதற்கு இன்னும் நீண்ட தூரம் இருந்தது. ஒரு சில மணிநேரமேனும் தூங்கவேண்டிய உடற்சோர்வும் அசதியும் எனக்கிருந்தது.

நான் தேநீர் அருந்தினேன். கிரேக்க கப்பல் பணியாளர் ஒருவருடன் சற்று நேரம் உரையாடினேன். அவர் ஆங்கிலத்தில் உரையாடுவதற்கு சிரமப்பட்ட போதிலும், எனது புத்தகங்கள் எதனைப் பற்றி எழுதப்பட்டன என்பது குறித்து மிகுந்த அக்கறையுடன் விசாரித்தார். நான் சற்று நேரமேனும் படுக்கலாமெனச் சென்றபோது கிட்டத்தட்ட அதிகாலை நான்கு மணி.

04:30: படுக்கைக்குச் சென்றதுமே விழிக்க நேர்ந்தது. கப்பல் தளமெங்கும் பிரகாசமான ஒரு வெள்ளம் பரவியது. திடீரென துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும் கேட்டது. சர்வதேச கடற்பரப்பில் இஸ்ரேல் தனது கொடூரமான கைங்கரியத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டது என்பது இப்போது நன்கு புலப்பட்டது.

சரியாக ஒருமணி நேரத்திற்குள் அதிவேக கறுப்பு றப்பர் டிங்கி படகுகள் எமது கப்பலை முற்றுகையிட்டன. முகக் கவசங்களணிந்த படையணியினர் திடீரென கப்பலுக்குள் உட்புகுந்தனர். நாங்கள் எல்லோரும் பதைபதைப்புடன் ஒன்றாக குழுமினோம். படையினர் பொறுமையிழந்தவர்களாக எம்மை கப்பற் தளத்தில் விழுந்து படுக்குமாறு மூர்க்கமாகக் கத்தினர். தயக்கத்துடன் தாமதமாகச் செயற்பட்ட ஒருவர் கடுமையாத் தாக்கப்பட்டார். அவர் அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்தார். அதே போன்று சடுதியாக செயற்படத் தயங்கிய இன்னொருவர், றப்பர் ரவைகளால் சுடப்பட்டார். என் கண் முன்னிலேயே இக்கொடூரம் நடந்தது. எதுவும் அறியாத அப்பாவி மக்கள் மிருகங்களைப் போல் துரத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரட்டப்பட்டனர். பய, பீதியினாலேற்படும் தயக்கங்களுக்காக ஈவிரக்கமின்றி, குரூரமாகத் தண்டிக்கப்பட்டனர்.

கப்பல் தளத்தில் ஒரு குழுவினருடன் எம்மையும் சேர்த்தனர். கப்பல் இஸ்ரேலுக்குச் செல்லும் வரை, கிட்டத்தட்ட 11 மணித்தியாலங்கள், நாங்கள் அதேயிடத்திலிருந்தேயாக வேண்டும். இதேவேளை அடிக்கடி எம்மை படம் பிடித்துக் கொண்டேயிருந்தனர். நான் சில குறிப்புகளை எழுதுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, என்னை நோக்கி வேகமான வந்த படைவீரனொருவன். 'என்ன எழுதுகிறாய்?' என என்னிடம் அவசரமாக வினாவினான். அந்த ஒரு தடவை மாத்திரமே நான் பொறுமையிழந்த நிலையில், அவனை ஆத்திரமாக ஏசினேன். அவன் என்ன நினைத்தானோ தெரியவில்லை. ஒன்றும் பேசாது சென்று விட்டான்.

11 மணித்தியாலங்களுக்கு நடமாட்டமின்றி அசையாது, நெரிசலாக ஒரேயிடத்திலிருக்க வேண்டும். தாங்கமுடியாத வெப்பமாக வேறிருந்தது. சிறுநீர் கழிக்க செல்வதற்கும் அனுமதி பெறவேண்டியிருந்தது. சாப்பிடுவதற்கு பிஸ்கற்ஸ், றஸ்க் மற்றும் அப்பிள்கள் தந்தார்கள். நாங்கள் இருந்த இடத்திலிருந்தவாறே கோப்பி தயாரிக்க முடியுமெனினும், நாங்கள் அதற்கு அனுமதிக்கப்படவில்லை. சமைப்பதற்கு அனுமதிக்குமாறு கேட்கக் கூடாதென, நாம் ஏகமனதாக முடிவெடுத்துக் கொண்டோம்.

பின்னர், அவர்களை அதனை படமாக்கி எங்களை இராணுவத்தினர் தாராள மனதோடு நடாத்தியதாக, வெளியுலகுக்கு பறைசாற்றிக் கொள்வதற்கு வாய்ப்பளித்ததாக முடியும். பிஸ்கற்ஸ், றஸ்க் என்பவற்றுடன் நாம் நிறுத்திக் கொண்டோம். அவமதிப்பின் உச்சத்தை நாம் ஏற்கனவே அனுபவித்து விட்டோம். இதேவேளை,கடமை முடிந்த இராணுவத்தினர், கப்பலறைகளிலிருந்து மெத்தைகளை இழுத்துக் கொண்டு போய், கப்பல் தளக்கோடியில் பரப்பி, படுத்திருக்கின்றனர்.

இந்த 11 மணித்தியாலங்கள் ஏற்கனவே நடந்து முடிந்த சம்பவங்களை அசைபோடு வதற்கும் அவற்றை பகுப்பாய்வு செய்வதற்கும் போதியளவு வாய்ப்பினை எனக்களித்தது. சர்வதேச கடற்பரப்பில் நாம் இருந்தபோது, எம்மீது தாக்குதல் தொடுக்கப்பட்டிருக்கின்றது. அத்தகையதொரு பின்னணியில், இஸ்ரேலியர்கள் சோமாலிய கடற்கொள்ளைக்காரர்களைப் பார்க்கிலும் மோசமாகவே நடந்துள்ளனர். மேலும் இஸ்ரேலை நோக்கி கப்பலை திசை திருப்பிய கணத்திலிருந்து, அவர்கள் கடத்தல்காரர்களாகவும் மாறியிருக்கின்றனர். முழு நடவடிக்கைகளுமே உண்மையில் சட்டவிரோதமானவை. இஸ்ரேலியர்கள் என்ன நடவடிக்கைகளை எடுக்கப்போகிறார்களென்பது குறித்து, நாங்கள் உரையாடிக் கொண்டிருந்தோம்.

அப்போது படையினர் எம்மை அவதானித்தவாறிருந்தனர். சிலர் தங்களுக்கு ஆங்கிலம் விளங்காதென்றவாறு பாசாங்கு செய்து கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் எல்லோருக்குமே விளங்கும். படையணியினரில் சில இளம் பெண்களுமிருந்தனர். அவர்கள் மிகுந்த குழப்பமடைந்தவர்களாக, சங்கடமடைந்தவர்கள் போலக் காணப்பட்டனர். அவர்களைப் போன்றோர் தான் இராணுவ சேவையை முடித்துக் கொண்டு கோவா தப்பியோடி போதை வஸ்துகளில் சரணடைந்து கொண்டு தமது எஞ்சிய காலத்தை கழிப்பவர்களாயிருப்போர் என நினைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18:00: இஸ்ரேலிலுள்ள ஒரு கப்பற் துறைப்பகுதி, சரியாக அந்த இடம் எனக்குத் தெரிய வில்லை. கரைக்கு எம்மைக் கொண்டு வந்து படையினர் தமது வரிசையினைச் சுற்றி ஓடுமாறு எம்மை நிர்ப்பந்தித்தனர். இதேவேளை, அவர்களது ரி.வி. எம்மை படமாக்கிக் கொண்டிருந்தது. மிகவும் கீழ்த்தரமான படையினரின் நடவடிக்கை இதுவாகும். இதனை ஒருபோதுமே மன்னிக்க முடியாது.

நாங்கள் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டோம். தனிமைப் படுத்தப்பட்டோம். ஒருவருடன் ஒருவர் உரையாட அனுமதிக்கப்படவில்லை. இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த பிரதிநிதியொருவர் திடீரென, எனக்கருகில் வந்து நின்று கொண்டார். படையினரின் வீணான தொல்லைகளிலிருந்து என்னை இரட்சிக்கும் பொருட்டே அவர் அங்கு பிரசன்னமாகியிருக்கிறாரென்பதை, நான் உணர்ந்து கொண்டேன். எழுத்தாளன் என்ற ரீதியில் இஸ்ரேலில் எனக்கொரு அறிமுகம், ஏற்கனவேயிருந்தது. ஹிப்ருவில் நான் மொழி பெயர்க்கப்பட்டிருந்தேன். அவர், எனக்கு ஏதேனும் தேவையாகயிருக்கிறதா என என்னிடம் விசாரித்தார். 'எனது சுதந்திரமும் மற்றும் ஏனைய ஒவ்வொருவரதும்' என நான் தெரிவித்தேன். அவர் பதிலளிக்கவில்லை. நான் சற்று விசனத்துடன் போகுமாறு கூறினேன். ஒரு காலடியெடுத்து சற்று பின்வாங்கிவிட்டு, தொடர்ந்தும் அவர் அங்கேயே நின்ற கொண்டிருந்தார். நான் எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

நாட்டைவிட்டு என்னை வெளியேற்றவுள்ளதாக அவர் தெரிவித்தார். இதைக் கூறியவரே பின்னர் நான் எழுதிய புத்தகங்களை மிக உயர்வாக மதிப்பதாகவும் தெரிவித்தார். எனது படைப்புகளை ஹீப்ருவில் மொழி பெயர்ப்பதில் எனக்கிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கை கூட வீணானதென்பதை, நான் அக்கணமே உணர்ந்தேன்.

இந்த தஞ்சம் கோருபவர் நிலையத்தில் குழப்பங்களும், கிளர்ச்சிகளும் வழமையான நிகழ்வுகள் போலாகியிருந்தன. அடிக்கடி, யாராவது அடித்து வீழ்த்தப்படுவதும் பின்னர் கைவிலங்கிடப்படுவதும் நாளாந்த சம்பவங்களாகி விட்டன. இச்சம்பங்கள் குறித்து நான் பிரஸ்தாபிக்கையில், எவரும் நம்பப்போவதில்லை. ஆனால் நேரடியாகப் பலரும் காண்கின்றனர். நான் சொல்பவை உண்மை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டிய கடப்பாடு பலருக்கும் இருக்கின்றது. மேலும் எங்களுள் பலர் இவைபோன்ற சம்பவங்களுக்கு நேரடியான சாட்சிகளாகவும் இருப்பர்.

உதாரணத்திற்கு ஒன்று கூறுகின்றேன். என்னுடன், எனக்கருகில் நின்ற ஒருவர், திடீரென, அவரது கைவிரலடையாளம் எடுக்கப்படுவதற்கு உடன்படாது, மறுத்தார். போட்டோ எடுக்கப்படுவதற்கு அவர் மறுப்புத் தெரிவிக்காது, உடன்பட்டிருந்தார். கைவிரல் அடையாளம் எடுக்க வேண்டியிருப்பது எதனால்? பிழையான எதனையும் அவர் செய்திருக்கவில்லை. எனவே, அதற்கு உடன்படமறுத்து எதிர்த்தார். அந்த நிலையில் அவருக்கு கிடைத்தது. அடி உதைதான். நிலத்தில் வீழ்ந்த அவரை இழுத்துக் கொண்டு சென்றார்கள். எங்கு கொண்டு சென்றார்களோ தெரியவில்லை?

23:00: நாட்டிற்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில், எங்கள் மூவரையும் (எம்.பி.மருத்துவர் மற்றும் நான்) சிறைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு தனித் தனியாக்கப்பட்டோம். உண்பதற்கு முடைநாற்றம் கொண்ட 'சாண்ட்விச்சஸ்' சிலவற்றை எங்கள்முன் வீசினார்கள். இரவு மிக நீண்டதாக இருந்தது. சப்பாத்துக்களை, தலையணை யாக்கிக் கொண்டு நான் உறங்கிவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செவ்வாய் - யூன் 01ம் திகதி - நண்பகலுக்குப் பின்

திடீரென எத்தகைய முன்னறிவுப்புமின்றி என்னையும் எம்பியையும் லுவ்தான்ஸா விமானத்தில் ஏற்றுவதற்காக கொண்டு சென்றார்கள். எங்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையே இதுவாகும். எனினும், 'S' க்கு என்ன நடக்கிறது என்பது குறித்து தெரியாததொரு நிலையில் நாம் சிறைக் கூடத்தைவிட்டு வெளியேறுவதற்கு முதலில் மறுத்தோம். பின்னர், எங்களைத் தொடர்ந்து அவரும் வந்து கொண்டிருக்கிறார் என்ற தகவலையடுத்து, நாம் வெளியேறினோம்.

விமானத்தில் ஏறியதும், விமானப்பணிப் பெண் ஒரு சோடி காலுறைகளை எனக்குத் தந்தார். ஏனெனில், எனது காலுறைகளை நான் பயணம் செய்த கப்பல் தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கொமாண்டோ ஒருவர் திருடியிருந்தார். இஸ்ரேலிய இராணுவ வீரனைப் பற்றிய வெளியுலகில் நிலவும் அதீத புனைவுகள் யாவும் அப்போது தகர்ந்துவிட்டன. அற்பத்தனமான திருடர்கள் தான் அவர்கள். முகக் கவசங்களணிந்த இஸ்ரேலிய இராணுவத்தினர் ஒருநாள் அதிகாலை எங்கள் கப்பலைத் தாக்கி உட்புகுந்த சந்தர்ப்பத்தில், நான் மாத்திரம் எனது பணம், 'கிரடிட்கார்ட்', உடுப்புகள், 'எம்பி 3 பிளேயர்' மற்றும் 'லாப் ரொப்' போன்றவற்றை இழக்கவில்லை. என்னைப் போன்று கப்பலில் பயணம் செய்த ஏனையோர் பலரும் தம்வசம் வைத்திருந்தவற்றை இழந்துள்ளனர். கடற்கொள்ளைக் காரர்களை விட அவர்கள் கேவலமானவர்களாகி விட்டனர்.

அன்றிரவு சுவீடன் திரும்பினோம்.பத்திரிகையாளர் சிலருடன் கதைத்தேன். நாங்கள் வசிக்கும் வீட்டிற்கு வெளியே இருட்டில் சற்று நேரம் இருந்தேன். 'E' அதிகம் கதைக்கவில்லை.

### புதன்கிழமை, யூன் 02 - நண்பகலுக்குப் பின்

'பிளாய்க் பேர்ட்' பாடலைக் கேட்டேன். இது இறந்தவர்களுக்கான அஞ்சலிக்கீதமாகும்.

இப்போது உடனடியாக செய்ய வேண்டியன இன்னும் இருக்கின்றன. காஸாவுக்கான கொடூரமான தடையினை நீக்கியாக வேண்டும். நிச்சயம் அது நடக்கும்.

அத்தடையையும் தாண்டி இன்னும் இல்லாமில்லை. இன ஒதுக்கலை முற்றாகத் தகர்க்க காலமெடுக்கும். ஆனால் அது நீண்டகாலமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கில் பார்வையாளர்கள்

**சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ்**
Dip. in. Te., B.A.

நாடகம் என்று கேட்டதுமே நடிகர்கள் நடிப்பதும், பாட்டுப்பாடுவதும், வசனம் பேசுவதும் என்ற எண்ணம் தான் முதலில் மனதில் எழும்.

I

இக்கலையினை அறிவியல் நிலைப்படுத்திப் பார்க்கும்போது பிரதான இரு விடயங்கள் தெளிவுபெறும். ஒன்று நாடகம் மற்றையது அரங்கம். இவ்விரண்டிலும் நடிகர்களும், பார்வையாளர்களும் இணைந்தே இருப்பார். இந்த இருவர்களின் கூட்டுச் செயற்கையின் உயிர்ப்பே இக்கலையின் உயிர்நிலையாக அமைகின்றது.

நாடகமும், அரங்கியலும் என்ற சொற்களுக்கான ஆங்கிலப் பிரயோகம் முறையே Drama & Theatre என்பது, கிரேக்கச் சொல்லடியாக வந்ததன் பொருள் "A thing Done" ' A seeing Place' என்பதாகும். இதன்படி நாடகம் என்பது நிகழ்த்தப்படுவது எனவும் அரங்கு பார்க்குமிடம் எனவும் பொருள்படும்.

நாடகம் நிகழ்த்தப்படுவதாயின் அது நிகழுமிடமாகிய அரங்கை தன்னொடு கொண்டிருக்கிறது. அரங்கு பார்க்குமிடமாயின் அது பார்ப்பதற்கான நாடகத்தையும் தன்னுள்ளே கொண்டிருக்கிறது. ஆகவே பார்ப்பதற்கான செயற்பாடு நிகழ்த்தப்படுவதனால் பார்க்கப் படுகின்றது. நிகழ்த்துவதற்கான செயற்பாடு பார்க்கப்படுவதனால் நிகழ்த்தப்படுகின்றது.

இது ஒரு குறிப்பிட்ட தளத்திலே நடைபெறும். அது உயர்வான தளமாக இருக்கலாம், சமதரையாக இருக்கலாம் அல்லது தாழ்நிலமாக இருக்கலாம். சதுரமாக, நீள் சதுரமாக, முக்கோணமாக, வட்டமாக, அமைப்பிலும் இருக்கலாம். இத்தளம் எவ்வாறு இருப்பினும், அது வெளியாகக் காணப்படும் கதியை ஒரு இயக்கத்தினூடாக அர்த்தப்படுத்திப் பார்க்கும் போது ஆற்றுகை இடம்பெறுகின்றது.

Drama is nothing but is creating a space with meaning, aesthetic way

II

நாடகம் எழுதுவோர் நாடக அரங்கை மனதில் வைத்துக்கொண்டே எழுத வேண்டும். நடிகர் மேடையில் நடிக்கத்தக்க காட்சிகள் பார்வையாளரின் மனநிலை என்பனவற்றைக் கருத்திற் கொண்டே நாடகம் எழுத வேண்டும். பார்வையாளரின் உள்ளத்தில் என்னாகுமோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் ஏக்கத்துடனும், எதிர்பார்ப்புடனும் கதை நாடகமாக்கப்பட வேண்டும். நாடகம் கண், செவி என்னும் இரு புலன்களினூடாக நுகரப்படுவது.

ஒரு அரங்காற்றுகையில் நெறியாளரும் அந்த ஆற்றுகையில் கலந்து கொள்ளும் கலைஞர்களும் இணைந்து இரண்டு விடயங்களில் கவனத்தை செலுத்துவார்கள்.

1. இலக்குப் பார்வையாளர்

2. அவர்களுக்கு முன் வைக்க இருக்கும் கரு அல்லது தகவல்

III

பார்வையாளர் என்னும் தமிழ் சொற்பதத்திற்கு ஆங்கில சொற்பதம் 'Audience' என்பதாகும். ஆங்கிலத்திலும், தமிழிலும் இது Noun ஆகபெயர்ச்சொல்லாகத் தொழிற்படும். இச் சொல்லினுடைய கருத்து என்னவெனில் நாடகம் அல்லது இசைநிகழ்ச்சி, மேடைப் பேச்சு, தெலைக்காட்சி, முதலியவற்றை பார்ப்போர் / கேட்போர் கூட்டம் என்பது அகராதியின் குறிப்பாக அமைந்துள்ளது.

Audience என்னும் ஆங்கிலச் சொல்லுக்கான ஒத்தசொற் பிரயோகங்கள் பின்வரு வனவற்றை அவதானிக்கலாம். viewers, addressees, listeners, onlookers, watchers, hearers, interview, meeting, consultation, appointment, hearing

இச்சசொற்களைத் தனித்தனியே உன்னிப்புடன் நோக்கும் போது அதன் அர்த்தம் சில மாறுபட்ட தன்மையுடையதாகக் காணப்படும்.

பார்வையாளர்கள் என்பது குறிப்பிட்ட நிகழ்வில் கலந்து கொள்ளும் மக்கள் கூட் டத்தினைக் குறிக்கின்றது. இம்மக்கள் கூட்டம் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்பவராக இருப் பார்கள். அந்த நிகழ்ச்சி ஒரு கலை வெளிப்பாடாக இருக்கலாம். இந்நிகழ்வு அதன் வெளிப்பாட்டுத் தன்மையில் அல்லது அதன் ஊடாடும் தன்மையில், அந்நிகழ்வில் கலந்து கொள்பவர்களை வெவ்வேறு பெயர்களில் அழைப்பார்கள்.

இலக்கியத்துடன் ஊடாடுபவர்களை வாசகர்கள் என்றும், வானெலி நிகழ்ச்சியோடு இணைந்திருப்பவர்களை கேட்போர் (Listeners) என்றும், தொலைக்காட்சியுடன் இணைந் திருப்பவர்கள் நேயர்கள் என்றும் திரைப்படத்துடன் இணைந்திருப்வர்களை ரசிகர்கள் என்றும், அரங்க ஆற்றுகையுடன் தொடர்பு கொண்டிருபவர்களை பார்வையாளர்கள் என்றும் அழைக்கும் தன்மை எம்மிடையே உண்டு. இந்த மாற்றுத்தன்மைகான காரணம் நிகழ்வின் வெளிப்பாட்டுத் தன்மையாகும்.

பார்வையாளர்கள் பங்குபற்றும் உறுப்பினர்கள் என்ற வகையில் வித்தியாசமான வழிகளில் வித்தியாசமான கலை வெளிப்பாட்டுடன் இணைந்திருப்பார்கள்.

ஒரு சில நிகழ்ச்சியில் மட்டும் பங்கு பெறவைப்பதற்காக குறிப்பிட்ட பார்வையாளர் களை அனுமதிக்கின்றனர். சாதாரண கரவொலிக்காகவும். விமர்சனங்களுக்காகவும் நிகழ்ச்சி அவர்களை அழைக்கின்றது.

''இந்தப் பார்வையாளர்களின் உட்பார்வை/நுண்ணறிவு வடிவம் கலைகளின் வடிவத்தையும் பாதிப்படையச் செய்யும். படங்கள், காண்பிய காட்சிகள், வானொலி நிகழ்ச்சிகள், மற்றும் பிற வடிவங்கள் பார்வையாளர்களின் விமர்சனங்கள் மற்றும் பரிந்துரைகளால் பாதிப்புக்குள்ளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சில முன்னேற்றம் அடைந்துள்ளதென்ற நிலையில் பெரும்பாலும் பொதுவாக பங்கு பற்றும்பார்வையாளர் நிலை என்பது நான்காவது சுவராகவே காணப்படுவர்.

III

நாடகத்தின் முழுப்பரிமாணத்தை பூரணப்படுத்துபவர்கள் நடிகனும், பார்வையாளனும். பார்வையாளர் இன்றி ஆற்றுகை / நிகழ்த்துகை முழுமை பெறுவதில்லை. நிகழ்த்துகைக் களத்தலிருந்து வெளியிடப்படும் உணர்வுகளைப் பார்வையாளர்கள் ஏந்தி, தம்முடைய எதிர்வினையை அரங்கிற்கு அனுப்புகின்றார்கள். அது புன்னகையாக அமையலாம், அல்லது பலத்த கரஒலியாக அமையலாம். அல்லது மனதை வருடக் கூடிய சோகமாக இருக்கலாம்.

அதாவது நடிகனுக்கும், பார்வையாளனுக்குமிடையில் இடைவிடாத ஊடாட்டம் நிகழ்வதன் மூலமே நாடகம் நிகழ்கின்றது. ஒன்றால் ஒன்று வளரும். ஒன்றில் ஒன்று தங்கி இருக்கவேண்டிய நிலை இருக்கின்ற அதேவேளை ஒன்றை ஒன்று வளர்த்துவிடுகின்றது. இந்த ஒரு ஊடாட்டம் சமூக அக்கறையுடையதாக, களிப்பூட்டுவதாக, அல்லது அறி வூட்டுவதாக அமையும்.

அரங்கில் நடிகனுக்கு சமனாக பார்வையாளனுக்கு அந்தஸ்து கொடுக்கப்படவேண்டும். நடிகனை எப்பொழுதும் விழிப்புடன் செயற்படுத்துவதில் பார்வையாளனின் பங்களிப்பு முக்கியமானது. ஆகவே நாடகத்தில் நடிகன் எப்பொழுதும் விழிப்புடன் செயற்பட வேண்டியவன். அவன் நாடகம் பார்க்க வந்திருக்கும் அவையினரின் பார்வையை ஆள்பவன். உண்மையில் அவையில் நாடகத்தை பார்க்க வந்திருப்பவர்களின் பார்வையை நடிகன் ஆள்வதால் அவனே பார்வையாளராக இருக்க வேண்டும்.

(பார்வையாளர் என்னும் சொல், பார்வையினை அவர்கள் ஆளுகிறார்கள் என்னும் கருத்தினைத் தருகின்றது. உண்மையில் அவர்கள் பார்வையை ஆள்வதில்லை. நிகழ்த்திக் காட்டுபவர்கள்தான் பார்வையை ஆள்கின்றார்கள். நிகழ்த்திக்காட்டுபவர்களை நெறிப் படுத்துபவர் தான் இவர்களுடைய பார்வையை ஆள்பவர்கள். இவர்களை பார்ப்பவர்கள் அல்லது பார்ப்போர் எனக்கொள்வது பொருந்தும் என பேராசிரியர் கா. சிவத்தம்பி அரங்கோர் அறிமுகத்தில் குறிப்பிட்டுள்ளார்.)

பார்வையை ஆள்வது என்பது இலகுவான விடயம் அல்ல. பார்வையை ஆள்பவன் என்பதால் அவனது பார்வை விழிப்புடன் இருக்க வேண்டும் ஏனெனில் அவன் மேல் பல பார்வைக் கோடுகள் விழுந்தவண்ணம் இருக்கும். விழும் பார்வைக் கோடுகளை ஏந்தி தனது பார்வைச் செயல்த் திறனை மேடைத்தளத்தில் வெளியிடுபவன். இந்த விழிப்பு நிலையில் நாடகம் நகரும்.

நடிகன் அப்பாத்திரத்தை விளங்கி அதனை விளக்குகின்றான். அதேகணம் தன்னையும் விளக்க முற்படுகின்றான். ஆகவே நடிகனுடைய விழிகளின் பயணப்பாதை விழிப்புடன் அமைந்திருக்க வேண்டும். நடிகன் மூன்று பரிமாணங்களை தன்னுள் மாற்றுகின்றான் என்றால் அது அவையில் வந்திருக்கும் பார்ப்பவர்களுக்காகத்தான்.

நடிகன் பார்ப்பவர் முன் தோன்றுதல் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. நாடகத்தில் அவனின் தோற்றம், இயக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. அதாவது அவனது உடல் தோற்றத்தையும், அவன் பலர் முன் தோன்றுவதையும் குறிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையினர் நிலையில் இருந்து பார்க்கும் போது நடிகர்கள் தாம் ஏற்கும் பாத்திரங்களை மேடையில் தோன்றி தனது அகச் சூழலை, மேடையில் அமைக்கப்பட்ட புறச் சூழலோடு இணைத்துக் காட்டுகின்றார்கள். இதில் பல பாத்திரங்கள் தோன்றும் போது மற்றொரு கதாபாத்திரங்கள் எதிர் செயலாற்ற, அச் செயலுக்கு முந்திய பாத்திரம் மாற்று செயலாற்ற, என நாடக ஓட்டம் தொடர்கின்றது. செயலாற்றலை கொடுக்கும் கதாபாத்திரம் எது? அதனை பெறும் பாத்திரம் எது? அதனை பெற்று திரும்ப கொடுக்கும் பாத்திரம் எது? என்பது பார்வையாளர் நிலையில் கவனிப்பில் இருக்கும். இச் செயல் நிலை, - பாத்திரங்கள் தங்களுக்கு நேருக்கு நேர் ஈடுபடுகின்றார்களா, பங்கிட்டுக் கொள்கின்றார்களா, மாறுபடு கின்றார்களா என்பதுடன் பாத்திரங்களின் அகச்சூழலை அறிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு தருணத்திலும் நிகழும் நிகழ்வுகளை அரங்கில் உள்ள அனைவருமே பகிர்ந்து கொள்ள வேண்டும். உள்ளுணர்வளவில் மட்டுமின்றி உடலுணர்வளவிலும் நிகழும். எத்தனை கதாபாத்திரங்கள் தோன்றுகின்றனவோ அத் தொடர்பு அத்தனை கதாபாத்திரகளிடையேயும் சமமாக அமைய வேண்டும். உடல் நிலைகள் நிற்கும் பொது மட்டுமின்றி, திரும்பும் போதும் அதனைக் கவனிக்க வேண்டும்.

மேடையில் உள்ள பாத்திரத்தின் பேச்சின் கவனத்தை ஈர்த்துக் கொள்வது இயல்பு. மேடையில் உள்ள எல்லாப் பாத்திரங்களின் போக்கையும் அவையினர் உணர வேண்டி யிருப்பதால், அதற்கேற்ப நடிகர்கள் தங்களை தயார்ப்படுத்திக் கொள்வது முக்கியம். நடிகர் நகரும் போதும் நடிகர் தம்மைப் பலப்படுத்த வேண்டும்.

நகரும் பொதும் உடலின் நிலையை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நகருதல் பாத்திரங்கள் தொடர்பையும் அதன் நிகழ்த்துதல் செயற்பாட்டையும் அதன் முக்கியத்து வத்தையும் உணர்த்தும். இவற்றைவிட பாத்திரங்கள் மேடைப் பொருட்களுடன் தொடர்பு கொள்ளுதல் என்பது முக்கியமானதாகும். இவ்விடயங்களை பார்ப்பவர்கள் அவதானித்த வண்ணம் அமர்ந்திருப்பார்கள்.

அரங்கின் நகர்வுகளிற்கு அர்த்தம் கண்டுபிடிக்க பார்ப்பவர் முனைவார்கள். ஒரு குறிப்பிட்ட பரந்த கால இடைவெளியை, குறிப்பிட்ட கணத்திற்குள் ஆற்றுகை நிலைக்கு கொண்டு வரும்போது அது அர்த்தம் பொதிந்ததாக இருக்க வேண்டும் என்று பார்ப்போர் நினைப்பது என்பது முக்கிய விடயமாகும்.

## IV

மேற்கத்தைய நாடக வரலாற்றில் அரங்கியல் சார்கோட்பாடுகளை முன்மொழிந்தவர்கள் பார்போருக்கான முக்கியத்துவத்தை முன்வைத்தே தமது கோட்பாடுகளை முன் மொழிந்துள்ளனர்.

பார்வையாளர்களும், நடிகர்களும் செய்யும் விவாதக்களமாக நாடகத்தை கருதினார்கள் மேயர் கோல்ட். பார்ப்பவர்கள் தாங்கள் விரும்பி இடத்தில் இருக்கலாம், ஏன் எனில் இவருடைய அரங்கில் பார்ப்பவர்களாக மட்டுமல்ல அவர்கள் இன்றியமையாதவர் களாகவும் கருதப்பட்டார்கள். அத்துடன் அரங்கினை ஆளுகை செய்கின்ற பார்ப்பவர்களாக அரங்கினை உருவாக்கினார்கள். அரங்க மாயை என்பது பார்ப்பேரை அறிவு பூர்வமாக சிந்திக்க வைக்காது. அதனால் அறிவுபூர்வமாகவும் விவாதிக்கவும் துண்டுவதான அரங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உருவாக்க முயற்சி செய்து, நடிகர்களை தயார்ப்படுத்தியதால் இவருடைய அரங்க முறைமையை உடற்பொறி முறை அரங்காக கருதப்பட்டது.

காவியப்பாணி அரங்கு பார்ப்பவர்களை உணர்வுக்கு உட்படுத்தும் அதேவேளை அவர்களை அறிவு பூர்வமாக சிந்திக்கவைப்பது. இத்தன்மையினை பிரைக்ட் கீழைத் தேசத்தில் இருந்து பெற்றுக் கொண்ட அதேசமயம், அதனை தொலைப்படுத்தல் என்றும் குறிப்பிட்டார்.

நடிகரோடிணைந்து பார்வையாளர் அதே உணர்வுடன் அழுவதை பிரைக்ட் காட்டு மிராண்டித்தனம் என விமர்சித்தார். இதற்கு இவர் பல யுத்திகளை பயன்படுத்தினார்.

1. கதை சொல்லும்தன்மையில் எடுத்துரைக்கும் தன்மையினை கையாளுதல்.
2. நாடகக் காட்சிகளை துண்டு துண்டுகளாக அமைத்தல்.
3. ஒரு தொனிப்பொருளை நோக்கியதாக இருக்கும்.
4. அரங்கின் வளர்ச்சி துண்டம் துண்டமாக இருக்கும்.
5. தீர்வுக்குரிய வழியை நோக்கிச் செல்லும்.
6. ஆராயும் தன்மையுடையது.

இதனால் பார்ப்பவர்களை புறவயமாகச் சிந்திக்க துண்டுவதாக அமையும். நடிகன் தன்னுடைய ஆற்றுகை முறையில் வித்தியாசப்படுத்தும் போது பார்ப்பவர்களை அவற்றி னூடே சிந்திக்கத் துண்டியது. நடிப்பை தொலைப்படுத்துவதற்கு மூன்று வழிகளை கையாண்டார்.

1. படர்க்கை நிலையல் எடுத்துரைத்தல்.
2. இறந்த காலத்தில் எடுத்துரைத்தல்
3. மேடையின் இயக்கங்களை வெளிப்படையாக எடுத்துரைத்தல்

இவற்றால் பார்ப்பவருடைய சிந்தனைப்போக்கினை மாற்றி யமைத்தார் பிரைக்ட்.

அசைவு, குரல், லயம். ஒளி, வெளி என்பன ஆற்றுகைக்கான பிரதான மூலகமாகக் கருதும் குரட்டோவெஸ்கி நடிகர், பார்ப்போர் என்போரது இரு மன ஒருமைப்பாடே ஆற்றுகைக் களம் என்றார். அரங்கு சம்பந்தப்பட்டவர்கள் ஒரு குழுவாக வாழவேண்டும், என்றும் அந்த அனுபவங்களை ஒன்றாக பெறவேண்டும் என்னும் முறையினை இவர் பின்பற்றினார். பரிசோதனை முயற்சிகளில் பார்ப்போரையும் நடிகரையும் மிக நெருங்கிய வராக்கினார். இந்த நெருக்கத்தினால் மிக நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தினார். சடங்கு தனிமனித தூய்மையை வலியுறுத்துவன. அரங்கும் அதேநிலையில் செயற்பட வேண்டும் என்ற சிந்தனையில் செயற்பட்டார்.

பார்ப்பவர்கள் அரங்கென்று சொல்லி ஒரு அறியாத அரங்கைப் பார்ப்பதாகவே ஒகஸ்ராபோலோவின் கண்ணுக்கு புலனாக அரங்கில் பார்ப்பவர்கள் இருப்பார்கள்.

வாத விவாத அரங்கில் நாடகம் நிகழ்வதை பார்ப்பவர்கள் அறிவார்கள். அரங்க நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காகவே அரங்கிற்கு பார்ப்பவர்கள் வருவார்கள். நாடகத்தின் இறுதிக்கட்டத்தினை தீர்மானிப்பவர்களாக பார்ப்பவரே இருப்பார். நாடகத்தின் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட கட்டம் வரைக்கும் நடிகனே தீர்மானிப்பான். இறுதிக்கட்டத்தினை நெறிப்படுத்து பவனாக பார்ப்பவர் அமைந்திருப்பார். நடிகனுக்கும் பார்ப்பவருக்கும் இடையில் நடைபெறும் கருத்துப் பரிமாற்றத்தினால் இறுதிக் கட்ட நிகழ்வு அமைந்திருக்கும். பார்ப்பவர்களை பொறுத்தளவில் நடிகனை கதாபாத்திரமாகக் பார்ப்பர். ஆனால் நடிகன் தன்னையும் பாத்திரத்தையும் பிரிக்கின்ற சந்தர்ப்பத்தில் பார்ப்பவர்கள் நாடகத்தினுள் நுழைவதற்கான சந்தர்ப்பம் அமைவதாக இருக்கும்.

ஆர்த்தோவினுடைய அரங்கில் பார்ப்வருடைய மனநிலை வேறுநிலையில் அமைந்திருக்கும்.

பார்வையாளர்களை கட்டுப்படுத்திய ஸ்ரெனிஸ்லாவெஸ்கியின் அரங்கும், பார்ப்ப வரை பிரச்சினைகளை சிந்திக்கவைத்த பிரைக்டின் அரங்கும், பார்ப்பவர் நடிப்பவர் என்ற பாகுபாடு இன்றி பார்ப்பவரும் பங்குகொள்ளும் தன்மை குரூரஅரங்கும். நடிகரும் பார்வையாளரும் சேர்ந்து சமூகத்தை தேடுவதாக அமைவதாக எளிமையரங்கும் (வறுமை அரங்கு). பார்ப்போரின் பரிமாண வளர்ச்சியை தெளிவுபடுத்துகின்றது.

V

பார்ப்போரது பங்களிப்பு என்பது அரங்கக் கட்டிட அமைப்பிலும் தங்கியிருக்கின்றது. மேற்கத்தைய அரங்கவரலாற்றில் கட்டிட அமைப்பு முறைகள் செவ்வனே வளர்ந்து வந்துள்ளதையும் பார்வையாளருக்கான இடமாற்றத்தையும் கால மாற்றத்தினூடு அவதானிக்கலாம்.

கிரேக்க அரங்கக் கட்டமைப்பு திறந்த வெளியமைப்பைக் கொண்டது. கிரேக்க அரங்கம் அதீனிஸ் நகரப் பார்ப்போரை ஒரே நேரத்தில் உள்ளடக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது. மலைகளுக்கு நடுவே வட்டவடிவமான ஆடுகளத்தைச் சுற்றி, கல்லால் வடிவமைக்கப்பட்ட ஆசனங்களை உடையதாக பார்ப்போரது இடம் அமையப் பெற்றிருந்தது.

உரோம அரங்கில் 20000 வரையிலான பார்ப்போர் இருந்து பார்க்கும் வசதி இருந்ததை அவ்வரங்க கட்டமைப்பில் இருந்து அறியலாம். இவ்வரங்கில் பார்ப்பவருக்கான இருக்கை யிடம் அரைவட்டவடிவில் அமையப் பெற்றிருந்து. நடிப்பிடத்தை சுற்றி மூன்று பக்கமும் பார்ப்போர் பார்க்கும் தன்மை இருந்ததைக் அவதானிக்கலாம்.

மத்திய கால அரங்கு இரு வேறு பட்ட இடங்களில் நடைபெற்றதால் பார்ப்போரும், இருவேறுபட்ட தளங்களில் அமர்த்தப்பட்டனர். ஒன்று உள்ளக அரங்கு இரண்டு திறந்த வெளி அரங்கு. உள்ளக அரங்கு கிறிஸ்தவ தேவாலயத்தில் இடம்பெற்றதால் அங்கு பார்க்க வந்திருப்போர் பொதுவாக பக்தர் கூட்டத்தினாராகவே கருதப்பட்டனர்.

தேவாலயத்தில் இருந்து வெளிவந்த நாடக ஆற்றுகை மக்கள் கூடும் இடத்தில் நிகழ்த்தப்பட்டது. அது சந்தையாக இருந்திருக்கலாம், தேவாலய முன்றலாக அமையலாம், வீதியாக அமைந்திருக்கலாம். ஆகவே மக்கள் பார்ப்பதற்காககவே நாடகத்தை நிகழ்த்த வேண்டிய தேவையை இக்காலத்து நாடக முறையில் இருந்து அறியக் கூடியதாக இருந்தது.

எலிசபத் கால அரங்கப் பார்வையாளர்கள் இரு வேறு அரங்கை நோக்கிச் சென்றனர். ஒன்று திறந்த வெளி அரங்கு, இரண்டாவது மண்டபங்களாக கட்டப்பட்ட உள்ளரங்குகள். திறந்த வெளி அரங்கிலேயே ஷேக்ஸ்பியரின் நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபங்களாக கட்டப்பட்ட அரங்கு தனியாருக்குச் சொந்தமானது. இக்கால அரங்குகளில் 2000, 3000 பார்ப்போரைக் கொள்ளக் கூடியதாக இருந்ததை அவதானிக்கலாம்.

இதன்பின் தோற்றம் பெற்ற மூன்று பக்கமும் அடைக்கப்'பட்ட நடிப்புத் தளம் ஒரு பக்கததை பார்ப்பதற்காக மட்டும் விட்டுவைத்தது தியேட்டர் ஒலிம்பிக்கோ என்பதே அதன் தன்மையிலான முதல் அரங்காக தோற்றம் பெற்றது.

VI

நாடகத்தில் பங்கு கொள்கின்றவர்களுக்கு கிடைக்கும் அனுபவம் மனிதர்களின் மன இறுக்கங்களைக் குறைத்து அவர்களை சுயநிலைக்குக் கொண்டு செல்லும். நடிகரின் அனுபவம் பார்ப்போரையும் பார்ப்பவரின் அனுபவம் நடிகரையும் சென்றடையும் பரிமாற்றம் நாடக சிருட்டியின் ஆரம்பம் முதல் இறுதிவரை காணப்படும்.

VII

இப்பரிவர்த்தனையில் அதிகாரமையம் காலமாற்றத்தினால் மாற்றம் பெற்றுள்ளது. ஸ்ரெனிஸ்லாவெஸ்கி, பீட்டர்பூறுக்கின் அரங்கம் இயக்குரையும், பெனட்சோ, கருணாநிதி, சோ என்போரது அரங்கம் ஆசிரியனையும், உடையப்பதேவர், தியாகராஜபாகவதரின் இசைநாடகத்திலும், பாதல்சக்காரின் மூன்றாவது அரங்கில் நடிகனையும், அகஸ்ரோபோலோவின் கட்புலனாகா அரங்கில் பார்வையாளர்களும் அதிகார மையமாக மாற்றம் அடைந்துள்ளனர். நாடக எழுத்துருவில் இருந்து அதிகார மையம் பார்வையாளன் வரையும் வளர்ச்சியடைந்துள்து.

பார்வையாளர்கள் அரங்கில் தம்மைக் கண்டுபிடிக்கின்றார்கள். அதன் மூலம் தம் முடைய வாழ்க்கையை ஒத்த உணர்வை எதிர் கொள்கின்றார்கள். அரங்கில் இந்தப் பரிமாற்றமே ரசம், கதாதீஸ், யூகின் என்றெல்லாம் பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக் கவிதைகளில் தேசமும் தேசியமும்

**க. இரகுபரன்**
**முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் தேசம், தேசியம் என்று நோக்குவதற்கு முன் தேசம் தேசியம் என்பன பற்றிய தெளிவை நாம் பெறுதல் வேண்டும். தேசம் என்பது எளிமையான முறையிலே ஒரு நாட்டைக்குறிக்கும். ஆனால், தேசியம் சிக்கலானதும் பலவேளைகளில் குழப்பத்தை ஏற்படுத்துவதுமான ஒரு எண்ணக்கருவாகும்.

'தேசியவாதம், பிரதானமாக மக்களின் சுதந்திரம், அவர்களின் அரசாட்சி, பற்றியதொரு கோட்பாடாகும். மக்கள் விடுவிக்கப்படல் வேண்டும். அதாவது எவ்விதமான வெளியார் அடக்குமுறையிலிருந்தும் விடுவிக்கப்படல். அவர்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானித்து தமது இல்லங்களில் தாமே எசமானர்களாக இருத்தல் வேண்டும். தங்கள் வளங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும். அவர்கள் தமது சொந்த உட்குரலுக்கு மட்டுமே அடிபணிய வேண்டும். ஆனால் இதற்குச் சகோதரத்துவம் அவசியமானது. மக்கள் ஒற்றுமைப்படுத்தப்படல் வேண்டும். அவர்களுக்கு சட்டபூர்வமான சம உரிமையும் பொதுவான தனிக் கலாசாரமும் இருத்தல் வேண்டும். ஆனால் எந்தக் கலாசாரம்? எந்த ஆட்சியுரிமைப் பிரதேசம்? வரலாற்று உரிமை ரீதியாக அவர்களுடைய தாக இருந்தவோர் தாய்நிலம் மட்டும் அதாவது அவர்களின் முன்னோர்களின் நிலம் மட்டும் பரம்பரைச் சொத்தான அவர்களது கலாசாரம் மட்டும் இவையே சந்ததி சந்ததியாக வழிவந்து, அதன் விளைவாக அவர்களுடையதான அசலான அடையாளத்தின் வெளிப் பாடாகின்றன.' (ஜே. ஹச்சின்சன்)[1]

முன்பு தேசம் என்பது நாட்டை ஆளும் மன்னனோடு இணைக்கப்பட்டதாய் அவனது அதிகார ஆசையிலும் சாதனைகளிலும் மட்டுமே பெரிதும் வெளிப்பட்டு நின்றது. பதினெட்டாம் நூற்றாண்டிலேதான் தேசியவாதம் ஒரு தேசிய இன நாட்டினுள் (Nation State) விரிவான அடிப்படையுடையதாக அமைவுற்றது. அப்பொழுதுதான் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்த பல்வேறு மக்கட் பிரிவினரும் தாம் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் உணர்ச்சியைப் பெற்றனர். மக்கள் போற்றிநின்ற இத்தேசியவாதம் மேலும் வலுப்பெறுவதற்கு பிரான்ஸிலே நடைபெற்ற அரசியற்புரட்சி மிகுந்த வலுச் சேர்ப்பதாக அமைந்தது. அது தாராண்மைவாதத்தோடு (Liberalism) இணைந்தபோது பத்தொன்பதாம் நூற்றாண்டின் உலக வரலாற்றைத் தீர்மானிக்கும் சக்தியாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற தேசியவாதம் ஆசியாவுக்கு வந்தபோது ஆசிய தேசியவாதம் தனக்கேயுரிய சில தனிப்பண்புகளோடு எழுச்சியுற்றது என்பர். அதில் முக்கியமான ஒரு பண்பு ஆசிய தேசியவாதம் பல கிளைத் தேசிய வாதங்களைத் தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுகின்றமையாகும். அன்னியர் ஆதிக்கத்துக்கு எதிராக எழுந்த கிளர்ச்சியே ஆசிய நாடுகளில் தேசியவாதம் முனைப்புப் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது. அன்னியருக்கு எதிரான கிளர்ச்சி காரணமாக ஒரே நோக்குள்ள பல அம் சங்கள் தொழிற்படத் தொடங்கின. இதன் விளைவாக ஒவ்வொரு நாட்டின் தேசிய வாதமும் அதன் அடிப்படையாகக் கொள்ளக் கூடிய சில உறுதியான அம்சங்களை உருவாக்கின.

அன்னியராட்சியை எதிர்ப்பதற்கு ஒன்றுபட வேண்டிய அவசியம் அடிமைப்பட்ட பல்வேறு மக்கட் கூட்டத்திடையே சில ஒற்றுமைப் பிணைப்புகளை ஏற்படுத்திற்று. இந்தப் பிணைப்பு அன்னியருக்கு எதிரான கிளர்ச்சி என்ற எதிர்மறை அம்சத்தினால் ஏற்பட்ட தாயினும் விரைவில் அது திட்டவட்டமான பிணைப்பினை ஏற்படுத்தியது.

இந்திய துணைக் கண்டத்திலே பிரித்தானியர் கைப்பற்றுவதற்கு முன்னர் பல நாடு களாக - அரசுகளாக இருந்தவை பிரித்தானியரின் அடக்குமுறை ஆட்சிக்குள் ஒன்றுபட்ட இந்திய தேசமாக உருப்பெற்றமை வரலாறு. இலங்கையிலும் நிகழ்ந்தது அதுவே. ஆசியத் தேசியவாதத்தில் சமயத்தின் செல்வாக்கு அதிகமாகவிருந்தது. தூங்கிக் கிடந்த மக்கள் சமயத்தின் குரலாலேயே பெரும்பாலும் தட்டியெழுப்பப்பட்டார்கள். ஒரே நேரத்தில் மதபேதங் கடந்த நிலையிலும் மதத்தின் அடிப்படையிலும் தேசிய வாதம் பேசப்பட்டது. அதன் விளைவுகளை இந்தியா கண்ணாரக் கண்டது.

தேசியவாதத்துக்குப் பல்வேறு அடிப்படைகள் காரணியாக இருப்பினும் பொருளாதாரம் மிக முக்கியமான காரணியாகும். நிலமானிய சமுதாயத்திலே தேசியவாதத்துக்கு அதிக இடமில்லை. குடியேற்றவாத ஆட்சியின் பொருளாதாரக் கொள்கைகள் தேசிய வாதத்தின் எழுச்சிக்கு வழிவகுத்தன. மத்தியதர வர்க்கத்தின் உருவாக்கம் - அதன் எழுச்சி தேசிய வாதத்தின் எழுச்சியாக அமைந்தது. பல மொழிகளும் பல சமயங்களும் காணப்பட்ட ஒரு நாட்டிலுள்ள பல வகுப்புவாத இனங்களை இம் மத்தியதர வகுப்பு இணைத்தது. அவர்கள் அனைவரையும் உள்ளடக்கிய முழுத் தேசத்தின் சார்பாகப் பேசக் கூடிய உரிமையை அம் மத்தியதர வகுப்பு பெற்றுக்கொண்டது.

ஒரு நாட்டில் அன்னியரை அகற்றும் வேலை மிக அவசியமானது என்று உணர்ந்து கொண்டது இம்மத்தியதர வகுப்பே. அன்னியரை அகற்றுவதன் மூலம் தேசத்தின் அதிகாரம் இந்த உயர்குழாத்தின் கைகளுக்கே செல்லக்கூடியதாக இருந்ததும் இங்கு மனங்கொள்ள வேண்டியது.

பிரித்தானியர் ஆட்சியினதும் பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களினதும் விளைவாகவே இந்த உயர்குழாம் தோற்றம் பெற்றது. நிலமானிய அமைப்பில் கமத் தொழிலை மாத்திரம் பிரதானமாகக் கொண்டியங்கிய பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் புதிய புதிய முறைகளில் பொருள் ஈட்டும் வாய்ப்பினை அளித்தன. அந்த வாய்ப்பினைப் பெற்றவர்கள் தாம் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு தமது பிள்ளைகளுக்கு கல்வியைப் பெற்றுக் கொடுத்தனர். மேற்படிப்புக்கு இங்கிலாந்துக்கு அனுப்பவும் செய்தனர். நவீன கல்வியும் ஆங்கில அறிவும் பெற்றவர்கள் உயர் உத்தியோகங்களைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு உருவான உயர்குழாத்தினரே தேசிய உணர்ச்சியை ஏற்படுத்துவதில் முன்னின்றவர்கள். இந்த உயர் குழாத்தினர் தேசிய அடிப்படையிலும் பிராந்திய அடிப்படையிலும் இயங்கினார்கள்.

இந்தியத் தேசியவாதம் எழுச்சியுற்றதன் ஒரு பக்கவிளைவாகவே இலங்கைத் தேசியவாதம் தோன்றியது என்ற அடிப்படையையும் இங்கு மனங்கொள்ள வேண்டும். இந்திய தேசியவாதம் எழுச்சியுற்ற நிலையிலே - அதன் தன்மையிலே இலங்கைத் தேசியவாதம் எழுச்சியுற்றதாகக் கொள்ள முடியாது. இலங்கையில் தோன்றிய தேசியத் தலைவர்கள் பெரும்பாலும் ஆங்கிலேய அரசாங்கத்தோடு இணைந்து நின்று சலுகைகளைப் பெற முயன்றனரேயன்றி பிணங்கிப் போராடி உரிமைகளைப் பெற முயன்றனர் என்று கொள்ள முடியாது. அதேவேளை இலங்கை முழுவதையும் ஒருங்கே காணும் தேசியத் தலைவர்களாகவும் அவர்களுட் பெரும்பாலானவர்கள் அமையவில்லை. சமய, மொழி அடிப்படைகளில் சிந்தித்தவர்களாகவே விளங்கினர். இவற்றின் விளைவினை நாம் இலக்கியங்களிலும் காணலாம். இந்தியாவில் அதன் பிராந்திய மொழிகள் யாவிலும் பிரித்தானிய அரசுக்கு எதிரானதும் இந்திய விடுதலையை வலியுறுத்துவதுமான தேசிய கவிஞர்கள் தோன்றியது போல் இலங்கையில் தோன்றவில்லை. தமிழ்நாட்டிலே பாரதி பாடியதைப் போல் தேச விடுதலைக்காக உரத்துக் குரல் கொடுத்த ஒரு கவிஞனை இலங்கைத் தீவிலே காணமுடியவில்லை. தமிழிலாயினும் சிங்களத்திலாயினும் காண முடியவில்லை என்ற உண்மையை மனங்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். இந்த அடிப்படைச் செய்திகளின் பின்னணியில் இலங்கைத் தமிழ்ச் சூழலில் எளிமையான பொருளில் தேசம், தேசியம் பற்றிய குரல்கள் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் எப்படி அமைந்துள்ளன என்பதை இனி நோக்குவோம்.

அதற்கு முன்பாக தேசம் என்ற சொல் ஈழத்தின் ஆரம்ப காலத் தமிழ் இலக்கியங்களில் வழங்கிய முறைமையையும் அவதானித்தல் நன்று. தமிழக இலக்கியங்களோடு ஒப்பிடும் நிலையில் தேசம் என்ற சொல் மிக முக்கியமான வகையில் இலங்கையிற் கையாளப் பட்டிருப்பதைக் காணலாம். குறிப்பாக மட்டக்களப்பிலே மட்டக்களப்பு தேசம், முக்குவ தேசம் என்ற பிரயோகங்கள் அப்பிராந்தியத்திற் கண்டெடுக்கப்பட்ட சாசனங்களிலும் மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்திலும் காணப்படுகின்றது. யாழ்ப்பாண தேசம் என்ற சொல்லாட்சியும் இருந்தது. சொத்துரிமை முதலானவை பற்றி யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பாரம்பரியமாக நிலவிவந்த சட்டமுறைமைகள் ஒல்லாந்தரால் தொகுப்பித்து எழுதப்பட்ட நூலுக்கு 'தேசவழமைச் சட்டம்' என்றே பெயரிடப்பட்டது.

திருகோணமலை சார்ந்து எழுந்த 'வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்' என்ற நூலில் வன்னிமை தேசத்தார் மாநாடு பற்றிய குறிப்பு வருவது அவதானிக்கத்தக்கது. தமிழகத்துச் சாசனங்களிலும் நூல்களிலும் காணப்படும் நாடு என்ற சொல்லுக்குச் சமமாக இங்கே தேசம் என்ற சொல் கையாளப்பட்டது எனலாம். அவ்வகையில் அச்சொல் புவியியற் பரிமாணம் கொண்டதாக எல்லைகள் அடையாளம் காணப்படக்கூடிய ஒரு நிலப்பகுதியைக் குறிப்பதாக அமைந்தது. அது சில தனித்துவமான வரலாற்று அனுபவங்களால் ஏற்பட்ட சமுதாய உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பது. மேலும் அது மொழி வழியாகவும் சமூக வழமைகள், பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றின் வழியாகவும் உருவாகிய பொதுமையினை உணர்ச்சி பூர்வமாகப் பிரதிபலிப்பது. எனவே, ஈழத்து இலங்கியங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாசானங்களிலும் பயின்ற தேசம் என்ற சொல்லாட்சி இலங்கைத் தமிழரின் அரசியல் நோக்கில் அமைந்த சிந்தனை வளர்ச்சியின் ஒரு பிரதான கட்டத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

ஈழத்தில் யாழ்ப்பாண இராச்சிய காலத்திலிருந்தே தொடர்ச்சியான நிலையில் தமிழிலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அவ்வாறு தோன்றியவற்றுள் பெரும்பாலானவை வரலாற்று நூல்கள் என்ற எண்ணத்தோடு எழுதப்பட்டவை. அவற்றுள் முக்கியமானவை திருகோணலைப் பிராந்தியத்தை மையப்படுத்தியவை. தட்சிணகைலாச புராணம், கோணேசர் கல்வெட்டு, திரிகோணாசல புராணம், திருக்கரைசைப் புராணம் என்பன அவ்வாறானவை. தட்சிணகைலாச புராணம் ஈழத்தை ஆண்ட தமிழ் அரச பரம்பரைக்கு முக்கியத்துவம் அளிப்பதாக அமைகின்றது. வழமையான மரபின்படி அந்நூல் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகின்றது. அடுத்து சிவனடியார்கள் வாழ்த்தப்படுகிறார்கள். அதனையடுத்து குளக்கோட்டன் போற்றப்படுகிறான். குளக்கோட்டன் சமகாலத்தில் அரசனாக விளங்கிய வனல்ல. அவ்வாறிருக்கையில் அவனைப் பாடிய முறைமை அவன் வெகுஜன அபிமானத்துக்கு உரிய அரசனாக விளங்கினான் என்பதை இனங் காட்டுகின்றது.

முற்குறிப்பிட்ட நூல்களிலெல்லாம் நாட்டுவளம், நகரவளம், ஆற்றுவளம் என்பன பாடப்படுகின்றன. அவை மரபு வழிப்பட்ட அம்சங்களே. எனினும் அவற்றுள் தேசம்பற்றிய ஈடுபாட்டுணர்வு நன்கு வெளிப்படுகின்றது. உதாரணமாக திருக்கரைசைப் புராணத்தை எடுத்துக் கொள்ளலாம். அதில் இலங்கை நாட்டையும் திருக்கரைசையின் தீர்த்தமான மாவலி கங்கையையும் நூலாசிரியர் உற்சாகத்தோடு வருணிக்கிறார். அவ்வருணனைகள் அவரின் கவித்துவத்தை மாத்திரமன்றி நாட்டுப் பற்றையும் உணர்த்துவனவாயுள்ளன. ஆங்காங்கே ஆசிரியரின் தமிழ்ப் பற்றும் புலனாகின்றது. நகர வருணனையின்போது நகர வீதிகளை வருணிக்கிறார். அவ்வேளை அங்கு இடம்பெறும் தமிழின் ஆரவாரத்தையும் வலியுறுத்துகிறார்.

*கொஞ்சிய கிள்ளை மென்சொற் கோதையர் சிலம்பின் ஆர்ப்பும்*
*வஞ்சியின் காஞ்சி ஆர்ப்பும் வாயறாத் தமிழின் ஆர்ப்பும்*
*விஞ்சிய மள்ளர் ஆர்ப்பும் விழாவெழு குழுவின் ஆர்ப்பும்*
*அஞ்சிறை வண்டின் ஆர்ப்பும் அன்றி ஓர் ஆர்ப்பும் இன்றால்.*[2]

இலங்கைத் தீவு நெடுங்காலமாகவே சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளைப் பேசிய மக்கட் கூட்டங்களைத் தன்னகத்தே கொண்டமைந்ததாகவே விளங்கியது. ஆயினும் ஈழத்தில் தோன்றிய தமிழ் இலக்கியம் எதுவும் (வரலாற்று நூல்கள் அல்ல) சிங்களம் என்ற ஒரு மொழிபற்றியோ அம்மொழி பேசிய மக்கட்கூட்டம் பற்றியோ பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

நாட்டை வளப்படுத்துவது என்ற வகையில் ஒரு தேசத்தின் வளங்களுள் முக்கியத்துவம் பெறுவது ஆறாகும். அவ்வகையில் ஈழத்து தமிழ் இலக்கியங்களில் மகாவலிகங்கை உணர்ச்சிபூர்வான மதிப்பினைப் பெற்றுள்ளது. அத்தகைய ஈடுபாட்டு உணர்ச்சி காரணமாக மகாவலிகங்கை பற்றிய பல தொன்மங்களும் ஈழத்தில் வளர்ந்துள்ளன. ஆனால் இலங்கைத் தீவில் உள்ள ஏனைய ஆறுகள் பற்றிய ஈடுபாடோ அல்லது குறைந்த பட்ச அறிவோ ஈழத்துத் தமிழ்க் கவிஞர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை. இதற்கு விதிவிலக்காகக் கொள்ளத்தக்கது மாணிக்ககங்கை ஒன்றே. தமிழ் சமூகத்தின் பாரம்பரிய வழிபாட்டிடமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமத் தலத்தின் புனித ஆறு என்ற வகையிலேயே மாணிகக்கங்கை அறியப்பட்டது. அல்லாமல் மாவலிகங்கை தேசத்து ஆறாகக் கொள்ளப்பட்டது போல் அது கொள்ளப்பட வில்லை என்பதையும் இங்கு வலியுறுத்துதல் வேண்டும். அதற்கான தெளிவான சான்றினை நாம் கதிரைமலைப் பள்ளிலே கண்டுகொள்ளலாம். பள்ளு என்பது மழை வளம், ஆற்றுவளம் முதலானவற்றைத் தன் அடிப்படை அங்கங்களாகக் கொண்ட ஒரு இலக்கிய வடிவமாகும். அந்தவகையில் ஈழத்துப் பள்ளு இலக்கியங்கள் மாவலி கங்கையையே உணர்வு பூர்வமாகப் பாடியுள்ளன. கதிர்காமத் தலம் பற்றியதான கதிரை மலைப் பள்ளிற்கூட அத்தலத்தின் புனித தீர்த்தமாகக் கொள்ளப்படுகின்ற மாணிக்க கங்கையை விடுத்து மகாவலி கங்கையையே ஆற்றுவளம் கூறுவதற்கான அடிப்படையாக அமைத்துக் கொண்டமை இங்கு கருதத்தக்கது. மாவலி கங்கை தமிழ் மக்கள் வாழும் நிலத்தினூடாக ஓடுகின்ற பேராறு என்ற வகையிலேயே தமிழ்ப் புலவர்களின் அபிமானத்தைப் பெற்றது என்றே கொள்ள வேண்டும்.

16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாண இராச்சியம் உட்பட இலங்கையின் கரையோரம் யாவும் போர்த்துக்கேயர் வசமானது. அதற்கு முன்பாக ஆரியச் சக்கரவர்த்தி களின் ஆட்சிக் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் தமிழரசு பற்றிய விதந்துரைகளைக் கொண்டனவாக அமைந்தன. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் தோன்றிய நூல் எதுவும் குறிப்பிடக் கூடியதாக இல்லை. போர்த்துக்கேயருக்குப் பின்னர் ஆட்சி செய்த ஒல்லாந்தர் காலத்தில் தோன்றிய நூல்களுள் 'யாழ்ப்பாண வைபவமாலை' நீங்கலாக வேறு எந்த நூலும் ஒல்லாந்த அரசு பற்றியோ அரசுத் தலைவன் பற்றியோ அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. 'யாழ்ப்பாண வைபவமாலை' யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி யாண்ட ஒல்லாந்த தளபதி ஒருவனது விருப்புக்கிணங்க எழுதப்பட்டது. புதிதாய் வந்த ஒல்லாந்தர்கள் தாம் கைப்பற்றிய நாட்டின் வரலாறையும் சட்டதிட்டங்கள், வழமைகளையும் அறிய விரும்பினார்கள். இத்தகைய விருப்பினாலேயே 'தேசவளமைச் சட்டமும் தொகுக்கப்பட்டது. ஒல்லாந்த ஆள்பதியின் விருப்பின் பேரில் பாடப்பட்டது என்ற விடயத்தை 'யாழ்ப்பாண வைபவமாலை'யின் சிறப்புப் பாயிரமும் தெரிவிக்கின்றது.

*ஒண்ணலங்கொள் மேக்கறூனென் றோதுபெயர்*
*பெற்றவிற லுலாந்தே சண்ணல்*
*பண்ணலங்கொள் யாழ்ப்பாணப் பதிவரலா*
*றுரைத்தமிழாற் பரிந்து கேட்கத்*
*திண்ணிலங்கு வேற்படையான் செகராச*
*சேகரன்றொல் லவையிற் சேர்ந்தோன்*
*மண்ணிலங்கு சீர்த்திவையா மரபின்மயில்*
*வாகனவேள் வகுத்திட் டானே.*[3]

ஒல்லாந்த தளபதியான மேக்கறூனின் விருப்பிற்கிணங்க யாழ்ப்பாண வரலாற்றை, வையா என்னும் புலவரின் மரபில் வந்த மயில்வாகனவேள் உரைநடையில் வகுத்துரைத்தான் என்பது இச்செய்யுளின் திரண்ட பொருள். இச்செய்யுளில் மேக்கறூன் பற்றிய விவரணத்தை விட மயில்வாகனப் புலவரின் முன்னோரான வையா வீற்றிருந்த அவைக்கு உரியவனான செகராசசேகரன் பற்றிய விதந்துரை உயிர்ப்புடையதாய் அமைவது அவதானிக்கத்தக்கது.

உரைநடை நூலாக அமைந்த 'யாழ்ப்பாண வைபவமாலை'யின் இறுதியிலும் சில செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள்ளும் ஒல்லாந்த ஆட்சியாளர் பற்றிய குறிப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வருகின்றன. அவற்றில் ஒல்லாந்த ஆட்சியாளன் புகழ்ந்துரைக்கப்படுகின்றானாயினும் அப்புகழுரை ஒல்லாந்தருக்கு முன்பு ஆட்சி செய்த போர்த்துக்கேயரின் கொடுங் கோன்மை யிலிருந்து மீண்டமை குறித்த மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டதே என்பது அவதானிக்கத்தக்கது. போர்த்துக்கேயரால் அழிவுக்குள்ளான தமிழ் இராச்சியம் பற்றிய கழிவிரக்கமும் இங்கு புலனாகின்றது.

*திருமருவு யாழ்ப்பாண நாட்டையாண்ட*
*சிங்கையாரியன் குலத்தைத் தீங்கு செய்து*
*பெருமையொடு காலயுத்தி யானிமாதம்*
*பிலிப்பென்னும் பறங்கிகிளை யரசையாண்டு*
*குருநெறியும் மனுநெறியும் இல்லாதாக்கிக்*
*கொடுமைசெய்து நாற்பதாண் டளவும்போக்க*
*உருமருவு முதயகிரி இரவிபோல*
*உலாந்தேசு மன்னவன்வந் துதிப்பான்தானே.*

*உதிக்கின்ற விளம்பிதனி லானிமாதம்*
*ஒன்பதினில் உலகுபுகழ் உலாந்தேசண்ணல்*
*மதிக்கின்ற மனப்பறங்கி கிளையையெல்லாம்*
*வாள்வலியால் உயிர்தொலைத்து வாரியள்ளிக்*
*கொதிக்கின்ற தென்கடலில் அடையவீசிக்*
*கோட்டையொப்புக் கொண்டேற்றுக் கொடியும்தூக்கித்*
*துதிக்கின்ற யாழ்ப்பாண நகரிதன்னிற்*
*சோதிதிகழ் மணிமகுடம் சூட்டினானே.*

*சூட்டியபின் நூற்றின்மேல் ஐயெட்டாண்டு*
*தொல்வினைபோல் வல்வினைகள் எல்லாஞ்செய்தே*
*ஈட்டுபொருள் உள்ளதெல்லாங் கவர்ந்துதேடி*
*இடர்விளைத்தி யாவரையும் இழிகோலாக்கிக்*
*சூட்டுறுமின் மினிவீழ்ந்தக் கினியின்மாய்ந்த*
*கொள்கையென அவன்குலமும் நாசமாக*
*நாட்டுபுகழ் யாழ்ப்பாண நாடெங்கெங்கும்*
*நன்மைபெறச் சைவநெறி நடக்குந்தானே.*[4]

இறுதிச் செய்யுளில் போர்த்துக்கேயரின் கொடுங்கோன்மைக்கு ஏற்பட்ட அழிவில் உண் டான மகிழ்ச்சியோடு புதிய ஆட்சியில் சுதேச சமயமான சைவத்துக்கு மறுவாழ்வு கிட்டும் என்ற நம்பிக்கையும் நன்கு புலனாகின்றதேயல்லாமல் ஒல்லாந்தர் மேலதான விசுவாசம் புலனாகின்றது என்று கொள்வதற்கில்லை.

எவ்வாறாயினும் இந்த அளவிலேனும் அன்னிய ஆட்சியாளர் பற்றிய குறிப்பு, அவர்கள் (ஒல்லாந்தர்) கேட்டுக் கொண்டதற்கமைய எழுதப்பட்ட 'யாழ்ப்பாண வைபவ மாலை' ஒன்றிலேயே காணப்படுகின்றது. ஒல்லாந்த ஆட்சிக்காலத்தில் எழுந்த பிற நூல்கள் அந்த அன்னிய அரசு பற்றியோ அரசுத் தலைவன் பற்றியோ அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. மாறாக புலவர்கள் தமது பிராந்தியத்துக்கு அருகில் இருந்த சுதேச அரசுபற்றிய பெருமித உணர்வினைக் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அதாவது கண்டியரசன் மேலதான ஈடுபாடு அக்காலப் புலவர்களிடம் காணப்பட்டதை அவதானிக்க முடிகின்றது. அது அக்கால மக்கள் மத்தியில் நிலவிய சுதேச உணர்வுக்கான நல்லதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளமாகும். சின்னத்தம்பிப் புலவர், 'பறாளை விநாயகர் பள்ளு' என்ற தமது நூலொன்றிலே,

*கயல் வரைந்த துவசன் பணி நவ*
*கண்டி மன்னன் வரராச சிங்கன்*
*இயல்புடன் திருச் செங்கோல் நடாத்திய*
*ஈழமண்டல நாடெங்கள் நாடே*[5]

என்று தம் நாடு பற்றிய பெருமிதத்தை வெளிப்படுத்துகிறார். சின்னத்தம்பிப் புலவரின் காலத்திலே இலங்கைத் தீவில் தமிழறிந்தவர்களாய்ச் சுயாதிபத்தியம் செலுத்தியவர்கள் கண்டியரசர்கள் மாத்திரமே. ஆனால் இப்பாடலிற் போற்றப்பெறும் கண்டியரசன் சின்னத் தம்பிப் புலவரின் சமகாலத்தவனல்லன். சிறிது முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவனான இராஜசிங்கனே இங்கு போற்றப்பெறுகிறான். அவனது படைகள் இருதடவை யாழ்ப் பாணத்தின்மீது படையெடுத்துச் சென்றதாகத் தெரியவருகிறது. அவன் சைவாபிமானி யாகவும் விளங்கியவன் போர்த்துக்கேயர் நாட்டைவிட்டு அகல்வதற்குக் காரணமாய் அமைந்தவன். அவன் மேலதான நல்லபிப்பிராயம் சின்னத்தம்பிப் புலவர் காலம் வரையில் நீடித்ததுபோலும்.

கண்டியரசன் மேலதான ஈடுபாடு தீவின் வடக்கில் மாத்திரமன்றி கிழக்கிலும் காணப் பட்டது. திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டங்களைப் புவியியல் அடிப்படையிலே எல்லைப்படுத்தும் வெருகலாற்றங்கரையிலே அமைந்த வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் மீது வீரக்கோன் முதலியார் என்பவராற் பாடப்பெற்ற 'வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்' என்னும் பிரபந்தத்திலும் அக்கண்டியரசன் மேலதான, சுதேச அடிப்படையிலான ஈடுபாட்டைக் காணலாம். புலவர், தமது நூலில் பல இடங்களில் இராஜசிங்கனைக் குறித்துள்ளார். அவற்றுள் ஓரிடத்தில் உவமை வகையால் இராஜசிங்கன் குறிப்பிடப் படுகின்றான். அந்த உவமைக்குள் இருக்கும் அரசியல் அவன் மேலதான அபிப்பிராயத்தின் தன்மையை உணர்த்தவல்லது. மகாவலிகங்கை, கொல்லும் புலிமுதலாம் விலங்கினத்தைத் தள்ளி உருட்டிச் செல்வதற்கு உவமையாக,

*'எண்திசையும் ஏத்தும் இரவி குலத்துதித்தோன்*
*கண்டி நகராளும் கவின் உலவு ராசசிங்கன்*
*கூரிய கைவாளால் குவலயத்தில் ஒன்னலரைச்*
*சீருடனே தானரிந்து செங்குருதி ஆற்றினிடைச்*
*செல்ல விடுப்பது...'*[6]

கையாளப்பட்டுள்ளது. ஒன்னலர் எனப்படுவோர் போர்த்துக்கேயராக இருத்தல் கூடும்.

'இலங்கை வரலாற்றிலே அதிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் அக்காலப் பகுதியில் நடைபெற்றன. போர்த்துக்கேயரின் ஆதிக்கம் அவன் (இராஜசிங்கன்) மேற் கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகளின் பயனாக இலங்கையில் ஒழிந்தது. இராஜ சிங்கன் அவர்களை நாட்டினின்று அகற்றுவதற்கென்று உலாந்தாக்காரரின் உதவியை நாடிப் பெற்றான். போர்த்துக்கேயருக்கு எதிரான போர்களில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிராந்தியங்களிலுள்ள வன்னியர்கள் கணிசமான அளவிலே பங்குகொண்டமையுங் குறிப்பிடற்குரியதாகும். இரண்டாம் இராஜசிங்கனின் ஆட்சியில் அப்பிராந்தியங்களிலுள்ள வன்னிபங்கள் கண்டி இராசதானியோடு மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தன.'[7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு தேசத்தின் தென்பகுதியிலும், கண்டியரசு மேலதான இத்தகையதொரு ஈடுபாடு மக்கள் மத்தியில் இருந்துள்ளது. திருக்கோவில் என்னும் ஊரைச் சார்ந்த பிராமணன் ஒருவன் கண்டியரசனிடம் பரிசுபெறும் நோக்கில் அங்குசென்று அவன்மேற் பாடிய 'வசந்தன் சிந்து' ஒன்று எமக்குக் கிடைக்கின்றது. அச்சிந்து கண்டியரசனை சோழமன்னர் பரம்பரையில் - சிபிச்சக்கரவர்த்தி பரம்பரையில் - வந்தவனாகப் புகழ்ந்துரைக்கின்றது.[8] தமிழ்ச் சமூகத்தவரால் அக்கண்டியரசன் தமிழனாகவே கொள்ளப்பட்டிருக்கிறான் என்பது இங்கு உணரத்தக்கது.

அன்னிய அரசர் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தவர்கள் தமது பிராந்தியத்தின்மேல் ஆதிக்கம் செலுத்தாத மன்னன் ஒருவனைப் புகழ்ந்துரைப்பதென்பது தமிழறியாதவரும் வேற்றுப்பண்பாட்டினருமான அன்னியர் ஆட்சியின் மேலான வெறுப்பை - அதை ஒத்துக் கொள்ள முடியாத மனப்பான்மையை உணர்த்துவதாகவே கொள்ளத்தக்கது. பாடிப் பரிசு பெறும் எண்ணமே இதற்கான காரணம் என்று கீழ்த்தரமாக நினைப்பதற்கு இங்கு இட மில்லை. காரணம் யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சார்ந்தவரான கனகசபைப் புலவருக்கும் கண்டியரசர் பரம்பரைக்கும் இடையிலான உணர்வுபூர்வமான தொடர்பு எமக்குத் தெரிய வருவதேயாகும். ஆங்கிலேயர், கண்டியரசைக் கைப்பற்றியபின் வாழ்ந்தவர் கனகசபைப் புலவர். இவர் வைத்தியநாதத் தம்பிரான் மரபில் வந்த வேலுப்பிள்ளை என்பாரின் புதல்வர். இவர்கள் பரம்பரை வைத்திய பரம்பரை அவ்வகையில் அப்பரம்பரை கண்டி யரசர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டது. உறைப்பான சைவப் பரம்பரையிலே வந்தவராயினும் கனகசபைப் புலவர் புரொட்டஸ்தாந்த கிறித்தவராகி விட்டார். அமெரிக்க மிஷனரிமாரின் அகராதிப் பணியில் (உவின்ஸ்லோ ஆங்கில - தமிழ் அகராதி) ஈடுபடு வதற்காகச் சென்னை சென்று சிறிது காலம் வாழ்ந்தவர். அக்காலத்தில் ஆங்கிலேயரிடம் பிடிபட்டு வேலூரில் சிறை வைக்கப்பட்ட கண்டியரசரின் சந்ததியைச் சார்ந்த அழகர் சாமியைச் சென்று கண்டு அவர்மேல் சிறியதொரு ஆற்றுப்படையும் பாடி மீண்டார் கனக சபைப் புலவர்.[9] கண்டியரசர் பரம்பரையைச் சார்ந்த ஒருவரை அவர் அரசபோகம் இழந்தவராய் உள்ள நிலையிலும் சென்று சந்திக்கும்படி செய்கின்ற தொடர்பு ஆச்சரியத்துக் குரியது. அந்த உளப்பூர்வமான தொடர்பினை சுதேசாபிமானத்தின் வெளிப்பாடு என்று கொள்வதில் தவறிருக்க முடியாது.

தமிழ்ப் புலவர்களிடம், கண்டியரசர்கள் மேலதான இவ்வாறான ஈடுபாட்டுணர்வைக் காணும் அதேவேளை, கண்டியையோ பிற பிரதேசங்களையோ சார்ந்த சிங்கள மக்கள் பற்றிய எந்தப் பேச்சையும் அவர்களின் ஆக்கங்களில் எம்மால் அவதானிக்கமுடியவில்லை. இலங்கைத் தீவில் சிங்கள தேசமும் தமிழ்த் தேசமும் வேறுவேறாகவே விளங்கின. இந்த உண்மையை உணர்த்திநிற்கும் தெளிவான சான்றினை வரலாற்று மூலங்களிலிருந்து கண்டு கொள்ளலாம்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதப் போக்கு வரத்தைக் கொண்டுவரச் செய்வதற்கு தமிழ் மக்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதிலும் அது அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டே வந்தது. தமிழர்கள் விரக்தி யடைந்தவர்களாய்,

'இலங்கை அரசாங்கம் இந்த அளவுக்குத் தமிழரை வெறுத்தால், ஏன் எம்மை இந்திய அரசின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவருதற்கு ஒழுங்கு மேற்கொள்ளக் கூடாது.'[10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கேட்கத் துணிந்தார்கள். புகையிரத சேவையை அநுராதபுரம் வரையில் மட்டுப் படுத்தும் அராசங்கத்தின் முடிவினால் அச்சமுற்றார்கள்.

'யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதப் பாதை திறக்கப்படுமானால் சனநெரிசலினால் வசிப்பதற்கு இடமின்றி மிகவும் கஷ்டப்படும் இங்குள்ள மக்கள், பெரும் பரம்பளவிலுள்ள வன்னிப் பிரதேசங்களுக்குச் சென்று, புதிய பிரதேசங்களைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தி, அவற்றை வளமுள்ள நிலங்களாக மாற்றி அவற்றினால் பெரும் நலனடைவர். இந்த நோக்கத்திற்காக நாம் யாழ்ப்பாணத்துக்கு ஒரு புகையிரத சேவையைக் கேட்கையில், அரசாங்கமோ அதனை மறுத்து, அதற்குப் பதிலாக அதை அனுராதபுரத்துக்கு வழங்கு கின்றது. இது குருநாகல், அனுராதபுரம் ஆகிய இடங்களில் சிங்களவர் குடியேறி, வன்னியிலும், அங்குள்ள ஏனைய பிரதேசங்களிலுமுள்ள, எமக்குச் சொந்தமானதும் எமது தேசத்துக்கு உரியதுமாகிய வளத்தை அபகரிக்கும் நிலையை ஏற்படுத்துகின்றது. எமது நிலத்தைச் சிங்களவர் அபகரித்த பின்னர் எமக்குப் புகையிரதப் பாதையைத் தருவதில் என்ன பயன்?'[11]

தமிழர்கள் தங்கள் பொருளாதார அபிவிருத்தி குறித்துச் சிந்திக்கத் தலைப்பட்ட வேளைகளிலும் தமது பிராந்தியங்களைச் சிங்கள தேசத்துக்கு வேறான தனித்தேசமாகவே கருதினார்கள்.

'வன்னி பயிர்ச் செய்கைக்காகத் திறக்கப்படும்போது, ஏற்கெனவே நெற்பயிர்ச் செய்கைக்கு உட்பட்டிருந்த நிலங்கள் மாத்திரமன்றி, அயல் நிலங்களிலும் நெல் செய்கை பண்ணப்படும். அப்போது, அத்தியாவசியமான உணவுப் பொருட்களாகிய அரிசி, நெல் போன்றவற்றிற்கு அயல் நாடாகிய இந்தியாவின் கையை எதிர்பார்க்க வேண்டியதில்லை. நெற்பயிர்ச் செய்கைக்கு மாத்திரமன்றி, தெங்குப் பயிர்ச் செய்கைக்கும் நிலம் இருக்கும். அப்போது, மலைநாட்டில் தேயிலை, கோப்பிப் பயிர்ச் செய்கையினால் எவ்வாறு சிங்களவர்கள் செழிப்படைந்தனரோ, எமது நாடும் நெல், தென்னைப் பயிர்ச் செய்கையினால் செழிப்புறும்.'[12]

இலங்கைத் தமிழர்கள் சிங்களத்தேசத்துக்கும் இந்திய தேசத்துக்கும் வேறான தனி யொரு தேசமாகவே தங்கள் தேசத்தைக் கருதினார்கள் என்பதும் தேவையேற்படின் சிங்கள தேசத்தைவிட இந்திய தேசத்தோடேயே தம்மை இணைத்துக் கொள்ள விரும்பி னார்கள் என்பதும் மேற்படி மேற்கோள்களால் விளக்கமுறுகின்றன. இம்மனப்பான்மையின் இலக்கிய ரீதியான வெளிப்பாட்டுக்கு நல்ல அடையாளமாக விளங்குவன பாவலர் துரையப்பாபிள்ளையின்(1872-1929) யாழ்ப்பாண சுவதேசக் கும்மி(1907), எங்கள் தேச நிலை என்பன. சுதேச அடிப்படையிலான விவசாயம், கைத்தொழில், கூட்டுறவு, மொழி, கல்வி என்பனபற்றிப் பாவலர் அந்நூல்களிற் பேசுகிறார். அவர் தேசியகவியான சுப்பிரமணிய பாரதிக்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி அவன் இறந்த பின்பும் எட்டு ஆண்டுகள் வாழ்ந்தவர். இலக்கியத்துக்கான மொழி எளிமை பற்றிப் பாவலர் சிந்தித்துள்ளார் என்பதும் இவ்விடத்தில் மனங்கொள்ளத்தக்கது. அவர் சிந்தனை வருமாறு:

*தேசோப காரங் கருதியக் கும்மியைச்*
*செப்புகின் றேனாத லாலெவரும்*
*லேசாய் விளங்க இலகு தமிழில்*
*இயம்புவ தேநலம் சங்கமின்னே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மிக்க அரும்பதத் தோடு புணர்ச்சி*
*மிகுந்திடிற் கும்மி பொது சனங்கட்கு*
*எக்கால மும்விளங் காதத னால்நலம்*
*ஏது வருமடி சங்கமின்னே.*[13]

பாவலரின் கவித்துவம் சிலாகிக்கத்தக்கது அல்லவூ எனினும் சாதாரண பொதுமக்கள் பற்றிய அவரது சமூகநோக்கும் மொழி நோக்கும் முன்னோடியானவை என்பது கணிப்புக் குரியது. ஆங்கிலேயராட்சியில் உண்டான நவீனமயவாக்கத்தின் விளைவுகளாக இத்தேசிய நோக்கு முதலானவற்றைக் கொள்ளலாம். எது எவ்வாறாயினும் இங்கு நாம் வலியுறுத்த வேண்டியது நவீன காலத்துக்கு முந்திய ஈழத்துக் கவிதைகளிலெல்லாம் தமிழ்த் தேசம் என்ற எண்ணக்கருவேயன்றி இலங்கைத் தேசம் பற்றிய எண்ணம் சிறிதும் இருக்கவில்லை என்பதேயாம்.

'இலங்கைத் தேசியம்' என்று நோக்குகின்றபோது அக்கோட்பாட்டுக்கு பெரிதும் ஒத்துப் போகக் கூடிய சிந்தனைகளைக் கொண்டனவாக அமைபவை முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி, நவாலியூர் சோமசுந்தரப்புலவர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வித்துவான் வேந்தனார் முதலானோர் கவிதைகளே. இலங்கை என்பது சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர் என்னும் சாகியத்தாரைக் கொண்ட தேசம் என்பதையும் மத அடிப்படையில் பௌத்தர், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் இங்கு வாழ்கின்றார்கள் என்பதை யும் கூறி அவர்களுக்கிடையில் ஒற்றுமையையும் தேச அபிவிருத்தியையும் வலியுறுத்து வனவாக அவர்களது கவிதைகள் அமைகின்றன. அவர்களது இவ்வாறான கவிதை களிலேயே வடக்கு கிழக்குக்கு அப்பாற்பட்ட கொழும்பு, காலி, மாத்தறை, மத்திய மலைநாடு முதலாம் இடங்கள் பற்றிய பேச்சு முதன்முதலில் எழுகின்றது. இலங்கை நாட்டின் பல்வேறுபட்ட வளங்கள் பேசப்படுகின்றன. எனினும் அவர்களிடத்தே தமிழ் மொழி, தமிழினம், அதன் பண்பாடு என்பவற்றைச் சிலாகித்துப் பேசுகின்ற 'தமிழ்த் தேசியத்துக்கு அடிப்படையான - ஒரு பண்பும் காணப்படுகின்றது. இலங்கைத் தேசம்பற்றிய இவர்களது நோக்குக்கு அக்காலச் சூழ்நிலையே வழிசமைத்தது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் வாழ்ந்தவர்களாதலால் சுதந்திரம் கிடைத்தமை குறித்து நாட்டில் இடம் பெற்ற விழாக்கள் போட்டிகளும் இத்தகைய கவிதைகள் தோன்றுவதற்கு வழிசமைத்தன. 'மரதன் அஞ்சலோட்ட'க் கவிதைகள் இத்தகையனவே. இலங்கை சுதந்திரம் அடைந்தமை தொடர்பில் இவர்கள் கருத்துச் செலுத்தியிருந்தாலும் இவர்களிற் கணிசமானவர்களிடம் ஆங்கில அரசின் மேலதான ஓர் நல்லபிப்பிராயமும் இருந்தே வந்துள்ளது. அதனால் அவர்கள்,

*சீருறு சிங்களர் வீரத்தமிழரைச்*
*சீறி எதிர்த்த பறங்கியரும்*
*போருறும் ஒல்லாந்த மன்னரும் போய்விட*
*புண்ணிய ஆங்கிலர் ஆள்நாடு*[14]

என்றே இலங்கையைப் போற்றுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே இந்தியத் தேசியத்துக்கு ஆட்பட்ட ஒரு மனப்பான்மையும் புலனாகின்றது.

*பாரதம் என்றொரு சீர்பெறு நாடு இந்தப்*
*பார்க்கு மெய்ஞ்ஞானம் படைத்தது காண் - அந்தப்*
*பேரொளி நாட்டினை ஈழத்து மக்கள்*
*பிரித்து மொழிவது நன்றாமோ?*[15]

மொழி, இலக்கியம், மதம், பண்பாடு அனைத்தாலும் தம்மோடு ஒன்றுபட்ட இந்தியாவையே அவர்கள் மனப்பூர்வமாகத் தம் தாய் நாடாகக் கருதினார்கள். இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்களே இவர்களது ஆதர்ச புருஷர்களாகத் திகழ்ந்தார்கள்.

இலங்கைக்குப் பூரண விடுதலை வேண்டும் என்ற குரல் சிங்களவர் மத்தியில் இருந்து எழவில்லை. தமிழர் மத்தியிலிருந்தே எழுந்தது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸே அக்கோரிக்கையை முதன்முதல் முன்வைத்தது.

'இந்தியாவின் காந்திய தேசியவாத இயக்கத்தின் பிரதிபலிப்பாகவே பிரதானமாக யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தோற்றம் பெற்றது. இலங்கையில் யாழ்ப்பாணத்திலேயே இந்திய தேசிய எழுச்சியின் செல்வாக்கு மிகக் கூடுதலாகத் தாக்கம் செலுத்தியது. .............. ............................................................ இந்திய தேசிய இயக்கம் தொடர்பான ஆக்கங்களை, குறிப்பாக அதன் தலைவர்களின் உரைகளை வாசிப்பது ஒரு நாகரிகமாக இருந்தது. காந்திய சிந்தனையிலும் விழுமியங்களிலும் மூழ்கியிருந்த இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்களின் சொல்லும் செயலும் அவர்களைப் பரந்த இயக்கத்தின் ஒரு பகுதியினராக எண்ணச் செய்தது. ........................................................................................ இலங்கையில் தெளிந்த ஏகாதிபத்திய விரோத இயக்கம் எதுவும் இல்லாத நிலையில், நாட்டு மக்கள் மத்தியில் ஏகாதிபத்திய விரோத உணர்வலைகளை ஏற்படுத்தும் பணியினை இளைஞர் காங்கிரஸ் தனது கையில் எடுத்துக் கொண்டது. .........................................ஓர் அகில இலங்கைத் தேசிய வாதத்தையே காங்கிரஸ் தனது தாரக மந்திரமாகக் கொண்டிருந்தது.'[16]

பிரிவினையற்ற இலங்கையின் பூரண சுதந்திரத்தை அவாவி நின்ற யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் செல்வாக்குக்கு உட்பட்ட கவிஞர்களாகவும் மேறபடி கவிஞர்களைக் கொள்ளலாம். எனினும் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்தே முளைவிட்டு வளரத் தொடங்கிய இனமுரண்பாடானது சுதந்திரம் பெற்று ஒரு தசாப்தம் முடிவதற்கிடையில் 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 1958 இல் தமிழருக்கெதிரான இனக்கலவரம் வெடித்தபின் பேரினவாதத்துக்கு எதிராக எழுந்த சமவுரிமை கோரும் தமிழர் போராட்டத்தை அரசாங்கம் அடக்க முற்பட்ட முறையால் அப்போராட்டம் மேலும் தீவிரம் அடைந்தது. இதையடுத்தே ஈழத்தில் தமிழ் தேசியத்தை வலியுறுத்துகின்ற இன எழுச்சிக் கவிதைகள் பெருமளவில் தோற்றம் பெற்றன. அவற்றில் சிங்கள இனத்துக் கெதிரான காழ்ப்புணர்வும் தமிழினம் பற்றிய பெருமித உணர்வும் தீவிரமாக வெளிப் பட்டன. இக்கவிதைகளுக்கு பாரதிதாஸன் பெரிதும் ஆதர்சமாக அமைந்தார்.

*கரையிலாத தமிழ் தெருக் கணிகை மாதென வெறிக்*
*கயவரின் தயவிலாக் காலிடைப் படுவதா?*
*முறையிலா வழிகளில் முரடர் எம்முடிவையே முயலநாம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மூடியோர் மூலையில் துயில்வதா?*
*பறையெலாம் அதிர்க, நம் பலமெலாம் திரள்கவே*
*பாதிநா டெங்களுக்காக என்றெழுகவே.*[17]

என்றும்

*புறப்படு புறப்படு புறப்படு*
*அறப்போர் செய்யப் புறப்படு*
*அணிவகுத்து நின்றிடு*
*இறக்க வேண்டி நேரினும்*
*ஈட்டிபோலப் புறப்படு! (புறப்படு)*
*வடக்கும் கிழக்கும் சேர்ந்தது*
*வலிவு பெற்று நிற்குது*
*அடக்கு முறையை அடக்கிட*
*ஆணும் பெண்ணும் சேர்ந்திடு*[18]

என்றும் அமைந்த இவைபோன்ற ஏராளமான கவிதைகள் தமிழர் பகுதியெங்கும் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துவனவாய்த் தோன்றின. இப்படியான கவிதைகள் தோற்றம் பெறத் தொடங்கிய காலத்தில் முன்னர் செல்வாக்குப் பெற்றிருந்த இலங்கைத் தேசியத்துக்கும், கட்சி அரசியலுக்கும் ஆட்பட்டவர்களான சிலர்,

*இலங்கை எங்கள் நாடடா இனப்புரட்சி ஏனடா,*
*துலங்குகின்ற சுதந்திரம் சொல்லிப் பள்ளுப் பாடடா*
*ஆளும்சாதி நாமடா அன்புக் குரலிற் கூவடா*
*பாழும் வகுப்பு வாதிகள் படபடப்பைப் பாரடா*
*செல்வன் என்றும் ஏழை என்றும் செப்புகின்ற வகுப்பினி*
*இல்லைஈழ நாட்டில் என்றே எங்கும் சங்கம் ஊதடா*
*பிறப்புரிமை யாகஈழம் போற்றி வந்த தமிழரின்*
*சிறப்புரிமைத் தோழர் என்றும் சிங்களவர் தானடா*[19]

என்றவாறு தமிழர் போராட்டத்துக்கு எதிராகவும் இனஐக்கியத்தை வற்புறுத்தியும் பாடவே செய்தனர். ஆனால் அவையெல்லாம் தமிழ்த் தேசியம் பற்றிய உணர்ச்சிக்கு முன்பாக உணர்சியற்ற சொற் கூட்டமாக மக்கள் மனதைக் கவராதவையாய்ப் போய்விட்டன. அரசியல் அமைப்பில் இலங்கை ஒரே நாடாக வரையப்பட்டிருந்தாலும், முற்போக்கு வாதிகள் என்போர் என்னதான் இன ஐக்கியம் பேசினாலும், மக்கள் மனங்களில் அது இரண்டாகப் பிளவுண்டு போனது. தமிழ்த் தரப்பின் அஹிம்சைப் போராட்டத்துக்கு எதிராக அரசாங்கங்கள் மேற்கொண்ட ஆயுத அடக்குமுறைகளும் தூண்டிவிட்ட கலவரங் களும் அரசியற் சூழ்ச்சிகளும் அப்போராட்டத்தை ஆயுதப்போராட்டமாக மாற்றி யமைத்தன. அந்நிலையில் தமிழ்த் தேசியக் கவிதைகள் மேலும் தீவிரமுற்றன. ஆயுதப் போராட்டம் தீவிரமுற்ற நிலையில் அதன் பக்கவிளைவாக முஸ்லிம் தேசியமும் தலை தூக்கியது. தமிழ்ச் சூழலில் உள்ள முற்போக்கு வாதிகளே எப்போதும் இலங்கைத் தேசியத்தை - இன ஐக்கியத்தை வலியுறுத்தி வந்தார்கள். அதுவும் பெரும்பாலும் தமது பேச்சிலேதான். இலங்கைத் தேசியத்தை வற்புறுத்துவனவான குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கவிதைகளை அவர்கள் படைத்ததாகத் தெரியவில்லை. தொடக்க காலத்திற் படைத்தவர் களும் பின்னாளில் தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் அடியுண்டு போனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சான்றெண் விளக்கம்**


1. முருகர் குணசிங்கம், *இலங்கை தமிழ் தேசியவாதம் - அதன் ஆரம்ப தோற்றம் பற்றியதோர் ஆய்வு*, எம்.வி.வெளியீடு, தென் அசியவியல் மையம், சிட்னி, 2003, ப.49. (மேற்கோள்)
2. க. இரகுபரன்(ப.ஆ.), *திருக்கரைசைப் புராணம்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2009, ப.37.
3. க.குணராசா (ப.ஆ.),*யாழ்ப்பாண வைபமாலை*, கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம், 2001, ப.1.
4. மேற்படி, ப.73
5. க. இரகுபரன் (ப.ஆ.), *நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள்*, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2005, ப.254.
6. இ.வடிவேல் (உ.ஆ.), *வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்*, இந்து சமய பண்பாட்டிலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2000, பக்.38, 39.
7. சி.பத்மநாதன், *ஈழத்து இலக்கியமும் வரலாறும்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை, 2004, ப.158, 159.
8. சித்தி அமரசிங்கம் (ப.ஆ.), *திருகோணமலை புலவர் வே.அகிலேசபிள்ளை நூற்றிரட்டு*, சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு, உடத்தலவின்னை, 2007, ப.94.
9. பொ.பூலோகசிங்கம் (ப.ஆ.), *பாவலர் சரித்திர தீபகம் பகுதி - 2*, கொழும்புத் தமிழ்ச்சங்கம், கொழும்பு, 2001, ப.77-83.
10. முருகர் குணசிங்கம், *முற்குறித்தது*, ப.238.
11. மேற்படி, ப.235, 239.
12. மேற்படி, ப.248, 249.
13. பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை, *சிந்தனைச் சோலை*, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழா (2010) உலகப் பழையமாணவர் சங்கக் குழு வெளியீடு, யாழ்ப்பாணம், 2005, ப.19.
14. நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.
15. முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி.
16. சாந்தசீலன் கதிர்காமர், *யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை, 2012, ப.140, 141.
17. *தமிழ் எங்கள் ஆயுதம்*, முத்தமிழ் வெளியீடு, யாழ்ப்பாணம், 1962.
18. செ.யோகராசா, *ஈழத்து நவீன கவிதை*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை, 2007, ப.120.
19. வித்துவான் க.வேந்தனார், *கவிதைப் பூம்மொழில்*, மித்திர வெளியீடு, (இரண்டாம் பதிப்பு), சென்னை, 2010, ப.124.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறக்க வாழ்வீர்

ஏணியாய் வாழ்க்கைதனை ஏற்றி ஏற்றி
எதிர்காலச் சந்ததியை இயற்றுவதும்
தோணியாய் கல்விச் சாகரத்தில் நீந்தி நீந்தி
துடுப்பெடுத்து மாணவரைக் கரையேற்றுவதும்
கேணியதாய் அறிவுக் கண் திறந்து ஊற
காலமெல்லாம் நம்வாழ்வை ஈய்வதுவும்
மாண்புமிகு நல்லாசிரியர் சேர்ந்து சேர்ந்து
மாணவரை உருவாக்கும் நிலையம் பாடசாலையே!

ஆசிரியர் குழாத்தை அணைத்து அன்புமிக்க
வார்த்தைகளால் ஒன்றிணைப்பார் நல் அதிபர்
மாசிலா மனத்தோடு நடு நிலைமை காத்து
மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் பாலம் ஆவார்
நேசமுடன் பாடசாலை நிகர்த்து விளங்க
நிகரில்லா ஆளணிவளமும் பௌதிக வளமும்
பாசமுடன் தேடி நிறைத்துப் பார்புகழ
பாடசாலை ஓங்க வைப்பார் நல் அதிபரே!

பல்வேறு பின்னணியைக் கொண்டிருப்பர்
பல் சூழல்த் தாக்கங்கள் ஏற்றிருப்பர்
சொல்லவொணாத் துக்கங்கள் துயரங்கள்
சேர்ந்து வரும் சிறார்கள் நிலைமை
நல்லதிபர் சீர்தூக்கிப் பார்த்து ஆய்ந்து
ஆவன செய்தவரைக் கல்வியில் நாட்டமுற
வல்ல நல் ஆசிரிய குழாத்தைச் சேர்த்து
வழிவகைகள் செய்வார் நல் அதிபர் தானே!

சிறப்பாகத் தலைமை தாங்கும் அதிபர் தமக்கு
செம்மையாய் ஆளுமையும் நிர்வாகத் திறனும்
திறமாக அவரிடத்துச் சிறந்து விளங்க
திவ்வியமாய் கல்வியுடன் விழுமியங்கள் சிறக்கும்
பொறுமையுடன் புத்தி சாதுர்யம் செலுத்த அங்கு
பிரச்சினைகள் இல்லாத கூடமாகும்
வெறுமையாய்ப் போயிருக்கும் பாடசாலை கூட
வெளிச்சமாய் ஒளிரும் நல் அதிபராலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புடை நம் கலாசார விழுமியங்கள்
பண்டு தொண்டு நிலவி வந்த வழிவகைகள்
நின்று நிலைக்கப் பாடசாலை தளம் அமைத்து
நேரிய நல் விழாக்கள் கொண்டாட்டங்கள்
வேண்டியே நல்லதிபர் நிகழ்த்தி வைத்து
விருப்புடனே மாணவரைத் சமூகமயமாக்கிப்
பேணியே பாடசாலை வளர்த்தெடுக்கும்
பேரறிய உயர்நிலை நல் அதிபர்க்கே!

அத்தனையும் சிறப்பாகக் கொண்டிலங்கும்
எம் அதிபர் திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்கள்
இத்தகைய சேவையைச் செய்து களைத்ததனால்
இளைப்பாறிப் பிரிந்து செல்ல எண்ணம் கொண்டிலர்
உத்தியோக வரம்பு முறை எல்லை அமைத்து
பிரிவுடனே இளைப்பாற வழி செய்தாலும்
நித்தமும் அவர் நினைவு இப்பாடசாலை
நிலைக்கு மட்டும் நிரந்தரமாய் வாழுமிங்கே.

முத்திரையாய் மாணவர்கள், பெற்றோர்கள்
ஆசிரியர் நெஞ்சத்து உம் நினைவை
சித்திரமாய் பதித்துச் செல்லும் எங்கள் அதிபர்!
சென்ற விடத்தெங்கும் வாழ்க நீவிர்
எத்திசையும் இப்பாடசாலை புகழ் பரப்ப
ஏற்றி வைத்த விளக்காக நீங்கள் திகழ்வீர்
ஒத்திசைத்து கையசைத்து விடையும் தந்தோம்
உங்களது குடும்பம் நீவிர் சிறக்க வாழ்வீர்!

**பெற்றோர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரிக் கலைவிழாவில் பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட Rabeena Food நிறுவனத்தின் முகாமையாளர் திரு A. லோகேஸ்வரன் தம்பதியினரும் பணிப்பாளர் கலா அமிர்தலிங்கம் அவர்களும்



மாணவர் தலைவர்களிற்கான சின்னஞ்சூட்டுதல் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு K. அரசரட்ணம் ஆகியோர் (2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாணி விழா நிகழ்வில் பிரதம அதிதி கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்கள் (2012)




மாணவர் தலைவர் தினத்தில்
பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் அவர்கள் (2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலைக் கலைவிழாவில் பிரதம அதிதி
சீகல் நிறுவனப் பணிப்பாளர் திரு N. வாகீசன் தம்பதியினர்



அதிபரது பாராட்டு விழாவில் சிரேஷ்ட முகாமையாளர் திரு V.N. சிறீதரன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர் தின நிகழ்வில்
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சண்முகசர்மா அவர்களுடன்



பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு
பிரதம அதிதியாக சென்றமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவர் தலைவர் தின விழாவில்
பாரளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் அவர்களுடன்



வெள்ளவத்தை கொமஷல் வங்கிக் கிளையின் அனுசரணையுடன்
எமது பாடசாலைக் கணினிக் கூடத் திறப்பு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அரசியலின் அரசியல்

முனைவர் சி. சிவசேகரம்

## 1. அரசியலில் அடையாளம்

அரசியல் எப்போதும் அடையாளஞ் சார்ந்தது தான். அரசியற் களத்தில் உள்ள அடையாளம் ஒவ்வொன்றும், நேரடியாகவோ மறைமுகமாகவோ வேறுபடும் அளவுகளில் அரசியலிற் பங்காற்றுகிறது. சமூக ஏற்றத்தாழ்வுகளும் சுரண்டலும் ஒடுக்குமுறையும் எந்தெந்த அடையாளங்களின் பேரில் நிகழுகின்றனவோ அந்தந்த அடையாளங்களின் பேரில் மோதலும் பகைமையான அரசியலும் இருப்பது இயல்பானது. எனினும் சில அடையாளங் களும் அவை சார்ந்த முரண்பாடுகளும் அரசியலில் ஆதிக்கஞ் செலுத்துகின்றன.

எல்லா வகையான அடையாளங்களும் அடையாளப்படுத்தல்களும் குறிப்பிட்ட கால, இடச் சூழல்களிலேயே முக்கியம் பெறுகின்றன. அதைவிட, அடையாளப்படுத்தல் களின் தோற்றமும் விருத்தியும், அடையாளங்களைச் சார்ந்த சமூக நலன்களாலேயே முடிவாகின்றன. சமூக அடையாளங்களில் நிரந்தரமானதும் நீக்க இயலாததும் அடிப்படை யானதுமான அடையாளம் பால் வேறுபாடு சார்ந்தது. பால் அடையாளஞ் சார்ந்த சில விளிம்பு நிலை அடையாளங்கள், சமூக நிலை சார்ந்து வேறுபடும் அளவுகளில் முக்கியம் பெற்றாலும், ஆண்-பெண் என்ற வேறுபாடே சமூக இருப்பிற்கு அடிப்படையானது என நாம் அறிவோம். அறியப்பட்ட வரலாற்றிற் பெண்கள் மீதான ஒடுக்குமுறையும் சுரண்டலும் நீண்டகாலமாக இருந்து வந்துள்ளன. மார்க்சியத்தின் எழுச்சியின் பின்பே, அம் முரண் பாட்டின் வரலாற்றுத் தோற்றுவாய் சரிவர அடையாளங்காணப்பட்டது. அதன் பின்பே பெண்ணுரிமைக்கான குரல்கள் பல்வேறு தளங்களில் எழுந்தன. எனினும், கடந்த அரை நூற்றாண்டில், அதன் முக்கியப்படுத்தலில், சமூக நீதியைத் தவிர்ந்த நோக்கங்களும் குறுக்கிட்டுள்ளன. இவ் விடயம் ஆழச் சிந்தித்துப் பேசப்படவேண்டியதாயினும், இக் கட்டுரையில் அதை விரிவுபடுத்த இயலாதுள்ளது.

சமூகத்தின் இருப்பு அதன் உற்பத்தியைச் சார்ந்தே அமைகிறது. உற்பத்தி முறைகளும் உற்பத்தி உறவுகளுமே ஒரு சமூகத்தின் தன்மையைத் தீர்மானிக்கும் அடிப்படைகள். அதற்கும் மேலாக, உற்பத்தி முறைகளதும் உறவுகளதும் வரலாற்று விருத்திப் போக்கிற் சமூக அமைப்பில் அவை ஏற்படுத்திய மாற்றங்களின் பாதிப்பு, உற்பத்தி முறைகளும் உறவுகளும் மாறியதன் பின்பும், நெடுங்காலத்திற்குத் தொடருகின்றது. இவை யாவும், மனித இனத்தின் அடையாளங்களைப் பல பரிமாணங் கொண்டனவாகவும் அவற்றின் சிக்கலான கூட்டுத் தொகுதிகளாகவும் மாற்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் எளிதாகவே நாம் அடையாளங்காணக்கூடிய இனம், மொழி, பிரதேசம், மதம், பண்பாடு என்பனவற்றுடன் இந்தியத் துணைக்கண்டத்தின் சாதியையும் எடுத்துக் கொண்டால், இவற்றில் எதுவுமே நிலையானதோ நிரந்தரமானதோ இல்லை எனக் காண்போம். சில அடையாளங்கள் இணைந்து ஒரு பொது அடையாளமாகின்றன. சில பிரிந்து தனித்தனி அடையாளங்களாகின்றன. சிலவற்றைப், பிற அடையாளங்களோ புதிய அடையாளங்களோ மேவி விடுகின்றன. எனினும், தொடர்ச்சியாக மாறி வருகிற மொழி, மதம், பண்பாடு போன்ற அடையாளங்களினூடு ஒரு வரலாற்று இழையையோ ஒரு பொதுச் சிந்தனை அடிப்படையையோ அல்லது கற்பனையான ஒரு பண்பையோ வைத்து அவற்றில் ஒவ்வொன்றுக்கும் ஒரு நீண்ட வரலாற்றையும் மாறா இயல்பையும் நிரந்தரத் தன்மையும் வழங்குகிற போக்கையும் நாம் காண்கிறோம்.

மேற்கூறிய போக்கின் ஒரு பகுதி ஒரு சமூகத்தினதோ சமூகக் குழுமத்தினதோ இருப்புப் பற்றியது. ஒரு சமூகமோ அதன் ஒரு பகுதியோ தன்னை எவ்வாறு அடையாளப் படுத்துகின்றது என்பது அதன் இருப்புச் சார்ந்த முக்கியமான ஒரு கேள்வியாகிறது. அதன் இருப்பு மிரட்டலுக்குள்ளாகும் போது அடையாளப்படுத்தல் மேலும் முக்கியமாகிறது. அவ்வாறே, ஒரு சமூகத்தில் உள்ள ஒரு ஆதிக்கப் பிரிவு, தனது நலன்களைப் பேணவும் அச் சமூகத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டவும், அச் சமூகத்தின் அடையாளப் படுத்தலை ஒரு கருவியாக்குகிறது. சமூகங்கட்குள்ளும் சமூகங்கட்கிடையிலும் அடையாளஞ் சார்ந்த முரண்பாடுகள் கூராகி மோதல்களாவதும் போர்களாவதும், பெரும்பாலும், முற்கூறிய அடையாளப்படுத்தல்களின் தேவையும் நோக்கமும் சார்ந்தே எனலாம்.

நிதானமாகச் சிந்தித்தால், மேலாதிக்கமும் சுரண்டலும் அடக்குமுறையும் ஒடுக்கலும் இல்லாதபோது, சமூகங்கட்கிடையிலான உறவுகளிற் பகைமைக்குத் தேவையில்லை என விளங்கும். பொதுவாகச், சமூகங்கட்கிடையிலான உறவுகளிற் கடும் பகை இருப்பதில்லை. வரலாற்றில் இருந்துவந்த பகைமைகள் மறக்கப்பட்டும் உள்ளன. மாறாகக், கடந்த காலத்திலிருந்து வரலாற்றுப் பகைமையை உயிர்ப்பித்தும் புனைந்தும் உருவாக்குவதையும் நாம் காண முடியும். இதற்கான சமகாலச் சான்றுகளாக, இந்தியாவின் இந்துத்துவத்தையும் இலங்கையின் சிங்கள பௌத்தத்தையும் கூறலாம்.

இவ்வாறான அடையாளப்படுத்தல்கள் யாருடைய நலன் சார்ந்தவை என்ற கேள்வி இங்கு எழுகிறது. ஒவ்வொரு அடையாளப்படுத்தலும் ஒட்டுமொத்தமாக ஒரு சமூகத்தைக் குறிப்பதாகவே முன்வைக்கப்படினும், அது அச் சமூகத்தின் பொதுநலனைக் குறிப்பதில்லை. மாறாக, ஒரு சிறு பிரிவினரது நலன்களையே அது முதன்மைப்படுத்துகிறது. எஞ்சியோரிற் கணிசமானோர் அது தமது நலன் சார்ந்தது என்று எண்ணும் விதமாகச் சில நலன்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. பெரும்பாலானவர்கட்கு அது தமது இருப்பிற்கும் பாது காப்பிற்கும் தேவையானது எனுமாறான மயக்கம் ஊட்டப்படுகிறது. சில வேளைகளில், அவர்களது சமூகம் பற்றிய உயர்வான எண்ணங்கள் புனையப்பட்டு, அம் மேம்பாட்டைத் தொடர்ந்து பேணும் தேவை வலியுறுத்தப்படுகிறது.

மேற்கூறியதை எளிதில் விளங்க, முதலில் நிறவாதத்தை எடுத்துக் கொள்ளலாம். வட அமெரிக்காவில் அடிமை வியாபாரத்தில் தனது வேர்களைக் கொண்டிருந்த நிறவாதம், (இன்றைய ஐக்கிய அமெரிக்க அரசுகள் எனப்படும் அமெரிக்காவில்) ஒரு கறுப்புச் சனாதிபதி ஆட்சிக்கு வந்த பின்பும் குறிப்பிடத்தக்க வலிமையுடன் உள்ளது. தென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாபிரிக்காவில், நிறவாத அடிப்படையில் அப்பட்டமான கொடுமையை நியதியாக்கிய ஒரு ஆட்சிமுறை, ஒரு விடுதலைப் போராட்டத்தின் விளைவாக முடிவுக்கு வந்தது. ஆயினும் நிறவாதம் தொடர்கிறது. இவ்வாறான சிந்தனைகள், வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு வடிவங்களை எடுக்கின்றன. ஜேர்மன் /பாசிசம் யூதர்களை மட்டுமே இலக்கு வைக்கவில்லை என்பதும் நிறவாதம் அதன் சித்தாந்த அடிப்படை என்பதும், நாம் மறக்கக் கூடாத உண்மைகள்.

கொலனியத்தின் விருத்தியில் நிறவாதம் முக்கிய பங்களித்தது. காலப்போக்கில் கொலனியம் நவகொலனியமாக மாறிய பின்பும், தேசிய நலன் என்ற பேரில் நிறவாதம் செயற்பட்டு வந்துள்ளது.

இனம், தேசம் எனப் பலவாறான அடிப்படைகளில் அமைந்த அடையாள அரசியற் செயற்பாடுகளின் மூலம் வட, தென் அமெரிக்கக் கண்டங்களில் முழுச் சமூகங்கள் இல்லாதொழிந்துள்ளன. பிறவற்றின் பண்பாட்டு அடையாளங்கள் சிதைந்து பொருளாதார அடிப்படை தகர்ந்து சமூகங்கள் சீரழிந்துள்ளன. ஆபிரிக்காவின் தென் பகுதியிற் சமூகங்கள் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டன. அவுஸ்திரேலியாவில் நடந்தவை அதினுங் கொடியவை.

ஆசிய வரலாறும், இவ் விடயத்திற், பெருமைக்குரியதல்ல. வரலாற்றுப் பெருமை கோரும் ஒவ்வொரு பேரரசின் எழுச்சியின் போதும் பழங்குடிகளும் சிறுபான்மைச் சமூகங்களும் பலவாறான அழிவுகளைச் சந்தித்துள்ளன. அப் போக்கு முதலாளிய வளர்ச்சியுடன் மேலுந் தீவிரமாகி எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் சந்தித்த கதைகளை நாம் சிறிதேனும் அறிவோம்.

இவ்வாறு, அடையாளங்களைச் சமூக மோதலுக்கு உள்ளாக்கும் அரசியல் யாருடைய நலன் சார்ந்தது என்பதை, வர்க்கமும் வர்க்கப் போராட்டமும் பற்றி அறிந்தோர் எளிதாக அடையாளங் காண்பர். எனினும், அதை மீள நினைவூட்டுவதிற் கேடில்லை. ஒரு சமூகத்தில் ஆதிக்கத்திலிருக்கிற ஒரு சமூகப் பிரிவு, தனது நலன்களை முழுச் சமுதாயத்தினது அல்லது (பொதுவாக ஒரு பெரும்பான்மையைக் கொண்ட) அதன் ஒரு பகுதிக்குரிய நலன்களாகக் காட்டி, அந்த நலன்களை முன்னெடுப்பதன் பேரிற், பிற சமூகங்கள் மீதான தனது ஒடுக்குமுறையையும் ஆக்கிரமிப்பையும் நியாயப்படுத்துகிறது. இத்தகைய போக்கு வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு வடிவங்களைக் கொண்டாலும் பொதுவான ஒரு பண்பை நாம் அடையாளங் காணலாம்.

ஒரு சமூகத்தின் உற்பத்தி முறையையும் உற்பத்தி உறவுகளையும் (அதாவது அதனுடைய இருப்பை முடிவு செய்கிற விடயங்களைச்) சார்ந்த முரண்பாடுகளின் முக்கியத்துவம் இரண்டாம் பட்சமானதாகவும் சில சமயங்களிற் பேசக் கூடாததாகவும் மாற்றப்படுகிறது. வர்க்கமும் வர்க்கப் போராட்டமும் இப்படிப் பின்தள்ளப்படுவது தற்செயலானதல்ல.

### 2. அடையாளமும் ஆதிக்க அரசியலும்

கொலனிய யுகத்தில், ஒரு சமூகத்தின் மீது ஆதிக்கஞ் செலுத்துகிற, அச் சமூகத்திற்குப் புறம்பான, ஒரு சக்தியோ மேலாதிக்கக் கும்பலோ தன்னை ஒரு நேரடியான ஆதிக்கச் சக்தியாகக் காட்டிக்கொண்டது. இன்று அந்த நிலை இல்லை. நவகொலனியம் தன்னை நேரடியாக அடையாளங்காட்டாது. தன்னை ஆதிக்க, சுரண்டல் சக்தியாகக் காட்டுவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது இயலுமானளவு தவிர்க்கிறது. அதுபோன்று, ஒரு சமுதாயத்தின் ஆதிக்க வர்க்கமோ வர்க்கங்களோ தம்மை அவ்வாறு அடையாளங் காட்டுவதைத் தவிர்க்கின்றன.

ஒடுக்குமுறையாளர்களும் சுரண்டற்காரர்களும் தங்களால் ஒடுக்கப்படும் பெரும் பான்மைக்கு எதிராகத் தம்மை நேரடியாக நிறுத்திக் கொள்வதில்லை. கொலனிய யுகத்தில், நேரடியான மோதலைத் தவிர்க்க உள்ளூர் ஆதிக்கச் சக்திகளுடனான கூட்டணிக்கும் மேலாக, ஒரு நடுத்தர வர்க்கம் உருவாக்கப்பட்டது. ஒடுக்கப்பட்ட பெரும்பான்மையினின்று அச் சமூகப் பிரிவு தன்னை வேறுபடுத்துமாறு கொலனிய நிருவாகம் கவனித்துக் கொண்டது. வேறு சூழ்நிலைகளில், அது, நாட்டின் ஒரு தேசிய இனப் பிரிவிற்கு அல்லது அதினின்று பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பகுதிக்குச் சலுகைகளை வழங்கி ஒரு நடுத்தர வர்க்கத்தை உருவாக்கியுள்ளது. ஏலவே அந்த நாட்டில் இருந்து வந்த ஏற்றத்தாழ்வுகள் இங்கு பயன்படுகின்றன. கிழக்கு ஆபிரிக்காவிற் போன்று, இன்னொரு நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு சமூகமும் இத்தகைய நடுத்தர வர்க்கமாக அமைந்துள்ளது.

சுரண்டி ஒடுக்கும் சிறுபான்மை தன்னைத் தற்காத்துக் கொள்ளப் படைவலிமையையும் அடக்குமுறையையும் பயன்படுத்தலாம். அது இயலாதபோது, அடையாள அரசியல் மூலம் அது தன்னைப் பலப்படுத்த முயலுகிறது. தான் சார்ந்த ஒரு பெரும்பான்மைச் சமூகத்தின் அடையாளத்துக்குள் அது தனது சுரண்டும் வர்க்க அடையாளத்தைத் மறைக் கிறது. அத்துடன், அந்த வர்க்க அடையாள மறைப்பு வெளிப்படாமல், சமூகத்தில் உள்ள சிறுபான்மை அடையாளங்களில் ஒன்றையோ பலவற்றையோ பெரும்பான்மைக்கு எதிரான மிரட்டலாகவும் நெடுங்காலப் பகையாகவுங் காட்டுகிறது. இவ்வாறு, பிரதான முரண்பாடாக அமையக்கூடிய வர்க்க முரண்பாட்டிலிருந்து கவனத்தைத் திசைதிருப்ப அதற்து இயலுமாகிறது.

அதே வேளை, தன்னோடு அடையாளப்படுத்த இயலாத சமூகப் பிரிவினரைப் பிளவுபடுத்தும் போக்கையும் நாம் காண முடியும். இதற்கு வசதியாக நீண்ட வரலாற்றை யுடைய இன, மத, மொழி வேறுபாடுகள் போன்றவை அமைகின்றன. இத்தகைய அடையாள வேறுபாடுகள் உற்பத்தி உறவுகள் சார்ந்த ஏற்றத் தாழ்வுகளாகவும் சொத்து டமையும் பொருள்வளமும் சார்ந்த வேறுபாடுகளாகவும் அமையும்போது, அவை எளிதாகவே அச் சமூகப் பிரிவினருடைய ஒற்றுமைக்குத் தடையாகின்றன.

மேற்கூறியவாறான ஒரு அணுகுமுறையைக் இந்தியப் பார்ப்பனியம் கையாண்டுள்ள விதத்தைக் கவனித்தால், ஆளும் அதிகார வர்க்கம் பயன்படுத்தம் ஐக்கிய முன்னணித் தந்திரோபாயம் சிறிது விளங்கும். தொடக்கத்தில், இந்து என்கிற அடையாளத்தின் மூலம் பார்ப்பன மேட்டுக்குடிகளின் தலைமையின் கீழும் பின்பு கூட்டாளிகளாகவும் உயர் சாதியினர் சேர்க்கப்பட்டனர். பின்பு, தாழ்த்தப்பட்ட சாதியினர் முஸ்லிம்களுடன் கூட்டணி அமைக்காதவாறு பல்வேறு தளங்களில் (தமது சாதி அடையாளத்தை இழக்காமலும் அதன் தாழ்நிலையைக் கண்டுணராத விதமாகவும்) அவர்களும் இந்து அடையாளத்துட் சேர்க்கப் பட்டனர். முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் எதிரிகளாக்கி இலக்கு வைப்பதற்கு இந்த உட்படுத்தல் அரசியல் பயன்பட்டது. குஜராத் கலவரத்தின் போது பழங்குடியினர் கூட இந்த மதவெறி இந்துத்துவ அடையாளத்தினுள் இணைக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலித்துக்கள் எனப்படுவோரை இந்து அடையாளத்திற்குட் கொண்டுவரும் ஊக்கமான சமகால முயற்சி, சாதியத்தையும் தீண்டாமையையும் ஒழிக்கும் நோக்கம் இல்லாமலே மேற்கொள்ளப் படுகிறது.

இலங்கையில் சிங்களப் பேரினவாதம் தொடக்கத்திலிருந்தே சிங்கள பௌத்தத்தைத் தனது அடிப்படையாக்கிக் கொண்டது. தமது சுய முன்னேற்றத்திற்காகப் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ அடையாளத்தை ஏற்ற மேட்டுக்குடிகள், அரசியல் லாபத்திற்காகப் புத்த மதத் திற்கு மீளத் தயங்கவில்லை. சிங்கள பௌத்த அடையாளத்தை விடச் சாதி அடையாளம் முக்கியமாயிருந்த ஒரு காலமும் இருந்தது. சர்வசன வாக்குரிமை இல்லாத சூழலில், மேட்டுக்குடி அரசியலில், ஆதிக்க வர்க்கங்களிடையே சாதி வேறுபாடு முக்கியமானதாக இருந்தது. ஆனால் நிலவுடைமை சார்ந்த கொவிகம சாதியின் சமூக ஆதிக்கம் குறையத் தொடங்கிய சூழலில், நிலவுடைமை-முதலாளிய வர்க்கத்தினரிடையே சமரசம் ஏற்படுகிறது. மத அடையாளம் குறுகிய காலத்திற்கு அடக்கி வாசிக்கப்பட்டு மொழி அடையாளம் முதன்மைப் படுத்தப்பட்டாலும், இப்போது சிங்கள பௌத்த ஆதிக்கப் போக்கு வலுவாக உள்ளது. எனினும், தமிழ், முஸ்லீம், கிறிஸ்தவப் பெருமுதலாளிகட்கும் சிங்கள பௌத்தப் பெருமுதலாளிகட்கும் உள்ள உறவு சுமுகமாகவே உள்ளது.

அடையாள அரசியல் என்பது, ஒரு சமுதாயத்தின் விருத்திப்போக்கில் அதனுள் அமைகின்ற பல்வேறு அடையாளங்களை வலியுறுத்தி முதன்மைப் படுத்துவதையும் இன்னொருபுறம், காலத்துக் காலம், பொது அடையாளங்களைத் தேடுவதையும் பற்றிய தாகும்.

பௌத்த அடையாளத்தை வற்புறுத்துவதிற் கருத்து வேறுபாடுகளுடன், சிங்கள இன அடையாளம் வலுப்பட்ட சூழலில், தமிழ் இன அடையாளம் அதன் தலைமையில் இருந்த ஆதிக்கச் சக்திகளான யாழ்ப்பாணச் சைவ வேளாளச் சாதியைச் சார்ந்த ஒரு மேட்டுக்குடிச் சிறுபான்மையின் நலன்களையொட்டி உருவானது. அந்த நலனை வலியுறுத்துவதற்குத் தமிழ்ச் சமூகத்திலிருந்து சவால் எழாத நிலையில், அச் சிறுபான்மை, தமிழ் அடையாளம் ஒன்றை வலியுறுத்துவதையும் வளர்த்தெடுப்பதையும் விடுத்து, யாழ்ப்பாணச் சைவ வேளாள ஆதிக்கத்தை முன்னிறுத்தி வந்தது. 1948ம் ஆண்டு தமிழரசுக் கட்சி தோன்றிய போதே, தமிழ்ப் பேசும் இனம் என்ற அடையாளம் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதற்குரிய சமூகச் சிந்தனையோ அரசியல் - சமூக அடிப்படையிலான வரலாற்று வழிப்பட்ட விருத்தியோ இல்லாததால், அது தமிழ்ப் பேசும் மக்களை ஒற்றுபடுத்தத் தவறியதுடன் வீண் பகைமைகட்கும் வழி வகுத்தது. ஒரு அதிகார வர்க்கத்தின் குறுகியகால நலன்களே சமூக அடையாளப்படுத்தலை வழிநடத்தின என்பதை நாம் இங்கு கவனிக்க வேணடும். நீண்டகாலமாகத் தமிழ் மேட்டுக்குடிகள் தமிழரை ஒரு ஒடுக்கப்பட்ட சிறு பான்மையாகக் காணத் தவறியமை இவ்விடத்து முக்கியமான ஒரு விடயமாகும். சிங்கள மக்களிடையே அரசியலில் சாதிய பிரதேச வேறுபாடுகள் உள்ளன. எனினும் அரசியலில் அவற்றின் ஆதிக்கம் குறைவாக இருந்தமைக்குத், தமிழரிடையே இருந்தது போல எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திய தனியொரு மேட்டுக்குடிப் பிரிவு இல்லாமை ஒரு முக்கியமான காரணமாகும்.

வெறுமனே இன, மத அடிப்படையிலான பெரும்பான்மை அடையாளம் ஒன்றை நிறுவுவதில் மட்டும் ஆளும் வர்க்கம் தங்கியிருக்க இயலாது. நாடு அல்லது தேசம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளமும் பயன்படுகிறது. நாட்டுக்கு எதிரான ஒரு பொது அந்நிய எதிரி இருப்பது வசதியானது. சீன, பாக்கிஸ்தான் மிரட்டல்கள் மட்டுமன்றி, நேபாளம், பங்ளாதேஷ், இலங்கை உட்பட்ட அண்டை நாடுகளையும் இந்திய ஆளும் வர்க்கம் இந்தியப் பாது காப்பிற்கு மிரட்டலாகக் காட்டலாம். இவை எவ்வாறு வர்க்க நலன்களைப் பேண உதவுகின்றன என அறிய வேண்டின், தீவிர தமிழ் இன உணர்வு தட்டியெழுப்பப்படும் தமிழ் நாட்டில், ஒரு காலத்தில் வட இந்தியரைப் பகைவராகவே கண்ட அந்த மாநிலத்தில், இப்போது சீன, பாக்கிஸ்தான் விரோத இந்திய தேசப்பற்று ஒருபுறமும் மலையாளிகட்கும் தெலுங்கர்கட்கும் கன்னடர்கட்கும் எதிரான உணர்வுகள் மறுபுறமும் தீவிரமாக முன் னெடுக்கப்படுகின்றன. இவை எந்த வர்க்க நலன்களைச் சார்ந்த முன்னெடுப்புக்கள் என்பது கவனிக்கத் தக்கது. இவற்றின் நோக்கம் வர்க்கச் சுரண்டலிலிருந்து கவனத்தைத் திசைதிருப்புவதே என்பதை எளிதாக அடையாளங் காணலாம். ஏனெனில் அவற்றை ஊக்குவிப் போர் அமெரிக்காவுடனான நட்பை வரவேற்கின்றவர்களாவர்.

### 3. அடையாளமும் விடுதலை அரசியலும்

ஆளும் அதிகார வர்க்கம் தனது நலன்களைக் காக்கவும் தனது சுரண்டும் வர்க்க, ஒடுக்கு முறை அடையாளங்களை மறைக்கவும் தனக்கு வசதியான ஒரு இன, மத, மொழி அடையாளத்தையோ அடையாளங்களின் சேர்க்கையையோ பயன்படுத்தும் போது, ஆளப்படுகிற வர்க்கங்கள் அதை எதிர் கொள்ளுவது எவ்வாறு என்ற கேள்வி எழுகிறது.

எந்தெந்த அடிப்படைகளிற் சுரண்டலும் ஒடுக்குமுறையும் நடக்கின்றனவோ அவை சார்ந்து சுரண்டி ஒடுக்கப்படுவோரிடையே ஒற்றுமையை ஏற்படுத்த இயலும். ஆனால் அது எப்போதும் இயலுவ தில்லை. எளிதாக நிகழுவதுமில்லை. ஒடுக்குமுறையாளர்கள் ஒடுக்கப்பட்ட மக்களிடையே உள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்துகிறார்கள். மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் விதமாக அடையாள வேறுபாடுகளை வலியுறுத்தவும் புதிய வேறுபாடுகளைப் புகுத்தவும் அவர்கட்கு இயலுகிறது. எனவே, ஒடுக்கப்பட்ட சமூகங்கள் ஒடுக்கிற சமூகம் பயன்படுத்தும் அடையாள அரசியலை எதிர்கொள்ள வல்லதொரு அடையாள அரசியற் தந்திரோபாயத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

கொலனியத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் அந்நிய ஆக்கிரமிப்புக்கும் எதிரான போராட்டங்களில், முக்கியமாக இடதுசாரிச் சிந்தனை வழிகாட்டிய சூழல்களில், ஒரு பொது எதிரி எனும் அடையாளத்திற்கு எதிராக வேறுபட்ட அடையாளங்களை முன்னிறுத்தியே ஐக்கிய முன்னணித் தந்திரம் வென்றுள்ளது.

அடையாளங்களிடையிலான முரண்பாடுகளில் நட்பானவை எவை பகைமையானவை எவை என விளங்கும்போதே எதிரியைத் தனிமைப்படுத்தவும் ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றுபடுத்தவும் இயலுமாகிறது. எனவே, இந்த மாற்று அடையாள அரசியல், ஒரே நேரத்தில், வேறுபட்ட அடையாளங்களை அங்கீகரிப்பதாயும் அவற்றிடையே பொதுவான பண்புகளை வலியுறுத்துவதாயும் அமைய வேண்டியுள்ளது.

குறுகியநோக்குடைய அடையாளப்படுத்தல்கள் தோல்விக்கும் அழிவுக்கும் இட்டுச் சென்றுள்ளமைக்குச் சமகால அரசியலில் நம்மை அண்டிய சூழல்களில் இரண்டு உதாரணங் களை நோக்கலாம். ஒன்று ஈழத்தின் தமிழ்த் தேசியவாத அரசியல். அது, முதலில் தமிழர் என்ற தெளிவீனமான அடையாளத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டு மேட்டுக் குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்களை முன்வைத்தது. பின்பு தமிழ்ப்பேசும் மக்கள் என்ற அடையாளத்தை முன் வைத்தது. பின்பு தமிழீழம், தமிழ்த் தேசம் எனும் அடையாளங்கள் முனைப்புப் பெற்றன. ஆயினும், எந் நிலையிலும் அதன் செயற்பாடு வட, கீழ் மாகாணத் தமிழர் என்ற எல்லையைத் தாண்டியதில்லை. அதே வேளை, முஸ்லிம்களதும் மலையகத் தமிழரதும் தனித்துவத்தையோ தேசிய இனங்களாக அவற்றின் விருத்தியையோ அது ஏற்கவில்லை. இன்று பிரதேசவாதத்திற்கு முகங்கொடுக்க இயலாமல் அது திணறுகிறது. ஒரு பொதுவான அடிப்படையைக் கட்டியெழுப்பச் சமூக அடையாளங்களை மூடிமறைப்பதும் அக முரண்பாடுகளை மறுப்பதும் தேவையற்றன. அத்துடன் அது கேடாகவும் அமையலாம் என்பதற்குத் தமிழ்த் தேசியவாதத்தின் இன்றைய அவலம் ஒரு நல்ல உதாரணம்.

இரண்டாவதாக, தலித்தியம் என்ற பேரில் முன்னெடுக்கப்பட்ட அரசியல், சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றுதிரட்டத் தவறிவிட்டது. அது மட்டுமன்றி, ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஒவ்வொரு சாதியினதும் அடிப்படையிலான தனித்தனிக் கட்சிகளை உருவாக்கத் தலித்தியம் உதவியதேயொழியச் சாதி ஒடுக்குமுறைக்கெதிரான பொதுவான போராட்ட அணியை உருவாக்கத் தவறிவிட்டது. அத்துடன், இன்றைய தலித்திய அரசியல், தலித்துக்களிடையிலிருந்து உருவான புதிய மேட்டுக்குடிகளின் வர்க்க நலன்களைப் பேணத், தலித்துக்களை வாக்கு வங்கிகளாகப் பயன்படுத்துகிற ஒரு போக்கையும் கொண்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தல் அரசியல், இந்துத்துவ மேட்டுக்குடிகளுடனான வர்க்க சமரசத்திற்கும் வழி செய்துள்ளதைக் கடந்த பத்தாண்டுகளிற் காண முடிந்தது. தொடரான பல போராட்டங்களின் மூலம் தலித்துக்களின் சமூக உணர்வு நிலை வளர்ந்திருந்தாலும் சாதிய வர்க்கச் சுரண்டற் சமூக அமைப்பைத் தகர்க்கிற நோக்கில் அதை நெறிப்படுத்த இயலாத விதமாகவே தலித்தியச் சிந்தனை பயன்பட்டுள்ளது.

இங்கெல்லாம் பொதுமைப்பட்ட ஒரு அடையாளம் தன் பொதுமையைப் பேணத் தடையாயுள்ளது என்ன என்ற கேள்வி எழுகிறது. வர்க்க அடையாளம் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டு வந்ததை நாம் கவனித்தல், அதற்கான விடை கிடைக்கும். வர்க்க அடையாளம் புறக்கணிக்கப்பட்டதுடன், அதை முன்னெடுப்பது தலித் அடையாளத்தை மறுத்துத் தலித் ஒற்றுமையைக் குலைக்கும் என்று பின்னவீனத்துவத்தின் துணையோடு தமிழகத் தலித்தியவாதிகள் வற்புறுத்தியதையும் நாம் அறிவோம்.

தமிழ்த் தேசிய அரசியலாயினும் தலித்திய அரசியலாயினும், ஒவ்வொன்றும் தனது அடையாளப்படுத்தலுக்குப் புறம்பான அடையாளங்களையும் பொது அடையாளங் களையும் மறுத்ததன் மூலம், தன்னைப் பலவீனப்படுத்தியதே ஒழியப் பலப்படுத்தவில்லை.

மறுபுறம், வரட்டுத்தனமான முறையில் வர்க்க அடையாளத்தை முதன்மைப்படுத்திப் பிற அடையாங்களின் முக்கியத்துவத்தை மறுக்கிற போக்கும் உள்ளது. சந்தர்ப்பவாத இடதுசாரிகளை இங்கு நான் கருதவில்லை. மாக்சியத் தூய்மை என்ற ஒன்றின் பேரில் வர்க்க முரண்பாடல்லாத பிறவற்றின் முக்கியத்தை ஏற்க மறுக்கிற போக்குக்களையே இங்கு கருத்துகிறேன். இவ்வாறான போக்குக்களின் மூலம் தொழிலாளி வர்க்கத்தையும் ஒற்றுமைப்படுத்த இயலாது. எனவே சுரண்டப்படும் வர்க்கங்களைத் தொழிலாளி வர்க்கத் தலைமையில் அணிதிரட்டுவது என்பது வெறுங் கனவாகவே அமையும்.

வர்க்க சமுதாயத்தில் வர்க்க அடையாளம் அடிப்படையானது. சமுதாய விருத்திப் போக்கில் வர்க்கங்களின் தன்மையும் அமைப்பும் மாறிவந்தாலும், உழைப்போருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பை உறுஞ்சுவோருக்கும் இடையிலான பிளவு மேலும் ஆழப்பட்டுள்ளதே ஒழிய இல்லாது போகவில்லை. எனவே அம் முரண்பாட்டைப் புறக்கணித்து எச் சமூக அநீதியையும் போரிட்டு வெல்ல இயலாது.

குறிப்பிட்ட சூழல்களில், இனம், மொழி, மதம் போன்ற முரண்பாடுகள் மேலோங்கலாம். சாதி, பிரதேசம் போன்ற அடிப்படைகளிலான முரண்பாடுகள் அவசரமான நடவடிக்கை களை வேண்டலாம். பால் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகட்கு எதிரான செயற்பாடு முக்கியமாகலாம். இவற்றுள் எந்தவொரு முரண்பாடும் பிறவற்றைவிடச் சமூக முக்கிய முடையதாயும் அதனைக் கையாளாமல் பிற முரண்பாடுகளைக் கையாள இயலாதபடியும் அமையுமானால், அந்த முரண்பாட்டைப் பிரதான முரண்பாடாகவோ உடனடியான முரண்பாடாகவோ கொண்டு செயற்படும் தேவை ஏற்படுகிறது.

வர்க்க முரண்பாட்டை அடிப்படையானதய்க் கொள்ளும் மாக்சிய லெனினியர்கள் தேசிய விடுதலைப் போராட்டங்களையும் நிறவாத எதிர்ப்புப் போராட்டங்களையும் தேசிய இனங்களின் விடுதலைக்கான போராட்டங்களையும் சாதியத்திற்கு எதிரான போராட்டங்களையும் பல நாடுகளில் முன்னெடுத்துள்ளனர், அல்லது அவற்றுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். ஆணாதிக்கத்திற்கெதிரான மாக்சியர்களின் குரல் எப்போதுமே வலுவாக இருந்துள்ளது.

அது எப்படி இயலுமாகிறது? தேசியவாதிகளோ தலித்தியவாதிகளோ முதலாளியப் பெண்ணியவாதிகளோ குறிப்பான ஒரு வகைக்குரிய ஒடுக்குமுறைகள் தவிர்ந்த பிற வற்றைக் கண்டுகொள்ள ஏன் மறுக்கிறார்கள்? சில ஒடுக்குமுறைகளை மட்டுமே ஏன் ஏற்கிறார்கள்? இங்கு தான் அடையாளஞ்சார்ந்த உலக நோக்கின் பங்கும் பின்னவீனத்துவத் தின் மூலம் பொதுமைப்படுத்தலை மறுக்கும் நோக்கமும் புலனாகின்றன.

தனியொரு அடையாளஞ்சார்ந்து சமூக முரண்பாடுகளை நோக்குவது அந்த அடையாளத்திற்கு உட்பட்ட அனைவரதும் நலன் சார்ந்ததல்ல என்பதையே இன, மத, சாதி அடையாளங்களின் அரசியலும் முதலாளியப் பெண்ணிய அரசியலும் உணர்த்தி யுள்ளன. அடையாளங்களைத் தனித்தனியாகவோ சேர்த்தோ வலியுறுத்துகிற சக்திகள் அந்த அடையாளங்கட்கு அப்பாலான அடையாளம் ஒன்றை மனதிற்கொண்டே அவ்வாறு வலியுறுத்தக் கூடும் என்பதை நாம் மறக்காலாது. அதாவது, ஈற்றில், வர்க்க நலன்களே முதன்மைப்படுகின்றன என்பது தான் உண்மை. அவ் வர்க்க நலன்கள் பெருமளவும் ஒடுக்கும் வர்க்கம் ஒன்றினது நலன்களாக இருந்து வந்துள்ளதையும் நாம் காணுகிறோம்.

தொழிலாளி வர்க்க அரசியல் தனியே தொழிலாளர் நலனை மட்டும் முதன்மைப்படுத்தி பிற சமூக ஒடுக்குமுறைகளைப் புறக்கணிக்கும் என்றால் அது தொழிற்சங்கவாத அரசியல் போற் சீரழிய நேரும். தொழிலாளி வர்க்கத்தை மாக்சியம் முக்கியப்படுத்துவது, அவ் வர்க்கத்தால் மட்டுமே முழுச் சமூகத்தையும் விடுவிக்க இயலும் என்பதனாலாகும். எனவே தான், மாக்சியம் தனது விருத்திப் போக்கில் கொலனிய விரோத, ஏகாதிபத்திய விரோதப் போராட்டங்களை ஆதரித்தது. மாக்சியர்கள் அவற்றிற் பங்குபற்றினர். தலைமை தாங்கிப் போராடியும் உள்ளனர். இடதுசாரிச் செல்வாக்குக் கொண்ட தேசிய விடுதலைப் போராட்டங்கள், பிற சமூக ஒடுக்குமுறைகளைக் களையும் வழிகளையும் வகுத்துள்ளன.

அடையாள அரசியல் என்பது தெளிவான அரசியல் அடிப்படையில் அமையாதபோது, அது தோல்விக்கும் ஆதிக்க வர்க்கங்களை வலுப்படுத்துவதற்கும் உதவுவதைக் காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக, அதன் அரசியலின் அடிப்படை தெளிவாயுள்ளபோது, குறிப்பிட்ட அடையாளங் கட்கு அப்பாலும் அது சமூக விடுதலைக்கும் சமூக நீதிக்கும் பங்களிக்கிறது.

அடையாள அரசியல் ஒரு குறிப்பிட்ட சமூக அடையாள நலன்கட்குத் தன்னை வரையறுக்கும் போது தன்னைத் தனிமைப் படுத்துகிறது. அந்த அடையாளத்துக்குரியோர் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உட்படுவதற்கான அடிப்படை முரண்பாடுகளை அது ஆராயும் போது, அதன் அணுகுமுறை வேறுபடுகிறது. அதன் போராட்டம் நீதிக்கான பிற போராட்டங்களுடன் இணைகிறது.

மாக்சிய லெனினியத்தின் சிறப்பு என்னவென்றால், அடையாள அரசியலை அதன் அடையாளச் சிறையினின்று விடுவித்து நீதிக்கான பிற போராட்டங்களுடன் அதை இணைக்க வழிகாட்டும் ஆற்றலை அதுவே வரலாற்றிற் சிறப்பாக வெளிப்படுத்தி யுள்ளமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியவாதம் பற்றி புரிந்து கொள்ளுதல்

## கோட்பாட்டு ரீதியான அறிமுகம்

**ராஜரட்ணம் ருக்ஷான்**

**வருகைதரு விரிவுரையாளர்**
**அரசியல் விஞ்ஞான மற்றும் பொதுக் கொள்கைத் துறை**
**கொழும்புப் பல்கலைக்கழகம்**

'மனிதனொருவனுக்கு மூக்கும் இரு காதுகளும் இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ, அதுபோலவே அவனுக்குத் தேசியத்துவமும் இருக்க வேண்டியது இன்றியமையாதது இவற்றில் ஏதேனுமொன்றில் குறைபாடு ஏற்படுவதென்பது நினைத்துப் பார்க்கக் கூடிய தன்று...... எனினும், சில அனர்த்தங்களின் விளைவாக மத்திரமே இது ஏற்படுவதுடன், இதுவுமேகூட ஒரு வகையான அனர்த்தமாகும்.'

**- ஏர்னஸ்ட் கெல்னர்**

### அறிமுகம்

தேசியவாதமானது நாடொன்றின் மீதான அன்பு என்றே பொதுவாக வரையறுக்கப்பட்டது. எனினும், வரலாற்று ரீதியாக தேசியவாதம் என்பது மிகவும் பரந்துபட்ட அர்த்தத்தினை யுடையதாகும். வரலாற்று நிலையினின்று நோக்குகின்றபோது, தேசியவாதம் என்பது கலாசார அடையாளங்களை பகிர்ந்து கொள்கின்ற ஒரு பொதுப் பண்புக்குட்பட்ட மக்கட் குழுவினரின் நம்பிக்கை என்ற கருத்து தொனிக்கிறது. பொதுப் பண்புகள் எனும்போது, மொழி, மதம், இனத்துவம் போன்ற பல்வேறு அம்சங்கள் அதனுள் அடங்குவதாக விருக்கும். தேசியவாதம் என்பதன் உட்கருத்தானது, சுயாட்சிக் கொள்கையின் அடிப் படையில் நிறுவப்பட்ட அரசுகளே சிறப்பானவை என்ற நம்பிக்கையையும் உள்ளடக்கி யுள்ளது. தேசியவாதம் குறித்த மற்றுமொரு தோற்றப்பாடு என்னவெனில், தன்னிச்சையான சுயாட்சியை அடைந்து கொள்வதற்காக எந்தவொரு தீவிர/ உச்ச நிலைக்கும் செல்லத் தயாராகவிருப்பதாகும். ஒருவருடைய நாட்டின் மீதான அன்பு காரணமாக வரலாற்றில் புரட்சிகள், யுத்தங்கள் மற்றும் இன மோதல்கள் எனப் பல்தரப்பட்ட வடிவங்களில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. தேசியவாதத்தின் பரப்பெல்லையானது, பல்வேறு நாடு களினதும் வரலாற்றினையும் எதிர்காலத்தையும் மாற்றியமைத்துள்ளது. தேசியவாதமானது மக்களை பற்றுறுதிமிக்கவர்களாகவும் ஸ்திரமான தேசமாகவும் ஒருங்கிணைக்கக் கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலுமையைக் கொண்டுள்ள அதேநேரம், நீண்ட கால சமூகக் கிளர்ச்சி மற்றும் அரசியற் கலவரம் என்பவற்றின் மூலம் தேசங்களை வேறு பிரிக்கவும் கூடியதாகும்.

**பின்புலம்**

தேசியவாதம் என்பது ஏனைய பல அரசியல் விஞ்ஞான எண்ணக்கருக்களுடன் ஒப்பிடுகையில் காலத்தால் பிந்திய ஓர் எண்ணக்கருவாகும். இதனை நாம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகவும் சக்தி வாய்ந்த எண்ணக்கருவாக அடையாளப்படுத்த முடியும். 1800களில் எந்தவொரு தேசியவாதக் குழுவும் தமக்கான அரசினைத் தாமே உருவாக்கிக் கொள்ள முடியும் என்ற கருத்து முன்னிலைப் பெறத் தொடங்கியதன் காரணமாக, தேசியவாதம் என்ற எண்ணக்கரு முன்னணிக்கு வரத் தொடங்கியது. இதனுடைய அர்த்தம், தேசியவாதம் என்பது வரலாற்று ரீதியாக காணப்படாத ஓர் எண்ணக்கரு என்பதல்ல. மாறாக, இது மத்திய காலம் முதலே நடைமுறையிலிருந்து வரும் ஓர் எண்ணக்கருவாகும்.

மத்திய காலப்பகுதியிலேயே தேசியவாதம் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றது. ஐரோப்பாவில் தேசியவாதத்தின் தோற்றத்தினை நிலமானிய முறையின் வீழ்ச்சியுடனும் மறுமலர்ச்சியின் ஆரம்பத்துடனும் தொடர்புபடுத்த முடியும். ஐரோப்பாவில் தோன்றிய மறுமலர்ச்சியானது, மத்திய காலத்தில் காணப்பட்ட நிலமானிய அரசுக்கு வெளியே தோன்றிய தேசிய அரசுகளை மீளவடிவமைக்கவும் புதிய அரசியற் கருத்துக்களை வெளிக்கொணரவும் ஊக்குவித்தது.

தேசியவாதத்தின் பரிணாம வளர்ச்சியில் அரசியல் புரட்சிகளின் வகிபாகமும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில், நவீன தேசியவாதத்தின் பிரிநிலைக் கோடாக பிரான்சியப் புரட்சியைக் கருத முடியும். பிரான்சியப் புரட்சிக் காலத்தில் முன்வைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட வதிவிடத்தில் வாழும் ஓர் இனத்தவரின் உறவினர்களால் ஒழுங்கமைந்த தேசியத்துவம் பற்றிய கருத்தினூடாகவே நவீன தேசியவாதம் உருவாகி வளர்ச்சியடைந்தது. இதன்வழி, தேசியவாதம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பிரதேசத்தில் வாழும் மக்கள் தாம் ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உளவியல் ரீதியான எண்ணமாகும். தேசியத்துவம் உருவாகுவதில் பிரதானமாகக் கலாசாரக் காரணிகளே செல்வாக்குச் செலுத்தியுள்ளன. பொதுவான வரலாறு, பொதுவான மூதாதையர், பொதுக் கலாசாரம், பழக்கவழக்கங்கள், மரபுகள், வழக்காறுகள் மற்றும் பொதுவான மொழி போன்ற காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன (Hutchinson & Smith, 1994). இக்காரணிகளின் செல்வாக்கின் மூலம் தேசிய ஒருமைப்பாடு தோன்றும்போது தேசியத்துவம் பற்றிய உணர்வு விருத்தியடைகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வரையப்பட்ட உலக வரைபடம் காட்டும் தேசங்களின் எல்லைக்கோடுகள் தேசியவாத இயக்கங்களின் பெறுபேற்றினால் அடையப் பட்டவையாகும். இவற்றுட் சில மோதல்களினால் பெறப்பட்டவையாகக் காணப்படும் அதேவேளை, சில மோதல்கள் இன்னும் தீர்க்கப்படாமலுள்ளன. எதுஎவ்வாறாயினும், அரசியல் மற்றும் சமூகச் செயன்முறைகளின் புலனாகக் கூடியதும் மறைந்துள்ளதுமான நடைமுறைப் போக்குகளை விளங்கிக் கொள்வதற்கு ஓர் அரசியல் பகுப்பாய்வானது கோட்பாட்டுப் பின்புலத்தினை கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். எனவே, இக்கட்டுரையானது, தேசியவாதம் குறித்த எண்ணக்கரு ரீதியான மற்றும் கோட்பாட்டு ரீதியான ஓர் அறிமுகத்தினை வழங்குவதற்கு எத்தனிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசியவாதம் என்பது யாது?**

தேசியவாதமானது, ஏனைய சமூக விஞ்ஞான எண்ணக்கருக்களைப் போன்றே தெளிவான ஒரு வரைவிலக்கணத்தைக் கொண்ட எண்ணக்கருவல்ல. அது பல்வேறு வழிமுறைகளில் தோற்றம் பெற்றமையின் காரணமாக, அது குறித்த விளக்கங்களும் பல்தரப்பட்டவையாகக் காணப்படுகின்றன. எனினும், கல்வியியல் ரீதியாக ஓர் எண்ணக்கருவைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், அது குறித்து முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களை ஆராய்வது பொருத்தமாக அமையும். அந்தவகையில், தேசியவாதம் குறித்து முன்வைக்கப்பட்டுள்ள மூன்று வரைவிலக்கணங்களை அல்லது விளக்கங்களை நோக்குவதன் மூலம் தேசியவாதம் என்றால் என்னவென்பதை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

ஏர்னஸ்ட் கெல்னர் (Gellner, 1983: 1) தேசியவாதத்தைப் பின்வருமாறு வரைவிலக் கணப்படுத்துகிறார்:

> தேசியவாதம் என்பது அரசியல் மற்றும் தேசிய அலகுகளில் ஒருமித்தத் தன்மையை வலியுறுத்தும் ஓர் அரசியல் தத்துவமாகும்.

ஏர்னஸ்ட் கெல்னர் தெளிவுபடுத்துவது என்னவெனில், தேசியவாதத்தின் தோற்றத் துக்கு தேசியங்கள் வழிகோலின என்பதைவிட, தேசியவாதம் பற்றிய தோற்றப்பாடு தேசங்களின் தோற்றத்துக்குத் தூண்டுவிசையாக அமைந்தது என்பதாகும். அவரது கோட்பாட்டின்படி, தேசியவாதமானது கைத்தொழில் யுகத்தில் தோற்றம் பெற்று வளர்ச்சி யடைந்துள்ளது. கைத்தொழில் சமூகத்தில் உள்ள மக்கள் பெற்றுக் கொண்ட தரப்படுத்தப்பட்ட கல்வியினூடாக அச்சமூகத்தில் உயர்மட்ட கலாசாரத்துடன் கூடிய அரசியல் சமூகமொன்று உருவாகியது. இது தேசியவாதத்தின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத வகையில் பங்களித்துள்ளது என்பது கெல்னரின் துணிபாகும். அவரது கருத்தின்வழி, நவீன சமூகங்களைப் பொறுத்தவரை, அரசும் தேசியமும் ஒப்புநோக்கப்படுகிறது. தேசியம் எனும்போது, திட்டமிட்ட எல்லைகள் இருக்கும் என்கிறார். அத்துடன், இவர் தேசியமும் அரசியலும் தனித்த வெவ்வேறு அலகுகள் எனக் குறிப்பிடுகின்றார்.

தேசியவாதம் குறித்து பேசுகையில், பெனடிக் அன்டர்சனின் (Anderson, 1983) வரைவிலக்கணமானது முக்கியமானதாகும். அவரது கருத்துப்படி,

> தேசியவாதம் என்பது கற்பனை செய்யப்பட்ட சமூகம் (Imagined Community) ஆகும். இது மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இறைமை மிக்கதாகவும் காணப்படுகிறது. மிகச் சிறிய சமூகங்கள்கூட தமது சமூகத்தில் வாழும் பெரும்பாலான மக்களை அறிந்திருப்பதில்லை. இருப்பினும், அவர்களது சிந்தனையில் தேசியத் தன்மை என்பது நிலைத்து நிற்கிறது.

ஒரு பில்லியன் மக்களைக் கொண்ட சமூகமாக இருந்தாலும், அவர்களைப் பொறுத்தவரை தேசிய எல்லைகள் காணப்படுகின்றன. எனவே, அது கற்பனை செய்யப்பட்டது. இவ்வாறு பெரிய தேசங்கள் காணப்படும்பொழுது, அதற்கப்பாலும் வேறு தேசங்கள் காணப்படு கின்றன. அன்டர்சன் முன்மொழிவதன்படி, தேசிய உணர்வுகளின் அபிவிருத்தியில் 'அச்சக முதலாளித்துவம்' முக்கிய வகிபங்கை ஆற்றுகிறது. அவரது வாதம் யாதெனில், ஒரே மொழியினைப் பேசும் மக்களிடையேயான தொடர்பாடல் பரிமாற்றத்துக்கு அச்சக முதலாளித்துவம் வழிவகுக்கிறது. இதன் காரணமாக, மக்கள் தாம் பேசுகின்ற மொழியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகின்ற பலர் இருப்பதாக உணர்கின்றனர். எனவே, இது 'தேசிய ரீதியில் கற்பனை செய்யப்பட்ட சமூகம்' என்ற உணர்வை உருவாக்குகிறது.

இதேவேளை, மொன்சரட் குபர்நௌ (Guibernau, 1996) சுட்டிக்காட்டுவது என்னவெனில், அடையாளத்தை உருவாக்குவது தொடர்பில் தேசியவாதத்துக்குள்ள வலுவை அல்லது அதிகாரத்தை புலமையாளர்கள் மறந்துவிடுகின்றனர். தனிநபர்கள் தாம் ஒரே கலாசாரத்தையும் ஆட்புலத்தையும் பகிர்ந்து கொள்ளும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என உணர்ந்து கொள்கின்றனர். இந்தக் கூட்டுணர்வு, குறியீட்டின் (Symbol) மூலமும் வழக்காறுகளின் மூலமும் பலப்படுத்தப்படுகிறது. குபர்நௌ தேசியவாதத்தை மதத்துடன் ஒப்பு நோக்குகிறார். அவரது கருத்துப்படி, இரண்டும் கருத்துநிலையில் பொதுவான நம்பிக்கையை செல்வழிப்படுத்துவதுடன், தனிநபர்களில் பலம் பொருந்திய மனவெழுச்சிகளை மேற்கிளப்புகின்றன.

அன்டனி ஸ்மித் (Smith, 1991), கடந்த கால நினைவுகள், நம்பிக்கைகள், குறியீடுகள் என்பன தேசியவாதத்தினைப் புரிந்து கொள்வதில் முக்கியத்துவம் வகிக்கின்றன என்கிறார். இவர் பொதுவான அடையாளம் மற்றும் பொதுவான வரலாறு ஆகியவற்றினைக் கொண்ட அல்லது அவ்விதம் உள்ளதாகக் கருதுகின்ற குழுக்களின் உணர்வை தேசியவாதமாக அடையாளப்படுத்துகிறார். மேலும், ஸ்மித் மற்றும் ஹட்சிசன் (Smith & Hutchinson, 1994) ஆகியோரது வாதப்படி, தேசியவாதம் என்பது மத ரீதியானதாக, தாராண்மை ரீதியானதாக, கலாசார ரீதியானதாக, பழைமைவாதமாக, அரசியல் ரீதியானதாக நோக்கப்பட முடியும். இவர்கள் ஏற்றுக்கொள்ளும் விடயம் யாதெனில், தேசம் என்பது தேசியவாதத்துக்கான அத்திவாரம் என்பதாகும்.

**நவீனமயமாக்கமும் தேசியவாதமும்**

மேற்கத்தேய சமூக விஞ்ஞானப் பரப்பில் தேசியவாதமானது ஓர் எண்ணக்கருவாக அண்மைக் காலத்திலேயே முன்னிலைப் பெறத் தொடங்கியது. 1950கள் வரை வரலாற்று நிலைப்பட்ட ஆய்வுகளிலேயே தேசியவாதம் பிரதான கரிசனையாகக் கருதப்பட்டு வந்தது. வரலாற்றாசிரியர்களின் அவதானம்கூட ஐரோப்பிய தேசிய அரசுகளின் அனுபவத்துடன் மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மேற்கத்தேய சமூக விஞ்ஞானத்தில் நவீனமயமாக்கல் கட்டளைப்படிமத்தின் ஆரம்பமானது, ஐரோப்பாவுக்கு வெளியேயான உலகிலும் சமூக மாற்றத்துக்கான புதிய ஆர்வத்தைக் கொணர்ந்தது.

நாடுகாண் பயணிகள், சாகசப் பயணிகள் மற்றும் மானிடவியலாளர்கள் ஆகியோரின் எழுத்துக்களினால் பெரிதும் அறியப்பட்ட இவ்வுலகம், இரண்டாம் உலக மகா யுத்தத்தையடுத்து, சமூக விஞ்ஞானிகளின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியது. அவர்கள் சமூக மற்றும் அரசியல் நிறுவனங்களில் மாற்றச் செயன்முறையை அல்லது பாரம்பரிய அல்லது குறைவிருத்தி நிறுவனங்களிலிருந்து அபிவிருத்தியடைந்த சமூகங்களை நோக்கிய ஒரு நகர்வைக் கண்டனர். மரபுத்துவத்திலிருந்து நவீனத்துவத்துக்கான நிலைமாற்றச் செயன்முறையானது, நவீனமயமாக்கல் என எண்ணக்கருமயப்படுத்தப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்டது. நவீனத்துவத்தை அடைந்து கொண்டவையாகப் பார்க்கப்பட்ட இந்தச் சமூகங்கள் மேற்கத்தேய கைத்தொழில் சமூகங்களாகும். எஞ்சியவை அபிவிருத்தியடைந்து வரும் அல்லது குறைவிருத்திச் சமூகங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய அல்லது மரபு ரீதியான மேற்கத்தேயமல்லாத சமூகங்களுடன் ஒப்பிடும் போது, நவீன சமூகங்களானவை நகர, எழுத்தறிவுடைய, கைத்தொழில் சமூகங்கள் எனக் கூறிக் கொள்ள முடியும். இதேபோன்று, உயர் பொருளாதார விருத்தி, அதிகளவான வர்த்தகம், விருத்தியடைந்த போக்குவரத்து முறைமை, வெகுஜன ஊடக கலாசாரம், உயர் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதார மேம்பாடுகள் என்பன நவீனத்துவத்தின் அடையாளங் களாகச் சுட்டிக்காட்ட முடியும்.

நவீனத்துவமயமாக்கக் கோட்பாட்டாளர்கள் பாரம்பரிய சமூகங்களில் இடம்பெறும் நவீனத்துவச் செயன்முறையை மிகவும் வலி உண்டாக்குகின்ற செயன்முறையாகவே நோக்குகின்றனர். நவீனமயமாக்கமானது ஏற்படுத்தப்படுகின்றபோது, அது பழைய சமூக, பொருளாதார மற்றும் உளவியற் கடமைகளின் பிரதான பகுதிகளை அரிப்புக்கும் உடைப்புக்கும் உள்ளாக்கியிருந்தது (Deutsch, 1961: 494). இதன்வழி சிந்திக்கின்றபோது, தேசியவாதமானது, அண்மைய நூற்றாண்டுகளில் மேற்கிலே புரட்சியை ஏற்படுத்தியதும் உலகின் மூலை முடுக்குகளில் தொடர்ச்சியான அலைகளை ஊடுருவச் செய்ததுமான வலுச் சக்திகளுக்கான பதிலிறுப்பாகும் (Emmerson. 1960: 188).

நவீனமயமாக்கக் கட்டளைப்படிமம் மேற்கத்தேயமல்லாத உலகில் தேசியவாதத்தின் தோற்றத்தினை விளக்கும் பல்தரப்பட்ட கோட்பாடுகளை வழங்கியபோதும், அவற்றுள் ஒரு வாதமானது மிகவும் முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளது. அந்த வாதம் என்னவெனில், எந்தவொரு குறிப்பான தேசியவாதத்தின் அபிவிருத்தியும் நவீனமயமாக்கச் செயன் முறையின் செல்வழி மாத்திரமே புரிந்து கொள்ளப்பட முடியும் என்பதாகும். நவீனமய மாக்கத்தின் அடிப்படை மூலக்கூறு என்ற வகையில், தேசியவாதமானது, மேற்குலகின் தாக்கத்தினால் உருவான மிகவும் நவீனத்துவமடைந்த சமூகக் குழுக்களின் கருத்தியலாக சிலரால் நோக்கப்படுகிறது. இதேவேளை, ஒரு குறிப்பிட்ட 'தேசியவாதத்தின் உளவியல்' ஆனது, பாரம்பரிய சமூகங்களிலிருந்து நவீனத்துவத்துக்கான நிலைமாற்றத்துடன் பரிணாம மடைந்திருக்க வேண்டும். கோல்மென் (Coleman, 1954), இந்த உளவியல் 'மேற்கத்தேய கல்வியினால் உருவாக்கப்பட்ட ஓர் உளப்பாங்கின் நிகழ்வு நிலையில் மாற்றீடுகளின் இருப்பு அல்லது சாத்தியம் பற்றிய ஒரு புரிந்துணர்வு' என்பதுடன் ஒத்துப் போவதாக நம்புகிறார்.

லேர்னர் (Lerner, 1958) ஆதாரப்படுத்தும் விடயம் என்னவெனில், நகரமயமாக்கம், எழுத்தறிவு மற்றும் ஊடகப் பங்குபற்றல் என்பவற்றின் உயர் மட்டம் மற்றும் நவீனமய மாக்கத்தினால் உருமாற்றத்துக்குட்பட்ட சூழலமைவைத் தழுவிக் கொள்வதற்கான இயலுமை என்பவற்றினால் உருவாக்கப்பட்ட 'நகர்வாக்க ஆளுமை'க்குள் இந்த உளவியலை பண்புமயப்படுத்துவதாகும். எவ்வாறாயினும், லேர்னரின் கருத்துப்படி, ஒரு புறம், பாரம்பரிய உளப்பாங்கிற்கு மற்றும் அதன் முயற்சியல்லாத பெறுமதிகளுக்கும் மறுபுறம், 'விருப்பத்'திலிருந்து 'நவீனத்துவத்து'க்கும் இடையில் இருப்போருக்கும் நவீனத்துவத்தை அடைந்து கொள்வதென்பது அத்துணை இலகுவான காரியமல்ல. தேசியவாதம் குறித்த லேர்னரின் (Lerner, 1958: 47) நிலைப்பாட்டை அவரது வார்த்தைகளிற் கூறுவதானால்,

> நவீனத்துவத்தை அடைய அவசரப்படும் சமூகங்களுக்கு மேற்கத்தேய வளர்ச்சியின் வரலாற்று வேகத்துடன் சற்று பொறுமை வேண்டும் எனினும், பல நூற்றாண்டுகளில் மேற்கில் நடைபெற்றதை சில வருடங்களில் அடைந்து கொள்ள சில மத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> கிழக்கு நாடுகள் எதிர்பார்த்தன. மேலும், இதனை அவர்கள் தமக்கேயுரிய வழியில் அடைந்து கொள்ள விரும்பினர். மத்திய கிழக்கு நவீனமயமாக்கத்தின் சிக்கற் தன்மை என்னவெனில், அரசியல் ரீதியாக அதிஉச்சபட்ச பூரண தேசியவாதத்தையும் உளவியல் ரீதியாக எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடிய இனவெறியையும் வெளிப்படுத்திய அதற்கேயுரிய இனமைய வாதமாகும். காலனித்துவ எதிர்ப்புவாதத்தினால் விதைக்கப் பட்ட பகைமையானது, அந்நிய போஷணை தோற்றுவதற்கு முயற்சிக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தப்பட்ட மறுப்பினால் அறுவடை செய்யப்பட்டது.

நவீனத்துவமானது பொருளாதார விருத்தி, கைத்தொழில்மயமாக்கம், உயர்மட்ட வாழ்க்கைத் தரம், அதிகரித்த எழுத்தறிவு வீதம் மற்றும் உயர் சமூக நகர்வாக்கம் போன்ற சுட்டிகளினால் அளவிடப்படுமாயின், மேற்கத்தேயத் தாக்கம் எவ்விதம் 'நவீனமய மாக்கத்துக்கு'த் தடையாக அமையும் என்பதை லேர்னர் இலகுவில் உள்ளடக்க முடியாது. அவர் கூறும் அந்நிய மறுப்புக்கு ஏதுவான காலனித்துவ ஆட்சியின் பண்புகளை அல்லது நினைவுகளை வெளிப்படுத்த அவர் மறந்துள்ளமை துரதிஷ்டவசமானது. எவ்வாறாயினும், மேற்கத்தேய மல்லாத நாடுகளில் மேற்கத்தேய ஆட்சி ஆசிர்வாதம் என்றும் சொல்லப் படுவதுண்டு. ஏனெனில், அது மனித இனத்தின் விருப்பத்துக்குரிய இலக்கான நவீனத்துவத்துடன் கூடிய மேற்கத்தேயமல்லாத உலகுடன் தொடர்புபட்டுள்ளமையாகும். இதன் முக்கிய விடயம் யாதெனில், இனமையவாதம் மற்றும் எளிதில் உணர்ச்சிவயப்படும் இனவெறி என்பவற்றுடன் கூடிய தேசியவாதமானது, வாக்குறுதி வழங்கப்பட்ட நிலத்தை அடையும் செல்வழிக்கான ஒரு முட்டுக்கட்டை என்பதாகும்.

லூசியன் பை (1962) 'தேசியவாதத்தின் உளவியல்' என்பதைச் சற்று மாறுபட்ட வகையில் வரையறுக்கிறார். அவரைப் பொறுத்தவரை, தேசியவாதம் என்பது நவீனமய மாக்கத்தின் 'அச்சுறுத்தும்' விளைவுகளுக்கான ஓர் 'உளவியல் பதிலிறுப்பு' ஆகும். டொச்சின் 'தொடர்பாடல்' மாதிரியும் கூட இதனையொத்த வகையிலேயே மேற்கத்தேய மல்லாத தேசியவாதத்தினை நிலைப்படுத்துகிறது. டொச் (Deutsch, 1975: 101) பரிந் துரைப்பது யாதெனில், பதற்றமானதும் பாதுகாப்பற்றதுமான தனிநபர்களுக்கும் சமூக மற்றும் தொழில்நுட்ப மாற்றத்தினால் வேரோடு பிடுங்கி எறியப்பட்ட ஆடவருக்கும் மகளிருக்கும் வெற்றிகரமான குழுமக் கூட்டிணைப்புக்கான பொருளாதார மற்றும் உளவியல் வெகுமதிகளை வழங்கக் கூடிய கைத்தொழில்மயமாக்கத்தினதும் நவீன சந்தைப் பொருளாதாரத்தினதும் எழுச்சியானது, பொருளாதாரப் போட்டித் தன்மையின் இடரினை வெளிப்படுத்தியதுடன், வெற்றிக்காகப் பட்டினியிருத்தலையும் கற்றுக் கொடுத் தது.' 'பதற்றம்' மற்றும் 'பாதுகாப்பின்மை' உளவியலானது, ஒரு குழுவைச் சேர்ந்தவர் களினால் மாத்திரம் புரிந்து கொள்ளப்படக் கூடிய பாதுகாப்பிற்கும் வெற்றிக்குமான விருப்பத்தை உருவாக்கும். எனவே, பெரும் எண்ணிக்கையானோர் இத்தகு ஒரு குழுமத்துக் கான தேவையை உணர்ந்திருந்ததுடன், அதற்கான பதில், அவர்களது நம்பிக்கையை அவர்களது தேசத்தின் மீது வைக்கச் செய்வதாகும். இதன்வழி, நவீன தேசியவாதம் என்பது சமூக முன்னேற்றம் மற்றும் பொருளாதாரச் சலுகை என்பன கருதி, தனிநபர்களின் கூட்டுக்கான கலாசார செயல்வழியை கயிற்றேணியாக மாற்றுகின்ற முயற்சிக்கான பொறிமுறையாகும் (Deutsch, 1975). இந்த மாதிரியானது, ஏலவே ஒரு குழுவில் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தில் அங்கம் வகிக்கின்ற அல்லது அந்தக் குழுவிலிருந்து பிரிந்து செல்ல விரும்பு கின்றவர்களான 'தனிநபர்களின் கூட்டுக்கு' மத்தியில் தேசியவாதத்தினை எவ்விதம் விளங்குகின்றது என்பது தெளிவற்றுள்ளது.

**தேசியவாதமும் மார்க்சிஸமும்**

மார்க்சியக் கோட்பாட்டில் தேசியவாதம் குறித்த இன்னும் அபிவிருத்தி செய்யப்படாத பகுதிகள் உள்ளன என்ற சுய விமர்சனத்துடன் சமகால மார்க்சியவாதிகள் தேசியவாதம் குறித்த கலந்துரையாடலை ஆரம்பிப்பார்களாயின், அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. டொம் நைர்ன் (Nairn, 1975: 3) குறிப்பிடுவதற்கிணங்க, தேசியவாதம் பற்றிய கோட் பாடானது, மார்க்சியத்தின் வரலாற்றுத் தோல்வியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தேசியவாதத் தோற்றப்பாட்டினை புரிந்து கொள்வதற்கான பழம் மார்க்சியவாதிகளின் நோக்கை எடுத்துக் கொள்வோமாயின், ஹொப்ஸபவ்மத்தின் (Hobsbawm, 1977: 3) கண்ணோட்டத்தில், அது தொடர்ச்சியாக அதன் வடிவம் மற்றும் செயற்பாடுகளை மாற்றி வந்துள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. கோட்பாட்டின் வரையறைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டபோதும் கூட, மார்க்சியவாதிகள் மத்தியில் தேசியவாதம் குறித்த சிறியதொரு கோட்பாட்டுக் கலந்துரையாடல் இருந்து வந்துள்ளது.

மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் ஆகியோர் தமது ஆரம்ப கால எழுத்துக்களில் தேசியவாதம் குறித்து அதிக கவனஞ் செலுத்தவில்லை. இந்தக் கவனிப்பின்மையானது, தேசியவாதத்தின் தோற்றம், பூர்சுவாக்களின் அரசியல் அதிகாரம் மற்றும் ஐரோப்பாவில் மார்க்சிஸம் என்பன கால ரீதியில் ஒரே சந்தர்ப்பத்தில் நிகழ்ந்தமையின் மூலம் பகுதியளவில் விளக்கப் பட்டன. எவ்வாறாயினும், ஐரோப்பாவில் பூர்சுவா தேசியவாதம் ஓர் அரசியற் காரணி யானதுடன், அதற்கான மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸின் எதிர்வினையானது, அவர்களது பல்வேறுப்பட்ட அரசியல் எழுத்துக்களில் சிதறிக் காணப்படுகின்றமையை கண்டறிய முடியும். அவர்கள் ஐரோப்பிய தேசியவாதம் குறித்து இரு நிலைகளில் தமது எதிர்வினை களை வெளிப்படுத்தியுள்ளனர் எனக் கூறமுடியும். அவர்களது ஆரம்ப எழுத்துக்களில் - 1840கள் மற்றும் 1850களில் அவர்கள் தேசியவாதத்திலிருந்து குறிப்பான அரசியல் பிரிவுகளை மெய்ப்பித்ததுடன், சிலசமயங்களில் பிற்போக்குவாதம் என்ற வகையில், அதன் அரசியலை நீக்கினர். எனினும், 1860களாகின்ற போது, குறைந்தபட்சம் சோசலிஸ இயக்கத்தின் நண்பனாக தேசியவாதத்தின் அரசியல் இயல்திறன் அங்கீகரிக்கப்படுமளவுக்கு இந்நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது.

தேசியவாதம் குறித்த ஆரம்ப கால மார்க்சியக் கண்ணோட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை உள்ளடக்கியிருந்தது. தேசியவாதமானது, பூர்சுவா தேசிய அரசின் கருத்தியலாகவும் பூர்சுவாக்களின் மேற்கட்டுமானத்தின் ஒரு பகுதியாகவும் பார்க்கப் பட்டது. இது முதலாளித்துவ விரிவுபடுத்தலின் விளைவாக, தேசிய வேறுபாடுகளுடன் இக்குறுகிய காலத் தோற்றப்பாடு மறைந்து போகும் என்பதே அவர்களது துணிபாக விருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை (1961: 51) தேசியவாதமானது தேசிய அரசுடன் இணைந்து மறைந்து போகும் என எதிர்வுகூறியிருந்தது:

> பூர்சுவாக்களின் அபிவிருத்தி, வர்த்தகத்தின் சுதந்திரம், உலகச் சந்தை, உற்பத்தி முறைமையின் ஒருமுகத் தன்மை மற்றும் அவற்றோடு இணைந்து செல்லக் கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை நிலைமை என்பவற்றை அடைந்து கொள்வதற்காக மக்களுக்கிடையிலான தேசிய வேறுபாடுகளும் எதிர்ப்புகளும் நாளுக்கு நாள் மறைந்து போகின்றன. பாட்டாளி வர்க்கத்தின் மேலாதிக்கம், அவர்கள் இன்னும் அந்த மறைப்பைச் செய்வதற்குக் காரணமாகும்.

தேசிய சுதந்திரத்துக்கான இயக்கத்தின் முன்னேற்றகரமான அரசியல் இயல்திறன் எனும் கண்ணோட்டத்தில் மார்க்ஸும் ஏங்கல்ஸும் தேசியவாதம் குறித்த தமது எதிர்மறையான மதிப்பிடுதலை பின்னர் மாற்றியிருக்க வேண்டும். டுக்கர் (Tucker) குறிப்பிடுவதற்கிணங்க, ஐரோப்பாவில் சோசலிஸப் புரட்சியின் நடைமுறைத் தேவையானது, அவர்களது ஆரம்ப கால நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளக் காரணமானது. இதனை டுக்கரின் (Tucker, 1972: xxviii) வார்த்தைகளிலேயே கூறுவதாயின், 'மார்க்ஸும் ஏங்கல்ஸும் புரட்சி தொடர்பாக சுருக்கமாகவேனும் கோட்பாட்டுமயப்படுத்துவதற்குப் புறம்பாக, சோசலிஸப் புரட்சியின் உபாயங்கள் மற்றும் செயல்நுட்பங்கள், புரட்சிகர செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், உலக மாற்றத்தின் அரசியல் என்பவற்றிலேயே அதிகக் கவனஞ் செலுத்தினர்.' இந்த மாற்றத்துடனேயே தேசங்களின் சுயநிர்ணய உரிமை எனும் உருவாக்கம் மார்க்சிய அகராதியினுள் புகுந்து கொண்டது.

சுயநிர்ணயம் எனும் கருத்து பிற்பட்ட காலத்தில் தேசியப் பிரச்சினை குறித்த லெனினின் பகுப்பாய்வில் மையக் கருப்பொருளாக மாறியது. ஐரோப்பாவில் - குறிப்பாக, ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியில் தேசியவாதம் குறித்த புதிய அலை பரவத் தொடங்கி யமையின் காரணமாக, கடந்த நூற்றாண்டின் முதல் தசாப்தமளவில் ஐரோப்பிய சமூக ஜனநாயகத்தினுள் தேசியவாதம் குறித்த கோட்பாட்டு ரீதியான பிரச்சினை எழலாயிற்று. கௌட்ஸ்கியின் (Kautsky) தேசிய சுயநிர்ணயம் குறித்த முதலாவது சர்வதேச நிலைப்பாடு, ஜேர்மனிய சோசலிஸ இயக்கத்தைச் சேர்ந்த ரோஸா லக்ஸம்பேர்க்கினால் சவாலுக்குட் படுத்தப்பட்டது. இந்த வாதத்துடன், லெனின் தேசங்களின் சுயநிர்ணய உரிமையின் அங்கீகாரத்தின் மையமாக தேசியவாதத்தின் மார்க்சிய நிலைப்பாட்டை மீளத் தெளிவு படுத்துகிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் பூர்சுவா - ஜனநாயகப் புரட்சியின் சகாப்தம் முடிவுற்றதன் பின்னர், தேசியவாதமானது, புதியதொரு வரலாற்று கட்டத்தினுள் நுழைந்து கொண்டதென லெனின் வாதிடுகிறார். மேற்கு ஐரோப்பா பூர்சுவா அரச முறைமைக்குள் உருமாற்றமடைந்ததன் பின்னர், அந்தப் பின்னணியில் சுயநிர்ணயத்தின் வலிமையில் அர்த்தம் ஏதும் இல்லை. எவ்வாறாயினும், புதிய தேசங்களின் தோற்றம் அதனுடன் முற்றுப் பெறவில்லை. லெனின் வாதிடுவது யாதெனில், புதிய தேசங்களின் அமைவிடம் அதன் பின்னர் மேற்கு ஐரோப்பாவிலிருந்து கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆசியா நோக்கி மாற்றமடைந்தது என்பதாகும்.

1910 இலிருந்து 1917 வரை லெனின் தொடர்ச்சியாக எழுதிய கட்டுரைகள் இரு நோக்கங்களையுடையனவாகக் காணப்பட்டன. முதலாவது, மேற்கு ஐரோப்பாவுக்கு வெளியே தேசியவாத இயக்கத்தின் அரசியல் சட்டபூர்வத் தன்மையை ஏற்கும் ஐரோப்பிய சமூக ஜனநாயகத்தை உருவாக்குதல். இரண்டாவது, சோசலிஸத்துக்கான போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட தேசியங்களின் தேசியவாத இயக்கத்தின் தந்திரோபாய முக்கியத்துவத்தை அங்கீகரித்தல். ஒரு வகையில், இது தேசியவாதம் குறித்த லெனினின் வரையறுக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டுத் தோற்றப்பாடாகும். எனினும், உண்மையான கோட்பாட்டு ரீதியான சவால் 1919இன் பின்னர், மூன்றாவது அகிலம் உருவாக்கப்பட்டபோது, லெனின் காலனித்துவ நாடுகளில் காணப்பட்ட பூர்சுவா தேசியவாதத்தை இறுகப் பற்றிக் கொண்டதன் காரணமாகத் தோன்றியது. உலக சோசலிஸப் புரட்சியின் மனத்தோற்றத்தின் காரணமாக, லெனின் காலனித்துவ பூர்சுவா இயக்கங்களின் அரசியல் இயலுமையின் மீது தனது அவதானத்தை மீண்டும் செலுத்தலானார். எனவே, லெனினின் பிற்பட்ட கால எழுத்துக்களில் ஒருவர் காணக்கூடிய விடயம் யாதெனில், தேசிய சுயநிர்ணயம் என்ற எண்ணக்கரு பற்றிய அவரது முன்னைய நிலைப்பாட்டினை மீள அறிவுறுத்துகின்ற தன்மையினைப் பெற்றுக் காணப்பட்டமையாகும்.

ஸ்டாலின் 1912இல் எழுதிய மார்க்சிஸமும் தேசியப் பிரச்சினையும் (Marxism and the National Question) என்ற கட்டுரையானது, தேசியவாதத்தைப் புரிந்து கொள்வதற்கானப் பிரதானப் பங்களிப்பாக மார்க்சியப் பாரம்பரியத்தினுள் பரந்ததோர் அங்கீகாரத்தைப் பெற்றது. அவரது கட்டுரை வெளிவரும் வரை, 'தேசம்' என்னும் எண்ணக்கரு மார்க்சியக் கருத்தாடலில் பெரிதும் வரையறுக்கப்படாத எண்ணக்கருவாகவே காணப்பட்டது. ஸ்டாலினின் கருத்துப்படி, தேசம் என்பது உறுதியான மக்கள் சமுதாயத்தைக் கொண்ட, பொதுவான மொழி, நிலப்பிரதேசம், பொருளாதார வாழ்வு என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட, பொதுவான கலாசாரத்தில் உருவான உளவியற் கட்டுமானத்தையுடைய வரலாற்று ரீதியாகப் பரிணாம வளர்ச்சியடைந்த ஓர் எண்ணக்கருவாகும். தேசம் குறித்த வரலாற்று நிலைப்பட்ட அகவய ரீதியான தீர்மானக் காரணிகளாக இவை கருத்திற் கொள்ளப்பட்டதுடன், தேசத்துக்கான வரைவிலக்கணமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தேசியவாதம் என்னும் வார்த்தைப் பிரயோகத்துடன் மார்க்சியவாதிகள் அசௌகரியத் துடன் காணப்பட்டனர் என்ற பொதுவான நிலைப்பாட்டுடனேயே, மார்க்சியவாதிகள் லெனின் மற்றும் ஸ்டாலினின் தேசியவாதம் குறித்த கருத்துக்களின் தொடர்ச்சியாகத் தேசியவாதத்தினைப் பெரிதும் புரிந்துகொள்ள முயற்சித்தனர். இத்தாலி மற்றும் ஜேர்மனியில் காணப்பட்ட தேசிய சோசலிஸம், ஜப்பானிலிருந்த தேசியவாத இராணுவமயவாதம் மற்றும் அனைத்தாண்மை அதிகாரம் மிக்க மூன்றாம் உலக தேசியவாத அரசுகள் என்ப வற்றின் அனுபவங்கள் தேசியவாதம் பற்றிய எதிர்மறை தாற்பரியத்தினை வழங்கின. அதுமாத்திரமன்றி, தேசியவாதமானது, தீவிரவாதத்துடன் இணைத்து அடையாளப் படுத்தப்படும் ஒரு போக்கும் காணப்பட்டிருந்தது. உதாரணமாக, 1960களில் இந்தோ - சீனா, வட அயர்லாந்து, ஸ்பெயின் மற்றும் கனடா போன்ற நாடுகளில், இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இத்தீவிரவாதப் போக்கை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக, அரசியல் ரீதியாக இடமளிப்புச் செய்யப்பட்ட தேசியவாதம் (accommodated nationalism) எனும் வார்த்தைப் பிரயோகம் பெரும்பாலும் கையாளப்படுகின்ற நிலையில், மார்க்சிஸம் இந்தத் தோற்றப்பாட்டை கோட்பாட்டு ரீதியாக எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்பது கேள்விக்குரியதாகியது. நைர்ன் (Nairn, 1975 & 1977), ஹொப்ஸபவ்ம் (Hobsbawm, 1977), அமின் (Amin, 1980), வெலஸ்ரைன் (Wallerstein, 1983) மற்றும் அன்டர்சன் (Anderson, 1983) ஆகிய மார்க்சியவாதிகள் இக்கேள்வியை எழுப்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியவாதத்தின் பல்வேறுப்பட்ட பிரகடனங்களையும் புரிந்து கொள்வதற்கான மார்க்சிஸத்தின் கோட்பாட்டு ரீதியான குறைப்பாட்டை முதன் முதலில் நேரடியாக சுய விமர்சனத்திற்குட்படுத்திய மார்க்சியவாதி நைர்ன் ஆவார். தேசியவாதத்தைக் கோட்பாட்டு ரீதியாகப் புரிந்து கொள்வதனை விருத்தி செய்வதில் மார்க்சிஸம் தோல்வியைத் தழுவியது என்பதை ஏற்றுக்கொண்ட நைர்ன் (1977), கோட்பாடானது தேசியவாதம் குறித்த நேர்க்கணிய மற்றும் எதிர்மறை ஆகிய இரு தோற்றப்பாடுகளையும் அங்கீகரிக்க வேண்டும் என வாதிடுகிறார். நைர்ன் உலக அரசியற் பொருளாதாரத்தின் குறிப்பார்ந்த பண்பியல்பு களினால் தீர்மானிக்கப்படுகின்ற தேசியவாதத்தினை உலக வரலாற்று செயன்முறைக்குட் படுத்துகின்ற வகையிலான பகுப்பாய்வுச் சட்டகத்தினை முன்மொழிகிறார். இந்தச் சட்டகம் தேசிய நில எல்லைகளுக்குள் அதனை வெளிப்படுத்தியபோதிலும், நைர்னின் கருத்துப்படி, தேசியவாதத்தின் உண்மையான தோற்றமானது, உலக அரசியற் பொருளா தாரத்தின் பொறிமுறையினுள்ளும் பதினெட்டாம் நூற்றாண்டு முதலான சமநிலை யற்ற வரலாற்று அபிவிருத்தியினுள்ளும் காணப்பட்டது (Nairn, 1977: 6).

மூன்றாம் உலகில் தேசியவாதத்தின் தோற்றம் பற்றி நைர்ன் முன்வைக்கும் விளக்க மானது, தங்கியிருத்தல் அல்லது சார்புநிலைத் தோற்றப்பாட்டினதும் நவீனத்துவ சிந்தனை யின் ஆதாரத்தினதும் எதிர்வுகூறல்களைப் பிரதிபலிக்கிறது. உலக முதலாளித்துவத்தின் பின்தங்கிய பிராந்தியங்கள் விருத்தியடைந்த முதலாளித்துவ சமூகங்களைப் பின்பற்ற முடியாமையின் காரணமாக, அவர்களுக்குத் தேவையானதை அவர்கள் எடுத்துக் கொள் வதற்கும் அவற்றை தமது சமூக வடிவங்களின் சுதேசிய உரிமைகளுக்கேற்ப சீர்செய் வதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டனர் (Nairn, 1977: 12). தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சார்பு மண்டல நாடுகள் (Peripheral Countries) தமக்கானவற்றைச் செய்து கொள்வதற்கு தமக்கேயுரிய செல்வழியை முயற்சிக்கவும் முன்னேற்றிக் கொள்ளவும் கட்டாயப்படுத்தப் பட்டனர். இந்த வரலாற்று நிலைப்பட்ட குறுக்குப் பாதைக்காக (short-cut) தமது சமூகங்களை நகர்வாக்கமடையச் செய்ய அல்லது அணிதிரட்ட வேண்டிய கடப்பாடு அவர்களது ஆட்சியாளர்களுக்கும் அதிகாரத்திலிருந்த உயர்குழாத்தினருக்கும் காணப்பட்டது.

அமின் மற்றும் வெலஸ்ரைன் ஆகிய இருவரும்கூட உலக முதலாளித்துவம் என்ற சட்டகத்தினுள் சார்பு மண்டல தேசியவாதம் பற்றி கேள்வி எழுப்புகின்றனர். அவர்களது வாதம் சற்று வித்தியாசமானது. அவர்கள் தேசியவாதத்தினூடாக சார்பு மண்டலத்தின் அமைப்பியல் உருமாற்றத்துக்கான சாத்தியப்பாடுகளைக் கண்டறிய முயற்சிக்கின்றனர். எனவே, சார்பு மண்டலமானது, தன்னிச்சையான அபிவிருத்திக்கான செல்வழியை அடையாளப்படுத்திக் கொள்ள முடியுமென்பது அவர்களுக்குள்ள நம்பிக்கையாகும். இதன் வழி, அமின் (Amin, 1980: 173) குறிப்பிடுவதன்படி, 'பூரணத்துவமடையாத முதலாளித்துவப் புரட்சியின் ஒரு பகுதியாகவே பூரண நிலப்பிரபுத்துவ ஆட்சியினால் ஒடுக்கப்பட்ட ஐரோப்பிய இனத்தவர் பற்றிய பழைய தேசியப் பிரச்சினை காணப்பட்டது. எழுச்சியடைகின்ற சோசலிஸப் புரட்சியின் ஒரு பகுதியாக முதலாளித்துவ ஏகாதிபத்திய வாதத்தினால் ஒடுக்கப்பட்ட மக்கள் பற்றிய புதிய தேசியப் பிரச்சினை காணப்படுகிறது.' அமின் தேசிய விடுதலைப் போராட்டத்தினை சார்பு மண்டலத்தில் இடம்பெற்ற சோசலிஸ புரட்சியுடன் தொடர்புபடுத்துகிறார். இது காலனிகளில் தேசியவாதம் பற்றிய மூன்றாம் அகிலத்தின் புரிந்துணர்வின் சிக்கலானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான மீளுருவாக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமினின் வாதத்தினையொத்த வகையில், வெலஸ்ரைன்னும் மூன்றாம் அகிலத் தேசியவாதத்தின் 'முறைமைக்கெதிரான' உந்துதலை அங்கீகரிக்கிறார். அவரது ஆரம்ப வாதம் யாதெனில், தேசியவாதமானது முக்கியத்துவமிக்க முறைமைக்கெதிரான உளப் பாங்கை நகர்வாக்கமடையச் செய்கின்றபோது, முழுமையான உலகப் பொருளாதாரத்தின் அரசியலைப் பாதிக்கிறது என்பதாகும் (Wallerstein, 1983: 100). எவ்வாறாயினும், ஒரு முறை அதிகாரத்திலிருக்கும்போது இந்தத் தேசியவாத இயக்கங்கள் அடிப்படையில் முறைமைக்கெதிராக நிலைபெறுவது அதிக சிரமம் என்பதைக் கண்டறிந்து கொண்டதுடன், தேசியவாத இயக்கங்கள் கிட்டத்தட்ட அது சாத்தியமற்றது என்பதைக் கண்டறிந்து கொண்டன. வெலஸ்ரைனின் இந்த வாதம் 1980களில் வியட்நாம், சீனா மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளை உதாரணமாக் கொண்டிருந்தது. முறைமைக்கெதிரான தேசியவாதத்தின் இந்த முக்கியத்துமிக்க அடிப்படைப் பிரச்சினை அல்லது சங்கடத்தினை ஏற்றுக்கொண்ட தற்கேற்ப, வெலஸ்ரைன் (Wallerstein, 1983: 102) முன்மொழிவது என்னவெனில், முறைமைக்கெதிரான இயக்கங்களினால் தாபிக்கப்பட்ட ஆட்சிகள் தொடர்பான எதிர் பார்ப்புகளின் முக்கியத்துவம் மீதான அழுத்தத்திலிருந்து பகுப்பாய்வு ரீதியாக அப்பால் நகர்ந்துச் செல்வதுடன், இந்த இயக்கங்களைப் புத்துயிரளிப்பதற்கான முறைகள் மற்றும் ஆதாரங்கள் மீதான வலியுறுத்தல்களை நோக்கி நகர வேண்டிய ஒரு தேவையுள்ளது என்பதாகும்.

உலக முதலாளித்துவ முறைமையில் தேசியவாத இயக்கங்களின் இருப்பானது, அமின் மற்றும் வெலஸ்ரைன் ஆகியோரின் வாதப்படி, உலக முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் தேசியவாதத்தின் இயங்குநிலையை வெளிப்படுத்துகிறது. இது உள்நாட்டு வர்க்கப் போராட்டம் தொடர்பில் தேசியவாதத்தின் உள்ளகத் தர்க்கத்தினைக் கருத்திற் கொள்ளாமல் அமைந்திருந்தது.

தேசியவாதம் குறித்த மார்க்சிஸ கலந்துரையாடலுக்கான ஹொப்ஸபவ்மின் (Hobsbawm, 1977) பங்களிப்பும் கூட, மார்க்சிஸ சிந்தனையின் மற்றுமொரு குறைப்பாட்டை எடுத்து க்காட்டுகளுடன் விளக்குகிறது. இவர் தேசியவாதம் குறித்த பாரம்பரிய மார்க்சியவாதிகளின் கண்ணோட்டம் பற்றி சந்தேகத்துக்கிடமற்ற வகையிலான விமர்சனத்தை முன்வைக்கிறார். இதன் பின்னர், தேசியவாதப் பிரச்சினை குறித்த அவரது முழுப் பகுப்பாய்வும் நடைமுறை யிலுள்ள தேசிய அரசுகளிலிருந்து பிரிந்து செல்லுதல் மற்றும் தேசிய சுயநிர்ணயம் என்பன விரும்பத்தக்கதாகவும் சாத்தியமானதாகவும் உள்ளனவா இல்லையா என்ற வினாவினை நோக்கி குறுக்கியதாக மாற்றமடைந்தது. எண்ணக்கரு ரீதியான மட்டத்தில், 'தேசியவாதத்தின் தயவில் மார்க்சிஸத்தை' இடுவதன் ஆபத்து குறித்து அவர் கரிசனை கொண்டிருந்தார் (1977: 22). உண்மையில், இது தேசியவாதத்தைப் பாரம்பரிய மார்க்சிஸம் இறுகப் பற்றிக் கொள்வதற்கான சிரமத்தை வெளிப்படுத்துகிறது. அதேபோன்று, தேசியவாதத்தின் பல்வேறு வடிவங்கள், வெளிப்பாடுகள் மற்றும் தருணங்கள் என்பன அங்கீகரிக்கப்படு மாயின், மார்க்சிஸம் சுயநிர்ணயத்தினூடாக தேசியவாதத்தைப் பார்ப்பதை நிறுத்த வேண்டும். சுயநிர்ணயம் என்பது ஓர் அரசியல் நிலைப்பாடு என்பதுடன், அது ஒரு மூலோபாய எண்ணக்கருவாகும்.

பெனடிக் அன்டர்சனின் கற்பனை செய்யப்பட்ட சமூகம் (Imagined Community) (1983) எனும் படைப்பானது, தேசியவாதம் பற்றிய கருத்துநிலைக்குப் பாரிய பங்களிப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்கிய ஓர் ஆக்கமாகும். அன்டர்சன் குறிப்பிடும் விடயம் யாதெனில், தேசிய அரசுகளின் வளர்ச்சி, முதலாளித்துவத்துக்கும் அச்சகத்துக்குமிடையிலான தொடர்பு மற்றும் ஆரம்ப நவீன ஐரோப்பாவில் சுதேச மொழிகளின் தோற்றம் போன்ற செயன்முறைகள் தேசியத் தன்மையின் கற்பனை செய்யப்பட்ட சமூகத்தை எவ்வாறு உருவாக்கியது என்பதை விளக்குகிறார். அவர் வாதிடுவதற்கிணங்க, தேசத்தைக் கற்பனை செய்து கொள்வதற்கான சாத்தியப்பாடானது, மூன்று அடிப்படைக் கலாசார எண்ணக்கருக்கள் மனித மனங்கள் மீதான தமது பிடிப்பை இழந்தபோது, வரலாற்று ரீதியாக வளர்ச்சியடைந்தது (Anderson, 1983: 40). அன்டர்சனின் கருத்துப்படி, இந்த மூன்று கருத்துநிலைகளாவன: (1) குறித்த எழுத்து மொழியானது, இருப்பியல்வாத உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கான முன்னுரிமையை வழங்குகின்றது. (2) அந்தச் சமூகமானது, உயர் முடியாட்சியை மையத்தினைச் சூழவும் கீழும் இயற்கையாகவே ஒழுங்கமைந்துள்ளது. (3) அண்டவியல் மற்றும் வரலாறு ஆகியவற்றை உள்ளடக்கிய உலகியல் பற்றிய எண்ணக்கரு இன்றியமையாததாகக் காணப்பட்டதுடன், உலகினதும் மக்களதும் தோற்றமானது, அடிப்படையில் ஒரே விதமானவையாகும்.

இந்தப் பரஸ்பரத் தொடர்புகள் வீழ்ச்சியடைந்தபோது, சகோதரத்துவம், சக்தி மற்றும் நேரம் என்பவற்றை அர்த்தமுள்ள வகையில் ஒன்றாக இணைக்கும் புதியதொரு வழி தேடப்பட்டு வந்தது. அன்டர்சனின் துணிபின்படி, அச்சக முதலாளித்துவத்தினைவிட வேறு எதுவும் இந்தத் தேடலைப் பயனுள்ள வகையில் வழிப்படுத்தாது. இது துரித கதியில் வளர்ந்து வரும் மக்கள் குழுவினர் தம்மைப் பற்றி சிந்திப்பதற்கும் அவர்களை மற்றையவர்களுடன் தொடர்புபடுத்துவதற்கும் ஆழமான புதிய வழிகளைக் கண்டறிவதற்கான சாத்தியங்களை உருவாக்கியது.

'அச்சக முதலாளித்துவம்' எனும் எண்ணக்கரு அன்டர்சனின் தேசியவாதம் பற்றிய பகுப்பாய்வின் மையமாகத் திகழ்கிறது. ஐரோப்பிய முதலாளித்துவம் புதிய பிராந்தியங்களுக்கு விரிவடைந்தபோது, அது மக்கள் மத்தியில் தொடர்பாடலுக்கான புதிய ஊடகமாக அச்சகம், புத்தக வர்த்தகம், மேற்கத்தேய எழுத்தறிவு, செய்திப் பத்திரிகை போன்றவற்றையும் அதனுடன் சேர்த்துக் கொணர்ந்தது. இதனால் சமூகங்கள் மத்தியில் அடையாளத்தை இல்லாமற் செய்யும் ஒரு பொறிமுறை உருவானது. மனித மொழியின் அபாயகரமான பல்வகைமை மீதான முதலாளித்துவம் மற்றும் அச்சக தொழில்நுட்பத்தின் குவிப்பானது, நவீன தேசங்களை உருவாக்குவதற்கான அரங்கான கற்பனை செய்யப்பட்ட சமூகத்தின் புதிய வடிவத்தை உருவாக்குவதற்கான சாத்தியத்தை ஏற்படுத்தியது.

தேசியவாதம் குறித்த அன்டர்சனின் பகுப்பாய்வின் பலம் என்னவெனில், அது இறுமாப்பில்லாத புதிய அணுகுமுறையாகவும் தேசியவாதத்தினை அதன் வார்த்தைப் பிரயோகங்களுடனும் வரலாற்றுடனும் புரிந்து கொள்வதற்கான அர்ப்பணிப்பையும் கொண்டு காணப்பட்டது என்பதாகும்.

**முடிவுரை**

இக்கட்டுரையில் தேசியவாதம் என்றால் என்ன, அது தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வந்தமை மற்றும் அதன் பின்புலம் என்பன குறித்து சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளன. அத்துடன், தேசியவாதம் எனும் எண்ணக்கருவின் அபிவிருத்தியானது, நவீனமயமாக்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறையின் செல்வழியினால் மாத்திரமே புரிந்து கொள்ளப்பட முடியும் என்பதையும் இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது. தேசியவாதம் குறித்து மார்க்சிஸ பரப்பெல்லையினுள் பாரியதோர் கலந்துரையாடலுக்கு இடமில்லாதபோதும், நைர்ன், ஹொப்ஸபவ்ம், அமின், வெலஸ்ரைன் மற்றும் அன்டர்சன் ஆகியோர் தேசியவாதம் மார்க்சிஸத்தினுள் எத்தகைய கோட்பாட்டு புலத்தினைக் கொண்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகின்றனர்.

இக்கட்டுரையின் மூலம் தேசியவாதம் குறித்த இரு முக்கிய விடயங்களை அடையாளப்படுத்த முடியும். முதலாவது, தேசியவாதமானது, அதன் வார்த்தைப் பிரயோகங்களினாலேயே விளங்கிக் கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாததாகும். இரண்டாவது, தேசியவாதமானது, பல்வேறு வடிவங்கள், உள்ளடக்கங்கள் மற்றும் பிரகடனங்களையுடைய ஒரு தோற்றப்பாடாக நோக்கப்பட வேண்டுமேயொழிய, வெறுமனே முதலாளித்துவத் திட்டங்களைப் பிரதிபலிப்பனவாக மாத்திரம் இருக்கக் கூடாது.

அந்தவகையில், தேசியவாதம் குறித்த கோட்பாட்டுப் பின்னணியை அறிமுகப் படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்நோக்கத்தை அடைந்து கொள்வதற்குத் தேவையான அடிப்படைகளை இக்கட்டுரை வழங்கியிருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

## Bibliography


Amin, Samir. (1980), *Class and Nation: Historically and the Current Crisis*, New York: Monthly Review Press.

Anderson, Benedict. (1983), *Imagined Communities: Reflections on the Origin and Spread of Nationalism*, London: Verso Press.

Coleman, James S. (1954), "Nationalism in Tropical Africa." *American Political Science Review*, 48:2

Deutsch, Karl. (1961), *Nationalism and its Alternatives*, New York: Alfred Knopf.

Deutsch, Karl. (1975), *Nationalism and Social Communication,* Massachusetts: Massachusetts Institute of Technology Press.

Emmerson, R. (1960), *From Empire to Nation: The Rise to Self-assertion of Asian and African peoples,* Cambridge: Harvard University Press.

Gellner, Ernest. (1983), *Nations and Nationalism*, Oxford: Blackwell.

Guibernau, M. (1996), *Nationalisms: The Nation State and Nationalism in the Twentieth Century*, Cambridge: Polity Press.

Hobsbawm, Eric. (1977), "Some Reflections on the Break-up of Britain," *New Left Review*, I/105, September – October, 1977.

Hutchinson, John & Smith, Anthony D. (1994), *Nationalism*, Oxford: Oxford University Press.

Lerner, Daniel. (1958), *The Passing of Traditional Society: Modernizing the Middle East*, Glencoe: Free Press.

Marx, K. & Engles, F. (1961), *The Communist Menifesto*, London: Penguin.

Nairn, Tom. (1975), "The Modern Janus," *New Left Review*. i/94, November-December

Nairn, Tom. (1977), *The Break-up of Britain: Crisis and Neonationalism*, London: New Left Books.

Pye, Lucian. (1962), *Politics*, Personality and Nation – Building, New Haven: Yale University Press.

Smith, Anthony D. (1991), *National Identity*, Harmondsworth: Penguin.

Tucker, R. (1972), *Renade and the Roots of Indian Nationalism*, Chicago: University of Chicago Press.

Wallerstein, Immanuel. (1983), *Historical Capitalism*, London: New Left Books.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்வியகத்தின் ஆசிரிய ஆசான்கள்



திரு மனோகணேசனால் பாடசாலைத் தேவைக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு.
அருகில் மாநகரசபை உறுப்பினர்கள் திரு சி. பாஸ்கரா, திரு எஸ். குகவரதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்புத் தமிழ்சங்க நிகழ்வொன்றில்
திருமதி ஏனாதிநாதனால் முதல்வர் கௌரவிக்கப்பட்ட காட்சி



மயூராபதி ஆலய அறநெறிப் பாடசாலையின் நவராத்திரி விழாவில்
திருமதி சுந்தரலிங்கத்தால் கௌரவிக்கப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை நிகழ்வொன்றில் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களால் கௌரவிக்கப்படுதல்



ஓய்வு பெற்ற ஆசிரியை நிர்மலா விருத்தாசலம்
ஆசிரியர் தின விழாவில் கௌரவிக்கப்படும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சனாதன தர்மயுக விழிப்புணர்ச்சிக் கழகத்தின் விழாவின் போது கௌரவம்.
அருகில் சைவமங்கையர் வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி ப. கஜேந்திரதாஸ்,
திரு திருமதி மனோ கணேசன், கழகத் தலைவி திருமதி பானு சிவப்பிரகாசம்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுடன்
வகுப்பாசிரியை திருமதி கௌரி சிறீஸ்கந்தராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 5 புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்கள்
வகுப்பாசிரியை திருமதி ந. ராஜசேகருடன்




O/L பரீட்சையில் மாகாணத்தில் முதலிடம் பெற்ற மாணவிக்கு (10A)
அன்பளிப்பு வழங்குதல். அருகில் HNB சிரேஷ்ட முகாமையாளர் V.N. சிறீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழம்பு மாநகரசபை உறுப்பினர் திரு சி. பாஸ்கரா மாணவர்களுக்குப் பரிசில் வழங்கல்



மதுரை பாத்திமாக் கல்லூரி முன்னாள் பேராசிரியை திருமதி எம். ஏ. சுசிலா அவர்களை கல்லூரி கலைவிழாவில் முதல்வர் கௌரவிக்கின்றார்



கணனித்துறையில் சித்தியடைந்த மாணவிக்கு பரிசில் வழங்கல்



Dr. பாலசுப்ரமணியம்மாணவர்களுக்குரிய உதவிகளை வழங்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ திருச்சபை வரலாற்றில்...

**கலாநிதி எஸ். ஜெபநேசன்**
ஓய்வுநிலைப் பேராயர், தென்னிந்திய திருச்சபை

பத்தொன்பதாம் நூற்றாண்டு, மிஷன்களின் காலம் எனப்படுகின்றது. இக்காலத்தில் இங்கிலாந்து, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி முதலிய புரட்டஸ்தாந்து நாடுகளில் இருந்து மதப்பிரசாரகர் ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு வந்து சமயத்தைப் பரப்பினார்கள். இவர்களுக்கு இந்தியா அரிய வாய்ப்புக்கள் கொண்ட பணிக்களமாகத் தென்பட்டது. 1757 இல் நடைபெற்ற Plassey யுத்தத்திற்குப் பின்னர் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பனியின் ஆதிக்கம் சிறிது சிறிதாக இந்தியாவின் பல பாகங்களிலும் பரவியது. இந்த மாற்றங்களைத் தொடர்ந்து மிஷன்கள் இந்தியாவில் பணியாற்ற முயற்சித்தன. ஆனால், ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பனி, கிறிஸ்தவ மத பிரசாரகர், தமது பிரதேசத்தில் பணியாற்றுவதை விரும்பவில்லை. இந்தக் கம்பனியின் சாசனம் 20 ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் மீளாய்வு செய்யப்பட்டது. கிறிஸ்தவ மதப்பிரசாரம் கம்பனிக்கும் இந்திய மக்களுக்கும் இடையிலான உறவினைப் பெரிதும் பாதித்து விடுமெனக் கம்பனியின் தனாதிபதிகள் பயந்தனர். 1793 இல் இதன் சாசனம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் மீளாய்வு செய்யப்பட்டபோது மிஷன்களுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டது. 1813 இல் மீளாய்வு செய்யப்பட்டபோது இங்கிலாந்து மிஷனரிமார் மட்டும் பணியாற்றலாம் என்று விதி செய்யப்பட்டது. 1833 ஆம் ஆண்டுதான் சகல நாட்டுக் கிறிஸ்தவ மிஷனரிமார்களுக்கும் இந்தியாவில் பணியாற்ற அனுமதி வழங்கப்பட்டது. 1813 ஆம் ஆண்டுக்கு முன்னர் சில மிஷனரிமார் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் பணியாற்றினர் என்பது உண்மையே. 1805 இல் வந்த இலண்டன் மிஷனரித் தொண்டர்கள் இந்த வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் ஒருவர் தான் தெல்லிப்பளையில் பணியாற்றிய பாலன் பாதிரியார் (Rev.Mr.Palan)[1] இவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகள் மத்தியில் தாம் கொண்டிருந்த தனிப்பட்ட செல்வாக்கினால் வந்து பணியாற்றியவர்கள்.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பனி இப்படியான சட்டங்களை இந்தியாவிற்கு ஏற்படுத்தி யிருந்த போதும் இலங்கையைப் பொறுத்தவரை அச்சட்டங்கள், பாதிப்பை ஏற்படுத்த வில்லை, இலங்கைத்தீவு ஆறு வருடங்களே ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பனியின் கீழ் இருந்தது. 1802 ஆம் ஆண்டு இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாகியது. எனவே மிஷனரிமாருக்கு எதிரான சட்டங்கள் இலங்கையிற் செயற்படவில்லை. அது மட்டுமன்றி ஆரம்ப கால ஆங்கிலேய தேசாதிபதிகளான Sir Thomas Mailtaand, Sir Robers Brownrigg ஆகியோர் கிறிஸ்தவ மதப்பிரசாரத்தை ஆதரிப்பவர்களாகவும் மிஷனரிமாருக்கு சகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகளையும் செய்யும் வாஞ்சை பூண்டவர்களாகவும் காணப்பட்டார்கள். 1812இல் இந்தியாவில் பணியாற்ற அனுமதி மறுக்கப்பட்ட அமெரிக்க மிஷனரியாகிய சாமுவேல் நியூவெல் இலங்கைக்கு வந்தபோது தேசாதிபதியாக இருந்த Sir Robert Borwnrigg அவரை மனமகிழ்ச்சியுடன் வரவேற்றார்.[2] ஆனால் தமது தலைநகராகிய கொழும்பில் அமெரிக்கர் பணியாற்றுவதனை அவர் விரும்பவில்லை. எனவேதான் இலங்கைத் தீவின் வடகோடியில் இருந்த யாழ்ப்பாணத்தை அமெரிக்க மிஷனரிமார் பணிக்களமாகத் தேர்ந்துகொள்ளும்படி ஊக்கமளித்தார். இக்காரணிகளால் 1812 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் அமெரிக்க மிஷனின் பணிக்களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அமெரிக்கன் மிஷன் தமிழ் மக்களின் மிஷன் ஆயிற்று. 1816 ஆம் ஆண்டு ஓர் அமெரிக்கன் மிஷன் அணியும் 1820 ஆம் ஆண்டு இன்னோர் மிஷன் அணியும் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன. ஆனால் இதற்குப் பின்னர் 1833 ஆம் ஆண்டு வரை புதிய அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்திற்கு வரவில்லை. இதற்குக் காரணம் 1820 இல் Sir Edward Barnes என்ற துணைத்தேசாதிபதி அமெரிக்கர் வருகைக்குத் தடை விதித்தமையேயாகும்.[3] 1883 ஆம் ஆண்டு கோல்புரூக் விசாரணைக் குழுவினர் இத்தடையை நீக்கும்படி சிபார்சு செய்தனர். ஆனால் அதே வருடம் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பனியும் இந்தியாவில் பிறநாட்டு மிஷனரிமாருக்கான தடையை ரத்து செய்தது. இதனால் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய தலை சிறந்த............. இந்தியாவிற்குச் செல்லத் தொடங்கினர். வட்டுக்கோட்டையிற் பணியாற்றிய டானியல் பூவர் மதுரைக்குச் சென்றார். உடுவிலில் பணியாற்றிய மைரன் வின்ஸ்லோ சென்னைக்குச் சென்றார். பண்டத்தரிப்பில் பணியாற்றிய டாக்டர் ஜோன் ஸ்கடர் ஆற்காட்டுக்குச் சென்றார். இவ்வாறு இந்தியாவுக்குச் சென்ற அமெரிக்கன் மிஷனரிமார், யாழ்ப்பாணத்தில் தாம் பயிற்றுவித்த ஆசிரியர் சிலரையும், மத போதகர் சிலரையும், இந்தியாவுக்கு அழைத்துச் சென்றனர். அது மட்டுமன்றித் தம்முடன் பழகிய தமிழ் அறிஞர்களை இந்தியாவிற்குச் சென்ற பின்னரும் கலந்தாலோசித்தனர். பிற்காலத்தில் வந்த அமெரிக்கன் மிஷனரிமார் மதுரையையும் யாழ்ப்பாணத்தையும் ஒரே பணிக்களமாகவே கருதினார்கள்.[4] யாழ்ப் பாணத்தில் பணியாற்றிய அமெரிக்க மிஷனரிமார் மதுரைக்குச் செல்வதும் மதுரையில் பணியாற்றிய அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்திற்கு வருவதும் அடிக்கடி நடை பெற்றன. இதுவே அமெரிக்க மிஷனிமார் தென் இந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான கல்விசார் ஊடாட்டத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்ய வழிவகுத்தது.

**பத்தொன்பதாம் நூற்றாண்டு போக்குவரத்துப் பாதைகள்.**

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான புகையிரதப்பாதை 1905 ஆம் ஆண்டு தான் நிறுவப்பட்டது. அதற்கு முன்னர் மக்கள் காடுகளினூடாகவே கொழும்பைச் சென்றடைந்தனர். அப்படிச் சென்றடைய ஒரு மாதம் காலம் சென்றது. இதனால் யாழ்ப் பாணத்து மக்கள் தமது முக்கிய கருமங்களைக் கொழும்பிலன்றித் திருவனந்தபுரம், திண்டுக்கல், நாகர்கோவில், சென்றை, மதுரை, திருவண்ணாமலை முதலிய பட்டணங்களிலே தான் செய்து வந்தனர். கொழும்பு நகர், சிங்கப்பூர், ரங்கூன், பீனாங் போன்ற ஒரு தூர தேசத்துப் பட்டினமாகவே அவர்களுக்குக் காணப்பட்டது. யாழ்ப்பாணத்திற் பணியாற்றிய அமெரிக்கரும் அமெரிக்காவில் இருந்து பம்பாய் கல்கத்தா போன்ற துறைமுகங்களுக்கு வந்து பாக்குத்தொடு கடலைக் கடந்து, ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வெட்டித்துறை முதலிய துறைமுகங்களினூடாகத் தமது பணிக்களங்களைச் சென்றடைந்தனர். சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் ஒருவர் இளைப்பாறிய போது மக்கள் அராலித் துறைமட்டும் சென்று அவருக்குப் பிரியாவிடை நல்கினர். அவர் அங்கிருந்து ஊர்காவற்றுறை ஊடாக சென்னை சென்று, தமது பயணத்தைத் தொடர்ந்திருக்க வேண்டும். 1905 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையிலான புகையிரதப் பாதை திறக்கப்பட்டதைப் பற்றி வரலாற்று ஆசிரியராகிய அ. முத்துத் தம்பிப்பிள்ளை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "யாழ்ப்பாணப் புகையிரதப் பாதை தொடங்கப்பட்டு 1902 இல் உள்ளூர் புகையிரதப் பாதையும் 1905 ஆம் வருடத்தில் கொழும்பு புகையிரதப் பாதையும் திறக்கப்பட்டன. இந்தப் புகையிரதப் பாதையை நமக்காக்கி கொடுத்த நன்றிக்கு வெஸ்ட்றிச்வேபேரால் யாழ்ப்பாணத்தார், ஓர் மகாமண்டபம், நகர் மத்தியில் அமைந்திருக்கின்றார்கள். முந்நாளில் தரைமார்க்கமாக ஒரு மாதத்திற் சென்றடையும் கொழும்பு இப்போது ஒரு பகலில் அடைய போகின்றது." [5]

யாழ்ப்பாணத் தென்னிந்தியக் கல்வி கலாசார ஊடாட்டம் - அமெரிக்க மிஷனின் பங்களிப்பு என்ற விடயத்தை ஆறு தலைப்புக்களின் கீழ் ஆராயலாம்.

அவையாவன:

அ. கல்விநிலையங்கள்

ஆ. வேதாகம மொழி பெயர்ப்பு முயற்சிகள்

இ. அகராதி முயற்சிகள்

ஈ. கண்டன நூல்கள்

உ. பத்திரிகைகள்

ஊ. திருச்சபை இணைப்புக்கள்.

**கல்வி நிலையங்கள்**

1816 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காலடி எடுத்துவைத்த அமெரிக்க மிஷனரிமார் 1823 ஆம் ஆண்டு ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியை வட்டுக்கோட்டையில் நிறுவினர். வட்டுக்கோட்டை செமினரி என அழைக்கப்பட்ட இக்கல்லூரி ஆசியாவில் நிறுவப்பட்ட மிகப்பழமை வாய்ந்த கல்லூரி எனக் கருதப்படுகின்றது. இலங்கையிலோ, இந்தியாவிலோ 1830 ஆம் ஆண்டு வரை இதற்கீடான கல்வி நிலையங்கள் எதுவும் அமைக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு ஆங்கில மொழி போதனா மொழியாக இருந்த போதும் தமிழ் மொழி, சமஸ்கிருதம் ஆகியன பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளுவதிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதன் அதிபராக டானியர் பூவர் பணிபுரிந்தார். இந்தப் பல்கலைக்கழகக் கல்லூரி தென்னிந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான ஊடாட்டங்களுக்கு முக்கியமான பங்களிப்பைச் செய்தது. இக்கல்லூரியிலே கற்பதற்குத் தரங்கம்பாடி, மதுரை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் இருந்து மாணவர்கள் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தனர்.[6] செமினரியில் கற்று அரங்கேறிய பலர் இந்தியாவில் செயற்பட்ட மிஷன்களிலும் அரசாங்கத்திலும் பணியாற்றினார்கள்.

1835 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ஆம் திகதி டானியல் பூவர் மதுரையைச் சென்றடைந்தார். அவர் தம்முடன் செமினரியில் கற்று அரங்கேறிய சிலரையும் உதவிக்கு அழைத்துச் சென்றார் என்று தெரிகின்றது. டானியர் பூவர் மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, திருமங்கலம் ஆகிய இடங்களில் பாடசாலைகளை அமைத்தார். யாழ்ப்பாணத்தில் அவர் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் முதலில் ஆரம்பப்பள்ளிகளையும் பின்னர் விடுதிப் பள்ளிகளையும் இறுதியாக மதுரையில் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியையும் நிறுவினார். மதுரை மிஷன் கல்வி அமைப்பிற்கு அடித்தளமிட்டவராக டானியல் பூவர் கருதப்படுகின்றார். ஆனால் டானியல் பூவரின் மனம் யாழ்ப்பாணத்தையே நாடியது. 1844ஆம் ஆண்டு இவர் யாழ்ப்பாணம் திரும்பி, 1855 ஆம் ஆண்டு வரை மானிப்பாயில் வாழ்ந்து மறைந்தார். ஆனால் செமினரியில் கற்று அரங்கேறிய மாணவர்கள் தொடர்ந்து தென்னிந்தியாவிற்குச் சென்று பணியாற்றினர். 1855 இல் வட்டுக்கோட்டை செமினரி மூடப்பட்ட பின்னர் அங்குக் கற்று அரங்கேறிய மாணவர்கள் பலரும், ஆசிரியர்கள் சிலரும், தென்னிந்தியா விற்குப் படிப்பைத் தொடரவும் உத்தியோகங்களைத் தேடவும் சென்றனர். 1857 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் தனது முதலாவது பரீட்சையை நடாத்திய போது வட்டுக்கோட்டைச் செமினரியில் கல்வியை முடித்த சீ.டபிள்யூ.தமோதரம்பிள்ளை அவர் களும் செமினரியில் அவருக்குக் கற்பித்த டானியல் கறோல் விவநாதபிள்ளை அவர்களும் அப்பரீட்சையில் சித்தியெய்தினார்கள். இவர்களே சென்னைப் பல்கலைக்கழத்தின் முதலாவது பட்டதாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டுக்கோட்டைச் செமினரியில் முதலாவது தமிழ் ஆசிரியராக விளங்கிய கபிரியேல் திரேசாவின் மகன் சௌந்திரநாயகம் பிள்ளை இந்தியாவில் பிரபல வழக்கறிஞரானார். தென்னிந்தியாவில் ஆறுமுக நாவலருக்குத் துணை நின்றவர் வழக்கறிஞர் சௌந்தரநாயகம் பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கதாகும். யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிந்தியாவிற்குச் சென்று கல்விச் சேவையாற்றிய குடும்பங்களில் பிரபல்யமான மூன்றினை ஈண்டுக் குறிப்பிடலாம். முதலாவது சீ. டபிள்யூ. தாமோதரம்பிள்ளை குடும்பம், இவர் பத்திரிகை ஆசிரியர், அரசாங்க உத்தியோகத்தர், நீதிபதி என்ற பல பதவிகளை வகித்தவர். பதிப்புத் துறையில் ஆர்வத்தோடு ஈடுபட்டமையால் தென்னிந்திய கலாசார மையத்தின் மூல வேர்களுக்கே செல்லும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். இவருடைய மக்களில் ஒருவரான பிரான்சிஸ் கிங்ஸ்பரி அடிகளார் கிறிஸ்துவ மதப்போதகராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் நூல் ஆசிரியராகவும் இந்தியாவில் இலங்கையிலும் பணியாற்றினார். 1926 ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி 1947 ஆம் ஆண்டு மறைந்தார். வட இந்தியா, தென்னிந்தியா, மெசப் பொத்தோமியா, கொழும்பு, யாழ்ப்பாணம் எனப் பல இடங்களுக்கும் சென்று தமிழ்ப் பணியும் மதப்பணியும் ஆற்றியவர். நீண்ட காலம் பசுமலை இறையியற் பள்ளியிலும் பின்னர் பங்களூர் இறையியற் பள்ளியிலும் பணியாற்றியவர். இவர் எழுதிய கண்ணன் கதை, புத்தர் சரித்திரம், History of Tamil Literature, இராவ்சாகிப் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் சரித்திரச் சுருக்கம் என்னும் நூல்கள் அச்சுவாகனம் ஏறும் முன்னரேயே அழிந்துபோனது, தமிழ் மக்களின் துர்ப்பாக்கியமே யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகத்தி விசுவநாதன் வட்டுக்கோட்டை செமினரியில் கற்று அரங்கேறியவர். 1839 ஆம் ஆண்டு செமினரி அறிக்கையில் அவருடைய பெயர் வீரகத்தி விசுவநாதர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொன் பூலோகசிங்கம் அவர்கள், வின்ஸ்லோ பாதிரியார் இவரை Bela kellog என்று அழைத்ததாகவே குறிப்பிடுகின்றார்.[7] இவர் தென்னிந்தியாவுக்குச் சென்ற பின்னர் மிஷனரிமாரின் அகராதிப் பணிக்குப் பெரிதும் உதவி புரிந்ததாகத் தெரிகின்றது.[8] இவருடைய மகனாகிய வி. கனகசபை பிள்ளை அவர்களே. ''1800 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்'' என்ற சிறந்த நூலை இயற்றினார். வி.கனகசபைப்பிள்ளை 1855 ஆம் ஆண்டு தென்னிந்தியாவிற் பிறந்து 1906 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஹென்ஸ்மன் சகோதரர்கள் தென்னிந்தியாவிலே சிறப்புப் பெற்ற இன்னொரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய பூர்வீகம் யாழ்ப்பாணத்தில் உள்ள வேலணை ஆகும். பெரிய தம்பி நாகநாதர் என்ற வேலணை வாசியின் மகனே ஜோன் ஹென்ஸ்மன் என்னும் அங்கிலிக்கன் மதகுருவானவர். இவருடைய 6 பிள்ளைகளில் மூன்று மக்கள் சென்னைப் பல்கலைக்கழக B. A. பரீட்சையில் சித்தி எய்தி தென்னிந்தியாவிலேயே பதவிகள் வகித்தனர். ஜோன் ஹென்ஸ்மன் சென்னை பல்கலைக்கழகத்தின் பதிவாளராகவும், ஜேம்ஸ் ஹென்ஸ்மன் கும்பகோணம் அரசினர் கல்லூரி அதிபராகவும் பதவி வகித்தனர். இவருடைய தயாளசிந்தனையைப் பற்றி அவரின் கீழ் தமிழ் பண்டிதராக இருந்த உ. வே. சாமிநாத ஐயர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

> ''கும்பகோணம் காலேஜில் ஹென்ஸ்மன் என்பவர் பிரின்ஸ் சிப்பலாக இருந்தபோது ஒரு சேவகனை எதற்காகவோ கண்டித்தார். அவன் சிறிதும் அஞ்சவில்லை. அதிகமாகப் பேச வேண்டாம். நீங்களும் சர்க்கார் சம்பளக்காரன் நானும் சர்க்கார் சம்பளக்காரன். உங்களுக்குள்ள சுதந்திரம் எனக்கும் உண்டு என்று எதிர்த்துப் பேசத் தொடங்கினாள். ஹென்ஸ்மன் தயவுள்ளவராகையால் ஒன்றும் செய்யவில்லை.''[9]

தென்னிந்தியாவின் தலைசிறந்த தமிழ் அறிஞராகிய திரு வி. கல்யாணசுந்தர முதலியாருக்கு யாழ்ப்பாணத்து கதிரவேற்பிள்ளை ஆசிரியராக வாய்த்தது போலவே இந்தியாவின் தலைசிறந்த ஆங்கிலப் பேச்சாளராகிய (Silver Tongued Orator) மாகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியாருக்கு ஆங்கில ஆசிரியராக யாழ்ப்பாணத்து ஜோன் ஹென்ஸ்மன் வாய்க்கப் பெற்றார். மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் ஜோன் ஹென்ஸ்மனைத் தமது குருவாகவே கருதினார். தமது குரு வயோதிபத்தை அடைந்திருந்த காலத்தில் அவரைப் பார்ப்பதற்காக மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் யாழ்ப்பாணம் வந்து திரும்பினார் எனத் தெரிகின்றது. யாழ்ப்பாணக் கல்லூரியின் துணை அதிபராக இருந்த ஜே.வி.செல்லையா பங்களூரில் மகாகனம் ஸ்ரீநிவாச ஐயரைச் சந்தித்தபோது அவர் தமது குருவைப் பற்றி மிகுந்த ஆர்வத்தோடு விசாரித்ததாக எழுதியுள்ளார்.[10]

### கிறிஸ்தவ வேதாகம மொழிபெயர்ப்பு

தென்னிந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் கல்வி சார் ஊடாட்டங்களுக்குக் காரணமாய் அமைந்த இன்னொரு முக்கியமான விடயமாக இருந்தது கிறிஸ்தவ வேதாகம மொழிபெயர்ப்பாகும். ஒரு காலகட்டத்தில் மொழிபெயர்ப்பு வேலை யாழ்ப்பாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷனரிமாரிடமும், யாழ்ப்பாண அறிஞர்களிடமும் ஒப்படைக்கப்பட்டது. கிறிஸ்தவ வேதாகமமானது வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு நாட்டினராலும் அறிஞர் களினாலும் மொழி பெயர்க்கப்பட்டது. முதன் முதலாக 1715 ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் பணியாற்றிய சீகன்பால்கு என்ற ஜெர்மன் தொண்டர் வேதாகமத்தின் சில பாகங்களைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சு வாகனமேற்றிய பெருமை இவருக்குரியது. 1728 இல் தரங்கம்பாடியில் பணியாற்றி வந்த சூல்ட்ஸ் என்பவர் பழைய ஏற்பாட்டையும் மொழி பெயர்த்து அச்சுவாகனம் ஏற்றினார். 1759 ஆம் ஆண்டில் இலங்கையை ஆண்ட ஒல்லாந்தர் புதிய ஏற்பாட்டினை மொழிபெயர்த்து அச்சுவாகனம் ஏற்றினார். ஒல்லாந்தர் கால மொழி பெயர்ப்புக்குப் பொறுப்பாயிருந்தவர் பிலிப் டீ.மெல்லோ என்ற மதபோதகர். இவர் கொழும்புச் செட்டி என்ற சாகித்தியத்தைச் சேர்ந்தவர். இந்த மொழிபெயர்ப்பு நூல், ஒல்லாந்தருடைய கிறிஸ்தவம் நிலைபெறாததனைப் போலவே மக்கள் மத்தியில் நிலை பெறாமற் போயிற்று. இந்த மொழிபெயர்ப்பிலுள்ள ஒரு குறிப்பு கவனிக்கப்பட வேண்டிய தாகும். இந்தப் புதிய ஏற்பாட்டிலே இலங்கை மக்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழ்மொழியைப் பேசுகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1740 ஆம் ஆண்டு தரங்கம்பாடிக்கு வந்த பெப்ரிசியஸ் (Fabricius) என்பவர் இன்னொரு மொழிபெயர்ப்பைச் செய்து அச்சுவாகனம் ஏற்றினார். 1843 இல் ரேனியஸ் என்பவர் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்துள்ளார். இந்த மொழிபெயர்ப்பு 1843 இல் மானிப்பாய் அச்சியந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது. இவ்வாறு வெவ்வேறு கால கட்டத்தில் வெவ்வேறு மொழிபெயர்ப்புக்கள் தோன்றின.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தென்னிந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றிய முக்கிய மிஷனரிச் சங்கங்களான மெதடிஸ்த் மிஷன், சேர்ச் மிஷன், அமெரிக்க மிஷன், லண்டன் மிஷனரிச் சங்கம் என்பவை சகல புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர் களும் பயன்படுத்தக்கூடிய ஒரு மொழி பெயர்ப்பின் அவசியத்தை உணர்ந்தார்கள். ஏனெனில்ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் ஒவ்வொரு குறைபாட்டைக் கொண்டு விளங்கியது. இக்காலகட்டத்தில் இலங்கை வேதாகமச் சங்கத்தின் யாழ்ப்பாணத் துணைச் சங்கம், தென்னிந்திய அறிஞர்களும் யாழ்ப்பாண அறிஞர்களும் இணைந்து ஒரு மொழி பெயர்ப்பை உருவாக்க வேண்டும் எனச் சென்னை வேதாகமச் சங்கத்திற்கு விண்ணப்பித்தார்கள்.

1839 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் துணைச்சங்கத்தின் தலைவராக விளங்கிய பீட்டர் பேர்சிவல் சென்னைக்குச் சென்றார். அப்பொழுது சென்னை வேதாகமச் சங்கத்தார் யாழ்ப்பாண துணைச் சங்கம் இவ்வேலையை மேற்கொள்ளலாம் என்றும் அதற்குச் சென்னை வேதாகமச் சங்கம் சகல உதவிகளையும் செய்யுமென்றும் தெரிவித்தனர்.

1845 ஆம் ஆண்டு தொடக்கம் பீட்டர் பேர்சிவல் தனது சகல வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டுத் தினசரி ஆறு மணித்தியாலங்கள் வேதாகம மொழிபெயர்ப்பு வேலையில் ஈடுபட்டார். அவருக்கு அருந்துணையாக விளங்கியவர் ஆறுமுகநாவலர் ஆவார். பீட்டர் பேர்சிவல் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபராக இருந்தபோது ஆறுமுகநாவலர் அங்கு உயர் வகுப்புக்குத் தமிழும் கீழ் வகுப்புகளுக்கு ஆங்கிலமும் கற்பித்து வந்தார். 1850 ஆம் ஆண்டு அக்டோபர் 20ஆம் திகதி இம்மொழிபெயர்ப்பு வேலை முடிந்தது. பிரதிகள் சென்னை வேதாகமச் சங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. சென்னையில் இருந்து பிரதிகள், தஞ்சாவூர், மதுரை, திருவனந்தபுரம் ஆகிய இடங்களி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள ஆய்வுக்குழுக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இலக்கண வித்கர் கால்டு வேல், தமிழ் அறிஞர் சார்ஜன்ட் என்னும் மேனாட்டுத் தமிழ்ப் பண்டிதர்கள் இந்த மொழி பெயர்ப்பைப் பெரிதும் பாராட்டினார்கள். ஆனால் தென்னிந்திய மிஷனரிமார் பலரும் சுதேச கிறிஸ்தவர்களும் இம்மொழி பெயர்ப்பிலே இரண்டு குறைகள் இருப்பதாகக் கூறிக்கொண்டார்கள். முதலாவதாக இம்மொழிபெயர்ப்பில் சமஸ்கிருத சொற்கள் கூடுதலாக இருந்தன. இரண்டாவதாக மூலத்திலிருந்து இம்மொழிபெயர்ப்பு சில இடங்களில் வேறு பட்டு நிற்கின்றது. இப்பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாகச் சென்னை வேதாகமச் சங்கத்தினர் மழவை மகாலிங்க ஐயரிடம் ஆலோசனை கேட்டனர். அவர் இந்த மொழி பெயர்ப்பிலுள்ள நடைமிகவும் செழிப்பாக இருக்கின்றது என்றும் யாழ்ப்பாணத்திலிருந்து இப்படியான சிறந்த தமிழ்நடை வருவது பேருவகையளிக்கின்றது என்றும் குறிப்பிட்டார். சென்னை வேதாகமச் சங்கத்தின் வெளியீட்டுச் செயலாளராகவிருந்த அகராதி வித்தகர் மைரன் வின்ஸ்லோ இந்த மொழிபெயர்ப்பு முன்பு வந்த எல்லா மொழி பெயர்ப்புக் களையும் விட மூலத்தோடு ஒத்துப் போகின்றது என்று குறிப்பிட்டார். ஆனால் தென்னிந்திய மிஷனரிமார் அந்நாட்டுப் பேச்சுத் தமிழிலே அதிக பரிச்சயமுடையவர்களாக இருந்த படியினாலும், சீகன்பால்கு, சூல்ட்ஸ், பெப்ரிசியஸ் ஆகியோருடைய சொற்பிரயோகங் களிலே பழகி வந்தவர்களான படியினாலும் யாழ்ப்பாண மொழிபெயர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.

நாவலரது அல்லது யாழ்ப்பாணத்து மொழிபெயர்ப்பு தென்னிந்தியாவில் நிலைபெற முடியாது போன போதிலும் யாழ்ப்பாணத்தில் சில காலம் அது பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது. இன்னும் சில யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ இல்லங்களில், யாழ்ப்பாணத்தின் மொழிபெயர்ப்புப் பிரதிகள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் பிறநாடு சென்ற ஒரு குடும்பத்தின் வீட்டில் ஒரு பிரதியொன்று இருக்கக் கண்டேன். இப்பொழுது இப்பிரதி என்கைவசம் உள்ளது. யாழ்ப்பாணத்தில் சில காலம் இம்மொழிபெயர்ப்புப் பிரபல்யமாகவிருந்தது என்பதற்கு சைவ தூஷணப்பரிகாரம், சுப்பிரதீபம் ஆகிய நூல்களிலே இந்த மொழிபெயர்ப்பிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டிருப்பதிலிருந்து தெரிகின்றது.

> "சலோமோன் யெகோவாவை நோக்கிச் செய்த விண்ணப்பம், c.ehsh.rh:av-cf. இஸ்ரவேலின் தேவனாகிய யெகோவாவே, உமது தாசனாகிய தாவீதுக்கு நீர் சொல்லிய வாக்கு மெய்ப்படும்படி அருள் செய்யும். தேவன் நிச்சயமாய்ப் பூமண்டலத்திலே மனிதருடன் வாசம் பண்ணுவாரா? வானமும் வானங்களுக்கு மேலுள்ள வானமும் உம்மைக் கொள்ளாதே: நான் கட்டின வீடு உம்மைக் கொள்வது எப்படி, என் தேவனாகிய யெகோவாவே, உமது அடியான் செய்யும் பிரார்த்தனையின் மேலும் விண்ணப்பத்தின் மேலும் சிந்தை வைத்தருளும், உமது அடியான் உமது சமூகத்தில் இடும் ஓலத்தையும் அவன் பிரார்த்தனையையும் கேட்டருளும், எனது நாமம் அதில் நிறுத்தப்படும் என்று நீர் குறித்த இந்த ஸ்தானத்துக்கு நேராய்ச் செய்யும் விண்ணப்பங்களைக் கேட்பீராக."[12]

ஆறுமுகநாவலர் எழுதிய சைவ தூஷண பரிகாரத்துக்கு, சுப்பிரதீபம் என்னும் நிராகரணம் எழுதிய டானியல் கறோல் விசுவநாதப் பிள்ளையும் யாழ்ப்பாண மொழிபெயர்ப்பிலிருந்தே மேற்கோள்களை எடுத்துக் காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அந்த அறுபத்திரண்டு வாரங்களும் பின்பு மஷியக் சோதிக்கப்படுவார். தமக்காக வல்ல பின்வரும் அதிபதியின் சனங்கள் நகரத்தையும் பரிசுத்த ஸ்தானத்தையும் நாசப்படுத்துவார்கள். சலப்பிரளயம் போல அதின் முடிவு வரும். முடிவு பரியந்தம் யுத்தமும் நாசமுமுண்டாக நியமிக்கப்பட்டன. அவர் ஒரு வாரமளவும் அனேகரோடே உடன்படிக்கையை உறுதிப்படுத்துவார். அந்த வாரத்தின் மத்தியில் பணியையும் நைவேத்தியத்தையும் ஒழிவிப்பார். தீர்மானிக்கப்பட்ட அறிவு பாழாய்ப் போனவைகள் மேல் சொரியப்படும் வரைக்கும், சங்காரஞ் செய்கிறவன் அரோசியமான சிறகோடே வந்திறங்குவான். தானியேல் P:E\&EG.''[13]

தென்னியாவிலுள்ள மிஷனரிச் சங்கங்கள் சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மொழி பெயர்ப்பைச் செய்யும் ஒரு புதிய குழுவை அமைத்தார்கள். இந்தக் குழுவில் 13 அங்கத்தவர்கள் இருந்தார்கள். இந்தக் குழுவிற்குத் தலைவராக சுவிசேஷ பிரபல்ய சங்கத்தைச் சேர்ந்த (S.P.G)ஹென்றிபவர் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதிலே பணியாற்றுவதற்கு யாழ்ப்பாணத்தில் பணியாற்றிவந்த லீவை ஸ்போல்டிங் என்பவரும் மைரன் வின்ஸ்லோ அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இந்தக் குழு 1858 ஆம் ஆண்டு மொழிபெயர்ப்பு வேலையை ஆரம்பித்து 1871 ஆம் ஆண்டு நூலை வெளியிட்டது. இந்த மொழிபெயர்ப்பு நூலே இப்பொழுது கிறிஸ்தவர்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.[14]

சில தமிழ் அறிஞர்கள் ஹென்றி பவர் அவர்கள் செய்த மொழிபெயர்ப்பையே நாவலர் செய்த மொழிபெயர்ப்பு என்று எண்ணிவிடுகின்றனர். மு. வரதராசன் 1955 ஆம் ஆண்டு தாம் எழுதிய 'யான் கண்ட இலங்கை' என்ற நூலில் பவரின் மொழிபெயர்ப்பை நாவலர் மொழிபெயர்ப்பு என மயங்கி, பின்வருமாறு எழுதியுள்ளார்.

''பைபிளை முதலில் மொழிபெயர்த்தவர் அவரே என்றே சொல்லப்படுகிறது. ஆனால் பைபிள் தமிழ்நடை தமிழுக்கு நன்மை செய்யவில்லை. தமிழ்ச் சொற்களும் தக்க முறையல் எடுத்தாளப்படவில்லை. வாக்கிய அமைப்பும் பல இடங்களில் பிழைபட அமைந்துள்ளது. தமிழ் நடையே அதிற் காணோம். இனிமேல்தான் திருத்தமான பதிப்புக்கள் தமிழ்நடையில் வெளிவரப்போகின்றன. முனைய மொழிபெயர்ப்புத் தமிழின் குறைகளை, தமிழ்ச் சான்றோர் ஆறுமுகநாவலரின் மேல் சாத்துவதற்கு மனம் வரவில்லை.''[15]

1967 இல், வி. செல்வநாயகம் அவர்கள் தாம் எழுதிய 'தமிழ் உரைநடை வரலாறு' என்னும் நூலில் ஆறுமுகநாவலரின் எளிய நடைக்கு உதாரணமாக மாற்கு சுவிசேஷம் 10ஆம் அதிகாரம் 23-27 ஆம் வசனம் வரையுற்ற வசனங்களைத் தருகின்றார். இவை பவர் மொழிபெயர்ப்பின் முந்திய பதிப்பொன்றிலிருந்து எடுக்கப்பட்டவை. இதே பகுதி யாழ்ப்பாண அல்லது ஆறுமுகநாவலர் மொழிபெயர்ப்பில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

''அப்பொழுது இயேசு தம்முடைய சீஷரை நோக்கி ஐஸ்வரியவான் பரமஇராச்சியத்தில் பிரவேசிப்பது அரிதென்றார். மன்னிக்கவும். மெய்யாய் உங்களுக்குச் சொல்கின்றேன். ஐசுவரியவான் தேவனுடைய இராட்சியத்திற் பிரவேசிப்பதிலும் ஒரு ஒட்டகம் ஊசியின் காதிலே நுழைவது எளிதென்று உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய சீஷர் அதைக் கேட்டு மிகவும் பிரமித்து அப்படியானால் ஆர் இரட்சிக்கப்படுவார்களென்று கேட்க இயேசு அவர்களை நோக்கி மனுஷரால் இது கூடாத காரியம். தேவனோ எந்தக் காரியத்தையும் செய்ய வல்லவர் என்றார்.''[16]

இந்த வசனங்களையே அவர் ஆறுமுக நாவலரின் எளிய நடைக்கு உதாரணமாக காட்டியிருந்தால் வேண்டும். ஆனால் செல்வநாயகம் உதாரணமாக காட்டிய பவர் மொழிபெயர்ப்பு வசனங்கள் பின்வருமாறு.

''அப்பொழுது யேசு சுற்றிப் பார்த்து தம்முடைய சீஷரை நோக்கி ஐஸ்வரியம் உள்ளவர்கள் தேவனுடைய இராட்சியத்திற் பிரவேசிப்பது மிகவும் அரிதென்றார். சீஷர் அவருடைய வாக்குகளைக் குறிதது அதிகம் பிரமித்தார்கள். பின்னும் யேசு அவர்களைப் பார்த்து பிள்ளைகளே ஐஸ்சுவரியத்தை நம்புகிறவர்கள் தேவனுடைய இராட்சியத்திற் பிரவேசிப்பது மிகவும் அரிதென்றார். சீஷர் அவருடைய வாக்குகளைக் குறித்து அதிகம் பிரமித்தார்கள். பின்னும் யேசு அவர்களைப் பார்த்து பிள்ளைகளே ஐஸ்சுவரியத்தை நம்புகிறவர்கள் தேவனுடைய இராட்சியத்திற் பிரவேசிப்பதிலும் ஒரு ஒட்டகம், ஊசியின் காதில் நுழைவது எளிதென்றார். பிரவேசிப்பது அரிது. ஐஸ்வரிய வரன் தேவன் இராச்சியத்தில் பிரவேசிப்பதிலும் அவர்கள் மிகவும் பிரமித்து அப்படியானால் யாவர் இரட்சிக்கப்படுவாரென்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். யேசு அவர்களை நோக்கி மனுஷரால் இது கூடாது தேவனால் கூடாததல்ல, தேவன் எந்தக் காரியத்தையுஞ் செய்ய வல்லவரென்றார்.''[17]

யாழ்ப்பாணத்து மொழிபெயர்ப்பு தென்னிந்தியராலே கைவிடப்பட்டாலும் யாழ்ப்பாணத்தின் கல்வி வளத்தையும் தமிழ்த்திறனையும் அறிந்து கொள்வதற்கு ஓர் ஊடகமாகவே இருந்தது என்பதில் ஐயமில்லை. பீட்டர் பேர்சிவல் யாழ்ப்பாணத்தில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு சரியானது என்பதை நிறுவுவதற்காக 1850 இல் ஆறுமுகநாவலரையும் சென்னைக்கு அழைத்துச் சென்றார். இதுவே ஆறுமுகநாவலரின் முதலாவது பயணம் என்று தெரிகிறது. இதன் பின்னர் ஆறுமுகநாவலர் தமிழ்நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் ஒரு பலம் வாய்ந்த அடித்தளத்தை உருவாக்கிக் கிறிஸ்தவ மதப் பரம்பலுக்கு எதிரான பிரசாரத்தை நடத்தி வெற்றி கண்டார்.

### கண்டன நூல்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சமய கண்டன நூல்கள் தமிழ்மொழியில் பெருந்தொகையாக வெளிவந்தன. இந்த முயற்சிகளில் தென்னிந்திய மக்களும் யாழ்ப்பாண மக்களும் சமய அடிப்படையில் வெவ்வேறு அணிகளில் இணைந்து போராடியதைக் காணமுடிகின்றது. ஆரம்பத்தில் சைவ சமயத்திற்கு எதிரான 'குருட்டு வழி' 'தற்சமயக் காட்சி' 'திருமூர்த்தி இலட்சணங்கள்' கண்டன நூல்களாகத் தென்னிந்தியாவில் இருந்து வெளிவந்தன. குருட்டு வழி என்னும் நூல் மைரன் வின்ஸ்லோ அவர்கள் தஞ்சாவூர் வேதநாயகம் சாஸ்திரியார் உதவியுடன் எழுதியதாக மயிலை சீனி வேங்கடசாமி கூறுகின்றார்.[18] இந்நூல்களுக்கு மறுப்பாக ஆறுமுகநாவலர் சைவதூஷண பரிகாரம் என்னும் நூலை வெளியிட்டார். இந்த நூலின் இரண்டாம் பதிப்பு சென்னைப் பட்டணம் வாணி நிகேதனவச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதற்கு மறுப்பாக வட்டுக்கோட்டை செமினரியின் ஆசிரியராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த டானியல் கறோல் விசுவநாதப்பிள்ளை சுப்பிரதீபம் என்ற நூலை எழுதினார். இந்நூல் 1857 ஆம் ஆண்டு மானிப்பாய் றிப்ளி அன்ஸ்ட்றோங் அச்சுக்கூடத்தில் பதிக்கப் பட்டது. சென்னையில் சீ. டபிள்யூ. தாமோதரம்பிள்ளை சைவமகத்துவம், விவிலிய விரோதம் என்னும் நூல்களை எழுதி வெளியிட்டார். கிறிஸ்தவராக இருந்த சீ. டபிள்யூ. தாமோதரம்பிள்ளை இந்நூல்களை எழுதியதற்குக் காரணம் தென்னிந்திய சைவ மரபின் மூல வேர்களுடன் தொடர்பு கொள்வதற்கே என்று கொள்ளக்கிடக்கின்றது. பதிப்புத் துறையில் ஆவலோடு ஈடுபட்டிருந்த சீ. டபிள்யூ. தாமோதரம்பிள்ளைக்குத் தமது சைவ ஈடுபாட்டைக் காட்டுவது அவசியமாக இருந்தது.[19] தென்னிந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் அச்சு வாகனம் ஏறிய பல நூல்களில் கிறிஸ்தவத்திற்கு எதிரான வாதங்கள் மேனாட்டு நாஸ்திகராலும் ஒருமைக் கொள்கையாளர்களினாலும் (Unitarians) எழுதப்பட்டவையாகும். இக்கண்டன நூல்களில் தனித்துவமான புதுமை வாய்ந்த கருத்துக்களை வழங்கியவர் நீர்வேலி சங்கர் பண்டிதர் என்றே ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[20] ஏனைய கண்டன நூல்களில் சிறப்பாக சி.டபிள்யூ.தாமோதரம்பிள்ளையின் கண்டன நூல்களில் மேனாட்டு நாஸ்திகர்களினதும் ஒருமைக் கோட்பாட்டுக்காரர்களினதும் கிறிஸ்தவத்தை எள்ளி நகையாடும் கண்டனங்கள் இழையோடியிருக்கின்றன.

**அகராதிப் பணி**

அகராதிப் பணி மேலைநாடுகளில் வளர்ந்த ஒரு துறையாகும். கிறிஸ்தவ மதப் பிரசார கருக்கு இது அவசியந் தேவையானதொரு சாதனமாகும். 1606 ஆம் ஆண்டில் மதுரைக்குச் சமயப்பணி செய்ய வந்த தத்துவபோதக சுவாமிகள் அகராதியொன்றினைத் தொகுத்தார். ப்றொயின்சா, வீரமாமுனிவர், றொட்லர் முதலிய தொண்டர்களும் தமிழ் நாட்டில் அகராதி களைத் தொகுத்து முடித்தனர். அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் பணியாற்றத் தொடங்கியதுபோது அகராதிகள் மட்டுமன்றி சாதாரண தமிழ் நூல்களைக் கூட, பெறுவது மிகவும் கடினமாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளனர். எனவே சென்னையில் இருந்து தமிழ் நூல்களைப் பெறுவதற்குத் தீர்மானம் செய்தனர். 1834 இல் றொட்லர் தொகுத்த அகராதி தென்னிந்தியாவில் வெளிவந்தபோது அதனைப் பெறுவதற்கு முயன்றனர். யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய மெதடிஸ்த், அங்கிலிக்கன், அமெரிக்கன் மிஷனரிமார் தமிழ் - தமிழ் அகராதியையும், தமிழ்- ஆங்கிலம் அகராதியையும், தமிழ் -தமிழ் ஆங்கிலம் அகராதியையும் உருவாக்க முயன்றனர். றொட்லரின் அகராதி வெளி வந்த பின்னரும் அவர்கள் ஊக்கங்குன்றாது இப்பணியில் ஈடுபட்டனர். ''றொட்லரின் அகராதி இந்திய உபகண்டத்தின் தமிழையே கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழைச் சேர்க்க வில்லை''என மைரன் வின்ஸ்லோ தாம் தொகுத்த அகராதியில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் முதல் முதல் அகராதிப் பணியில் ஈடுபட்டவர் நல்லூரிலிருந்து 1812 ஆம் ஆண்டு தொடக்கம் பணியாற்றிய ஜோசப் நைட் என்ற அங்கிலிக்கன் மிஷனரியாகும். இவருக்கு வட்டுக்கோட்டை செமினரியின் தமிழ் ஆசிரியரான காபிரியேல் திசரா, உடுவிலைச் சேர்ந்த சந்திரசேகர பண்டிதர், இருபாலை சேனாதிராஜா முதலியார், மெதடிஸ்த் மிஷனரி பீற்றர் பேர்சிவல், அமெரிக்க மிஷனரி லீவை ஸ்போல்டிங் ஆகியோர் துணை புரிந்தார்கள். 1838 இல் இங்கிலாந்துக்குச் சென்ற ஜோசப் நைட் அங்கேயே இறந்து போனார். எனவே இந்தப் பணியைத் தொகுத்து முடிக்கும் வேலை, லீவை ஸ்போல்டிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அவர் இந்த அகராதியை 1842 ஆம் ஆண்டு மானிப்பாயில் இருந்த அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் பதிப்பித்தார். இதுவே பிற் காலத்தில் மானிப்பாய் அகராதி என்றும், யாழ்ப்பாண அகராதி என்றும் குறிப்பிடப்பட்டது. இது தமிழ்ச் சொற்களை அகர வரிசைப்படுத்தி எளிய தமிழ்ச் சொற்களில் விளக்கம் கொடுத்தது.

ஆங்கிலம் -தமிழ் அகராதியை 1844 இல் மைரன் வின்ஸ்லோ மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் பதிப்பித்தார். இந்த அகராதியின் இரண்டாம் பதிப்பு 1822 ஆம் ஆண்டு லீவை ஸ்போல்டிங் அவர்களால் மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது. மூன்றாவது பதிப்பு 1888 இல் சென்னையில் இருந்த ஹகின்போதம் கம்பனியினால் வெளியிடப்பட்டது. இந்தப் பதிப்பகத்தார் நூலின் முன்னுரையில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளனர்.

> ''முதல்நூலில் யாழ்ப்பாணத்து மரபுச் சொற்கள் விரவிக் கிடந்தன. தென்னிந்திய மொழிக்கு ஏற்றவாறு அதிலே கூறப்பட்டிருந்த தமிழ்ப் பதங்கள் மாற்றப்பட்டுள்ளன.''[21]

தென் இந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் அதிக கலாசாரத் தொடர்களை ஏற்படுத்திய அகராதி 1852 இல் வெளிவந்த மைரன் வின்ஸ்லோ அகராதியாகும். இந்த தமிழ்ச் சொற்களுக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் விளக்கம் கூறும் மிகச் சிறந்த படைப்பு. இன்று வரை தென்னிந்தியப் புத்தகசாலையில் அதிகளவு விற்பனையாகும் தமிழ் அகராதி வின்ஸ்லோ அகராதி என்றே கருதப்படுகின்றது. இத்தமிழ் - ஆங்கில அகராதியின் ஆரம்ப வேலைகளும் யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஜோசப் நைட் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இதன் பொறுப்பை உடுவிலில் பணியாற்றிய மைரன் வின்ஸ்லோ ஏற்றுக் கொண்டார். இவர் பின்னர் சென்னையில் பணியாற்றச் சென்றமையால் தமிழ்நாட்டு அறிஞர்களினது உதவியையும் பெற்றுக்கொண்டார். சென்னை அமெரிக்கன் மிஷன் அச்ச கத்தில் இது பதிக்கப்பட்டது. தமிழ்நாட்டு அறிஞர்களாகிய இராமானுஜக் கவிராயர், விச ாகப் பெருமாள் ஐயர், ஆதிமூலம் முதலியார், ஆபிரகாம் அல்லியன், பேராசிரியர் விசுவநாதப்பிள்ளை ஆகியோர் உதவி புரிந்ததாக வின்ஸ்லோ இந்த நூலின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாண அறிஞர்களில் பின்வருவோர் இந்த அகராதி ஆக்கத்திற்குத் துணைபுரிந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.[22] ஜோசப் நைட், காபிரியேல் திசேரா, பீற்றர் பேர்சிவல், லீவை ஸ்போல்டிங், எஸ்.ஹட்சின்ஸ் ஆகியோராவார்.

வட்டுக்கோட்டை செமினரியில் கற்று அரங்கேறிய வைமன் கதிரவேற்பிள்ளை தமிழ்ப் பதக்கங்களுக்குத் தமிழிலேயே விளக்கம் கொடுக்கும் அகராதியொன்றினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இந்த அகராதியில் ஒரு பகுதியை அவர் எழுதி முடித்து 1904 ஆம் ஆண்டில் அச்சுவாகனம் ஏற்றினார். இந்த அகராதி முழுவதையும் மதுரைத் தமிழ்ச் சங்கம் தொகுத்து வெளியிட்டமையினால் இது தமிழ்ச்சங்க அகராதி என்று கூறப்படுகின்றது.

1911 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி Lexicon உருவாக்கும் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவில் ஒருவர் இலங்கையில் பணியாற்றும் மிஷன் களின் பிரதிநிதியாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இது யாழ்ப்பாணத்து மிஷன்கள் அகராதிப் பணியில் ஆற்றிய சேவையைச் சென்னைப் பல்கலைக்கழகம் நன்குணர்ந்து கொண்டதென்பதற்குச் சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பத்திரிகைகள்**

சென்ற நூற்றாண்டில் தென்னிந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் முக்கியத்துவம் பெற்ற கிறிஸ்தவப் பத்திரிகைகள் இரண்டு. அவை 1841 இல் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட உதய தாரகை பத்திரிகையும், 1855 இல் சென்னையில் நிறுவப்பட்ட தினவர்த்தமானி பத்திரிகையும் ஆகும்.

சென்ற நூற்றாண்டில் உதயதாரகையில் தென் இலங்கைச் செய்திகளைவிடத் தென்னிந்தியச் செய்திகளே கூடுதலாக இடம்பெற்றதைக் காண முடிகின்றது. 1850 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பருத்தித்துறை, மானிப்பாய், வட்டுக்கோட்டை, நீர்கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு முதலிய இலங்கைப் பட்டணங் களிலும், தென்னிந்தியப் பட்டணங்களாகிய திண்டுக்கல், மதுரை, நாகப்பட்டினம், சென்னை, தரங்கம்பாடி போன்ற இடங்களிலும் இப்பத்திரிகைக்கு முகவர்கள் இருந்ததாகப் பத்திரிகை குறித்துள்ளது. தென்னிந்திய வியாபார ஸ்தலங்களின் விளம்பரங்களைத் தாங்கி வந்துள்ளது.

யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஸ்தாபகர் பீற்றர் பேர்சிவல், தமது மிஷனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் சென்னைக்குச் சென்று ராஜதானிக் கல்லூரியில் ஆசிரியப் பணியை ஏற்றுக் கொண்டார். 1855 ஆம் ஆண்டு இவர் சென்னையில் 'தினவர்த்தமானி' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். சீ. டபிள்யூ. தாமோதரம் பிள்ளையின் ஆற்றலை இவர் அறிந்திருந்த படியினால் இதன் முதலாவது துணை ஆசிரியராக அவரை நியமித்தார். இரண்டு வருடங்களின் பின்னர் இரட்சண்ணிய யாத்ரிகம் இயற்றிய எச். ஏ. கிருஷ்ணபிள்ளை இதன் துணை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். ஆனால் இந்தப் பத்திரிகை 1857 இல் நின்றுவிட்டது. எனினும் இப்பத்திரிகையை ஆரம்பித்த பீற்றர் பேர்சிவல் யாழ்ப்பாணத்தி லிருந்து சென்னை சென்ற அறிஞர்கள் இந்தியாவில் கால் ஊன்றுவதற்குப் பெருமளவில் உதவிபுரிந்தார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். லீவை ஸ்போல்டிங் யாழ்ப் பாணத்திலிருந்த போது எழுதி வெளியிட்ட பரதேசியின் மோட்ச பிரயாணம் என்னும் மொழிபெயர்ப்பு நூலே கிருஷ்ணபிள்ளையின் இரட்சணிய யாத்திரிகத்திற்கு அடித்தளமாயிற்று.

**திருச்சபை இணைப்புக்கள்**

தென்னிந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் இருந்த திருச்சபைகள் வெவ்வேறு கால கட்டங்களில் இணைந்து கொண்டமையும் தென்னிந்திய - யாழ்ப்பாணக் கிறிஸ்தவர்கள் மத்தியில் உறவு ஏற்பட வழி சமைத்தது. 1816 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்த அமெரிக்க மிஷனரிமார் 1833 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மதுரையிலும் சென்னையிலும் ஆற்காட்டிலும் பணியாற்றத் தொடங்கினார்கள். ஆரம்பத்தில் இவை யாழ்ப்பாண மிஷன் என்றும் சென்னை மிஷன் என்றும் ஆற்காடு மிஷன் என்றும் அழைக்கப்பட்டன. இவற்றை விட அலகபத் நகரைத் தலைநகராகக் கொண்ட ஒரு மராத்தி மிஷனும் சென்ற நூற்றாண்டில் செயற்பட்டு வந்தது. ஆனால் இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் தென்னிந்தியாவில் இருந்த திருச்சபைகளை இணைக்கும் முயற்சி ஆரம்பமானது. 1905 ஆம் ஆண்டு தென்னிந்தியா விலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றிய கொங்கிரிகேஷனல் மிஷன்கள் ஒரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பிற்குள் வந்தன. இந்தக் கொங்கிரிகேஷனல் சபைகளில் சில லண்டன் மிஷனரி சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டவை. 1909 இல் தென்னிந்தியாவில் இருந்த பிறெஸ் பிட்டீரிய திருச்சபைகளும் கொங்கிரிகேஷனல் சபைகளும் ஒருங்கிணைந்து தென்னிந்திய ஐக்கிய திருச்சபை S.I.U.C என்ற பெயருடன் ஒரே அமைப்பாயின. இந்த ஐக்கியத் திருச் சபையில் ஏழு சபாசங்கங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றே யாழ்ப்பாண சபாசங்கம் ஆகும்.

1947 ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் அங்கிலிக்கன், மெதடிஸ்த், S.I.U.C திருச்ச பைகள் ஒரே அமைப்பின் கீழ் வந்தன. அதுவே தென்னிந்திய திருச்சபை என்ற ஐக்கியம் ஆரம்பத்தில் 9 திருமண்டலங்கள் இருந்தன. S.I.U.C யின் ஒரு சபாசங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தராகவிருந்த சபாபதி குலேந்திரன், யாழ்ப்பாணத்தின் முதலாவது பேராய ரானார். அவருடைய பிரதிஷ்டை ஆராதனை சென்னை புனித ஜோர்ஜ் பேராலயத்தில் நடைபெற்றது. இரண்டாவது பேராயர் அறிவர் டி.ஜே.அம்பலவாணர், வட்டுக்கோட்டையில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். மூன்றாவது பேராயர் கலாநிதி எஸ்.ஜெயநேசன், சென்னை புனித ஜோர்ஜ் தேவாலயத்திற் பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

1833 ஆம் ஆண்டு மிஷனரி மார் ஏற்படுத்திய ஊடாட்டம் இன்றுவரை திருச் சபையில் தொடர்கின்றது.

### அடிக்குறிப்புகள்

1) Rev.Mr.J.D.Palm இவரை யாழ்ப்பாணத்து மக்கள் பாலன் பாதிரியார் என்று குறிப்பிட்டதாகத் தெரிகின்றது. இவரே யாழப்பாணத்திற் பணியாற்றிய முதலாவது பிரிட்டிஷ் சமயப்பிரசாரகர். இவர் 1805 தொடக்கம் 1812 வரை தெல்லிப்பளையில் பணியாற்றினார். 1816 இல் தெல்லிப்பளைக்கு வந்த டானியல் பூவர் இவரைப் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

   We see some of good effects of the Rev Palm's exertions among this people. Though he laboured under great disadvatages and prejudices of the people are in some degree removed; some knowledge of Christinaity was communicated and here are ten or tweleve boys who attended his school now wishing to be instructed by us. Missionary Herald, January 1818, Page.38..

2) It has been a matter of peculiar satisfaction to me that I have seen under my government Weslyans, Presbyterians and Baptists, uniting with regular clergy of the Church of England, Brownrigg's, Statement - cited by Ruberu Ranjith - Early British Educational Activities, Education in Ceylon - A cetenary Volume, Part II, 1969, Page - 369.

3) Sir Edward Barnes 1820 இல் இலங்கையில் துணைத் தேசாதிபதியாகவும் 1824 தொடக்கம் 1831 வரை இலங்கை தேசாதிபதியாகவும் இருந்தவர். வாட்டர்லூ போர் முனையில் வெலிங்டன் பிரபுவுக்கு ஒரு துணைத் தளபதியாக நின்று போரிட்டவர்.

   அக்காலகட்டத்தில் அமெரிக்கா, பிரான்ஸ்க்கு ஆதரவு காட்டிய காரணத்தால் அமெரிக்கரை நஞ்சென வெறுத்தவர்.

4) 1947 இல் தென்னிந்தியத் திருச்சபை உருவாக்கிய பொழுது யாழ்ப்பாணம் தனியான ஒரு திருமண்டல மாகக் கூடாது. அது மதுரைத் திருமண்டலத்தின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும் என்று இந்தியக் கிறிஸ்தவர்கள் சிலர் வாதிட்டனர்.

5) முத்துத்தம்பிப் பிள்ளை அ.யாழப்பாணச் சரித்திரம், 1912, பக்கம் 130.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) வட்டுக்கோட்டைச் செமினரியின் 1846 ஆம் ஆண்டு அறிக்கை, அந்த வருடம் 5 மாணவர்கள் தென்னிந்தியாவில் இருந்து வந்து கற்றதாகக் குறித்துள்ளது.

Trienniel Report of the Battocotta Seminary, 1846, American Mission Press, Manipay, 1846.

7) வட்டுக்கோட்டைச் செமினரியின் அதிபராகவிருந்த எச்.ஆர்.ஹொய் சிங்டன் 03.07.1846 இல் எழுதிய கடிதம் ஒன்றில் கெல்லொக் நல்ல பையன், ஆனால் இன்னும் கிறிஸ்தவனாக வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

8) மேனாட்டுப் பெயர்களைச் சூடிக்கொண்டவர்கள் எல்லாருமே கிறிஸ்தவர்களாயினர் என்று கொள்வது தவறு. செமினரி மாணவர்களுக்கு உதவி செய்த அமெரிக்க நல்லுபகாரிகளின் பெயர்கள் அவர்களுக்குச் சூட்டப்பட்டன.

9) சாமிநாத ஐயர், நினைவு மஞ்சரி, இரண்டாம் பாகம், பக்கம் 140.

10. Some of the foremot of South India were his pupils - for instance when I called on the Rt.Hon.Srinivasasashri in Bangalore. He learning that I went from Jaffna expressed the desire to visit Jaffna some day to see his ole Guru.

On arrival in Jaffna I hastent to Mr.Hensman and related this part of my Interview. He said are you sure that Srinivasan said that?

When I was principal of the Kumbakonam College he served as Lecturer and in selecting a Professor, I passed over him and appointed one with a Masters Degree, So he has no grievance aganist me?

This emminant statesman did come to Jaffna and had a delightful interview with bis old teacher.

"The Morning Star" American Ceylon Mission, weekly, 26.04.1946.

11) இத்தகவல்கள் பேராயர் சபாபதி குலேந்திரன் எழுதிய கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு (1967) என்ற நூலிலிருந்து திரட்டப்பட்டவை.

12) ஆறுமுகநாவலர், சைவதூஷண பரிகாரம், துன்மதி வருடம் சித்திரை மாதம், இரண்டாம் பதிப்பு, சென்னை பட்டணம், வாணி நிகேதன அச்சுக்கூடம், பக்கம் எ.ஆலயப்பிரகணம்.

13) டானியல் கறோல் விசுவநாதபிள்ளை 'சுப்பிரதீபம்' 1857 பக்கம் Ripley and Strong Printers.

14) பேராயர் சபாபதி குலேந்திரன் - தமிழ் வேதாகமத்தின் வரலாறு, 1966 CLS, Madras, பக்கம் 182.

15) வரதராசன், மு., யான் கண்ட இலங்கை, பாரி நிலையம், 1955, இரண்டாம் பதிப்பு, பக்கம் 112.

16) செல்வநாயகம், வி.தமிழ் உரைநடை வரலாறு, 1957, பக்கம் 98, மத்தேயு 10:23-27.

17) பழைய புதிய உடன்படிக்கைகள் அடங்கிய வேதப்புத்தகம், 1852, சென்னை அமெரிக்கன் மிஷன் அச்சகம்.

18) வேங்கடசாமி, மயிலை, சீனி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், 1962, அழகப்பா புத்தக நிலையம், பக்கம் 187.

19) Young R.F and S.Jebanesan, The Bible Trembled, Vienna, 1995, The Hindu Christian Controversies of nineteenth centure, Ceylon, Page 157.

20) Ibid page 154.

21) English and Tamil Dictionary, Third Edition, 1888, Higginbotham & Co., Preface.

22) Winslow, Miron; A comprehensive Tamil and English Dictionary High and low Tamil, 1862, Preface.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு பற்றிய தவறான எண்ணங்களும் மேற்கொண்டு செய்ய வேண்டியவையும்

டொக்டர் எம்.கே.முருகானந்தன்
M.B.B.S.(Cey.), DFM (Col.), FCGP (SL)

**தவறான எண்ணங்கள்**

நீரிழிவு நோயின் அறிகுறிகள் பற்றி பலரும் தவறான கருத்துக்களைக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

- எனக்குப் புண்கள் விரைவாக ஆறிவிடுகின்றது
- எனக்குத் தண்ணீர் விடாய் இல்லை
- எனக்கு அடிக்கடி சிறுநீர் போவதில்லை
- எனக்குத் தலைச்சுற்றுக் கிடையாது
- எனக்குக் களைப்புக் கிடையாது.

எனவே எனக்கு நீரிழிவு இருக்காது எனப் பலரும் தாமாகவே முடிவு கட்டுகின்றனர்.

இது தவறான கருத்தாகும். நீரிழிவின் ஆரம்ப நிலையில் பெரும்பாலானவர்களுக்கு எந்த அறிகுறிகளும் இருப்பதில்லை. ஆனால் அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிவதற்கிடையிலேயே இருதயம், இரத்தக் குழாய்கள், நரம்புகள், மூளை போன்றவற்றில் தாக்கங்கள் ஆரம்பித்து விடுகின்றன. இவற்றினால்தான் பிற்காலத்தில் பக்கவாதம், மாரடைப்பு, கால் விறைப்பு, சிறுநீரகம் பழுதடைதல், மாறாத கால் புண்கள், கால்களை சத்திரசிகிச்சை மூலம் அகற்றல் போன்ற பாரிய பாதிப்புகள் ஏற்படுகின்றன.

**மறைந்திருக்கும் நோய்**

இந்நோயின் மிக ஆபத்தான அம்சம் என்னவெனில் மிகப் பெருந்தொகையான மக்கள் தமக்கு நீரிழிவு இருப்பதை அறியாமல் இருக்கிறார்கள் என்பதுதான். சுமார் 50 சதவிகித மானவர்கள் தமக்கு நீரிழிவு இருப்பதை அறியாமல் இருக்கிறார்கள் எனக் கணிப்பீடுகள் கூறுகின்றன. மிகத் தாமதமாக அதுவும் தமக்கு அந்நோயின் பின் விளைவுகள் வந்த பின்னரே பெரும்பாலானவர்கள் தம்நோயைக் கண்டறிகின்றனர். இதற்குக் காரணம் நீரிழிவு நோய் பற்றிய மேற்கூறிய தவறான எண்ணங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரியும் வரை காத்திருப்பது மூடத்தன மானதாகும்.

- இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலமே நீரிழிவு நோயை ஆரம்ப நிலை யிலேயே கண்டறிய முடியும். பலவிதமான இரத்தப் பரிசோதனைகள் உள்ளன. மருத்துவரின் ஆலோசனையுடன் தமக்கேற்றதைச் செய்து கொள்ளலாம்.
- சிறுநீர்ப் பரிசோதனை செய்வது இந்நோயைக் கண்டறிவதற்கான நம்பிக்கையான முறையல்ல என்பதால் பெரும்பாலும் செய்யப்படுவதில்லை.

**யாருக்கு இரத்தப் பரிசோதனை அவசியம்.**

மருத்துவர்கள் வேறு நோய்களுக்காக அவரிடம் செல்லும் போதும் பிரஸரை அளந்து பார்க்கிறார்கள். அதேபோல தமக்கு சந்தேகம் உள்ள பலரையும் சீனிக்கான இரத்தப் பரிசோதனை செய்யும்படி வேண்டுகின்றனர். இவ்வாறு இரத்தத்தில் சீனிப்பரிசோதனை செய்வது பல காரணங்களுக்காக இருக்கக் கூடும்.

மருத்துவரிடம் செல்லாதபோதும், உங்கள் இரத்தத்தில் சீனியின் அளவு சரியாக இருக்கிறதா, அதிகரித்திருக்கிறதா என அறியப் பரிசோதனை செய்ய வேண்டும் முக்கியமான கீழ்க் கண்டுள்ளவர்கள் குருதியில் தமது சீனியின் அளவைச் செய்தறிவது அவசியமாகும்.

- பொதுவாக 40 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் கட்டாயம் செய்ய வேண்டும்.
- கொழுத்த உடல்வாகு உள்ளவர்களும் கட்டாயம் செய்ய வேண்டும். எடை யானது உயரத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். இதை உடற் திணிவு அலகு என்று குறிப்பிடுவார்கள். ஆங்கிலத்தில் Body Mass index (BMI) ஆகும். இது இலங்கை போன்ற தெற்காசிய நாட்டவர்களுக்கு 23ற்குள் இருக்க வேண்டும். 25 மேற்பட்ட வர்கள் செய்து கொள்வது விரும்பத்தக்கது.
- தொந்தியான வயிறுள்ளவர்களும் செய்ய வேண்டும்.
- தமது குடும்பத்தில் நீரிழிவு உள்ளவர்கள், பெற்றோர், சகோதரர்கள் போன்ற வரிடையே நீரிழிவு உள்ளவர்களுக்கு அது வருவதற்கான சாத்தியம் அதிகம். எனவே அவர்களுக்கும் அவசியமாகும்.
- உடல் உழைப்பற்ற, வாழ்க்கை முறையுள்ளவர்கள்.

**உலகளாவிய ரீதியில் பாதிப்பு அதிகமுள்ள நோய்.**

இன்றைய கால கட்டத்தில் நீரிழிவு நோயின் பாதிப்பு மிக அதிகமாக இருப்பது மாத்திர மின்றி வேகமாக அதிகரித்தும் வருகிறது. உலகளாவிய ரீதியில் 350 மில்லியன் மக்கள் இந்நோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். இந்நோயின் பாதிப்பால் மரணத்துக்கு ஆளாபவர்கள் தொகை பயமுறுத்துவதாக இருக்கிறது. 2004 ம் ஆண்டு கிடைத்த தக வல்களின் பிரகாரம் சமார் 3.5 மில்லியன் மக்கள் இந்நோயின் தாக்கத்தால் மரணத்தைத் தழுவினர். 8 வருடங்கள் கழிந்த நிலையில் இன்று அது இரு மடங்காக அதிகரித்து இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள் எடுத்துக் கொண்டால் பத்து சதவிகிதத்தினர் (10.3%) இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நகர்ப்புற மக்கள், கிராமப்புற மக்கள் என வேறுபாடின்றி அனைவரையும் பாதித்து வருகின்ற போதும் நகர்ப்புறத்தில் 16.4% சதவிகிதமாக இருக்கின்ற அதேநேரம் கிராமப்புறங்களில் 8.7% சதவிகிதமாக இருக்கிறது. நகரப்புற மக்களின் சற்று அதிகமாக இருப்பதற்குக் காரணம் அவர்களது வாழ்க்கை முறைகள் தான்.

**நீரிழிவு ஏன் அதிகமானவர்களைப் பாதிக்கிறது.**

- போதிய உடலுழைப்பில் ஈடுபடமுடியாமல் இருப்பதும்
- தவறான உணவு முறைகளும்
- கடைகளில் விற்கும் திடீர் உணவுகளை (Fast Foods) அதிகளவில் உண்பதும் முக்கிய காரணங்களாகும்.

எண்ணெயில் பொரித்ததும், அதிகளவு மாச்சத்து, இனிப்புச் சத்து, உப்பு ஆகியன கொண்ட அத்தகைய குப்பை உணவுகளாவன.

- நீரிழிவு நோயை மட்டுமன்றி கொலஸ்டரோல்
- பிரஷர்
- பக்கவாதம்
- மாரடைப்பு போன்ற இருதய நோய்கள்
- சிறுநீரக செயலிழப்பு
- புற்றுநோய்

போன்ற பலவற்றையும் கொண்டு வருகின்றன என்பதை நாம் உணர வேண்டும்.

இன்று கிராமப் புற மக்களின் உணவு முறைகளிலும் இத்தகைய தவறான உணவுப் பழக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் அவர்களிலும் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரிக்கும் சாத்தியம் அதிகரிக்கிறது. எனவே ஆரோக்கியமான வாழ்க்கை முறையை யாவரும் கடைப்பிடிப்பது அவசியம்.

**நீரிழிவாளரின் உணவு**

**நீரிழிவாளர்கள் எத்தகைய உணவை உண்ண வேண்டும்? எவ்வளவு உண்ண வேண்டும்?**

இவைதான் நீரிழிவாளர்கள் அறிய விரும்புகிற முக்கிய விடயமாக இருக்கிறது. ஆனால் இன்றைய நிலையில் நீரிழிவாளர்களுக்கு எனத் தனியான உணவுத் திட்டம் என எதுவுமே கிடையாது எனச் சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படவீர்கள். ஆனால் அதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலாவதியான கருத்து**

''நீரிழிவாளர்கள் சீனி சேர்க்கக் கூடாது.சோற்றைத் தவிர்க்க வேண்டும். அரிசி கோதுமை ஆகிய மாப்பொருள்களால் செய்யப்படும். இடியப்பம், பிட்டு, அப்பம், நூடில்ஸ் போன்ற சிற்றுண்டிகளை குறைந்தளவே உண்ண வேண்டும்'' என்பதே பெரும்பாலான நோயாளர் களின் எண்ணமாக இருக்கிறது.

பல மருந்துவர்களும் இதையே நோயாளர்களுக்கு ஆலோசனையாக கூறுகிறார்கள்.

**தற்போதைய கருத்து.**

இப்பொழுது உலகளாவிய ரீதியில் மருத்துவர்களாலும், உலக சுகாதார ஸ்தாபனம் போன்றவற்றாலும் சிபாரிசு செய்யப்படும் உணவு முறை என்ன சொல்கிறது?

- கொழுப்பு, சீனி, உப்பு ஆகியன குறைந்தளவும்
- பழங்களும் காய்கறிகளும் அதிகம் கொண்டதுமான
- ஆரோக்கியமான சமவலுவுள்ள (Balanced) உணவையே ஆகும்.
- எதையும் முற்றாகத் தவிர்க்கச் சொல்லவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

கொழுப்பு என்றால் என்ன? எண்ணெய், பட்டர், மார்ஜரின் போன்ற அனைத்துப் பொருள்களும், அவை சார்ந்த உணவுகளாகும். சீனி கூடத் தவிர்க்கப்பட வேண்டும் என்று சொல்லப்படவில்லை. ஆனால் அவற்றை உணர்வுபூர்வமாக அணுகாது, புத்தி பூர்வமாக அளவோடு உணவில் சேர்க்கலாம்.

**பொதுவான ஏனைய ஆலோசனைகள் என்ன?**

- உணவில் மாப்பொருள் உணவு பெரும்பகுதியாக இருக்க வேண்டும். மாப் பொருள் உணவுகளைத் தேர்ந்தெடுக்கும்போது கிளைசீமிக் இன்டெக்ஸ் (Low Gl) குறைவான உணவுகள் முக்கிய இடம் பெறுவது நல்லது. கிளைசீமிக் இன்டெக்ஸ் என்பது குறிப்பிட்டளவு ஒரு உணவை தனியாக உண்ணும்போது சீனியின் அளவு எவ்வளவு அதிகரிக்கிறது என்பதை பற்றிய ஒரு கணக்கீடு ஆகும்.
- கிளைசீமிக் இன்டெக்ஸ் அதிகமுள்ள உணவுவகைகளைத் தவிர்க்கவும். அதிலும் முக்கியமாக பிரதான உணவுகளுக்கு இடையேயான குறுந்தீனிகளை தவிர்ப்பது நல்லது. அவற்றிற்குப் பதிலாக ஒரு பழம் சாப்பிடலாமே.
- காலை உணவை ஒருபோதும் தவிர்க்க வேண்டாம்.
- உணவுகளை வேளைக்கு வேளை சாப்பிட வேண்டும். உணவுகளைத் தப்ப விடுவது கூடாது. விரதம் இருப்பது கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எண்ணெய், நெய், பட்டர், மார்ஜரின் போன்றவற்றை உண்பதில் அவதானம் தேவை. ஹைரஸன் ஏற்றபட்ட மார்ஜரின் வகைகள் கூடாது. ஒலிவ் ஓயில், சூரியகாந்தி எண்ணெய், சோள எண்ணெய், நல்லெண்ணய் போன்றவை நல்லது. ஆயினும் தேங்காய் எண்ணெய், பாம் எண்ணெய் தவிர்க்கப்பட வேண்டியது அல்ல. அளவோடு உண்ணலாம்.
- ஒருமுறை பொரித்த எண்ணெயை வீசிவிட வேண்டும். மீண்டும் மீண்டும் அதே எண்ணெயை உபயோகிக்கக் கூடாது.
- பால் அருந்தும்போது கொழுப்பு குறைந்த அளவுள்ள பாலைத் தேர்ந்தெடுங்கள். யோகர்ட் போன்றவற்றை உண்ணும்போதும் அவ்வாறே குறைந்த கொழுப் புள்ளதையே தேர்ந்தெடுக்கவும்.
- பொரித்த, பேக் பண்ணப்பட்ட உணவுகளைத் தவிர்க்கவும்.
- துரித உணவுகளைத் (fast food) தவிருங்கள், கட்லட், ரோல்ஸ், பிட்ஸா, சமோசா, ஹம்பேகர், பிரன்ஸ் ப்ரை, பிஸ்கற், வடை, சூசியம், சொக்லற் கேக், வனிலா கேக் போன்ற பலவும் அடங்கும்.
- இறைச்சியைத் தேர்ந்தெடுக்கும்போது கொழுப்பு குறைந்தவற்றையே உண்ணுங்கள். ஆடு, மாடு பன்றி போன்றவற்றிக்கு பதிலாக கோழி உண்ணலாம். அதிலும் கொழுப்புள்ள பகுதியை நீக்குங்கள்.
- மதுபானம் அதிகம் கூடாது. இனிப்புள்ள மென் பானங்கள் கூடாது. ஆனால் போதிய நீராகாரம் எடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Food and Future

**Mr.T.Nagaratnam**

**B.Sc. (Cey.), P.G.D.E., Justice of Peace**

The nature of our foods are changing all the time and new convenience foods are appearing in Supermarket. These are called sometimes instant food. No need to speed long hour to cook these foods. Hot meals can now be obtained from machines The tread is definitely one in which the food of future will be prepared more and more in factories leaving less and less food preparation to be done at home.

In future more and more houses will have a deep freeze and this will mean that the present trend towards eating more frozen food will continue.

Now methods of presentation may mean that in future we shall be able to enjoy luxury food as a matter of routine. Food irradiation is one new method of preservation. This involves preserving food using radiation of a similar type of X rays but of much greater energy and generating power. The radiation kill pests and micro organism in the food. This method has already been used to reduce sprouting in stored potatoes and to keep mushroom in good condition for several days without refrigeration.

Only a few years ago travel meant moving around the earth by land or sea. Now it includes air travel and even travel to the moon and perhaps other planets. So it is with food. In the past diet was restricted to food that could be grown near home. Now we can use foods from many countries and thus enjoy a varied diet. In the future we shall be able to make use of new foods grown in new ways. Already special food packs suitable for space travel have been devised.

In thinking of how we can produce new foods we need to remember that the land available for farming is limited where as the amounts of water available is enormous. Certain plants living in water are able to use water and Sunlight build up carborhydrates. If the water contains suitable, they also build up protein nutrients including that nutrient. A plants called chlorella is able to perform these wonders.

A single chlorella plant is so small to see but it can be seen through microscope.

Since it is so small you may think that it is not much use as food but new plants form very rapidly that in only 12 hours. Its weight increases four fold. In ideal condition, over 100 as of chlorella can be obtained from one acre in a year. Chlorella is so rich in protein and its yield is so great that an area of only about one square kilometer is enough to sup-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ply enough protein for all the people in Sri Lanka. At present this farming on water is. Only in the trial stage.

One of the main causes of malnutrition in the world is shortage of protein. In searching for new sources of food we shall therefore be especially on the look out for a new sources of protein. We obtain much of our protein food indirectly by growing plants. Which mainly Carbohydrate and feeding the plants to animals. Eventually we eat the animals, which supply us with valuable animal protein. Unfortunately this is not a profitable method of producing protein because we only get back about one tenth of the protein that we fed to the animal.

It would be very profitable if we could extract the protein from the plants directly without getting an animal to do this for us. Many plants materials such as grass cannot be eaten directly by us because they are mostly cellulose and so indigestible. However we can extract the protein from such plants and so make a highly nutrious protein plant at present we waste many millions of tons of plants materials every year so that in the future we may obtain large amounts of concentrated food from such sources.

Although the quality of protein in most vegetable material is low but that of soya beans is high. Soya been flour have been a valuable source of high quality protein in the diets of Japan and China for many years. Other countries also follow the Sanco particularly United States. But people must be convinced that in some countries they make soya meat which resemble exactly the animal meat. Now the people like that meet since it is very much similar in taste of animal meat. The benefit of this meat is high food value and cheap sometimes this is added to the actual natural meat to increase the protein content to reduce the cost of meat. This makes a big contribution to help the shortage of protein foods in under developed countries.

The recently complete meals in a can have been produced to provide ready to eat meals of high food value and low cost this is good for older people living above who only had to heat the contents of the can in future cultivation of yeasts and fungi should be able to supply us with useful amounts of good quality protein.

Perhaps one day we shall grow yeast instead of rearing cattle for where as half a ton of bullock only produce one pound of protein in 24 hours Half a ton of yeast can produce fifty tons of protein in the same period of time.

So we hope that this new source of protein will be contributed in the battle to overcome the problem hunger.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறேன்

இராமகிருஷ்ண வித்தகத்தின் அதிபர் இந்திரா
இராஜரட்ணம் ஏற்மிகு வாழ்வு ரைப்பின்
பெருமைமிக்க தாகுமவர் புரிந்த சேவை
பற்பலவாம் கல்விப்புல மீதி லாகும்
சீரான உயர்கல்வி பெற்ற தாலே
சிறப்புற்றார் பல்வகையில் சேவை தன்னில்
பேரார்வங் கொண்டுழைத்தார் மாணாக் கர்தம்
புகழோங்கப் பெரும்பங்கும் ஆற்றி னாரே

காலத்தால் அழியாது கல்வி யென்னுங்
கொள்கையினை மனம்பதித்துக் கருத்தோ டுன்னி
சீலமிகு மாணவரைக் கல்வி தன்னில்
சிறந்தோங்கச் செய்திட்டார் வரலா றாகும்
பாலனத்தில் வித்தகராம் பாட சாலைப்
பெயர்நிலைக்கப் பாடுபட்டார் வளர்ச்சி நோக்கிக்
காலம்பொழு தொன்றுவரை காத்தி டாதே
கடமையினுக் கதிகமதாய்ப் பணிபு ரிந்தார்

கலைமானிப் பட்டமொடு கல்விச் சான்று
கல்விநிரு வாகத்தில் திறமைச் சான்று
நில்லாதே மேலுமதே துறையைச் சார்ந்த
நற்சான்றும் பெற்றவராம் நாடு போற்றும்
வல்ல 'வித்யா விபூஷண' வென் நாமம் கூட
வழங்கியதே திணைக்களமும் விதந்தே அன்னார்
கல்விக்கென் றாற்றியநற் பணிகள் கொள்ளை
நன்றியொடு நினைதல்மக்கள் கடன தாகும்

தோற்றத்தில் கம்பீரம் ஆளு மைக்குத்
தனியவரே அணுகுமுறை தனிலும் மேலாம்
வேற்றுணர்வு இல்லாத கல்வி யொன்றே
வாழ்வென்று வாழ்பவராம் இந்தி ராவைப்
போற்றிடுவோம் அவர்பணியைப் புகழ்ந்து ரைப்போம்
பார்போற்ற வாழ்கவென வாழ்த்துச் சொல்வோம்
சாற்றிடுவோம் உலகறியத் தொண்டை யெல்லாம்
தெரிந்தறிவோர் பின்பற்றி வாழ்க வென்றே

**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அளவையியல்

## ஒரு நோக்கு

K.T. இராஜரட்ணம் M. Phil.

**அறிமுகம்**

உலகில் உள்ள பொருட்களை அளந்தறிதற்குக் கருவியாக எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறே நமது சிந்தனையை அளப்பதற்குக் கருவியாய் விளங்குவது தருக்கம். சிந்தனையே அறிவின் மூலம் ஆகும். சிந்தனை சீரியதாக அமையாத விடத்து அதன் வழித்தோன்றும் அறிவும் பிழைபட்டுப் பொய்யானதாகிவிடும். சிந்தனை அறிவாக மலரும் போது அது நெறியுடையதாய் பிழையற்றதாய் அமைய வழிகாண்பது அளவையியல். நமது எண்ணத்தைச் சீரியதாக்கும் அறிவு நெறி 'எண்' என்றே பண்டையறிஞர்களால் வழங்கப்படலாயிற்று. ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்'' என்ற ஔவையார் வாக்கில் எண்ணென்பது அளவை யியலையே குறிக்குமென்பர். ஏரணம், தருக்கம், நியாயம் வாதம் என்பவை அளவை யியலைக் குறிக்கத் தமிழில் வழங்கும் வடமொழிச் சொற்களாம்.

ஒரு கூற்றினை நமது அறிவுமனம் ஏற்கத்தக்க வகையில் நெறிப்படுத்தும் பண்பு எதுவோ அதுவே நியாயமெனப்படும். ஒரு கருத்தை (வாய்ப்பிற்கு) நாம் செவிமடுத்த வுடன், அதன் ஏற்புடையமைக்குச் சாதகமானதும் பாதகமானதுமான சிந்தனைகள் எழுகின்றன. இன்னின்ன ஏதுக்களால் இஃது ஏற்கத்தக்கது என மனம் பின்னர் நிர்ணயிக்கிறது. இத்தகைய ஏதுக்களை வகைப்படுத்தல் **வாதம்** எனப்படுகின்றது. வாதத்தால் கண்டறியப் படும் முடிவு சீரியதா என ஆராய்ந்தறிதற்கு வகுக்கப்பட்டதே **நியாயம்** என்னும் தர்க்க முறைமை. நியாய முறைமையை தோற்றுவித்தவர் **கோதமர்**.

நியாயம் தர்க்க பூர்வமாகத் தத்துவங்ளை நிர்ணயிப்பது. இவ்வழியால் மக்கள் வீடுபேறு எய்தலாம் என்பது நியாயமதத்தின் கோட்பாடு ஆதலின் இந்திய ஆஸ்திக தரிசனங்களுள் ஒன்றாக அது வைத்தெண்ணப்படுகின்றது. இதே நோக்கத்தை வைசேஷகம் என்னும் தரிசனமும் கொண்டுள்ளதனால் நியாயமும் வைசேஷகமும் சமமான சாத்திரங்களெனக் கருதப்படுகின்றன. நியாயம் போன்று வைசேஷகமும் பொருள்களை விசாரிக்கும் இயல்புடைமை கருதி இவ்விரண்டையும் சேர்த்து நியாய வைசேஷகம் என ஒரு தரிசனமாக மதிக்கும் மரபு இருந்து வரலாயிற்று. கிபி. 13ஆம் நூற்றாண்டில் நியாயத்தைப் பிரமாண சாத்திரமாக மாற்றியமைத்தவர் **காங்கேச உபாத்தியாயர்** என்பவர். இவர் உருவாக்கிய **தருக்கமுறை நவ்விய நியாயம்** எனப்படும் நவ்யம் புதியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாய முறைமையின் மூல நூல் கோதமிரியற்றிய **நியாயசூத்திரம்**. இது கி.மு. 4 ஆம் நூற்றாண்டுக்கும் 2 ஆம் நூற்றாண்டுக்குமிடையில் எழுதப் பெற்ற தென்பர். இதற்கு **வாத் சாயனர்** ஓர் உரைவகுத்தனர். இதனை விளக்கி, **உத்தியோதகர்** என்பார் **நியாய வார்த்திகம்** என ஒரு நூல் செய்தனர். இதற்கு விளக்கமாக அமைந்தது **வாசஸ்பதிமிகிரர்** இயற்றிய **தாத்பரிய தீபிகை**. இதற்கு உதயணார் தாத்பரிய தீபாகரசுத்தி எனப் பெயரிய உரைவிளக்கம் செய்தனர். இவ்வாறு கோதமரின் நியாய சூத்திரத்தைத் தொடர்ந்து பல வழி நூல்கள் தோன்றின. கங்கேச உபாத்தியாயர் இயற்றிய **தத்துவ சிந்தாமணி**, நியாய முறைமை விருத்தியில் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. நியாய சூத்திரத்தையும் இவ்வழி நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு **அன்னம்பட்டர்** என்னும் தெலுங்கு நாட்டினர் **தர்க்க சங்கிரகம்** என்னும் நூலைச் செய்தனர். இதற்கு இவரே **தர்க்க சங்கிரகதீபிகை** என்ற பெயரால் ஓர் உரையும் செய்தனர். இது அன்னம்பட்டீயம் எனவும் வழங்கும். இதனைத் திருவாவடுதுறை ஆதின முதல்வராய்த் திகழ்ந்த **சிவஞானமுனிவர்** அவர்கள் தமிழில் மொழி பெயர்த்தனர். மேலே கூறப்பட்ட அளவை வரலாறு நியாயம் என்னும் தரிசனத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியதன் சுருக்கமே.

ஏனைய தரிசனங்களைச் சார் அளவைவாதிகள் நையாயிகத்தில் (நையாயிகம் - நியாய முறைமை) கூறப்பட்ட அளவைப் பிரமாணங்களை விடச் சிலவற்றைக் கூட்டியும் குறைத்தும் சொல்வர். அவற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

**உலகாயுதர்:** காட்சி என்னும் ஒன்று மட்டுமே பிரமாணமாகக் கொள்பவர்.

**பௌத்தர்:** காட்சி, அனுமானம் என்னும் இரண்டுமே பிரமாணமாக உடையவர்.

**சாங்கியர்:** காட்சி அனுமானம் ஆகமம் ஆகிய மூன்றை பிரமாணமாக உடையவர்.

**நையாயிகர்:** காட்சி அனுமானம், ஆகமம், உவமை ஆகிய நான்கினைப் பிரமாணமாக உடையவர்.

**வைசேடிகர்:** காட்சி, அனுமானம், ஆகமம், உவமை, அருத்தா பத்தி ஆகிய ஐந்தைப் பிரமாணமாகக் கொள்வர். **மீமாஞ்சகர் காட்சி**, அனுமானம், ஆகமம், உவமை, அருத்தாபத்தி, அபாவம் என்னும் ஆறையும் பிரமாணமாகக் கொள்பவர்.

இப்பிரமாணங்கள் ஒவ்வொன்றும் பற்றி சிறிது அறிந்திருத்தல் பயனுடைத்து, இவற்றுள் : காட்சி, அனுமானம் ஆகிய பிரமாணங்களை சற்று விரிவாகப் பார்ப்போம்.

**ஆகமம்:** ஆகமமானது நூற்பிரமாணம், ஆகமப்பிரமாணம் உரை எனவும் அழைக்கப் பெறும். 'உரையாவது ஆத்தனது வாக்கியம்' எனத் தர்க்க சங்கிரகம் கூறும். ஆகமப் பிரமாணம் தந்திரக்கலை, மந்திரக் கலை, உபதேசக்கலையென மூன்றாம்.

**உவமை:** இது உபமானம், ஒப்பு எனவும் சொல்லப்படும். இரண்டு பொருள்களின் இயல்பை உணர்ந்த ஒருவன் அவற்றுள் ஒன்றைத் தெரிந்தவனுக்கு மற்றப் பொருளையும், அவன் அறிந்த பொருளின் தன்மையோடு கார்த்திக்காட்டலாகும். காட்டுப்பசுவைக் கண்டறியாதவன் அது பசுபோன்றது என இரண்டையும் உணர்ந்தவன், உணர்த்திய அறிவு கொண்டு (காட்டுப்பசுவைக் காணநேருமிடத்து) காட்டுப்பசு தெளிதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருத்தாபத்தி:** இது பொருளளவை எனவும் கூறப்படும். சொல்லப்பட்ட ஒரு பொருளால் சொல்லப்படாத வேறொரு பொருளும் உண்டென்று பெறப்படுதலே அருத்தாபத்தி. இவன் பகலில் உண்ணக் காணோம், ஆயினும் உடல்தளராமல் இருக்கின்றான் என்ற கூற்றால் இவன் இரவில் உண்பவன் என்பது பெறப்படும்.

**அபாவம்:** பொருளில்லாமையை உணர்த்துவது ஆகாயத் தாமரை, முயற்கொம்பு போன்ற பொருள்களின்மையைச் சாதிப்பது.

மேற்கூறிய காட்சி முதலாம் அறுவகைப் பிரமாணங்களே யன்றி மேலும் இயல்பு, பாரி சேடம், ஐதிகம், சம்பவம் என நான்கு பிரமாணங்களும் உள எனச் சில நூல்கள் தெரிவிக்கின்றன.

**இயல்பு:** உலக வழக்காலும் செய்யுள் வழக்காலும் பல பொருளுக்குப் பொதுவாக உள்ள ஒரு சொல் அவ்வச் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு சிறப்புப் பொருளைப் பயந்து நிற்பது. குதிரை மேலிருக்கும் ஒருவன் 'கோல்தா' என்றால் சம்மட்டியைக் கொடுப்பதும், மதில்மேல் இருப்பவன் 'கோல் தா' என்றால் படைகொடுத்தலும் இயல்பு.

**பாரிசேடம்:** இது மீட்சியளவை எனவும் ஒழிபு அளவை எனவும் சொல்லப்பெறும். மூவர் உள்ள இடத்தில், ஒரு பொருளைச் சிலர் யார் பொருளென வினாவிய விடத்து இருவர் நாம் அறியோம் என்பாராயின், ஒழிந்தவன் அறிந்தானாம் தன்மை. இன்னும், இராகவன் வென்றான் என்பதால் இராவணன் தோன்றான் என உணருந் தன்மை.

**சம்பவம்:** இது உண்மையெனவும் உண்டாநெறி எனவும் வழங்கப் பெறும். இது இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தலாகும். தீசுடும், நீர் குளிரும் என்பனபோல்வன. இன்னும் முழுப்பொருளைச் சொன்னவிடத்து அதன் உறுப்பும் அதற்குள் அடக்கம் என்றால் ஆயிரம் என்னுமிடத்து அதனுள் நூறும் அடங்கியிருந்தவாறு.

**ஐதிகம்:** இது உலகுரை எனவும் சொல்லப்படும். அதாவது கர்ணபரம்பரையாய் (செவி வழியாய்) வரும் அறிவு அந்த ஆலமரத்தில் பேயுண்டு. இந்தப் புற்றில் பாம்புண்டு, நாகம் மணியுடைத்து என்பன போல்வன.

இனி நியாய முறைமையிற் சொல்லப் பெற்றுள்ள பிரத்தியட்சம், அனுமானம் என்பவற்றை விரிவாக நோக்குவோம்.

நாம் கேட்பனவும் படிப்பனவும் ஏற்கத்தக்கனவா எனப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு உரிய பிரமாணங்களைக் கொண்டு திகழ்வதால் தருக்கம் **பிரமாணவியல்** எனவும் அழைக்கப் பெறும். உண்மைத்தன்மையை அளந்தறிவதற்குக் கருவிகளான பிரமாணங்களே, உண்மை யறிவைப் பெறுதற்குரிய சாதனங்களாகின்றன. அறிவுச் சாதனங்களான பிரமாணங்கள் நான்கு வகைப்படும் அவையாவன:

1. பிரத்தியட்சப் பிரமாணம் அல்லது நேரடியுணர்வு
2. அனுமானம்
3. உபமானம்
4. சப்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரத்தியட்சப்பிரமாணம்**

மேலே குறித்த நால்வகை அறிவுச் சாதனங்களுள் நியாய முறைமை பிரத்தியட்சப் பிரமாணத்தையே மிக முக்கியமானதாகக் கொள்ளுகின்றது. இது தரிசனம் எனவும் காட்சி எனவும் நேரடியுணர்வு எனவும் பல சொற்களால் குறிக்கப்படும். தரிசனம் அல்லது காட்சி என்பது கட்பொறியால் பெறப்படும் அறிவு எனப் பொருள்படுமேனும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிவழியே பெறப்படும் அறிவையடக்குவதாகும். காட்சி, அறிவுச் சாதனமாக அமையும் போது அதில் நான்கு கூறுகள் இருப்பதை அவதானிக் கலாம். (1) பொறி, (2) பொறியின் தாக்கத்துக்குள்ளாகும் பொருள், (3) பொறிக்கும் பொருளுக்குமிடையிலான தொடர்பு, (4) இத்தொடர்பினால் ஏற்படும் காட்சியறிவுக்கு மனத்தின் தொழிற்பாடு வேண்டப்படுகிறது. நாம் ஏதாவது ஒன்றை ஊன்றிப் படித்துக் கொண்டிருக்கும் போது வெளியில் வீசும் காற்றின் ஓசை செவிப்புலனைச் சென்று தாக்கினாலும் நாம் அதனை உணர்ந்து கொள்வதில்லை. காரணம் அப்போது மனம் படிப்பில் ஈடுபட்டிருக்கிறது. மனமே புலனுக்கும் உயிர்க்கும் இடையே தொடர்புறுத்தும் சாதனமாதலின் மனம் தொழிற்படாதவிடத்து காட்சியறிவு எய்து மாறில்லை. பொருளோடு புலனுக்கு ஏற்படும் தாக்கத்தால் எழும் உணர்வை மனம் உயிர்க்கு உணர்த்த, உயிர் அறிகிறது. காட்சி என்பது ஒருவகை அறிவு அல்லது ஞானம். புலன், மனம், உயிர் மூன்றும் சேர்ந்து தொழிற்பட்டாலே இவ் அறிவு ஏற்படுகிறது.

நாம் காணுகின்ற காட்சி நால்வகையில் அடங்கும். அவை:

1. நிருவிகற்பக் காட்சி
2. ஐயக் காட்சி
3. விபரீதக் காட்சி
4. சவி கற்பக் காட்சி

**நிருவிகற்பக் காட்சி**

காணப்படும் ஒரு பொருளை பெயர், சாதி, பண்பு, தொழில் என்னும் வேறுபாடுகளின் உணர்வின்றி ஏதோ ஒன்று தோன்றுகின்றது என்று பிண்டமாக மட்டும் அறியும் அறிவு நிருவிகற்பக் காட்சியாகும். நிருவிகற்பம் - விகற்பம் இல்லாதது. விகற்பம் என்பது வேறுபாடு.

**ஐயக்காட்சி**

இரு பொருள்களுக்கும் பொதுவாகவுள்ள குறியை அல்லது அடையாளத்தை ஒரு பொருளிலே கண்டு இப்பொருள் யாதோ எனச் சந்தேகங் கொள்வது ஐயக் காட்சியாம்.

உ-ம்: பிண்டமாக (இருட்டில்) கண்ட பொருளை இது மரக்குற்றியோ மனிதனோ என்று ஐயுறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விபரீதக் காட்சி**

ஒன்றை மற்றொன்றாகக் கருதுவது விபரீதக் காட்சி. விபரீதம்- திரிபு- மாறுபாடு, இவை ஒரு பொருட் சொற்கள்.

உ-ம்: இருட்டில் கயிற்றைப் பாம்பென்று மாறுபடக் கண்டு துணிவது.

**சவி கற்பக் காட்சி**

பெயர், சாதி, பண்பு, தொழிற்பாடு, பொருள் என்னும் வேறுபாடுகளையுஞ் சேர உணர்ந்து காணும் காட்சி சவிகற்பக்காட்சி.

உ-ம் : நான் காணுகின்ற உருவத்தை இவன் பஞ்சாட்சரம் என்று முன்குறித்த ஐந்து அடையாளங்களைக் கொண்டு, பிறமனிதர்களில் இருந்து வேறுபடுத்தி அறிகிறேன். வேறுபாடுகள்; பெயர்; பஞ்சாட்சரம்; பொருள்: இம்மனக் குணம்: நெடியவன்; சாதி: பிராமணன்; தொழில்: பூசை செய்தல்.

இன்னும், கண்முன்னே நிற்கும் பொருளை மாமரம் என்று அறியுங்காலை, உணரப்படும் வேறுபாடுகளாவன மா என்பது பெயர், விருட்சம் என்பது சாதி (விலங்கினத்தினும் வேறுபட்ட) கிளைகளோடு கூடியிருத்தல் ஆகிய வடிவு முதலிய குணம். பூத்தல், காய்த்தல், ஆதியன தொழிற்பாடு மரம் என்பது பொருள்.

முதற் குறித்த மூன்றும் தவறுடைய காட்சி நான்காவதாகிய சவிகற்பக் காட்சியே சீரிய காட்சியாகும்.

பிரத்தியட்சக் காட்சி, மேலும் இலௌகிகம், அலௌகிகம் என இரு வகையினது. இலௌகிகம் இந்திரிய சம்பந்தத்தால் ஏற்படுவது. இந்திரிய விடய சம்பந்தம் காட்சியறிவுக்கு ஏதுவாகத் திகழ்வது இந்திரிய விடய சம்பந்தம் என்பது கண் முதலாகிய பொறிகளுக்கும் காணப்படும் குடம் முதலாகிய பொருள்களுக்குமிடையிலான இயைபாகும். விடய பேதங் காரணமாக இந்திரிய விடய சம்பந்தம்.

1. சையோகம்
2. சையுத்தசமவாயம்
3. சையுத்த சமவேத சமவாயம்
4. சமவாயம்
5. சமவேத சமவாயம்
6. விசேடண விசேடிய பாவம்

என அறுவகைப்படும்

**1. சையோகசம்பந்தம்:** பொருளுக்கும் இந்திரியத்துக்குமுள்ள சம்பந்தம் சையோகம் எனப்படும். வடமொழியில் சம்யோகம் என்பது தமிழில் சையோகம் என நிற்கும். அது புணர்தல், பொருந்துதல் என்று பொருள் தரும். ஒரு குடத்தைக் கண் பார்க்கின்றது என வைத்துக் கொள்வோம். அப்படிப் பார்க்கின்றதாகிய நிகழ்ச்சியில் குடமாகிய பொருளும் கண் ஆகிய இந்திரியமும் பொருந்தும் நிலை சையோக சம்பந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. சம்யுக்த சமவாயம்:** (சம்யுக்த என்பது தமிழில் சையுத்த மெனத்திரிந்து சையுத்த சமவாயம் என வழங்கும்) பொருளினூடாக அதன் குணத்தோடு இந்திரியம் பொருந்துவது. 'சம்யுக்த' என்ற பதம் சையோகமுற்ற பொருளினூடாக எனவும், 'சமவாயம்' என்பது நீங்காது ஒன்றி நிற்றல் எனவும் பொருள்படும். கண்ணாகிய இந்திரியம் குடமாகிய பொருளையறி கின்ற வேளையில், அப்பொருளினூடே அதன் குணமாகிய கருமையை அல்லது வடிவத்தையும் உடனுணர்கின்றது. கருமை நிறம் அல்லது வட்டவடிவம் (உருண்டை) குடத்தினின்று பிரிந்து நில்லாது எப்போதும் சேர்ந்திருப்பது. எனவே சம்யுத்த சமவாயம் என்பது கண்ணோடு இயைபுற்றதாகிய குடத்திலுள்ள கருமை முதலிய குணங் களைத் தெரிந்து கொள்ளும் வகையில் ஏற்படும் சம்பந்தம் சுருங்கச் சொன்னால் குடமும் குடவடிவும் போன்ற ஒற்றுமை.

**3. சம்யுக்த சமவேத சமவாயம்:** கண்ணாகிய இந்திரியம் குடமாகிய பொருளோடு இயைபுறு மிடத்து குடத்தை யறிந்து கொள்வதோடு அதன் வடிவம் முதலிய பண்பை உணர்ந்து கொள்ளும். அதே வேளையில் குறித்த குடத்திற் காணப்படும் வடிவம் கொண்டு குடங்க ளெல்லாவற்றிற்கும் வடிவம் இருத்தலாகிய பண்புப் பொதுமையை உணர்ந்து கொள்ள நிற்கும் நிலை சம்யுக்த சமவேத சமவாயம் ஆகும். அதாவது குடமும் குடவடிவும் குடத்தன்மையும் போன்ற ஒற்றுமையை குறிக்கும். சமவேதம் - சமவாயத் தன்மையுடைய பொருள் சமவாயம் - நீங்காது நிற்றல்.

**4. சமவாயம்:** செவித்துளையில் இருக்கும் சோத்திர இந்திரியத்தால் சத்தத்தை அறிந்து கொள்ளும் போது நிகழ்வது சமவாய சம்பந்தம். சோத்திரம் கேட்டலுக்குச் சாதனமாய் விளங்கும் இந்திரியம். செவித்துளையிலிருக்கும் சோத்திர இந்திரியமே ஆகயமாதலால், ஆகாயமாகிய குணியும் அதன் குணமாகிய ஓசையும் ஒன்றி நிற்றல் சமவாயம். குணி - குணத்தையுடையது. (ஆகாயம் ஆகிய பொருள் ஓசை ஏற்படுதற் கிடமாயுள்ளது என அறிக.)

**5. சமவேத சமவாயம்:** சோத்திர இந்திரியத்தாலே ஓசையை உணர்வதாய் ஓசையின் இயல்பை உணர்ந்து கொள்ளுமாறு நிகழ்வது சமவேத சமவாயம்.

**6. விசேடண விசேடியத்தன்மை:** இல்லாமையை உணரும் போது ஏற்படுவதே விசே டணமும், விசேடியமும் இயைந்த தன்மை. நாம் நாடுகின்ற பொருள் இல்லாத விடத்து அந்த இல்லாமையை உணர்ந்து கொள்வதாகிய அறிவு, விசேடணம் விசேடியம் என்ப வற்றின் சம்பந்தத்தால் ஏற்படுகின்றது. விசேடணம் - பண்பு, விசேடியம் பண்புக்கிடமான பொருள். ஓர் இடத்தைப் பார்த்து இத்தலம் குடமில்லாத இடம் என்று உணர்கின்றோம். கண் தலத்தைப் பார்க்கின்ற போது அங்கு குடமில்லாமை விசேடணம் இத்தலத்தில் குடமில்லை என்னும் போது தலத்தில் குடமில்லாத தாகிய நிலை விசேடியம்.

இவ்வாறு கூறப்பட்ட அறுவகைச் சம்பந்தத் தாலும் தோன்றும் உணர்வு, பிரத்தியட்சமாகிய காட்சிப்பிரமாணமாம்.

இனி **அலௌகிகம்** என்பது மூன்று வகைப்படும். அவை சாமானிய லட்சணம், ஞானலட்சணம், யோகலட்சணம் என மூன்று வகையின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. சாமானியம்:** இது மனிதர் யாவரும் இறப்பவர் என்பதை போன்ற சாமானியங்களை அறிவது. அதாவது மனிதர்களில் உள்ள, மனிதத் தன்மையை உணர்வதன் மூலமாக மனிதர்கள் யாவரும் குறிக்கும் இயல்பினர் என்று அறிகிறோம்.

**2. ஞானலட்சணம்:** தூரத்திலுள்ள சந்தன மரத்தைப் பார்த்து அது சுகந்தமுள்ளது என்று அறிகிறோம். இது முன்னால் ஏற்பட்ட வாசனை ஞானத்தினை அடிப்படையாகக் கொண்டது.

**3. யோகலட்சணம்:** யோகிகள், சமாதியில் இருக்கும் காலே அறிவினைத் தடைசெய்து நிற்கும். மலங்களின் ஆற்றல் வாட்டமுறலால் ஆன்ம சிற்சத்தி, மூவிடத்தும் முக்காலத்தும் விரிந்த பொருள்களைக் காணும் சக்தி.

**அனுமானம்**

அனுபவ அறிவுக்குச் சாதனங்களாகக் கூறப்பட்ட நான்கினுள் இரண்டாவது அனுமானம், எனினும் கருதல் எனினும் சமுசயம் எனினும் ஒக்கும் அனுமானம் என்பது பின்னர் தோன்றும் அறிவு என்ற பொருள் உடையது. அனுமானம் காட்சியறிவைத் தொடர்ந்து வருவதாகக் கொள்ளப்படுகிறது. நியாயத்துக்கு விசேட உரை வகுத்த வாத்சாயனர் காட்சியறிவில்லாவிடத்து, அனுமானம் தோன்றுமாறில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். நெருப்புக்கும், புகைக்கும் உள்ள தொடர்பை ஏலவே அவதானித்துள்ள ஒருவரே, பின்னர் புகையைக் காணும் சந்தர்ப்பத்தில் அங்கு நெருப்பும் உண்டு என ஊகிக்க முடியும். ஆயினும் காட்சி அறிவுக்கும் கருதறிவுக்குமிடையேயுள்ள வேறுபாட்டினை உணர்த்தும் அம்சங்களை உத்தியோகரர் காட்டியுள்ளார்.

காட்சி நிகழ்காலத்துக்குரியனவும் புலனுணர்வுக்கு எட்டக் கூடியனவுமான விடயங்கள் மட்டில் அமைவது, ஆனால் அனுமானம் இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்காலத்துக்கு முரியது.

அனுமான உணர்வுக்கு சமுசயிக்கப்படும் பொருள் சம்பந்தமான ‘உடநிகழ்ச்சி நினைவு’ வேண்டப்படும். நாம் பிரத்தியட்சமாகப் பொருளைக் காணும் போது, அனு மானத்துக்கு அவசியமில்லை. நாம் நெருப்பை வெளிப்படக் காணும் போது, அது நெருப்பே என்பது தெளிவு நெருப்பின்றிப் புகையை மட்டும் காணும் போது முன்பு நெருப்பையும் புகையையும் உடநிகழ்வாகக் கண்ட நினைவைக் கொண்டு, அங்கு நெருப்பு இருத்தல் வேண்டும் என்று ஊகிக்கிறோம். நெருப்பும் புகையும், உடனிருக்க பலமுறை கண்டதால் எங்கு தீயுண்டோ, அங்கு புகையும் உண்டு எனத் தோன்றியது ‘உடனிகழ்ச்சி உணர்வு’ இதுவே வியாத்தி (வடமொழியில் வியாப்தி) எனவும் படும். ஆக ஒரு பொருளுண்மையை நாம் அனுமானித்து அறிகிறோம் என்றால் அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது வியாத்தி. இன்னும் இந்த அனுமான அறிவுக்கு (1) பக்கம், (2) சாத்தியம், (3) இலிங்கம் ஆகிய மூன்று அம்சங்கள் வேண்டப்படும். பக்கம் எவ்விடத்தில் ஒரு பொருள் இருப்பதாக அனுமானிக்கப்படுகிறதோ அவ்விடம். உ-ம் : மலை, சாத்தியம் இருப்பதாக அனுமானிக்கப் படும் பொருள் உ-ம் : நெருப்பு இலிங்கம் பொருளுண்மையைப் புலப்படுத்தும் சாதனம் அல்லது குறி: உ-ம்: புகை.

அனுமானம் இருவகைப்படும். அவை: (1) தன்பொருட்டனுமானம் (வடமொழியில் சுவார்த்தானுமானம் எனப்படுவது), (2) பிறர் பொருட்டனுமானம் (வடமொழியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரார்த்தானுமானம் எனப்படுவது.) தன்பொருட்டனுமானமாவது, எங்கு புகையுண்டோ அங்கு நெருப்பு உண்டென்ற வியாப்தி உணர்வை அடுக்களை முதலியவற்றை அடுத் தடுத்து அவதானித்தலால் பெற்ற ஒருவன் பின்னர் மலைப்பக்கம்

பக்கம் மூவகைப்படும். அவை : பக்கம், சபக்கம், விபக்கம் என்பன.

**பக்கம்**

இம்மலை நெருப்புடையது
எதனால்? புகையுடையதன்மையால்
எதுபோல? அடுக்களைபோல்.

இந்த உதாரணத்தில் சந்தேகித்துத் துணியப்படும் பொருள்- நெருப்பு, அது இருக்குமிடம்- மலை, ஆக, மலையே பக்கம் ஆகும்.

**சபக்கம்**

துணியப்படுவதாகிய பொருளுக்கு உதாரணமாகக் காட்டப்பட்ட பொருள் இருக்குமிடம் மேற்போந்த உதாரணத்திலே காட்சியினால் துணியப்பட்ட பொருளாகிய நெருப்பு இருக்கும் இடம் அடுக்களை. அடுக்களையே சபக்கமாம்.

**விபக்கம்**

துணியப்படும் பொருள் பொருந்தியிராத இடம் விபக்கம் எனப்படும். மேற்போந்த உதாரணத்தில் துணியப்படும் பொருளாகச் சொல்லப்பட்ட பொருள் இல்லாத இடம் தடாகம். தடாகமே விபக்கமாம்.

போக நேர்ந்த வழி அம்மலையில் புகை தோன்றுதலைக் கண்டவுடன், எங்குத் தீயுண்டோ அங்கு புகையுண்டு என்ற உடனிலை உணர்வு பிறக்கவே இங்கு புகை தோன்றுதலால், தீயுண்டு என்ற அனுமதி ஞானம் பெறுகின்றான் (அனுமதி ஞானம் ஆராய்ச்சியால் தோன்றும் ஞானம்) புகையாகிய குறியைக் கொண்டு ஆராய்ந்து பெற்ற அறிவாதலின், இதற்கு இலிங்க பரமாரிசம் அல்லது குறியாராய்ச்சி என்ற பெயர் உண்டு.

அனுமானத்துக்கு இன்றியமையாது வேண்டுப்படம் இலிங்கமும் மூன்றுவகைப்படும். இலிங்கம் எனினும் ஏது எனினும் ஒக்கும். அவை:

1. **இயல்பேது:** சொல்லில் இயல்பாயுள்ள ஆற்றல் பொருளை உணர்த்துவது. உதாரணம்: வேம்பு என்னும் சொல் மரமாகிய பொருளை உணர்த்துவது.

2. **காரியவேது:** நெருப்பிலிருந்து தோன்றுவது புகை. ஆகவே புகை தோன்றுவதற்குக் காரணம் நெருப்பு, காரியம் புகை. புகையாகிய காரியம் நெருப்பாகிய காரணத்தை உணர்த்துவது காரியவேது.

3. **அனுபலத்தியேது:** பனியில்லை அதனால் குளிரில்லை இவ்வுதாரணத்தில் குளிரில்லாமை காரியவின்மையாகும். பனியில்லாமை காரணவின்மையாகும். குளிரில்லாமையாகிய காரியமின்மையையும், காரணவின்மையையும் உணர்த்தும் ஏது அனுபவத்தில்லாது ஏது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவத்தி என்னும் வடசொல் அறியாமை என்னும் பொருளுடையது, அதாவது இல்லை என்று உணரும் அறிவு.

பிறர் பொருட்டனுமானம் ஆவது ஒருவன் தான் பெற்ற அனுமதி ஞானத்தைப் பிறர் உணர்ந்து கொள்ளுதற் பொருட்டு தெரிவிக்கும் உரையாம். பிறர் பொருட்டனுமானம் அந்நுவயச் சொல் வெதிரேகச் சொல் என இருவகைப்படும் (அந்நுவயம் - உடன்பாடு, வெதிரேகம்- எதிர்மறை) இவ்வனுமான வாக்கியம் பஞ்ச அவயவ வாக்கியம் எனவும் தொடர் மொழி எனவும் கூறப்படும். வடமொழியில் இது பஞ்ஞாவயவி எனப்படும். (பஞ்ச அவயவங்களை உடையது என்பது பொருள்) ஐவகை உறுப்புக்களாவன:

1) பிரதிஞ்சை அல்லது மேற்கோள்

2) ஏது

3) உதாரணம்

4) உபநயம்

5) நிகமனம்

(பிரதிஞ்ஞை என்பதைத் தமிழில் பிரதிக்கினை என்று எழுதுவது முறை)

**பிரதிஞ்ஞை** என்பது நிரூபிக்கப்படவேண்டிய கூற்று.

**ஏது** என்பது இலிங்கத்தை எடுத்துக் காட்டுவது.

**உதாரணம்** என்பது வியாத்தியைப் புலப்படுத்துவது.

**உபநயம்** என்பது அத்தாட்சி காட்டி அடைவு கூறுவது.

**நிகமனம்** என்பது முடிந்த முடிவு.

அந்நுவவாக்கியம் பின்வருமாறு அமையும்:

| | | |
|---|---|---|
| பிரதிஞ்ஞை | - | இம்மலை நெருப்புடையது. |
| ஏது அங்கு | - | புகை தோன்றுவதால். |
| உதாரணம் | - | எங்கெங்கே புகையுண்டோ அங்கெல்லாம் நெருப்புண்டு - அடுக் களையிற் போல. |
| உபநயம் | - | அவ்வாறே இம்மலையிலும் நெருப்பினால் வியாபிக்கப்பட்ட புகை யுண்டு |
| நிகமனம் | - | ஆதலின் இம்மலை நெருப்புடையது. |

**வெதிரேக வாக்கியம்**

தான் அனுமானித்தறிந்த உண்மையை பிறர்க்குத் தெளிவுற வுணர்த்தும் நோக்கில் இந் நியாயத் தொடை ஐந்து உறுப்புக்கள் கொண்டதாக விரித்துக் காட்டப்பட்டாலும் உண்மையில் எடுத்துக் கொண்ட மேற்கோளை நிருபித்தற்கு இரண்டு அமிசங்களே அத்தியாசியமானவை . அவை:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) வியாப்தி

2) பட்சதர்மதாஞானம்

**வெதிரேக வாக்கியம்**

இம்மலையில் நெருப்பில்லை - பிரதிஞ்ஞை
புகையில்லாமையால் - ஏது
தடாகம் போல - திருட்டாந்தம்
இம்மலையிலும் தடாகம் போலப் புகையில்லை - உபநயம்
புகையில்லாமையால் இம்மலையிலும் நெருப்பில்லை - நிகமனம்

பக்கம் முதலிய மூன்றில் வைத்து ஏதுக்கள் மூன்றினுள் ஓர் ஏதுவைக் கொண்டு ஒருவன் தான் அனுமானித்து அறிந்ததை பிறருக்கு உணர்த்தும் பொழுது உடன்பாட்டுச் சொல்லாலும் எதிர்மறைச் சொல்லாலும் உணர்த்துதற் கியன்றது பிறர் பொருட்டனுமானம் என அறிக.

மேலைத்தேய நியாயத் தொடையில் பூர்வசாதனம் (Major Premise) உத்தரசாதனம் (Minor Premise) ஆகியவற்றைக் கொண்டே முடிவு, தீர்மானிக்கப்படுகிறது. பூர்வ சாதனத் திற்கும் உத்தரசாதனத்துக்குமிடையே தொடர்பை ஏற்படுத்துவது மத்திய பதம் (Middle terms)

கீழைத்தேய நியாயத் தொடையிலும் இதே போன்ற அமைப்பு இருத்தலை அவ தானிக்கலாம். அரிஸ்தோத்திலிய நியாயத் தொடை போன்று கோதமரின் பஞ்சாவயவத் தொடையை மூன்று உறுப்பினையுடையதாக பின்வருமாறு சுருக்கி அமைக்கலாம்:

புகையுடைய பொருள் தீயுடையன - பூர்வசாதனம்
இம்மலை புகையுடைய பொருள் - உத்தரசாதனம்
ஆதலால், இம்மலை தீயுடையது - முடிவு

மேலை நாட்டு நியாயத் தொடையில், மத்திய பதம் இன்றியமையாது விளங்குதல் போல, இந்திய நியாயத் தொடையில் 'ஏது' இன்றியமையாது விளங்குதலைக் காணலாம்.

இந்திய நியாயத் தொடைக்கும் அரித்தோத்திலிய நியாயத் தொடைக்குமிடையேயுள்ள வேற்றுமையும் அவதானித்தற்பாலது.

இந்திய நியாயத் தொடையினது ஐந்து அவயவங்களுள் முதலிரண்டினுள் (அதாவது பிரதிஞ்ஞை, ஏது ஆகியவற்றில்) கூறப்பட்டவை மூன்றாம் உறுப்பில் அடங்கியிருத்தலை அவதானிக்கலாம். ஆதலின் முதலிரண்டு உறுப்புகளையும் தவிர்த்து இறுதி மூன்றையுமே கருத்திற் கொண்டு நோக்குவோம்.

எங்கெங்கே புகையுண்டோ அங்கெல்லாம் நெருப்புண்டு - அடுக்களையிற் போல

பூர்வ சாதனமாக விளங்கும் இவ்வுறுப்பு மேற்கோளைப் புலப்படுத்துவதோடு, ஒரு உதாரணத்தையும் இணைத்து நிற்கிறது உதாரணத்தோடு விளங்குவதாகிய நிலை, இந்நியாய முறையில் பொதுவிதியானது தனிப்பட்ட நிகழ்வுகள் பலவற்றை (அடுக்களையில் காட்டில், சூளையில்) அவதானித்ததையடுத்தே பெறப்படுகின்ற தன்மையைப் புலப்படுத்துவதா யுள்ளது. இத்தன்மையை உற்று நோக்குமிடத்து இந்தியத் தருக்க முறையில் நியாயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடையானது, பகுப்புவழிப்பட்டதன்று, தொகுப்பு வழியும் பகுப்பு வழியும் இணைந்த ஒன்றே என்பது புலனாகும்.

**ஏதுப்போலி**

அனுமிதி ஞானத்துக்குக் காரணமாய பிரமாணம் இலக்கணத்திற் குறைவுடையதாயிருந்தும் வழுவில்லாத பிரமாணம் போலத் தோன்றுவது பிரமாணப் போலி. இது பக்கப்போலி, ஏதுப்போலி, உவமைப்போலி என மூவகையாகச் சொல்லப் பெறும். இவற்றுள் ஏதுப் போலியே இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஏதுப்போலியாவது எடுத்துக் கொண்ட பிரதிஞ்ஞைக்கு இயையாதது போல் ஏதுவாம். அனுமிதி உணர்விற்குத் தடையாய உண்மை அனுபவ உணர்வினை விடயமாகக் கோடல் ஏதுப்போலி இலக்கணம் என்பர் சிவஞான முனிவர் வடநூலுடையார் இதனை ஏத்துவாபாசம் என்பர். ஏது - ஆபாசம், ஏது- காரணம், ஆபாசம் - போலி பின்வரும் உதாரண விளக்கங்கள் தேவை .

ஏதுப்போலி அசித்தம், விருத்தம், அநைகாந்திகம், சற்பிரதிபக்கம், பாதிதம் என ஐவகைபடும்.

அசித்த ஏதுப்போலியாவது பக்கத்திலே இருக்கையில்லாத ஏது, இது சொரூபா சித்தம் சார்பசித்தம் என இரு வகையாகச் சொல்லப்படும் (அசித்தம்- பேறில்லது) சொரூபாசித்த மென்பது சொருபம் பக்கத்திலே இருக்கையில்லாத ஏது, சொரூபம் - தன்வடிவு அல்லாது இயல்பு. சொரூபா சித்தம் எனினும் உருவசித்தமெனினும் ஒன்றே.

'சத்தம் நித்தியம்
காணப்படுகையால்'
இவ்வுதாரணத்தில் சத்தம் - பக்கம்
காணப்படுகை - ஏது
பக்கத்தில் இருக்கையில்லாத ஏது என்பது சத்தமாகும்.

பின்வரும் விதிகளுக்கு ஏது அமையாத விடத்து, ஏதுப்போலி தோன்றும்.

1. சாத்தியத்தைக் கொண்டிராத பொருளில் ஏதுவின் வியாபகம் இருத்தலாகாது. சாத்தியம்- இருப்பதாக அனுமானிக்கப்படும் பொருள்.
2. ஏதுவானது தான் புலப்படுத்தற்கு நின்ற முடிபுக்கு மாறுபாடுடைய முடிபுக்கும் இடமளித்தலாகாது.
3. அனுமானத்தால் எய்துகின்ற முடிவு பிரத்தியட்சப் பிரமாணத்தின் அல்லது ஆகமச் சான்றின் முடிவோடு மாறு கொள்ளலாகாது.

இவ்விதிகளுள் எதுவாயினும் மீறப்படுமிடத்து அனுமானத்தை நிர்ணயித்தற்கியன்ற ஏது ஆபாசமுடையதாகும்.

பக்கத்தில் காணப்படுகையாகிய ஏது வியாபித்திலது என்பதாம் சத்தம் கேட்கப் படுதலேயன்றிக் காணப்படுதலில்லையாதலின் இவ்வாக்கியம் வழுவுடையது என்பது போல தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ப சித்தம் : இது ஆசிரிய சித்தமெனவும் படும்.

ஆசிரியம் - சார்பு

உதாரணம்: ஆகாயத் தாமரை மணமுடையது. அது தாமரைத் தன்மையுடைமையால். இங்கே மணமுடைமைக்குச் சார்பாகிய ஆகாயத் தாமரை என்பது இவ் போருளாதலாலே தாமரைத் தன்மையாகிய ஏதுவும் பக்கத்தில் இல்லாததாயிற்று.

**விருத்தப்போலியாவது** : பக்கத்திலும் விபக்கத்திலும் வியாபிக்கும் ஏது.

விருத்தம் - மாறுபாடு

(பக்கம் - துணி பொருள் உள்ள இடம்.

விபக்கம் - துணி பொருள் இல்லா இடம்.

உதாரணம்: சத்தம் நித்தியம்

அஃது உண்ணாக்கப்படுவதால்

இவ்வுதாரணத்தில்

சத்தம் - பக்கம்

நித்தியம் - துணிபொருள்

உண்டாக்கப்படுவது - ஏது

உண்டாக்கப்படல் ஆகிய ஏது பக்கத்திற்குப் பொருத்தமாயிருப்பதோடு விபக்கத்திற்கும் பொருத்தமாயிருக்கிறது.

விபக்கமாவது இவ்வுதாரணத்தின் துணி பொருளாகிய 'நித்தியம்' என்னும் பண்பு காணப்படாத பிறிதொரு பொருள் (உதாரணம் குடம்)

இவ்வனுமான வாக்கியத்தின் வழுயாதெனில் அது பக்கத்திலும் விபக்கத்திலும் வியாபித்திருத்தலாகும். சத்தம் உண்டாக்கப்படும் தன்மையால் நித்தியம் எனக் கூறப்படின், குடமும் உண்டாக்கப்படும் பொருள்தானே. அதுவும் நித்தியமோ வெனில் இல்லை (அநித்தியம்) என்பது புலனாகும். ஆகவே இவ்வனுமானம் வழுவுடையதென்பது போதரும். நித்தியம் என்னும் சாத்தியத்திற்குமாறான அநித்தியமாகிய சாத்தியத்தை சாதித்து முடித்தலால் இவ்வேது ஆபாசாமாயிற்று.

**அநைகாந்திக ஏதுப்போலி**

அநைகாந்திகமாவது நியமம் அற்ற ஏது. அதாவது பிறழ்ச்சியுடைய ஏது என்று பொருள். அநைகாந்திக ஏது பக்கம், சமபக்கம், விபக்கம் ஆகிய மூன்றிடத்திலும் பரந்துநிற்கும் ஏது. சிவஞான முனிவர், இதனைத் துணிபொருள் இல்லாவிடத்தும் இருக்கும் ஏது என்பர்.
உதாரணம்: சத்தம் அநித்தியம்

அறியப்படுகையால், குடம் போல

இவ்வுதாரணத்தில் அறியப்படுகை என்னும் ஏது சத்தம் ஆகிய பக்கத்திலும்,குடமாகிய சபக்கத்திலும் ஆகாயம் ஆகிய விபக்கத்திலும் வியாபித்திருக்கின்றது.

இன்னுமோர் உதாரணத்தைப் பார்ப்போம்

இம்மலை நெருப்புடையது

இது அளவையால் அளக்கத்தக்க இயல்புடைமையால் இங்கே ஏது- அளக்கத்தக்க தன்மை. அளக்கலாந் தன்மை உதாரணத்திற்கு சுட்டியதீயுள்ள இடமாகிய மலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமன்றி தீயில்லாத இடமாகிய தடாகத்திற்கும் உண்டு. ஆதலின், மேற்போந்த உதாரணத்தின் முடிவு பிறழ்ச்சியுடையதாகின்றது. ஆகவே இது அநைகாந்திகம் என்னும் ஏதுப்போலி யுடையதாகின்றது.

**சற்பிரதிபக்க ஏதுப்போலி (சற்பிரதிபக்கம் - மறுதலையுடையது)**

ஓர் அனுமானத் தொடையில் துணி பொருளைச் சாதிக்கும் ஓர் ஏதுவும் அதற்கு மறுதலை யாகிய துணிந்த பொருளைச் சாதிக்கும் பிறிதோர் எதுவும் உடன்காணப்படுவது சற்பிரதி பக்க ஏதுப் போலியாம்.

உதாரணம் : சத்தம் நித்தியம்

செவிக்குப் புலனாதலின் சத்தத்தன்மை போல

சத்தம் அநித்தியம்

காரியப்பாட்டால் குடம் போல

இங்கே செவிக்குப் புலனாதல் காரியப்பாடு

ஆகிய இரு வேறு ஏதுக்கள் உள்ளமை காரணமாக சத்தத்தின் துணிபொருள் நித்தியமும் அநித்தியமும் என ஒன்றுக்கொன்று மாறுபட்டுக் காட்டப் பெற்றன.

**பாதிதவேதுப்போலி (பாதிதம் - மறுப்புடையது)**

தன்னாற் சாதிக்கப்படும் பொருளினது அபாவம் (இன்மை) மற்றோரளவையால் துணியப் படின் அது பாதிதம் என்னும் ஏதுப் பொலியாம்.

உதாரணம்: நெருப்பு சூடற்றது

அஃது ஆக்கப்படுதலால், குடம்போல இவ்வனுமானம் ஆக்கப்படுவதாகிய குடம் என்னும் பொருள் சூடற்றது ஆதல் போல ஆக்கப்படுதல் காரணமாக நெருப்பும் சூடற்றது என நிறுவ முற்படுகின்றது. ஆனால் பிரத்தியட்சப் பிரமாண அளவை மூலம் நெருப்பு சூடுடையது என்பது தெளிந்த உண்மை. இவ்வனுமானம் நெருப்புச் சூடற்றது எனச் சாதித்ததற்கு மறுப்பாக பிரத்தியட்சப் பிரமாணம் புலப்படுத்துகின்ற உண்மை விளங்கு கின்றதாதலின் பாதிதம் என்னும் குற்றச் சார்புடையதாம்.

**பிற்சேர்க்கை**

**நியாய வகை**

ஒரு பிரதிக்கினையை விளக்கக் கையாளப்படும் உத்திகளுள் ஒப்புமையுமொன்று. இவை, இக்காரணத்தால் இவ்வகையாகும் என உதாரண முகத்தால் விளக்கும் நியாயங்கள் பல மீமாம்சை முதலாம் நூல்களில் எடுத்துக்காட்டப் பெற்றும் செவிவழி ஆட்சியுற்றும் காணப்படுகின்றன. இத்தகைய நியாயங்களின் தொகை 61 என்பர். ஒரு சிலவே இங்கு தரப்படுகின்றன.

1. **காகதாலிய நியாயம்:** பனையின் மேல் காகம் இருக்கவும் பனம் பழம் வீழவும் உள்ள சம்மந்தம் போல்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **தாலிபுலாக நியாயம்** : ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாகக் கொள்வது போன்றது.

3. **வீசிதாங்க நியாயம்:** அலை எதிர்த்துக் கரையில் வீச அதைத் தொடர்ந்து பின்பற்றுதல் போன்றது.

4. **கதம்ப முகுள நியாயம்:** கதம்ப மரத்தின் அரும்பு மலர்கையில் நான்கு இதழும் ஒன்று சேர விரிந்து மணம் பரப்புவது போல்வது.

5. **தண்டா மூபிக நியாயம்:** தடியை எலி தின்றது எனக் கூறுதல் போன்றது.

6. **கைமித்திக நியாயம்** : அதுவே அப்படியானால் மற்றதற்குக் கூறுவானேன் என்பது. ஆடிக்காற்றில் அம்மியே பறக்குமாயின் ஆலஞ்சருகு பறப்பது அரிதோ என்பது போன்றது.

7. **தூலாருந்ததி நியாயம்:** தூலமாய் எதிர் தோன்றும் பொருளைக் காட்டி, அருந்ததியைக் காணவைத்தல் போல்வது.

8. **கபோதக நியாயம்:** புறாக்களில் ஒன்று ஏதேனும் ஓரிடத்தில் இறங்கப் பெறின் பலவும் இறங்குதல் போல்வது.

9. **மயூர நிருத்த நியாயம்:** ஒன்றைத் தாபிக்குமிடத்து மற்றொன்று விட்டுப் போதலுக்கு மயிலின் நடக்கையை எடுத்துக் காட்டுவது.

10. **குணாக்கர நியாயம்:** ஒரு புழு மரம் ஒன்றினை அரித்துச் செல்லுகையால் அம்மரத்தில் உண்டாகிய இரேகைகள் எழுத்துப் பொல்தோன்றுவது. இஃது ஒன்றைச் செய்ய மற்றொன்றாய் முடிதற்கு ஒப்பு.

11. **காகட் சோகோகை நியாயம்** : (காக + அட்ச் + கோகைநியாயம்) காக்கையின் இருகண்களுக்கும் ஒரு மணியே நின்று உதவுவது போல ஒரு பொருளே நின்று இரு பக்கத்துக்கும் உதவுவது.

12. **தேகளீதீப நியாயம்:** வாசற் படியிட்ட தீபம் உள்ளும் புறமுமாய் இரு புறத்திருளையும் நீக்குதல் போல, ஒரு பொருள் இடையில் நின்று இரண்டிடத்தும் பயன் தருவது.

13. **அந்த கூப பதன நியாயம்** : குருடன் ஒருவனுக்கு கண்ணுள்ளவன் இவ்வழிச் செல்க எனக் காட்டியவிடத்தும் அவன் தடுமாறிச் சென்று கிணற்றில் வீழ்வது போல்வது.

14. **பிராமண வசிட்ட நியாயம்:** பிராமணர் வந்தார் என்று கூறும் போது அவர்களுள் ஒருவராகிய வசிட்டரும் வந்தார் என்பது பெறப்படுமாயினும், விசேடம் பற்றி வசிட்டரை வேறுபிரித்துக் கூறுதல் போல, ஓரினப் பொருளைக் கூறுகையில் அவற்றுள் ஒன்றின் தலைமை பற்றி அதனைத் தனியே எடுத்துக் கூறுதல்.

15. **சூசிகடாக நியாயம்:** ஊசி முனை சென்ற வழி நூலும் செல்வது போன்றது.

16. **சுந்தோப சுந்த நியாயம்:** சுந்தன், அபசுந்தன் ஆகிய அரக்கர் இருவரும் திலோத்தமை பொருட்டால் தம்முள் போரிட்டு மாய்ந்தமை போல்வது. இஃது ஒன்றினை ஒன்று அழிக்கும் நெறியினியல்பு விளக்கியவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. **அந்த கஜ நியாயம்:** யாணை காண விரும்பிய குருடன் ஒருவன் அதன் ஓர் உறுப்பைத் தடவிப்பார்த்து உருவத்தை நிச்சயிப்பது போல்வது. இஃது ஒன்றினை முற்ற ஆராயாது ஒரு பகுதியை மாத்திரம் ஆராய்ந்து முடிவுகட்டும் தவறான நெறியைப்புலப்படுத்துவது.

18. **அசமலோட்டார நியாயம்:** ஒரு கல்லுடன் மண்ணாங்கட்டியை ஒப்பு நோக்கின் மண்ணாங்கட்டி மெலிதாகவும் அதனையே பஞ்சுடன் ஒப்பிடுமிடத்து மண்ணாங் கட்டியே வலிதாகவும் கொள்ளப் படுதல்போல, ஒன்றோடு நோக்கிய பிறிதொன்றிற்கு வன்மை மென்மை கற்பித்தலாகிய நெறி.

19. **அப்யர்கித நியாயம்:** முன்னே சன்மானிக்கத்தக்கவரை முதலில் பூசித்து, மற்றவர் களுக்குப் பின் மரியாதை செலுத்துவது.

20. **சபாபிட்சுக நியாயம்:** பாக்கியவதி பிச்சைக்காரனுக்குக் கூறியது போன்ற நியாயம்.

21. **சியாலாசார மேயநியாயம்:** ஒருவன் தன் வீட்டிலுள்ள நாய்க்கிட்ட பெயரே தன் மைத்துனனுக்கும் இருத்தல் நோக்காது. அந்த நாயைத் தன் வீட்டிலிருந்து விலக்க எண்ணிய சமயம் தன் மனைவியை நோக்கி, நாயின் பெயரைக் கூறி அதை விலக்குக என்ன , மனைவி, மைத்துனனை (சியாலன் - மைத்துனன்) விலக்கக் கூறியதாக எண்ணி விலக்கியது போல்வது. இது பெயரிரண்டும் ஒன்றாயிருத்தல் பற்றி ஒன்றை மற்றொன்றாக ஆராயாது செய்யும் நெறி.

| | | |
|---|---|---|
| அசித்தம் | - | பேறில்லது |
| அந்நுவயம் | - | உடன்பாடு |
| அபாவம் | - | இன்மை, |
| அநுபலத்த | - | இல்லையென்னும் அறிவு |
| அனுமானம் | - | கருதல் அளவை |
| அனுமிதி | - | ஆராய்ச்சியால் தோன்றும்அறிவு |
| அனைகாந்தகம் | - | பிறழ்வுடையது |
| இலிங்கம் | - | ஏது, குறி |
| இலிங்க பராமரிசம் | - | குறி ஆராய்ச்சி |
| ஏத்துவாபாசம் | - | ஏதுப்போலி |
| நியதம் | - | இன்றியமையாமை |
| ஏது | - | காரணம் |
| சுவார்த்தனுமானம் | - | தன்பொருட்டனுமானம் |
| பரார்த்தானுமானம் | - | பிறர் பொருட்டனுமானம் |
| சமவேதம் | - | பிரிப்பின்றி இணைந்து நிற்றல் |
| சம்பந்தம் | - | தொடர்பு, இயைபு |
| சமவாயம் | - | நீக்கமின்றிநிற்றல் |
| பாத்தம் | - | மறுப்புடையது |
| சையோகம் | - | சேர்க்கை, புணர்ச்சி |
| பிரமாணம் | - | உண்மையனுபவ அறிவுக்குக் கருவி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பிரமேயம் | - | அளவையால் அளக்கற்பாலது |
| வியாபகம் | - | பரத்தல் |
| வியாப்தி | - | நியதமான உடனிகழ்ச்சி |
| விருத்தம் | - | மாறுபாடு |
| பிரதிஞ்ஞை | - | மேற்கோள் |
| பிரத்தியட்சம் | - | காட்சி |
| திருட்டாந்தம் | - | காணப்பட்ட முடிவு |

(துணி பொருளுக்கும் ஏதுவுக்கு முன்னர் உடனிகழ்ச்சியால் எடுத்துக் காட்டுவது)

| | | |
|---|---|---|
| வெதிரேகம் | - | எதிர்மறை |
| பட்ச தருமதா | - | பக்கத் தருமத்தன்மை |
| பக்கம் | - | ஐயுற்றுத் துணியும் பொருளுக்கிடம் |
| சபக்கம் | | |
| விபக்கம் | - | துணி குமாகுளில்லாவிடம் |
| உபநயம் | - | கொண்டு போதல் |
| நிகமனம் | - | முடிவு |
| இலௌகிகம் | - | இந்திரிய சம்பந்தத்தால் ஏற்படும் அறிவு |
| அலௌகிகம் | - | இந்திரியமல்லாப் பிறவகையான் அறிவு |

**இந்திய நியாயத் தொடையும் அரிஸ்ரோட்டிலிய நியாயத் தொடையும்**

இந்த மலையில் தீ உளது ஏனெனில்

அங்கே புகை காணப்படுகின்றது.

எங்கெல்லாம் புகை உண்டோ அங்கெல்லாம் தீ உண்டு. அடுக்களையிற் போல. எப்போதும் தீயோடு சேர்ந்து காணப்படும் அதே வகையான புகையே இங்கு காணப் படுகின்றது.

ஆகவே இம்மலையில் தீயுள்ளது.

மேற் போந்த அனுமானத் தொடையில் முதலில், பிரதிஞ்ஞையாக உள்ள உறுப்பு வாசகமும் இறுதியில் நிகமனமாக உள்ள உறுப்பு வாசகமும் ஒன்றே. இரண்டாவதாக உள்ள உறுப்பு ஏதுவைத் தெரிவிக்க வந்தது. ஆனால், அப்வேது மூன்றாவதாக உள்ள உறுப்பாகிய உதாரணத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. இத்தன்மையில் பார்க்கும் பொழுது முதலிரண்டு உறுப்புகளும் சுத்தமான ஒரு நியாயத் தொடையில் இடம் பெறல் அவசியமில்லை. ஆகவே முதலிரண்டு உறுப்புக்களையும் நீக்கி, இறுதி மூன்று உறுப்புக்களைக் கொண்ட அனுமானத் தொடையினை அரித்தோத்திலிய நியாயத் தொடையோடு ஒப்பு நோக்குதல் பொருத்தமுடையது.

இப்போது முதலில் விளங்குவதாகிய உதாரண மென்னும் உறுப்பு வாசகமே, அரித் தோத்திலியத் தொடை ஒப்பு நோக்கில் பூர்வ சாதனமாக (Major Premise) அமைகின்றது. ஆனால் இப்பூர்வசாதனம் அரித்தொத்திலிய பூர்வ சாதனம் போன்று தனித்து நில்லாது, 'அடுக்களையிற் போல' என்னும் எடுத்துக்காட்டையும் உடன் கொண்டு திகழ்கின்றது. எடுத்துக்காட்டு இடம் பெற்றுள்ள தன்மையை நோக்கும் பொழுது இந்திய அளவை முறைமையில், பொது முடிவானது பல சான்று நிகழ்ச்சிளின் அவதானிப்பு அடிப்படையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படுகின்றது என்பது புலனாகிறது. அடுக்களையிற் போல என்ற எடுத்துக்காட்டால் அடுக்களைத் தீ போன்றுகாட்டுத் தீ, சுடு காட்டுத்தீ, சூளைத் தீ ஆகியனவும் அவதானிக்கப்பட்டமை, உய்த்துணரற்பாலது. வேறு வகையாகச் சொன்னால், இந்திய நியாயத் தொடையில் விளங்கும் வாதப்படி முறையானது, தனியே நிகமன வாதமுறையில் அமைந்ததன்று. அகமன வாதமும் நிகமனவாதமும் இணைந்த ஒன்றாகும்.

(நிகமனவாதம்- பகுப்ப முறைமை - Deductive

அகமன வாதம் - தொகுப்பு முறைமை - Inductive)

அடுத்ததாக இரண்டாவது உறுப்புவாசகம் பூர்வசாதனமும் (Major Premise) உத்தர சாதனமும் இணைந்த வாசகமாக விளங்குவதைக் காணலாம். இந்த வாசகத்தில் 'தீயோடு சேர்ந்து காணப்படும்' என்ற பகுதியால் 'தீ' ஆகிய பூர்வபதமும் இங்கு காணப்படுகிறது என்ற பகுதியில் 'இங்கு' என்பதனால் சுட்டப் பெறும் 'மலை' யாகிய உத்தரபதமும் புகையாகிய மத்திய பதமும் ஒருசேர அமைந்து விளங்கக் காண்கிறோம். அரித்தோத்திலிய நியாயத் தொடையில் பூர்வ சாதனமும் உத்தர சாதனமும் தனித்தனியாக விளங்க, மத்திய பதமே அவற்றை இணைத்து நிற்கிறது. இந்திய நியாயத் தொடையில், மூன்று பதங்களும் ஒருவாக்கியத்தில் இடம்பெறச் செய்ததன் மூலம் அவற்றிடையே உள்ள தொடர்பு வெகு துலாம்பரமாகக் காட்டப்பட்டுள்ளது. இதனால் நிகமனப்பேறு இலகுவாக்கப்பட்டுள்ளது.

### துணை செய்த நூல்கள்


1. *தருக்கசங்கிரகம்*
2. *கலைக்களஞ்சியம்*
3. *அபிதானசிந்தாமணி*
4. *சிவஞான சித்தியார் - சுபக்கம் - திருவிளங்கம் உரை*
5. *சிவஞான போதமும் சிவஞான முனிவர் சிற்றுரையும் - திரு ப. இராமநாதபிள்ளையின் விளக்கம்*
6. *மணிமேகலை*
7. *History of indian philosophy,* Dr. S. Radhakrishnan
8. *Outling indian philosophy,* M, Hariyana M.A
9. *A History of indian philosophy,* Dr. Sen Das Gupta


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாரதா சமித்தி மகராஜியிடமிருந்து நூற் பிரதி பெறுதல்




கலாசார அமைச்சின் செயலாளரிடமிருந்து நூற்றொகுதி பெறுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹற்றன் தேசிய வங்கி வெள்ளவத்தைக் கிளை முகாமையாளர் திரு S. மதனன் மாணவர்க்குரிய கற்றல் உபகரணங்களை முதல்வரிடம் வழங்கும் காட்சி



கொழும்பு மாநகரசபை மேயர் A. J. M. முஸம்மில் அவர்கள் பாடசாலையின் குறைகளைக் கேட்டறிதல். அருகில் கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் திரு சி. பாஸ்கரா, திரு S. குகவரதன் ஆகியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜயதசமி விழாவின் போது ஏடு தொடக்குதல்



பாடசாலைப் பெயர் மாற்ற நிகழவின் போது கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் சுவாமி ஆத்ம கணானந்தாஜி அவர்களுடன் முதல்வர் தீபச்சுடர் ஏற்றுகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னாள் அமைச்சர் திரு மிலிந்த
மொறகொடவின் துணைவி
திருமதி மிலிந்த மொறகொடவிடமிருந்து
நூலின் பிரதியைப் பெறுதல்



கலைமகள் சிலை நிர்மானித்த பின்
இந்து மன்றப் பொறுப்பாசிரியர்
திருமதி ஈஸ்வரானந்ததடதுடன்
கல்லூரி முதல்வர்



இராமகிருஷ்ணமிஷனில் நடைபெற்ற
மகளீர் தின விழாவில் கௌரவிக்கப்படுதல்



நிர்வாகப் பணிகளை இலகுபடுத்தியதுடன்
கல்வியகத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றிய
திருமதி H. ஷரூக், திருமதி M. A. S.
அருள்ஞானசெல்வம் கல்லூரி
முதல்வருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துணைவரது மணிவிழா வைபவத்தில்
உயர் நீதிமன்ற நீதியரசர் திரு க. சிறீபவன் தம்பதியினருடன் முதல்வர்



முதல்வருக்குக் கிடைத்த கௌரவங்களில் சில..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புச் சகோதரிக்கு.............

அன்புச் சகோதரிக்கு அகவை அறுபது, என்றும் போல் இன்றும் வாழ்த்துகின்றோம். ஆனாலும் இது சற்று வித்தியாசமானது. சிறுமியாக, மாணவியாக, ஆசிரியையாக, அதிபராக, உங்கள் கல்வித்துறைக் கடமைகளைக் கருதி இதுவரை காலமும், சுமந்து வந்த பொறுப்புகளிலிருந்து வெற்றிகரமாக ஓய்வுபெறும் வேளை இது என்பதால் மன நிம்மதியோடும் மன மகிழ்வோடும் வாழ்த்துகின்றோம்.

எங்கள் ஊராகிய நெல்லியடியில் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி முதல் க. பொ. த உயர்தரக் கல்வி வரை பயின்று பின்னால் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகிச் சென்றீர்கள். அங்கு பொருளியல் புள்ளிவிபரவியல், என்பவற்றில் சிறப்புப் பட்டம் பெற்றீர்கள். அதன் பின்னர் கொழும்பு மாநகரப் பாடசாலை ஒன்றில் ஆசிரியப் பணியில் இணைந்தீர்கள். ஆசிரியப் பணி புரியும் காலத்திலேயே 1991 இல் இலங்கை அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபராகக் கடமையாற்றிக் கொண்டே இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் தெரிவாகி கல்விப் பணிப்பாளர் பதவி உங்களைத் தேடி வந்த போதும் அதனை ஏற்காது நீங்கள் பணியாற்றிக் கொண்டிருந்த அதே பாடசாலையில் உங்கள் அதிபர் பணியையே விருப்போடு தொடர்ந்தீர்கள். இன்று அவற்றிலிருந்து ஓய்வு பெறும் போது உங்கள் சேவைக்கால ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் இணைந்து உங்களுக்கு விழா எடுக்க முன் வந்துள்ளமையை அறிந்து மிகமிக மகிழ்ச்சியடைகின்றோம்.

உங்கள் வளர்ச்சியை ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் புலம் பெயர்ந்து வாழும் நாங்கள் செவிவழிகேட்டு மகிழ்கின்ற போதிலும்

*'ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தன் மகனைச்*
*சான்றோன் எனக் கேட்டதாய்'*

என்பதற்கிணங்க எங்கள் அம்மா உங்கள் கூடவே இருந்து நேரடியாகக் கண்ணுற்று மகிழ்ந்து ஆசிப்பது கூட நீங்கள் செய்த பெரும் தவம் என்று நாம் கருதுகின்றோம். உங்கள் வளர்ச்சிக்கப் பாடுபட்ட எங்கள் தந்தை (நடராஜா) இச் சமயத்தில் இந்நிகழ்வுகளைத் தரிசிக்கக் காலம் இடம் தரவில்லை. உங்கள் ஓய்வு காலத்திலும் நீங்கள் மேலும் பல பேறுகளைப் பெற்று மன மகிழ்வோடு வாழவேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

சகோதர, சகோதரிகள்
**திருமதி சந்திரா திரவியம்**
**திரு ந. ஜெகசோதிநாதன்(ரவி)**
**திருமதி செல்வராணி ஆனந்தசிவம்(சுபா)**
**திருமதி யோகராணி குலசேகரம்**
**திரு ந. நந்தசேகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள சித்திக்கு...

1.3.2103 இல் நீங்கள் மணிவிழாக் காணும் செய்தி அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம். உங்களுக்கு ஓய்வு பெறும் வயது தான் வந்துவிட்டதே தவிர உங்களின் கடமையுணர்வு ஓயாது என்பதனை நாங்கள் அறிவோம். இருந்தாலும் நீங்கள் ஓய்வு பெறுவதை நாங்கள் விரும்புகின்றோம். பொதுவாகவே தொழில் பார்க்கும் பெண்களுக்கு வேலைப்பளு அதிகம், அதிலும் ஒரு பாடசாலையின் அதிபராகவும் குடும்பத் தலைவியாகவும் இருந்து கொண்டு அதன் சுமை தெரியாமலே வாழப்பழகி விட்டீர்கள். இருந்தாலும் நீங்கள் ஓய்வு பெறுவதை நாங்கள் விரும்புகின்றோம்.

இந்த நேரத்தில் எங்கள் அன்புக்குரிய அன்ரியாக நீங்கள் நடந்து வந்த பாதையை நாம் திரும்பிப் பார்க்கின்றோம். எங்களுடன். பாசப்பிணைப்புடன் வாழ்ந்து வந்த காலத்தில் எமது சிறுபருவத்தில் உங்களுக்குப் பல்கலைக்கழக நுழைவு கிடைத்தது. நீங்கள் பேராதனைக்குப் புறப்பட்ட போது நாங்கள் உங்களை அனுப்பி வைக்க மனமின்றி அழுத அழுகை இன்னும் எம் மனதில் நிழலாடுகிறது. அதே போல உயர்கல்வியை முடித்து நீங்கள் திரும்பி வந்து உங்களுக்குத் திருமணம் நடைபெற்ற போதும் நாங்கள் சிறு பிள்ளைகள் தான். ஆனால் அதுவும் ஒரு பிரிவு தான் என்பதை நாங்கள் உணரவில்லை. ஏனெனில் நாங்கள் அருகருகிலேயே வாழ்ந்தபடியால் எப்போதும் எல்லோரும் ஒரே வீட்டிலேயே கூடி உண்டு மகிழ்ந்திருப்போம். அதே போல எங்கள் கல்வியிலும் அக்கறை கொண்டு பாடங்கள் சொல்லித் தந்தீர்கள். எமது அறிவைக் கண்டு பாராட்டினீர்கள். நாம் விரும்பியவற்றை வாங்கித் தந்தீர்கள், விரும்பிய இடங்களுக்கு கூட்டிச் சென்றீர்கள். சொந்தப் பிள்ளைகள் போலவே எம்மை வளர்த்தீர்கள்.

ஒன்றாக வாழ்ந்த எம் தாய்வழிச் சகோதரர்களில் வேலை கிடைத்த காரணத்தால் முதன்முதலாக எம்மை விட்டுக் கொழும்புக்கு வாழச் சென்றவர்கள் நீங்களும் அன்ரி ஐயாவும் தான். அப்பொழுதும் உங்கள் மகளும் எங்கள் பாசமிகு சகோதரியுமான கார்த்திகாவை எங்கள் பொறுப்பில் விட்டு விட்டுச் சென்ற காரணத்தால் உங்கள் பிரிவு எமக்குப் பெரிதாகத்துன்பத்தைத் தந்து விடவில்லை. எங்களில் ஒருத்தியாகவே அவள் வளர்ந்த போது அவளில் உங்களைக் கண்டு மகிழ்ந்தோம்.

உங்களைத் தொடர்ந்து சுபா அன்ரியும் வேலை நிமித்தம் கொழும்பு சென்று விட அடுத்து வந்த சில காலங்களில் உங்கள் உடன் பிறப்புக்கள் ஒவ்வொருவராகப் புலம் பெயர்ந்து செல்ல நாங்களும் அவர்களுடன் இங்கு வந்து சேர்ந்து விட்டோம். அந்நிலையில் தான் நாங்கள் உங்களை மிக அதிகமாக உணர்ந்தோம். வருந்தி அழைத்தோம் கனடாவுக்கு தொழில் ஒன்று உண்டு தானே என்ற மனத்திருப்தியாலும், தொழில் மீது கொண்ட பற்றினாலும் எமது அழைப்பினை மறுத்தீர்கள் உண்மை தான் 'ஆசிரியர்' என்ற வார்த்தையில் தான் எத்தனை சிறப்பு. மகத்துவமான தொழிலல்லவா அது. தனது சொந்த விருப்பை விட பொது நலன்களில் கவனம் செலுத்தி சிறந்த மனித சமூகத்திற்கு அத்தியா வசியமானதும், நிலையானதுமான சேவையை அல்லவா வழங்குகிறீர்கள். ஒரு சிறந்த ஆசிரியர் தனது உரிமைகளை விடக் கடமைகளிலே தான் கவனம் செலுத்துவர் என்று அறிந்திருக்கின்றோம். அத்தகைய ஒரு சிறந்த கொள்கையை நீங்களும் கொண்டிருந்தமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நேரடியாகவே கண்டிருக்கின்றோம். அதே நேர்மைக்குப் பரிசாக சிறந்த அதிபருக்கான விருதினை மேல் மாகாணக் கல்வி அமைச்சு உங்களுக்கு வழங்கிக் கௌரவித்தது. அதனால் நாமும் பெருமையடைந்தோம்.

உங்கள் பாடசாலை மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டது போலவே உங்கள் இரு பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியை ஊட்டினீர்கள்.அவர்களும் உங்கள் பெருமை காக்கக் கற்றனர். இன்று இருவரும் வெளிநாடுகளில் உயர்கல்வி பெற்று உங்கள்ஆசையைப் பூர்த்தி செய்துவிட்டனர். உங்கள் மனம் போலவே உங்கள் பிள்ளை களும் உயர் நிலையடைந்து விட்டனர். என எனது அம்மா அடிக்கடி கூறிக் கொள்வார். நீங்கள் ஓய்வு பெறும் வயதை அடைந்து விட்டீர்கள் என்றதும் எனது அம்மா உங்களது இளமைக்கால நினைவுகளை மீட்டி அவற்றை எம்மிடம் சொல்லி மகிழ்வார். நீங்கள் O/L, A/L சித்தியடைந்த காலங்களில் உங்களது வகுப்புத் தோழிகளின் நேரம் பெரும்பாலும் எங்கள் வீட்டிலேயே கழியும் என்றும், எல்லோரும் ஒன்று கூடி அறுசுவை உணவு விருந்து கொண்டாட்டமுமாக இருக்கும் என்றும் கூறுவார்.

பல்கலைக்கழக விடுமுறையில் நீங்கள் ஊருக்கு வரும்போது நீங்களும் உங்களது நண்பிகளும் ஊரைச் சுற்றிப் பார்க்க என்று அப்பாவின் வாகனமும் அதன் சாரதியும் உங்களுக்கென்றே ஒதுக்கப்படும் என அம்மா கூறுவார்.

அன்றி இன்று நாங்கள் பெரியவர்களாகி விட்டோம். குடும்பம் குழந்தைகள் என்று பொறுப்புள்ளவர்களாகிவிட்டோம். நாங்கள் உங்கள் மேல் வைத்த அதே மதிப்பு, அன்பு போலவே எங்கள் குழந்தைகளும் உங்கள் மேல் பாசம் வைத்துள்ளார்கள். இதே அன்புடன் நீங்கள் நீடுழி வாழ்ந்து எங்களுக்கு மன நிறைவையும், சந்தோஷத்தையும் தர வேண்டு மென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். உங்கள் பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோர், மாணவர்கள் பழைய மாணவர்களால் நடாத்தப்படும் மணிவிழா இனிதே சிறப்புற மன நிறைவுடன் வாழ்த்துகிறோம்.

ரொறன்டோ,
கனடா

பெறாமக்கள்

**திருமதி சுவர்ணா குலசிங்கம்**
**திருமதி கவிதா ஜெயக்குமார்**
**திரு பாலகுமரன் திரவியம்**
**திருமதி வானதி பாலகுமரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரா எனும் இருவேறு ஆளுமை

கல்வி அழகே அழகு, கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு, பிச்சை புகினும் கற்கை நன்றே, மாதா பிதா குரு தெய்வம், குரு இல்லாத வித்தை பாழ். கல்வி கொடுத்தோர் கண் கொடுத்தோர். இவை கல்வியைப் பற்றியும் அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பற்றியும் நம் முன்னோர்கள் கூறிய முதுமொழிகள். தொழில்கள் எல்லாவற்றிலும் உன்னதமான தொழில் ஆசிரியத் தொழில். அறியாமை எனும் இருளை அகற்றி அறிவெனும் ஒளியை ஏற்றி உள்ளங்களையும் இல்லங்களையும் பிரகாசிக்கச் செய்யும் அந்தப் பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

அறிவு, அறம், பொருள், இன்பம், இம்மை, மறுமைப்பேறு எல்லாவற்றையும் தரவல்ல கல்வியை வழங்கும் உரிமை ஆசிரியர் ஒருவருக்கே உரியது. அத்தகைய சிறப்பான உரிமையைப் பெற்று கடந்த 29 வருடங்களாக ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்து அரும்பணியாற்றிய இந்திரா அக்கா என நான் உரிமையுடன் அழைக்கும் திருமதி இந்திரா இராஜரட்ணம் தனது ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெறும் இவ்வேளை அவருடனான என் நினைவுகளை மீட்டிப் பார்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

1983 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த நான் கற்ற பாடசாலையில் அளவையியலும் விஞ்ஞானமும் பாடத்தைக் கற்பிப்பதற்குத் தகுதியான ஆசிரியர் இருக்கவில்லை. குறிப்பாகக் குறியீட்டு அளவையியலில் ஒரு பகுதியையேனும் நான் கற்றிருக்கவில்லை. பரீட்சைக்கு ஒரு சில மாதங்களே இருந்த நிலையில் இந்திரா அக்காவின் கணவரான இராஜரட்ணம் மாஸ்டரிடம் குறியீட்டு அளவையியல் கற்பதற்காக பிரத்தியேக வகுப்புக்குச் சென்றேன். அதன் காரணமாகவே இந்திரா அக்காவுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

வடமராட்சி நெல்லியடியில் அவர்கள் வசித்து வந்தார்கள். இருவருமே பல்கலைக் கழகப் பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்து 4 வருடங்களுக்கு மேலாகியும் நிரந்தரத் தொழில் கிடைக்காமையால் மிகவும் கவலையுடனேயே இருந்தார்கள். மாஸ்டர் வடமராட்சியில் பல பிரபல பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் உயர்தரத்தில் அளவையியலும் விஞ்ஞானமும் பாடத்தைக் கற்பித்து வந்தார். அப்பொழுது அக்காவும் அமெச்சூர், லிவப்பூல் ஆகிய பிரத்தியேகக்கல்வி நிலையங்களில் O/L, A/L வகுப்புக்களுக்கு சமூகக்கல்வி, பொருளியல் ஆகிய பாடங்களைக் கற்பித்து வந்தார். அதன் மூலம் கிடைக்கும் வருமானத்திலேயே அவர்களுடைய வாழ்க்கை சென்று கொண்டிருந்தது. அப்போதெல்லாம் நான் எண்ணுவதுண்டு. இருவரும் பட்டதாரிகளாக இருந்தும் தொழில் கிடைக்கவில்லையே. அப்படியானால் சாதாரண தரம் உயர்தரம் படித்தவர்களுக்கு எப்படித் தொழில் கிடைக்கும் என்று. அக்கா அடிக்கடி சொல்வார் எத்தனையோ வேலைகளுக்கு விண்ணப்பிக்கின்றோம் ஆனால் ஒன்று கூடச்சரிவரவில்லை என்று.

1983 ஒக்டோபர் மாதம் உயர்தரப் பரீட்சை எழுதிய பின் அக்காவுடனான தொடர்பு குறைந்து போனது. எப்போதாவது கடிதத் தொடர்பு மட்டுமே. இருந்து விட்டு சில நேரம் அவரைப் போய்ப் பார்த்து விட்டு வருவேன். வேலை எதுவும் சரிவரவில்லை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலித்துக் கொள்வார். இந்த நிலையில் 1984 ஆம் ஆண்டு நாள் நினைவில் இல்லை. கடிதம் ஒன்று வந்தது. நாங்கள் கொழும்புக்குப் போகப் போகிறோம். அதற்கு முன்னர் ஒரு தடவை வீட்டுக்கு வந்துவிட்டுப் போகும்படி அக்கா எழுதியிருந்தார். அங்கு போன போது தான் தெரிந்தது அவர்களுக்கு வேலை கிடைத்த விடயம்.

அதன் பின்னர் நீண்டகாலமாக அக்காவுடன் எனக்குத் தொடர்பு இருக்கவில்லை. பின்னர் 1996 ஆம் ஆண்டு 12 வருடங்களின் பின் வெள்ளவத்தையில் காலி வீதியில் எதிர்பாராத விதமாக அக்காவைச் சந்தித்தேன். முன்பு பார்த்த போது ஒரே ஒரு பிள்ளையாக மகள் கார்த்திகா மட்டுமே இருந்தா. இப்போ மகன் அபியும் பிறந்து விட்டிருந்தார். அதன் பின் அக்காவை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. முன்பு போலவே எனது சுக துக்கங்களைப் பகிரந்து கொண்டேன். நான் கவலைப் பட்டால் ஆறுதல் கூறுவார். தனது பிள்ளைகளைப் பற்றியும் சொல்வார். அதே போன்று தனது பாடசாலையைப் பற்றியும் அதனை முன்னேற்ற வேண்டும் என்பது பற்றியும் நிறையச் சொல்வார்.

2007 ஆம் ஆண்டு நான் தினக்குரல் பத்திரிகையில் கடமையாற்றத் தொடங்கிய பின் அடிக்கடி அக்கா என்னுடன் தொடர்பு கொள்வார். தனது பாடசாலை பற்றிய செய்திகளையும் படங்களையும் பிரசுரித்து உதவுமாறு கேட்பார். அக்கா அடிக்கடி கூறுவது தான் ஓய்வு பெற முன் என்னால் முடிந்தவரை இந்தப் பாடசாலையின் பௌதீக ஆளணி வளங்களை அதிகரித்துச் சிறந்ததொரு பாடசாலையாக மாற்ற வேண்டும். மாணவர்கள் சகல வசதிகளுடனும் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய வகையில் பாடசாலை இருக்க வேண்டும் என்று. அதற்கமைய பல அரசியல் வாதிகளிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் நிதி, நன்கொடைகளைப் பெற்று பல்வேறு வகையிலும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளார். உயர்பதவிகள் பல தேடி வந்த போதும் தனது பாடசாலையே தனக்கு முக்கியம் எனக் கூறி அவற்றை விடுத்து ஓய்வு பெறும் வரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண பாடசாலையே தனது உயிர் மூச்சாக சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

ஆசிரியப் பணியில் இருந்து அவர் ஓய்வு பெற்றாலும் அவரது கல்விப்பணி தொடர வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன். தனது பிள்ளைகளுக்கு நல்ல தாயாக, கணவனுக்கு சிறந்த மனைவியாக, உற்றார் உறவினர்களுக்கு நல்ல உறவாக சிறந்த குடும்பத் தலைவியாக வாழ்ந்து வரும் இந்திரா அக்கா, ஒரு ஆசிரியையாக தனது பாடசாலை சிறப்பாக நிர்வகிக்கும் அதிபராக அரும் பெரும் சேவையாற்றியுள்ளார். இவ்வாறு இருவேறு ஆளுமைகளைச் சிறப்பாகக் கொண்ட அவரது பாடசாலைக் கல்விச் சேவை ஓய்வுக்குப் பின்னரான வாழ்க்கை கல்விச் சமூகத்துக்குப் பயனுள்ளதாகவும் அவரது குடும்பத்தவர் களுக்கு மகிழ்வைக் கொடுப்பதாகவும் அமைய வேண்டும் என எல்லாம் வல்ல இறை வனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**வ.மெல்லியல்**
உதவி ஆசிரியர், தினக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் திருமதி இந்திரா இராஜரட்ணம் அவர்களின் மணிவிழா அமைப்புக் குழு

**விழாக் குழுத் தலைவர்**

பேராசிரியர் சபா ஜெயராசா

**விழா இணைப்பாளர்கள்**

திருமதி. எம். ஏ. எஸ். அருள்ஞானசெல்வம்
திருமதி. எச். ஷரூக்
திருமதி. பா. சிவயோகநாதன்
திருமதி. ந. ராஜசேகரன்
திருமதி. க. பேரின்பராசா
செல்வி ஜெ. நவரத்தினம்

**செயலாளர்**

திருமதி. க. அழகராஜா

**பொருளாளர்**

திருமதி கௌ. சிறீஸ்கந்தராஜா

**பதிப்பாசிரியர்கள்**

திரு. க. விநாயகமூர்த்தி
திருமதி. தி. சிவரட்ணராஜா
திருமதி. ம. ஈஸ்வரானந்தம்
திருமதி கௌ. சிறீஸ்கந்தராஜா
திருமதி. அ. சஞ்சீஸ்வரன்

**விழாக்குழுவினர்**

திருமதி. க. வர்ணகுலசிங்கம்
திருமதி. யோ. புவனேந்திரன்
திருமதி. ஆ. அருள்நாதன்
திருமதி. ச. பிரேமலிங்கம்
செல்வி சி. ரஞ்சிதமணி
திருமதி மா. கங்காதரசர்மா
திருமதி தி. பாண்டியன்
திருமதி வி. கலாதீபன்
திருமதி க. மார்க்கண்டு
திருமதி த. சிறீகரன்
திருமதி கி. நவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கணவர் திரு. க. த. இராஜரட்ணத்தின் மணிவிழாவின் போது கௌரவிக்கப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை திரு க. நடராஜா



தாயார் திருமதி ந. சரஸ்வதி



பட்டம் பெற்ற போது



மகளிடம் சென்ற போது
இலண்டன் மாநகரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மருமகன் திரு சி. சுபாகரன்




மகள் திருமதி கார்த்திகா சுபாகரன்



மகளின் திருமணத்தின் போது குடும்ப தரிசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகளது திருமணத்தின் போது தனது சகோதரிகளுடன்



தன் பெற்றோராகக் கருதும் மூத்த சகோதரி அவர் கணவர்,
அவரது பிள்ளைகள் மருமகள் ஆகியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மகன் அபியுதன் கால் பந்து விளையாட்டில் வெற்றிக் கேடயம் பெறுதல்



பிள்ளைகள் இருவரும் சிறு பருவத்தில்



மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாவின் நன்றி மறவாத துணைக்கரங்கள்

S. இமானுவேல்

R. சிவரஞ்சன்

S. சுமித் ராஜ்குமார்

A. மொறிஸ்குமார்

R. கபில்தேவ்

M. உலகநாதன்

R. விஸ்வநாதன்

V. விஸ்வநாதன்

M. K. சுதாகரன்

S. சதீஷ்

A. M. இம்தாத் அகமட்

R. சுகிர்தன்

K. சகிதரன்

M. உதயன்

M. A. முபாரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் இளமையில்
அறிவைப் பெற
ஆசிரியர்களை நம்பினேன்.

பல்கலைக்கழகத்தில்
அறிவை ஐயுற்று
அறிவுப்பகிர்வில் ஈடுபட்டேன்.

மாணவர்களும், ஆசிரியர்களும்,
பெற்றோர்களும் என்னை
இயங்க வைத்தனர்.

நான் இயங்கினேன்.

Printed by
**Kumaran Press (Pvt) Ltd.**
kumbhlk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org